சாண்டில்யன்

# மோகனச்சிலை



வானதி பதிப்பகம்

| | | | |
|---|---|---|---|
| முதற் பதிப்பு | : | அக்டோபர் | 1981 |
| ஐந்தாம் பதிப்பு | : | நவம்பர் | 1998 |
| ஆறாம் பதிப்பு | : | டிசம்பர் | 2001 |
| ஏழாம் பதிப்பு | : | ஜூன் | 2004 |
| எட்டாம் பதிப்பு | : | ஆகஸ்ட் | 2006 |


உரிமை ஆசிரியருக்கு

**திருநாவுக்கரசு தயாரிப்பு**

---

**விலை: ரூ. 120–00**

- Title : **MOGANA SILAI**
- Author : SANDILYAN
- Language : Tamil
- Subject : Novel
- Edition : Eighth Edition, August, 2006
- Pages : VIII + 416 = 424
- Published by : **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai–600017.
  ✆ 24342810 / 24310769
  E-Mail : vanathipathippakam@vsnl.net
  Website: www.vanathipathippakam.com
- Price : **Rs. 120–00**


---

## முன்னுரை

'மோகனச்சிலை' சோழ சாம்ராஜ்யத்துக்கு விஜயாலயன் வித்திட்ட வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டிருக்கிறது.

சூரிய கிரகணம், சந்திர கிரகணம் என்ற இரண்டைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். பார்த்துமிருக்கிறோம். ஆனால் சூரியன், சந்திரன் இன்னொரு வலுவான கிரகம் ஆகிய மூன்றையும் சேர்த்து கிரகண்ம் பிடிப்பதையோ அதனால் உலகம் இருண்டு போவதையோ யாரும் கேள்விப்பட்டதுகூட கிடையாது. ஆனால் தமிழக வரலாறு அத்தகைய ஒரு கிரகணத்தை சிருஷ்டித்திருக்கிறது. சூரிய குலத்தவரான சோழர்களையும் சந்திர குலத்தினரான பாண்டியர்களையும் காடவர்களான பல்லவர்களையும், களப்பிரர் என்ற நாடோடி கூட்டத்தார் முறியடித்து மறைத்து தமிழகத்தை மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஆறாவது நூற்றாண்டு வரை சுமார் 300 ஆண்டுக்ள் அரசாண்டு தமிழக வரலாற்றையே இருள் மூளச் செய்து விட்டார்கள். ஆகவே அந்த ஆட்சிக் காலத்தை இருண்ட காலம் என்று சொல்கிறோம்.

அந்த இருளை சூரிய குலத்தவனான விஜயாலயன் எப்படிக் கிழித்து தமிழகத்தின் மிகப்பெரிய சாம்ராஜ்யத்துக்கு அஸ்திவாரம் அமைத்தான் என்பதை விளக்குகிறது மோகனச்சிலை.

அந்த இருண்ட காலத்தைப் பற்றி வரலாற்று வெளிச்சத்தை வீசுவது என்பது சிறிது கடினமாகத்தான் இருந்தது. ஆனால் சமீப கால ஆராய்ச்சிகள் அதற்குப் பெரிதும் உதவின. தவிர ஏற்கனவே நீலகண்ட சாஸ்திரியாரும், ராஜமாணிக்கனாரும் வீசியுள்ள சரித்திர ஒளிகளும், இன்னும் சில ஆசிரியரின் குறிப்பு களும், இந்த நூலைப் புனைவதில் பெரிதும் பயன்பட்டன.

இந்த நாவலில் களப்பிரர் சந்ததிகளில் தலை சிறந்தவர்களான முத்தரையர் முக்கிய இடம் பெறுகின்றனர். தமிழகத்தின் சேர, சோழ, பாண்டிய நாடுகளான மூன்று தரைகளையும் ஆண்டதால் அந்த இனத்தார், முத்தரையர்–முத்தரையர் என்று அழைக்கப்பட்டதாக ராஜமாணிக்கனார் கூறுகிறார். செந்தலைக் கோவிலின் ராஜமண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள முத்தரையர் பரம்பரை சாசனங்களும் இந்த நூலை உருவாக்குவதில் உபயோகப்பட்டிருக்கின்றன. அந்த சாஸனக் குறிப்புகளில் கடைசியாகக் காணப்படும் பெரும்பிடுகு முத்தரையர் இந்த நாவலில் முக்கிய இடம் பெறுகிறார்.

விஜயாலயனைப் பற்றி சாஸ்திரியார் ஏராளமான குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார். அவன் பல்லவரிடம் படைத்தலைவனாயிருந்தும், சமயம் பார்த்து அந்தப் பதவியையே சாம்ராஜ்ய சிருஷ்டியின் ஊன்றுகோலாகக் கொண்டு சுதந்திர அரசை நிறுவியதையும், பிறகு பெரிய சாம்ராஜ்யத்துக்கு வித்திட்டானென்பதையும் சாஸ்திரியாரின் 'Cholas' (சோழர் வரலாறு) விளக்குகிறது. அவன் சேர மன்னன் ஸ்தாணுரவியை வெற்றிகொண்ட வரலாறும் அதே நூலில் 115ஆவது பக்கத்தில் காணப்படுகிறது. வான கணித மேதையான சங்கரநாராயணனும் ஸ்தாணுரவியின் காலத்தில் இருந்ததை KERALA GAZETTEER தெளிவாகக் குறிப்பிடுகிறது.

இந்த சரித்திரக் குறிப்புகளோடு பெரியவர் ராகவய்யங்கார் அவர்களின் 'சேரன்-செங்குட்டுவன்' நூலின் இலக்கியக் குறிப்புகளிலிருந்தும் கருவூர் வஞ்சியைப் பற்றிய தகவல்களை இந்தக் கதையைப் புனைவதில் சேர்த்துக் கொண்டிருக்கிறேன்.

விஜயாலயன், ஸ்தாணுரவி, வானசாஸ்திரி சங்கரநாராயணன், பெரும்பிடுகு முத்தரையர் ஆகிய வரலாற்றுப் பாத்திரங்களோடு இதயகுமாரன், அச்சுதப்பேரரையர், இளையவேள், கண்ணழகி, தேவி முதலிய கற்பனைப் பாத்திரங்களையும் இணைத்து இக்கதையை ஒட்டியிருக்கிறேன்.



சுமார் ஒன்றேகால் வருஷ காலம் இக்கதை 'குங்குமம்' வாரப்பத்திரிகையில் தொடர்ந்து வந்தபோது இதற்கு மக்கள் ஆதரவு அமோகமாக இருந்தது. அதே ஆதரவை இப்பொழுது புத்தகவடிவில் வரும்போதும் தமிழ்மக்கள் அளிப்பார்களென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இப்படித் தொடர்ந்து என்னை ஆதரித்து வரும் தமிழ் மக்களுக்கு முதலில் எனது நன்றி உரித்தாகும்.

அடுத்து இந்தக் கதையை தொடர்கதையாகப் பிரசுரித்து எனக்குப் பலவிதத்திலும் ஆதரவளித்த 'குங்குமம்' ஆசிரியர் அவர்களுக்கும், எனது நூல் எதையும் மிகச் சிறப்பாகக் கொண்டுவரும் எனது பதிப்பாளர் திரு. வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

16-10-81

***சாண்டில்யன்***

# மோகனச் சிலை

## 1. சிலையும் செண்பக மலரும்

வராகமலையிலிருந்து வெகு வேகமாக விடுவிடு என்று இறங்கி வந்து வஞ்சி மாநகரை அணைத்தும் சூழ்ந்தும், அம் மாநகரின் வலிய கோட்டையை இடித்து விடுவதுபோல் தனது பேரலைகளால் தாக்கியும், காலைக் கதிரவன் கிரணங்களால் பளபளத்து மின்னியும், தனது ஆற்றலையும் அழகையும் ஒருங்கே இணைத்துக்காட்டி, ஒரு முரட்டு ஆரணங்கைப்போல் காட்சியளித்த ஆமிராவதியின் அற்புத எழிலையும் செயலையும் கண்ட இதயகுமாரன், நேரம் போவது தெரியாமல் தனது கருமை நிறப் புரவியில் சிலையென உட்கார்ந்திருந்தான். பாயுமிடங்களிலெல்லாம் கரை நெடுக ஆமிரம் என அழைக்கப்படும் மாமரக் காடுகளை நிரம்ப உடையதாகையால் ஆமிரா நதியென்று வடமொழியிலும், ஆன்பொருநையென்று தமிழ் மொழியிலும் சிறப்புப் பெயர்களைப் பெற்றதும், கர்ப்பபுரி என்று வடமொழியில் அழைக்கப்பட்ட வஞ்சிமாநகரை அணைத்துக் கொண்டதால் சூதநதியென்றொரு இன்னொரு பெயரை பிங்கல நிகண்டுவால் வழங்கப்பெற்றதும், அதனாலேயே கருவூர் (கரு-கர்ப்பம்-ஊர்) வஞ்சிக்கும் தனக்குமுள்ள ஒற்றுமையை விளக்கிதுமான சூதநதியான ஆன்பொருநை அன்று காலையில்

இதயகுமாரன் இதயத்தில் பழம் பெருமைகள் பலவற்றைக் கிளப்பிவிட்டதால், அவன் கண்களும் அந்த நதியின் அலைகளைவிட அதிகமாகவே பளபளத்தன.

''இத்தகைய நதிகள் பாய்ந்ததாலேயே தமிழகம் சீரும், சிறப்பும் வளமும் பெற்றிருக்க வேண்டுமென்ற காரணத்தினால் கவிகள் பலரும் தங்கள் பெரும் காவியங்களை ஆற்றுப்படலத்தை முதன்மையாக வைத்துத் துவங்கினார்கள் போலும்!'' என்று சிறிது காவிய உணர்ச்சியிலும் இறங்கிய இதயகுமாரன், அந்த மகாநதியின் அப்புறமிருந்த கோட்டையையும், கோட்டைக்கும் அடுத்துத் தெரிந்த மாளிகைகளுக்குமிடையே இருந்த அடர்ந்த காட்டையும் நோக்கினான் சில விநாடிகள். காடு மிக அடர்த்தியாக வைக்கப்பட்டிருந்ததற்குக் காரணம், எதிரிகள் கோட்டை வாயிலைத் தாண்டினாலும் காட்டுக்குள் ஆயுத வண்டிகள் வரமுடியாதபடி தடுப்பதற்கேயென்பதையும் புரிந்து கொண்ட இதயகுமாரன், ஆற்றைத் தாண்டுவதும் அத்தனை சுலபமல்லவென்பதை உணர்ந்து கொண்டான். ஆற்றின் ஒரு பகுதி கற்களைக் கொண்டு சுற்று வட்டமாக மறைந்திருந்ததன் விளைவாக ஏற்பட்ட அகழியிலிருந்து பெரும் முதலைகள் தரையில் ஊர்ந்து கோட்டைச் சுவர்களை அடுத்துப் படுத்திருந்ததையும், அவை அசைந்த போதெல்லாம் கோட்டைச் சுவர் மீதிருந்த பட்சி ஜாலங்கள் திடீரென்று பறக்கத் துவங்கிவிட்டதையும் கண்ட அந்த வாலிபன், பயங்கரத்திலும் அழகு கலந்திருக்கிறது என்று தன்னுள் தத்துவத்தையும் சிறிது கலந்துகொண்டு ''அதோ இருக்கும் கோட்டைக் கழுகுகள் வெயில் புறப்பட்ட பிறகும் அடக்கமாக உட்கார்ந்திருப்பதை நம்ப முடியாது'' என்று நினைத்ததால் தத்துவத்துடன் மகிழ்ச்சியையும் இணைத்துக் கொண்டான். இப்படி அவன் நினைத்த சமயத்தில் கோட்டை மதிலிலிருந்து கிளம்பி ஜிவ்வென்று சக்கர வட்டமாகப் பறந்து, அம்பு போல் அமராதிவதியின் ஜலமட்டத்தில் இறங்கி ஒரு பெரிய மீனைக் கொத்திக் கொண்டு போய்விட்ட கழுகொன்



றும் அவன் கண்களில் படவே, அதிகப்படியான அடக்கங்கூட ஒரு விஷயத்தில் ஆபத்துதான் என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

இப்படி ஆன்பொருநையின் சிறப்பைப் பார்த்துப் பார்த்துப் பலபடி மகிழ்ந்துகொண்டு நின்ற இதயகுமாரன் சற்று ஏறெடுத்துக் கோட்டைக்கு அப்பால் எழுந்து நின்ற அரச மாளிகையின் விதானங்களையும் பார்த்தான். விதானங்கள் இரண்டு ஆகாயத்தை அளாவி நின்றதாலும் இரண்டிலும் சேரமான் கொடி பறந்துகொண்டிருந்ததாலும் எது மன்னன் அரண்மனையாயிருக்கும் என்பதை நிர்ணயிக்க முடியாததால், காவலரையே விசாரித்து விடுவோம் என்று தீர்மானித்துக் கொண்ட அந்த வாலிப வீரன் தனது புரவியை ஆற்றின் இரு கரைகளையும் இணைத்த பாலத்தை நோக்கிச் செலுத்தினான் மெதுவாக. அந்தச் சமயத்தில்கூட ''தண்பொருநை புனற்பாயும், விண்பொரு புகழ் விறல் வஞ்சி'' என்று புறநானூற்றுப்பாடல் அம் மாநகரத்தைச் சிறப்பித்த அழகையும், ''வருபுனல் வாயில் வஞ்சி'' என்று சிறுபாணாற்றுப்படை வழங்கிய சிறப்பையும் எண்ணிப் பார்த்துக் கொண்டே புரவியைக் கோட்டை வாயிற் கருகில் கொண்டு வந்த இதயகுமாரனை, கோட்டை வாயில் காவலர் இருவர் சிறிது நிறுத்தி, ''நீ எந்த ஊர்? யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று விசாரித்தார்கள்.

இதயகுமாரனின் கண்கள் அவ்விருவரையும் ஒரு விநாடி ஏற இறங்கப் பார்த்தன. அவன் இதழ்கள் இளநகை கூட்டின. அப்பார்வையை அடுத்து, ''சோழ நாட்டவன். இந்த ஊரைப் பார்க்க வந்தேன். சேரர் நாட்டில் விருந்தோம்பல்தான் அதிகமே தவிர தடை ஏதும் கிடையாதென்று கேள்விப்பட்டேன்'' என்று பதில் கூறினான் இதயகுமாரன், இதழ்களில் படரவிட்ட இளநகையை அடுத்து.

இந்தப் பதிலைக் கேட்ட அந்த வீரரும் ஒரு விநாடி மலைத்தனர். பிறகு அவர்களில் ஒருவன் கேட்டான், ''அப்படியானால் நீ நாடோடியா?'' என்று.

இந்தக் கேள்வி இதயகுமாரனை லேசாக நகைக்க வைத்தது. ''யாத்திரீகர்களுக்கு அப்படியொரு பெயர் தருவதாக இருந்தால் நான் நாடோடிதான்'' என்றான் இதயகுமாரன் நகைப்பின் ஊடே.

அவன் ஏளனச் சிரிப்பும் பதிலும் காவலன் சினத்தைக் கிளறிவிடவே, ''உன்னைப் பார்த்தால் யாத்திரீகனாகத் தெரிய வில்லை'' என்று கூறினான் உஷ்ணம் குரலில் ஒலிக்க.

''வேறு எப்படித் தெரிகிறது?''-விஷமம் துளிர்த்தது இதயகுமாரன் கேள்வியில்.

''போர்வீரனாகத் தெரிகிறது'' என்றான் இன்னொரு காவலன், இதயகுமாரன் இடையிலிருந்த நீண்ட வாளைச் சுட்டிக்காட்டி.

இதயகுமாரன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. இடது கையால் புரவியின் சேணத்தைப் பிடித்தவண்ணம் வலது கையால் முகவாய்க்கட்டையைத் தடவிக் கொண்டான் ஒரு விநாடி. ''உங்களிடம் அதை எதிர்பார்த்துப் பயனில்லை'' என்றான் முகத்தில் சிறிது ஏமாற்றத்தைப் படரவிட்டு.

''எதை?''–காவலன் ஒருவன் வினவினான்.

''சரித்திர அறிவை.'' இதயகுமாரன் பதிலில் இனம் புரியாத ஒலியிருந்தது.

''சரித்திர அறிவுக்கும் நீ யாத்திரைக்கு வந்ததற்கும் என்ன சம்பந்தம்?'' என்ற காவலன் சினம் அதிகப்பட்டது.

''போர்வீரன் யாத்திரீகனாயிருக்க முடியாதென்றாய். ஆனால் உங்கள் மாமன்னர் இமயவரம்பன் கங்கை யாத்திரை செய்திருக்கிறார். அவரும் போர்வீரனாகத்தான் இருந்திருக்க வேண்டும். அல்லது உங்கள் விளக்கப்படி...'' சொற்களை முடிக்கவில்லை இதயகுமாரன், சேணத்தைச் சிறிது இழுத்தான், புரவி அம்பு போல் பாய்ந்துவிட்டது கோட்டைக்குள்.



''பிடி அவனை பிடி'' என்ற குரல்கள் கோட்டை வாயிலில் எழுந்தன. புரவிகள் பலவும் இதயகுமாரனைத் தொடர்ந்து பாய்ந்து சென்றன. ஆனால் இதயகுமாரன் அடுத்த கணத்தில் கோட்டைக்கும் ஊருக்கும் இடையேயிருந்த பெருங்காட்டில் மறைந்துவிட்டதாலும், அவன் எந்தப் புறமாகச் சென்றான் என்பது தெரியவில்லையாதலாலும் சேர மன்னன் வீரர்கள் காட்டின் பல பகுதிக்குள் நுழைந்து சல்லடை போட்டு அரிக்கத் தொடங்கினார்கள்.

புரவியைக் கண்ணிமைப்பதற்குள் பறக்கவிட்ட இதயகுமாரன் காட்டின் கிழக்குப் பகுதியில் புகுந்து மேற்குப் புறமாகத் திரும்பி கோட்டைச் சுவரின் வேறொரு பகுதிக்கு வந்தான். எதிரே கோட்டை மதில்மீது காவல் புரிந்த வீரரையும், விற்கூடங்களைக் கொண்ட ஸ்தூபிகளையும் பார்த்து மகிழ்ச்சிகொண்டு மீண்டும் ஊரின் வடபுறத்துக்கு வந்து சற்று எதிரே தெரிந்த பெரும் கோயிலைக் கண்டான். கோயில் விதானத்தைக் கண்டதும் வெளியே தெரிந்த இரு விதானங்களில் அதுவும் ஒன்றென்பதைப் புரிந்துகொண்ட தோடு, அதன் பொன்மயமான விளிம்புகளைக் கண்டு பெருவியப்பும் கொண்டான். ''சிவ பக்தனான சேர மன்னன் இந்தப் பெருமாள் கோயிலுக்கு எதற்காகப் பொன் வேய்ந் தான்'' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு ''தமிழ் மன்னர்களிடத்தில் குறுகிய நோக்குக் கொண்டவர்கள் சிலரே தவிர பெரும்பாலும் சமய சமரசம் உடையவர்களே'' என்று சமாதானமும் சொல்லிக் கொண்டு அதனால் பெருமையும் அடைந்தான். இப்படிப் பெருமை உள்ளத்தில் துள்ள புரவியிலிருந்து கீழே குதித்து அதன் முதுகில் சேணத்தை எறிந்துவிட்டுக் கோவிலை நோக்கி நடந்தான். புரவியும் அவனைத் தொடர்ந்தது. கோவில் முன்வாயிலில் நுழைந்து பிராகாரத்தில் பிரதட்சணமாகச் சென்ற இதயகுமாரன் ஒருமுறை பின்னால் திரும்பி புரவியை நோக்கி, ''விஜயா! நீயும் பெருமாளைச் சேவிக்க வேண்டுமா?'' என்று வினவினான்.

''ஆமாம்'' என்பதற்கு அறிகுறியாக விஜயன் தலையசைக்கவே, ''நான் இவ்வூர் வந்தது பெருமாளைச் சேவிக்க அல்லவே'' என்றான்.

''இல்லை'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தது அந்தக் கருமை நிறப் புரவி.

இப்படி அந்த வாலிபன் புரவியுடன் பேசிக்கொண்டு நின்றதைக் கண்டு வியப்படைந்த மக்கள் பலர் அங்கேயே நின்று வேடிக்கை பார்த்ததால் இதயகுமாரன் மேலே நடக்க ஆரம்பித்தான். புரவி பின்தொடர ஒருமுறை கோவிலை பிரதட்சணம் செய்தவன் உள்ளே சென்று அங்கிருந்த அரங்க நாத பெருமானைச் சேவித்தான். அன்று பெருமானுக்கு அலங்காரம் பலமாயிருந்ததால் கண்களை அரங்கன் கம்பீர முகத்திலும் அருள் தரும் திருவடிகளிலும் மாறி மாறி நிலைக்க வைத்தான். அந்தச் சமயத்தில் கற்பூரத் தட்டேந்தி வந்த அர்ச்சகர் அர்ச்சனை புஷ்பப் பிரசாதத்தைப் பலருக்கும் கொடுத்து வந்த சமயத்தில் ஒரு தனி செண்பகப்பூ இதயகுமாரன் கையில் விழவே பிரமை பிடித்து நின்றார். ''அப்பா! இதைத் தவறி எடுத்து வந்து விட்டேன். திருப்பிக் கொடுத்துவிடு. வேறு பிரசாதம் தருகிறேன்'' என்று கேட்டார். அவர் குரலில் அச்சம் ஒலித்தது அதிகமாக.

அந்தச் செண்பக மலரைக் கண்ணில் ஒற்றிக்கொண்ட இதயகுமாரன் ''இந்த மலருக்கென்ன அத்தனை சிறப்பு?'' என்று வினவினான்.

''இது அரண்மனைத் தோட்டத்திலிருந்து வருகிறது. அரசகுமாரிக்காக ஏற்பட்டது. தயை செய்து கொடுத்து விடு'' என்று மன்றாடினார் பட்டர்.

இதயகுமாரன் அந்த மலரை வியப்புடன் நோக்கினான். ''பட்டரே! அரசகுமாரி நந்தவனத்தில் இப்படிப் பல மலர் தவிர்க்கும், நான் வெளியூர்க்காரன். ஆண்டவன் அருளியதைத்



திரும்பிக் கொடுக்க முடியாது. பதிலுக்கு இதை வைத்துக் கொள்ளுங்கள்'' என்று ஒரு பொன் நாணயத்தைத் தட்டில் போட்டான்.

பட்டர் மலைத்தார். நடுங்கினார். ''அப்பா! இந்தப் பொற்காசைப் போல் இரண்டு நான் தருகிறேன். மலரைக் கொடுத்துவிடு'' என்று கெஞ்சினார்.

இதயகுமாரன் சிறிது நேரம் சிந்தித்தான். பிறகு மலரை இருமுறை கண்களில் ஒற்றிக்கொண்டு பட்டர் காட்டிக் கொண்டிருந்த தட்டில் வைத்துவிட்டுத் திரும்பினான் கர்ப்பக் கிரக வாயிற்படியை நோக்கி.

''அப்பா! இந்தா உன் பொன் நாணயம்'' என்று கூவிய பட்டர் அந்த நாணயத்தையும் கையில் எடுத்துக் காட்டினார்.

ஆனால் இதயகுமாரன் அவரைத் திரும்பிப் பார்க்காமலும் அவர் சொன்னதைக் காதில் வாங்காமலும் வெளியே நடந்தான். அதுவரை கர்ப்பக்கிரகத்துக்கு அப்பால் வாயிலில் நின்றிருந்த விஜயனும் அவனைத் தொடர்ந்தது. அப்பெருங் கோயிலின் வாயிலுக்குக் கால்நடையாக வந்த இதயகுமாரன், வாயிலை அடைந்ததும் புரவிமீது ஏறிக்கொண்டு ''அரண்மனைக்கு வழி எது?'' என்று வினவினான், பக்கத்திலிருந்தவர்களை நோக்கி.

''அதோ அந்தச் சிறுகாட்டுக்கு அப்பாலிருக்கிறது'' என்று அங்கிருந்த ஒருவர் சுட்டிக் காட்ட, அந்தக் காட்டுக்குள் புரவியைச் செலுத்திய வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். ஊருக்குள் இருந்த காடானாலும், காடு உண்மையில் முழுக்காடாகவும் புதர்கள் நிறைந்ததாகவும் இருந்தது. சில புதர்களைச் சுற்றியும், சில புதர்களைத் தாண்டியும் சென்ற விஜயன், ஏதோ ஒரு பாதைக்கு அருகில் வந்ததும் சட்டென்று நின்றது? அப்படித் திடீரெனப் புரவி நின்று விட்டதால் சிந்தனையிலிருந்து மீண்ட இதயகுமாரன் எதிரேயிருந்த

பாறையை நோக்கினான். பாறை ஓரளவு பெரிதாக இருந்ததன்றி அதை அடுத்து வளர்ந்த புதர் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்ததையும் கவனித்தான். இருப்பினும் அதைப் பற்றி லட்சியம் செய்யாமல் புரவியை மேற்கொண்டு நடத்தச் சேணத்தைத் தட்டினான்.

சேணம் பட்ட மாத்திரத்தில் பறக்கும் அப்புரவி இருந்த இடத்தை விட்டு நகர மறுத்தது. அதன் காரணத்தை அறியப் புரவியிலிருந்து குதித்த இதயகுமாரன் செவிகளில் யாரோ பெருமூச்சு விடும் சத்தம் கேட்கவே அவன் சுற்று முற்றும் நோக்கினான். சத்தம் புதரிலிருந்து வருவதை உணர்ந்து அதற்கருகில் சென்று நோக்கினான். புதருக்குள் பெரும் நாகசர்ப்பம் ஒன்று பயங்கரமாக மூச்சுவிட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட இதயக்குமாரன் தனது இடைக்கச்சையிலிருந்த குறுவாளை எடுத்துக் கொண்டான். மனிதன் காலடி அரவம் கேட்ட காரணத்தலோ என்னவோ நாகசர்ப்பம் பெரிதாகப் படமெடுத்து அவனை நோக்கிச் சீறி வந்தது. அது படமெடுத்து ஊர்ந்ததுமே குறுவாளை அதன் படத்தில் வீசிவிட்ட இதயகுமாரன், படத்தை ஊடுருவிய குறுவாளின் பிடியைப் பாம்புடன் எடுத்து இருமுறை சுழற்றி பாம்பைத் தூரத்தில் எறிந்தான். அத்துடன் ஆபத்து நீங்கிவிட்டதென்ற நினைப்பில் திரும்ப முயன்றவன் புதருக்குள்ளேயிருந்த புற்றில் ஏதோ ஒரு தலை தெரிவதைக் கண்டு மீண்டும் புதருக்கருகில் சென்று தன் குறுவாளால் புற்று மண்ணைக் கிளறி அகற்றினான். மண் அகல அகல ஒரு அழகிய சிலையின் மேற்பகுதி கண்ணுக்குத் தெரியவே அதைப் பிடித்து ஆட்டி மேலே எடுத்தான். எடுத்தவன் பிரமை பிடித்துப் பல விநாடிகள் நின்றுவிட்டான்.

அழகிய ஒரு பெண்ணின் சிலை நாட்டிய பாணியில் நல்ல பழுப்பேறிய யானைத் தந்தத்தால் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சிலையின் வளைவுகளும் வேலைப்பாடுகளும் இதயகுமாரன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அந்தச் சிலைப்



பெண் அவனுடன் தன் மூடிய கண்களாலேயே உறவாடினாள். அவள் இதழ்கள்கூடத் திறந்து ஏதோ பேசுவதைப் போன்ற பிரமையை விளைவித்தன சோழ நாட்டு வாலிபனுக்கு.

நேரம் போவது தெரியாமல் நின்றுவிட்ட அவனை ''அதை இருந்த இடத்தில் வைத்துவிடு'' என்ற ஆணைக் குரல் சட்டென்று திரும்ப வைத்தது.

புதரிலிருந்து பத்தடி தூரத்தில் பைந்தொடி ஒருத்தி நின்றிருந்தாள். அவள் கண்களில் சீற்றம் மிதமிஞ்சித் தெரிந்தது. கண்களும் அவனைக் கவரத்தான் செய்தன. ஆனால், கண்களைவிட அவள் தலைக்குழல் அவன் கவனத்தைப் பளீரென ஈர்த்தது. அர்ச்சகர் தனக்கு அளிக்க மறுத்த செண்பக மலரை அவள் சூடியிருந்தாள்.

அதைக் கவனித்ததால் பிரமிப்புக்குள்ளான இதயகுமாரனுக்கு அவள் விடுத்த அடுத்த ஆணை அதிக பிரமிப்பை அளித்தது. ''இவனைச் சிறை செய்யுங்கள்'' என்று அவள் தனக்குப்பின்னால் நின்ற காவலருக்கு உத்தரவிட்டாள். பத்துக் காவலர்கள் உருவிய வாட்களுடன் அவனை நோக்கி வந்தார்கள். அந்தப் பிசகை அவள் செய்திராவிட்டால் ஒரு பெரிய உண்மை புலப்பட்டிருக்காது. அந்த உண்மை புலப்பட்டிருக்காவிட்டால் தமிழகம் அதுவரை காணாத ஒரு பேரரசும் உருவாகி இருக்காது.

# 2. வீரனா? பித்தனா?

செண்பக மலரைக் குழலில் சூடி சிறிதே இடை ஒடித்து, சீற்றம் நிரம்பிய கருவிழிகளைக் கனல் விழிகளாக்கி தன்னைச் சிறை செய்யும்படி ஆணையிட்ட அந்த சித்தினியின் உத்தரவையோ, அதை அடுத்து தன்னை நோக்கி வாளும் கையுமாக வந்த பத்து வீரர்களையோ சிறிதளவும் லட்சியம் செய்யாமலும், கையிலேந்திய சிலையையோ, அத்துடன் இணைந்து நின்ற பாம்பு ரத்தமும் புற்று மண்ணும் ஒட்டிய சிலையையும் அந்த அழகியையும் மாறி மாறி நோக்கினான் சில விநாடிகள்.

அப்படி அவன் அசட்டையுடன் காலதாமதம் செய்ததால் அவனை நெருங்கிவிட்ட பத்துக் காவலரும் தங்கள் வாட்களின் நுனிகள் அவன் உடலில் படும்படி செய்துங்கூட அவன் நின்ற நிலையிலிருந்து அகலாமல் இடது கையிலிருந்த சிலையிலிருந்து தனது குறுவாளை வலது கையால் எடுத்து பாம்பு ரத்தத்தையும் புற்று மண்ணையும் தனது கச்சையில் துடைத்துக் கொண்டான் நிதானமாக. துடைத்த குறுவாளைக் கச்சையில் வயிற்றுக்கு மேலிருந்த உறையில் செருகிவிட்டு இடது கையிலிருந்த தந்தச் சிலைமீது படிந்திருந்த மண்ணையும் வலது கைகளாலும் அதை ஏந்தி அதன் வேலைப்பாட்டையும் அழகையும் கவனிக்கலானான்.

அவன் தங்களைப்பற்றிக் காட்டிய அசட்டையையும், சிலையைச் சுத்தப்படுத்துவதில் காட்டிய சிரத்தையையும் கவனித்த பத்து காவலரில் தலைவனாகக் காணப்பட்ட ஒருவன், ''டேய்! பத்து வாட்கள் உன்னைத் தடவி நிற்கின்றன'' என்று அறிவித்தான் சினம் ததும்பிய குரலில்.



கையிலிருந்த சிலையிலிருந்து கண்ணை எடுக்காமலே ''தெரிகிறது'' என்ற ஒன்றைச் சொல் பதிலைக் கூறிய இதய குமாரன் சிறிது நேரத்திற்குப் பிறகு, ''அரசகுமாரி! இந்தச் சிலையைத் தாங்கள் இதற்கு முன்பு பார்த்திருக்கிறீர்களா?'' என்று எதிரே எட்ட நின்றிருந்த அந்தப் பெண்ணை நோக்கிக் கேள்வியொன்றையும் வீசினான்.

பத்து வீரர்கள் வாளேந்தி நின்ற சமயத்தில் அவன் காட்டிய அசட்டையையும் தன்னைக் கேள்வி கேட்க முயன்ற துணிவையும் கண்ட அரசகுமாரியின் விழிகளில் சீற்றம் சிறிது விலகி வியப்பு குடிகொண்டதால், ''அதைப்பற்றி உனக்கென்ன?'' என்று வினவினாள், வியப்பு துலங்கிய குரலில்.

''காரணம் இருக்கிறது அரசகுமாரி'' என்ற இதய குமாரன், தன் கையிலிருந்த சிலைசயைச் சிறிது தூக்கி அவள் கண்களில் அது நன்றாகப் படும்படி காட்டியதன்றி, ''உங்களுக்கும் இதற்கும் நிறைய சம்பந்தம் இருக்கிறது'' என்றும் கூறி மீண்டும் சிலையைத் தனக்காகத் திருப்பி அதை நோக்கி விட்டு அரசகுமாரியையும் கவனித்தான்.

அரசகுமாரியின் இடை துவண்ட காரணத்தாலோ என்னவோ அவள் தனது இடையை மேலும் ஒடித்து ஒரு புறமாகச் சாய்ந்து நிற்கவே பெரும் பிரமை பிடித்துக் கொண்டது இதயகுமாரனை. ''சந்தேகமில்லை. துளிக்கூட வித்தியாசமில்லை.'' மிக மெதுவாகச் சொல்லிக் கொண்டான் அந்த வாலிபன்.

சிற்றிடை அதிகமாக ஒடிந்து நின்ற நிலையில் அரசகுமாரி சாட்சாத் அந்தச் சிலையைப் போலவே காட்சியளித்தாள். அவள் சுந்தர முகமும் சிலையின் முகத்தைப் போலவே பழுப்பேறிய தந்தம் போலிருந்தது. காலை நீராட்டத்தின்போது அவள் பூசியிருந்த மஞ்சளின் காரணமாக அவள் நெற்றியும் கன்னங்களும் தந்தத்தின் நிறங் கொண்டதன்றி

கோபத்தில் சிறிதே சிவந்துவிட்ட வழவழத்த கன்னங்கள் சிலையில் ஏற்கனவே ஒட்டியிருந்து பிறகு துடைக்கப்பட்டு விட்ட புற்றின் செம்மண்ணின் நிறத்தையும் தங்களிடம் கூட்டிக் கொண்டன. பிறை நுதலுக்கு மேல் வகிடு எடுத்துப் பின்னால் பெரிதாக முடிக்கப்பட்டிருந்த தலைக் கருங்குழலின் நிறம் சிலையின் குழல் நிறத்திலிருந்து மாறுபட்டிருந்த தேயொழிய, முடிப்பின் முறையும் சிலையின் முடிப்பைப் போலவே மிக்க கவர்ச்சியாக இருந்தது.

இடைக்குச் சற்று மேலே எழுந்த இரட்டை அழகுகளின் பரிமாணம் அதிகமே தவிர மற்றபடி சிலையின் மார்பகத்தின் அமைப்பே அவளுக்குமிருந்தது. இருப்பது பொய்யோ எனும் இடைக்குக் கீழே தெரிந்த ஆலிலை வயிறும் சரி, அதன் கீழே உறுதியுடன் செதுக்கிவிட்டது போல் உருண்டும் பருத்தும் இறங்கிய கால்களும் சரி, சிலையின் உருவத்தை அப்படியே அச்சாக வார்த்திருந்தது.

இப்படித் திகைக்கும்படியாக இருந்த ஒற்றுமையைக் கவனித்துப் பிரமித்த இதயகுமாரன் மனத்தில் எண்ணங்கள் ஏதேதோ எழுந்தாலும் உணர்ச்சிகள் பலபடி சுழன்றாலும், அவற்றுக்கெல்லாம் இடங்கொடாமல் அரசகுமாரியைப் பார்த்து, ''அரசகுமாரி! உங்கள் காவலரைச் சற்று விலகச் சொல்லுங்கள்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

அப்பொழுதாவது அரசகுமாரி சிறிது சிந்தித்திருக்கலாம் ஆனால், உள்ளே எழுந்திருந்திருந்த சீற்றம் அதிகப்படவே தனது காவலரை நோக்கி, ''ஏன் நிற்கிறீர்கள்? கடமையைச் செய்யுங்கள்'' என்று உத்தரவிடவே செய்தாள். அந்தப் பிழையை அவள் இரண்டாம் முறை செய்திருக்காவிட்டால், அவன் சிலையையும் நோக்கித் தன்னையும் ஆராய்ந்த தருணத்தில் ஏற்பட்ட சிறு மாறுதல்களைக் கவனித்தாவது இருந்தால், நிலைமை பெரிதும் மாறுபட்டிருக்கும்



அவன் அவளுடன் பேச்சுக் கொடுத்த சமயத்தில் விஜயன் மெள்ள அவனை நோக்கி நகர்ந்து அருகில் நின்று விட்டது. அதன் முதுகில் எறியப்பட்ட கடிவாளம் அவன் வலது கையைச் சிறிது தடவவும் முற்பட்ட சமயத்தில் காவலர் தலைவன் தனது வாளைச் சிறிது அழுத்தினான் இதயகுமாரன் மார்புமீது, ''உன் வாளை இப்படிக் கொடு'' என்று கையையும் நீட்டினான். ''அரசகுமாரியின் உத்தரவுப்படி நடந்தால் நீ பிழைக்கக்கூடப் பிழைக்கலாம்'' என்று கூறிக் கொண்டே இதயகுமாரனை அணுகி அவன் வாளின் உறையில் கையை வைத்தான்.

அடுத்த விநாடி முற்றிலும் எதிர்பாராத மின்னல் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. காவலர் தலைவன் நீட்டிய கை வெகு வேகமாக இழுக்கப்பட்டது இதயகுமாரன் வலது கரத்தால். கண்ணிமைக்கும் நேரத்தில் வேகமாக விசிறப்பட்ட காவலர் தலைவன் ஏதோ வித்தை செய்பவனைப்போல் குனிந்து ஓடி அருகிலிருந்த புதரில் போய் விழுந்தான். அவன் புதரில் விழுவதற்கு முன்பே எடுக்கப்பட்டுச் சுழற்றப்பட்ட இதயகுமாரன் வாள் இரு வீரர்கள் கைகளில் பாய்ந்துவிடவே அவர்கள் அலற, மற்றவர்கள் சற்றுப் பின்னடைந்து அந்த வாலிபன் மீது வாட்களைச் செலுத்தி விட முயன்றனர். அவர்கள் வாட்களை எழுப்பு முன்பு விஜயன்மீது பாய்ந்து விட்ட இதயகுமாரன் அதன் கடிவாளத்தையும், சிலையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, விஜயன் பாய்ந்த வேகத்தில் சிறிது குனிந்து அரசகுமாரியை இடது கையால் ஒரே தூக்கில் தூக்கிக் கொண்டு புரவியுடன் சேர்த்து அவளை அணைத்த வண்ணம் அடர்ந்த காட்டுக்குள் புகுந்துவிட்டான், கருத்த மேகத்தை ஊடுருவும் மின்னல் போல.

அவன் பின்னால் காவலர் கூச்சல் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. ''அரசகுமாரி! அரசகுமாரி!'' என்று கூக்குரல்கள் பலபடி எழுந்தன. புரவிகளின் குளம்படிச் சத்தங்களும்

ஏராளமாகக் கேட்டன. அத்தனையையும் லட்சியம் செய்யாத இதயகுமாரன், மரங்கள் அடர்த்தியாயிருந்த ஒரு பகுதிக்கு வந்ததும் அரசகுமாரியை நன்றாகக் குதிரைமீது ஏற்றிவிட்டு புரவியைக் காட்டின் உட்பகுதியில் நிதானமாக நடக்க விட்டான். அப்படி நடந்த புரவி மரங்கள் அடர்த்தியில்லாத ஒரு பகுதிக்கு வந்ததும் அரசகுமாரியைப் புரவியிலிருந்து இறக்காமல் தான் மட்டும் இறங்கி நின்றுகொண்டான் அந்த வாலிப வீரன். ''அரசகுமாரி! அவசியமானால் நீங்களும் இறங்கிச் சற்று இளைப்பாறலாம்'' என்றும் கூறினான்.

அரசகுமாரி புரவியிலிருந்து இறங்காமலே அவனை இகழ்ச்சிக் கண்களுடன் நோக்கினாள். ''நீங்கள் பெரிய வீரராயிருக்கலாம். ஆனால் அறிவாளியல்ல'' என்றாள். அவள் பேச்சில் முதன்முதலாக மரியாதை தெரிந்தது.

''அப்படியா அரசகுமாரி!'' என்று வினவிய இதயகுமாரன் அவளைப் பார்த்துச் சிறிது நகைத்து, ''உங்களைப் போன்ற மோகனச் சிலையைப் பார்க்கும்போது அறிவிழந்தால் அது இயற்கைதானே'' என்றான், நகைப்பு குரலிலும் லேசாக ஒலிக்க.

பதில் கூறவில்லை அரசகுமாரி அவனுக்கு. புரவியின் கடிவாளத்தை இழுத்து அதன் வயிற்றிலும் உதைத்தாள் தனது இடது காலால். அடுத்த விநாடி அவள் ஏமாற்றம் அளவிட முடியாததால் திகைப்பும் விரிந்தது அவள் சுந்தரவதனத்தில். விஜயன் கடிவாள இழுப்புக்கோ, வயிற்றில் கிடைத்த உதைக்கோ நகர மறுத்துக் கல்லால் செதுக்கப்பட்டதுபோல் அசையாமல் நின்றது ஒரு விநாடி. பிறகு தலையைத் திருப்பி அரசகுமாரியை நோக்கிப் பற்களைப் பயங்கரமாகத் திறந்தது, சிரித்தது. ''இது குதிரையா கழுதையா?'' என்று சீறினாள் அரசகுமாரி விஜயனையும் நோக்கி, இதயகுமாரனையும் நோக்கி.



இதயகுமாரன் இதழ்களில் இளநகையொன்று அரும்பியது. ''அரசகுமாரி! சொன்னால் தவறாக நினைக்க மாட்டீர்களே?'' என்று கேட்டான் இதயகுமாரன் பணிவு நிரம்பிய குரலில்.

''எதை வேண்டுமானாலும் சொல்'' என்ற அரசகுமாரியின் சொற்களில் சினமில்லை, பழைய மரியாதை இல்லை; இகழ்ச்சி அதிகமாயிருந்தது.

''விஜயன்? கழுதை என்றீர்கள்...'' சொற்களை முடிக்கவில்லை இதயகுமாரன்.

''யார் விஜயன்''என்று அரசகுமாரி குறுக்கிட்டாள்.

''நீங்கள் அமர்ந்திருக்கும் என் புரவி'' என்று விண்ணப்பித்துக் கொண்டான் இதயகுமாரன்.

''அப்படியா?''

''ஆம்.''

''அதைக் கழுதையென்றால் என்ன தவறு? இடது காலால் வயிற்றில் உதைத்தேன். அப்பொழுதும் கிளம்பவில்லை''என்று சுட்டிக்காட்டினாள் அரசகுமாரி.

''உதைத்தது தாங்கள்தானே? விஜயனல்லவே''என்று இதயகுமாரன் கேட்டான். அவன் கேள்வியில் விஷமம் பரிபூரணமாக ஒலித்தது.

அவன் என்ன சொல்கிறான் என்பதைப் புரிந்துகொண்டதால் அரசகுமாரியின் முகம் சீற்றத்தாலும்,அந்த வாலிபன் சுட்டிக்காட்டிய நிந்தையாலும் பெரிதும் சிவந்தது. நீள் விழிகள் அவனைச்சுட்டுவிடுவனபோல் பார்த்தன. அவள் முகமாற்றத்தைக் கவனித்த இதயகுமாரன், அரசகுமாரிக்கு அருகில் வந்து, ''அரசகுமாரி!விஜயன் என் புரவி மட்டுமல்ல. என் தோழன். அவனை வசைபாடுவது என்னை வசைபாடுவதாகும். இருப்பினும் எனக்குக் கோபமில்லை அரசகுமாரி!அவன் வயிறு

இரும்பு போன்றது. அதை உதைத்ததால் உங்கள் கமலப்பாதம் சிவந்துவிட்டது. இதோ பாருங்கள்''என்று கூறிக்கொண்டே அவள் இடது பாதத்தை எடுத்துக் கையால் தடவிக் கொடுத்தான்.

வாலிபனின் கைபட்டதால் அதுவரை சிவந்திருந்த பாதம் முன்னைவிட அதிகமாகச் சிவந்தது. உடலில் அன்று வரை அவள் அனுபவிக்காத உணர்ச்சிகள் ஊடுருவிச் சென்றன. அவற்றின் விளைவாக அவள் காலைச் சிறிது இழுத்துக் கொள்ள முயன்றாளானாலும், அந்த வாலிபனின் மெதுவான பிடியே இரும்புப் பிடியாயிருந்ததால் தனது மலர்க் காலை விடுவித்துக்கொள்ள முடியவில்லை அவளால். ஆகவே, ''காலை விடுகிறாயா, இல்லையா?''என்று சீறினாள் அரசகுமாரி.

இதயகுமாரன் அவள் காலை விட்டான் மிக மெதுவாக. ''அரசகுமாரி! மன்னிக்க வேண்டும். எந்த ஆடவனும் சித்தமிழக்கும் சமயங்கள் உண்டு'' என்றும் மிகப்பணிவுடன் கூறினான்.

அரசகுமாரி அவன் பணிவைக் கண்டாள். அவன் புரவியிலிருந்து சிறிது விலகி நின்றுவிட்ட பண்பையும் கண்டாள். ஏதோ நினைத்துக்கொண்டவள் வலதுகாலையும் இடது பக்கத்தில் திருப்பிப் போட்டுப் புரவியிலிருந்து லேசாகச் சரிந்து கீழே இறங்கி நின்றாள் புரவிமீது சாய்ந்த வண்ணம். அவள் நின்ற தோரணையைக் கண்ட இதயகுமாரன் மீண்டும் உலகை மறந்தான். அவள் அழகு அவள் நின்ற பாணியில் பன் மடங்கு அதிகமாகத் தெரிந்தது இதயகுமாரன் கண்களுக்கு. மரக்கூட்டம் சிறிது விலகியிருந்த இடமாதலால், ஊடுருவி வந்த கதிரவன் கதிர்கள் அவள்மீது பட்டதால் அவள் வழவழத்த கன்னங்கள் அதிக மெருகு பெற்றுப் பளபளத்தன. அன்று காலையில் அவள் நீராடி.தலையைக் கோதி விட்டுப் பெரிதாக முடிந்திருந்த குழலின் ஒரு பக்கமாக இருந்த செண்பக மலர்,



சிவப்பும் மஞ்சளும் கலந்த தனது இதழ்களைத் திறந்து அவள் கன்னங்களின் அழகைக் குறைக்கப் பார்த்தாலும், அது முடிய வில்லை என்பதைப் புரிந்துகொண்டான் இதயகுமாரன். அவன் கையிலிருந்த சிலையே உயிர் பெற்று வளர்ந்து பருவச் சிலையாகத் தன்னெதிரில் நின்று விட்ட பிரமை இதயகுமாரனுக்கு ஏற்பட்டதால் அரசகுமாரியை அணுக ஒரு காலை எடுத்து வைத்தவன் மீண்டும் காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண் டான். ''அரசகுமாரி!''என்று மெள்ள குரலும் கொடுத்தான்.

அவன் தன்னை அணுகக் காலை எடுத்து வைத்ததையும் அரசகுமாரி கவனித்தாள். பிறகு காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டதையும் கவனித்தாள். அவன் மிகப் பண்புள்ளவன் என்பதைப் புரிந்து கொண்டதால் பணிவுடன் உரையாடவும் தொடங்கினாள். ''நீங்கள் இந்த ஊருக்குப் புதிதாக இருக்க வேண்டும்'' என்றாள் தலையை நிலத்தில் தாழ்த்திய வண்ணம்.

''ஆம்.'' இதயகுமாரன் பதில் திட்டமாக இருந்தது.

''வந்ததும் ஆபத்தில் சிக்கிக்கொண்டீர்கள்!''

''ஆம்.''

''என் வீரர்களை எதிர்த்தீர்கள்!''

''ஆம்.''

''அரசகுமாரியான என்னைத் தூக்கிக்கொண்டு வந்தீர்கள்!''

''ஆம்.''

''இதற்கு மரண தண்டனை.''

''தெரியும்.''

இதைக் கேட்ட அரசகுமாரி சிலையென நின்றாள். பிறகு கேட்டாள். ''நீங்கள் யாரைப் பார்க்க வந்தீர்கள் இந்த ஊருக்கு?''என்று வினவினாள்.

''இந்த ஊர் அரசகுமாரியை''என்று பதில் சொன்னான் இதயகுமாரன்.

''எதற்கு?'' என்று வினவினாள் அவள்.

''அதை அரசகுமாரியிடந்தான் சொல்ல வேண்டும்'' என்றான் அந்த வாலிபன்.

''சரி, சொல்லுங்கள்'' என்று ஊக்கினாள் அவள்.

அவன் பதில் ஏதும் சொல்லாததால் அவள் மீண்டும் கேட்டாள், ''வீரரே! அஞ்சவேண்டாம். சொல்லுங்கள்''என்று. இம்முறை மரியாதை பெரிதும் ஒலித்தது அவள் குரலில். அது வரை அவள் குரலிலிருந்த வெறுப்பு, இகழ்ச்சி இரண்டும் மறைந்துவிட்டன.

அவன் அப்பொழுதும் பேச மறுத்தான். பேசியபோது அவளுக்குக் காத்திருந்தது பெரிய அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியைத் தொடர்ந்து அரசகுமாரியின் உடல் சிறிது நடுங்கியது. ''நீ வீரனா? பித்தனா?'' என்று வினவினாள் அவள். மரியாதையைக் கைவிட்டு, குரலிலும் நடுக்கம் துலங்க.

## 3. இரத்தினக் கொல்லன் இல்லம்

**கா**ட்டு மரங்களை ஊடுருவிய காலைக் கதிரவன் கிரணங்களால் கண்களைக் கவரும் கட்டழகுடன் காட்சியளித்த காரிகை அத்தனை தூரம் ஊக்கியும், அவளைக் காவலரிடமிருந்து கவர்ந்து வந்த கள்வன் முதலில் பேச மறுத்தாலும், பேசத் துவங்கியபோது அதிர்ச்சி தரும் சொற்களை உதிர்ந்தான். சிறிது சிந்தனைக்குப் பிறகு. ''நான் வந்த விஷயத்தைச் சொல்லுமுன்பு நீங்கள்தான் இந்த நாட்டு அரசகுமாரி என்பது எனக்குத் திட்டமாகத் தெரிய வேண்டும்'' என்று கூறிய வாலிபன் அவளைத் தன் கூரிய விழிகளால் ஏறெடுத்து நோக்கினான்.

அவன் சொற்களைக் கேட்டதால் திகைப்பும் அதிர்ச்சியும் சீற்றமும் கலந்த உணர்ச்சிகளால் ஊடுருவப்பட்ட அரசகுமாரியும் தனது வேல் விழிகளை அவன் விழிகளுடன் கலந்தாள். வேல்களுடன் வேல்கள் உராய்ந்தது போன்ற இருவர் பார்வையும் ஒன்றையொன்று சில விநாடிகள் கவ்வி நின்றதால் இருவரிடையும் ஏற்பட்ட மௌனம் திடீரெனக் கலைக்கப் பட்டது. இளவரசியின் இதயத்தில் எல்லா உணர்ச்சிகளுக்கும் மேலாக எழுந்துவிட்ட சினத்தின் விளைவாக ''நீ வீரனா? பித்தனா?'' என்றுசீறி வந்த சொற்கள் இதயகுமாரனை எரித்து விடுவன போலிருந்தாலும், அவன் அவள் சீற்றத்தையோ சொற்களையோ சிறிதும் பொருட்படுத்தாமல் சொன்னான், ''இந்த நகரத்துக்குள் புகுந்த போது வீரன், தங்களைப் பார்த்ததும் பித்தன்'' என்று.

இதயகுமாரனின் இந்தத் துணிகர பதில் இளவரசியின் சீற்றத்தைச் சிறிது தணித்ததா, அல்லது விசிறிவிட்ட கோபத்தை அவள் வேண்டுமென்றே மறைத்துக்கொண்டாளா.

சொல்ல முடியாது. அவள் விழிகளில் விஷமச் சிரிப்பின் சாயையொன்று படர்ந்து, அது முகத்திலும் விரிந்து மலர்ந்தது. செவ்விய இதழ்களிலும் சிறிது இளநகையைக் கூட்டிக் கொண்ட அரசகுமாரிஎதிரே நின்ற அந்த வாலிபனை ஆராயத் தொடங்கினாள். விடுவிடு என்று நிகழ்ந்துவிட்ட சம்பவங்களால் அவனை எடைபோட முடியாத அரசகுமாரி மரக் கூட்டங்கள் அளித்த இடைவெளியில் காவலர் அரவமோ இடைஞ்சலோ இல்லாத அந்த நேரத்தில் நன்றாகவே நோக்கினாள் எதிரே நின்ற அந்த வீரனை.

இளமை அளவுக்கு அதிகமாகவே சொட்டியதால் அவன் முகம் குழந்தை முகம்போல் காட்சியளித்தாலும், அந்த முகத்தின் குறுக்கே விழுந்து வளைந்து கிடந்த தலைக் குழலின் முரட்டுத்தனமும், கண்களில் விளையாடிய ஆராய்ச்சி ஒளியும், நெற்றியின் வலதுபுற உச்சியிலிருந்த சின்னஞ்சிறு கத்தி வெட்டுத் தழும்பும், அவன் அப்படியொன்றும் ஏதுமறியாத குழந்தையல்ல என்பதைப் பறைசாற்றின. மேலுதட்டின்மீது திட்டமாகத் தெரியாமல் அரும்பத் தொடங்கியிருந்த சிறிய ரோமங்கள்கூட அவன் முகத்துக்குத் தனி அழகையும் வீரத்தையும் அளித்திருந்தன. அவன் காலையில் நீராடி நெற்றியில் அணிந்திருந்த மூன்றாம் பிறைபோன்ற சந்தனத் திலகம் அவன் வீரத்தை அதிகப்படுத்திக் காட்டியது. அவன் அணிந்திருந்த அங்கி அதிக விலை உயர்ந்ததல்லவென்றாலும் இடது கையை அலங்கரித்த வீர கங்கணம் விலைமதிக்க முடியாதென்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்தது. அதில் பதிக்கப்பட்டிருந்த ஒரே ஒரு இரத்தினக்கல் காலை வெயிலில் தணல்போல் பிரகாசித்ததன்றி அதன் ஒளி அவன் நெற்றியிலும் பட்டு அதையும் ரத்தச் சிவப்பாக அடித்திருந்தது. அவன் நீண்ட கைகளும் சரி, அவன் கணைக்காலைத் தொட்டுக் கொண்டருந்த நீண்ட வாளும் சரி, அவன் போரிடவே பிறந்தவனென்பதை எடுத்துக்காட்டுவனபோல் இருந்தன. கைகள்



மெலிந்தேயிருந்தாலும் அவற்றின் உரம் எஃகையும் அவமதிக்கும் தன்மையுடன் காட்சியளித்ததாலும், தரையில் ஊன்றிய கால்கள் ஏதோ இரண்டு இரும்புச் சலாகைகள் பூமியில் நடப்பட்டவைபோல் தெரிந்ததாலும், அந்த வாலிபனை எதிரியாக்கிக்கொள்வது விரும்பத்தக்கதல்ல வென்று திட்டமாகப் புலனாகியது. இடையில் வயிற்றுக்கு முன்பாக அவன் சொருகியிருந்த குறுவாள்கூட ஏதோ எச்சரிக்கை செய்வது போலிருந்தது.

இத்தனையும் கவனித்து அவனை அணுஅணுவாக ஆராய்ந்த அரசகுமாரி புரவியின்மீது சாய்ந்த நிலையிலிருந்து விலகி அவனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்து ''வீரரே!'' என்றாள் மீண்டும் மரியாதையைச் சொற்களில் வரவழைத்துக் கொண்டு.

''அரசகுமாரி!'' என்று மிகுந்த பணிவுடன் வந்தது இதயகுமாரன் பதிலும்.

இதைக் கேட்ட அரசகுமாரியின் இதழ்களில் மறுபடியும் துளிர்த்தது இளநகை. ''என்னை அரசகுமாரி என்று அழைக்கிறீர்களே!'' என்று வினவினாள். அவள், உள்ளே எழுந்த நகைப்பு சிறிதளவு குரலிலும் ஊடுருவ.

தடங்கலின்றி பதில் சொன்னான் அந்த வாலிபன், ''அதனாலென்ன அரசகுமாரி?'' என்று.

''மீண்டும் அதே பிழையைச் செய்கிறீர்கள்'' என்றாள் அவள் மறுபடியும்.

''எந்தப் பிழை அரசகுமாரி?''–ஏதுமறியாததுபோல் வினவினான் அந்த வாலிபன்.

''என்னை அரசகுமாரி என்று நீங்கள் ஒப்புக்கொள்ளாத போது அரசகுமாரி என்று அழைப்பது பிழையல்லவா?'' என்று வினவினாள் அவள்.

இப்படி அவள் சொல்லி அவன் குற்றத்தைச் சுட்டிக் காட்டி சிறிது வாய்விட்டே நகைத்தாள். ஜலதரங்கம் வாசிக்கப் பட்டது போல் மிக இன்பமாக உதிர்ந்த அந்தச் சிரிப்பைக் கேட்ட இதயகுமாரன் இதயத்தில் இசையின்பம் ஊடுருவிச் சென்றிருக்க வேண்டும். அந்த மயக்கத்தில் சொன்னான். ''தங்களை அரசகுமாரி அல்லவென்று நான் சொல்லவில்லை'' என்று.

''சற்று முன்பு நீங்கள் சொன்னதென்ன?'' என்று வினவி னாள் அரசகுமாரி வியப்புடன்.

''நீங்கள் இந்த நாட்டு அரசகுமாரி என்பதற்கு அத்தாட்சி வேண்டுமென்று கேட்டேனேயொழிய நீங்கள் அரசகுமாரி யல்லவென்று நான் சொல்லவில்லையே. ஆரம்பத்திலிருந்து அரசகுமாரி என்றுதானே அழைத்து வருகிறேன்'' என்று விளக்கினான் இதயகுமாரன். அத்துடன் சிறிது நிதானித்து விட்டு. ''நீங்கள் யாராயிருந்தாலும், என் ஆராய்ச்சியின் முடிவு எப்படியிருந்தாலும், நான் சம்பந்தப்பட்டவரை நீங்கள் ஒரு அரசகுமாரிதான்'' என்றும் கூறினான்.

அவன் பேச்சிலிருந்த சாமர்த்தியத்தையும், அவற்றில் புதைந்துகிடந்த பல விஷயங்களையும் அரசகுமாரி கவனிக்கவே செய்தாள். ''ஏதோ ஆராய்ச்சி என்கிறான், முடிவு என்கிறான், இதெல்லாம் என்ன?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். பிறகு மேலும் அவனிடமிருந்து விவரங்களை வரவழைப்பதற்காக மிக அன்புடன் பேசத்துவங்கி, ''ஆமாம்! முதலில் அரசகுமாரியென்று அழைத்தீர்களே, அது எப்படி? காவலர் உடன் வந்ததாலா?''என்று வினவினாள்.

இதைக்கேட்டதும் இதயகுமாரனும் நகைத்தான். ''இல்லை அரசகுமாரி. அதல்ல காரணம். காவலர் அரசகுமாரி யுடன்தான் வரவேண்டுமென்பதில்லை. மந்திரிகுமாரியுடன் வரலாம், சேனாதிபதியின் செல்வியுடன் வரலாம். ஏன்– என்னை நீங்கள் சிறை செய்திருந்தால் என்னைச் சூழ்ந்தும் பத்து காவலர் வரலாம். காவலரை வைத்து, பணிமக்களின் தொகையை வைத்து, படாடோபத்தையோ அணிமணிகளையோ வைத்துக்கூட யாரையும் மதிப்புப்போட முடியாது'' என்று நகைப்பின் ஊடே கூறவும் செய்தான்.



''வேறு எதை வைத்து எடை போட்டீர்கள்?'' என்று கேட்டாள் அரசகுமாரி புன்முறுவல் இதழ்களில் அரும்ப, உதடுகள் சிறிதளவு விலகி இரு முத்துக்களை வெளிபடுத்த.

''மலரை வைத்து எடை போட்டேன் அரசகுமாரி''– இதயகுமாரன் பதிலில் பணிவு இருந்தது.

''மலரையா!''அரசகுமாரியின் கேள்வியில் குழப்ப மிருந்தது.

''ஆம் அரசகுமாரி! நீங்கள் குழலில் சொருகியிருக்கும் செண்பக மலரைக்கொண்டு நீங்கள்தான் அரசகுமாரி என்று தீர்மானித்தேன்'' என்று உள்ளதைச் சொன்னான் இதயகுமாரன்.

அரசகுமாரியின் வதனத்தில், புரிந்ததற்கு அடையாள மாக மகிழ்ச்சிச் சாயை படர்ந்தது. ''அப்படியா!'' என்ற கேள்வியிலும் சந்துஷ்டி இருந்தது.

இதயகுமாரன் அவளுக்கு வெகு அருகில் வந்து,''அதோ அந்த செண்பக மலர். அதை எனக்குக் கொடுத்த அர்ச்சகர் திரும்பவும் வாங்கிக்கொண்டார். காரணத்தையும் சொன்னார்'' என்று கூறி செண்பக மலரைக் கையால் தொட்டும் காட்டி னான்.

அவன் அப்படித் தனக்கு வெகு அருகில் வந்து விட்டதையும், தலைமீதிருந்த செண்பக மலரைத் தொட்டுக் காட்டியதையும் கண்ட அரசகுமாரி ஏது செய்வதென்று அறியாமல் திணறினாள். இதயகுமாரன் நிலையும் விவரிக்கத் தகாததாயிருந்தது. அவளருகில் வந்ததும் அவன் நாசியில் அவள் குழலிலிருந்த செண்பக மலரின் வாசனை மட்டுமின்றி, தலையில் ஸ்நானத்திற்காகத் தடவப்பட்டு, அலசி நீராடிய

பிறகும் அகலாத வாசனைத் தைலங்களின் சுகந்தமும், அவள் உடலில் பூசிக் குளித்திருந்த ஸ்நானப் பொடியின் வெட்டிவேர் முதலான பல வேர்களின் நறுமணமும் கலந்து அவன் நாசியில் புகுந்ததாலும், நெருக்கத்தின் விளைவாக அவன் காலின்மீது லேசாகப்பட்டு உராய்ந்து கொண்டிருந்த மெல்லிய பட்டுச் சேலையின் நுனி, காற்றில் அலைந்து தடவியதாலும், அவள் விட்ட பெருமூச்சினால் கண்ணுக்கு வெகு அருகாமையில் அவள் மார்பகம் எழுந்து தாழ்ந்ததாலும், உணர்ச்சிகள் உடலெங்கும் வேகத்துடன் சுழன்றதால் நிலைகுலைந்த இதயகுமாரன், அவள் சமீபத்திலிருந்து விலக முயன்ற சமயத்தில் காட்டின் ஊடே காவலர் ஓடிவரும் சத்தம் கேட்கவே சட்டென்று சுயநிலை அடைந்தான். ‘‘அரசகுமாரி! இனி நாம் தாமதிக்க முடியாது. காவலர் நெருங்கி நான் பிடிபட்டால் வந்த காரியம் கெட்டுவிடும். பிடிபடாமல் போரிட்டு சிலரைக் கொன்றாலும் விளைவு நல்லதல்ல. ஆகவே நான் எது செய்தாலும் தவறாக நிகைக்காதீர்கள்’’ என்று விடுவிடுவென்று பேசினான்.

அவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே அவர்கள் இருந்த இடத்திற்கு அருகாமையில் காவலர் காலடிகளும் ‘‘இங்குதானிருப்பான், சந்தேகமில்லை’’ என்று கூச்சலும் கேட்கவே அரசகுமாரி இதயகுமாரனை நோக்கி ‘‘எது செய்தாலும் என்றால்? என்ன செய்ய உத்தேசம்?’’ என்று வினவினாள்.

இந்தக் கேள்வியை எதற்காகக் கேட்கிறோம். இவன் பிடிபட்டால் என்ன குடிமுழுகிப் போய்விடும் என்ற எண்ணங்கள் அவள் சித்தத்தில் தலைகாட்டாதது அவளுக்கே வியப்பாயிருந்தது. இதற்கு என்ன காரணம் என்று அவள் சிந்திக்கும் முன்பு ‘‘அரசகுமாரி! ஆபத்துக்குப் பாவமில்லை, அஞ்சாதீர்கள்’’ என்று கூறிக்கொண்டு அவளை குழந்தை போல் ஒரே தூக்காக இரு கைகளாலும் தூக்கித்



தோளில் போட்டுக் கொண்ட இதயகுமாரன் வெகு வேகமாக மீண்டும் காட்டின் நெருக்கமான பாகத்தில் நுழைந்துவிட்டான். அப்படிப் பலவந்தமாக முற்றும் எதிர்பாராத விதமாக அவன் தன்னை தோளில் போட்டுக் கொண்டு ஓடியதால் சிந்திக்கும் சக்தியைக்கூட அறவே இழந்தாள் அரசகுமாரி. அவன் இடது கை அவள் அழகிய உடலின் கீழே காலுக்கு மேல் அழுத்திப் பிடித்திருந்ததாலும், தோளில் தலை சாய்ந்திருந்ததால் தனது வலது கன்னம் அவன் இடது கன்னத்துடன் உராய்ந்ததாலும், அவன் மார்பில் அழுந்திக் கிடந்த தனது மார்பு அசைந்ததால் ஏற்பட்ட இன்ப இம்சையாலும் உணர்ச்சிகளைப் பறிகொடுத்த இளவரசி ஏதும் நினைக்கவும் வழியில்லாமல் செயலற்றுக் கிடந்தாள்.

இத்தனைக்கும் இதயகுமாரன் மனத்தில் எந்தவித உணர்ச்சிகளும் இல்லை. கடமை உணர்ச்சி, கொக்குக்கு ஒன்றே மதி என்றபடி காரியத்தில் திளைத்துவிட்ட எண்ணம், இவ்விரண்டும் அவனை உணர்ச்சியற்ற மரக்கட்டையாக அடித்திருந்தது. அதன் விளைவாக மிக வேகமாக அவளைச் சுமந்து ஓடிய இதயகுமாரனைப் பின்பற்றி அவன் புரவியும் வந்தது வெகு வேகமாக.

காட்டின் அடர்ந்த இடத்துக்கு வந்ததும் அரசகுமாரியை விஜயன் மீது ஏற்றிய இதயகுமாரன், ‘‘அரசகுமாரி! இன்று காலை நாமிருவரும் சரியான முகத்தில் விழிக்கவில்லை. சின்ன விஷயம், நேராக நடக்க வேண்டிய பணி, அனாவசியமாகச் சிக்கலை ஏற்படுத்திவிட்டது. எதையும் மனத்தில் வைக்காதீர்கள். எனது புரவியில் கோட்டைச் சுவரிலிருந்து மூன்றாவது தெருவுக்குச் செல்லுங்கள். அங்கு இரத்தினக் கொல்லன் அச்சுதன் இல்லம் இருக்கிறது...’’ என்றான்.

இதைக் கேட்ட அரசகுமாரி அசந்து போனாள். ‘‘இந்த ஊருக்கு நீங்கள் ஏற்கெனவே வந்திருக்கிறீர்களா?’’என்று வினவினாள்.

''இல்லை. இதுதான் முதல் தடவை.''

''அப்படியானால் நகர அமைப்பு, இரத்தினக் கொல்லர் இல்லம்...''

''எப்படித் தெரிந்ததென்று வியக்கிறீர்கள். விவரிக்க அவகாசமில்லை. அங்கு செல்லுங்கள் அரசகுமாரி, இன்னும் இரண்டு நாழிகைக்குள் உங்களை அங்கு சந்திக்கிறேன்.''

''நான் அங்கு செல்வேனென்பது என்ன நிச்சயம்?''

''செல்வது அவசியம்.''

''ஏன்?''

''அங்கு உங்கள் பிறப்பின் மர்மம் தெரியும். தாமதிக்காதீர்கள்,சொல்லுங்கள்'' என்று துரிதப்படுத்திய இதயகுமாரன், விஜயனைத் தட்டிவிட்டான். விஜயன் அரசகுமாரியைத் தாங்கி காட்டின் ஊடே பறந்தது.அதன் வேகத்தால் காட்டு மரக் கிளைகளிலிருந்து தப்ப அரசகுமாரி விஜயன்மீது குனிந்து படுத்துக்கொண்டு கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டாள்.

சித்தத்தை அப்படியே உளைத்துக் குழப்பும் நிகழ்ச்சிகளில் ஏதும் செய்யமாட்டாமல் அச்சுதன் இல்லத்துக்குப் புரவியைச் செலுத்தி வந்த அரசகுமாரி மாளிகை வாயிலில் இறங்கி விஜயன் முதுகின்மீது கடிவாளங்களை விட்டெறிந்து உள்ளே வேகமாகச் சென்றாள். அரசகுமாரியைக் கண்டதும் புரவிக்கருகில் அவளை வரவேற்க ஓடிவந்த இரத்தினப் பணியாளர்கள் அரசகுமாரி காட்டிய துரிதத்தால் செயலற்று நின்றார்கள்.

அரசகுமாரி அவர்கள் யாரையும் கவனிக்காமல் உள்ளே நுழைந்து மாளிகையில் பல கட்டுகளையும் கடந்து அச்சுதன் தனியாகப் பணிபுரியும் பட்டறைக்குள் நுழைந்தாள். அங்கு தரையில் உட்கார்ந்து ஏதோ ஒரு இரத்தினத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தவரைக் கண்டதும் ''அச்சுதக் கொல்லரே!'' என்று



அழைத்தாள் அரசகுமாரி பெருமூச்சு வாங்க. இரத்தினத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர் தலையைத் தூக்கினார். அரசகுமாரி பிரமித்தாள். அவளை நோக்கியது அச்சுதக் கொல்லரல்ல. அவள் அதுவரை கண்டிராத புது மனிதர். வாலிப வயதை சிறிதே தாண்டியவர். அவள் சித்தத்துக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒரு கனவு அவர் கண்களில் விரிந்து கிடந்தது. அந்தக் கனவுக் கண்கள் அரசகுமாரியின் இதயத்தையே பார்த்து விடுவனபோல் நிலைத்தன அவள் மீது.

அரசகுமாரி மெல்ல தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். ''அச்சுதக் கொல்லர் எங்கே?'' என்று வினவினாள்.

''வந்துவிடுவார், உட்காருங்கள் அரசகுமாரி'' என்றார் அந்த மனிதர். அத்துடன் இன்னொரு கேள்வியும் கேட்டார். ''அவன் எங்கே?'' என்று.

''யாரைக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''அவன்தான்.உன்னைத் தூக்கி வந்தவன். இதயகுமாரன்'' என்ற அந்த மனிதர் ''அவனைத் தவறாக நினைக்காதே அரசகுமாரி'' என்றும் கேட்டுக்கொண்டார்.

அரசகுமாரிக்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லை. சிலையென நின்றாள். வந்த மனிதர் மேலும் சொன்னார். ''அரசகுமாரி! இதயகுமாரன் நட்பு ஏற்பட்டது உன் அதிர்ஷ்டம்'' என்று.

''உண்மை'' என்று கூறிக்கொண்டு இரத்தினக் கொல்லனான அச்சுதனும் உள்ளே நுழைந்தார்.

# 4. அடைத்த கதவு! அதிகாரக் குரல்!

பத்து வீரர்களின் கத்தி முனைகள் தடவி நின்றதைக் கடுகளவும் லட்சியம் செய்யாமல் அவர்கள் கண்ணெதிரிலேயே மிதமிஞ்சிய துணிவுடன் தன்னை அணைத்து அள்ளியெடுத்துப் புரவிமீது இருத்தித் தூக்கிச் சென்றுவிட்டவனும், காட்டின் மற்றொரு பகுதியில் ஏதுமே நடக்காததுபோல் தன்னுடன் சர்வ சகஜமாக உரையாடி காவலர் அரவம் கேட்ட போது இரண்டாம் முறையும் தன்னைக் குழந்தைபோல் எடுத்துத் தோள்மீது போட்டுக் கொண்டு அடவிக்குள் சென்று விட்டவனும், முடிவில் தனது புரவியையே கொடுத்து இரத்தினக்கொல்லன் வீட்டுக்குப் போகும்படி பணித்தவனுமான அந்த வாலிப முரடனைப் பாராட்டி ''இதயகுமாரன் நட்பு கிடைத்தது உன் அதிர்ஷ்டம்'' என்று அந்தப் புது மனிதர் சொன்னதையும், அதை இரத்தினக் கொல்லனான அச்சுதன் 'உண்மை' என்று ஆமோதித்ததையும் கண்ட அரசகுமாரியின் இதயத்தில் பலவித எண்ணங்கள் எழுந்து உலாவின.

தன்னை அந்த முரடன் தூக்கிப் போனது அதற்குள் எப்படி இரத்தினக் கொல்லன் இல்லம் வரையில் பரவி விட்டது என்று தன்னைக் கேட்டுக் கொண்ட அரசகுமாரி பெரும் குழப்பமும் அச்சமும் அடைந்தாள். ''இந்தச் செய்தி இத்தனை துரிதமாக இத்தனை தூரம் பரவி விட்டதால் அரண்மனைக்கு எட்டியிருக்கும். அப்படியானால் என் தோழிகள் என்ன நினைப்பார்கள்?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் அவள். இப்படி அந்த வாலிபன் செய்கையால் இத்தனை அவப்பெயர் தனக்கு உண்டாகியிருக்கும்போது அவனை மீண்டும் சிறை செய்ய தான் ஏன் நேராக அரண்மனை சென்று உத்தரவு பிறப்பிக்கவில்லையென்றும், என்ன காரணத்



தால் முன்பின் தெரியாத அவன் உத்தரவுப்படி இரத்தினக் கொல்லன் இல்லத்துக்கு வரவேண்டுமென்றும் கேள்விகளை எழுப்பிக் கொண்ட அரசகுமாரி அவற்றுக்கு விடை காணாமல் தவித்தாள்.

இத்தனையும் போதாதென்று யாரோ ஒரு புதிய மனிதர் தன்னை அரசகுமாரியென வரவேற்றது மட்டுமின்றி அந்த வாலிபன் பெயர் இதயகுமாரன் என்று அறிமுகப்படுத்தியதையும் எண்ணிப் பார்த்து ''அத்தனை நேரம் உரையாடிக் கொண்டிருந்தும் அவர் பெயரை நான் ஏன் கேட்கவில்லை?'' என்றும் கேட்டுக்கொண்ட அந்த ஏந்திழை அவன் பெயரைக் கேட்டதும் தனது மனத்தில் சீற்றத்துக்குப் பதில் இன்பம் உலாவுவதை எண்ணி ''என்ன கேவலம் இது!'' என்று தன்னை வெறுத்தும் கொண்டாள்.

சீற்றம், குழப்பம், வெறுப்பு ஆகிய இத்தனை உணர்ச்சிகளும் இதயத்தைக் கலக்கியுங்கூட அவற்றையெல்லாம் மறைத்து எழுந்தது இதயகுமாரன் குழந்தை முகம் அவள் மனத்தில். அதன் காரணமாக அவள் இதழ்களில் அரும்பிய இன்ப இளநகையை அடுத்து ''இதயகுமாரன்! என்ன அழகான பெயர்!'' என்று அவள் இதயம் முணுமுணுக்கவே செய்தது. அடுத்து விநாடி 'பெயர் எதுவானால் என்ன! செய்ததெல்லாம் சுத்த அயோக்கியத்தனம்'' என்று அவள் இதயத்தில் ஊடுருவி இன்ப உணர்ச்சியை உதறிவிட முயன்றாலும், அது முடியவில்லை. அந்த அயோக்கியத்தனம் தனக்கு வேண்டியிருந்தது போன்ற ஒரு பிரமை அவள் சித்தத்தில் ஏற்படவே செய்தது. அகனால் விரிந்தது மகிழ்ச்சி அவள் மதிவதனத்தில்.

அரசகுமாரி சிந்தனை வசப்பட்டு நின்றதையும், கடைசியில் மகிழ்ச்சியின் சாயை அவள் முகத்தில் படர்ந்ததையும் அந்தப் புது மனிதர் மட்டுமின்றி இரத்தினக் கொல்லனும் கவனித்ததால் இருவர் முகத்திலும் அதுவரை காணப்பட்ட கவலைக்குறி மறைந்தது. ஆகவே மீண்டும் இரத்தினக்

கொல்லன் பேசத் தொடங்கி, ''இதயகுமாரனிடம் நீங்கள் காட்டும் நட்பு வீண் போகாது அரசகுமாரி'' என்று கூறினார்.

இதைக் கேட்ட அரசகுமாரியின் முகத்திலிருந்து மகிழ்ச்சி மறைந்தது. இதயத்தில் எழுந்த கௌரவம் ஏற்கெனவே தனல காட்டிய இன்பத்தை மறைத்தது. விழிகள் அக்கினியைக் கக்கின. ''சொற்களின் பொருளை உணர்ந்து பேசுங்கள் கொல்லரே'' என்ற சொற்கள் தணலென உதிர்ந்தன அவள் அதரங்களிலிருந்து.

இரத்தினக்கொல்லர் உடனடியாக அவள் சீற்றத்தைத் தணிக்க முயலவில்லை. அர்த்தமில்லாமல் தமது அறையைச் சுற்றிலும் பார்வையை ஓடவிட்டார். அந்த அறை அவரது பட்டறையாயினும் ஏதோ பெரும் அரசர்களின் அந்தரங்க அறைபோல் மிக விசாலமாகவும் பெரும் வேலைப்பாடுகள் அமைந்ததாகவும் இருந்தது. அச்சுதர் அமர்ந்து வேலை செய்ய அறை நடுவில் போடப்பட்டிருந்த பட்டுப்பாயே சித்திரக் களஞ்சியமாகக் காட்சியளித்தது. அந்தப் பாயின் சுற்று முகப்பில் நுண்ணிய பட்டுப் போன்ற வண்ணக் கோரைகளால் பின்னப்பட்டிருந்த மலர்த் தினுசுகளும், பாயின் நட்ட நடுவிலிருந்த செந்தாமரைச் சித்திரமும், அந்த செந்தாமரை இதழ் முகப்புகளில் தெரிந்த பலவகை அப்ஸர மங்கையர் முகங்களும், அந்தப் பாயின் விலையை நிர்ணயிப்பது எளிதல்ல என்பதை எடுத்துக்காட்டின.

சுவர்களில் பல வீரர்களின் சித்திரங்கள் பல வகைகளில், வண்ணங்களில் தீட்டப்பட்டிருந்ததால் சிலர் புரவி மீதேறிப் பாய்வது போலும், சிலர் போரில் ஈடுபட்டது போலும் காட்சியளித்ததால், ஏதோ வீரர் கூட்டத்தில் நிற்பது போன்ற பிரமையை, பார்ப்பவர் யாருக்கும் அளித்தன. அந்த வீரர்களோடு சில வீரப் பெண்மகளிரும் புரவியேறி வாள்வீசும் சித்திரங்களும் கலந்திருந்ததால், வீரம் ஆண்களின் தனிச்



சொத்தல்ல என்பதை சித்திரம் தீட்டியவன் கைவண்ணமும் மனவண்ணமும் நிருபித்தன. அந்தச் சித்திரங்களின் இடையில் கட்டியிருந்த வாட்களின் கைப்பிடிகள் எப்படியெல்லாம் இருக்கலாமென்பதை விளக்க, ஒவ்வொரு பிடியிலும் இரத்தினங்கள் புலி போலும், சிங்கம் போலும், யாளி போலும் புதைக்கப்பட்டிருந்ததால் சித்திரப்பிடிகள் நிஜப் பிடிகள் போல் காட்சியளித்தன.

பலமுறை தமது அறைச்சுவர்களை அச்சுதன் பார்த்திருந்தாலும் அன்று அனாவசியமாக அவர் அவற்றைக் கவனிப்பதாக அரசகுமாரிக்குத் தோன்றியதால், ''இந்த அறையின் மகிமை தமிழ்நாடு அறியும் அச்சுதரே. அதை நீரே திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ வேண்டாம்'' என்று சீறினாள் அரசகுமாரி, அச்சுதனின் கவனத்தைத் தன்மீது திருப்பி.

அச்சுதன் மெள்ள தனது விழிகளை சித்திரங்களிலிருந்து மீட்டு சித்திரப் பாவையென நின்றிருந்த அரசகுமாரி மீது நிலைக்கவிட்டார். ''அதுமட்டும் என்னால் முடியவில்லை அரசகுமாரி'' என்றும் சொன்னார் நிதானமாக.

''எது?'' அரசகுமாரி உஷ்ணத்துடன் கேட்டாள்.

''இந்த சித்திரங்களை ரசிக்காதிருப்பது'' என்றார் அச்சுதன்.

''தினம் பார்த்துக்கொண்டிருக்கும் சித்திரங்கள்தானே இவை?'' என்று அரசகுமாரி இகழ்ச்சியுடன் வினவினாள்.

இரத்தினக் கொல்லரின் விழிகள் அவளை உற்று நோக்கின. ''அரசகுமாரி! தாங்களுந்தான் தினம் அரங்கனை தரிசிக்கிறீர்கள்...'' என்றும் அவர் உதடுகள் முணுமுணுத்தன.

''அதனால்?'' அரசகுமாரியின் கேள்வியில் இகழ்ச்சி இருந்தது.

''அலுக்காது பார்க்கக் கூடியவை உலகத்தில் பல இருக்கின்றன'' என்றார் அச்சுதன்.

''அது தெய்வ சந்நிதானம், கோவில்..'' என்று விளக்கினாள் அரசகுமாரி.

''இதுவும் தெய்வீகக் கலை அரசகுமாரி. அதனால்தான் சிற்பத்தையும் சித்திரத்தையும் பெரியோர்கள் கோவில்களில் இணைத்திருக்கிறார்கள். அந்த சிற்பங்களையும் சித்திரங்களையும் ஒருமுறை பார்த்து நாம் திருப்தியடைவதில்லை. கலையில் இருவிதம். திகட்டாத கலை; திகட்டும் கலை. முந்தியது தெய்வீகமானது. காலத்தால் அழியாதது. பிந்தியது மனத்தில் நிற்காதது. மின்னல் வேகத்தில் சித்தத்திலிருந்து அழியக்கூடியது'' இதைச் சொன்ன இரத்தினக் கொல்லன் பெருமூச்செறிந்தார்.

அவர் பேச்சு, பெருமூச்சு எல்லாமே விசித்திரமாயிருந்தது அரசகுமாரிக்கு. அரண்மனைக்கு எத்தனையோ முறை வந்து தனக்கு ஆபரணங்களை செய்து கொடுத்திருக்கும் இரத்தினக்கொல்லர் இத்தனை கலா ரசிகராயிருப்பாரென்றோ உணர்ச்சி வசப்படக்கூடியவரென்றோ அன்றுவரை அறியாத அரசகுமாரி, அவர் போக்கு பரம விசித்திரமாயிருந்தாலும் அதைப்பற்றி மீண்டும் பேச்சுக் கொடுக்காமல், ''நான் சொன்னது உங்களுக்குப் புரிந்தது என நினைக்கிறேன்'' என்று கூறினாள்.

அச்சுதன் ''புரிந்தது' என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினார். ''நான் தவறாக ஏதும் சொல்லவில்லை'' என்று திட்டமாகப் பதிலும் சொன்னார்.

''தவறாக ஏதும் சொல்லவில்லையா?'' அரசகுமாரியின் குரலில் உக்ரம் ஏறியது மெள்ள.

''இல்லை''- அச்சுதனும் சர்வ சாதாரணமாகப் பதில் சென்னார்.

''இந்தப் புதிய வாலிபனிடம் நான் நட்புக் காட்டியதாகக் கூறினீர்கள்!'' என்றாள் அரசகுமாரி.



''ஆம்.''

''எதைக்கொண்டு அப்படிக் கூறினீர்?''

''நீங்கள் இங்கு என் இல்லத்துக்கு வந்ததிலிருந்து. அவன் சொல்லித்தான் நீங்கள் இங்கு வந்திருக்க வேண்டும்.''

''ஏன், நானாக வந்திருக்கக்கூடாதா?''

''இதுவரை வந்ததில்லை. என்னைத்தான் அரண்மனைக்குக் கூப்பிட்டு அனுப்புவீர்கள். இப்பொழுதும் அப்படிச் செய்திருக்கலாம்'' என்று சுட்டிக்காட்டினார் இரத்தினக் கொல்லர்.

''ஆம். செய்திருக்கலாம்'' என்ற அரசகுமாரியின் முகம் சிவந்தது, அந்த வாலிபன் சொற்படி தான் அங்கு வந்தது தவறு என்ற நினைப்பில்.

அதுவரை இருவர் உரையாடலையும் எட்ட நின்றே கேட்டுக்கொண்டிருந்த அந்தப் புதுமனிதர் அரசகுமாரியின் அருகே வந்து, ''அரசகுமாரி! இதயகுமாரன் கூறியபடி நீ இங்கு வந்தது தவறல்ல. இதயகுமாரன் கண்ணசைத்தால் அவன் காலடியில் விழத் தயாராயிருக்கும் அழகிகள் உறையூரில் பலர் இருக்கிறார்கள். அவர்கள் யாரையும் அவன் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. நீ அவனை எதிர்பாராத விதமாகச் சந்தித்திராவிட்டால் இத்தனை திடீர் நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கமாட்டா. உங்களிருவரையும் விதி வேண்டுமென்றே சந்திக்கவிட்டிருக்கிறது'' என்று மிக மெதுவாகக் கூறினார்.

அந்த மனிதர் குரலில் மிகுந்த கண்ணியமும் கம்பீரமும் ஒலித்ததை அரசகுமாரி கவனித்தாள். இருப்பினும் இதயகுமாரனுடைய சிறப்பைப் பற்றி அவர் பேசியது எரிச்சலாயிருந்தது அவளுக்கு. ஆகவே சொன்னாள். ''எதற்கும் விதிமீது பழியைப் போடுவது நமக்கு வழக்கமாகிவிட்டது'' என்று. இதைச் சொல்லி அவரை ஏறெடுத்தும் நோக்கினாள். மிக விசால முகத்தில் ஈட்டிக்கண்கள் இரண்டு பளபளத்தன.

அவற்றின் பார்வையில் அளவிட முடியாத அறிவு, அதிகாரத் தோரணை இரண்டுமிருந்ததையும், இவற்றுக்கிடையே ஒரு கனவுச் சாயை ஓடியதையும் கவனித்தாள் அரசகுமாரி. நல்ல உயர்ந்த சரீரம், தொடையைத் தொடும் நீண்ட கைகள், உறுதியாகத் தரையில் நின்ற கால்கள்–இவை அவர் சாதாரண மனிதரல்லவென்பதை எடுத்துக்காட்டின. இடையில் வாள் கச்சையிருந்தாலும் அதில் வாளில்லாததைக் கவனித்தாள் அவள்.

அவள் தன்னை அளவெடுப்பதைக் கண்ட அந்த மனிதர் மிகப் பொறுமையுடன் சில விநாடிகள் நின்ற வண்ணம் ஏதும் பேசாமலிருந்தார். அரசகுமாரியின் ஆராய்ச்சி முடிந்துவிட்டதென்பதை உணர்ந்ததும் பேச முற்பட்டு, ''அரசகுமாரி! நீ எதற்காகப் போனாய் காட்டுக்குள்? அதுவும் அவனிருந்த இடத்துக்கு?'' என்று வினவினார்.

அவர் கேள்வி அரசகுமாரிக்குப் பெருவியப்பாயிருந்தது. இருப்பினும் வியப்பை அடக்கிக்கொண்டு பதில் சொன்னாள், ''இன்று தை வெள்ளிக்கிழமை'' என்று.

''அதனாலென்ன?'' என்று வினவினார் அவர் மறுபடியும்.

''இந்த வஞ்சிமாநகரின் அரசர்கள் பரம்பரையாக வணங்கும் புற்று அங்குதானிருக்கிறது'' என்றாள் அரசகுமாரி.

''அதனால் புற்றுக்குப் பால் தெளித்து நாகபூஜை செய்யச் சென்றாய்?'' என்று வினவினார் அந்த மனிதர்.

''ஆம். நான் கொண்டுபோன பூஜைத்தட்டு, பால் செம்பு இரண்டும் புற்றுக்கு எட்ட இருந்த மரத்தடியில் இப்பொழுதுமிருக்கும்'' என்று அரசகுமாரி கூறினாள். ''அப்படிப் பூஜை செய்யப் போனபோது அந்தப் புற்றின் சர்ப்பம் கொல்லப்பட்டு எட்டக்கிடந்தது. நீங்கள் சொல்லும் வாலிபர் புற்றைக் கிளறிக் கொண்டிருந்தார், ஏதோ ஒரு சிலையையும் முடிவில் எடுத்தார்'' என்றும் விளக்கினாள்.



அந்த மனிதர் இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. ''அத்தனையும் தெய்வ அபசாரம் என்று நினைத்தாய். இதயகுமாரனைச் சிறைசெய்ய உத்தரவிட்டாய்'' என்று சகலத்தையும் நேரில் பார்த்ததுபோல் கூறினார் அந்த மனிதர்.

அரசகுமாரியின் வியப்பு உச்ச நிலையை அடைந்தது. ''மீதியும் உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினாள் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''மீதியை ஊகிப்பது கஷ்டமல்ல, இதயகுமாரன் குணத்தை உணர்ந்தவர்களுக்கு. ஆனால் நான் ஊகிக்க வில்லை. அரசகுமாரியை யாரோ ஒருவன் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டான் என்ற செய்தியை வீரனொருவன் இங்கு வந்து சொல்லவே நானும் அச்சுதனும் அந்த இடத்துக்கு விரைந்தோம். இதயகுமாரன் குறுவாளால் படம் ஊடுருவப்பட்ட சர்ப்பத்தையும், கிளறப்பட்ட புற்றையும், விஜயனின் பெரும் குளம்படிகளையும் பார்த்தோம். நடந்ததைப் புரிந்து கொண்டோம். பிறகு திரும்பி இங்கு வந்து உனக்காகக் காத்திருந்தோம்'' என்று விளக்கினார் அந்த மனிதர்.

அரசகுமாரி ஒரு விநாடி அந்த மனிதரையும் பார்த்து இரத்தினக்கொல்லரையும் பார்த்தாள். ''நீர் ஏன் பேசாமலிருக்கிறீர்?'' என்று வினவவும் செய்தாள்.

''பேசுவது ஆபத்தாயிருக்கிறது' என்றார் அச்சுதன்.

முதலில் அவர் பேச்சைத் தான் ஆட்சேபித்ததை அவர் சுட்டிக் காட்டுகிறார் என்பதைப் புரிந்து கொண்ட அரசகுமாரி, ''ஒழுங்கான பேச்சு எதிலும் ஆபத்தில்லை'' என்று பதில் சொன்னாள்.

''இரத்தினக்கொல்லன் ஒழுங்கீனமாகப் பேசுவதாக இன்றுவரை யாரும் சொன்னதில்லை'' என்று சுட்டிக் காட்டினார் அச்சுதர்.

அரசகுமாரி மேற்கொண்டு ஏதும் சொல்ல முடியாமல் தவித்தாள். ஆகவே அவள் உதவிக்கு அந்தப் புதிய மனிதரே வந்தார். ''அரசகுமாரி! நீ அனாவசியமாகத் தவறு கண்டு பிடிக்கிறாய். இதயகுமாரனிடம் நீ நட்பு காட்டியதாக நான் கூறியதிலோ, அதை அச்சுதர் ஆமோதித்ததிலோ எந்தத் தவறும் இல்லை. நட்பு புனிதமானது. அது காதலாகத்தான் இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. நீ இதயகுமாரனைக் காட்டிக்கொடுக்காமல் அவன் சொற்படி நடந்ததால் ஒரு சிறந்த வீரன் கண்ணியத்தை, நல்லெண்ணத்தை நீ புரிந்து கொண்டிருக்கிறாய் என்பதை வலியுறுத்தவே நான் அந்தச் சொல்லை உபயோகித்தேன்'' என்று சமாதானப்படுத்தினார் அந்த மனிதர்.

அந்த மனிதரின் ஆறுதல் சொற்கள் உண்மையில் எந்த ஆறுதலையும் அளிக்கவில்லை. ''இச்சக வார்த்தைகள்'' என்று அரசகுமாரி சீறினாள்.

''ஆனால், வஞ்சக வார்த்தைகளல்ல'' என்றார் அந்த மனிதர்.

அரசகுமாரிக்கு ஏதுமே புரியவில்லை. கடைசியில் அச்சுதனை நோக்கி, ''அச்சுதரே! இவர் யார்? இவர் இந்த நாட்டவரா?'' என்று வினவினாள்.

''இல்லை. ஆனால் இந்த நாட்டின் விமோசனம் இவர் கையில்தான் இருக்கிறது'' என்றார் அச்சுதர் பணிவு நிரம்பிய குரலில்.

''நீர் சொல்வது விளங்கவில்லை'' என்றாள் அரசகுமாரி.

''நான் விளங்க வைக்கிறேன். முதலில் அவர் பாதங்களில் வணங்குங்கள் அரசகுமாரி'' என்ற சொற்களைக் கேட்டுச் சட்டென்று திரும்பினாள் அரசகுமாரி.



அறை வாயிற்படியில் இதயகுமாரன் நின்றிருந்தான், கையில் அந்த மோகனச் சிலையுடன். எதிரே நின்றவரின் அடி பணியும்படி கையால் சைகையும் காட்டினான்.

அரசகுமாரி வணங்கவில்லை. அதிகாரத்துடன் தலை நிமிர்ந்து நின்றாள். அந்தச் சமயத்தில் வெளியே புரவிகளிலிருந்து வீரர் பலர் குதிக்கும் காலடிச் சத்தம் கேட்டது. விடுவிடு என்று சாளரத்தை நோக்கி நடந்து வெளியே நோக்கிய இரத்தினக்கொல்லர் அறைக்குள் திரும்பி, ''இந்த இல்லத்தை வஞ்சிக் காவலர் சூழ்ந்து விட்டார்கள்'' என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பினால் அந்தப் புது மனிதரோ இதயகுமாரனோ சிறிதளவும் கலக்கமடையாததையும், இதயகுமாரன் விநாடி நேரத்தில் வாயிற்படியைத் தாண்டி அறைக்குள் வந்து அறைக்கதவைத் தாளிட்டுவிட்டதையும் கண்ட அரசகுமாரி, அவன் துணிவு அத்துமீறிப் போவதை உணர்ந்தாள். அடுத்த விநாடி அறைக்கதவு தடதடவெனத் தட்டப்பட்டது. ''திற கதவை. இல்லையேல் கதவு உடைக்கப்படும்'' என்ற அதிகாரக் குரலும் பலமாகக் கேட்டது.

# 5. இலக்கியக் காட்சிகள் இரகசியச் சிறை!

வஞ்சிக் காவலர் இரத்தினக் கொல்லன் இல்லத்தை வளைத்துக் கொண்ட செய்தியைக் கேட்ட வஞ்சி நகர்ச் செல்வியின் அஞ்சன விழிகளில் அச்சத்தின் சாயை ஒரு விநாடி படர்ந்ததென்றாலும், அடுத்த விநாடி அது மறைந்து பெரு வியப்பு அவள் வதனத்தை ஆட்கொண்டது. காவலர் சூழ்ந்துவிட்ட கதையை இரத்தினக் கொல்லன் இரத்தினச் சுருக்கமாக, அது ஏதோ நடக்கவேண்டிய விஷயம்போல் சர்வ சாதாரணமாகத் தெரிவித்ததையும், அந்தச் செய்தியைக் கேட்ட புது மனிதரோ, தன்னைத் துணிகரமாகக் தூக்கிக் கொல்லர் இல்லத்துக்கு அனுப்பி வைத்த இளைய முரடனோ அணுவளவும் கவலைப்படாததையும், போதாக்குறைக்கு அவன் அறைக் கதவையும் தாளிட்டுவிட்டுத் திரும்பியதையும் கண்ட அரசகுமாரி வியப்பின் உச்சநிலையை அடைந்தாள். கதவைத் தட்டி அதை உடைத்து விடுவதாக மிரட்டியவன் குரலைக் கேட்டதும் அரசகுமாரி சிறிது கவலைக்கும் உள்ளாகி மிரண்ட பார்வையை அறையிலிருந்த மற்ற மூவர் மீதும் செலுத்தியதன்றி, ''கதவைத் தட்டுவது இளையவேள்'' என்றும் அறிவித்தாள்.

அந்த அறிவிப்பை ஏற்கும் நிலையிலோ அதைப்பற்றி ஆராயும் மனப்பான்மையிலோ இல்லாத மற்ற மூவரில் இதயகுமாரன் மிகத் துரிதமாக இயங்கினான். ''அச்சுதரே! உங்கள் அடுத்த அறைக்கு வழி எது?'' என்று வினவினான்.

பதிலுக்கு இரத்தினக்கொல்லர், சுவரில் ஒரு வாளுக்குப் பிடிபோலவும், வேங்கையின் கண்கள் போலவும் பதிக்கப் பெற்றிருந்த இரத்தினக் கூட்டத்தைச் சுட்டிக் காட்டினார்.

அதன் மர்மத்தை அவர் பார்வையிலிருந்தே புரிந்து கொண்ட இதயகுமாரன், ''அரசகுமாரி! இப்படி வாருங்கள்''



என்று தன்னைப் பின்பற்றி வரும்படி அரசகுமாரிக்குச் சைகை காட்டி இரண்டு எட்டில் அந்த வேங்கைப்பிடியை அடைந்து, இடது கையில் தந்தச் சிலையைப் பிடித்த வண்ணம் இரத்தினக் கற்கள் ஐந்தின் மீதும் தனது வலது கை ஐந்து விரல்களையும் வைத்து அழுத்த சுவர் நகர்ந்தது. ஒருவர் செல்ல இடங்கொடுக்கவே அதற்குள் சென்ற இதயகுமாரன் அரசகுமாரியையும் துரிதமாக வரும்படி ஜாடை காட்டினான்.

அவன் சொல்வதைத் தான் ஏன் பின்பற்ற வேண்டும் என்ற நினைப்பு உள்ளத்தே எழுந்தாலும் அதை அடக்கிக் கொண்ட அரசகுமாரி, இதயகுமாரனைப் பின்பற்றவே செய்தாள். சுவர் அளித்த சிறு இடைவெளி வழிக்குள் அவள் நுழைந்ததும் அந்தச் சுவர் தானாகவே மூடிக்கொள்ளவே, அத்தனை காலையிலும் சுவருக்கு அடுத்த இடத்தில் இருளே அடித்துக் கிடந்ததையும், அந்த இருளை அகற்ற எதிர்ச்சுவரில் பொருத்தப்பட்டிருந்த சிறு தங்க அகலின் சுடர் அளித்த வெளிச்சமும் மிகவும் சொல்பமாகவே இருந்ததையும் கண்ட அரசகுமாரி அந்த இல்லத்தின் அமைப்பையும் மர்மத்தையுங் கண்டு பெரும் வியப்புக்குள்ளானாள். இரத்தின வாணிபத்தில் தமிழுலகம் புகழும் இரத்தினக் கொல்லனான அச்சுதன் இப்படியொரு மர்ம மாளிகையைச் சிருஷ்டித்திருப்பானென்பதை அரசகுமாரி அன்றளவும் அறிந்திராததால், அந்த இல்லத்தில் இரத்தினத்தைத் தவிர பெரும் அரசியல் வியாபாரமும் நடப்பதைப் புரிந்து கொண்டாள். அத்தனையிலும் ஒரு விஷயம் மட்டும் புரியவில்லை அவளுக்கு.

யாரும் அனுமதியின்றி புக அஞ்சும் வஞ்சிமாநகரில் புகுந்ததன்றி, இரத்தினக்கொல்லன் வீட்டு மர்மத்தையும் இதயகுமாரன் எப்படிப் புரிந்துகொண்டானென்பதை எண்ணிப் பார்த்து விடை கிடைக்காததால் திணறிய அவளை மேலும் திணறவைக்கும் நடவடிக்கைகளில் வெகு துரிதமாக இறங்கிய அந்த சோழநாட்டு வாலிபன், அந்தக் குறுகிய இடை

வீட்டின் இரு சுவர்களையும் ஒரு விநாடியே பார்த்ததும் புரிந்துகொண்டதற்கு அடையாளமாக தலையை அசைத்து விட்டு எதிரேயிருந்த தங்க அகல்விளக்கைச் சிறிது பக்க வாட்டில் நகர்த்த, அந்த சுவரும் இடங்கொடுத்து கீழே இறங்கி யோடும் படிகளைக் காட்டியதும் அரசகுமாரியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு அவற்றில் இறங்க முற்பட்டான்.

முதல் படியில் இருவரும் காலை வைத்ததுமேபடிகளுக்கு மேலிருந்த சுவர் பழையபடி மூடிக்கொண்டதாலும், படிகளும் மிகக் குறுகலாயிருந்ததாலும் அரசகுமாரியின் உடல் இதயகுமாரன் மீது இலேசாக உராயவே சிறிது சலனப்பட்ட அந்த வாலிபன், ''அரசகுமாரி! நான் முன்னால் இறங்கிச் செல்கிறேன், நீங்கள் என்னைத் தொடர்ந்து வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு அடுத்த படியில் காலை வைத்து இறங்கினான். ஆனால், அரசகுமாரி அவனைத் தொடராமல் முதல் படியிலேயே நின்றாள். அந்தப் படிகள் இறங்கியோடிய இடம் முந்திய இடை வீட்டைப் போல் இருளடித்து இல்லை. எங்கிருந்தோ அதில் சிறு வெளிச்சம் அடித்துக்கொண்டிருந்தது. ஓரிரு சூரியக் கிரணங்கள்கூட பக்கத்துச் சுவரொன்றில் இரண்டடிக்கு அப்பால் பாய்ந்து இரண்டு ஒளிவட்டங்களை அமைத்திருந்தது. அந்த ஒளித்திட்டுகளையும் கவனித்து கீழே இறங்கிய வாலிபனையும் கவனித்த அரசகுமாரி, ''இந்த இடத்திலிருந்து ஒரு அடிகூட நான் நகரமாட்டேன்'' என்று கூறினாள் உறுதி நிரம்பிய குரலில்.

இரண்டடிகளே இறங்கியிருந்த இதயகுமாரன் இதைக் கேட்டதும் சட்டென்று அவளை நோக்கித் திரும்பினான். அப்படி அவன் திரும்பியதால் வெளியிலிருந்து வந்த சூரிய கிரணங்களில் ஒன்றை அவன் முகம் மறைத்ததன் விளைவாக அதன் சக்கிரவட்ட ஒளி அவன் முகத்தில் விழுந்து அந்த வீர முகத்துக்குப் பன்மடங்கு அதிக சோபையை அளித்தது. அப்படி சூரிய கிரண வட்டத்துடன் தேவ புருஷனைப் போல் காட்சி அளித்த கோமகனாட்டு வாலிபன் கண்களில் விஷமம்



சிறிது துளிர் விட்டது. இதழ்களிலும் விஷமம் கலந்த புன்னகை விரிந்தது. ''இந்த இடத்திலிருந்துகொண்டு என்ன செய்யப் போகிறீர்கள் அரசகுமாரி?'' என்று வினவினான், அவன் சொற்களிலும் விஷமத்தின் ஒலி ஊடுருவ.

அவன் கண்களில் பளிச்சிட்ட விஷமச் சாயை, இதழ்களில் விரிந்த விஷமப் புன்முறுவல் இரண்டையும் கவனிக்கவே செய்தாள் அரசகுமாரி. அவன் குரலில் ஒலித்த துஷ்டத்தனம் கூட அவள் செவிகளிலிருந்து தப்பவில்லை. இத்தனையையும் லட்சியம் செய்யாத அரசகுமாரி கேட்டாள், ''என்ன செய்யப் போகிறேனென்பதைப் பற்றி உங்களுக்கென்ன கவலை?'' என்று.

''கவலை இல்லாமலா உங்களை இரத்தினக் கொல்லன் இல்லம் அனுப்பினேன்? கவலையில்லாமலா உங்களை மேல் அறையிலிருந்து இந்த இடத்துக்கு அழைத்து வந்தேன்?'' என்று வினவினான் இதயகுமாரன்.

அவன் சொற்களைக் கேட்ட அரசகுமாரிக்கு அவன் மீது சீற்றங் கொள்வதா, நகைப்பதா என்பது புரியவில்லை. ''நீங்கள் கொண்டது என் மீது கவலையா? கதவை இடித்த காவலரைப் பற்றிய அச்சமா?'' என்று வினவினாள் அரசகுமாரி இகழ்ச்சியுடன்.

அவள் சொற்களால் அவன் சீற்றமடைவானென்று அரசகுமாரி எண்ணியிருந்ததால் அவள் ஏமாந்தே போனாள். இதயகுமாரன் முகத்தில் வருத்தத்தின் சாயையே படர்ந்தது.

''அரசகுமாரி! இதயகுமாரனுக்கும் அச்சத்துக்கும் சம்பந்தமில்லையென்பதை இதுவரை நடந்த நிகழ்ச்சிகளே நிரூபித்திருக்கும் உங்களுக்கு. உங்களுக்கு ஆபத்து இல்லையென்று நிச்சயமாயிருந்தால் நான் இரத்தினக் கொல்லரின் பட்டறையைவிட்டு அசைந்திருக்க மாட்டேன். அறைக் கதவை அடைத்திருக்கவும் மாட்டேன்'' என்று திட்டமாகச் சொன்ன அவன் குரலிலும் வருத்தம் சிறிதளவு ஒலித்தது.

''எனக்கா! ஆபத்தா! என் வீரர்கள் வந்தால் எனக்கு என்ன ஆபத்து?'' என்று வினவினாள் அரசகுமாரி.

''உங்களை என்னிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்றிருப்பார்கள்'' என்று சுட்டிக்காட்டினான் இதயகுமாரன்.

''அது ஆபத்தா!'' வியப்பு மிதமிஞ்சி ஒலித்தது அரச குமாரியின் சொற்களில்.

''ஆம்.'' மிகத் திட்டமாக வந்தது இதயகுமாரன் பதில்.

''ஏன்?''

''உங்களை எதற்காக இங்கு அனுப்பினேனோ அந்த உண்மையை அப்புறம் அறிய வழியிருக்காது.''

''எதற்காக அனுப்பினீர்கள் என்னை இங்கு?''

''ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். உங்கள் பிறப்பின் மர்மத்தை அறிவதற்கு என்று.''

''என் பிறப்பில் என்ன மர்மம் இருக்கமுடியும்?''

''அது சீக்கிரம் தெரியும்.''

''எப்பொழுது?''

''இரத்தினக்கொல்லரும், நீங்கள் சற்று முன்பு சந்தித்த அந்த மனிதரும் மீண்டும் உங்களை நிதானமாகச் சந்திக்கும் போது.''

''எப்பொழுது சந்திப்பார்கள்?''

''வெகு விரைவில்'' என்று கூறிய இதயகுமாரன், ''வாருங்கள் அரசகுமாரி'' என்று அழைக்கவும் செய்தான்.

அப்பொழுதும் அரசகுமாரி அசையவில்லை. ''ஆரம்பத்திலிருந்து நீங்கள் என்னிடம் பொய் சொல்லியிருக்கிறீர்கள்'' என்றாள் கோபத்துடன்.

இதயகுமாரன் கண்களில் துன்பச்சாயை படர்ந்தது. ''என் வாயில் பொய் வராது அரசகுமாரி'' என்றான்.



''இந்த ஊருக்கு நீங்கள் புதியவர் என்றீர்கள்'' என்று சுட்டிக் காட்டினாள் அரசகுமாரி.

''உண்மை அரசகுமாரி.''

''அப்படியானால் கோட்டை வாயிலிலிருந்து மூன்றாவது தெருவில் இரத்தினக் கொல்லர் இல்லமிருப்பது எப்படித் தெரியும் உங்களுக்கு?''

''இலக்கியம் படித்திருக்கிறேன்.''

''அதனால்?''

''நகர அமைப்பு தெரியும். வஞ்சி மாநகர் பழைய நகரங்களில் ஒன்று. தமிழகத்தின் பழைய நகரங்கள் எல்லாமே கிட்டதட்ட ஒரே அமைப்பு உள்ளவை. பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பல நூல்களிலும் நமது நகரங்களின் அமைப்பு கூறப்பட்டிருக்கிறது. எதற்கும் ஒரு அகழி, கோட்டை, கோட்டையைச் சூழ்ந்துள்ள புறச்சேரியில் அரண்காவலர், படைக்குடியிருப்புகள், அந்நிய அரசர் தங்கும் மாளிகைகள், கோட்டைவாயிலை அடுத்த தெருவில் நகர்க் காவலர் வீதி, அடுத்து மீன் வலைஞர், உப்பு வணிகர் முதலியவர் உறையும் வீதி, மூன்றாவது வீதியில் மங்கலம் செய்வோர், செம்புக் கொட்டிகள், வெண்கலக் கன்னார், பொற்கொல்லர், இரத்தினப் பணியாளர், நகர நடுவே அரசரின் அரண்மனை– இப்படித்தான் நமது நகரங்களின் முக்கால்வாசி அமைப்பு. காலம் இவற்றில் சிலவற்றை அழித்துவிட்டாலும் பொதுவாக சங்ககால அமைப்பு பெரு நகரங்களில் மாற வில்லை. தவிர, இரத்தினக் கொல்லர் புகழ் சேர நாட்டில் மட்டுமல்ல,தமிழகமெங்கும் பரவிக் கிடக்கிறது''என்று விளக்கிய இதயகுமாரன், ''அரசகுமாரி! நாம் இங்கு நின்று கொண்டே பேசுவதில் பொருளில்லை வாருங்கள். இந்தப் படி எங்கு கொண்டு விடுகிறது பார்ப்போம்'' என்று கூறி விட்டுத் திரும்பி படிகளில் இறங்கினான்.

அவன் விளக்கத்தைக் கேட்ட அரசகுமாரி உணர்ச்சி பொங்க நின்றாள் சில விநாடிகள். பிறகு பேசாமல் படிகளில் இறங்கி நடந்தாள். சுமார் இருபது படிகள் இறங்கியதும் எதிரே தெரிந்த ஒரு கதவின் புலிப்பிடியை இதயகுமாரன் திருகவே அந்தக் கதவு பிரும்மாண்டமான ஒரு அறைக்குள் திறந்தது. அந்த அறையைக் கண்ட இதயகுமாரன் மட்டுமின்றி அரசகுமாரிகூட சொல்லொணா பிரமிப்பை அடைந்தாள். இரத்தினக் கொல்லன் பட்டறை அறையைவிட இரண்டுமடங்கு பெரிதாயிருந்த அந்த அறையின் அமைப்பும் வேலைப்பாடும், சுவரின் சித்திரங்களும் பன்மடங்கு அதிக பிரமிப்பையே அளித்தன. சுவர்களில் சிலப்பதிகாரக் கட்டங்களும் மணிமேகலைக் காட்சிகளும் தத்ரூபமாகத் தீட்டப்பட்டிருந்தன. ஒருபுறம் மாலை வீசிய மாதவியின் காமக்கண்கள். இன்னொரு புறம் கற்பின் அக்கினியை அள்ளிச் சொரிந்த கண்ணகியின் சீரிய விழிகள். இன்னொருபுறம் மணிமேகலையின் சாந்தம் ததும்பும் அனுதாபம் சொட்டும் கண்கள் அவர்களை நோக்கின. ஒரு சுவரின் ஓரத்தில் இளங்கோ எழுத்தாணி பிடித்து சிலப்பதிகாரக் காவியத்தைத் தீட்டிக்கொண்டிருந்தார். இன்னொரு சுவரின் ஓரத்தில் வள்ளுவரே உட்கார்ந்திருந்தார். காவியமும் ஓவியமும் இணைந்து கலைச் சோலையாக விளங்கிய அந்தப் பிரும்மாண்ட அறையைப் பார்த்துப் பிரமித்துப் பல விநாடிகள் நின்ற இதயகுமாரன் ''அரசகுமாரி'' என்றழைத்தான்.

அரசகுமாரி பதில் கூறவில்லை. அவள் கனவுலகத்தில் இருந்தாள். சில விநாடிகள் கழித்தே கேட்டாள். ''என்னை அழைத்தீர்களா?'' என்று.

''ஆம் அரசகுமாரி! இந்த அறையை நீங்கள் இதற்கு முன்பு பார்த்திருக்கிறீர்களா?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''இல்லை'' என்றாள் அரசகுமாரி.



''உள்ளத்தை அள்ளுகிறது'' என்றான் இதயகுமாரன்.

அதை ஆமோதிக்கும் வகையில் தலையசைத்தாள் அரசகுமாரி.

''இதை வரைந்த ஓவியன் யார் தெரியுமா?'' என்று இதயகுமாரன் கேட்டான்.

''தெரியாது'' என்றாள் அரசகுமாரி. அத்துடன் ''இதை வரைந்தவன் இப்பொழுது இருக்கிறானோ இல்லையோ?'' என்றும் கூறினாள்.

''இருக்கிறான்'' என்ற ஒலி அந்த அறையின் ஒரு மூலையிலிருந்து வந்ததும் இருவரும் சட்டென்று அந்தத் திசையை நோக்கித் திரும்பினார்கள். அந்த மூலையில் சுவரில் சாய்ந்த வண்ணம் கூனனான ஒரு வயோதிகன் நின்றிருந்தான். அவன் தலை பூராவும் நரைந்திருந்தாலும் கண்கள் மட்டும் மிகத் தீட்சண்யமாக ஒளிவிட்டன. ஒரு விநாடி அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்த அந்த மனிதன் தனது பக்கத்தில் ஓவியத்தோடு ஓவியமாகத் தெரிந்த ஒரு சிறிய கதவைத் திறந்துவிட்டு ''அறைக்குள் செல்லுங்கள். ஆனால் அங்குள்ள எதையும் தொடவேண்டாம்'' என்று கூறினான்.

இதயகுமாரன் அந்த மனிதனை அணுகி ஏற இறங்கப் பார்த்தான். பிறகு அரசகுமாரியை நோக்கி, ''சரி, வாருங்கள் அரசகுமாரி'' என்று, அரசகுமாரியையும் அழைத்துக் கொண்டு அந்த அறைக்குள் நுழைந்தான். அடுத்த விநாடி அந்த அறைக் கதவு டக்கென்று மூடப்பட்டது. வெறிபிடித்த பெருஞ்சிரிப்பு ஒன்று மூடப்பட்ட கதவுக்கு வெளியே கேட்டது. இதயகுமாரன் கன வேகத்தில் திரும்பி கதவின் பிடியைப் பிடித்து இழுத்தான். கதவு திறக்கவில்லை. தானும் அரசகுமாரியும் அந்த அறையில் சிறைப்பட்டு விட்டதை உணர்ந்தான். அதனால் சினத்தின் வசப்பட்ட இதயகுமாரன் இடது கையிலிருந்த தந்தச் சிலையை அரசகுமாரியிடம்

கொடுத்துவிட்டு,கதவை உடைத்துவிட தனது இடையிலிருந்த வாளை உருவிக்கொண்டு காலையும் உயர்த்தினான்.

''இருங்கள். இப்படிப் பாருங்கள்'' என்ற அரசகுமாரியின் அச்சம் கலந்த குரல் அவனைத் திரும்ப வைத்தது. அரசகுமாரி அந்த அறையின் மூலையைச் சுட்டிக்காட்டினாள். அந்த மூலையைக் கண்ட இதயகுமாரன் கண்களில் விவரிக்க இயலாத பிரமை விரிந்தது. அதிர்ச்சி மிகுந்த உணர்ச்சியின் விளைவாக நின்ற இடத்தில் சிலையென நின்று விட்டான். பக்கத்தில் நின்றிருந்த அரசகுமாரியின் கை ஆதரவைத் தேடி அவன் கையை இறுகப் பிடித்துக்கொண்டது. அப்படிப் பிடித்த கை லேசாக நடுங்கவும் செய்தது.

# 6. துகிலுரி படலம்

இமயத்தின் சிகரமே இடிந்துவிழுந்தாலும் இம்மியும் சலிக்காத இதயகுமாரன் இதயமே இரகசிய சிறையில் இளவரசி காட்டிய காட்சியால் சிறிது சலித்ததென்றால், இளவரசியின் கை அச்சத்தால் அவன் கையை நாடி வந்து அதை இறுகப் பிடித்ததிலோ நடுங்கியதிலோ விசித்திரம் என்ன இருக்க முடியும்! அந்த அறையின் மங்கலான வெளிச்சத்தில் தன் கண்ணெதிரே விரிந்த காட்சியைக் கண்ட இதயகுமாரன் ஒரே விநாடியில் தன்னுடைய இதயசலிப்பை உதறிக்கொண்டு, தனது ஆதரவை நாடிவந்த கையை பதிலுக்கு இடது கையால் இறுகப்பிடித்து, உருவிய வாளை உறையில் போட்டுவிட்டு அரசகுமாரியை நெருங்கி வந்து வலது கையால் அவள் தோளையும் இறுகப்பிடித்து அவள் அச்சத்தைச் சிறிது ஆற்றவே செய்தான். அப்படி உடலோடு உடல் லேசாக உராய்ந்த நிலையில் அறை மூலையில் எழுந்த காட்சி மீது இரண்டாம் முறையாகக் கண்களை ஓட்டினான் சோழ நாட்டு வாலிபன்.ஓட்டிய கண்கள் நிலைத்தன. அரசகுமாரியின் கையையும் தோளையும் பற்றிய கைகள் சிறிது அதிகமாக அழுத்தின. நிலத்தில் ஊன்றிய கால்கள் ஏதோ போருக்குச் சன்னத்தமாவது போல் உறுதியுடன் தரையில் அசைந்தன.

அரசகுமாரி சுட்டிக்காட்டிய அந்த அறையின் மூலையில் எழிலுக்கு ஒரு இலக்கணம் வகுக்கவே பிறந்தது போல் நின்றிருந்தாள் ஒரு பேரழகி. அவள் சந்திர பிம்ப முகத்தில் வளைந்து கிடந்த புருவங்களை வில்லுக்கு உவமையாகச் சொல்ல முடியாது. அந்தப் புருவங்களைப் பார்த்துத்தான் வில் என்ற போர்க்கருவி அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று இதயகுமாரன் கருதினான். அவள் கண்கள் அவனை நேராகப் பார்க்காவிட்டாலும், சிறிதே இமை தாழ்ந்த நிலையிலும்

கண்கள் பெருமயக்கத்தை அளித்தன. அவள் கன்னங்களின் லேசான புடைப்பும், எடுப்பான நாசியும், செழுமைக் கன்னக் கதுப்புகளில் படர்ந்திருந்த வெட்கச் சிவப்பும், குண்டு குண்டான பவளத்தைத் திறமையுடன் யாரோ இழைத்து சமமான நீரோட்டமுள்ள உதடுகளாக்கி விட்ட சிறப்பும், அந்த இதழ்களில் துலங்கிய வெட்கப்புன்முறுவலும், பிறைநுதலுக்கு மேலே நேர்வகிடு எடுக்கப்பட்டுப் பக்கவாட்டில் போடப்பட்ட கருங்குழல் முடிப்பும், இதயகுமாரன் மனத்தை அப்படியே ஈர்த்தன. முகத்துக்குக் கீழே இறங்கிய சங்குக் கழுத்தும், அதில் அணிந்திருந்த விலைமதிக்க முடியாத பாண்டிநாட்டு முத்தும் வேங்கி நாட்டு இரத்தினமும் கலந்த ஆபரணமும், அந்த ஆபரணம் மார்பின் நடுவைத் தொட்டு அக்கம் பக்கத்தில் அளவுடன் எழுந்திருந்த பங்கய மொட்டுக்களை இணைய விடாமல் தடுத்த விந்தையும் சோழ நாட்டு வாலிபன் சிந்தையை நிலைகுலையச் செய்தன.

அவள் அணிந்திருந்த வெண்ணிறப் பட்டின் ஓரங்களும் இடுப்பில் சுற்றித் தொங்கிவிடப்பட்ட சரிகை வேலைப்பாடுகளும், அந்த வெண்ணிறப் பட்டின் பலவிடங்களில் காட்சியளித்த மலர்ச் சித்திரங்களும், அந்த ஒரு சேலையின் விலையே மதிப்பிற்கு அப்பாற்பட்டதென்பதை சந்தேகமற நிரூபித்தன. அந்தப் பட்டும் மிக மெல்லியதாயிருந்ததால் அந்தப் பெண்ணின் உடற்கூறுகளும் ஆங்காங்கு லேசாக சந்தன நிறத்தில் உள்ளே தெரிந்ததால் மயக்கம் தலைக்கேறும் நிலைக்கு வந்துவிட்டான் அந்த வாலிப வீரன். இவைமட்டும் அந்தப் பெண்ணின் மோகன உருவமென்றால் அதிக பிரமையடைந்திருக்க மாட்டான் இதயகுமாரன். ஆனால், அந்தப் பெண்ணின் முடிந்த குழலில் ஒரு செண்பக மலர் இருந்தது. அதுமட்டுமல்ல, அவள் சாட்சாத் அரசகுமாரியின் இரட்டைப் பிறவி போலவே இருந்தாள். முகம், கண், அவயவங்களின் தொகுப்பு, நின்ற தோரணை எல்லாமே அரசகுமாரியைப் போலிருந்ததால்



அரசகுமாரியையும் ஒருமுறை திரும்பிப் பார்த்து அந்தப் பெண்ணின் முகத்தையும் பார்த்த இதயகுமாரன், அரசகுமாரியின் கையில் தான் கொடுத்திருந்த, புற்றில் கிளறியெடுத்த தந்தச் சிலையையும் பார்த்து ''சந்தேகமில்லை, மூன்றும் ஒரே உருவம், ஒரே அச்சு'' என்று வாய்விட்டுச் சொன்னான்.

அதைக் கேட்ட அரசகுமாரியும் தலையசைத்து ''ஆச்சரியம். இவளை நான் பார்த்ததே இல்லை. எதற்காக இவளைச் சிறை வைத்திருக்கிறார்கள்?'' என்று வினவினாள்.

இதயகுமாரன் இளவரசியை நோக்கித் திரும்பி ''அவளையே கேட்டு விடலாமே'' என்றான்.

அது அந்தப் பெண்ணின் காதிலும் விழுந்திருக்க வேண்டுமென்று நினைத்த இதயகுமாரனுக்கு அந்தப் பெண் என்ன காரணத்தாலோ இமைகளை லேசாகத் தூக்கித் தன்னை உற்றுப் பார்ப்பதுபோல் தோன்றியதால் ''பெண்ணே! இனி நீ அஞ்சவேண்டிய அவசியமில்லை. உனக்கு இன்றுடன் இந்தச் சிறை ஒழிந்தது'' என்று கூறி நாலடி எடுத்து வைத்தவன் சட்டென்று நின்றான். வெளியே மீண்டும் பழைய வெறி பிடித்த பயங்கரச் சிரிப்பு அவன் காதில் விழுந்தது. அதே சமயத்தில் அறை மூலையில் அந்தப் பெண்ணுக்கு அருகிலிருந்த சுவரில் பளீரென்று ஒரு கண்தெரிந்து மறைந்தது.

இத்தகைய விசித்திரச் செயல்களின் விளைவாக இதயகுமாரன் நிதானமும் சிறிது அகலவே ''இத்தனையும் அந்தக் கிழவன் வேலையாகத்தானிருக்க வேண்டும்'' என்று சற்று இரைந்தே சீறிவிட்டு, ''கிழட்டுப் பிணமே! உன்னை சீக்கிரம் கவனிக்கிறேன்'' என்றும் தனக்குள் சொல்லிக்கொண்டு மூலையிலிருந்த அந்தப் பெண்ணை அணுகினான். நன்றாக அணுகியதும் பிரமிப்பு உச்சவரம்பை அடையவே, ''அரசகுமாரி! இப்படி வாருங்கள்! இந்த விந்தையைப் பாருங்கள்'' என்றழைத்தான். அவன் அழைப்பை ஏற்று அந்தப் பெண்ணை

அணுகிய அரசகுமாரியின் கண்களும் அந்த விந்தைக் காட்சியில் வியப்புற்று பெரிதாக மலர்ந்தன. ''வெறும் மரச்சிலை'' என்றாள் அரசகுமாரி வியப்பு குரலிலும் ஒலிக்க.

''இல்லை. உயிர்ச்சிலை'' என்று திருத்தினான் இதயகுமாரன். ''அரசகுமாரி! இதுவும் யாரோ ஒரு கைதேர்ந்த சிற்பியால் செய்யப்பட்ட தந்தச்சிலை. இதன் கைகளைப் பாருங்கள். நரம்புகள்கூடத் தெரிகின்றன. ஒவ்வொரு அவயவத்திலும் உயிர்நாடி இருக்கின்றது. அரசகுமாரி! இந்த ஒரு சிலையை வைத்துக்கொண்டு, இதன் கழுத்திலுள்ள ஒரு ஆபரணத்தை வைத்துக் கொண்டு ஒரு அரசை விலைக்கு வாங்கலாம்'' என்று கூறினான்.

''ஆம் வாங்கலாம்'' என்றாள் அரசகுமாரி, பிரமையின் மிகுதியால் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக.

இதயகுமாரன் அடுத்தபடி எதுவும் பேசவில்லை. தனது கையிலிருந்த மோகனச் சிலையைப் பார்த்தான். மோகனச் சிலையையும் தோற்கடிக்கும் அரசகுமாரியைப் பார்த்தான், இரண்டையும் அர்த்தமற்றதாகச் செய்யக்கூடிய அழகு வாய்ந்த மூலைச் சிலையையும் பார்த்தான். பிறகு எதிரேயிருந்த அந்த அழகுச் சிலையின் முகத்தைத் தடவினான். உதடுகளில் விரலை வைத்து அழுத்திப் பார்த்தான். திருப்தி அடைந்ததற்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்துக் கொண்டான். அடுத்தபடி அவன் தொடங்கிய பணியைத் தான் அரசகுமாரி தடுத்தாள். அந்தச் சிலையின் தோள்மீதிருந்த பட்டுச்சீலையை அவன் அகற்ற முற்பட்டபோது அவன் கையைப் பிடித்துத் தடுத்த அரசகுமாரி, ''வேண்டாம் நிறுத்துங்கள்'' என்றாள்.

''ஏன் அரசகுமாரி?'' சட்டென்று திரும்பி வியப்பு நிரம்பிய விழிகளை அரசகுமாரி மீது நிலைக்க விட்டான் இதயகுமாரன்.

''நீங்கள் துச்சாதனனல்ல துகிலுரிவதற்கு'' என்ற அரசகுமாரியின் குரலில் சீற்றமிருந்தது, சிறிது இகழ்ச்சியுமிருந்தது.



''இவள் பாஞ்சாலியல்ல'' என்ற இதயகுமாரன் ''இது சிலை அரசகுமாரி'' என்றும் சுட்டிக்காட்டினான்.

''சிலையானால் என்ன?''

''சிலையைப் பார்ப்பது தவறா?''

''ஆடையைக் களைந்துதான் சிலையைப் பார்க்க வேண்டுமென்பதில்லை.''

''களைய வேண்டிய அவசியமிருந்தால்?''

''அவசியமா!''– அரசகுமாரியின் கேள்வியில் ஒலித்தது ஆச்சரியமா? அதிர்ச்சியா? இரண்டும் கலந்த உணர்ச்சியா? புரியவில்லை இதயகுமாரனுக்கு.

இதயகுமாரன் சிறிது சிந்தித்தான். பிறகு சொன்னான், ''அரசகுமாரி! என் கையை விட்டு நீங்கள் வேறு பக்கம் திரும்பிக் கொள்ளுங்கள்'' என்று.

''எதற்கு?'' என்று வினவினாள் அரசகுமாரி.

''இந்தச் சிலையின் துகிலை எடுத்து ஆராய'' என்றான் இதயகுமாரன்.

இந்தப் பதிலைக் கேட்ட அரசகுமாரி அதிர்ச்சியடைந்து நின்றாள் ஒரு விநாடி. ''ஆராயவா?'' என்ற கேள்வி அக்னி போல் வந்தது அவள் வாயிலிருந்து, கண்களும் நெருப்பைக் கக்கின.

''ஆம்'' என்றான் இதயகுமாரன்.

''வீரரே. உமக்குப் புத்தியிருக்கிறதா இல்லையா?'' என்று வினவினாள் அரசகுமாரி.

''அதில் சந்தேகமா?''

''இல்லை. புத்தி அடியோடு இல்லையென்று தெரிகிறது.''

''எப்படி?''

''சிலையின் சீலையை நீக்க முயல்வதிலிருந்து. சிலையானாலும் பெண் சிலை.''

''அதனால்?''

''இப்படி உயிரோடு அதைச் செய்திருப்பவன் உள்ளேயும் உடலை...'' வெட்கம் பிடுங்கியதால் பாதியில் நிறுத்தினாள் அரசகுமாரி பேச்சை. திணறவும் செய்தாள்.

''உம்...'' ஆயாசப் பெருமூச்சு விட்டான் இதயகுமாரன்.

அரசகுமாரி மேலும் தட்டுத் தடுமாறிச் சொன்னாள், ''தவிர, அந்தச் சிலை... என்னைப் போலிருப்பதாகச் சொன்னீர்கள்...'' என்று.

இதயகுமாரன் நன்றாகப் புரிந்து கொண்டான் அவள் மன ஓட்டத்தை. அவன் இதயத்திலிருந்து பெருமூச்சொன்று கிளம்பி நாசிமூலம் வெளிவந்தது. ''அதற்காகத்தான் சொன்னேன் அரசகுமாரி உங்களை வேறு பக்கம் திரும்பிக் கொள்ள'' என்றான்.

அரசகுமாரியின் முகம் பெரிதும் சிவந்தது நாணத்தால். ''வீரரே! நீங்கள் பாரத நாட்டுப் பெண்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளவில்லை. இதைச் செதுக்கிய கலைஞன் உள்ளத்தையும் புரிந்து கொள்ளவில்லை. இதை வைத்திருக்கும் இரத்தினக்கொல்லரின் இதயத்தையும் புரிந்து கொள்ள வில்லை. சிலையாயிருந்தாலும் பெண் அழகுகளை மூடுகிறோம் பண்பாட்டை ஒட்டி. தாயார் விக்கிரகங்களுக்கு பட்டாடைகளை உடுத்துகிறார்கள் கோவில்களில். ஏன்? இது கலாச்சாரம், பாரதப் பண்பாடு. பெண் அழகு தெய்வீகமானது. எல்லோர் கண்களிலும் படுவதற்காக ஏற்பட்ட தல்ல. இதுதான் காரணம். சிலையைக்கூட உரித்து நிறுத்த முடியாது'' என்று விளக்கினாள் அரசகுமாரி நிலத்தை நோக்கிய வண்ணம்.

இந்த விளக்கத்தைக் கேட்ட இதயகுமாரன் சிறிது சிந்தனை யில் இறங்கினான். ''இதற்காகத்தான் சோழ நாட்டி லிருந்து இங்கு வந்தேன்'' என்று கூறினான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''துகிலுரிக்க?''—சீறினாள் அரசகுமாரி.

''அதைத்தவிர வேறுவழியில்லை'' இதயகுமாரன் சொற்களில் சங்கடமிருந்தது.



''வழி இல்லையா?''

''இருக்கிறது.''

''அப்படியானால் அதைக் கைப்பிடிப்பதுதானே?''

''அப்புறம் இந்த நாட்டில் நான் தலைகாட்ட முடியாது.''

''ஏன்?''

''தலை போய்விடும். அதாவது...''

''அதாவது?''

''இங்கிருந்து தப்பினால்...''

''ஏன் தப்ப முடியாது?''

''அரசகுமாரி!...''

''உம்...''

''உங்கள் இடையில் குறுவாள் இருக்கிறதல்லவா?''

''இருக்கிறது...''

''அதைக் கொண்டு நீங்களே என்னைக் குத்திப் போடுவீர்கள்.''

''உங்களை நான் ஏன் குத்த வேண்டும்?''

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை இதய குமாரன். பதில் சொன்னபோதும் மிகுந்த தயக்கத்துடன் அரைகுறையாகப் பேசினான். ''அரசகுமாரி! உங்கள் பிறப்பின் மர்மம் இரத்தினக் கொல்லன் வீட்டில் தெரியும் என்று சொன்னேன். அந்த மர்மத்தை அறிய ஒன்று நான் இந்தச் சிலையின் சீலையைக் களைய வேண்டும். அல்லது...அதைப் போலவே அச்சாக வளர்ந்திருக்கும் உங்கள்...'' சொற்களை முடிக்கவில்லை சோழநாட்டு வாலிபன்.

அப்படி அவன் அரையும் குறையுமாக விட்ட சொற்களால் அரவு தீண்டியவள் போல் நடுநடுங்கிப் பின்னடைந்தாள் அரசகுமாரி. இடையில் மேலாடை மறைப்பிலிருந்த குறு வாளை உருவி

எடுத்துக் கொண்டாள். ''கிட்டே வந்தால் பிணமாகிடுவாய்'' என்று நடுக்கமும் சீற்றமும் கலந்த குரலில் கூறினாள் அரசகுமாரி.

இதயகுமாரன் முகம் உணர்ச்சியற்ற கல்லாயிருந்தது. ''இதைத்தான் முன்பே சொன்னேன் அரசகுமாரி'' என்று வறண்ட குரலில் பேசிய இதயகுமாரன் மேலும் பேசத் தொடங்கினான். ''என் ஊகம் சரியானால் உங்கள் மார்புக்குச் சிறிது மேலே புலியைப் போன்ற ஒரு மச்சமிருக்க வேண்டும். அதே மச்சம் இந்தச் சிலையின் மார்பிலும் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் இந்தத் தமிழ்நாட்டுக் கதை பெருங்கதை யாக மாற இருக்கிறது. ஆகவே என்னைத் தடுக்காதீர்கள்'' என்ற இதயகுமாரன் கண்ணிமைக்கும் நேரத்தில் அரசகுமாரியை அணுகி குறுவாளைப் பிடித்த கையை இறுகப் பிடித்து உதறினான். குறுவாள் நிலத்தில் விழவே அதைக் காலால் உதைத்து தூரத் தள்ளினான். பிறகு அரசகுமாரியை நோக்கிச் சொன்னான். ''அப்புறம் திரும்பிக் கொள்ளுங்கள் அரசகுமாரி. அந்தச் சிலையின் மார்பை நான் பார்க்க வேண்டும். சேலையைச் சிறிது நெகிழ்த்தித்தான் ஆக வேண்டும்'' என்று.

இம்முறை அவள் பதிலுக்கு அவன் காத்திருக்கவில்லை. சட்டென்று சிலையிடம் சென்று சேலை மீது கையை வைத்து அகற்ற முயன்றாள். அதே விநாடியில் எங்கிருந்தோ பறந்து வந்த குறுவாளொன்று அவன் வலது கையில் பாய்ந்திருக்கா விட்டால் துகிலுரி படலம் முடிந்திருக்கும். குறுவாள் பாய்ந்ததைக்கூட இதயகுமாரன் லட்சியம் செய்யவில்லை. குறுவாள் பாய்ந்த சமயத்தில் வீறிட்டு அலறிய அரசகுமாரியின் சோகக்குரல் அவனைச் சரேலென்று திரும்ப வைத்தது. மிக விபரீதமான காட்சி அவன் கண்ணெதிரே எழுந்தது. அரச குமாரியின் வாயை ஒருவன் அழுத்திப் பிடித்திருந்தான். அவனது கூரிய பெரிய வாள் அரசகுமாரியின் கழுத்துக்குக் குறுக்கே அழுந்திக் கிடந்தது.

# 7. வரலாற்றின் வாயிலில்

அரசகுமாரியின் அலறலைக் கேட்டு அதிர்ச்சியுற்ற இதயகுமாரன் சிலையின் சீலையை விட்டுத் திடீரெனத் திரும்பினானேயொழிய, கண்ணெதிரே தோன்றிய விபரீதக் காட்சியைக் கண்டதும் அவன் அதிர்ச்சி, அவசரம் எல்லாமே மறைந்து விட்டன அவன் மனத்திலிருந்து. மிக நிதானமான பார்வையையே இதயகுமாரன் செலுத்தினான் கதவுக்ககருகில் அரசகுமாரியின் கழுத்துக்குக் குறுக்கே வாளை அழுத்தி நின்றிருந்தவனைப் பார்த்து. அந்த நிதானத்தை வந்தவன் தவறாகப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஆகையால் சற்றுப் பெரிதாக நகைத்து ''சோழநாட்டு வீரம் எங்கோ பறந்துவிட்ட தாகத் தெரிகிறது'' என்று கூறினான்.

இதயகுமாரன் கோபத்துடன் செயல்படும் சமயங்களை விட அவன் நிதானப்படும் நேரம் மிக அபாயமானதென்பது சோழநாட்டில் சர்வ சகஜமாகத் தெரிந்த விஷயமாயிருந் தாலும், கருவூரில் அது தெரியாததால் அரசகுமாரியைச் சிறைப்படுத்தியவன், இதயகுமாரன் நிதானத்தை அடக்க மென்றும், கோழைத்தனத்தால் ஏற்பட்ட செய்கையென்றும் மதித்தான். தவிர, வந்தவன் வாலிபனாயிருந்தாலும் அவன் நல்ல உயரமும் பருமனுமாயிருந்ததால் அவனுக்கு உள்ள வயது சிறிது அதிகமாகவே தெரிந்தது. நன்றாக வளர்ந்து பயங்கரமாக முறுக்கி விடப்பட்ட மீசையின் ஓரங்கள் இரண்டும் குத்தூசிகள் போல் நின்றிருந்ததாலும், கன்னக் கதுப்புகள் அளவுமீறிப் புடைத்திருந்ததாலும் ஏதோ ஒரு சின்ன ராட்சதன் நிற்பது போலவே தோன்றியது அவன் தோரணை. உருண்ட பெரிய கண்களில் அச்சம் லவலேசமும் இல்லாததால் உண்மையில் அவன் பெரிய வீரனாகத்தானிருக்க

வேண்டும் என்ற முடிவுக்கு வந்த இதயகுமாரன், இத்தனை யிலும் அந்தக் கண்களில் சிறிது சலனமும் இருந்ததால் அவன் பெரிய வஞ்சகனென்பதையும், வஞ்சகம் வீரத்தை ஓரளவு அடக்குகிறதென்றும் தீர்மானித்துக் கொண்டான்.

இதயகுமாரன் நிதானமும் போக்கும் மிக விசித்திர மாயிருக்கவே அரசகுமாரியைப் பிடித்திருந்த வாலிபன் வியப்பு நிரம்பிய கண்களை இதயகுமாரன் மீது நிலைக்க விட்டான். கையில் பாய்ந்த குறுவாளை எடுக்காமலும், அரசகுமாரியைக் காப்பாற்ற விரையாமலும் தன்னையே அவன் ஏன் உற்றுப் பார்க்கிறான் என்று நினைத்ததால், தான் எதிரியைப் பற்றி முதலில் போட்ட எடை தவறோ என்ற சந்தேகமும் வந்த வாலிபனுக்கு ஏற்படவே ''ஏன் விழிக்கிறாய்?'' என்று வினவினான் சிறிது சீற்றத்துடன்.

இதயகுமாரன் ஏதோ சிந்தித்தான் ஒரு விநாடி. பிறகு அந்த வாலிப வீரனை நோக்கி ''உன் தந்தை யார்?''என்று வினவினான் சர்வ சாதாரணமாக.

இந்தக் கேள்வி அந்த வாலிபனுக்கு விசித்திரமாயிருக்கவே ''யாராயிருந்தால் உனக்கென்ன?'' என்று வினவி னான் எரிச்சலுடன்.

''உங்கள் வீடு சங்கு அறுப்பவர் வீதியிலிருக்கிறதா?''—இரண்டாவது கேள்வி நிதானமாக எழுந்தது இதயகுமாரனிடமிருந்து.

''என்ன உளறுகிறாய்?''—சீறினான் அந்த ராட்சத வாலிபன்.

''உளறவில்லை. சங்கறுப்பவர் வீதியிலிருந்தால் நீ சங்கறுக்கும் ஜாதியாயிருக்க வேண்டும்'' என்றான் இதயகுமாரன்.

''ஜாதியைப் பற்றி இங்கென்ன பேச்சு?'' என்று கேட்டான் சிறிது குழப்பத்துடன் எதிரி.

''தொழிலைப் பொறுத்துத்தான் ஜாதி. அதனால் கேட்டேன்'' என்ற இதயகுமாரனை சினத்தால் சிவந்த கண்களால் நோக்கினான் அந்த வீரன். ''எதைக்கொண்டு என்னை சங்கறுப்பவனென்று தீர்மானித்தாய்?'' என்றும் வினவினான் உஷ்ணத்துடன்.



''அரசகுமாரியின் கழுத்து வெண்மையான வலம்புரி சங்குபோல் இருக்கிறது. உன் கத்தி அதற்குக் குறுக்கே இருக்கிறது'' என்று கூறினான் இதயகுமாரன்.

''வர்ணனையில் ஈடுபடுகிறீர்களோ? நீங்கள் கவிஞர் போலிருக்கிறது!''என்று இகழ்ச்சியுடன் நகைத்த அந்த வாலிபன் ''அரசகுமாரி கழுத்தைவிட உங்கள் வலதுகையை நீங்கள் பார்ப்பது நல்லது'' என்றும் கூறினான் நகைப்பின் ஊடே.

இதயகுமாரன் இதழ்களில் குறுநகை விரிந்தது. ''அதுவும் நியாயம்'' என்று எதிரியை நோக்கி தலைதாழ்த்திய இதயகுமாரன், குறுவாள் பாய்ந்துவிட்டதால் குருதிசொட்டிக் கொண்டருந்த தனது வலது கையையும், அதில் அப்பொழுதும் தொக்கித் தொங்கிக் கொண்டிருந்த குறுவாளையும் நோக்கினான்.

அப்பொழுது சொன்னான் அந்த வாலிபன் ''இளையவேள் வைக்கும் குறி என்றும் தவறியது கிடையாது'' என்று.

அடுத்த விநாடி இளையவேள் சிறிதும் எதிர்பாராத துரித சம்பவங்கள் நிறைவேறின. வலது கைக் குறுவாளைத் தனது இடது கையால் சட்டென்று இழுத்துவிட்ட இதயகுமாரன் சரேலென்று நிமிர்ந்து அதே குறுவாளை எதிரியின் வாள் பிடித்த கையின் மேற்புறத்தின்மீது வீசினான். மின்னல் வேகத்தில் வீசப்பட்ட அந்தக் குறுவாள் தோளுக்குச் சற்றுக் கீழே தைத்துவிட்டதால் அரசகுமாரியின் கழுத்தை அழுத்தி நின்ற பெருவாள் நிலத்தில் சட்டென்று விழுந்து விபரீத ஒலிகளை அந்த அறையெங்கும் பரப்பியது. அடுத்த விநாடி காலில் இரும்புபோல் ஏதோ பாயவே ஒரு புறமாகச் சாய்ந்து விட்ட இளையவேளின் பெரும் கழுத்தின் குரல்வளை இதயகுமாரன் வலது கையின் இரும்புப் பிடியிலிருந்தது. இளையவேளின் விழிகள் பிதுங்கும் நிலைக்கு வந்ததால் அவனை ஒரு புறமாக இதயகுமாரன் தள்ளவே சட்டென்று தரையில் சாய்ந்த இளையவேள் பக்கவாட்டிலிருந்த சுவரில் சாய்ந்து நின்றான்.

அசுர வேகத்தில் நிகழ்ந்துவிட்ட அந்தச் சம்பவங்களால் நிலைகுலைந்துபோன இளையவேள் மிகுந்த ஆச்சரியத்துட னும் மதிப்புடனும் இதயகுமாரனை நோக்கினான். இதய குமாரன் அவனை நோக்கி ''இளையவேள்! நீ இரத்தினக் கொல்லர் பட்டறைக் கதவை இடித்து அதட்டியதுமே அரசகுமாரி அச்சமுற்றாள். அதற்குக் காரணம் இருப்பதை இப்பொழுது புரிந்து கொண்டேன். நீ குறுவாளெறிந்த முறையிலிருந்து நீ பெரிய வீரன் என்பதை புரிந்துகொண்டேன். அதனால்தான் உன் கழுத்தை நோக்கிக் குறுவாளை நான் வீசவில்லை. வீசியி ருந்தால் அது தவறாது. அரசகுமாரியைத் தொட்டதற்கே உன்னைக் கொன்றிருக்கலாம். தொட்டது மட்டுமல்லாமல் அவள் கழுத்துக்குக் குறுக்கே வாளை அழுத்தியதற்கு நிச்சயமாகக் கொன்றிருக்கலாம். அது உனக்கு சரியான தண்டனையாகும். அதை நான் உனக்கு அளிக்காததற்கு என் வீரம் காரணம். தவறாத என் குறி காரணம். ஆனால் இளைவேள்...'' என்ற இதயகுமாரன், வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

இளையவேள் வலது கையில் அவனது குறுவாளே பாய்ந்திருந்ததால் அதை எரிச்சலுடன் நோக்கினான். அதன் விளைவாக, ''ஆனால் என்ன?'' என்று வினவினான் எரிச்சல் குரலிலும் ஒலிக்க.

''உன்னிடம் வீரம் இருக்கிறது. வேகம் இருக்கிறது. விவேகம் இல்லை'' என்றான் இதயகுமாரன் வருத்தம் தொனித்த குரலில்.

''என் விவேகத்துக்கு என்ன குறைவு?'' இளையவேளின் குரலில் கோபம் மறைந்துவிட்டது. வியப்பு ஒலித்தது.

''என் வலது கையில் உனது குறுவாள் பாய்ந்தவுடன் நீ செய்திருக்கவேண்டியது அரசகுமாரியின் கழுத்தில் வாளை அழுத்தும் அலுவலல்ல. என் இடது கையையும் செயலற்றுப் போகச் செய்திருக்க வேண்டும்'' என்ற இதயகுமாரன் ''அர்ஜுனனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா?'' என்று வினவினான்.



''எந்த அர்ஜுனன்?''

''பீமன் தம்பி.''

''அவனுக்குகென்ன இப்பொழுது?''

''அவனுக்கு ஸவ்யஸாசி என்று ஒரு பெயர்.''

''எந்த பெயராயிருந்தால் எனக்கென்ன?''

''இரண்டு கையாலும் வில்லை விடும் திறமையிருந்த தால் அவனுக்கு அந்த பெயர். நானும் ஒரு வகையில்...''

''அர்ஜுனன் போலிருக்கிறது?''-இளையவேளின் கேள்வியில் இகழ்ச்சி ஒலித்தது.

''தற்பெருமை எனக்குப் பிடிக்காது. இருந்தாலும் என் குறுவாளை நான் இடது கையால் வீசியதை நீயே பார்த்தாய். இரண்டு கையாலும் நான் போரிட முடியும்'' என்று சுட்டிக் காட்டிய இதயகுமாரன், ''ஆகையால் நீ என் இடது கையையும் பயனற்றதாக செய்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் அரச குமாரியைத் தொட்டாய்...'' என்று கூறினான். இதைச் சொன்ன போது இதயகுமாரன் குரலில் லேசாகச் சினமும் ஒலித்தது.

இளையவேள் இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி இலட்சியம் செய்யவில்லை. ''கலியுக அர்ஜுனரே! நீரும் ஒரு தவறு செய்திருக்கிறீர்'' என்றான் சினத்துடன்.

''என்ன தவறு இளையவேள்?'' என்று கேட்டான் இதய குமாரன்.

''போகுமிடங்களிளெல்லாம் அர்ஜுனன் ஒரு பெண்ணை அபகரிப்பதாகப் புராணம் சொல்கிறது. நீயும் அரசகுமாரியை என் வீரர்கள எதிரில் கவர்ந்து சென்றாய். ஆனால், இங்கு ஒரு இளையவேள் இருப்பானென்பதை நீ உணரவில்லை. இந்த இளையவேளுக்கு அரசகுமாரி அதுமட்டுமல்ல. முறைப்பெண் என்பதையும் நீ உணரவில்லை. உணர்ந்திருந்தால் அரசகுமாரியை நான் தொட்டதைத் தவறாக நினைத்திருக்க மாட்டாய்'' என்றான் இளையவேள்.

அதுவரை ஏற்பட்ட துரித நிகழ்ச்சிகளையும், பிறகு நிகழ்ந்த அந்த இருவர் உரையாடலையும் கவனித்துக் கொண்டு ஒரு புறமாக ஒதுங்கி நின்றுவிட்ட அரசகுமாரி, இளையவேளை எரிக்கும் கண்களுடன் நோக்கினாள். ''முறைப்பெண்கள் எல்லோரையும் முறையுள்ளவர்கள் மணம் புரிந்துகொண்ட தாக சரித்திரமில்லை. தவிர, திருமணத்திற்கு முன்பு நீ என்னைத் தொட்டது தவறு. அதற்கே உனக்கு மரணதண்டனை உண்டு'' என்று சீறவும் செய்தாள்.

எந்த மனிதனும், எப்பேர்ப்பட்ட வீரனும், சில வேளை களில் அசட்டுத்தனத்தைக் காட்டுகிறான் என்பதை இளைய வேள் அப்பொழுது நிரூபித்தான். ''நீ இவனிடம் மயங்கியிருக் கிறாய்?'' என்று கூறினான் இளையவேள் ஆத்திரத்துடன்.

இந்த இடத்தில் இடைபுகுந்த இதயகுமாரன், ''இளைய வேள்! அரசகுமாரியைப் பற்றிப் பேசும்போது எச்சரிக்கை யுடன் பேசுவது நல்லது'' என்று எச்சரித்தான்.

''இந்த நாட்டு சேனாதிபதியிடம் பேசும்போது நீயும் சிந்தித்துப் பேசுவது நல்லது'' என்று மறைமுகமாகத்தனது பதவியை உணர்த்தினான் இளையவேள்.

இதயகுமாரன் புருவங்கள் வியப்புடன் மேலே எழுந்தன. ''நீயா சேரர் சேனாதிபதி'' என்று வினவினான் வியப்பின் சாயை குரலில் படர.

''ஆம். மன்னரால் நியமிக்கப்பட்டவன்'' என்றான் இளையவேள்.

''மன்னருக்கு எனது அனுதாபங்கள்'' என்றான் இதய குமாரன்.

''இதில் அனுதாபத்திற்கு என்ன இருக்கிறது?'' இளையவேளின் கேள்வியில் சினமிருந்தது.

''அவசரக்குடுக்கையான சேனாதிபதியை வைத்துக் கொண்டு சேரமன்னர் என்ன செய்யப் போகிறாரோ?'' என்று



அனுதாபங் காட்டிய இதயகுமாரன், மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் இளையவேளை அணுகி அவன் கையில் தைத்திருந்த குறுவாளைப் பிடுங்கினான். அரசகுமாரியை நோக்கி ''அரசகுமாரி! நீங்கள் அந்தச் சிலையிடம் சென்று அதன் பின்புறத்திலுள்ள சேலையில் சிறிது கிழித்துக்கொண்டு வாருங்கள். அதற்கு இளையவேளின் குறுவாளையே எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி குறுவாளை அவளிடம் நீட்டினான். அந்தக் குறுவாளை எடுத்துக்கொண்டு அழகு சிலையை நோக்கிச் செல்ல முயன்ற அரசகுமாரியைப் பார்த்து ''அந்தச் சிலையின் மார்பில் புலித்தலைபோல் மச்சம் இருக்கிறதா என்றும் பார்த்து வாருங்கள்'' என்றும் சொன்னான்.

அரசகுமாரி அவனையும் பார்த்து, தனது கையில் திணிக்கப்பட்ட இளையவேளின் குறுவாளையும் பார்த்தாள். பிறகு இளையவேளை நோக்கினாள் ஒரு வினாடி. அடுத்து ஏதும் பேசாமல் சிலையை நோக்கி நடந்தாள். தன் உடலால் சிலையை மறைத்துக்கொண்டு அதன் மார்புத் துணியை மெல்ல விலக்கி நோக்கினாள். தன்னை நோக்கிச் சீறுவது போன்ற புலிமுக மச்சமொன்று அதில் இருந்ததால் ஒரு வினாடி பிரமை பிடித்து நின்றாலும் அடுத்த விநாடி இதை மறைத்துக் கொண்டு சீலையால் சிலையின் மார்பையும் மூடிவிட்டு, அதன் பின்புறத்தில் தொங்கிய சிலையின் ஒரு சிறுபகுதியைக் குறுவாளால் கிழித்து அதைக் கொண்டுவந்து இதயகுமாரனிடம் கொடுக்கவே, அவன் அதைக் கொண்டு இளையவேளின் கையைக் கட்டி இரத்தத்தை நிறுத்தினான்.

இந்தப் பணிவிடையெல்லாம் இளையவேளுக்குப் பரம விசித்திரமாயிருந்தாலும் இதயகுமாரன் சொற்படி இளவரசி நடந்துகொண்டது அவனுக்கு வேப்பங்காயாயிருந்த தால், ''உன் கைக்காயத்துக்கு என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான்.

''என் கையில் குறுவாள் அதிகமாக ஊடுருவவில்லை, லேசாகத்தான் அழுந்தியிருக்கிறது. அதைக் கையாலேயே அழுத்தி ரத்தத்தை நிறுத்திவிட்டேன். அதிக ரத்தச் சேதமில்லாததால் ஆபத்து ஏதுமில்லை'' என்று விளக்கிய இதயகுமாரன், தனது வலது கையைக் காட்டினான். ரத்தம் அனேகமாக நின்றிருந்ததையும் சிறிது கசிவைத் தவிர, வேறு எதுவுமில்லாததையும் கவனித்த இளையவேள், ''அடுத்து நீ என்ன செய்ய உத்தேசம்?'' என்று வினவினான்.

இதயகுமாரன் ஒரு விநாடி சிந்தித்தான். ''நமது விரோதத்தை வாட்போரால் வேறு ஒரு சமயத்தில் தீர்த்துக்கொள்வோம். முதலில் நீ இங்கு எப்படி வந்தாய்? இந்த வழியை உனக்குக் காட்டிக் கொடுத்தது யார்?'' என்று விசாரித்தான்.

''இரத்தினக் கொல்லன் அச்சுதன்'' என்று மரியாதையின்றிப் பேசினான் இளையவேள்.

''அவரா?''

''ஆம். கதவு திறக்காததால் கதவை உடைத்துவிட ஏற்பாடு செய்தேன். அந்தச் சமயத்தில் கையில் ஒரு பெரிய இரத்தினத்துடனும், சாமணத்துடனும் அச்சுதன் கதவைத் திறந்தான். அவனுடன் வேலை செய்யும் இன்னொரு இரத்தினப் பணியாளன் பாயில் உட்கார்ந்து குனிந்து இரத்தினமொன்றைப் பரீட்சை செய்துகொண்டிருந்தான். அவனிடம் எனக்கு வேலையில்லாததால் அச்சுதனை மிரட்டி இந்த இரகசிய வழியின் மர்மத்தைக் கக்கவைத்தேன். இங்கு வந்ததும் இங்கு ஒரு கிழப்பைத்தியம் வழி மறித்தான். அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு அவன் மடியிலிருந்த சாவியைப் பிடுங்கி இக்கதவைத் திறந்து வந்தேன். அப்பொழுது தான் நீ சிலையைத் துகிலுரிய முயன்று கொண்டிருந்தாய்'' என்று விளக்கினான் இளையவேள். அவன் குரலில் அவன் சாதனை பற்றிய பெருமை விரிந்து கிடந்தது.



இதயகுமாரன் இந்த விவரத்தைக் கேட்டதால் சாந்திக்கு அறிகுறியாகப் பெருமூச்சு விட்டான்.

''நல்லவேளை, இவன் அவரை இரத்தினப் பணியாளனாக நினைத்துவிட்டான்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு ''சேனாதிபதி! தாங்கள் இனி வந்த வழி செல்லலாம். நான் தடை செய்ய மாட்டேன்'' என்று கூறினான்.

இளையவேளின் கண்களில் சினம் துளிர்த்தது. ''அரசகுமாரி?'' என்று விசாரித்தான் இளையவேள்.

''இன்னும் சிறிதுநேரம் அவர்களுக்கு இங்கு அலுவல் இருக்கிறது. அவர்களுக்கு எந்த ஆபத்துமில்லை. தாங்கள் சென்று வாருங்கள்'' என்ற இதயகுமாரன், அறைக்கதவைத் திறந்து விட்டான்.

இளையவேள் வெளியே செல்ல மறுத்து ''அரசகுமாரி என்னுடன் வந்தாலொழிய இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன்'' என்றான்.

அந்தச் சமயத்தில் கிழவனின் வெறிபிடித்த சிரிப்பு மீண்டும் கேட்டது. கதவை அடைத்துக்கொண்டு அவன் நின்றிருந்தான். அவன் கண்களில் வெறியின் சாயை பூர்ணமாக விரவிக்கிடந்தது. அவன் வெறிபிடித்த பார்வை அந்த அறையை ஒருமுறை அளவெடுத்தது. கடைசியாக இளையவேள்மீது நிலைத்தது. அவன் கையிலிருந்த கட்டைப் பார்த்ததும் கிழவன் வெறியுடன் சீறினான். கூனியிருந்த உடலுடன் இளையவேள்மீது வெகுவேகமாகப் பாய்ந்து அவன் குரல்வளையைத் தனது விரல்களால் பிடித்தான். ''ராஜமாதாவின் சீலையை யார் அறுத்தது? அது உன் கைக்கு எப்படி வந்தது?'' என்று கூறினான்.

கிழவன் கையில் யாருக்குமில்லாத பலம் இருந்தது. அவன் பிடியால் ஸ்மரணை தப்பியது சேர சேனாதிபதிக்கு. அவன் கால்கள் துவண்டன. மெள்ள மெள்ள தரையை நோக்கி

இறங்கினான், சாய்ந்தான். கிழவன் அடுத்து இதயகுமாரன்மீது தனது வெறிக்கண்களைத் திருப்பினான். மீண்டும் சிலை மீது கண்களை ஓடவிட்டான். சிலையைப் பார்த்தவன் சிலையாகவே ஆகிவிட்டான். ஸ்தம்பித்து நின்றுவிட்டான் பல விநாடிகள். பிறகு மண்டியிட்டு நரைத்ததலையால் தரையைத் தொட்டு வணங்கினான்.

இதயகுமாரனும் இளவரசியும் சிலையை நோக்கினார்கள். சிலைக்கு இருபுறத்திலும் இரத்தினக் கொல்லரும், இதய குமாரனை முதலில் அறிமுகப்படுத்திய அந்தப் புதிய மனிதரும் நின்றிருந்தார்கள்.

''அவன் இறந்துவிட்டானா?'' என்று கவலையுடன் கேட்டார் அந்த மனிதர்.

''இல்லை மன்னவா. மூர்ச்சையடைந்திருக்கிறான்'' என்றான் கிழ வெறியன்.

அவரை ''மன்னவா!'' என்று கிழவன் அழைத்ததும் அரசகுமாரி சட்டென்று அவரை ஏறெடுத்து நோக்கினாள் தனது விழிகளால். அவரை வணங்குமாறு இதயகுமாரன் இரத்தினக்கொல்லன் அறையில் தனக்கு ஆணையிட்டது அப்பொழுது அவள் நினைவுக்கு வரவே ''இவர் யார்?'' எந்த நாட்டு மன்னர்?'' என்று வினவிக்கொண்டாள் தனக்குள்.

அவள் முகத்தில் விரிந்த குழப்பத்தை அச்சுதக்கொல்லர் கவனித்தார். ''குழந்தாய்! நாம் இப்பொழுது தமிழக வரலாற்றின் முக்கியப் பகுதியின் வாயிலில் நிற்கிறோம். உன்னைச் சூழ்ந்துள்ள பெரிய மர்மம் இன்று இந்த அறையில் அவிழ்க்கப்படுகிறது'' என்றார் உணர்ச்சி மிகுந்த குரலில். ''நீ சேரன் புதல்வியல்ல'' என்று தமது கதையைத் தொடங்கினார்.

# 8. பழைய கதை! புதிய நிலை

விடியற்காலை முதல் விடுவிடு என்று நடந்துவிட்ட பற்பல நிகழ்ச்சிகளால் பெரிதும் குழம்பிக் கிடந்த சிந்தையுடன் அந்த சிங்கார சிற்றறையில் சித்திரப்பாவையென நின்றுவிட்ட அரசகுமாரி ''நீ சேரன் புதல்வியல்ல'' என்று இரத்தினக் கொல்லர் கதையைத் துவங்கியதும், அதுவரை இருந்த குழப்பத்தையெல்லாம் உதறிக்கொண்டு நிமிர்ந்து நின்றாள். அவள் ஒவ்வொரு அங்கத்திலும் அரச தோரணை ஒளிவீச, அவள் கண்கள் தனது எதிரே நின்ற மூன்று உருவங்களையும் அதிகார தோரணையிலேயே அளவெடுத்தன. தன்னை உரித்து வைத்தது போன்ற அழகுச்சிலை மீதும், அவள் இருபுறத்திலும் அவள் மெய்காவலர்கள் போல் நின்றிருந்த இரத்தினக் கொல்லர் மீதும், மன்னரென்று வெறிபிடித்த கிழவனால் அழைக்கப்பட்ட அந்தப் புதிய மனிதர் மீதும் தனது அழகிய விழிகளை நாட்டினாள். தங்கள் முகங்களில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் நடுவிலிருந்த சிலையைப் போலவே அந்த இருவரும் நின்றிருந்தது பெருவியப்பாக இருந்தது வஞ்சி நகர்ச் செல்விக்கு. அப்படி உணர்ச்சியற்ற பார்வையுடைய அந்த மூன்று சிலைகளில் இரத்தினக் கொல்லருக்கு அடுத்தபடியாக அந்தப் புதுமனிதரே வாய்திறந்து பேசினார். அப்படிப் பேசியபோதும் நின்ற இடத்திலிருந்து நகராமலும் இமைகளைக்கூட அசைக்காமலும், உதடுகளைத் திறந்தாரா இல்லையா என்று சந்தேகப்படும்படியாக லேசாகத் திறந்த உதடுகளால் மிக மெதுவாகப் பேச முற்பட்ட அந்தப் புதுமனிதர், ''செல்வி! உன்னைப்பற்றி நான் பெருமையடைகிறேன். இன்று காலை முதல் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் சித்தம் சிதறிக் கிடக்கும் நிலையிலும் உன்

தோரணையை நீ குறைத்துக் கொள்ளவில்லை. அதுவே பிறப்புக்குச் சரியான சான்றாகும். இருப்பினும் இரத்தினக் கொல்லர் திடீரென விஷயத்தை உடைத்திருக்க வேண்டாம். மெல்ல மெல்லச் சொல்லியிருக்கலாம்'' என்று சொன்னார்.

அரசகுமாரி அதற்கு உடனடியாகப் பதிலேதும் சொல்லவில்லை. அவர்களுக்கு எதிரே மண்டியிட்டு வெள்ளை மயிரெல்லாம் தரையைத் தொட தலைவணங்கியது வணங்கியபடி இருந்த அந்த கிழவெறியனைப் பார்த்தாள். மயக்கமுற்று தரையில் சாய்ந்து கிடந்த இளையவேளைப் பார்த்தாள். கையில் காயத்திலிருந்து சொட்டிய ரத்தகசிவைத் தனது அங்கியின் முனையொன்றால் துடைத்து அழுத்திவிட்டு மீண்டும் சர்வ சாதாரணமாகக் கையில் அந்தப் பழைய மோகனச்சிலையை ஏந்தி நின்ற இதயகுமாரனைப் பார்த்தாள். இத்தனையும் பார்த்து பழையபடி உயிருள்ளது போல் தன்னை நோக்கிக் கொண்டிருந்த அந்த அழகுச் சிலையையும் பார்த்தாள். அதன் அழகிய விழிகளில் ஏதோ ஒரு புத்தொளி பிறந்தது போன்ற பிரமை அரசகுமாரிக்கு ஏற்படவே அவள் தன்னை மேலும் திடப்படுத்திக் கொண்டு இரத்தினக் கொல்லர் மீது முடிவாகத் தனது கண்களைப் பதியவிட்டு ''அச்சுதரே! இவர் எந்த நாட்டு மன்னர்?'' என்று வினவினாள்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அச்சுதக் கொல்லர் பதில் சொல்லத் தயங்கினார். பதில் சொன்னபோதும் அவர் குரலில் சிறிது தயக்கம் இருந்தது. ''இவர் எந்த நாட்டு மன்னர் என்று அறிந்துகொள்வதைவிட இவருக்கும் உனக்கும் என்ன சம்பந்தம் என்பதைத் தெரிந்து கொள்வதால் பயனுண்டு'' என்றார் அச்சுதக் கொல்லர்.

''அதையும் தெரிந்து கொள்ள ஆசைதான். அதை மட்டுமல்ல, பிறநாட்டு அரசர் ஓசைப்படாமல் இன்னொரு நாட்டில் திருட்டுத்தனமாக நுழைய வேண்டிய அவசியமென்ன என்பதையும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இவருக்கு



முன்னோடியாக இவர் (இந்த இடத்தில் இதயகுமாரனைச் சுட்டிக்காட்டினாள் அரசகுமாரி) இங்கு வந்து இல்லாத குழப்பத்தையெல்லாம் விளைவிக்க வேண்டிய காரணமென்னவென்பதையும் அறிய ஆசைப்படுகிறேன். தவிர, இரத்தினக் கொல்லரும், பெரிய வியாபாரியுமான தாங்கள் இத்தகைய சுரங்க அறைகளையும், நிலவறைச் சித்திர வேலைப்பாடுகளையும் செய்துகொண்டு அரசியலில் பெரும் பங்கு ஏற்றிருக்கும் விசித்திரம் எதனால் என்பதையும் உணர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்'' என்று நிதானமாக, பதட்டமேதுமில்லாமல் கேள்விகளை வீசினாள் அரசகுமாரி.

அவள் கேள்விகளின் தெளிவையும், கேள்விகளை வீசியபோது நிதானித்துவிட்ட அவள் உணர்ச்சிகளையும், கண்களில் தெரிந்த அந்தப் பெரும் தோரணையையும் கவனிக்கவே செய்த இரத்தினக் கொல்லர், ''அரசகுமாரி! உன் கேள்விகள் அனைத்துக்கும் என்னால் பதில் கூற முடியும். அதற்கு முன்பாக நீ அறியவேண்டிய விஷயம் முக்கியமாக ஒன்றிருக்கிறது. விஜயாலயச் சோழதேவர் எங்கும் திருட்டுத்தனமாக நுழைய வேண்டிய அவசியமில்லையென்பதை தமிழகம் அறியும்[1]. பல்லவரிடம் சிற்றரசராகவும் படைத்தலைவராகவும் இருந்தபோதிலும் விஜயாலயர் பல்லவர்களாலேயே[2] பரகேசரி என்று மரியாதையாக அழைக்கப்படுகிறார் என்பதை நீ உணர்ந்தால் அவரைப் பற்றிய உன் கேள்விக்கு அவசியமிருந்திருக்காது'' என்று உணர்ச்சியுடன் ஒரு மர்மத்தை உடைத்தார் இரத்தினக்கொல்லர் அச்சுதர்.

அப்படி இரத்தினக்கொல்லர் மர்மத்தை உடைத்ததால் மனம் நெகிழவில்லை அரசகுமாரி. ''சோழநாடு என்று ஒரு

1. The Cholas– By K.A. Nilakanta Sastri–Page 112.
2. Antiquities of India–By L.D. Barnett–Chola Vijayalaya Parakesarivarman'-Page 63.

நாடு இப்பொழுது இருக்கிறதா?'' என்று இகழ்ச்சியுடன் கேட்கவே செய்தாள்.

அதுவரை மண்டியிட்டு வணங்கியிருந்த அந்தக் கிழவெறியன் எழுந்திருந்து தனது கூன் உடலையும் நிமிர்த்தினான் சிறிது. ''பெண்ணே! நீ அரகுமாரியாயிருக்கலாம். ஆனால், உன் பெண்புத்தி போகவில்லை. ஒரு பெரிய அரசை உருவாக்கிவரும் விஜயாலயச் சோழதேவரை அவமதிக்க சோழநாடு உண்டா என்று கேட்கிறாய்? சோழநாடு என்றும் அழிந்ததில்லை. இனியும் அழியாது. நம் கண்ணில் படாததெல்லாம் அழிந்ததாகாது. ஆத்மா கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அது அழிகிறதா? நீ சோழன் மகள். அது உன் மனக்கண்ணுக்குப் புரிந்துவிட்டதா? இல்லை புறக்கண்ணுக்குத்தான் பார்த்தவுடன் தெரிந்து விட்டதா?'' என்று தனது வெறிபிடித்த குரலில் கூறி, ''அதோ நிற்கிறது சோழ நாட்டின் உயிர், சோழ நாட்டின் ஆத்மா, உன் தந்தை'' என்று விஜயாலயனைச் சுட்டிக்காட்டினான். இடையே சிறிது நகைத்தான் வெறிபிடித்து. ''உம்! உன் பாட்டியையே அறியாதவள் தந்தையை எப்படி அறியப்போகிறாய்? அவளை நான் சமைத்தேன் இந்த இரு கைகளால். நினைப்பிலிருந்து சமைத்தேன். சில சமயங்களில் நீ இந்த வஞ்சிமாநகரில் பவனிவரும்போது உன்னைப் பார்த்துச் செதுக்கினேன் அந்தச் சிலையை. அவள்தான் இந்த மகா புருஷனை, உன் தந்தையை ஈன்றவள். அவளுக்கும் உனக்கும் எந்தவித வித்தியாசமுமில்லை. ராஜமாதாவின் கண்களைப் பார். நன்றாகப் பார் உற்றுப் பார்'' என்று வெறிகலந்த சொற்களைக் கொட்டினான்.

அரசகுமாரி அதிர்ச்சியடைந்து நின்றாள் பல விநாடிகள். பிறகு தலையை ஏறெடுத்து இரத்தினக்கொல்லரை நோக்கினாள். ''இவர் சொல்வது...?'' என்று தட்டுத்தடுமாறிக் கேட்கவும் செய்தாள்.



இரத்தினக்கொல்லர் தலையை அசைத்தார் ஆமோதிப்பதற்கு அறிகுறியாக. ''மாரவேள் வாயில் பொய் வராது. வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு விபத்தால் சிறிது சித்தக் குழப்பம் இருக்கிறது. ஆனால், அவர் கையில் உறையும் சித்திரக்கலையும் சிற்பக்கலையும் என்றும் பழுதுபட்டது கிடையாது. இந்த அறையிலும் இதற்கு வெளியேயுள்ள பெரிய அறையிலும் அவர் சிருஷ்டிகளையே பார்க்கிறோம். இந்த சகாப்தத்தில் இவரைவிடச் சிறந்த வண்ணச் சிற்பியோ ஓவியரோ கிடையாது. சங்ககாலத்து சம்பிரதாயக் கலை இன்று இவர் ஒருவரிடந்தானிருக்கிறது. இவரை நம்பாதவர் இந்த தமிழகத்தில் யாருமில்லை. புதிதாக யாராவது ஏற்பட்டால் தானுண்டு'' என்றார் இரத்தினக்கொல்லர்.

அரசகுமாரிக்கு ஏதோ சொப்பனத்திலிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. ஆகவே விஜயாலயனையே நோக்கி வினவினாள். ''நீங்கள் என் தந்தை என்றால் இத்தனை நாள் ஏன் என்னைத் தேடவில்லை, அழைத்துப்போகவில்லை?'' என்று.

விஜயாலயன் மெள்ள நடந்து வந்தான் அரசகுமாரியை நோக்கி. மெள்ளத் தனது வலது கையை அவள் தோள்மீதும் வைத்தார் ஆதரவாக. ''கண்ணழகி!'' என்று மெதுவாக அரசகுமாரியைச் செல்லமாக அழைக்கவும் செய்தான்.

அரசகுமாரியின் உடல் விஜயாலயன் கை பட்டவுடனேயே சிறிது சிலிர்த்தது. அவன் அவளைப் பெயர் சொல்லி அழைத்ததும் அவள் உடலில் அன்றுவரை ஏற்படாத உணர்ச்சிகள் ஊடுருவிச் சென்றன. ''என் பெயர் ரஞ்சனி'' என்று தழுதழுத்த குரலில் சொன்னாள் அரசகுமாரி.

விஜயாலயன் இதழ்களில் மெள்ள இளநகை அரும்பிற்று. ''குழந்தாய்! அது சேரமன்னன் அளித்த பெயர். உன் உண்மைப் பெயர் கண்ணழகி. இந்தப் பெயரை வைப்பதில் எனக்கும்

உன் தாயாருக்கும் எத்தனை விவாதம் நடந்தது தெரியுமா? உனக்கெங்கே தெரியப் போகிறது? நீ சிறு குழந்தை'' என்ற விஜயாலயன் குரலில் உணர்ச்சி மிகுந்து கிடந்தது.

அரசகுமாரியின் தலை சுற்றும் ஸ்திதிக்கு வந்துவிட்டது. ''ஏதேதோ சொல்கிறீர்கள். எனக்கு ஏதுமே புரியவில்லை'' என்று கூறிக் கண்களை மூடினாள். விஜயாலயன் அவளைத் தாங்கிப் பிடித்து அணைத்துக் கொண்டான். பிறகு லேசாகத் தனது கைகளில் தூக்கிக்கொண்டு ''அச்சுதரே! வாரும் அடுத்த அறைக்குச் செல்வோம்'' என்று கூறி இடையிலிருந்த கதவைத் திறந்துகொண்டு அந்தப் பெரிய சித்திரச் சாலைக்குச் சென்று அங்கிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து மகளைத் தன் மடியில் கிடத்திக்கொண்டான். அவளைப் பின்பற்றி அதிவேகமாக வந்த வெறிபிடித்த மாரவேள் சித்திரச்சாலையின் ஒரு மூலையிலிருந்த மண்பாண்டத்திலிருந்து குளிர்ந்தநீரைக் கையில் ஏந்தி வந்து அரசகுமாரியின் முகத்தில் தெளித்தான். அரசகுமாரி மெள்ள மெள்ளக் கண்களைத் திறந்தாள். தான் விஜயாலயன் மடியிலிருப்பதையும், அச்சுதக் கொல்லரும், வெறிபிடித்த சிற்பியும், இதயகுமாரனும் தன்னை உற்று நோக்கிக் கொண்டிருப்பதையும் பார்த்தாள். தனது முகத்தில் நீர் தெளிக்கப்பட்டிருப்பதையும், சோழ மன்னன் தமது வலது கையால் மெள்ளத் தனது கண்களைத் துடைப்பதையும் உணர்ந்ததால் ஓரளவு வெட்கமும் கொண்டாள். அப்படி ஏற்பட்ட நாணத்தால், ''அதிகமாக உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். அதனால்....'' என்ற அவள் சொற்களை இடையில் வெட்டிய இரத்தினக் கொல்லர் ''மயக்கமாகிவிட்டீர்கள். அதுவும் ஒருவிதத்துக்கு நல்லதுதான். உங்கள் தந்தையே உங்களைத் தாங்கி வந்திருக்கிறார். சின்னஞ்சிறு குழந்தையாக அவர் மடியில் நீங்கள் கிடந்தது நினைப்பில்லாதிருக்கலாம். ஆனால், இப்பொழுது தந்தையின் மடியில் இருக்கிறீர்கள்'' என்று கூறினார். அவர் குரலில் மகிழ்ச்சி மண்டிக் கிடந்தது.



''ஆனால், அரசகுமாரி! இதில் ஒரு சங்கடமும் இருக்கிறது'' என்றும் கூறினார் அச்சுதர்.

''என்ன சங்கடம் அச்சுதரே?'' என்றாள் அரசகுமாரி மெதுவான குரலில்.

''உங்கள் மர்மத்தை அவிழ்க்க நான் தொடங்கினேன் கதையை. அதை மாரவேள் தொடர்ந்து விடுகதையாக்கி விடையும் கூறிவிட்டார். ஆனால், உங்கள் கதை இத்துடன் முடியவில்லை...'' என்று மையமாக சொற்களைத் தேக்கி அவளை ஊகிக்க விட்டார்.

அரசகுமாரியின் முகத்தில் மீண்டும் சிந்தனை படர்ந்தது. தந்தையின் மடியிலிருந்து மெள்ள எழுந்து நின்றாள். ''இன்னும் இருக்கிறதா என் கதை?'' என்று வினவினாள், தனது அழகிய கண்களைத் தந்தையை நோக்கித் திருப்பினாள்.

''இருக்கிறது மகளே! அது பெருங்கதை. ஆனால், சுருக்கமாகச் சொல்கிறேன் கேள். எங்கள் மூதாதையரான கரிகால் வளவன் காலத்தில் பேரரசாக கிழக்கிலும் மேற்கிலும் கடலுக்கு அப்பாலும் விரிந்து, பெரும் வணிகத்துடன் செல்வாக்குடனுமிருந்த சோழ சாம்ராஜ்யம் அடுத்த இரண்டு தலைமுறைகளில் பெரிதும் குறைந்துவிட்டது. குறைந்ததே தவிர அழியவில்லை. எப்படிக் கடல்கோளால் புகார் முற்றும் அழியவில்லையோ அப்படியே சோழர் குலமும் சோழ அரசும் அழியவில்லை. தமிழ்நாட்டைக் கலங்கவைத்த களப்பிரர் ஆட்சியின் முந்நூறு ஆண்டுகளில் மறைந்திருந்தது சோழர் ஆட்சி தமிழகத்தில். ஆனால், சோழர்கள் சிலர் இங்கிருந்து புறப்பட்டு வடக்கே ஆந்திரத்துக்குச் சென்று அங்குள்ள ரேநாடு என்ற பகுதியில் சோழ அரசை நிறுவினார்கள். களப்பிரரை வென்ற பாண்டிய கடுங்கோனும் பல்லவசிம்ம விஷ்ணுவும் தங்களுக்குள் தமிழகத்தைப் பங்குபோட்டுக் கொண்டார்கள். இத்தனை களேபரங்களுக்கும் வேறு எந்தக்

குலமும் மண்ணோடு மண்ணாகியிருக்கும். ஆனால், சோழர் குலமும் அரசும் மறையவில்லை. நீறுபூத்த நெருப்பாக இங்கேயே, உறையூரிலேயே இருந்து வந்தது. அந்த நீறு இப்பொழுது ஊதப்படுகிறது. இனி மீண்டும் சோழர்கள் வீராக்கினி எதிரிகளைத் தகிக்கும், தமிழகத்தைக் குளிரச் செய்யும். அப்படி சோழர்குலம் மறையாதிருக்க இளஞ்சேட் சென்னி ஏற்பாடு செய்துவிட்டுப் போனார். சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு அவர் வைத்து விட்டுப்போன சொத்து சோழர் குலத்தைப் பாதுகாத்து வருகிறது..'' இந்த இடத்தில் விஜயாலயன் சிறிது நிதானித்தான்.

''அந்த சொத்துதான் மோகனச்சிலை'' என்று வாசகத்தை முடித்தார் இரத்தினக்கொல்லர். ''அதைப் பாதுகாக்கத்தான் இத்தனை நாள் பாடுபட்டேன்'' என்று கூறி இதயகுமாரன் கையிலிருந்த தந்தச் சிலையைச் சுட்டிகாட்டினார். அரசகுமாரி அந்தத் தந்தச்சிலையை மீண்டும் நோக்கினாள். ''இது.... இது..'' என்று ஏதோ கேட்டாள்.

''இளஞ்சேட் சென்னியால் யானையின் முழு தந்தத்தால் செய்யப்பட்டது. இளஞ்சேட் சென்னி அழகுமிக்க தேர்களைச் செய்யும் சிற்பி என்பதை வரலாறு அறியும். அப்படிச் செய்த தேர்களில் ஒன்றில் இந்த மாதிரி ஒரு சிலையையும் அமைத்தார். அவர் இறக்கும்போது சொன்னார், ''போரில் தேர் உடைந்தாலும் இந்தச் சிலை உடையாது. இதைக்கொண்டு என் மகன் சக்கரவர்த்தியாவான்'' என்று. அதைப் பிற்காலத்தில் இரும்பிடர்த்தலையார் சொல்லக்கேட்டு கரிகால் வளவன் மிகப் பத்திரமாக இந்தச் சிலையைப் பாதுகாத்து குலச் சொத்தாக்கினார். காலவெள்ளம், சரித்திரத்தின் சதிகள் இதை வஞ்சிக்குக் கொண்டு வந்தன. இதைப்பற்றி யாரும் அறியாதிருக்க நான்தான் இதை பாம்பு புற்றுள்ள மரத்தடியில் புதைத்து வைத்தேன். இப்பொழுது விதி மீண்டும் அதை சொத்துக்குடையவரிடம் சேர்த்து விட்டது'' என்ற அச்சுதர்



''சோழ ராஜகுமாரி! இனி நீங்கள் அரண்மனை செல்லலாம்'' என்றும் கூறினார்.

''அரசண்மனைக்கா'' என்று வியப்புடன் வினவிய வண்ணம் எழுந்திருந்தாள் அரசகுமாரி.

''ஆம்'' என்றார் அச்சுதர்.

''இவர், என் தந்தை, எப்படி வரமுடியும் அரண்மனைக்கு?'' என்று கேட்டாள் அரசகுமாரி அச்சுதனை நோக்கி.

''அவர் அரண்மனைக்கு அவர் போகத் தடை ஏது?'' என்று வினவினார் அச்சுதர்.

அந்தக் கேள்வியே அரசகுமாரியை அசரவைத்ததென்றால் விஜயாலயன் கேள்வி அவளைப் பெரும் பிரமைக்கு அடிமையாக்கியது. ''அச்சுதரே! இப்பொழுது நாழிகை எத்தனை?'' என்று வினவினான் விஜயாலயன்.

''உச்சிவேளை'' என்றார் அச்சுதர்.

அதைக் கேட்ட விஜயாலயன், ''மகளே! அரண்மனைக்குச் செல்வோம் வா'' என்று கூறி மஞ்சத்திலிருந்து தானும் எழுந்தார்.

அவள் தயங்கினாள். ''இந்த இல்லத்தைச் சுற்றியுள்ள வஞ்சிக்காவலர்?'' என்றும் வினவினாள் தயக்கத்துடன்.

விஜயாலயன் சர்வ சகஜமாகச் சொன்னார் ''சிறையிலிருப்பார்கள்'' என்று. அத்துடன் ''வஞ்சி என் கைவசமிருக்கிறது'' என்றார் ஏதோ சாதாரண விஷயத்தைச் சொல்வது போல.

அரசகுமாரி மோகனச்சிலையாகவே ஆகிவிட்டாள். அந்தச் சமயத்தில் அவளை எழுப்பவோ அரண்மனை முரசும் தூரி வாத்தியங்களும் பெரிதாக சப்தித்தன.

# 9. வஞ்சி நகர் வீழ்ந்த கதை

விஜயாலயச் சோழ தேவர் ''வஞ்சி என் கையிலிருக்கிறது' என்று சர்வ சாதாரணமாக அறிவித்து மகளை அரண்மனைக்கு வரும்படி அழைத்ததும் வஞ்சிநகர்ச் செல்வி அசந்தே போய் சிலையென நின்றாள் சில விநாடிகள். சோழ மன்னர் சொன்னதை உண்மையென்று நிரூபிக்க அரண்மனை வாத்யங்களும் முரசுகளும் முழங்கியதால் சுயநிலையைச் சிறிதளவு வரவழைத்துக்கொண்ட அரசகுமாரி, புதிதாக முளைத்திருக்கும் தந்தையை நோக்கி, ''இத்தனை விரைவில் வஞ்சியை எப்படிக் கைப்பற்றினீர்கள்?'' என்று வினவினாள்.

விஜயாலயன் இதழ்களில் இளநகை அரும்பிற்று. அவன் வலது கை மகளை ஆதரவுடன் தன்னிடம் இழுத்துக் கொண்டது. ''கைப்பற்றி சில நாட்களாகின்றன. அறிவிப்பதற்குத்தான் சமயம் பார்த்திருந்தேன்'' என்று கூறி பெண்ணின் தலையைத் தனது இடது கையால் கோதிவிட்டான்.

அவன் ஒவ்வொரு ஸ்பரிசமும் அரசகுமாரியின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடவே அவள் சிலிர்க்கும் உடலுடனும் துடிக்கும் உதடுகளுடனும் கேட்டாள். ''முன்பே பிடித்திருந்தால் இவரை ஏன் கோட்டைவாயில் காவலர்கள் தடுத்தார்கள், பிடிக்க முற்பட்டார்கள்?'' என்று சொல்லி இதயகுமாரனைச் சுட்டிக் காட்டினாள்.

''அப்பொழுது வஞ்சிநகர்க் கோட்டையும் அரண்மனையும் என் கைவசமில்லை. தவிர, இதயகுமாரனுக்கும் முழு விவரம் தெரியாது'' என்று விளக்கினான் விஜயாலயன்.

மேலும் ஏதோ கேட்க முற்பட்ட அரசகுமாரியைத் தடுத்த விஜயாலயன், ''மகளே! இங்கு நாம் நின்றுகொண்டே



யிருந்தால் உன்னை வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கும் சோழ வீரர்கள் பொறுமை இழப்பார்கள். தங்கள் அரசகுமாரியை உரிய நிலையில் பார்க்க அவர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்'' என்று அறிவித்து ''வா அரண்மனை செல்வோம்'' எனக் கூறிவிட்டு பழையபடி சுரங்கப்படிகளில் ஏறிச் சென்றான். அவனைத் தொடர்ந்து அரசகுமாரியும், அவளுக்குப் பின்னால் அச்சுதக் கொல்லரும் படிகளில் ஏறிச் சென்றார்கள்.

அவர்களைத் தொடராத இதயகுமாரன், ''மன்னவா'' என்று குரல் கொடுத்தான். உச்சிப்படி வரை ஏறிவிட்டசோழ மன்னன் திரும்பிப் பார்த்தான். ''என்ன இதயகுமாரா?'' என்று கேள்வியையும் வீசினான்.

''இளையவேளை என்ன செய்யட்டும்?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''அவனைச் சிறைசெய்ய வீரர்களை அனுப்புவோம். அதுவரை மாரவேள் அவனைக் கவனித்துக்கொள்வார்'' என்ற சோழமன்னர் மேற்படியிலிருந்த வண்ணம் கூறிவிட்டு கதவைத் திறந்துகொண்டு சென்றுவிட்டார்.

அரசகுமாரியும் அச்சுதக்கொல்லருங்கூட அவருடன் சென்றதும் மாரவேளை நோக்கிய இதயகுமாரன் ''பெரியவரே! இளையவேள் வாலிபன். தாங்கள் வயோதிகர்'' என்று நிலைமையைச் சுட்டிக் காட்டினான்.

மாரவேள் பழையபடி பயங்கரமாகச் சிரித்தார். ''வாலிபன் நிலை எப்படியிருக்கிறது பார்ப்போம் வா'' என்று சிரிப்பின் ஊடே கூறிக்கொண்டு அடுத்த அறைக்கு இதய குமாரனை அழைத்துச் சென்றார்.

அந்த அறையில் எந்த நிலையில், எந்த மயக்கத்தில் விடப்பட்டானோ அதே நிலையில் தரையில் சாய்ந்து

கிடந்தான் இளையவேள். அவன் முன்பாக மண்டியிட்டு அவன் கண்களைத் திறக்க முற்பட்டான் இதயகுமாரன். ஆனால், அது சாத்தியமற்றதாயிற்று. இரு விரல்களால் இதயகுமாரன் அவன் கண்களை இரு முறை திறந்தாலும் அவன் பஞ்சடைந்த கண்களை இமைகள் மீண்டும் மூடிக் கொள்ளவே செய்தன. தலையை ஒருமுறை திருப்பிப் பார்த்தான் இதயகுமாரன். இளையவேளின் தலை துவண்டு விழுந்தது மறுபுறம். ''மாரவேள்! தங்கள் பிடி மரணப் பிடி போலிருக்கிறது. அவன் இதிலிருந்து விழிப்பானா அல்லது...'' என்று கேட்ட இதயகுமாரன் வாசகத்தை முடிக்கவில்லை.

''விழிப்பான். ஆனால், விழிக்க இன்னும் அரை நாள் வேண்டும். குரல்வளையின் இருபுறங்களிலும் ஓடும் ரத்தக் குழாயைப் பிடித்தேன். அது கொடுத்துள்ள மயக்கம் தீருவதற்கு நேரமாகும். தூக்குப் போடுவதும் இதே முறைதான். அங்கு கயிறு கழுத்தை இறுக்குகிறது. இங்கு கை இறுக்கிவிட்டது. அங்கு சாகவிடுகிறார்கள். இங்கு நான் அத்தனை தூரம் போகவில்லை. இவனை எப்படியும் பிழைக்க வைத்துவிடுகிறேன். பயப்படாதே'' என்று தைரியம் சொன்னார் மாரவேள்.

''இவன் முகத்தில் நீரடித்துப் பார்ப்போமா?'' என்று வினவினான் சோழநாட்டு வாலிபன்.

''நீருக்குத்தான் நஷ்டம். இவன் அப்படி சுலபத்தில் எழுந்திருக்க மாட்டான். அவனை நானே எழுப்புகிறேன் மாலையில். நீ போய் வா'' என்று விடைகொடுத்தார் மாரவேள்.

அதற்குமேல் அங்கு நிற்காமல் படிகளில் ஏறிச் சென்றான் இதயகுமாரன், அச்சுதக்கொல்லர் பட்டறைக்கு வந்து கதவைத் திறந்து கொண்டு அவர் இல்லத்துக்கு வெளியே வந்ததும், விட்ட இடத்திலேயே நின்றிருந்த விஜயன் அவனைப் பார்த்ததும் பல்லைக் காட்டிநகைத்தது. அருகில் வந்து வாயால் அவன் கன்னத்தைத் தடவவும்



செய்தது. விஜயன் கழுத்தைக் கட்டிக்கொண்ட இதயகுமாரன் ''விஜயா! ஆண் ஆணை முத்தமிடக்கூடாது. நீ அரசகுமாரியை முத்தமிட்டிருக்க வேண்டும். அவள் கன்னம் எத்தனை அழகாயிருக்கிறது பார்த்தாயா?'' என்று அதன் காதில் ஓதினான். பிறகு அதன்மீது ஏறிக்கொண்டு கடிவாளத்தைப் பிடிக்கவே விஜயன் ராஜநடை போட்டது அரண்மனையை நோக்கி.

அரண்மனைக்குச் செல்லும் ராஜவீதியில் மலர்கள் நிரம்பத் தூவப்பட்டிருந்ததால் அவற்றை மிதித்துக் கொண்டு சென்றது விஜயன். எட்டத் தெரிந்த அரண்மனையின் தங்க விதானத்தில் சோழர்களின் புலிக்கொடி மிகக் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்ததையும், சோழவீரர்கள் எங்கும் காவல் புரிந்து கொண்டிருந்ததையும் இதயகுமாரன் கவனித்தான். ''இன்று காலையில் அவர்களெல்லாம் எங்கிருந்தார்கள்?'' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான் சோழநாட்டு வாலிபன். இத்தனை ஏற்பாடுகளை முன்னதாகச் செய்துவிட்ட சோழதேவர் தனக்கு எதையும் சொல்லாமல் எதற்காக அனுப்பிவைத்தார் என்றும் எண்ணிப்பார்த்தான். இத்தனை சோழ வீரர்கள் இங்கிருப்பதை சேரநாட்டு வீரர்கள் எப்படி உணராதிருந்தார்கள் என்றும் தன்னைக் கேள்வி கேட்டுக் கொண்டான். வஞ்சிக்குப் போனதும் இரத்தினக்கொல்லர் அச்சுதர் வீட்டுக்குப் போ என்று மன்னர் உத்தரவு பிறப்பித்தாரே, அது எதற்கு? ஒரு நகரத்தைப் பிடிப்பதற்கும், இரத்தினக்கொல்லர் இல்லத்திற்குப் போவதற்கும் என்ன சம்பந்தம்? அது கிடக்கட்டும். இந்த இரத்தினக்கொல்லர் உண்மையில் யார்?'' என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டான்.

அந்த மர்மத்தை அதே நேரத்தில் விஜயாலயன், சேரன் அரண்மனையில் அவிழ்த்துக் கொண்டிருந்தான். புதிதாக முளைத்த தந்தையுடன் இரத்தினக் கொல்லர் இல்லத்திலிருந்து கிளம்பிய அரசகுமாரி, வெளியே வந்ததும் நினைக்கவும் முடியாத மாற்றங்களைக் கண்டாள். தூரத்தே அரண்மனையின்

தலையில் சோழர் புலிக்கொடி பறப்பதைக் கண்டாள். அவள் விஜயாலயனுடன் வெளியே வந்ததும் ''பரகேசரிவர்மர் வாழ்க! அரசகுமாரி வாழ்க!'' என்ற வாழ்த்துக் குரல்கள் வெளியே குழுமியிருந்த பெரும் கூட்டத்திலிருந்து எழுந்தது. அந்தக் கூட்டமும் அணிவகுத்து நின்றிருந்ததையும், அவர்கள் இல்லத்தின் படிகளில் இறங்கி வந்ததும் சோழ தேவருக்கும் தனக்கும் தனியாக இரு குதிரைகள் சேணங்கள் போடப் பட்டுத் தயாராக நிறுத்தப்பட்டிருந்ததையும் கவனித்தாள்.

காவலர் வாழ்த்துக் கூறி வழிவிட, அக்கம்பக்கத்துக் கட்டிடங்களின் மாடிகளிலிருந்து மங்கையர் மலர்தூவ, அரசரை அடுத்துப் புரவியில் அரசகுமாரி ஏறியதும், ஊர்வலம் நகர்ந்தது. முன்னால் சோழதேவரும் சோழர் செல்வியும் செல்ல, பின்னால் இரத்தினக்கொல்லர் படாடோபடமாக அலங்கரிக்கப்பட்ட தங்கக் கடிவாளமுள்ள புரவியின் சேணத்தைக் கையில் பிடித்து ஏறிப் பின்தொடர, எங்கும் காவலர் பாதுகாக்க, ஊர்வலம் மெதுவாகச் சென்றது. அதுவரை சேரமன்னர் அங்கு வந்த சமயங்களில்கூடக் காணாத கோலாகலமும் கட்டுப்பாடான ஏற்பாடும், எதிலும் ஒரு நிர்ணயமும் இருந்ததைக் கவனித்துக் கொண்டே அரசகுமாரி சென்றாள். அரண்மனையை அடைந்ததும் அவள் பணிப்பெண்கள் சோழதேவருக்கும் அவளுக்கும் மங்கல ஆரத்தி எடுத்தார்கள். மகளுடன் சேரன் அரண்மனையில் விஜயாலயச் சோழதேவர் புகுந்ததும் மங்கலவாத்யங்கள் இன்பமாக முழங்கின.

விஜயாலயன் அந்த அரண்மனையை முன்னரே பார்த்தவன் போல் நுழைந்தான். நேராகத் தனது அந்தரங்க அறைக்குச் சென்றான் மகளுடன். பின்னால் வந்த அச்சுத கொல்லரைத் தவிர, மற்றவர்களைப் போகும்படி கையால் சைகை செய்த விஜயாலயன் அரண்மனை அந்தரங்க அறையிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தான் கம்பீரமாக. மகளை



அருகிலிருந்த மஞ்சத்தில் உட்கார வைத்துக் கொண்டான். ''மகளே! உன் கதையை நீ கேட்கும் காலம் வந்துவிட்டது. ஆகையால் சொல்கிறேள்'' என்று துவங்கிய விஜயாலயன், ''அதற்கு முன்பாக இந்த இரத்தினக் கொல்லரையும் நீ யாரென்று தெரிந்து கொள்ள வேண்டும். இவர் வெறும் இரத்தினக் கொல்லர் மட்டுமல்ல, பெரிய ராஜதந்திரி. எனது முதல் அமைச்சர். அச்சுதப் பேரறையர் என்று சோழ நாட்டில் இவரை மிகுந்த மரியாதையுடன் அழைக்கிறார்கள். இவர் இந்தக் காலத்து சாணக்கியன்'' என்று அச்சுதரை அறிமுகப் படுத்தினான்.

அரசகுமாரியின் கண்கள் அச்சுதரை வியப்புடன் நோக்கின. ''இத்தனை நாள் இது எனக்குத் தெரியாதே. ஆனால், இவர் எப்படிக் கொல்லரானார்?'' என்று விசாரித்தாள்.

''இவருக்கு அந்தக் கலையும் தெரியும். இரத்தினத்தில் இவருக்கு எப்பொழுதுமே பெரிய பைத்தியமுண்டு. உறையூர் பெரிய கொல்லர் இவருடைய இணைபிரியா நண்பர். அவரிடம் இந்தக் கலையைக் கற்றார். அது இப்பொழுது எப்படி உபயோகப்பட்டது பார். திடீரென வஞ்சி என் கைவசமாயிற்று. இந்த வஞ்சியைக் கைப்பற்றும் திட்டத்தை வகுத்தவர் இவர்தான். முதன்முதலில் இவர் வந்து இங்கு குடியேறினார் இரத்தினக் கொல்லராக. பல பணியாட்களை வைத்துக் கொண்டார் நகைகளைத் திறமையுடன் செய்ய. பல நாட்டு முத்துக்களையும் வைரங்களையும் வாங்கிக் குவித்துக் கொண்டார். அதைப் பத்திரப்படுத்த கொல்லர் வீதியிலிருந்த அந்தப் பெரிய மாளிகையையும் வாங்கினார். எந்த நகை வணிகரிடமும் நிலவறைகள் உண்டு. போர்க் காலத்தில் பொன்னையும் மணியையும் ஒளித்து வைக்க. அத்தகைய நிலவறை இந்த மாளிகையிலும் இருந்ததால் அதைச் செம்மைப் படுத்தினார், விரிவு படுத்தினார். பிறகு மெள்ள மெள்ள சோழ நாட்டு வீரர்களைப் பற்பல வணிகத் துறைகளில் ஈடுபடுத்தி

னார். சோழ நாட்டு வீரர்கள் பல துறைகளில் இங்கு பங்கு
கொண்டார்கள். அதற்கு முன்புதான் இணையற்ற கலைஞரான
மாரவேளையும் இவர் இங்கு அழைத்துக் கொண்டார், தமது
மாளிகையை அழகுபடுத்த. ஆனால், மாரவேள் இங்கு வந்த
போது வேறொரு பணியையும் மனத்தில் வைத்துக் கொண்டு
வந்தார். 'உன் தாயின் சிலையையும் மெள்ள மெள்ள வடித்தார்
இரத்தினக் கொல்லர் வசமிருந்த மோகனச்சிலையிலிருந்து.
மாரவேளும் அச்சுதருமாகச் சேர்ந்து சுமார் ஒராண்டு காலத்தில்
இந்த வஞ்சியை சோழ வீரர்களால் நிரப்பினார்கள். எந்த
சமயத்தில் இதில் நான் பிரவேசிக்க வேண்டுமோ அதையும்
நிர்ணயித்தார்கள். திட்டமிட்டபடி, நாழிகைப்படி இந்த வஞ்சி
கைப்பற்றப்பட்டது. இதன் கோட்டை, கொத்தளம் அத்தனை
யும் இப்பொழுது என் கைவசமிருக்கிறது. அதுமட்டுமல்ல,
எல்லா இரத்தினங்களுக்கும் மேலான நீயும் கிடைத்திருக்
கிறாய்'' என்று விளக்கினான் விஜயாலயன். அத்துடன்
சொன்னான் ''சாணக்கியன் நவநந்தர்களின் தலைநகரத்துக்
குள்ளும் இப்படித்தான் தனது சீடர்களை முதலில் அனுப்பி
அதைக் கைப்பற்றினான்'' என்று.

ஏதோ சொப்பனத்தில் கேட்பது போல் அக்கதையைக்
கேட்ட அரசகுமாரி, ''நான் எப்படி இங்கு வந்தேன்? எப்படி
சேரநாட்டு அரசகுமாரியானேன்?'' என்று வினவினாள்.

அதைக் கேட்ட விஜயாலயன் முகத்தில் துயரம்
படர்ந்தது. கம்பீரமான கண்களில் சீற்றம் பிறந்தது. ''அது ஒரு
பயங்கரக் கதை'' என்று அதையும் விவரிக்கத் தொடங்கினான்.
அவன் துவங்கு முன்பு இன்னொரு கேள்வியையும் வீசினாள்
அரசகுமாரி, ''என் தாய் எங்கே?'' என்று.

விஜயாலயன் ஆசனத்தை விட்டு எழுந்தான். ஒரு விநாடி
அவன் பதில் சொல்லவில்லை, உணர்ச்சிகள் உள்ளத்தே சுழன்ற
தால், அடுத்த விநாடி உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான்.



''இறந்துவிட்டாள், கொல்லப் பட்டாள்'' என்று வறண்ட
குரலில் அறிவித்தான். ''இப்பொழுது முழுக்கதையையும்
கேள். கேட்டபின் கலங்காதே. உன்னால்தான் அவள்
இறந்தாள்'' என்றும் சொன்னான்!

''என்னை ஈன்றபோதா?'' அரசகுமாரியின் குரல்
நடுங்கியது.

''இல்லை.''

''அப்படியானால்?''

விஜயாலயன் கண்களில் கோபம் துளிர்த்தது. ''சொல்
வதைக் கேள். குறுக்கிடாதே'' என்று அவன் சொற்களிலும்
சினம் இருந்தது.

# 10. கண்ணழகி

தாயைப் பற்றிக் கேட்டதும் தந்தை ஏன் அப்படிச் சினத்தின் வசப்பட்டார் என்று சிந்தித்த அரசகுமாரி அடுத்து மௌனமே சாதித்தாள் கேள்வியொன்றும் கேட்காமல். திடீரென்று கண்களில் தோன்றிய சினத்தையும் விஜயாலயன் விநாடி நேரத்தில் மறைத்துக் கொண்டு அன்பு ததும்பும் கண்களுடன் தனது மகளை நோக்கினான்.

''குழந்தாய்! ஏற்கனவே ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் சிறிது நிதானம் தவறிவிட்டேன். உன் அன்னையை நினைக்கும் பொழுதெல்லாம் இத்தகைய நிலைக்கு நான் வந்து விடுகிறேன். ஏனென்றால், உன் அன்னையைப் போல் சிறப்பாக வாழ்ந்த வளும் இல்லை. பயங்கரமாக வீழ்ந்தவளும் இல்லை. உறையூர் அரண்மனைக்கும் நகரத்துக்கும் ஒரு தீபம் போல் இருந்தாள் உன் அன்னை. அவளைப் போன்ற அழகிகள் யாருமில்லை யென்பது பல்லவ ராஜ்யத்திலும் பாண்டிய ராஜ்யத்திலுங்கூட பிரசித்தம். அவள் என் மனையாளாக வந்து மிகக் குறுகிவிட்ட சோழர் சிற்றரசின் ராணியாகும் வரை என் அன்னையைத்தான் அழகிற் சிறந்தவள் என்று மக்கள் நினைத்தார்கள். மருமகள் வந்ததும் மாமியாரின் புகழ் மறைந்தது.

இருப்பினும், என் அன்னை மிகுந்த அழகுடையவள் உன்னைப் பார்த்தால் அவளைப் பார்க்க வேண்டியதில்லை. அவள் சிலையைத்தான் அச்சுதர் மாளிகை நிலவறையில் பார்த்தாயே! அவளைவிட மிகச் சிறந்த எழிலுடன் உறையூர் அரண்மனையில் புகுந்த உன் அன்னையை மக்கள் தெய்வ மென நினைத்தார்கள். அவள் பொறுமையை முன்னிட்டுத் தானோ என்னவோ அவளுக்குப் பூதேவி என்று அவள் பெற்றோர் பெயரிட்டிருந்தார்கள். ஆனால், மக்கள் அவள் அழகைக் கண்டு பூதேவியுடன் ஸ்ரீதேவியும் இணைந்திருப்ப தாகப் பேசிக் கொண்டார்கள். அவள் ரதத்தில் கோவிலுக்குப் போகும்போதெல்லாம். திரளான மக்கள் அவளைப் பார்க்க வருவார்கள். அவளைத் தெய்வமாக நினைத்தார்கள். அவள் வந்த இரண்டு வருடங்களில் என் அன்னை காலமாகி விட்டதைக்கூட அபசகுனமாகவோ, அவள் காலடி வைத்ததன் காரணமாகவோ மக்கள் குறை கூறவில்லை. அப்படி மக்களின் மனத்தை ஈர்த்துக் கொண்ட உன் அன்னை முதன்முதலில் உன் அண்ணன் ஆதித்தனை ஈன்றாள். அடுத்த ஐந்து ஆண்டுகள் கழித்து நீ பிறந்தாய்.

'நீ வளர வளர உன் அன்னையின் மகிழ்ச்சி எல்லை மீறியது. அவள் அடிக்கடி உன் முகத்தைப் பார்ப்பாள். உன் கண்ணழகைக் கண்டு அவளே மயங்கினாள். இவள் பிறந்த வேளை சோழ அரசு பேரரசாகும் என்று அவள் அடிக்கடி கூறுவாள். அவள் உன்னை ஈன்ற எட்டாவது நாள் அவள் கட்டிலுக்கருகில் நான் நின்று கொண்டிருந்தேன். அவள் என்னையும் பார்த்து உன்னையும் பார்த்தாள். உங்கள் அன்னையின் கண்கள் இப்படித்தானிருக்கும். 'உங்கள் அன்னை மார்பில் இவள் மார்பில் இருப்பதைப் போலவே புலியின் மச்சமுண்டு. நீங்கள் புலியின் வம்சமல்லவா?' என்று கூறினாள், மகிழ்ச்சிப் புன்முறுவல் காட்டினாள்.

'உன்னை வைத்த கண் வாங்காமல் நான் பார்த்துக் கொண்டு நின்றேன். உறையூர் உதயசூரியன் அரண்மனைச் சாளரங்கள் வழியாக இரண்டு கிரணங்களை அனுப்பியிருந் தான். அந்த இரண்டு கிரணங்களும் உன் மார்புப் புலி மச்சத்தில் விழுந்தன. அதுவும் ஒரு அழகாய்த் தானிருந்தது உனக்கு...'' என்று சொல்லிய விஜயாலயன் சிறிது நேரம் அந்தப் பழைய காட்சியை நினைத்து அதில் திளைத்து அறையில் தனது மகள் முன்பாக அப்புறமும் இப்புறமும் நடந்தான். பிறகு சட்டென்று நின்று மகளை நோக்கினான்.

இருவர் கண்களும் கலந்தன. அவள் கண்களை நோக்கிய விஜயாலயன், ''ஆம், அதே கண்கள்! வசீகரக் கண்கள்! அழகு சொட்டும் அற்புத விழிகள்'' என்று சற்று இரைந்தே சொல்லி விட்டு, ''மகளே கேள். இவ்வண்ணம் அன்று நான் உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தபோது உன் அன்னை கேட்டாள் 'இன்று எட்டாவது நாள் தொட்டிலிட வேண்டும் உங்கள் மகளுக்கு' என்று.

'ஆம்' என்றேன் நான், எதற்காக அவள் கேட்கிறாள் என்பதைப் புரிந்துக்கொள்ளாமல். 'இப்படி உட்காருங்கள்' என்று உன் அருகில் என்னை உட்காரச் சொன்னாள். நானும் உட்கார்ந்தேன். 'உங்கள் பெண்ணுக்கு இன்று பெயர் வைக்க வேண்டும். என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்?' என்று வினவினாள் உன் தாய்.

'என்னை எதற்காகக் கேட்கிறாய்' என்று நான் கேட்டேன்.

'நீங்கள் பெயர் வைப்பதில் சூரர். திரும்பவும் சங்க காலத்து நிலைக்கு சோழ நாடு உயர வேண்டும் என்று கூறி மகனுக்கு ஆதித்தன் என்று பெயரிட்டீர்கள். தமிழ்ப் பெயராக இல்லையே என்று நான் ஆட்சேபித்தேன்; நீங்கள் என்ன சொன்னீர்கள்? கரிகாலன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, செங்கணான் என்ற பெயர்கள் மறைந்துவிட்டன களப்பிரர் இருளில்; அந்த இருளைக் கிழிக்க என் மகனுக்கு ஆதித்தன் என்று பெயர் வைக்கிறேன் என்று சொன்னீர்கள். சூரியன், கதிரவன் என்று மாற்றுப் பெயர்கள் சொன்னேன். நீங்கள் ஒப்பவில்லை. பெயர்கள் நன்றாயில்லை என்று தள்ளிவிட்டீர்கள். ஆகையால் பெண்ணுக்கு தமிழ்ப் பெயரிடுங்கள்.' இப்படிப் பேசினாள் உன் அன்னை...''–இங்கு சிறிது தாமதித்தான் விஜயாலயன்.

மேலும் பேசினான்: ''இப்படிச் சொன்ன உன் அன்னையைத் திருப்தி செய்ய 'நீயே ஒரு தமிழ்ப் பெயர் சொல்'



என்றேன். உடனே அவள் சொன்னாள். 'கண்ணகி' என்று நான் சிந்தித்தேன். 'என்ன சிந்திக்கிறீர்கள்? சங்க காலப் பெயர், காப்பியப் பெயர்' என்றாள் உன் அன்னை. 'ஆனால் ...' என்று நான் இழுத்தேன்.

'மனம் விட்டுச் சொல்லுங்கள்' என்றாள் உன் அன்னை எங்கள் இருவருக்கும் இப்படி விவாதம் நடந்தது.

'பூதேவி! கண்ணகி சிறந்த பெயர்தான். ஆனால் அவள் அதிர்ஷ்டக் கட்டை' என்றேன் நான்.

'எப்படி?' – இது உன் அன்னையின் கேள்வி.

'கணவன் தாசியிடம் போய்விட்டான். சொத்து சுதந்திரமிழந்து அவனுடன் மதுரை சென்றாள். அங்கு மாங்கல்யத்தையும் இழந்தாள்' என்றேன் நான்.

'அது விதி' என்றாள் உன் அன்னை.

'அந்த விதி நமது செல்விக்கு வேண்டாம்.'

'சரி, வேறு பெயர் என்ன?'

'தமிழின் ஜீவனா?'

'தமிழின் ஜீவனை நீ சொன்ன பெயருடன் சேர்த்தாலென்ன?'

'ஆம் 'ழ' என்ற எழுத்துத் தமிழின் ஜீவனல்லவா? வேறு எந்த மொழியிலும் இல்லாத சிறப்பெழுத்தல்லவா?''

'ஆம்.'

'அதை கண்ணகியில் நுழைத்துவிடு.'

'நுழைத்தால்...'

'கண்ணழகி என்றாகிவிடும்.'

இதை நான் சொன்னதும் உன் அன்னை பெருமிதமடைந்தாள். 'அடி கண்ணழகி' என்று உன்னை வாரி அணைத்

இப்படி ஏற்பட்டது உன் பெயர்.'' என்ற
துக் கொண்டாள். இப்படி ஏற்பட்டது உன் பெயர்.'' என்ற
துக் கொண்டாள். வரலாற்றைக் கூறிய விஜயாலயன், உணர்ச்சிப்
பெயரின் வரலாற்றைக் கூறிய விஜயாலயன், உணர்ச்சிப்
பெருக்கால் மீண்டும் மஞ்சத்தில் உட்கார்ந்து விட்டான்.
''அச்சுதப் பேரறையரே! நீர் சொல்லும் அடுத்த கதையை''
என்றான் குரல் தழுதழுக்க விஜயாலயன்.

அச்சுதக்கொல்லராயிருந்து அச்சுதப் பேரறையராக
மாறிவிட்ட சோழர் முதலமைச்சர் தமது மஞ்சத்திலிருந்து
எழுந்து விஜயாலயனைக் கவனித்தார். அவன் மனநிலை
அவருக்கு மிக நன்றாகப் புரிந்திருந்தது. மகா வீரனும் திடபுத்தி
யுடையவனுமான விஜயாலயன், தன் மனைவிக்கு விளைந்து
விட்ட துர்க்கதியால் மனம் உடைந்து கிடப்பதைப் புரிந்து
கொண்டார். ஆகவே அவன் உத்தரவுப்படி கதையைத்
தொடங்கினார்:

''கண்ணழகி! சோழ ராஜகுமாரி! நீங்கள் பிறந்த பின்
அரண்மனை அமர்க்களப்பட்டது. உங்களை அரண்மனைப்
பணிமக்கள் கீழே இறங்கவிடுவதில்லை. எல்லோரும்
கண்ணழகி நாமத்தை ஜபம் செய்தார்கள். மூன்று வயது வரை
உறையூரின் சரித்திரம் உன் பெயரால் சிறந்தது. உன் அண்ண
னுக்கு வயது எட்டு. உனக்கு வயது மூன்று. அப்பொழுதுதான்
அந்த பயங்கர விளைவு ஏற்பட்டது. சுமார் ஒரு வார காலம்
நானும் உன் தந்தையும் பாண்டிய நாடு போயிருந்தோம்...
அப்பொழுது ஒரு நள்ளிரவு களப்பிரர் வம்சத்தில் வந்த
முத்தரையர்கள் திடீரென அரண்மனைக்குள் நுழைந்தார்கள்.
எதிர்ப்பட்டவரை வெட்டினார்கள். உன் அன்னையைத்
தூக்கிப் போக முயன்றான், அவளை மணக்க எண்ணி ஏமாந்த
ஒரு முத்தரையன். உன் அன்னைகுறுவாளொன்றைத் தனது
மார்பில் புதைத்துக் கொண்டாள். உன் அண்ணனைத்
தேடினார்கள். அவனை நாங்கள் அழைத்துப் போயிருந்தோம்,
பாண்டிய நாட்டுக்கு. அன்னை மாண்டு கிடந்த சமயத்தில் நீ
வந்தாய் அழகு நடை நடந்து உன்னைத் தூக்கிச் சென்று



விட்டான் உன் அன்னையின் கொலைக்குக் காரணமான
முத்தரையன். எங்களுக்கு மதுரையில் கிடைத்தது செய்தி.
உறையூருக்கு விரைந்து வந்தோம் உடனடியாக. அரண்மனை
மருத்துவர் உன் அன்னையைத் தைலப்படுத்தி வைத்திருந்தார்.
மார்பில் புதைந்துகிடந்த குறுவாளுடன் உன் அன்னையைப்
பார்த்தோம். அவள் முகம் மாலையில் குவிந்த தாமரையைப்
போலிருந்தது. அந்த நிலையிலும் உன் தந்தையால் ஏதும் பேச
முடியவில்லை. அவர் கண்களில் நீர் வடியவில்லை. ஆனால்,
இதயத்தில் வடிந்தது ரத்தம் என்பதை முகம் காட்டியது. அன்று
பிரதிக்ஞை செய்தார் விஜயாலயச் சோழ தேவர் அவள்
உயிரிழக்கக் காரணமானவனை அதே குறுவாளால் அழித்து
விடுவதென்று. குறுவாளை அவள் மார்பிலிருந்து பிடுங்கி
னார். அந்தக் குறுவாளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு கூவினார்.
''பூதேவி! உன்னை அழித்தவனை இதே குறுவாளால் அழித்து
விடுகிறேன். அவனை மட்டுமல்ல, அவன் குலத்தையும் நாசம்
செய்துவிடுகிறேன்' என்று.

அவரை மெள்ள அப்புறம் அழைத்துச் சென்றேன்
அடுத்த ஒரு வாரத்தில் காஞ்சி சென்றார் உன் தந்தை. சோழ
அரசை பல்லவ ராஜ்யத்தின் சிற்றரசாக்கினார். அவர்களால்
படைத்தலைவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவர்
அடுத்து விளைத்த போர்கள் பல. முத்தரையர் இருப்பிடங்
களையெல்லாம் அழிக்கத் தொடங்கினார், பல்லவ அரசின்
பெயரால், சோழர் அரண்மனையில் பலநாட்டுப் பொருள்
களும் வந்து சேர்ந்தன. உன்னைக் கண்டுபிடிக்க சல்லடை
போட்டு சலித்துப் பார்த்தோம். கிடைக்கவில்லை நீ ஆண்டுகள்
ஓடின. சேரமன்னன் குமாரியின் அழகு மெள்ள மெள்ள எங்கும்
பரவலாயிற்று. நீ கரூரில் இருக்கும் விவரமும் தெரிந்தது.
உடனே உன் தந்தை என்னை அனுப்பினார் இங்கே...''

இந்த இடத்தில் அச்சுதர் தமது கதையை நிறுத்திக்
கொண்டார். மெள்ளப் பேச முற்பட்ட விஜயாலயன் மெள்ள

தலை நிமிர்ந்தான். ''உன் படமொன்றை வரைந்து அனுப்பி
னார் அச்சுதர். உன் பாட்டியின் தத்ரூபமாக நீ அமைந்திருந்தாய்
அந்த சித்திரத்தில். அதற்கு முன்பே கரூர் சேரர்களின் இரண்
டாவது தலைநகராகி விட்டது. முதல் தலைநகர் மஹோதய
புரமாயிற்று. இந்த இரண்டாவது தலைநகரையும் உன்னையும்
கைப்பற்றத் தீர்மானித்தேன். பதினைந்து ஆண்டுகளுக்குப்
பிறகு உன்னை இங்கு சந்தித்தேன். மகளே! நீ கிடைத்தாய்.
அதுமட்டுமல்ல. சோழ அரசு இனி சாம்ராஜ்யமாகும்
நிலையும் துவங்கிவிட்டது'' என்று கூறிய விஜயாலயன், ''சரி
அச்சுதரே! கண்ணழகி சிறிது இளைப்பாறட்டும்'' என்று கூறிக்
கைகளைத் தட்டினார். அரண்மனைப் பணிப்பெண்கள்
ஓடிவர, அவர்களிடம் மகளை ஒப்படைத்த சோழ மன்னன்,
''முதலில் இனி நாம் அடுத்த திட்டத்திற்குச் செல்வோம்''
என்று கூறினான். ''எதற்கும் மாரவேளையும் அழைத்துக்
கொள்வோம் ஆலோசனைக்கு'' என்றும் சொன்னான்.

''மாரவேளை அழைத்து வர ஆள் அனுப்புகிறேன்'' என்று சொன்ன அச்சுதப்பேரறையர், வாயிற்படியை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தார். ஆனால், அதற்கு அவசியமில்லாது போயிற்று.

அதே சமயத்தில் அந்த அறை வாயிற்படியில் நின்றார் மாரவேள். திடீரென குப்புற விழுந்தார் அறைக்குள். அவன் முதுகில் குறுவாளொன்று புதைந்து கிடந்தது. அதிலிருந்து பெருகிய குருதி அந்த அறையின் தரையை மெள்ள மெள்ள நனைத்தது.

# 11. சாம்ராஜ்ய மர்மம்

உச்சிவேளை கடந்து முழுக்க ஒரு ஜாம நேரங்கூட
ஆகாததால், சற்றே சாய்ந்த கதிரவனின் கிரணங்கள் சில அந்த
அரண்மனை அறையின் மேலைச் சாளரத்தின் மூலம் உள்ளே
புகுந்து, வாயிற்படியில் குப்புறக் கிடந்த மாரவேளின்
முதுகிலிருந்து பெருகிவந்து தரையை நனைத்த குருதியின்
சிவப்பை மிகப் பயங்கரமாகக் காட்டியது. மாரவேளைப்
பற்றிய பேச்சை எடுத்தவுடனேயே அவர் அங்கு தோன்றியதும்
குப்புற விழுந்து விட்டதும் விஜயாலயரையும், பணிப்பெண்
களுடன் உள்ளே செல்ல முயன்ற கண்ணழகியையும் திகைப்புக்
குள்ளாக்கிவிட்டபடியால் யாரும் இருந்த இடத்தை விட்டு
ஒரு அடிகூட நகரவில்லை. கண்ணிமைக்கும் நேரம். அடுத்த
விநாடி சோழ மன்னனும் அச்சுதரும் மாரவேளை நோக்கி ஓடி
அவரை இரு புறத்திலும் பிடித்துத் தூக்கி வந்து சற்று எட்ட
இருந்த பஞ்சணையில் குப்புறவே படுக்க வைத்து காயத்தைக்
கவனித்தார். உள்ளே சென்று விட எதிர் வாயிற்படியில் காலை
எடுத்து வைத்த அரசகுமாரியும் ஓடி வந்து மாரவேள் கிடந்த
பஞ்சணையின் பக்கத்தில் உட்கார்ந்து குறுவாளை நோக்கி
னாள். அது புதைந்திருந்த இடத்தை நோக்கினாள். பிறகு பணிப்
பெண்களை நோக்கி ''சுடு நீரும் ஆடுதொடா இலைச் சாறும்
கொண்டுவாருங்கள்'' என்று உத்தரவிட்டாள். விஜயாலயன்
குறுவாளைத் தொடப்போனான். அதே சமயத்தில் ''தொடாதீர்கள்
குறுவாளை. அதைப் பிடுங்கினால் அடுத்த விநாடி மாரவேள்
மரணமடைந்து விடுவார்'' என்று எச்சரித்தாள் அரசமகள்.

அவள் ஆணையைக் கேட்டு வியந்த விஜயாலயன், ''மகளே! அரண்மனை மருத்துவருக்குச் சொல்லி அனுப்புவோம். இது நமது வேலையில்லை'' என்று கூறியதன்றி, ''நீ

உள்ளே செல், இவரை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றும் சொன்னான்.

ஆனால், அச்சுதர் அதற்கு இசையவில்லை. ''மன்னவா! அரண்மனையில் அரசகுமாரியைவிட பெரிய மருத்துவர் யாரும் கிடையாது. அவள் இஷ்டப்படி விட்டுவிடுங்கள்'' என்றார்.

சோழ மன்னன் தனது முதலமைச்சரை வியப்பு வழிந்த விழிகளில் நோக்கினான். ''அரசகுமாரிக்கு மருத்துவமும் தெரியுமா?'' என்றும் கேட்டான், வியப்பு குரலிலும் விரிய.

''நன்றாகத் தெரியும். சேர நாட்டின் தலை சிறந்த மருத்துவரிடம் பயின்றவள்'' என்று புதிய செய்தி ஒன்றைச் சொன்னார் அச்சுதர்.

''அரசகுமாரிக்கு மருத்துவப் பயிற்சி எதற்கு?'' என்று கேட்டான் விஜயாலயன்.

''அதை சேர மன்னரிடந்தான் கேட்கவேண்டும்'' என்று அச்சுதர் பதில் சொன்ன சமயத்தில் பணிப்பெண்கள் ஒரு பாத்திரத்தில் சுடுநீரும், ஒரு வெண்கலக் குப்பியும், வெள்ளை வஸ்திரமும் கொண்டு வரவே அரசனையும் அச்சுதரையும் பேசாதிருக்கும்படி சைகை செய்தாள் அரசகுமாரி. பிறகு வெள்ளைத் துணியைச் சிறிது கிழித்து வெந்நீரில் நனைத்து நீரை காயத்தின் மீது பிழிந்து மெள்ள ரத்தத்தைத் துடைத்தாள். அடுத்து வெண்கலக் குப்பியிலிருந்த பச்சை இலைச்சாற்றை குறுவாளைச் சுற்றிலும் ஊற்ற பெருகிவந்த குருதி சட்டென்று நின்று விடவே, குறுவாள் பதிந்த இடத்தைச் சுற்று முற்றும் தனது பஞ்சு விரல்களால் லேசாக அழுத்திப் பார்த்தாள். திருப்திக்கு அடையாளமாகத் தலையை ஆட்டிக்கொண்ட அரசகுமாரி, தனது அழகிய விழிகளால் அச்சுதரையும் தந்தையையும் நோக்கி, ''உயிருக்குப் பயமில்லை. குறுவாள் சுவாசப்பைக்குச் சிறிது கீழேதான் பாய்ந்திருக்கிறது. குத்திய



வன் அவசரப்பட்டுக் குத்தியிருக்கிறான்'' என்று சொற்களையும் மெதுவாக உதிர்த்தாள்.

அமுத தாரையென உதிர்ந்த அவள் சொற்களால் அச்சுதரும் அரசரும் ஆசுவாசப் பெருமூச்சு விடவே அரசகுமாரி மீண்டும் தனது கவனத்தை மாரவேளின் காயத்தை நோக்கிச் செலுத்தினாள். ''தந்தையே! அச்சுதரே! மாரவேள் சிறிதும் அசையாதபடி இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள். சிறிது அசைந்தாலும் அவர் உயிருக்கு நான் உத்தரவாதமல்ல'' என்று கூறியதும் தலைப்பக்கத்தை அரசரும் கால் பக்கத்தை அச்சுதரும் இறுகப் பிடித்துக் கொள்ள, அடுத்த சிகிச்சையைத் தொடங்கினாள் அரசகுமாரி. இரு பணிப்பெண்களை மஞ்சத்தின் இருபுறமும் வரச்சொல்லி மீண்டும் வெள்ளைத் துணியின் ஒரு பாகத்தைக் கிழித்து குறுவாளைச் சுற்றி முதுகில் அழுத்திக் கொண்டாள். ''இந்தக் குறுவாளை நான் எடுத்ததும் காயத்தின் வாயில் பச்சை இலைச்சாற்றை பத்து சொட்டுக்கள் தொடர்ச்சியாக ஒரே சீராக விடு'' என்று ஒரு பணிப்பெண்ணிடம் கூறிவிட்டு, சுடுநீரை வைத்துக் கொண்ட பணிப்பெண்ணை அருகில் வர சைகை செய்தாள். அவள் வந்ததும் மீண்டும் சுடுநீரை காயத்தின் வாயில் பிழிந்து விட்டுக் குறுவாளை லேசாக சிறிது சிறிதாக எடுக்கலானாள். அவள் குறுவாளை எடுக்க எடுக்க காயத்தின் குமிழியிலிருந்து ரத்தக் கசிவு மிகக் குறைவாயிருந்ததையும், அவள் குறுவாளை ஏதோ வாழைப் பழத்திலிருந்து ஊசியை எடுப்பதுபோல் மிக லாவகமாக எடுப்பதையும் பார்த்த விஜயாலயன், மகளின் மருத்துவத் திறனைக் கண்டு சொல்லொணா வியப்படைந்தான். ஆனால், அச்சுதர் தமது முகத்தில் எந்தவித வியப்பையும் காட்டவில்லை. உணர்ச்சியற்ற கல்லாக முகத்தை வைத்துக்கொண்டிருந்தார். அரசகுமாரி குறுவாளை எடுத்ததும் அவள் கூறியபடி பணிப்பெண் பத்துத் துளிகள் பச்சிலைச் சாற்றை காயத்தில் சொட்ட விட்டாள்.

குறுவாளை மிக லாவகமாக எடுத்துவிட்ட கண்ணழகி மீண்டும் வெள்ளைத் துணியில் சிறிது கிழித்து அதை பச்சிலைச் சாற்றில் தோய்த்து காயத்துக்குள் மெள்ள மெள்ளத் திணித்தாள். காயத்தை சாறு தோய்த்த துணியால் முழுதும் அடைத்ததும் மற்றொரு பணிப் பெண்ணை நோக்கி, ''என் பெட்டியில் துத்தநாகக் களிம்பு வைத்திருக்கிறேன். அதில் சிறிது வெற்றிலையில் எடுத்துவா!'' என்று உத்தரவிட பணிப்பெண் வேகமாகச் சென்றாள்.

அதுவரை மௌனமாக நின்று கொண்டும் அரசகுமாரியின் மருத்துவத் திறனைக் கவனித்துக்கொண்டுமிருந்த விஜயா லயன், ''மகளே! மருத்துவத்தின் எல்லையைக் கண்டிருக்கிறாய்'' என்று முணுமுணுத்தான்.

கண்ணழகி மெள்ள தன் கண்களை உயர்த்தி தந்தையின் கண்களைச் சந்தித்தாள். ''நான் காணவில்லை தந்தையே. நமது பெரியோர்கள் கண்டிருக்கிறார்கள். முக்கியமாக சேர நாடு கண்டிருக்கிறது. அகத்தியர் பொதிய மலையில் அமர்ந்து கொடுத்தது தமிழ் இலக்கணம் மட்டுமல்ல, மருத்துவ இலக்கணமும் தந்திருக்கிறார். பொதியமலையே ஒரு மருத்துவ மலை. அங்கிருக்கும் ஔடத மூலிகைகள் கணக்கில டங்கா. முழுதும் இன்னும் யாரும் கண்டறியவில்லை. கண்டவரையில் நாம் காணும் விசித்திரங்கள் பல. ஒன்றை நீங்கள் இப்பொழுது கண்டீர்கள்'' என்று கூறினாள்.

மன்னர் புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். அச்சுதர் மன்னரை வெற்றிக் குறியுடன் நோக்கி னார். அவர் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன்பு பணிப்பெண் வெற்றிலையில் களிம்பு கொண்டுவர, அதைத் தனது இடது கையில் வாங்கிக்கொண்ட அரசகுமாரி, வலது கை ஆள்காட்டி விரலால் களிம்பை சிறிது சிறிதாக எடுத்து துணி அடைக்கப் பட்டிருந்த காயத்தின் முகப்பில் தடவினாள். மும்முறை



களிம்பு தடவப்பட்டதும் காயத்திலடைக்கப்பட்ட துணி மறைந்தது, சுற்றிலுமிருந்த பச்சிலைச் சாறும் மறைந்தது. அந்த இடங்களை ஆக்கிரமித்துக்கொண்ட களிம்பு சாதாரண சருமத் தைப் போல் விரிந்து காயத்தை அடியோடு மறைத்துவிட்டது.

இதற்குப் பிறகு அரசகுமாரி எழுந்திருந்து மற்றொரு பணிமகள் கொண்டு வந்த சுத்த ஜலத்தில் கைகளைக் கழுவிக் கொண்டாள். ஒரு பணிப்பெண் நீட்டிய துண்டை வேண்டா மென்று கூறி கையிலிருந்த அரைகுறை இரத்தத்தைத் தனது சேலையின் முந்தானையில் துடைத்துக் கொண்டாள். அதைப் பார்த்த விஜயாலயன் கண்களில் எழுந்த கேள்விக்கு கண்ணழகி பதில் சொன்னாள், ''எனக்காகச் சிந்தப்பட்ட ஒரு மகானின் ரத்தம், அது எனது முந்தானையில் பட்டதால் தவறில்லை'' என்று. பிறகு பணிப்பெண்களை நோக்கித் திரும்பி, ''இரண்டு காவலரை அழைத்து வாருங்கள். இந்த மஞ்சத்தை அப்படியே தூக்கிக்கொண்டு போய் அந்தப்புரத்தில் வையுங்கள். இன்று இரவு பூராவும் நாம் இவரைக் கவனிக்க வேண்டும்'' என்று கூறினாள்.

''மகளே! இவரை மருத்துவரிடம் ஒப்படைத்தாலென்ன? ஆரம்ப சிகிச்சை முடிந்துவிட்டது. பிராண பயமில்லையென்று நீயே சொல்கிறாய்'' என்றான் விஜயாலயன்.

''தந்தை செல்வதுதான் சரி அரசகுமாரி. நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்தாயிற்று'' என்று அச்சுதரும் அரசனுடன் ஒத்துப் பாடினார்.

''இதுவரை நடந்திருப்பது பாதி வைத்தியம். எதையும் நான் அரைகுறையாக விடுவதில்லை. தவிர, மாரவேள் நமது குலச் சொத்து. அவரை நாமே கவனிப்பதுதான் முறை'' என்று அரசகுமாரி– அச்சுதர், தந்தை இருவரையுமே நோக்கிக் கூறினாள்.

மகளின் இதயத்தின் அன்பைக் கண்டு, கடமை உணர்ச்சி கண்டு மகிழ்வெய்தினான் மன்னன் விஜயாலயன். அச்சுதப்

பேரரையரும் அளவற்ற உவகை அடைந்து ''மன்னவா! இவளைப் பெற்றது நீ செய்த பாக்கியம்'' என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் காவலர் வந்து மாரவேள் குப்புறக்கிடந்த மஞ்சத்தை அசையாமல் தூக்கிக்கொண்டு உட்புறம் சென்றனர். பணிப்பெண்கள் சென்ற பிறகு அரசகுமாரி சொன்னாள். ''தந்தையே! இன்றிரவு இவருக்கு நல்ல காய்ச்சல் வரும். அது நல்ல அறிகுறி. நாளை தெளிந்து விடுவார். கவலை வேண்டாம். நாளன்றைக்கு இவருடன் நீங்கள் விவரமாகப் பேசலாம்'' என்று கூறிச் சென்று விட்டாள் அரசகுமாரி.

அடுத்து விஜயாலயன் அச்சுதரை நோக்கினான். ''முதலமைச்சரே! இளையவேள் எங்கிருந்தாலும் அவனைப் பிடித்துவர உத்தரவிடுங்கள்'' என்று உத்தரவிட்ட விஜயாலயன் ''ஆமாம், இந்த இதயகுமாரன் எங்கு தொலைந்தான்?'' என்றும் வினவினான்.

அச்சுதருக்கும் அது விளங்கவில்லை. தங்களுடன் வந்திருக்க வேண்டிய இதயகுமாரன் ஏன் வரவில்லை? எங்கு போயிருக்கிறான்? என்று யோசித்தார். ''ஒருவேளை இளையவேள் அவனையும்....!'' என்று எண்ணமிட்ட அச்சுதர், ''இருக்காது அது ஒரு நாளும் முடியாது'' என்று தம்மைத் தாமே சமாதானப்படுத்திக்கொண்டார்.

அவர் மனத்திலோடிய எண்ணங்களை அவர் முகமாறுதலிலிருந்தே புரிந்துகொண்ட விஜயாலயன், ''அது சாத்தியமல்ல அச்சுதரே. இதயகுமாரனை அப்படி யாரும் சுலபத்தில் தீர்த்துக்கட்ட முடியாது. எதற்கும் அவனையும் அழைத்துவர ஆள் விடுவோம்'' என்றான்.

அரசன் இட்ட பணிகளை நிறைவேற்ற வெளியே சென்ற அச்சுதர் காவலரை அழைத்து இளையவேளை எங்கிருந்தாலும் சிறை செய்து அழைத்து வருமாறும், இதயகுமாரனையும்



அழைத்து வருமாறும் உத்தரவுகள் பிறப்பித்தார். அவற்றை நிறைவேற்ற வீரர்கள் பறந்தனர். அன்று முழுதும் கருவூரைச் சல்லடை போட்டுச் சலித்தும் இளையவேளும் கிடைக்கவில்லை, இதயகுமாரனையும் காணவில்லை.

கதிரவன் மாலையில் தன் மஞ்சள் ஆடையை மெள்ள மெள்ள இழுத்துச் சுருட்டிக்கொண்டு மறைந்துவிட ஆயத்தம் செய்துகொண்டிருந்தான். பறவைகள் கூண்டுகளை நோக்கிச் செல்லத் துவங்கின. அரசகுமாரி கண்ணிமைக்காமல் மாரவேளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். குப்புறப் படுத்திருந்த மாரவேள் சிறிது அசையலானார். அரசகுமாரி பணிப்பெண்களை விளித்து இரண்டு இலவம்பஞ்சுத் தலையணைகளைக் கொண்டுவரச் சொல்லி, அவற்றை முதுகுப் பக்கத்துக்கு அடைப்பாகக் கொடுத்து மெள்ளத் திருப்பினாள் மாரவேளை இரு பெண்களின் துணைகொண்டு. மாரவேள் ஒருக்களித்துப் படுத்த நிலையில் பஞ்சடைந்த கண்களை லேசாகத் திறந்தார். உதடுகள் மெள்ள அசைந்தன. அரசகுமாரி எழுந்து சென்று ஒரு பாலாடையில் பால் கொண்டுவந்து இரண்டு சொட்டுகளை அவர் வாயில் புகட்டினாள். மாரவேள் நன்றாகவே கண்களைத் திறந்தார். அப்பொழுதும் அவருக்கு ஜுரப் பார்வைதானிருந்தது. நெற்றியில் கையை வைத்த அரசகுமாரி, நெற்றி பொறி பறப்பதை உணர்ந்தாள்.

அரசகுமாரியின் கை அவருக்கு மிக இதமாக இருந்திருக்க வேண்டும். ''அதே கை, அதே இதம், பூப்போல் இருக்கிறது. அன்னைக்கும் அப்படித்தானிருக்கும்'' என்று ஏதோ பேசினார். அதே சமயத்தில் அவர் இதழ்களில் புன்முறுவல் ஒன்று படர்ந்தது. ''அது யாருக்கும் தெரியாது. ஆனால், இப்பொழுது எங்கிருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டார்.

அவர் ஜுரத்தில் பேசுகிறாரென்பதைப் புரிந்து கொண்டாள் அரசகுமாரி. ஆனால், அவற்றில் ஏதோ பொருள் புதைந்திருப்

பதும் அவளுக்குத் தெரிந்தது. அதை உணர்ந்து கொள்ள அவர் காதருகில் குனிந்து, ''என்ன கேட்கிறீர்கள்?'' என்று மெது வாகக் கேட்டாள்.

ஜுர வேகத்திலும் மாரவேளின் இதழ்கள் அசைந்தன. ''அதுதான் மோகனச் சிலை'' என்றார்.

''அதற்கு என்ன?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

சிறிது நேரம் பதிலில்லை. பிறகு அவர் இதழ்கள் மீண்டும் அசைந்தன. ''அதன் ரகசியம். சாம்ராஜ்ய மர்மம்'' என்று சொற்கள் மெதுவாக வந்தன.

அவர் எதையோ சொல்ல முயல்கிறாரென்பதை அரசகுமாரி உணர்ந்து கொண்டாலும் அதற்குத் தேவையான சக்தி அவர் உடலில் இல்லையென்பதையும் புரிந்து கொண்டாள். ஆகவே அவர் காதுக்கருகில் மீண்டும் குனிந்து, ''தூங்குங்கள், காலையில் பேசலாம்'' என்றாள். அவர் கண்களை மூடவும் செய்தாள் தன் தளிர் விரல்களால்.

கண்கள் மூடின, வாய் மூடவில்லை. ''அவசரம். மோகனச் சிலை இளையவேளிடம்... சிக்கக்... கூடாது. அதன் மர்மம் வெளிப்பட்டால்... உம்.... உம்....'' இத்துடன் சொற்களும் நின்றன. மாரவேளின் மூச்சு ஒரே சீராக வந்து கொண்டிருந்தது. அவர் உறங்கிவிட்டதை அறிந்து எழுந்திருந்தாள் அரசகுமாரி. மறுபடியும் அவர் கண்கள் திறந்தன. உதடுகள் அசைந்தன. அரசகுமாரியின் முகத்தை நோக்கினார் மாரவேள். ''நீ.... அரசகுமாரி...'' என்றார்.

''ஆம்...'' அரசகுமாரி மெள்ள பதில் சொன்னாள்.

மாரவேள் சிரமப்பட்டு சொன்னார். ''முக்கூடல்... திரு முக்கூடல்..கவனிக்கச் சொல்...'' என்று திணறிப் பேசினார். மீண்டும் தலையணையில் சாய்ந்தார். கண்களை மூடினார்.

அரசகுமாரியின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. இளையவேளை எண்ணினாள் முகத்தில் சினம் துளிர்த்தது.



இதயகுமாரனை நினைத்தாள் முகம் அந்தி வானம் போலச் சிவந்தது. ''இவர் எங்குதான் போயிருப்பார்? ஒருவேளை மாரவேள் சொன்ன சாம்ராஜ்ய மர்மத்தை அவிழ்க்கப் போயிருப்பாரா?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண் டாள். அவன் நினைப்பு அவள் துயரத்தைத் துடைத்தது. களைப்பைக்கூட ஓட்டிவிட்டது. அவள் ஏதோ நினைத்துக் கொண்டு நகைத்தாள். அந்த சமயத்தில் இதயகுமாரன் அறை வாயிற்படியில் தோன்றினான். ''மாரவேளிடம் நான் உடனடியாகப் பேசியாக வேண்டும்'' என்றான். அவன் கையில் அப்பொழுது அந்த மோகனச்சிலை இருந்தது.

அவனைக் கண்ட கண்ணழகியின் கண்கள் மகிழ்ச்சி வெள்ளத்தைக் கொட்டின. உதடுகள், ''இப்பொழுது அவருடன் பேச முடியாது'' என்று சொற்களை உதிர்த்தன.

''பேசியாக வேண்டும்.''

''முடியாது. நாளைவரை காத்திருக்க வேண்டும்.''

''முடியவே முடியாது'' என்ற இதயகுமாரன் மாரவேளின் மஞ்சத்தை நோக்கி நடந்தான். இரு கைகளை விரித்து, ''நில்லுங்கள் அப்படியே'' என்று தடுத்தாள் அரசகுமாரி.

# 12. மாரவேளின் ரகசியம்

கைகளிரண்டும் விரித்து தடுக்க, கமல மொட்டுகள் இரண்டு கண்ணைக் குத்திவிடுவதுபோல் முனிந்து நோக்க, கருவண்டு விழிகள் கனல் கக்க, துடியிடை சிறிதே அசைய, மாரவேளை அணுகமுடியாமல் தன்னைத் தடுத்த அரசகுமாரியைத் தன் கூரிய விழிகளால் சில விநாடிகள் அளவெடுத்தான் இதயகுமாரன். கோபத்தில், கோபத்தின் துடிப்பில் அவள் அழகு ஆயிரம் மடங்கு உயர்வதை அவன் கவனித்ததால் அடுத்து என்ன செய்வதென்று அறியாமல் கலங்கினான்.

கைகளை விரித்து நின்றதால் லேசாக நழுவிவிட்ட கண்ணழகியின் மேலாடை கண்ணழகியின் கழுத்தழகை மட்டுமின்றி. அவள் கட்டிய மார்புக் கச்சையின் உச்சிப் பகுதியையும், அவற்றின் மீது வெளேரென்று தெரிந்து கச்சைகளை மீற முயன்ற பிறை விளிம்புகளின் அழகையும் வெளிப்படுத்தியதைக கண்ட இதயகுமாரன் கண்கள் பிரமையால் நிலைத்தன சில இடங்களில், பாய்ந்தன மற்றும் பல இடங்களில். கைகள் ஊன்றப்படாமையால் சற்றே விலகி விட்ட மத்திய ஆடைகூட இடையின் வழவழப்பையும், இறுக்கப்பட்ட ஆடையால் கன்னிவிட்ட சிவப்பையும் வெளிக்காட்டியதாலும், மறைந்த இடங்களைப் பற்றிய ஊகத்துக்கும் அவை இடங்கொடுத்ததாலும், மந்திரத்தால் கட்டுண்டவன் போல் விழித்த சோழநாட்டு வாலிப வீரன் இந்த சமயத்தில் பெரும் கோழையாகி அவளைத் தாண்டிச் செல்ல முடியாதவனான்.

நிலத்தில் கால்கள் உறுதியாக ஊன்றியதால் யௌவனத்தின் செழிப்பைக் காட்டிய காலின் முழந்தாளுக்கு மேற்பகுதிகள் மிகவும் கடினப்பட்டிருந்த நிலையில், பெண்களின் மலர்



உடல் மலராக இருக்கும் சமயத்தைவிட கடினப்படும் சமயங்களில் கவர்ச்சி அதிகம் என்பதை நிரூபித்தன. அவன் அப்படி ஊன்றிக் கவனித்ததைக் கண்ட அரசகுமாரி, கால்களிரண்டையும் இணைத்துக் கொண்டதால் ஏற்பட்ட இந்திர ஜாலம் இதயகுமாரனின் சித்தத்தை அதிகமாக உலுக்கியதே தவிர, எண்ணங்களை வேறு வழிகளில் திருப்ப உதவவில்லை.

இத்தகைய மோகனாகாரமான அழகுகளின் எதிர்ப்பால், எதிர்ப்பே அழைப்பாக இருந்த காரணத்தால், இதயகுமாரன் ஒருமுறை பெருமூச்சு விட்டான். அந்தப் பெருமூச்சையும், அந்த வாலிபன் கண்கள் தன் அழகுகளை அலசியதையும் காணவே செய்த கண்ணழகியின் கருத்தும் சிறிது சிறிதாகக் குலைந்து கொண்டிருந்தது. இதில் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ற நினைப்பில் மெள்ள சுயநிலையை அடைந்த அரசகுமாரி, ''மாரவேளை எந்தக் காரணத்தை முன்னிட்டும் இப்பொழுது எழுப்ப முடியாது'' என்று மிக மெதுவாக வார்த்தைகளை உதிர்த்தாள்.

இதயகுமாரன் அதற்கு ஏதாவது பதில் சொல்வானென்று சோழ ராஜகுமாரி நினைத்திருந்ததால் ஏமாந்தே போனாள். எதையோ நினைத்துக்கொண்டே அந்த வாலிபன் அக்கம் பக்கம் பார்த்தான் ஒரு முறை. அங்கு யாருமில்லை என்பதைப் புரிந்து கொண்டதும் சட்டென்று திரும்பி வாயிற்படியை நோக்கிச் சென்று கதவுகளை மூடித் தாளிட்டான் வேகமாக. அதைவிட வேகமாக அரசகுமாரியை அணுகி அவள் இடையில் இடது கையைக் கொடுத்து அகற்றினான் சற்று. வலது கையிலிருந்த மோகனச்சிலையுடன், கண்ணை மூடிக்கிடந்த மாரவேளிடம் சென்றான். அரசகுமாரி அவனை மீண்டும் தடுக்க முயன்றாள். அவனைத் தீண்டாமல் தடுக்க முடியா விட்டாலும் ஆபத்தில் தீண்டினால் குற்றமில்லையென்ற முடிவுக்கு வந்து மஞ்சத்தில் மாரவேளின் பக்கத்தில்

உட்கார்ந்துவிட்ட இதயகுமாரன்மீது கைவைக்கப் போனாள் அவரை எழப்ப வேண்டாமென்று தடுக்க.

''அரசகுமாரி! என்னைத் தொடாதீர்கள். தமிழகத்தின் பிற்காலம் மாரவேளின் மனத்தில் புதைந்து கிடக்கிறது. அதை அவர் முடிந்தவரை சொல்லட்டும்'' என்று கூறினான்.

''மாரவேள் பேசும் நிலையில் இல்லை'' என்ற அரசகுமாரியின் குரலில் அதிகாரம் மிதமிஞ்சி ஒலித்தது.

''மன உறுதியிருந்தால் கண்டிப்பாகப் பேசுவார். கனவிலாவது பேசுவார்'' என்றான் இதயகுமாரன்.

''ஏற்கனவே பேசிவிட்டார்.'' அரகுமாரி அவசரமாகச் சொன்னாள், அதைக் கேட்டுவிட்டாவது இதயகுமாரன் போய்விடட்டுமென்று.

இதயகுமாரன் இமைகள் மேலே எழுந்தன சிந்தனை யுடன். ''என்ன பேசினார்?'' என்ற அவன் கேள்வியிலும் ஆவலிருந்தது.

''ஏதோ முக்கூடல் என்றார். பிறகு திருமுக்கூடல் என்றார். கவனிக்கச் சொல் என்றார்'' என்று அரசகுமாரி கூறினாள்.

இதைக் கேட்டதும் இதயகுமாரன் சட்டென்று எழுந்தான் மஞ்சத்தை விட்டு. எழுந்த வேகத்தில் பக்கத்தில் நின்றிருந்த அரசகுமாரிமீது வேகமாக மோதிவிட்டதால் விழ இருந்த அவள் உடலைத் தாங்கிப் பிடித்தான். அப்படிப்பிடித்த நிலையில் கேட்டான், ''இதை ஏன் நீ முன்பே சொல்ல வில்லை?'' என்று. உதடுகள் கேட்ட முரட்டுத்தனம் அவள் உடலைப் பிடித்த கைகள் அழுந்திய தோள்களிலும் தெரிந்த தால் அரசகுமாரி சற்று முகம்சுளித்தாள்.

அந்த முகச்சுளிப்பையோ, அவள் தோள்களின் வேதனையையோ, வேதனையால் உள்ளத்தில் விளைந்த



உவகையையோ, அந்த உவகை கண்களில் பளிச்சிட்ட விந்தையையோ கவனிக்க இதயகுமாரனுக்கு நேரமும் இல்லை, அதற்கான மனப்பக்குவமும் இல்லை. கர்மவீரனான அவனுக்கு அந்தச் சில விநாடிகளில் கண்ணுக்குத் தெரிந்த தெல்லாம், சோழ நாட்டின் பிற்காலம், அடுத்து தான் செய்யவேண்டிய கடமை. இவற்றின் விளைவாக, ''நல்லது அரசகுமாரி! இதையாவது சொன்னதற்கு கடமைப்பட்டிருக்கி றேன்'' என்ற இதயகுமாரன், அவள் தோள்களைப் பற்றி யிருந்த கைகளை விட்டு மீண்டும் மாரவேளை நோக்கினான்.

அந்த சமயத்தில் மாரவேள் கண் விழித்தார் மெதுவாக. இதயகுமாரனைக் கண்டதும் அவர் கண்களில் சிறிது மகிழ்ச்சி படர்ந்தது, ஒளியும் வீசியது. அவனை அருகில் வரும்படி சைகையும் செய்தார். இதயகுமாரன் அவருக்கு வெகு அருகில் குனிந்தான். மெள்ள மெள்ள மாரவேளின் உதடுகள் அசைந்தன.

''நீ வந்தது... நல்லது...'' என்று உதிர்ந்தன சொற்கள் சற்றுச் சிரமத்துடன்.

''மெள்ளச் சொல்லுங்கள். அவசரம் வேண்டாம். எதையும் நான் செய்கிறேன். கவலை வேண்டாம்'' என்று மெதுவாகச் சொன்னான் இதயகுமாரன்.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலைசைத்த, மாரவேள் அரசகுமாரியைச் சைகை காட்டி அழைத்துத் தனது பின் பக்கத்திலிருந்த தலையணையைச் சிறிது உயர்த்தச் சொன்னார். அரசகுமாரி இதயகுமாரனை நோக்கி ''அவரை மெதுவாகச் சிறிது தூக்குங்கள்'' என்று கூறிவிட்டு, அவன் மாரவேளின் உடலை லேசாகத் தூக்கவே, பின்பக்கத் தலையணையைச் சிறிது உயர்த்தினாள். அதனால் கொஞ்சம் வசதியாகச் சாய்ந்த வண்ணம் படுத்த மாரவேள், இதயகுமாரன் பக்கத்தில் அரசகுமாரியையும் உட்காரச் சொன்னார். அரசகுமாரி சிறிது யோசிக்கவே, ''பாதகமில்லை'' என்று ஒரு சொல்லை அவர்

உதிர்க்க, அரசகுமாரி சற்றே நெளிந்து இதயகுமாரன் பக்கத்தில் உட்கார்ந்தாள். மஞ்சம் பெரிதாயிருந்தாலும் மாரவேள் சொல்வதை ஊன்றிக் கேட்க வேண்டியிருந்ததால் அவள் சிறிது சாயவேண்டிய அவசியம் ஏற்படவே கொம்புமீது தொத்தி ஏற கஷ்டப்படும் கொடிபோல் இதயகுமாரன் தோள்மீது தனது தோள் பட்டும் படாததுமாகச் சங்கடப்பட்டு சாய்ந்தாள்.

இருவர் முகமும் தனது முகத்துக்கு அருகில் வந்ததும் மாரவேளின் கண்கள் அவற்றை ஊன்றிப் பார்த்தன. மகிழ்ச்சிச் சாயையை அடைந்தன. ''நல்லது'' என்ற ஒரு சொல்லும் உதிர்ந்தது அவர் வாயிலிருந்து திருப்திக்கு அடையாளமாக.

மேற்கொண்டு அவ்விருவரையும் நோக்கிய மாரவேள், மெள்ள மெள்ளப் பேசலானார். முக்கியமாக அவர் கண்கள் இதயகுமாரனையே பார்த்தன அதிக நேரம். ''இதயகுமாரா....நீ சென்றபோது...இளையவேள்....உம்....உம் மயக்கமில்லை... நாடகம்'' என்று சொன்னார். பிறகு தடுமாறித் தடுமாறிக் கதையைச் சொன்னார்.

''இதயகுமாரா! நாம் பார்த்தபோது அவன் கண் விழிக்காததும், தலை துவண்டு விழுந்ததும் வெறும் நாடகம் நீங்கள் சென்றபின் நான் அவனுக்குச் சிறிது நீர் கொடுக்கலா மென்று குவளையில் நீரைக்கொண்டு அவன் வாயில் ஊற்ற முயன்றேன். அவனருகே மண்டியிட்டு உட்கார்ந்து வாயில் நீரைப் புகட்ட குவளையைக் கொண்டு போனேன். சட்டென்று அவன் கை என் கழுத்தை வளைத்தது. நான் நிதானிக்கு முன்பு அவன் குறுவாள் என் முதுகில் பாய்ந்து விட்டது. உடனடியாக அவன் எழுந்தான். குறுவாளைக்கூடப் பிடுங்கவில்லை. 'கிழப்பிணமே செத்தொழி, இளையவேளைக் கொல்லக் கூடியவன் இனிமேல்தான் பிறக்கவேண்டும்' என்று கூறி நகைத்தான். அதற்குப் பிறகு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. எனக்குநினைவுதப்பிவிட்டது. அவன்போகுமுன்பு என்னைக் காலால் உதைத்திருக்க வேண்டும். அது மட்டும் நினைவிருக்கிறது. நான் விழித்தபோது இருண்டு விட்டது. மெள்ள மெள்ள விளக்கை ஏற்றினேன். படிகளில் ஏறமுடியவில்லை. விஜயாலயன் தாயின் சிலைக்குப் பின்னாலிருந்த ரகசிய வழியாக வெளியில் வந்தேன். அந்த வழி உனக்குத் தெரியாது. ஆனால், அச்சுதரும் மன்னரும் அந்த அறையில் அந்த சிலைக்குப் பக்கத்தில் திடீரெனத் தோன்றி னார்களே நினைவிருக்கிறதா? அவர்கள் அந்த வழியாகத்தான் வந்தார்கள். நானும் அதே வழியாக வெளிப்பட்டு மெள்ள அரண்மனை வந்தேன். யாருக்கும் தெரியாமல் மறைந்து மறைந்து நடந்தேன். பிறகு உங்கள் அறையில் விழுந்தேன்...''



இந்த நிகழ்ச்சிகளை மெதுவான குரலில் மெள்ள மெள்ளச் சொன்னதால் நீண்ட நேரம் பிடித்தது அவர் விஷயத்தை முடிக்க. அதனால் ஆயாசமடைந்ததால் அவருக்கு மீண்டும் குவளையில் சிறிது பாலை எடுத்துவந்து புகட்டினாள் அரச குமாரி. பிறகு வெகு அதிகாரத்துடனும் ஆணவத்துடனும் பேசினார் மாரவேள்.

''இப்பொழுது திருமுக்கூடலுக்கு விரைந்திருக்கிறான் இளையவேள். அங்கு சேரமன்னன் பாசறை இருக்கிறது. உனக்கு திருமுக்கூடல் தெரியுமல்லவா?'' என்று கேட்டார். பிறகு அவரே பதில் சொன்னார்:* இந்த நகருக்கு வட கிழக்கே அமராவதி, மணிமுத்தா நதி, காவேரி மூன்றும் கூடுமிடத்தில்

* ''வஞ்சுளாவிடவிக்குத் தரகுணக்காக ஆம்பிரவதி நதி மதி போல், விஞ்சுமா மணிமுத்தாறு காவிரி மேவழி மேவுத லால், எஞ்சலில் திருமுக்கூடலென்றிசைப்ப'' என்பது கருவூர்ப்புராணம். மு. இராகவையங்கார் எழுதிய ''சேரன் செங்குட்டுவன்'' என்ற நூலில் பக்கம் 162. காவிரி நதி மணி முத்தாறுடன் கலக்குமிடம் இப்போது மேற்கே தொலை தூரத்திலுள்ளது. முற்காலத்தி லிருந்த முக்கூடல் இங்கு கூறப்படுகிறது.

உள்ளது அந்த ஊர். நேராக அங்கு செல், இம்மூன்று நதிகளும் கலக்குமிடத்தேயுள்ள முக்கூடல் நகரின் மேற்புறத்தில் சேரன் மாளிகையிருக்கிறது. அங்கு சென்று சேரனிடம் இதைக் கொடு'' என்று கூறி தமது இடுப்பைக் காட்டினார். அதைத் தடவிய இதயகுமாரன், அதிலிருந்து ஒரு சிறிய நகையை எடுத்தான். அதைக் கூர்ந்து நோக்கினார் மாரவேள் சில விநாடிகள். ''இதை சேர மன்னனிடம் கொடு. அவன் புரிந்துகொள்வான். அவனை இளையவேள் அடையு முன்பு நீ அவனை அடைய வேண்டும்'' என்றும் கூறினார். அந்தச் சிறு நகையை உற்றுப் பார்த்தான் இதயகுமாரன். அது ஒரு சிறு பதக்கம். நான்கு வைரங்களுக்கு நடுவிலிருந்த பச்சைக்கல் பளீரெனப் பிரகாசித்தது அறை விளக்கில். அரசகுமாரி பிரமை பிடித்த கண்களுடன் அதைப் பார்த்தாள். அவள் கண்களில் விரிந்த பிரமையை மாரவேள் கவனித்துப் புன்முறுவல் கொண்டார். ''உன் வசத்தில் அதன் ஜோடி இருக்கிறது. அதுவும் தெரியும் எனக்கு. இரண்டும் நான் செய்ததுதான்'' என்றார். பிறகு இதயகுமாரனை நோக்கி, ''நீ கிளம்பு. காலம் தாழ்த்தாதே'' என்றார்.

இதயகுமாரன் அவர் படுத்திருந்த மஞ்சத்திலிருந்து எழுந்திருந்தான். மாரவேளுக்குத் தலை தாழ்த்தினான். ''வருகிறேன்'' என்று கிளம்பினான்.

''ஒரு விஷயம்'' என்ற மாரவேளின் குரல் அவனைத் தடுத்தது.

திரும்பி மாரவேளை நோக்கிய இதயகுமாரன், ''கட்டளையிடுங்கள்'' என்றான்.

''எந்தக் காரணத்தைக் கொண்டும் இளையவேளைக் கொல்லாதே'' என்று வேண்டினார் மாரவேள்.

அந்த வேண்டுகோள் விசித்திரமாயிருந்ததால் அரசகுமாரி, இதயகுமாரன் இருவர் கண்களும் வியப்பைக் கக்கின.



காரணத்தைச் சொன்னார் மாரவேள். காரணம், அதுவரை அவர் சொன்ன விஷயங்களையும்விட அதிர்ச்சி தரத்தக்கதாயிருந்தால் அரசகுமாரியின் கண்களும் இதயகுமாரன் கண்களும் சந்தித்தன ஒரு விநாடி. ''விசித்திரம்! நம்ப முடியவில்லை'' என்ற சொற்கள் கண்ணழகியின் கனிஇதழ்களிலிருந்து உதிர்ந்தன. இதயகுமாரன் பேசவில்லை. அவன் எண்ணங்கள் எங்கெங்கோ ஓடிக்கொண்டிருந்தன.

# 13. திருமுக்கூடல்

சில விநாடிகளுக்கு முன்பு இதயகுமாரன் அந்தப் பருவச்சிலையாளின் இரு தோள்களையும் இறுகப்பிடித்த காரணத்தால் கனிந்துவிட்ட இதயத்துடனிருந்த கண்ணழகியின் கண்களுடன் சோழநாட்டு வாலிபன் கண்கள் கலந்த போது, காதல் உதயமாகியிருந்தால் இரு ஜோடிக் கண்களிலும் கனவு விரிந்திருக்கும், கைகள் இணைந்திருக்கும், மனங்கள் குலைந்திருக்கும். ஆனால், கண்கள் கலந்த காரணம், மாரவேள் வீசிய விசித்திர கணையாயிருந்ததால் காதலுக்குப் பதில் வியப்பும் அதிர்ச்சியுமே இருவர் உள்ளங்களிலும் உருவெடுத்திருந்ததன் விளைவாக, ''விசித்திரம்! நம்பமுடியவில்லை'' என்று கண்ணழகி சொற்களை உதிர்த்தாள். இதயகுமாரன் எண்ணங்கள் ஓடின பல திசைகளில்.

மாரவேளை முதலில் கலைஞனாகவும், பிறகு அரசியல்வாதியாகவும் உணர்நத சோழநாட்டு வாலிபன், இளையவேளிடம் அவர் காட்டின பரிவைக் கண்டு வியந்தான். தன்னைக் கொல்ல முயன்றவனை, கொன்றுவிட்டதாக எண்ணி ஓடிவிட்டவனை, அதுவும் வயோதிகனை முறைகேடாக முதுகில் குத்திய அயோக்கியனைக் கொல்ல வேண்டாமென்று அவர் இறைஞ்சியபோது வியப்படைந்த இதயகுமாரன், காரணத்தை அவர் விளக்கிய போது சில விநாடிகள் கற்சிலையாகவே ஆகிவிட்டான். ''அவன் என் பேரன்'' என்று மெள்ளக் கூறிய மாரவேள் இதழ்களில் புன்முறுவலும் படர்ந்தது, துயரமும் துளிர்த்தது.

இதைக் கேட்டதும் கண்ணழகி சொற்களைக் கொட்டினாளேயொழிய சோழநாட்டு வாலிபன் பேசவில்லை ஏதும். மாரவேளை உற்றுப் பார்த்த அவன் கண்களில் அவர் ஒருவேளை



பிதற்றுகிறாரோ என்ற சந்தேகம் இருந்தது. ஆகவே கையிலிருந்த மோகனச் சிலையை அவர் மஞ்சத்தில் அவர் பக்கத்தில் வைத்துவிட்டு அவரை நோக்கி நன்றாகக் குனிந்தான் – ''பேரன் படைத்தலைவனாயிருக்கும் நகரத்தில் நீங்கள் நிலவறையில் வாழவேண்டிய அவசியமென்ன?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''அந்தக் கதை வெளிப்படக் காலமிருக்கிறது. அது என் வாயிலிருந்து வந்த மறுகணம் நான் உயிருடனிருக்கமாட்டேன். ஆகையால் அதைப் பற்றி இப்பொழுது கேட்காதே'' என்ற மாரவேள் மெள்ள கண்களை மூடினார் இரண்டு விநாடிகள். அந்த இரண்டு விநாடிகளில் அவர் முகத்தில் துன்பத்தின் சாயை பெரிதும் விரிந்தது. உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. பிறகு அவரே கண்விழித்து, ''சீக்கிரம் போ, நிற்காதே'' என்றார் இதயகுமாரனை நோக்கி.

இளையவேள் அதற்குமேல் அவரை ஏதும் கேட்பதில் பயனில்லை என்பதைப் புரிந்துகொண்டதால் அவர் படுத்திருந்த மஞ்சத்திலிருந்து எழுந்தான். அங்கு பக்கத்தில் வைத்த மோகனச்சிலையை எடுத்து அரசகுமாரியின் கைகளில் திணித்து ''இதைச் சோழ மன்னரிடம் கொடுத்து விடுங்கள் அரசகுமாரி'' என்று மிகுந்த மரியாதையுடன் சொன்னான்.

அவன் மரியாதைச் சொற்கள் அவள் இதழ்களில் புன்முறுவலை வரவழைத்தன. தன் தோளைப் பிடித்து இறுக்கி நெரித்தபோது அந்த மரியாதை எங்கு போயிற்று என்று எண்ணினாள் அரசகுமாரி. சாதாரண சமயமாயிருந்தால் இதயகுமாரன் அந்த புன்முறுவலைக் கவனித்திருப்பான், அதனால் பரவசமும் அடைந்திருப்பான். ஆனால் மனம் மாரவேளின் ரகசியத்திலும் அவர் இட்ட கட்டளையிலும் திளைத்திருக்கவே அவன் இளவரசியைக் கவனிக்காமல் மாரவேளை மீண்டும் நோக்கி, ''இன்னும் ஒரு விஷயம் தாங்கள் கூறமுடியுமா?'' என்று வினவினான்.

''என்ன?'' மாரவேளின் குரல் மெதுவாக வெளிவந்தது.

''இளையவேள் எப்படிப் பேரன் உங்களுக்கு?'' என்ற ஒரு கேள்வியை வீசினான் இதயகுமாரன்.

அவன் என்ன கேட்கிறானென்பதைப் புரிந்துகொண்ட மாரவேள், ''பெண் வயிற்றுப் பேரன்'' என்றார் மெதுவாக.

இதயகுமாரன் கண்கள் அவரைக் கூர்ந்து நோக்கின ஒரே ஒரு விநாடி. உதடுகள் ஏதோ கேட்க வாயெடுத்தன, ஆனால், சட்டென்று மூடிக்கொண்டன. சற்று முன்பு அவர் கொடுத்து, கச்சையில் பத்திரப்படுத்திக்கொண்ட வைரப்பதக்கத்தை எடுத்துப் பார்த்தான் சில விநாடிகள். அதையும் பார்த்து மாரவேளையும் நோக்கினான். 'ஆம்' என்பதற்கு அறிகுறியாக மாரவேள் மெள்ளத் தலையை அசைத்தார். அவர் கண்களில் லேசாக நீர் துளிர்த்தது.

அதற்கு மேல் ஏதும் பேசாத இதயகுமாரன், ''வருகிறேன் அரசகுமாரி'' என்று அவளிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினான். அந்த அறை வாயிற்படி வரையில் அரசகுமாரி அவனைப் பின்தொடர்ந்தாள். வாயிற்படியை அடைந்ததும் ஒருக்களித்த கதவுக்கருகில் நின்றாள், ஒரு கையால் கதவைக் பிடித்துக் கொண்டும், ஒரு கையால் மோகனச் சிலையை மார்பில் அணைத்துக்கொண்டும். வாயிற் படியைத் தாண்டியதும் திரும்பி நோக்கிய இதயகுமாரன் சித்தம் மீண்டும் நிலைகுலைந்தது. கையில் அவள் ஏந்தி மார்பில் அணைத்திருந்த அந்த தந்தச் சிலைக்கும் அவளுக்கும் இருந்த ஒற்றுமை பிரமிக்கத்தக்கதாயிருந்தது. ''சிலையைச் செதுக்கிய இளஞ்செட் சென்னி மட்டும் சிலையின் கண்களைத் திறந்து வைத்திருந்தால், அதையும் கண்ணழகி என்று அழைக்கலாம்'' என்று நினைத்தான் அந்த வாலிபன். அத்துடன் கண்ணழகி நின்ற தோரணையும் அவன் நெஞ்சையும் கால்களையும் கட்டி நிறுத்திவிட்டன.



ஒருக்களித்த கதவைப் பிடித்துக்கொண்டு சிறிதே இடை ஒடித்து நின்ற கண்ணழகியின் பின்னழகு ஒன்று கதவின் மறைவிலிருந்தாலும் இன்னொன்றின் பரிமாணம் இதயகுமாரனைச் சிலையாக்கிவிட்டதால் அவன் திகைத்தான். உணர்ச்சிப் பிரவாகத்தால் அவன் சற்றே நடுங்கினான். தந்தச் சிலையை அவள் ஒரு கையால் மார்பில் அணைத்திருந்ததால் ஒரு பக்கத்து மார்பகம் கண்ணுக்கு மறைந்துவிட்டாலும் இன்னொரு பக்கம் அதன் மறைவை ஈடுபடுத்திவிட்டதைக் கவனித்து, ''வருகிற வினையெல்லாம் அரைகுறை மறைவினால்தான்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அவன் கவனத்தால் சற்றே சலனப்பட்ட கண்கள் சலனத்திலும் அழகை அள்ளிக்கொட்டியதையும், லேசாக வெட்கத்தால் மடிந்த உதடுகள் கோடிகளில் அழுபட்டதால் அவள் கன்னக் கதுப்புகளில் விழுந்த குழிகள் ஆளை அழுத்திவிடும் காவிரியின் வெள்ளச் சுழல்களைப்போல் காட்சியளித்ததையும் கண்ட இதயகுமாரன், ஆற்றுச் சுழல்களைவிட அந்தக் கன்னக் குழிவுகளுக்கு அமிழ்த்தும் சக்தி அதிகமென்பதை சந்தேகமற உணர்ந்துகொண்டான். அப்படி ஏற்பட்ட சக்தியினாலோ என்னவோ, வெளியில் இரண்டடி எடுத்துவைத்த இதயகுமாரன் சட்டென்று திரும்பி அரசகுமாரியை நோக்கி வெகுவேகமாக வந்தான். அவன் முகம் அவள் முகத்தை வேகமாக நெருங்கியது. இதழ்கள் எங்காவது பதிந்துவிடுமோ என்ற பயங்கர நிலையில் சட்டென்று அவன் கால்கள் நிலைத்து நின்று மடிந்தன. முகத்தினருகே சென்ற அவன் வீர முகம் தாழ்ந்தது. முழந்தாள்கள் மண்டியிட்டன அரசகுமாரியை நோக்கி, வணங்கிய தலை முழுதும் வளைந்து அவள் பாதங்களை முத்தமிட்டன. பிறகு அவன் எழுந்து திரும்பிப் பாராமல் ஏதோ நெருப்பை மிதித்து விட்டவன் போல் ஓடினான்.

அவன் திரும்பி வந்த வேகத்தைப் பார்க்கவே செய்தாள் அரசகுமாரி. அதற்காக இருந்த இடத்தைவிட்டு அகலவில்லை

அவள். அவன் முகம் தனது முகத்தை நெருங்கியபோது
முகத்தை அகற்றவுமில்லை, சுளிக்கவுமில்லை. மார்பில்
அணைத்த சிலைபோல் நின்றிருந்தாள் மிகக் கம்பீரமாக.
அவன் தன்னை வணங்கி பாதங்களை முத்தமிட்டு ஓடியபோது
மட்டும் அவள் உதடுகள் புன்முறுவல் காட்டின. கதவைப்
பிடித்த கை கன்னத்தில் பதிந்தது. முகம் பூராகவும் ஏதோ
விவரிக்க இயலாத உணர்ச்சி படர்ந்தது. அவள் கண்கள்
சிரித்தன. கால்கள் என்ன காரணத்தாலோ தரையில் கட்டை
விரல்களைச் சுற்றின, அர்த்த சந்திர வடிவமாகக் கோடிட
முனைந்தன. தரை கல் தரையாதலால் அது முடியவில்லை.
மனம் அப்படியில்லையே. அதில் சித்திரக் கோடுகள் பதியத்
தானே தொடங்கின. இருந்த நிலையில் அவள் நெளிந்தாள்,
பூவுடலெங்கும் ஏற்பட்ட கனிவால்.

இதயகுமாரன் எத்தனை அபாக்கியவான்! இந்த
அற்புதங்களைக் கவனிக்க அவன் நிற்காமல் ஓடிவிட்டானே!
ஓடியவன் அரண்மனையை மட்டுமா விட்டு ஓடினான்?
வாயிலில் நின்றிருந்த விஜயன்மீது தாவி அந்த மாநகரை
விட்டே ஓடிவிட்டானே. அவன் அரண்மனை வாயிலில்
வந்ததும் காவலர் காட்டிய மரியாதையைக் கண்டு ஆமோதிக்க
வில்லை. வீதிகளில் அவன் புரவி வேகத்தைக் கண்டு வியந்த
மகக்ள் ஆங்காங்கு சிதறியதையும் கவனித்தானில்லை.
வந்தபோது இருந்த நிலையில்லாததால் கோட்டைக் கதவுகள்
அவனுக்குத் திறக்கப்பட்ட விந்தையையும் அவன் விழித்துப்
பார்க்கவில்லை. விழிகளில் கனவு விரிய, அந்தக் கனவும்
கடமையும் வேகத்தை அளிக்க, வடகிழக்குச் சாலையிலே பறந்
தான் இதயகுமாரன். அவன் இதய வேகத்தை, அவசரத்தை
விஜயனும் உணர்ந்துகொண்டிருக்க வேண்டும். அது தனது
நான்கு கால்களையும் ஒரே சீராக வீசி குளம்புகள் பூமியில்
பதிகின்றனவா இல்லையா என்று சந்தேகப்படும்படி விரைந்தது.
அதன் வேகத்தால் எதிர்ப்பட்ட ஆன்பொருனையில் அமிழ்ந்து



வந்த காற்று விஜயன்மீது அமர்ந்திருந்த வாலிபனின் குழல்
களை அலைத்து அவன் முகத்துக்கு தனிப் பொலிவையும்
வீரக் கலையையும் அளித்தது.

இப்படி இடைவிடாமலும் எங்கும் நிற்காமலும்
முக்கூடலை நோக்கிப் பறந்த இதயகுமாரன், விடிவதற்கு ஒரு
ஜாமம் இருக்கும்போது அந்த நகரத்தின் எல்லையை
அடைந்துவிட்டான். மூன்று நதிகள் இணைவதாலே சங்ககால
முதல் புகழ்பெற்ற புண்ணிய பூமியான *திருமுக்கூடலின்
அழகிய விளக்குகள் அவன் வரும் வேகத்தைக் கண்டு
அஞ்சுவன போல் சுடர்களில் சலனத்தைக் காட்டின. ஆனால்
பூங்கொத்துகளுடன் அதன் வாயிலைக் காத்துநின்ற மரமல்லி
மரங்கள் அவனைக் கிளைகளை ஆட்டி வரவேற்றன.
அம்மரங்களை அடைந்ததும் மகிழ மரங்கள் சின்னஞ்சிறு
மலர்களை அவன் தலைமீது உதிர்த்து ஆனந்தத்தைக் காட்டின.

அந்த மரங்களைத் தாண்டியதும் நகரத்துக்குள்
செல்லமுயன்ற அவனை யாரும் தடை செய்யவில்லை. நகரப்
பிரவேச வாயிலில் இருந்த சில வீரர்கள் அவன் செல்லவேண்டிய
இடத்தை விசாரித்தனர். சேரர் பெருமான் மாளிகைக்குச்
செல்வதாக அவன் அறிவித்ததும் வணங்கி வழிவிட்டனர்.

அவர்கள் காட்டிய மரியாதையும் வரவேற்பும் பெரும்
விந்தையாயிருந்தது இதயகுமாரனுக்கு. ''சில நாழிகை தூரத்தி
லிருக்கும் வஞ்சி கைமாறியது இங்கிருப்பவர்களுக்குத் தெரியா
மலா இருக்கும்?'' என்று வியப்புடன் தன்னைக் கேட்டுக்
கொண்டான். அந்த வியப்பின் விளைவாக சிறிது அசிரத்தை
யுடன் அரச வீதியை நோக்கி விஜயனை மெள்ள நடக்கவிட்ட
இதயகுமாரன் மன்னரைப் பார்ப்பதற்கு அது நேரமல்ல
வென்று கருதியதால் அரசு வீதியில் தங்கவும் இளையவேளின்

* செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக்
காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூடலனையை. -பதிற்றுப்பத்து-50

இருப்பிடத்தை அறியவும் தீர்மானித்து ''இங்கு விருந்தினர் மாளிகை எது?'' என்று விசாரித்தான் எதிரே வந்த ஒரு காவலனை நோக்கி.

''அரச வீதியில் அப்படி மாளிகை எதுவும் கிடையாது. அடுத்த வீதியில் இருக்கிறது'' என்று கூறி அதற்குச் செல்லும் வழியையும் சுட்டிக் காட்டினான் காவலன். தலையசைப்பினாலேயே காவலனுக்கு நன்றி தெரிவித்த இதயகுமாரனை நோக்கிய காவலன் ''இப்படி வாருங்கள், நானே வழி காட்டுகிறேன்'' என்று சொல்லி புரவிக்கு முன்னே நடந்தான். அவனைப் பின்பற்றிச் சென்ற விஜயன் அடுத்த தெருவுக்கு வந்து சில வீடுகளைத் தாண்டியதும் சட்டென்று நின்று நகர மறுத்தது. ஆகவே அதைவிட்டு இறங்கிய இதயகுமாரன் அந்தக் காவலனைப் பின்தொடர்ந்தான். விருந்தினர் மாளிகையை அடைந்ததும் ''இதுதான் நீங்கள் தங்கவேண்டிய இடம்'' என்று கூறிவிட்டு வந்த வழியே திரும்ப முயன்றான் காவலன்.

''இன்னும் ஒரு உதவி'' என்று கேட்டு அவனை நிறுத்தினான் இதயகுமாரன்.

காவலன் திரும்பி வந்து, ''என்ன வேண்டும்?'' என்று வினவினான்.

''இந்தக் கதவைத் தட்ட வேண்டும்'' என்றான்.

''உங்களால் தட்ட முடியாதா?''

''முடியும்.''

''பின் தட்டுவதற்கென்ன?''

''உள்ளிருப்பவர்களுக்கு என்னைத் தெரியாது.''

''இங்கு எவருக்கும் மரியாதை ஒன்றுதான். தட்டுங்கள்.''

''மரியாதை உங்களுக்கு நடக்கட்டும் முதலில்'' என்று கூறிய இதயகுமாரன் அவனுக்கு பின்னால் வந்து ''உம், தயவு



செய்யுங்கள்'' என்று கூறி தனது குறுவாளையும் அவன் முதுகில் லேசாக அழுத்தினான்.

காவலன் முகத்தில் கிலி படர்ந்தது. வேறுவழியின்றி கதவைத் தட்டினான். கதவு திறந்தது மெதுவாக. ''உள்ளே போ'' என்று காதில் ரகசியம் சொன்னான் இதயகுமாரன். வேறுவழியின்றி காவலன் உள்ளே நுழைந்தான். நுழைந்ததும் பெரிதாகக் கூவினான் ''விளக்கு எங்கே?'' என்று.

மாளிகையில் அந்தகாரம் சூழ்ந்து கிடந்தது. காவலனைப் பின்பற்றி இதயகுமாரன் நுழைந்ததும் அவன் இடையிலிருந்த வாளை யாரோ சரேலென உருவி விட்டார்கள். குறுவாளைப் பிடித்த கையையும் ஒரு இரும்புக் கரம் பிடித்தது. ''பேசாமல் நட. உனக்கு ஆபத்து எதுவுமில்லை'' என்ற குரல் அவன் காதுக்கருகில் ஒலித்தது.

''சேரர் வரவேற்பு விசித்திரமாயிருக்கிறது'' என்றான் இதயகுமாரன் லேசாக நகைத்து.

''உள்ளே சென்றதும் இன்னும் சில விசித்திரங்களைக் காணலாம்'' என்றது அக்குரல்.

# 14. சேரன் கேள்விகள்

எந்த ஆபத்தையும், எந்த சமயத்திலும் எதிர்பார்க்கும் சுபாவமுள்ளவனும், எதையும் எந்த விநாடியிலும் சமாளிக்கும் சாமர்த்தியசாலியுமான இதயகுமாரனுக்கு திருமுக்கூடலின் விருந்து மாளிகையில் கிடைத்த வரவேற்பு எந்தவித வியப்பையும் அளிக்கவில்லை. அவன் ஏற்கனவே அதற்குச் சித்தமாயிருந்த காரணத்தால் முக்கூடலின் முதல் தெருவான அரசவீதியில் தான் விருந்து மாளிகையைப் பற்றி விசாரித்ததும், அடுத்த தெருவிலிருப்பதாகச் சொன்ன காவலன் திடீரெனப் போக்கை மாற்றிக்கொண்டு தானே இதைக் காட்டுவதாக அறிவித்ததும், அறிவித்த சமயத்தில் அவன் குரலில் தொனித்த வியப்பும், முகத்தில் பளிச்சிட்டு மறைந்த அதிசயச் சாயையும், இதயகுமாரனின் பார்வையிலிருந்து இம்மியளவும் தப்பவில்லை. தன்னை விருந்து மாளிகையில் விட்டுவிட்டு அவன் நகர முயன்றதும் சந்தேகம் உறுதிப் படவே, காவலனைக் கதவைத் தட்டி உள்ளே முழையுமாறு கட்டளையிட்டான். காவலனும், அவனைக்குறுவாளுடன் பின்பற்றி தானும் நுழைந்ததும் அவன் திடீரென்று விளக்கைப் பற்றிக் கூச்சலிட்டதும் உண்மை சட்டென்று இதயகுமாரனுக்குப் புலனாகியும் அவன் எந்தவித அவசர நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

தனது வாள் உறையிலிருந்து உருவப்பட்டபோதும், குறுவாளை ஏந்திய வலது கரம் இரும்புக் கையொன்றால் பிடிக்கப்பட்டபோதும், எந்தவித படபடப்பையும் காட்டவில்லை சோழ நாட்டு வாலிபன். ‘‘சேரன் வரவேற்பு விசித்திரமாயிருக்கிறது’’ என்ற சொற்களை உதிர்த்தபோதும், சர்வ சாதாரணமாகவே பேசினான்; நகைக்கவும் செய்தான். ‘‘உள்ளே சென்றதும் இன்னும் சில விசித்திரங்களைக் காண லாம்’’ என்ற தனது கையைப் பிடித்தவன் இகழ்ச்சியாகச் சொன்னதையும் பொருட்படுத்தாத இதயகுமாரன். தனக்கு முன்னிருந்த காவலனை, ‘‘நண்பனே! இந்த இல்லத்தைக் காட்டிய உனக்கு மிக்க நன்றி, போய்வா’’ என்று கூறிவிட்டு குறுவாள் பிடிக்காத இடது கையால் அவனை முன்னே தள்ளினான் திடீரென்று. அந்த உந்துதலால் அவன் உருண்டதும், குறுவாளைப் பிடித்த கையைச் சரேலென்று எதிரியிடமிருந்து திமிறி விடுவித்துக் கொண்டு பக்கத்திலிருந்தவன் மார்பின்மீது குறுவாளால் சற்றே அழுத்திக்கொண்டு ‘‘காவலனைப் போல் நடிக்காதே இளையவேள். சீக்கிரம் விளக்கைக் கொண்டு வரச்சொல்’’ என்று உத்தரவிட்டான் இதயகுமாரன். பெரும் படைத்தலைவன் பணியாளனுக்கு உத்தரவிடுவதைப் போல்.

இதற்கு மேல் ஏதும் செய்ய இயலாத இளையவேள், ‘‘யாரங்கே? விளக்கு கொண்டு வாருங்கள்’’ என்று உத்தரவிட, விளக்கும் வந்தது. விளக்கு வெளிச்சத்தில் தன்னெதிரே வாளை உருவிய சுமார் பத்து வீரர்கள் நிற்பதையும், பக்கவாட்டில் மார்பில் அழுந்திய தனது குறுவாள் ஊன்றியிருக்க, ஒரு கையில் தன்னிடமிருந்து பெருவாளுடன் இளையவேள் நின்றிருந்ததையும், தனது காலடியில் கால்களை நீட்டிக்கொண்டும், எதிரே நின்ற வீரர்கள் கால்களுக்கருகில் தலையை வைத்துக்கொண்டும் தனது வழிகாட்டி குப்புற விழுந்திருந்ததையும் கண்ட இதயகுமாரன் குறுநகை கொண்டான்.

அவன் அத்தகைய அபாயமான நிலையிலும் குறுநகை கொண்டதைக் கண்ட இளைவேள் வியப்பு குரலில் விரியச் சொன்னான், ‘‘இதயகுமாரா! உன் மனத்திடம் பாராட்டத் தக்கது. வீரனான உன்னைக் கொல்ல எனக்கு விருப்பமில்லை’’ என்று.

இதயகுமாரன் இதழ்களிலிருந்து இளநகை முழுநகையாக முதிர்ந்ததால் அவன் முகம் பூராவும் பொலிவுற்றது உவகையால். ‘‘உனக்கு முதுகை காட்ட எனக்கும் விருப்பமில்லை’’ என்று பதில் சொன்னான் இதயகுமாரன், எதிரி மார்பில் அழுந்திய

குறுவாளை எடுக்காமலும், சோழ நாட்டுக் குறும்பை சொற் களில் ஊடுருவ விட்டும்.

இந்தப் பதிலைக் கேட்டதும் இளையவேளின் முகத்தில் சினம் துளிர்ந்தது. ''என்னைக் கொல்ல முயன்றவனைக் கொன் றேன். அதில் என்ன தவறு?'' என்று வினவினான் இளையவேள்.

''தவறுகள் நான்கு'' என்றான் இதயகுமாரன்.

''நான்கா!''-இளையவேளின் கேள்வியில் அதிர்ச்சியிருந்தது.

''ஆம். வயோதிகனைக் கொல்ல முயன்றது முதல் தவறு. உன்னை எழுப்ப முற்பட்டவரை முதுகில் குத்தியது இரண்டா வது தவறு. அவரைக் கொன்றுவிட்டதாக நினைத்து ஓடி விட்டது மூன்றாவது தவறு. அவர் யார் என்பதை அறியாதது நான்காவது தவறு'' என்று தவறுகளை அடுக்கி னான் இதயகுமாரன்.

இதைக் கேட்ட இளையவேள் இடிந்துபோனான். ''மாரவேள் இறக்கவில்லையா!'' என்ற அவன் கேள்வியில் அச்சமிருந்தது.

''இல்லை'' என்றான் சோழ நாட்டு வீரன்.

''உனக்கு எப்படித் தெரியும்?''

''நேரில் பார்த்தேன்.''

''மீண்டும் நிலவறைக்குச் சென்றாயா?''

''இல்லை''

''வேறெங்கு கண்டாய்?''

''சேர மன்னர் அரண்மனையில். அதாவது இப்பொழுது சோழ மன்னர் அரண்மனையில் அதாவது இப்பொழுது சோழ மன்னர் வசமிருக்கும் அரண்மனையில். அரசகுமாரியின் அறையில்''

''அங்கு எப்படி வந்தார் அவர்?''

''நடந்தது''

''அரசகுமாரியின் அறைக்கு நீ எதற்குச் சென்றாய்?''

''அவளைக் காண.''



இளையவேள் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். 'மார வேளுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?'' என்று வினவினான் சில விநாடிகளுக்குப் பிறகு.

''சம்பந்தம் எனக்கில்லை.''

''வேறு யாருக்கு?''

''உனக்கும் அவருக்கும்.''

''என்ன உளறுகிறாய்?''

''நான் உளறவில்லை. அவர் சொன்னதைச் சொன்னேன்.''

''என்ன சொன்னார்?''

பதில் சொல்லச் சிறிது தாமதித்தான் இதயகுமாரன். ''கேட்டுக் கொண்டார்'' என்று முடிவில் துயரத்துடன் சொன்னான்.

''என்ன கேட்டுக் கொண்டார்?'' – இளையவேளின் குரலில் லேசாக அச்சம் தெரிந்தது.

''எந்தக் காரணத்தை முன்னிட்டும் உன்னைக் கொல்லக் கூடாதென்று எனக்கு ஆணையிட்டிருக்கிறார். இல்லையேல் உன் மார்பில் அழுந்தியிருக்கும் எனது குறுவாள் இத்தனை நேரம் உன் உயிரைக் குடித்திருக்கும்'' என்று கூறினான் சோழநாட்டு வாலிபன்.

இந்த விளக்கம் இளையவேளை அடியோடு நிலைகுலையச் செய்யவே ''எதற்காக அப்படிக் கேட்டுக்கொண்டார், ஆணையிட் டார்?'' என்று வினவினான் குரல் லேசாக நடுங்க.

''நீ அவர் பேரன் என்பதால்''–இந்தச் சொற்களை மிக நிதானமாகக் கூறினான் இதயகுமாரன்.

அச்சம் உச்சநிலைக்குச் சென்றது இளையவேளுக்கு, வியப்பு விண்ணை எட்டியது. ''நான்... நான்...'' என்று தடுமாறி னான் பதில் சொல்ல முடியாமல்.

''நீ அவர் பேரன்; அவர் பெண் வயிற்றில் பிறந்தவன்'' என்று சொற்களை மேலும் அழுத்தி உச்சரித்தான் இதயகுமாரன், இளையவேளின் மனத்தில் நன்றாகப் பதியட்டும் என்ற நோக் கத்தால்.

இளைவேளின் மனநிலை விவரிக்க இயலாததாயிருந்தது. எண்ணங்கள் பல உள்ளத்தில் ஓடியதை முகச்சாயை தெள்ளெனக் காட்டியது. ''சுத்தப் பொய். கட்டுக்கதை'' என்று கூவினான் இளையவேள் உணர்ச்சிமிகுதியால்.

அவன் அப்படிப் பதற்றப்பட்டு நிலைகுலைந்த சமயத்தில் அவன் கையிலிருந்த தனது வாளை சரேலெனப் பிடுங்கிக்கொண்ட இதயகுமாரன், ''தேவையானால் வாள்களால் தீர்த்துக் கொள்வோம் சந்தேகத்தை. அப்படியும் நான் உன்னைக் கொல்ல முடியாது. அது உன்னால் முடியலாம் இவர்கள் துணையுடன்'' என்று எதிரே நின்ற பத்து வீரர்களைக் கண்ணசைப்பால் காட்டினான். அத்துடன் தனது கால் அருகே விழுந்துகிடந்த காவலனைக் காலால் ஒரு உதைவிட்டு, ''டேய்! அவர்களைத் தண்டனிட வேண்டாம். எழுந்திரு'' என்று அதட்டினான். ''யாராவது ஒருவர் சென்று இளையவேளின் வாளைக் கொண்டு வாருங்கள்'' என்று உத்தரவும் இட்டான் எதிரே நின்ற வீரர்களுக்கு.

வீரர்களில் ஒருவன் அந்தப் பணியைச் செய்ய விரைந்தான். மற்றும் சிலர் முன்னேற முயற்சி செய்யவே ''எனது குறுவாள் உங்கள் தலைவனின் மார்பில் அழுந்தியிருக்கிறது'' என்று நினைவூட்டினான் சோழநாட்டு வீரன்.

அதனால் மீண்டு வீரர் பின்னடையவே விநாடிகளில் இளையவேளின் வாள் கொண்டுவரப்பட்டது. அதை இளையவேள் வாங்கிக் கொண்டதும் தனது வாளை உருவிக் கொண்டு சற்று இடம் விட்டு நகர்ந்து நின்ற இதயகுமாரன், கையிலிருந்த தனது வாளை ஒரு முறை சுழற்றினான்.

இளையவேளும் தனது வாளை உறையினின்றும் உருவிக் கொண்டு உறையை எட்ட இருந்த வீரனிடம் விட்டெறிந்தான். வீரன் அதைப் பிடித்துக் கொண்டதும் வாளை இருமுறை விர் விர்ரென்று ஆட்டிப் பார்த்தான் இளையவேள்.

அந்த வாள் ஆடிய விதத்திலிருந்து வாட்போரில் நிகரற்ற பயிற்சி இளையவேளுக்கு இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்ட



இதயகுமாரன் ''இப்பேர்ப்பட்ட வீரன் அற்ப புத்தியால் கெட்டுப் போகிறானே'' என்று உள்ளூர வருத்தப்பட்டு அந்த வருத்தத்துடன் சொன்னான் ''உம், ஆகட்டும்'' என்று.

அடுத்த விநாடி இருவர் வாட்களும் சந்தித்து பயங்கர ஒலிகளைக் கிளப்பின அந்த விருந்து மாளிகைக் கூடத்தில். கூடத்தின் சுவர்கள் அந்த ஒலிகளை வாங்கி எதிரொலி செய்வதற்கும், வெளியே பொழுது விடிய முற்பட்டதற்கு அறிகுறியாக திருமுக்கூடலின் அரண்மனை வாத்தியங்கள் முழங்குவதற்கும் நேரம் சரியாயிருந்தாலும், அந்த வாத்திய இசையைவிட வாட்கள் மோதிய இசை மிக இன்பமாக இருந்தது, இதயகுமாரன் செவிகளுக்கு. வாட்கள் மீண்டும் மீண்டும் சந்தித்தன. மோதின, உராய்ந்தன. சண்டை மும்முரமாகிக் கொண்டிருந்த சமயத்தில் விருந்துமண்டபத்தின் மற்றொரு பகுதியில் ஒரு பெருங்கதவு திறக்கப்பட்ட சப்தம் அனைவர் செவிகளிலும் கேட்டது. அதைத் தொடர்ந்து இன்பமான குரலில் பாடப்பட்ட ''*குஷ்யதேயத்ர நகரே ரங்க யாத்ரா தினே தினே, தமஹம் சிரஸா வந்தே ராஜானம் குலசேகரம்'' என்ற சுலோகமும் மண்டபத்தை ஊடுருவியது. பூபாள ராகத்தில் இசைக்கப்பட்ட அல்லது சுலோகம் மண்டபம் முழுவதையுமே நிரப்பியதாலோ அல்லது வேறெந்தக் காரணத்தாலோ வாட்களை உருவி நின்ற வீரர்கள் வாட்களை உறையில் போட்டனர். இளையவேளும் சட்டென்று போரை நிறுத்தினான்.

இதற்கெல்லாம் காரணமான சேரச் சக்கரவர்த்தி தாணு ரவி மந்தகாச வதனத்துடன் அந்த மண்டபத்தில் நுழைந்தான் சுலோகத்தைப் பாடிக்கொண்டே. பக்கத்தில் இரண்டு பேர் பந்தம் ஏந்தி வர பக்திப்பரவசத்துடன் பாடிக்கொண்டே உள்ளே நுழைந்த தாணு ரவி, அங்கிருந்த நிலையைக் கண்டதும் பாட்டை நிறுத்தினான். ''உங்கள் விளையாட்டை நான் நிறுத்திவிட்டேனா?'' என்ற அவன் கேள்வியில் அனுதாபமிருந்தது. ''நீ தான் இதயகுமாரனாயிருக்க வேண்டும்'' என்றும் சொன்னான் இதயகுமாரனை நோக்கி.

---

* குலசேகராழ்வார் ''முகுந்த மாலை'' என்ற பக்தி நூலின் முதல் சுலோகம்.

இதயகுமாரன் தலைதாழ்த்தி வணங்கினான் சேரமானை நோக்கி. அதைப் புன்முறுவல் இதழ்களில் கூட்டி ஏற்றுக்கொண்ட சேரச் சக்கரவர்த்தி, என்ன காரணத்தினாலோ தமது மார்பில் தொங்கிய சங்கிலிப் பதக்கத்தை நோக்கினார். பிறகு இதய குமாரனை நோக்கிக் கையை நீட்டினார்.

இதயகுமாரன் பெரும் பிரமிப்புக்கு உள்ளானான். தாணு ரவியின் அகன்ற சிவந்த மார்பில் காட்சியளித்த பதக்கத்தின் ஜோடி தான் தன் கச்சையிலிருப்பது என்பதை உணர்ந்ததால் சிலையென சில விநாடிகள் நின்ற இதயகுமாரன், தனது கச்சையிலிருந்த பதக்கத்தை எடுத்து சேரச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான். அவர் முன்பு மண்டியிட்டு வணங்கவும் செய்தான். தாணு ரவி அதைக் கையில் வாங்கிப் பார்த்துவிட்டு கச்சையில் செருகிக் கொண்டார். "இப்பொழுது மாரவேள் உயிருடனிக்கிறாரா இல்லையா?" என்று வினவினார் இதயகுமாரனை நோக்கி.

பிரமிப்பு என்ற சொல்லுக்கு ஏதாவது உவமை சொல்ல வேண்டுமானால் அதற்கு இதயகுமாரன் முகத்தைச் சொல்லலாம். சேரச் சக்கரவர்த்தி கேள்வியால் அசந்துபோன இதயகுமாரன் "இருக்கிறார்" என்ற சொல்லை மிகப் பலஹீனமாக உதிர்த்தான் உதடுகளிலிருந்து.

இதனால் சேரன் சிறிது திருப்தியடைந்திருக்க வேண்டும். "உடல்நலத்துடன் இருக்கிறாரா?" என்று இரண்டாவது கேள்வி பிறந்தது.

இந்தக் கேள்வி முதல் கேள்வியின் பலத்தை மட்டுமல்ல, இதயகுமாரன் மன வலுவையும் அழித்துவிடவே இதயகுமாரன் விழித்தான்.

"அவருக்குத் தீங்கு விளைவித்தவன் யார்" – மூன்றாவது கேள்வி சற்றுக் கடினமான குரலில் உதிர்ந்தது தாணு ரவியிடமிருந்து. "அப்படி யாராவது தீங்கு விளைவித்திருந்தால் சொல், அவனைத் தீர்த்துக்கட்டிவிடுகிறேன்" என்று சக்கரவர்த்தி மிக உக்கிரமாக அறிவித்தார்.

# 15. வான சாஸ்திரி

சேரநாட்டு வரலாற்றில் களப்பிரர் விளைத்த 'சரித்திர இரவு மறைந்தது' பொழுது புலர்ந்த காலத்தில் அதாவது சுமார்* கி.பி. 800-வது ஆண்டில் மஹோயபுரமென்றும் மஹோதயபுர மென்றும் மஹோதயப் பட்டணமென்றும் மாக்கோட்டையென்றும் பல பெயர்களால் அழைக்கப்பட்ட திருவஞ்சிக் குளத்தில் இரண் டாவது சேர சாம்ராஜ்யத்துக்கு வித்திட்ட குலசேகரவர்மன் என்ற குலசேகர ஆழ்வாரின் பேரனும், ராஜசேகரவர்மன் (கி.பி.820-840) குமாரனும், கி.பி.844ம் ஆண்டில் சேரச்சக்கரவார்த்தியாக முடி சூட்டிக் கொண்டவனும், மகாவீரனும் பாட்டன் வைணவனானாலும் பெரும் சிவபக்தனாக மாறியவனும், ஒல்லியான சிவந்த மேனி யுடனும், நல்ல உயரத்துடனும், நம்பூத்ரிகளைப்போல் முன் குடுமி வைத்துக் கொண்டவனும், கருத்த தலைமயிரிடையே ஓரிரு நரை கள் தென்பட்டாலும் வாலிபம் மாறாத முகத்துடனும் தோற்ற மளித்த தாணு ரவியின் மூன்றாவது கேள்வியாலும், அதையடுத்த அறிவிப்பாலும் நிலைகுலைந்துபோன இதயகுமாரன், சில விநாடிகள் தனது விழிகளை நிலத்தில் பதியவிட்டான்.

மாரவேளின் பதக்கத்தைக் கண்டதும் சேரமாமன்னன் கண்களில் தோன்றிய தீங்கிழைத்தவனைத் தீர்த்துக்கட்டி விடு வதாகக் கூறியபோது குரலில் தெரிந்த உக்கிர ஒலியும் இதய குமாரனைத் திக்குமுக்காட வைக்கவே அவன் அதுவரை செய் யாத குற்றத்தைச் செய்ய முயன்றான். அதாவது பொய் சொல்லுவ தென முடிவுகட்டினான்.

* குலசேகராழ்வார் "முகுந்த மாலை" என்ற பக்தி நூலின்

** The Chronology & Genealogy have learn worked out by Elamtulam Kunjan Pillai on the bayis of Epigraphical recards Refor Kerala Gazetheer Tiruchur dt. P.P. 111-112.

சேரமன்னனுக்கிருந்த வேகத்தில் மாரவேளைக் குத்தியது இளையவேள் என்று சொன்னால் இளையவேளின் உயிர் அரைச் சக்கரம் பெறாதென்பதை உணர்ந்திருந்தாலும், இளையவேளைக் கொல்லக்கூடாதென மாரவேள் வேண்டிக் கொண்டிருந்ததாலும், பொய் சொல்வதைக் தவிர வேறு வழியில்லை என்பதைப் புரிந்து கொண்ட இதயகுமாரன், நிலத்தை நோக்கியவண்ணமே சொன்னான், ''மாரவேளின் உடல்நிலை சரியில்லை'' என்று.

அந்தப் பதிலைப் பற்றி அக்கறை காட்டாத சேரர் பெருமான், ''அதைக் கேட்கவில்லை உன்னை. அவருக்குத் தீங்கிழைத்தது யார் என்று கேட்டேன்'' என்று வினவினான்.

''யாரும் தீங்கிழைக்கவில்லை'' என்று இதயகுமாரன் பதில் சொன்னான், தன்னைச் சமாளித்துக்கொண்டு சக்கரவர்த்தியை ஏறெடுத்து நோக்கி.

''பின் எதற்காக இந்தப் பதக்கத்தை உன்னிடம் கொடுத்து அனுப்பினார்?'' என்று விசாரித்த சேரர் பெருமான் இதயகுமாரனை அருகில் வரும்படி சைகை செய்தான்.

இதயகுமாரன் மெள்ள நடந்து சக்கரவர்த்தியை அணுகியதும் சக்கரவர்த்தி தமது கச்சையிலிருந்த மாரவேள் பதக்கத்தை எடுத்து அதையும், தமது மார்பில் தொங்கிக் கொண்டிருந்த பதக்கத்தையும் அக்கம்பக்கமாக வைத்து ''இதயகுமாரா! இப்பொழுது இந்த இரண்டையும் பார்'' என்று காட்டினார்.

இதயகுமாரன் இரண்டையும் ஊன்றிக் கவனித்தான் சில விநாடிகள். ''இரண்டும் ஒரே அச்சில் வார்த்த மாதிரி இருக்கிறது'' என்று பிரமிப்புடன் சொன்னான். அக்கம் பக்கத்தில் வைக்கப்பட்ட இரண்டு பதக்கங்களிலுமுள்ள கற்களின் ஜ்வாலை குறுக்கும் நெடுக்கும் பாய்ந்து பெரும் பிரமையை ஊட்டியதால் மேலும் அவற்றைப் பார்த்துக் கொண்டே இருந்தான் இதயகுமாரன் பல விநாடிகள்.



அவன் காட்டிய பிரமையால் மீண்டும் தாணு ரவியின் இதழ்களில் இளநகை அரும்பியது. ''இவை சேரர்களின் பரம்பரைச் சொத்து. என் பாட்டனார் காலத்தில் செய்யப்பட்டவை. இம் மாதிரி பதக்கங்கள் மூன்றைச் செய்தார்'' என்று குறிப்பிட்டான் தாணு ரவி.

''மூன்று!''—இதயகுமாரன் கேள்வியில் வியப்பு ஒலித்தது. மூன்றாவது எங்கே என்ற கேள்வியும் அதில் மறைமுகமாக ஊடுருவி நின்றது.

''ஆம்,மூன்றுதான். ஒன்று என் பாட்டனாரால் பெரிய பெருமாளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மற்ற இரண்டும் பெருமாள் திருவடியில் சமர்ப்பிக்கப்பட்டு எடுத்துவரப்பட்டது. அவற்றை என் தந்தை எங்கள் குலதனப்பெட்டியில் வைத்திருந்தார். அவர் கடைசி காலத்தில் ஒன்றை என் கழுத்தில் போட்டார். இன்னொன்றை நான் மாரவேளுக்குக் கொடுத்தேன். ஒரு ஒப்பந்தத்தின் பேரில்...'' என்ற சேரன் வாசகத்தை முடிக்கவில்லை.

''ஒப்பந்தமா?'' இதயகுமாரன் வினவினான். ஒப்பந்தத்தை ஊகித்தாலும் ஊர்ஜிதம் செய்துகொள்ள.

''ஆம். எங்கள் இருவரில் ஒருவருக்கு ஆபத்து நேர்ந்தால் இன்னொருவரிடம் அதை அனுப்பிவிடவேண்டும் என்பது ஒப்பந்தம்.''

''ஏன்?''

''சேரர் குலதனம் வேறொருவரிடம் போகக்கூடாது.''

''அப்படியானால் மாரவேள் சேரர் குலமா?''

''ஒரு வகையில் அப்படியும் வைத்துக்கொள்ளலாம்.''

அடுத்து ஏதோ கேட்கப்போன இதயகுமாரனைக் கையசைப்பினால் தடுத்த சக்கரவர்த்தி தாணு ரவி, ''அது ஒரு பெரிய கதை. பின்னால் பேசிக்கொள்வோம். வா என்னுடன்'' என்று கூறி உள்ளே

செல்லத் திரும்பியவரைத் தடுத்த இதயகுமாரன், ''சேரர் பெருமானே! என்னைப் பெயர் சொல்லி அழைத்தீர்கள்'' என்று மெள்ளப் பேசினான்.

''ஆம். அழைத்தேன். அதனாலென்ன? உன் பெயர் அதுதானே?'' என்று சக்கரவர்த்தி கேட்டார். உள்ளே செல்ல முயன்றவர் சற்று நின்று திரும்பி.

''என்னை இதற்கு முன்பு பார்த்ததில்லை நீங்கள்.''

''பார்த்ததில்லை.''

''அதனால்?''

''பார்த்துத்தான் யார் யார் எது எது என்று அறிந்து கொள்ள வேண்டுமானால் நாட்டை ஆள்பவனுக்கு ஒரு ஆயுட்காலம் போதாது.''

''வேறு எப்படி?''

''வழிகள் பல இருக்கின்றன. சோழநாட்டில் ஒரு பெரிய வீரன், துணிவிலும் செயலிலும் நிகரற்றவன், அழகிகளையெல்லாம் பார்த்த மாத்திரத்தில் இளகச் செய்பவன், அவனைப் பற்றிய விவரங்களை அறியாமலிருக்க முடியுமா?'' என்ற தாணு ரவி இதயகுமாரா! நீகூட சிந்திக்கலாம், இத்தனை தெரிந்த சேர மன்னனுக்குத் தனது இரண்டாவது தலைநகரம் சோழ வீரர்களால் நிரப்பப்பட்டதும், திடீரெனக் கைப்பற்றப்பட்டதும் எப்படித் தெரியாதிருந்தது என்று. எதற்கும் காரணமுண்டு. என் அறியாமையாலோ பலவீனத்தாலோ விஜயாலயன் கரூர் வஞ்சியைப் பிடித்துவிட்டதாக நினைக்கவேண்டாம்'' என்றும் சொன்னான். அத்துடன் திரும்பி நடந்தான் உட்புறமாக.

இதயகுமாரன் ஒரு விநாடி இளையவேளைத் திரும்பி நோக்கினான். அந்த சமயத்தில் இளையவேளின் முகத்தில் அச்சமில்லை. இகழ்ச்சியே நின்றது. அதனால் சற்றுப் பொறுமையை



இழந்தாலும் சினத்தை அடக்கிக்கொண்டு சேரமானைத் தொடர்ந்தான் இதயகுமாரன்.

இரண்டு மூன்று கட்டுகளைத் தாண்டிச் சென்ற சேரமான் கடைசியில் பிரும்மாண்டமான ஒரு அறைவாயிலுக்கு வந்தான். சேரமான் வந்த இடங்களில் எல்லாம் காவல் பலமாயிருந்ததையும், ஒவ்வொரு கட்டைத் தாண்டும்போதும் சேரமானுக்கு மட்டுமன்றி தனக்கும் காவலர் தலைவணங்கியதையும் கண்ட இதயகுமாரன், அந்த மாளிகை, விருந்து மாளிகை மட்டுமன்றி, சேரனின் பல அலுவல்களுக்கு அந்தரங்க மாளிகையுங்கூட என்பதைப் புரிந்து கொண்டான். அந்த உணர்வின் விளைவாக மௌனமாகவே மன்னனைத் தொடர்ந்த இதயகுமாரன், ஒரு அறை வாயிலில் மன்னன் நின்றதும் தானும் நின்றான்.

மன்னன் சில விநாடிகள் அந்த அறை வாயிலிலேயே நின்றிருந்துவிட்டு பிறகு மெள்ள கதவைத் தட்டினான் வலது கையால். ''யாரது?''என்று உள்ளேயிருந்து வந்தது ஒரு கேள்வி அதிகாரக் குரலில்.

''தாணு ரவி'' என்று சேரமான் மிகுந்த பணிவுடன் பதிலுறுத்தான்.

''வரலாம்''என்று அனுமதிக் குரல் ஒலித்தது.

தாணு ரவி வாயை மூடிக்கொண்டு தன்னைத் தொடரும்படி இதயகுமாரனுக்குச் சைகை செய்துவிட்டுத் தனது பாதுகையை வெளியே விட்டு அந்த அறைக்கதவைத் திறந்துஉள்ளே நுழைந்தான் மெல்லடி வைத்து.

இதயகுமாரனுக்குப் பாதக்குறடு ஏதுமில்லாததால் சேரமானை பின்பற்றி உள்ளே சென்றவன் திகைத்துப் பல விநாடிகள் பயபக்தியுடன் நின்றான் சிலைபோல.

அந்த அறை மிக விசாலமாயிருந்தது. வினோதமும் விபரீதமுமான பல சித்திரங்கள் அந்த அறையின் சுவர்களை அலங்கரித்தன.

அந்த அறையின் ஒரு மூலையில் அமைக்கப்பட்டிருந்த பெரிய மேடையில் வாலிப வயதைச் சிறிதே தாண்டிய ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் கோபி சந்தனமொன்று மிக அழகாகத் தீட்டப்பட்டிருந்தது. அந்த மேடைக்கு மேலே தெரிந்த மூன்று துவாரங்களிலிருந்து வந்த விடியற்கால வெளிச்சம் மூன்று பட்டைகளாக மேடையில் விழுந்திருந்தது. அந்த மூன்றுக்கும் நடுவே அமர்ந்திருந்த அந்த மனிதர், உள்ளே வந்த சேரமானை ஒரு முறை பார்த்துவிட்டு மீண்டும் கையிலிருந்த ஓலைக்கட்டில் கவனத்தைச் செலுத்தினார். பிறகு எழுந்திருந்து தளத்தின் ஒரு துவாரத்தின் மூலம் மேலே நோக்கினார்.

இதயகுமாரன் மெள்ள மன்னனை அணுகினான். அவன் தன்னை அணுகியதை உணர்ந்த மன்னன் அவன் கையைப் பிடித்து அழுத்தி ஏதும் பேசவேண்டாமென்று குறிப்புக்காட்டினான். அதனால் மீண்டும் ஊமையாகிவிட்ட இதயகுமாரன், விந்தைக் கண்களுடன் அந்த மனிதரைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சுமார் அரை நாழிகை நேரத்திற்குப் பிறகு எதிரே நின்ற இருவரையும் நோக்கிய அந்த மனிதர் இதயகுமாரனைக் கண்டதும் புன்முறுவல் கொண்டார். ''இவன் காலில் சூரியரேகை இருக்கிறது. பெரிய சாம்ராஜ்யமொன்றை நிறுவ இவன் உதவுவான்'' என்றார் மிக அமைதியான குரலில்.

அன்றுவரை தன் காலைப் பார்க்காத இதயகுமாரன் அந்த மனிதர் சொன்னதைக் கேட்டதும் கரை கடந்த ஆச்சரியத்தை அடைந்தான். அந்த ஆச்சரியம் பூர்த்தியாகு முன்பு அந்த மனிதர் முன்பு சேரமான் மண்டியிடவே இதயகுமாரனும் மண்டியிட்டு அவரை வணங்கினான்.

அந்த மனிதர் மேடையிலிருந்து இறங்கி வந்து இருவர் தலை மீதும் தனது வலது கையை வைத்து ஆசீர்வதித்து ''எழுந்திருங்கள்'' என்று அனுமதிக்கவே, இருவரும் எழுந்து நின்றனர்.

அந்த மனிதர் அவர்களை ஆசீர்வதித்துவிட்டு மீண்டும் தமது மேடையை அடைந்தார். அந்த சமயத்தில் மிகுந்த மரியாதை



யுடனும் மெதுவான குரலிலும் சேரமான் அந்த மனிதர் யாரென்பதை இதயகுமாரனிடம் சொன்னான்.

''இதயகுமாரா! இப்பொழுது நீ இந்த சகாப்தத்தின் மிகப் பெரிய தபஸ்வியும், வானசாஸ்திரியுமான சங்கர நாராயணன் முன்னிலையில் நிற்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறாய். அவர் முக்காலமும் அறிந்தவர். என் பாட்டனார் வைணவ ஆழ்வாரானாலும் சங்கரநாராயண பட்டரின் உபதேசத்தால் நான் சைவத்தைக் கடைப்பிடித்தேன். **'லகு பாஸ்கரீயா' என்ற மகத்தான வான சாஸ்திரத்தை எழுதியவர் இவர்தான். என்குருநாதர்'' என்று விளக்கினான் தாணு ரவி!

அந்த சமயத்தில் மேடைமீதிருந்த வான சாஸ்திரி, இதயகுமாரனை நோக்கி, ''திரிவேணியில் நீராடி வா. இன்று ஹோமம் இருக்கிறது'' என்று கூறினார்.

அவர் கட்டளைப்படி நடக்க சேரமான் கண்களைக் காட்டியதால் இதயகுமாரன் மெள்ளப் பின்னடைந்து அறைக்கதவை, நோக்கிச் சென்றான். அறைக்கதவை அவன் அடைந்ததும் கதவு தானாகத் திறந்தது. வாயிற்படியைத் தாண்டிச் சென்ற இதயகுமாரன், தனக்குப்பின்னால் சாத்திக் கொண்ட கதவைப் பார்த்தான். பிறகு அங்கு காவல் புரிந்த காலவரைப் பார்த்தான். காவலர் யாருமில்லை. அந்தர்த்தானமாகி விட்டனர். உள்ளிருந்து ஏதோ சக்கரம் சுழலுவது போலும் தடதடவென்று உருளைகள் தள்ளப்படுவதுபோலும் ஒலிகள் கேட்டன. அந்த சமயத்தில் இளையவேளும் அங்கு வந்து சேர்ந்தான். அவன் போக்கு அடியோடு மாறி இருந்தது. இதயகுமாரனுக்குத் தலைவணங்கி ''இப்படி வாருங்கள், திருமுக்கூடலுக்குச் செல்வோம்'' என்று வழிகாட்டி நடந்தான் இளையவேள். இதயகுமாரன் அவனைத் தொடர்ந்தான் பலத்த சிந்தனையுடன்.

---

** The Famous Astronomer Sankar Narayanan, author of 'Lagu Bhaskariya' The famous Astronomical work, resided in the court of Sthanu Ravi Kerala Gazetheer P.P. 111-112

# 16. அக்னி குண்டம்

**வா**ன சாஸ்திரியான சங்கரநாராயணன் ஆராய்ச்சி அறையிலிருந்து வெளியே வந்த இதயகுமாரனுக்குப் பல விஷயங்கள் புதிராயிருந்தன, பல விஷயங்கள் புரியவில்லை. தான் முதலில் அந்த விசித்திர அறைக்குள் புகும்போதிருந்த பல காவலரில் மருந்துக்குக்கூட ஒருவன் இராமல் திடீரென அந்தர்த்தானமாகி விட்டது புதிராயிருந்தது; அந்தக் காவலருக்குப் பதில் இளையவேள் தன்னை வரவேற்றதும் தனக்குத் தலைவணங்கியதும் புதிதாயிருந்தது; தன்னை முக்கூடலுக்கு இளையவேள் நீராட அழைத்ததும் புதிராயிருந்தது; அறைக்குள் வான சாஸ்திரி இட்ட ஆணை இளையவேளுக்குத் தெரியக் காரணமில்லையாகையால், புதிய விஷயங்கள் இவை.

சேரர்களின் இரண்டாவது சாம்ராஜ்யத்தில், பழைய மகத்துவத்தை இழந்தாலும் இரண்டாவது தலைநகரமாகத் தொடர்ந்திருந்த கரூர் வஞ்சியை சோழன் கைப்பற்றியது தெரிந்தும் சேரன் கையைக் கட்டிக்கொண்டு வாளாவிருந்த காரணம் புரியவில்லை; வான சாஸ்திரிக்கும் அரசியல் சாஸ்திரத்துக்கும் என்ன சம்பந்தமிருக்க முடியுமென்பதும் புரியவில்லை; இரண்டு நாட்களுக்கு முன்பு தனது மகளாயிருந்த கண்ணழகி என்ன ஆனாள் என்பதைக் கூட மன்னன் விசாரிக்காதது ஏன் என்றும் புரியவில்லை; தான் நீராடிய பின்பு ஹோமத்துக்கு வரும்படி எதற்காக அழைத்தார் வான சாஸ்திரி என்பதும் புரியவில்லை; மாரவேளைக் குத்தியவனைப் பற்றித் தான் ஏதும் சொல்லாதிருக்க, அதைப் பற்றி மேலும் மன்னன் விசாரிக்காதிருந்த காரணமும் புரியவில்லை. புரியாத விஷயங்கள் இவை.

இப்படி இருவகை விஷயங்களில் மனத்தைச் செலுத்தியதால் இளையவேளுடன் ஏதும் பேசாமலே பல கட்டுகளையும் தாண்டி, விருந்து மாளிகையை விட்டு வெளியேறினான் இதயகுமாரன். இதயகுமாரன் சிந்தனை வசப்பட்டு ஏதோ நகரும் பாவை போல் தன்னைத் தொடர்ந்து வந்ததை இளையவேள் கவனித்தாலும் அதைப்பற்றி ஏதும் கேட்காமலே முன்னே சென்றான் இளையவேள்.

அவர்கள் இருவரும் விருந்து மாளிகையை விட்டு வெளியே வந்ததும் பொழுது நன்றாகப் புலர்ந்திருந்ததால் எங்கும் மனித நடமாட்டம் காணப்பட்டது. ஏதோ ஒரு தெருவிலிருந்து வந்த ஒரு பெரும் பசுக்கூட்டம் அந்தமாளிகை வீதியில் வரவே இதயகுமாரன் ஒருபுறமாக ஒதுங்கி அந்தக் காட்சியில் மனத்தைப் பறிகொடுத்தான். ஆவினங்கள் சில கத்திக்கொண்டும் சில கனைத்துக்கொண்டும் சென்றன. சில இதயகுமாரன்மீது இடித்துக்கொண்டும் விரைந்து நடந்தன. அந்தக் கூட்டத்தில் வந்த இரு காளைக் கன்றுகள் வாலை முறுக்கிக்கொண்டு உயரத் துள்ளிக் குதித்து 'அம்மா'வென்று அன்புக்குரல் கொடுத்தன. எட்ட இருந்த மூன்று நதிகளின் சேர்க்கையைத் தழுவி வந்த காற்று மிக இன்பமாக இதயகுமாரன் முகத்தில் தாக்கவே அவற்றை முகர்ந்துகொண்டு முகவிலாசங் கொண்டு நடந்தான் அவன் இளையவேளுடன்.

எதிரே தெரிந்த ஆன்பொருனையின் பெரும் கரையிலிருந்து இறங்கிய அந்தணர்கள் சிலர் விடியற்கால நீராட்டத்தை முடித்திருந்ததால் சேர மன்னன் சொன்ன முகுந்தமாலை சுலோகத்தையும் அந்தக் கிரந்தத்தின் அடுத்த சுலோகங்களையும் இரைந்து இன்ப ராகத்தில் பாடிக்கொண்டும், நெற்றியில் பளிச்சென்று இட்ட திருநாமத்துடனும் விபூதியுடனும் வந்துகொண்டிருந்தார்கள். வந்தபோது தங்கள் துணிகளை முறுக்கி விரித்து உதறிக்கொண்டும் சில துணிகளை முறுக்கி தலைமீது வைத்துக்கொண்டும் திவ்ய நாமங்களைப் பாடிக்கொண்டு வந்தார்கள். சிலர் கைகளில் பளபளவென்று துலக்கப்பட்ட தாமிரச் செம்புகளில் நீரை நிரம்பியிருந்தார்கள். அவர்கள் பசுக்கூட்டங்களிடை வந்ததும் அந்தப்

தொட்டுக் கண்ணில்
பசுக்களின் பின்பகுதியைக் கைகளால் அப்படி வந்த அந்தணர்களின்
ஒற்றிக்கொண்டு நடத்தார்கள். விழிக்கும் பறவை இனங்கள்
தலைக்கு மேலே விடியற்காலத்தில்
கூட்டமாகப் பறந்து சென்றன.

இப்படி வந்த அந்தணர்கள்மீது பசுக்கள் மோதாதிருக்க 'உம் உம்'என்று சத்தம் போட்டும்
ஆநிரை மேய்க்கும் பையன்கள் மாடுகளை ஒதுக்கினார்கள்.
சிறு கழிகளால் மெல்லத் தட்டியும் இருவர் புரவிகளில் உட்கார்ந்த
சற்று எதிரே வந்த புரவிக்காவலர் செல்ல வழிவிட்டனர்.
வண்ணம் சற்று அவற்றை விலக்கி மாடுகள் சிலரும் கன்னிப்
காலையில் நீராடிய திருமுக்கூடல் திருமதிகள் மருங்கில்
பெண்களும் உடலில் ஒட்டிய புடவைகளுடனும், நடந்துவந்தகொண்டிருந்
குடங்களுடனும் *இட்டிடை அசங்க எழில்களுடன் இணைந்த
தாலும் ஒட்டிய சீலைகள் அவர்கள் விவரணத்துக்கும் அப்பாற்
தாலும் ஏற்பட்ட மனோகரக்காட்சி
பட்டதாயிருந்தது.

இத்தகைய இன்ப ஜாலங்களையெல்லாம் பார்த்துக் கரைமேட்டில் ஏறி அகண்ட
கொண்டே ஆன்பொருனையின் இதயகுமாரன் தன்
மான பிரவாகத்தில் கண்களை ஒட்டிய பறிகொடுத்தான்.
மனத்தையெல்லாம் அந்த மூன்றுநதிகளிடமும் என்று பைந்தமிழி
திரிவேணி என்று வடமொழியிலும் முக்கூடல் சங்கமத்தைப்
லும் பெயர்பெற்ற அந்த மூன்று நதிகளின் தமிழகத்
பார்த்த இதயகுமாரன், வடநாட்டுத் திரிவேணிக்கும் வேறுபாடு
தின் திரிவேணியான திருமுக்கூடலுக்கும் ஒரு
இருப்பதைக் கவனித்தான்.

''வடநாட்டுத் திரிவேணியில் கங்கையும் யமுனையும் வாஹினியாக அடியில்
கூடுவது தெரிந்தாலும் சரஸ்வதி அந்தர் அப்படி
ஓடுவதால் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆகையால் கவிக்கூற்றிலுமிருந்தும்
ஒரு நதி இருப்பதை ஊகத்திலிருந்தும்

* இட்டிடை –சிற்றிடை– ஜீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் பிரயோகம்



தான் அறியமுடியும். அதுவும் *காளிதாஸன் விளக்கத்தால் தான் புரிந்துகொள்கிறோம். ஆனால் இந்தத் திருமுக்கூடலில் அப்படியில்லை. ஆன்பொருனையும், மணிமுத்தா நதியும் காவிரியுடன் சங்கமமாவது நேரிடையாகவே தெரிகிறது. இதனால்தான் கங்கையின் புனிதமாய காவிரி'' என்று பிரபந்த கர்த்தாக்கள் சொல்லியிருக்க வேண்டும்'' என்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

முந்நதிகளும் இணைந்த காட்சியும், அதனால் ஏற்பட்ட காவிரியின் அகண்டமான பரப்பும் அவன் சிந்தையை அள்ளிச் செல்லவே நீண்ட நேரம் சிலையென நின்றான். பிறகு அங்கியைக் களைந்து கரையில் வைத்துவிட்டு அது காற்றிலடித்துக்கொண்டு செல்லாதிருக்க வாளை அதன்மீது வைத்து விட்டு நீரில் இறங்கிப் பாய்ந்துவிட்டான். நீருக்குள்ளேயே நீண்ட நேரம் நீந்தி முந்நதி வெள்ளத்தில் கால் தூரம் சென்று தலைதூக்கிய இதயகுமாரன், இறையவேள் அதிக ஆழத்தில் இறங்காமல் கரையோரத்திலேயே குளிப்பதைப் பார்த்து நகைத்தான். பிறகு அதிக நேரம் துளையாமல் திரும்ப கைமாறு போட்டு நீந்தி கரைக்கு வந்தான். அவனுக்கு முன்னதாகவே கரையேறி துண்டைப் பிழிந்து தலை துவட்டிக் கொண்ட இளையவேள் துண்டைக் கொடுக்கவே, அதை வாங்கி, நீரில் நனைத்துப் பிழிந்து, தலைதுவட்டி, உடலையும் துவட்டிக்கொண்ட இதயகுமாரன் துண்டைக் கட்டிக்கொண்டு சராயையும் கழற்றிப் பிழிந்து உலர்த்தினான்.

ஆடைகள் உலர்ந்தபின்பு அவற்றை மீண்டும் அணிந்து விருந்து மாளிகை வந்த இதயகுமாரனையும் இளையவேளையும் வரவேற்ற விருந்து மாளிகைத் தலைமை அதிகாரி இளையவேளை சிற்றுண்டி அருந்த அழைத்தான். இதயகுமாரனை நோக்கி, ''உங்களுக்கு சிற்றுண்டி அளிக்க வேண்டாமென மன்னர் உத்தரவிட்டிருக்கிறார். உங்களுக்காக சாஸ்திரியார் அறையில்

* நதீமியாந்த ஸலிலம் ஸரஸ்வதீம் – காளிதாஸன் ரகுவம்சம் – மூன்றாவது சர்க்கம்.

காத்திருக்கிறார்'' என்று கூறவே இதயகுமாரன் அந்த அறையை நோக்கி நடந்தான். கடைசியில் அறை முகப்பில் வந்தபோது காவலரிருவர் பணிந்து கதவைத் திறக்க உள்ளே சென்றான் இதயகுமாரன்.

அந்தக் காலையிலும் அந்த அறையில் அதிக வெளிச்சமில்லை. அறையில் சாளரமேதும் வைக்கப்படவில்லையென்பதை அப்பொழுதுதான் கவனித்த இதயகுமாரன் பகலிலும் அங்கு சூழ்ந்த அரைகுறையான அந்தகாரத்துக்குக் காரணத்தைப் புரிந்துகொண்டான். பகல் நன்றாக ஏறி இருந்தாலும் வான சாஸ்திரி உட்கார்ந்திருந்த மேடைக்கு மேலிருந்த மூன்று துளைகளும் மூடப்பட்டிருந்ததன் விளைவாக மிக மங்கலான வெளிச்சமே அறையில் நிலவியிருந்தது. மேடைமீதிருந்த அக்னிகுண்டத்தின் ஜ்வாலை மட்டும் இல்லாதிருந்தால் நிலைமை இன்னும் பயங்கரமாயிருந்திருக்கும். அக்னிகுண்டத்தின் ஜ்வாலை நன்றாக விசிறியதாலும், அதன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சங்கரநாராயணன் அரசமர சமித்துக்களை (சுள்ளிகளை) அதில் அடிக்கடி போட்டுக்கொண்டிருந்ததாலும், கிண்ணத்திலிருந்த நெய்யையும் தாராளமாக விட்டதாலும், சற்று எட்ட நின்றிருந்த தாணு ரவியை இதயகுமாரன் பார்க்க முடிந்தது.

சேரமன்னன் அன்று நன்றாக நீராடி தன் முன் குடுமியை ஒருபக்கம் சாய்த்து அழகுற முடிந்திருந்தான். அவன் மார்புப் பதக்கம் அவன் அழகிய திருமேனிக்கு மெருகு அளித்ததா அல்லது திருமேனியின் செந்நிறந்தான் பதக்கத்துக்கு அழகு கொடுத்ததா என்று புரியவில்லை சோழநாட்டு வாலிபனுக்கு. தாணு ரவியும் சங்கரநாராயணனும் அன்று ஒரேவிதமாக கோபி சந்தனம் தீட்டியிருந்தார்கள். இவற்றையெல்லாம் கவனித்த இதயகுமாரனை நோக்கிய மன்னன், ''நீ சென்று அக்கினியை வணங்கு'' என்று உத்தரவிட்டான். அவர் சொற்படி இரண்டடி முன்னே நடந்து அக்னிகுண்டத்தையும் வான சாஸ்திரியையும் சேர்த்து வணங்கினான் இதயகுமாரன்.



அதுவரை கண்களை மூடி ஏதோ முணுமுணுவென்று மந்திரங்களை ஓதிக்கொண்டிருந்த சங்கரநாராயணன் கண்களைத் திறந்து ''இனி ஆரம்பிக்கலாமா ஹோமத்தை?'' என்று வினவினார்.

''ஆரம்பிக்கலாம்'' என்று மன்னன் கூற ''இருவரும் அருகில் வாருங்கள்'' என்று அழைத்தார் சாஸ்திரி.

இருவரும் மேடை அருகில் சென்று மீண்டும் சாஸ்திரியை வணங்க, சாஸ்திரி கையைத் தூக்கி மன்னனையும் இதயகுமாரனையும் ஆசீர்வதித்தார். ''இனி மேடைக்கு வாருங்கள்''என்று அவர் உத்திரவிட இருவரும் மேடையில் ஏறி அக்னிகுண்டத்தின் அருகில் சென்றுஅவர் காட்டிய இரு இடங்களில் உட்கார்ந்ததும், சாஸ்திரி கிழக்குப் பார்த்தும், தானும் மன்னனும் வடக்கு தெற்காக எதிரும்புதிருமாக உட்கார்ந்திருப்பதையும் கவனித்த இதயகுமாரன், ''இவற்றிலெல்லாம் ஏதோ முறையிருக்கிறது'' என்று தீர்மானித்துக்கொண்டான்.

அரசனும் இதயகுமாரனும் உட்கார்ந்தபிறகு அவர்கள் கையில் நிறைய அரசுச் சுள்ளிகளைக் கொடுத்த சங்கர நாராயணன் சொன்னார், ''இன்னும் நூற்று எட்டு தரம் சுள்ளியால் ஹோமம் செய்யவேண்டும். நமது சுள்ளிகள் முடிந்ததும் புகையால் திணறுவோம். அறை புகைக்குள் மறைந்துவிடும். அப்பொழுது மேலுள்ள ஒரு வட்டத்தின் மூடி அகலும். அந்த சமயத்தில் கண்களை அந்தத் துளைக்கு நேரே செலுத்துங்கள்.பார்த்ததைச் சொல்லுங்கள். பிறகு நான் விளக்குகிறேன்'' என்றார் வானசாஸ்திரி.

சாஸ்திரி சொன்னபடிதான் சகலமும் நடந்தது.வெகு சீக்கிரத்தில் அறையைப் புகை சூழ்ந்துகொண்டது. இதயகுமாரன் மூச்சு விட முடியாமல் திக்குமுக்காடினான். அந்த சமயத்தில் எழுந்தது சங்கரநாராயணனின் கடுமையான குரல், ''மேலே பாருங்கள்'' என்று.

மன்னனும் மன்னனைத் தொடர்ந்து இதயகுமாரனும் மேலே பார்த்தார்கள். ''விசித்திரம் விசித்திரம்''என்றான் இதயகுமாரன்.

''என்ன தெரிகிறது உனக்கு?''–சங்கரநாராயணன் குரல் எங்கிருந்தோ ஒலித்தது.

''சூரியன்.''

''அப்புறம்?''

''சூரியனைச் சுற்றி சிவப்புக்கோடு ஒன்று வளையமாகத் தெரிகிறது.''

''நல்லது நல்லது'' என்று குதூகலித்த சங்கரநாராயணன், ''இன்னும் என்ன தெரிகிறது?''என்று வினவினார்

''ஏதும் தெரியவில்லை.''

''சரி; உன் கண்ணின் வீட்சியம் போதாது''என்று சொல்லி அறை கோடிக்குச் சென்று செப்புத் தகடு ஒன்றை கொண்டுவந்தார் வான சாஸ்திரி.

அதை சூரியன் தெரிந்த மேல் துளையை நோக்கி நீட்டினார். அந்தத் தகடில் சூரியனும் அதைச் சுற்றிய சிவப்பு வளையமும் தெரிந்தது ''தகட்டை உற்றுப் பார்''என்று ஆணையிட்டார் வான சாஸ்திரி. இப்படிக் கூறிவிட்டு ஏதோ ஒரு மையைத் தகட்டில் தடவினார்.

மை தீட்டப்பட்ட அந்தத் தகட்டை உற்றுநோக்கினான் இதய குமாரன். அவன் சித்தம் ஈடு சொல்ல முடியாத பிரமையை அடைந்தது. அந்தத் தகட்டின் மை நடுவே தோன்றினாள் கண்ணழகி. அவள் கையில் மோகனச் சிலை இருந்தது. ''கண்ணழகி! அந்தச் சிலையைத் திருப்பு''என்று உத்தரவிட்டார் சாஸ்திரி. அவர் சொற்படி சிலையைத் திருப்பினாள் அவள். ''இனி அதன் முதுகி லுள்ள தையலைப் பிரி'' என்று மேலும் உத்தரவிட்டார் சாஸ்திரி. அவள் அந்தப் பணியை நிறைவேற்ற முனைந்த சமயத்தில் அவள் கையை ஒரு கை பற்றி நிறுத்தியது. அது வேறு யார் கையுமல்ல, தனது கைதானென்பதைப் புரிந்துகொண்ட இதயகுமாரன் பிரமிப்பின் எல்லையை எய்தினான்.

அடுத்து வானசாஸ்திரி எடுத்த நடவடிக்கை இதயகுமாரனைப் பெரிதும் அசரவைத்தது. ''இப்பொழுது இந்தத் தகட்டை



அக்னிகுண்டத்தின் நடுவில் வை'' என்றார் சாஸ்திரி. அதற்கு இணங்கவில்லை இதயகுமாரன். கண்ணழகியும் மோகனச்சிலை யும் அப்பொழுதும் அந்தத் தகடு மையில் காட்சியளித்தனர். ''இந்த உருவங்கள் மறையும்வரை நான் ஏதும் செய்யமாட் டேன்'' என்று திட்டமாகச் சொன்னான் இதயகுமாரன்.

''குருநாதர் சொன்னபடி செய்'' என்று எழுந்தது சேரமன்னன் ஆணை கடுமையாக.

அந்தக் கடுமையையும் லட்சியம் செய்யவில்லை இதய குமாரன்.

அடுத்து சேரமான், சாஸ்திரி இருவருமே நகைத்தார்கள் பெரிதாக.

## 17. சாஸ்திரியின் சோதிடம்

கண்ணழகியின் கட்டமுகைத் தாங்கிய செப்புதகடை அக்னி குண்டத்தின் செந்தணலில் வைக்க மறுத்ததும், சேரமானும் சாஸ்திரியும் பெரிதாக நகைத்ததற்குக் காரணம் புரியாததால் விழித்த இதயகுமாரனுக்கு மேலும் பல விந்தைகள் அந்த அறை யில் காத்திருந்தன. அறையைச் சூழ்ந்திருந்த புகை சட்டென்று மறைந்தது, அறையிலிருந்த அந்தகாரமும் மறைந்து சிறிது வெளிச்சமும் உள்ளே நுழைந்திருந்தது. வெளிச்சத்திற்குக் காரணம் எதுவாயிருக்குமென்று கூரையிலிருந்த மூன்று துளை களையும் அண்ணாந்து பார்த்த சோழ வாலிபன் அவற்றில் ஒன்று கூடத் திறக்காததைப் பார்த்து வியப்பின் எல்லையை அடைந்தான். அந்த எல்லையை மீறும் காட்சி அந்த அறையின் நாலாப்புறங் களிலும் தெரிந்ததால் மீண்டும் மீண்டும் தன்னைச் சுற்றியிருந்த அறைச்சுவர்களையும் அவற்றிலிருந்த பல சித்திரங்களையும் விசித்திரப் பொருள்களையும் கவனித்தான்.

ஒருபக்கச் சுவரில் நவக்கிரகங்கள் நன்றாகத் தீட்டப்பட்டி ருந்தன. எந்தெந்தக் கிரகங்களுக்கு எந்தெந்த வண்ணம் தேவையோ அந்தந்த வண்ணங்களே பூசப்பட்டிருந்தன. சனி பகவானையும் அவன் காக்கையையும் நல்ல கரிய நிறத்திலும், சூரியனையும் அவன் தேரையும் அருணனையும் நல்ல சிவப்பிலும் தீட்டியிருந் தான் ஓவியன். இன்னொரு பக்கச் சுவரில் பெரும் பிசாசுகள் நாக்கை பயங்கரமாகத் தொங்கப்போட்டுகொண்டும் சில பெரும் பற்களைக் காட்டிப் பயங்கரமாக நகைத்துக் கொண்டும் காட்சியளித்தன. மற்றொரு சுவரில் இவற்றுக்கெல்லாம் நேர் விரோதமாக அப்சர மங்கையர் உருவங்கள் தென்பட்டன. ஆனால், சாஸ்திரியும் தானும் மன்னனும் உட்கார்ந்திருந்த மேடைக்கு பின்னால் மட்டும் காலருத்திரனும் பிரளய



நாராயணனுமாக இருபேருருவங்கள் அபயக்கரங்களுடன் காணப்பட்டன.

இப்படி நாற்புறமிருந்த சித்திரங்களைத் தவிர அறையின் ஒரு மூலையில் குழந்தைகளின் விளையாட்டு வண்டிகளின் சக்கரங்கள்போல் நான்கு சக்கரங்கள் உருண்டு கிடந்தன. இரண்டு பெரிய மண்மோடாக்கள் ஒரு மூலையில் நீர் நிரப்பப்பட்டு இருந்தன. இவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு மீண்டும் சேரனையும் சாஸ்திரியையும் பார்த்தபோது அவர்கள் பெருநகைப்பு நின்றிருந்தது. ஆனால் புன்முறுவல் இருவர் உதடுகளிலும் நிரம்பி நின்றது.

தங்களை இதயகுமாரன் நோக்கியதும் சாஸ்திரி அவனை நோக்கித் தனது கையொன்றை நீட்டி ''தகட்டைக் கொடு'' என்று கேட்டார். இதயகுமாரன் யோசித்தான் கொடுக்க. ''அதைப் பார்'' என்று சாஸ்திரி கூறினார் அனுதாபம் நிறைந்த குரலில். இதய குமாரன் தனது கையிலிருந்த தகட்டின மீது கண்களை ஒட்டி னான். அதிலிருந்த மை அடியோடு மறைந்துவிட்டது. செப்புத் தகடில் காணப்பட்டன சில கோடுகள். சில எழுத்துக்கள். ஆகவே அந்தத் தகட்டை சாஸ்திரியின் கையில் இதயகுமாரன் கொடுக்க, அதைத் தமது பக்கத்தில் வைத்துக் கொண்ட சாஸ்திரி ''இதய குமாரா! இன்று உன் கதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது'' என்று மிக அடக்கமான குரலில் சொன்னார்.

இதயகுமாரன் அவரை வியப்பு ததும்பிய விழிகளுடன் நோக்கினான். ''என் கதியா! நிர்ணயிக்கப்பட்டதா? யாரால்?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''சூரியபகவானால்!'' என்றார் சாஸ்திரி.

''சூரியபகவானாலா! திடீரென அவருக்கு என்மேல் இத்தனை அக்கறை வரக் காரணம்?'' என்று வினவினான் இதயகுமாரன்.

இதைக் கேட்ட சாஸ்திரி புன்முறுவல் கொண்டார். ''சோழநாட்டுக் குறும்பு உன் கேள்வியில் தெரிகிறது. ஆனால் இது விளையாட்டு விஷயமல்ல. உனது வலது காலைத் திருப்பிப் பார்'' என்று கூறினார் சங்கரநாராயணன்.

உட்கார்ந்த நிலையிலேயே வலது உள்ளங்காலைத் திருப்பிப் பார்த்தான் இதயகுமாரன். அதில் செக்கச்செவேலென்று ஒரு வளையம் இருந்தது. அதன் தோற்றம் பார்ப்பதற்கு சூரியன் போலிருந்தது. ''இவன் காலில் சூரிய ரேகையிருக்கிறது'' என்றுதான் முதலில் வந்தபோது சாஸ்திரி சொன்னதை நினைத்துப் பார்த்த இதயகுமாரன், தனது பாதத்தையும் நோக்கி அவரையும் நோக்கினான்.

வான சாஸ்திரியின் கண்கள் இதயகுமாரன் கண்களைக் கவர்ந்து நின்றன சில விநாடிகள். பிறகு அவர் உதடுகள் திறந்து கேள்விகளை உதிர்த்தன. ''இதை இதற்கு முன்பு பார்த்திருக்கிறாயா?'' என்று எழுந்தது சங்கரநாராயணன் முதல் கேள்வி.

''இல்லை''—இதயகுமாரன் பதிலில் சிறிது சங்கடம் ஒலித்தது.

''ஏன்?''

''ஏனென்று தெரியவில்லை.''

''மனிதனுக்குப் பல விஷயங்கள் தெரிவதில்லை. அவன் உடலில் இறைவன் பிறப்பின்போதே விதித்த லட்சணங்களை அவன் அறிவதில்லை'' என்று பொதுப்படையாக மனித அறிவீனத்தை விளக்கிய சாஸ்திரி, ''இதயகுமாரா! சூரியனுக்கு உன்மேல் என்ன அக்கறை என்று கேட்டாய். சூரியன் அனுக்கிரகத்துடன் நீ பிறந்திருக்கிறாய். அதுமட்டுமல்ல சூரிய வம்சத்திலும் பிறந்திருக்கிறாய். அதனால்தான் சூரியனைச் சற்று முன்பு நீ கண்ணால் பார்க்க முடிந்தது'' என்று சொன்னார்.

இங்கு சேரமன்னன் இடைபுகுந்து ''குருநாதர் இந்தச் சிறுவனுக்கு இன்னும் சிறிது விளக்கமாகச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான்.



ஆகட்டும் என்பதற்கு அடையாளமாக முன்குடுமியை அசைத்து சங்கரநாராயணன், ''இதயகுமாரா! நீ சூரியனை எதன் மூலம் கண்டாய்?'' என்று வினவினார்.

''மைத் தகட்டின் மூலம்'' என்றான் இதயகுமாரன்.

''அதைக் கேட்கவில்லை. சூரிய வெளிச்சம் தகட்டின் மேல் எங்கிருந்து விழுந்தது?''

''மேலிருக்கும் துளை மூலம்.''

''அது சாத்தியமா?''

''ஏன் சாத்தியமில்லை?''

''பகல் ஏறியிருக்கிறது. ஆனால் உச்சிவேளை வரவில்லை.''

இதைக் கேட்டதும் சிறிது தயங்கினான் இதயகுமாரன். ''ஆம் உச்சிவேளை வரவில்லை. நான் நீராடி இங்கு வந்தபோது சூரியன் உதித்து ஆறு நாழிகைகள் இருக்கும்'' என்று கூறினான் முடிவில்.

''அப்படியிருக்க, சூரிய வெளிச்சம் மேலிருந்து எப்படி வரும்?'' என்று வினவினார் சாஸ்திரி.

இதற்குப் பதில் சொல்ல இதயகுமாரனுக்குத் தெரியாதிருக்கவே சாஸ்திரியே சொன்னார்: ''சூரியோபாஸக மந்திர உச்சாடனத்தால் அவன் பிம்பத்தை நாம் வரவழைக்கிறோம். தவிர, மேலேயுள்ள துளைகளில் கிழக்குப் புறமாக இருப்பது சிறிது சாய்த்து அமைக்கப் பட்டிருப்பதால் பிம்பத்தைச் சற்றுச் சாய்த்து மையில் அமைக்கவும் முடிகிறது. அதல்ல பெரிய விஷயம்...''

உச்சிக்கு வராத சூரியனை, கிழக்குப் பக்கத்திலிருந்தாலும் பார்க்க முடியாத நிலையில், மைத்தகட்டில் காட்டுவது இத்தனை சுலபமில்லை என்பதை அறிந்திருந்த இதயகுமாரன், ''அதுவும் பெரிய விஷயந்தான்'' என்றான்.

''அல்ல; அதல்ல பெரிய விஷயம். உனக்கு சூரிய கங்கணம் தெரிந்தது பெரிய விஷயம். அதன் விளைவுகள் தெரியுமா உனக்கு?''

''தெரியாது.''

''சொல்கிறேன் கேள். பெரிய உத்பாதங்கள் ஏற்படும் காலங்களில் இந்தமாதிரி சூரிய வளையம் தெரியும். ஆகையால் இந்த நாட்டில் பெரும் போர்கள் நிகழும். அதற்குப் பூர்வாங்க மாக ஒரு பேரரசுக்கு வித்திடப்படும், அதுவும் உன் கையால். கங்கணமும் எல்லோர் கண்களுக்கும் தெரியாது. சூரியரேகை கையிலோ காலிலோ உள்ளவனுக்குத்தான் தெரியும். உன் காலில் சூரியரேகை இருப்பதை முன்பே அறிந்தேன். அதனால்தான் உனக்கு சூரியபகவான் கங்கணமாகக் காட்சியளித்தார். நீ பெரும் காரியங்களைச் சாதிக்க இருக்கிறாய். உன் கையால் பெரிய ரகசியங்களின் சிக்கல்கள் அவிழ்க்கப்படும்'' என்று சங்கர நாராயணன் சொப்பனத்தில் பேசுவதுபோல் பேசினார். அவர் கண்கள் மூடிக்கிடந்தன.

''நீ கண்டெடுத்த மோகனச்சிலையின் ரகசியம் உன்னால் தான் உடைக்கப்படும். அதன் முதுகில் ஒரு பேருண்மை புதைந்து கிடக்கிறது. அதன் முதுகிலுள்ள தையலைக் கண்ணழகி பிரிப்பதை இப்பொழுது நீ தடுத்துவிட்டாய்..'' என்று மேலும் சொன்ன சாஸ்திரியை இடைமறித்த இதயகுமாரன், ''அது தந்தச்சிலை. நல்ல பழுப்பேறிய யானைத்தந்தம். அதன் முதுகை எப்படி தைக்க முடியும்?'' என்று கேட்டான்.

சங்கரநாராயணன் கண்களைத் திறக்காமலே பதில் சொன் னார். ''அந்தச் சிலையை நீ சரியாகப் பார்க்கவில்லை. கடைந்த சிலையின் முதுகு இரண்டாகப் பிளக்கப்பட்டிருக்கிறது. அதன் உட்புறம் நடுவில் குடையப்பட்டு தந்தம் தகடுபோலாக்கப்பட்டி ருக்கிறது. யானைத் தந்தங்களை நரம்புபோல் செய்தவர்கள் அதை மூன்று துளைகளில் கோத்து வாங்கியிருக்கிறார்கள். தையலுக்குமேல் காய்ச்சிய யானைக்கொழுப்பு பச்சிலை கலந்து தடவப்பட்டிருப்பதால் தையல் மறைக்கப்பட்டிருக் கிறது. தையலைப் பிரித்து கத்தியால் இருபுறமும் நீக்கினால்



உட்புறம் பேழைபோல் லேசாகத் திறக்கும். அந்தப் பேழை யில் ஒரு தந்த ஓலை இருக்கிறது. அதில் சோழர்களின் பிற்காலம் முழுவதும் சொல்லப்பட்டிருக்கிறது'' என்று கூறினார் சாஸ்திரி.

''என்ன எழுதியிருக்கிறதென்று சொல்ல முடியுமா?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''முடியாது.''

''தங்களால்கூடவா?''

''ஆம்.''

''மந்திரத்தால் கூடவா?''

''மந்திரம் என்பது நல்லதற்கு ஏற்பட்டது. மனிதர்களின் ரகசியங்களை அறிய உபயோகப்படுத்தப்படுவதில்லை.''

இந்த சமயத்தில் சேரமன்னன் இடைபுகுந்தான். ''குருநாதர் இந்தசமயத்தில் சோழநாட்டுடன் போர் வேண்டாம் என்று சொல்லி யிருக்கிறார். அவர் போதனையை நான் பின்பற்றுகிறேன். விஜயாலயன் சோழ சாம்ராஜ்யத்தை அமைப்பான். அவன் மகன் ஆதித்தன் அதை விரிவு படுத்துவான் என் உதவியுடன் என்பதும் குருநாதர் சொல். அவர் சொல்வது நடக்கும். நீ சோழன் மகள் கையைப் பிடிக்காவிட்டால் சோழநாட்டின் பிற்காலத்தை முழுதும் அறிந்திருக்கலாம். ஆனால், சயமத்தில் கெடுத்து விட்டாய்'' என்று குற்றம்சாட்டினான் தாணு ரவி.

''கண்ணழகி உங்கள் மகளல்ல என்பது முன்னமே தெரியுமா?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''தெரியும். இருந்தாலும் என் மகள்போல் வளர்த்தேன். சேரநாட்டு பலவீனத்திற்கும் சோழ நாட்டு பலவிருத்திக்கும் அவளும் காரணமாவாள். இது குருநாதர் சொன்னது'' என்றான் தாணு ரவி.

''தெரிந்தும் ஏன் வளர்த்தீர்கள்?'' என்று கேட்டான் சோழ வாலிபன்.

''அவள் என்னை மயக்கிவிட்டாள். குழந்தையில் அவள் என்னைப் பார்த்த பார்வை! அதிலிருந்து யார் தப்பமுடியும்?'' என்று விளக்கினான் தாணு ரவி. ''அதை நினைத்துத்தான் சிரித்தேன். பிம்பத்தைத் தணலில் வைக்கக்கூட நீ தயங்கினாயே. உன்னை அவள் எத்தனை மயக்கியிருப்பாள்? நீ வரும் முன்பு குருநாதர் சொன்னார், உன் வளர்ப்புமகள் இதயகுமாரனை மயக்கிவிட்டாள் என்று. இதை நீயும் நிரூபித்தாய், குருநாதர் கட்டளையை மீறியதால். அவரும் அதனால்தான் நகைத்தார். கண்ணழகி என்று அவளுக்கு இயற்பெயர் என்பதையும் குருநாதர்தான் சொன்னார்'' என்று விளக்கினான் தாணு ரவி.

சங்கரநாராயணன் உரையாடலுக்கு அத்துடன் முற்றுப் புள்ளி வைத்தார். ''இதயகுமாரா! உன் பெற்றோர் யாரென்று உனக்குத் தெரியுமா?'' என்று வினவினார்.

''தெரியாது'' என்றான் இதயகுமாரன்.

''உன்னை வளர்த்தது?''

''சோழ மன்னர். அவர் அரண்மனையில் அவர் உத்திரவின்படி ஒரு வீரனால் வளர்க்கப்பட்டேன்.''

''ஆகவே அவர் உன் வளர்ப்புத் தந்தை.''

''அப்படி வைத்துக்கொள்ளலாம்.''

''வைத்துக்கொண்டால் கண்ணழகி உனக்கு சகோதரி ஆவாள்'' என்றார் சாஸ்திரி. இதைச் சொன்னபோது சொற்களை மெள்ள உதிர்த்தார். இதைக் கேட்டதும் இதயகுமாரன் உடல் ஒருமுறை ஆடியது. 'என் சகோதரி! சகோதரி!'' என்று துன்பம் தோய்ந்த குரலில் சொன்னான் இதயகுமாரன்.

சாஸ்திரியின் வதனத்திலும் துன்பக்களை படர்ந்தது. ''விதி நம்மைப் பல வழிகளில் இழுத்துச் செல்கிறது. என்ன செய்யலாம். ஆனால், கலங்காதே. அவளைத்தான் நீ மணம் புரிவாய்'' என்றார் சாஸ்திரி துன்பம் குரலிலும் துலங்க.



''நீங்கள் சொல்வது முரண்பாடாயிருக்கிறது'' என்றான் இதயகுமாரன்.

''வாழ்க்கையே முரண்பாடு. அதன் வழிகளே விசித்திரம். நீ அவள் சகோதரனல்ல. நீ வேறொரு வம்சம். உன் கரமே இந்த வம்சத்தின் எதிரி. ஆகையால் இங்கிருந்து சோழனிடம் செல்லும் போது இங்கு நடந்தது அனைத்தையும் மறந்துவிடு'' என்றார்.

அத்துடன் தாணு ரவி கூறினான், ''இன்று நானும் திருமுக்கூடலை விட்டுச் செல்கிறேன். இளையவேளின் திட்டம் பலிக்கவில்லை என்பதை மாரவேளிடம் சொல். அவர் புரிந்து கொள்வார்'' என்று.

''நீ மீண்டும் கருவூரில் நுழையும்போது அரண்மனை செல்லாதே. அரண்மனை நந்தவனத்திற்குச் செல்'' என்று சாஸ்திரி கூறினார்.

''இனி தாமதிக்காதே, புறப்படு'' என்றான் தாணு ரவி. அந்த அறையை விட்டுக் கிளம்பினான் இதயகுமாரன். வாயிலில் வந்தபோது அவன் புரவி சேணமிட்டு பயணத்துக்குச் சித்தமாக நின்றிருந்தது. அதன்மேல் தாவினான் சோழநாட்டு வீரன். புரவி பறந்தது. அன்றிரவு அவன் கருவூரில் நுழைந்து நேராக அரண்மனை செல்லாமல் சாஸ்திரி கூறியபடி அரச நந்தவனத்தில் நுழைந்தான். அங்கிருந்த வாவியில் கண்ணழகி நீந்திக்கொண்டிருந்தாள் பிறந்தமேனியுடன். அவள் சீலை கரையில் இருந்தது. அதன்மீது மோகனச் சிலை படுத்திருந்தது.

# 18. சிரித்த செண்பகம்

அரண்மனை நந்தவனத்துக்குள் நுழையுமுன்பு விஜயன் மீதிருந்து இறங்கி ஓசைபட்டபடாமல் நந்தவனத்தின் மரக்கூட்டத்துக்குள்ளே சென்ற இதயகுமாரன், வாவிக்கரை வந்ததும் முன்னே செல்லாமல் சற்று பின்னடைந்து ஒரு மரத்தின் மறைவில் நின்றான். வாவியில் அவன் கண்ட காட்சியின் விளைவாக அப்பொழுது முன்னிலவு ஏதுமில்லா விட்டாலும் நட்சத்திரங்கள் வீசிய அல்ப ஒளியே வாவிமீது விழுந்த கிடந்ததென்றாலும், நீரில் யாரோ நீந்தும் ஒலி மட்டும் லேசாகக் கேட்கவே, கரையையும் நீரையும் உற்றுப் பார்த்த சோழநாட்டு வாலிபன், நீராடுவது கண்ணழகியென்பதைக் கணப்பொழுதில் ஊகித்துக் கொண்டான்.

நட்சத்திர வெளிச்சத்தில் நீரில் அமிழ்ந்து நீந்திய கண்ணழகியின் மனோகர உடல் முழுதும் தெரியாவிட்டாலும், அவள் அப்பொழுது நீருக்கு மேலே வந்தபோது அரையும் குறையுமாக வெளிப்பட்ட வெண்மை உடலிலிருந்தும், ஒரே ஒரு சமயத்தில் தெரிந்த முகத்திலிருந்தும் நீராடுவது கண்ணழகிதானென்பதைப் புரிந்து கொண்ட இதயகுமாரன், ஒரு பெண் தனிப்பட நீராடுவதைப் பார்ப்பது பண்பாடல்ல என்று நினைத்து மரத்து இருட்டில் மேலும் ஒதுங்கினான். ஒதுங்கிய நிலையிலும அவன் கண்கள் மீண்டும் மீண்டும் அந்த வாவியை நோக்கலாயின. அதன் விளைவாக 'மனிதன் உணர்ச்சி மீறும் சமயங்களும் பண்பாடு உடையும் சமயங்களும் உண்டு' என்பதைப் புரிந்துகொண்டான் அந்த வாலிபன்.

நல்ல இருட்டு இருந்த காரணத்தினால்தான் கண்ணழகி அங்கு நீராட வந்திருக்கவேண்டும் என்று இதயகுமாரன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். நீராடிய அவள் உடல்



நீரில் ஊடுருவி வாளைமீன்போல் சென்ற இரண்டொரு சமயங்களில் ''இவளை இப்படிப் பார்க்கத்தான் சங்கரநாராயணன் இங்கு முதலில் என்னை நுழையப் பணித்தாரா?'' என்றும் கேட்டுக்கொண்டான். ''யாரையும் அவ்வப்பொழுது இருக்கும் நிலையில் வேண்டுமானால் அவர் தீட்டும் மந்திர மையில் பார்க்கலாம். பின்னாலிருப்பதை அவர் பார்க்க முடியாது. அப்படியிருக்க, அத்தனை திட்டமாக நந்தவனத்துக்குப் போகப் பணித்தாரே சாஸ்திரி, அதெப்படி சாத்தியம்?'' என்றும் தன்னை வினவிக்கொண்டான். ''ஒருவேளை இவள் நீராடப்போவது அவருக்குத் தெரிந்திருந்தாலும் அதைப் பார்க்கும்படி என்னைத் தூண்டலாமா?'' என்றும் கேள்வியை எழுப்பிக் கொண்டான். சாஸ்திரியைப் பற்றிய இத்தனை ஆட்சேபணை சமாதானத்திலும் உள்ளூர தன் மனம் இன்பத்தில் சுழல்வதை உணர்ந்ததால் வாவியைக் கண்கொட்டாமல் பார்த்தான் இதயகுமாரன்.

வானத்திலுள்ள ஆயிரக்கணக்கான நட்சத்திரக் கண்கள் வாவியில் நீந்திய வனிதையின் வனப்பைப் பார்த்துப் பிரமித்துக் கண்களைச் சிமிட்டியதாலோ என்னவோ, தனது அழகிய உடலை அதிகமாக வெளிக்குக் கொண்டுவராமல் நீருக்குள்ளேயே அமிழ்ந்தும் நீந்தியும் புரண்டும் நீராடித் துளைந்தாள் கண்ணழகி. அன்று மாலைவரை இருந்த சூரிய வெப்பத்துக்கு வாவி நீரின் குளுமை பெரிதும் ஈடுகட்டி இன்பமளித்ததால் நீண்ட நேரம் நீராடினாள் சோழன் மகள்.

அரசகுமாரிகள் நீராடுவதற்காகவே நிர்மாணிக்கப்பட்டு, கோடியிலிருந்த ஒரு சுனையிலிருந்து லேசாகப் பாய்ச்சப்பட்டதால் எப்பொழுதும் நீர் நிரம்பிக்கிடந்த அந்தப் பளிங்கு வாவியின் ஓர் ஓரத்தில் சில ஆம்பல் மலர்கள் பூத்துக்கிடந்தன. அவற்றின் அருகில் வந்ததும் சற்று மல்லாந்து நீந்திய அரசகுமாரியின் மார்புமீது இரண்டு அல்லி மலர்கள் எழுந்துவிட்டதால் அவள் இரட்டை அழகுக்கு அவை பாதுகாப்பளித்தன. நாலைந்து பச்சைவட்ட ஆம்பல் இலைகளும் அவள் உடலின் மீதிப்

பகுதியை மறைத்ததால் அவள் மனோகர உடலை மற்றவர் திருஷ்டியிலிருந்து பாதுகாக்க இயற்கையும் உதவியதாகத் தோன்றியது, மரத்தின் மறைவிலிருந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்த சோழநாட்டு வாலிபனுக்கு.

இத்தனையிலும், ''அவள் எப்படியும் வாவியிலிருந்து எழுந்து வந்துதானே கரையிலிருந்த புடைவையை எடுக்க வேண்டும்? அப்பொழுது எந்த இயற்கை இவள் அழகுகளை மறைக்கும்?'' என்று கேட்டுக்கொண்டதாலும், அவள் வாவியிலிருந்து எழுந்து வருவதை எதிர்பார்த்ததாலும் உள்ளத்தில் விவரிக்க முடியாத ஆசையுடனும் எதிர்பார்ப்புடனும் நின்றிருந்த இதயகுமாரனுக்குப் பெரும் ஏமாற்றம் காத்திருந்தது.

அவன் எதிர்பார்த்தபடி அவள் வாவியிலிருந்து எழுந்திருக்கவுமில்லை; நடந்து வரவுமில்லை. வாவிக்கரை வரை நீருக்குள்ளே கழுத்துவரை உடலை மறைத்து நீந்தியில் வந்தவள் தனது வலது கையை மட்டும் நீட்டி பளிங்குக்கரை மீதிருந்த மோகனச்சிலையை அகற்றி, சீலையை மட்டும் குத்தாக எடுத்துக்கொண்டாள். குத்தாக எடுக்கப்பட்ட சீலை சரேலென விரிந்தது மாயாஜாலம்போல். விரிந்த அந்த ஆடை தன்னை மறைக்க சட்டென்று மின்னல் வேகத்தில் வாவி நீரிலிருந்து எழுந்திருந்த மின்னிடையாள் ஒருமுறை சுழன்று சீலையால் தன் உடலைக் கழுத்திலிருந்து முழந்தாள் வரை மறைத்துக் கொண்டு விட்டதால் சோழ வாலிபன் கனவு காற்றில் பறந்தது.

வாவிக்கரைமீது ஏறிய பின்பும் சேலையை அணியவில்லை சோழன் மகள். நின்ற நிலையிலேயே சேலையின் ஒரு பகுதியை இடுப்பில் சுற்றிக் கொண்டு மார்பில் ஒரு மூலையை இழுத்துச் செருகினாள். அடுத்து சற்றே குனிந்து சேலையின் இன்னொரு பகுதியால் தலையைத் துவட்டிக்கொண்டு குழலை உதறினாள். இத்தனைக்குப் பிறகு இதயகுமாரன் மறைந்து நின்ற மரத்தை நோக்கினாள்.



சாதாரண சமயமாயிருந்தால் அரசகுமாரி மரத்தை நோக்கியதும் இதயகுமாரன் மேலும் மறைவுக்குச் சென்றிருப்பான். ஆனால் இன்று அந்த நட்சத்திர வெளிச்சத்தில் அவள் மார்புக்குக் குறுக்கே இழுத்து மறைத்துக் கட்டியிருந்த சீலைக்குச் சிறிது மேலே, மார்புகளுக்கு நட்ட நடுவே முன்பு அவன் மாரவேளின் அந்தரங்க அறையின் சிலையில் பார்த்த புலி மச்சத்தைப் போலவே ஒரு மச்சம் தெரிந்தது. மச்சத்தின் தலை சுற்றிலும் பச்சையாகத் தெரிய, புலியின் கண்களும் மூக்கும் மட்டும் மச்சத்தின் பச்சையால் மறைக்கப்படாதிருக்கவே அவள் பொன்மேனியே கண்களாகவும் மூக்காகவும் தெரிந்ததால், அந்த அல்ப வெளிச்சத்திலும் அவை மிக கம்பீரமாகவும் பயங்கரமாகவும் பளிச்சிட்டன. அந்த மச்சத்தைப் பார்த்ததாலும், மச்சம் அளித்த அழகைக் கண்டு மயங்கியதாலும் நின்ற இடத்தில் நின்றுவிட்ட இதயகுமாரன் உணர்ச்சிகளில் இன்பச்சுவை நகர்ந்து அரசியல் எண்ணங்கள் சுழலத் தொடங்கின.

அப்பொழுது கீழே குனிந்து மோகனச்சிலையை எடுத்து மார்பில் அணைத்துக்கொண்ட அரசகுமாரி, இதயகுமாரன் மறைந்திருந்த மரத்தை நோக்கி நடந்து வந்தாள். வந்து மரத்தின் மேலும் கீழும் இருமுறை பார்த்தாள். சாய்ந்த ஒரு மரக்கிளையிலிருந்து ஒரு செண்பக மலரைப் பறித்து குழலில் முடித்துச் சூடினாள். அப்பொழுதுதான் இதயகுமாரனுக்கே சுரணை வந்து, தான் நின்றிருப்பது நந்தவனத்தின் செண்பகமரம் என்று உணர்ந்துகொண்டான். ஏற்கனவே செண்பக மலர்களின் வாசனை பரவியிருந்தும் வாவி மீதும் கண்ணழகி மீதும் உணர்ச்சிகள் நிலைத்திருந்த காரணத்தால், மரத்தின் மலர்களிலிருந்த சுகந்தத்தை அவன் உணரமுடியவில்லை. அப்பொழுது கண்ணழகி வாவியில் இறங்குமுன்பாகவே உடலில் தேய்த்திருந்த வாவி நீரில் கரைந்துவிட்ட சுகந்த ஸ்நானப்பொடியின் சுகந்தத்தையும், செண்பக மலரின் நறுமணத்தையும் அவன் சுவாசித்தான், அவள்மீது தவழ்ந்து வந்த பூங்காற்றிலிருந்து.

அந்த சுகந்தமும் அதற்கு முன்பாகத் தெரிந்த புலிமச்சமும் அவனைத் தீவிர சிந்தனைக்குள்ளாக்கியிருந்ததால், கண்ணழகி மலர் தரித்து இந்த மரத்தடியில் ஆடையை சரியாகப் புனைய வந்ததை அவன் கவனிக்கவில்லை. மரத்தில் சாய்ந்திருந்த அவன் கண்களைக்கூட மூடிக்கொண்டான் சில வினாடிகள். இந்த மார்பு மச்சத்தைக் காட்டத்தான் சங்கரநாராயணன் தன்னை நந்தவனத்துக்கு முதலில் வரும்படி கட்டளையிட்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தான். ஆனால், இங்கு சோழன் செல்வி வருவாளென்பதையோ நீராடுவாளென்பதையோ அவர் எப்படி உணரமுடிந்தது என்பது புரியாத விந்தையாயிருந்தது அவனுக்கு. ஒருவேளை மேலே கண்ணைச் சிமிட்டும் நட்சத்திரங்கள் இந்தக் கதையை முன்கூட்டிச் சொல்லியிருக்குமோ என்றும் சிந்தித்தான்.

எது எப்படியிருந்தாலும் தன் வாழ்க்கை தன்னையும் மீறிப் பல திசைகளில் திருப்பப்படுவதை உணர்ந்தான் இதயகுமாரன். முதல் நாள் அரங்கன் சந்நிதி பட்டர் தனக்குக் கொடுக்க மறுத்த செண்பகமலரைக் கொடுக்கும் மரத்தினடியில் தான் வந்த நின்றது, மலரை மன்னன் மகள் சூடியது, இவை அனைத்துக்கும் ஏதோ மனித அறிவால் அறியமுடியாத தொடர்பு இருப்பதை அவன் உணர்ந்தான். அப்பொழுது மரத்தின் மறைவை நாடிய அரசகுமாரியின் உடல் அவன்மீது இடிக்கவே சட்டென்று நகர்ந்தான் அவன் பின்னுக்கு. அப்பொழுது எழுந்தது அரசகுமாரியின் குரல் ''நகராதே! நில்'' என்று.

''மன்னிக்க வேண்டும்'' என்று பதிலுக்கு ஏதோ உளறினான் இதயகுமாரன்.

அரசகுமாரி சிறிதும் அச்சத்தின் வசப்பட்டவளாகத் தெரியவில்லை. அவள் உணர்ச்சிகள் புரண்டு திடுக்கிட்டதாகவும் தெரியவில்லை. ''யார் நீ?'' என்று இரண்டாம் முறை அவள் கேட்ட கேள்வியில் அதிகாரத்தின் ஒலி மட்டுமே பிரதிபலித்தது.



இதனால் சிறிது துணிவுகொண்ட இதயகுமாரன், ''நான் தான், தங்கள் அடிமை'' என்று மெதுவாகவும் அச்சம் லேசாக ஒலித்த குரலிலும் கூறினான்.

குரலை அவள் கண்டுகொண்டதால் அவள் முகத்தில் வியப்பின் குறி நன்றாகப் புலப்பட்டது. ''நீங்களா!'' என்று வினவினாள் அவள்.

''ஆம்'' என்றான் இதயகுமாரன் மறைவிலிருந்து வெளியே வந்து, மரத்தின் ஒருபுறத்தில் சாய்ந்துகொண்டு.

அவள் மரத்தின் இன்னொரு புறத்தில் சாய்ந்து திரும்பினாள் அவனை நோக்கி. பிறகு அவள் சொற்கள் அவனுக்கு விசித்திரமாகவும் இருந்தன. வியப்பையும் மிதமிஞ்சி அளித்தன. ''நீங்கள் இங்கு வருவீர்கள் என்பது எனக்கு முன்பே தெரியும்'' என்று கூறினாள் அரசகுமாரி.

பேச நா எழாமல் நின்றான் பல வினாடிகள், சோழ நாட்டு வாலிபன். பிறகு ''என்ன சொல்கிறீர்கள் அரசகுமாரி?'' என்று தட்டுத்தடுமாறிக் கேட்டான்.

அரசகுமாரியின் முகத்தில் ஏதோ குழப்பம் தெரிந்தது. ''நீங்கள் இங்கு வரப்போவது எனக்கு முன்னதாகத் தெரியும் என்றேன்'' என்றாள் அவள் சொற்களிலும் சிறிது குழப்பம் ஒலிக்க.

''தெரியுமா! முன்னதாகவா!'' பிரமிப்பு நிறைந்து கிடந்தது இதயகுமாரன் பதிலில்.

''ஆம்'' என்றாள் அரசகுமாரி.

''எப்படி?'' என்று கேட்டான் இதயகுமாரன்.

''சொப்பனம் கண்டேன் இன்று விடியற்காலையில். விசித்திரமான சொப்பனம்'' என்றாள் அரசகுமாரி. அதைச் சொல்லிக்கொண்டே மரத்தடியில் உட்கார்ந்தாள். அவனையும் உட்காரும்படி சைகை செய்து, தான் சற்றுத் தள்ளி இடங்கொடுத்தாள். இருவரும் அக்கம்பக்கத்தில் மரத்தின்மீது சாய்ந்து உட்கார்ந்ததும் சொன்னாள் அரசகுமாரி, ''நீங்கள் இந்த இரவில்

இங்கு வருவீர்கள் என்று யாரோ ஒருவர் சொப்பனத்தில் சொன்னார்'' என்று.

இதயகுமாரன் பிரமிப்பு சொல்லத்தரமல்லாததாயிருந்தது. ''யாரவர்?'' என்று கேட்டான் இதயகுமாரன், பிரமிப்பு குரலிலும் ஒலிக்க.

''என் வளர்ப்புத் தந்தையின் நண்பர் சங்கரநாராயண பட்டர்'' என்றாள் அரசகுமாரி.

இதயகுமாரன் சற்றுத் திரும்பி கண்ணழகியை நோக்கினான். ''அவர் அடிக்கடி சொப்பனத்தில் வருவதுண்டா?'' என்று வினவினான்.

''இல்லை'' என்றாள் அரசகுமாரி, சொப்பனத்தில் பேசுவதுபோல்.

''ஆனால், அவர் எதையும் சாதிக்க முடியும். இந்தப் பாரத நாட்டின் பெரிய வான சாஸ்திரிகளில் அவர் ஒருவர். தவிர, சேரநாட்டின் பெரிய மந்திரவாதி. அவர் அறியாதது ஏதுமில்லை'' என்றும் சொன்னாள்.

இதயகுமாரன் என்ன செய்கிறோமென்பதை அறியாமல் அரசகுமாரியிடம் நெருங்கி உட்கார்ந்து அவள் கையைப் பற்றினான். ''அது கிடக்கட்டும். சொப்பனத்தில் வேறென்ன தெரிந்தது?'' என்று கேட்டான்.

கண்ணழகியின் காந்தக் கண்கள் அவன் கண்களைக் கவர்ந்து நின்றன ஒரு விநாடி. ''விசித்திரமாயிருக்கிறது'' என்றும் சொன்னாள் இன்பம் நிறைந்த குரலில்.

''எது அரசகுமாரி?''

''நீங்கள் இப்பொழுது என் கையைப் பிடிப்பது.''

''அதில் விசித்திரமென்ன இருக்கிறது?''

''இப்படித்தான் இன்று பகலில் பிடித்தீர்கள். அது உங்கள் கைதான். இப்பொழுது சந்தேகமின்றித் தெரிகிறது.''



''நீங்கள் சொல்வது விளங்கவில்லை அரசகுமாரி.''

''விளங்காததற்கு ஏதுமில்லை. இன்று காலை மோகனச் சிலையின் பின்பக்கத்தைப் பார்த்தேன்.''

இதைக் கேட்ட இதயகுமாரன் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டான். ''உம்'' என்று மட்டும் பதில் கொடுத்தான்.

அரசகுமாரி அவன் உம் கொட்டினதையும் அதில் ஒலித்த பிரமிப்பையும் கவனித்தாள். இருப்பினும் தொடர்ந்தாள். ''நான் சொன்னால் உங்களுக்கு வேடிக்கையாகக்கூட இருக்கும். ஆனால், நடந்தது உண்மை. சிலையின் முதுகில் மெழுகு தடவியது போலும் தையலிருந்தது போலும் தெரிந்தது. அதைப் பிரிக்க முயன்றேன். அப்பொழுது ஒரு கை என் கையைப் பலமாகப் பிடித்து நிறுத்தியது. அது உங்கள் கைதான். அப்பொழுது யார் கை என்றுகூடத் தெரியவில்லை. ஏதோ பிரமை என்றுகூட நினைத்தேன். ஆனால், இப்பொழுது தெரிகிறது. அது பிரமையல்ல'' என்ற அரசகுமாரி, கனவில் பேசுவதுபோல் பேசினாள்.

இதயகுமாரன் பேச்சிழந்து உட்கார்ந்தான். அந்த சமயத்தில் அவள் முகத்தை வேறு புறம் திருப்பவே அவள் குழல் அவன் முகத்துக்கு எதிரே தெரிந்தது. அதிலிருந்து செண்பக மலர் அவனைப் பார்த்து நகைத்தது. அவள் உட்கார்ந்திருந்த நிலை அவனுக்கு உன்மத்தத்தை ஊட்டியது. மரத்தில் சாய்ந்த நிலையிலிருந்த அவள் திரும்பி உட்கார்ந்திருந்ததால் முதுகும், தரையில் அழுந்திய எழிலும் அவனை நோக்கின. தோள்கள், கழுத்து, இவற்றின் வெண்மை, மோகனச்சிலை செய்யப்பட்ட தந்தத்தைத் தோற்கடித்தன. அவன் அவளை நோக்கி சாய்ந்து அவள் தோள்களைப் பற்றினான். செண்பக மலரை முகரப் போனான்.

''வேண்டாம்'' என்று எழுந்தது அரசகுமாரியின் குரல்.

செண்பக மலர் பேசவில்லைதான். ஆனால், அவன் ஏமாற்றத்தை, அதிர்ச்சியைக் கண்டு மீண்டும் நகைத்தது.

# 19. ''.....கண்ணில்லை''

நீளக் கருங்குழலை எடுத்து பெருமுடிப்பாக முடித்து அதன்மீது செண்பக மலரையும் சூடியிருந்த சோழ மகள், மலரை முகரப்போன தன்னை ''வேண்டாம்'' என்ற ஒரு சொல்லால் தடுத்துவிடவே, மலருக்கு அருகில் சென்ற இதயகுமாரன் முகத்தில் பேரதிர்ச்சியும் பெரு ஏமாற்றமும் தெரியவே, அதைக் கண்டு வாவியின் சிற்றலைகள் நந்தவனத்தின் பூங் காற்றினால் சிறிது அதிகமாகவே அசைக்கப்பெற்று பளிங்குப் படிகளில் களுக் களுக்கென்று தாக்கி நகைத்தன. செண்பக மரத்தின் இலைகள் மட்டுமின்றி மற்ற மரங்களின் இலைகளுங் கூட காற்றில் சலசலத்து லேசாகச் சிரித்தன, சோழ வாலிபனின் திகைப்பையும் குழப்பத்தையும் கண்டு.

சேலையை இழுத்து மார்புப்புறம் கட்டியிருந்ததால் அந்த நந்தவன மோகினியின் வழவழத்த பாதி முதுகுப் புறத்தின் காட்சியும், தனது இருகைகளிலும் அப்பொழுதும் பிடிபட்டுக் கன்னிக்கொண்டிருந்த தோள்கள் தனது உடல் பூராவும் சுழல விட்ட உணர்ச்சி வேகமும், அவள் உடலிலிருந்தும் தலையி லிருந்தும் அந்த சமயத்திலும் கிளம்பி தனக்கு மயக்கத்தை விளைவித்துக்கொண்டிருந்த நீராட்டப் பொடியின் நறுமணமும், கிட்டே நெருங்கியும் கிட்டாது போன செண்பகமலரின் விரிந்த இதழ்களிலிருந்து நாசிகளில் புகுந்த சுகந்தமும், அவனை ஏதோ மற்றொரு உலகத்துக்குக் கொண்டு சென்றதால் நிலைகுலைந்து தடுமாறினான் சோழவாலிபன்.

இரவு ஏறிவிட்ட அந்த சமயத்தில் தனக்கருகே உட்கார்ந்து முதுகை அரையும் குறையுமாகக் காட்டி தன் உணர்ச்சிகளை முழுக அடித்த கண்ணழகி திரும்பி தன் அழகிய கண்களைத் தான் காட்டவில்லை, மலரை அணுகுவதை ஏன் தடுத்தாள்.



என்று தனக்குத்தானே கேள்வியை எழுப்பிக்கொண்ட சோழ வாலிபன் தோளிலிருந்த ஒரு கையை எடுத்து அவள் முதுகின் மேற்புறத்தில் வைத்தான். அந்த சமயத்தில் காற்றில் சிறிது ஆடிய செண்பக மரத்தின் உயரத்திலிருந்து முதல் நாளே பூத்தி ருந்த ஒரு மலர் தனது இதழ்களில் இரண்டை அவள் முதுகின் மீது சிந்திடவே, முதுகின் அழகையும் மலரிதழின் அழகையும் ஒப்பிட்டுப் பார்த்தான் இதயகுமாரன்.

புதிதாகக் கடையப்பட்ட புத்தம் புது தந்தம் போன்ற வெண்மையான அந்த முதுகில் மஞ்சள் நிற செண்பக இதழ்கள் இரண்டும் பதிந்திருந்ததைக் கண்ட சோழ நாட்டு வாலிபன், இயற்கை அவள் முதுக்கும் ஏதாவது ஒரு அணியைச் செய்து போட ஆசைப்படுகிறது என்று நினைத்தான். ஆனால், அந்த அணி முதுகு அழகின் முழுமையை மறைப்பதைக் கண்டதாலும், அது இருக்க வேண்டிய இடம் முதுகல்ல என்ற நினைப்பாலும், தோளின் மீதிருந்த தனது இன்னொரு கையையும் எடுத்து முதுகில் பதிந்த மலர் இதழ்களிரண்டையும் அகற்றினான். இதழ்களை அகற்றியவன் கையை அகற்றாததால், அவள் திறந்த முதுகின் இதுபுறத்திலும் அவன் இரு கைகளும் பதிந்து கிடந்ததன் விளைவாகவும், அந்தக் கைகள் முதுகின் திறந்த கோடிகளில் பதிந்து விரல்கள் கௌவிய காரணத்தாலும், உணர்ச்சிகளின் புரட்சிக்கு இலக்கான அரச மகளும் சிறிது சங்கடத்துடன் அசைந்தாள்.

அப்படி அவள் அசைந்ததால் சிறிது அருகே வந்த அவள் பூவுடலை உற்று நோக்கிய இதயகுமாரன், அவள் கழுத்தில் நீராடிய பின்பும் அகலாத ஸ்நானப் பொடித்தூள்களைக் கண்டு, மலர்க்கழுத்துக்கும் மகரந்தம் உண்டு என்ற முடிவுக்கு வந்ததால் அந்த மகரந்தத்தையாவது அனுபவிக்க எண்ணி அவற்றுக்கருகே தன் முகத்தைக் கொண்டுபோனான். இம் முறை அவள் எந்த ஆட்சேபணையையும் கிளப்பாததால் கழுத்தில்

லேசாக உதடுகளைப் புதைக்கவும் செய்தான். அப்படிப் புதைந்த உதடுகள் அளித்த இன்ப வேதனையாலோ என்னவோ அவள் கழுத்தைச் சிறிது அசைக்கவே அவன் உதடுகளும் அசைந்து அவனுக்கு மேலும் இடம் கொடுக்கவே, அவன் இதழ்களை கழுத்திலிருந்து விலக்கிக் காதுக்கருகே கொண்டு போய் மெல்ல ''அரசகுமாரி'' என்று அழைத்தான்.

அந்த அழைப்புக்கு அந்த அழகி பதிலேதும் சொல்லவில்லையென்றாலும் இதழ்களில் புன்முறுவலை மட்டும் படரவிட்டுக்கொண்டாள். ''அன்று பாதங்களை முத்தமிட்டு ஓடினார். இன்று சற்று அதிக தைரியம் வந்திருக்கிறது போலிருக்கிறது! இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவது ஆண்மகன் சுபாவம் போலிருக்கிறது!'' என்று முன்பு தனது அறையில் நடந்த நிகழ்ச்சியையும் நந்தவனத்தின் இந்த நிகழ்ச்சியையும் தனக்குள்ளேயே ஒப்பிட்டுப் பார்த்துக் கேள்வியும் கேட்டுக்கொண்டாள். அப்பொழுதுதான் தான் சற்றுப் பின்னுக்கு இழுக்கப்படுவதையும், இதயகுமாரன் இரு கைகளும் சற்று அதிகத் துணிவைக் காட்டுவதையும் உணர்ந்தாள். அந்த உணர்வினால் அவள் தத்தளித்தபோது மீண்டும் அழைப்பை அவள் காதில்விடுத்தான் சோழவாலிபன் ''அரச குமாரி'' என்று. இரண்டாம் முறை அழைப்பின்போது அவன் இதழ்கள் காதுக்கு வெகு அருகில் வந்துவிட்டதால் காதையும் காதுக்குக் கீழிருந்த வழவழத்த கன்னத்தையுங்கூட பட்டும் படாததுமாகத் தடவியதாகத் தோன்றியது அவளுக்கு. அதன் விளைவாக ''உம்!'' என்று ஒரு பதிலையும் மிக மெதுவாக வெளிவிட்டாள் சோழன் மகள்.

இந்தப் பதிலுக்குப் பிறகு அடுத்த கேள்வி எழவில்லை. செயல் தொடர்ந்தது. சற்றே இழுக்கப்பட்ட தனது உடல் பின்னாலிருந்த வாலிபன்மீது லேசாகப் படுவதை உணர்ந்தாள் அரசகுமாரி. அப்படிப்பட்டபோது முதுகு மட்டுமின்றி, கீழே தரையில் பதிந்திருந்த அழகின் திண்மையான எழுச்சியும் அவன் காலில்



படுவதையும், காலும் சங்கடப்பட்டு அசைவதையும், அந்த அசைவு தன்மீது பதிந்து இல்லாத இன்ப ஜாலங்களை அள்ளித் தெளிப்பதையும் உணர்ந்த அரசகுமாரி மெல்ல மெல்ல சுதந்திரத்தை இழக்கலானாள். அந்த சுதந்திரத்தை மீண்டும் பெறும் நோக்கத்துடன் கைகளிலிருந்த மோகனச்சிலையை மார்புடன் இறுக அணைத்துக்கொண்டாள்.

கட்டழகி கண்ணழகியின் முன்புறம் கண்களுக்குத் தெரியவில்லையென்றாலும், அவள் உடல் அசைவிலிருந்தே அவள் அடைந்த விவரிக்க இயலாத இன்ப உபத்திரவ நிலையை இதயகுமாரன் ஊகித்துக்கொண்டான். அவள் கைகள் சிறிது முன்னே சென்று பின்னுக்கு வந்ததால் அவள் மோகனச்சிலையை மார்பில் அணைத்து விட்டாளென்பதையும் அறிந்துகொண்ட சோழ வாலிபன் அந்த சிலைக்கு அடித்த யோகத்தை நினைத்துப் பெருமூச்சும் விட்டான். அந்தப் பெருமூச்சு அவள் வலது கன்னத்தில்தான் விசிறியதென்றாலும், உணர்ச்சிகள் உடல் முழுதுமே விசிறியதால், வழவழத்துப் புடைத்த கன்னங்களிரண்டுமே குங்குமச் சிவப்பாகச் சிவந்தன.

இருந்த இடம் அந்தப்புர அறையாயிருந்தால், சுடர்விளக்கின் ஒளியில் மஞ்சளும் குங்குமமும் கலந்துவிட்ட காட்சியில் இதயத்தைப் பறிகொடுத்திருப்பான் இதயகுமாரன். ஆனால், இடம் விளக்கேதுமில்லாத செண்பகமரத்து அடியானதாலும், விண்மீன்கள் அளித்த வெளிச்சமும் போதாதிருந்ததாலும், அழகை முழுதும் அள்ளிப் பருகும் அதிர்ஷ்டம் தனக்குக் கிட்டவில்லையென்பதை சோழ வாலிபன் உணர்ந்தான். அப்படிக் கிட்டாத காரணத்தினாலேயே இல்லாத ஊகங்களுக்கு இதயம் இடங்கொடுத்தது. அதன் விளைவாக அவன் அரசகுமாரியின் கன்னச் சிவப்பைப் பற்றி எண்ணாமல் இதழ்களின் நீரோட்டமுள்ள கெம்புச் சிவப்பைப் பற்றி எண்ணினான், அவள் அழகிய மார்புடன் பிணைந்து கிடந்த மோகனச்சிலையைப் பற்றி எண்ணினான். எண்ணியதுடன் இல்லாமல் ''அரசகுமாரி''

என்று அழைத்து தனது வலது கையை முன்புறம் கொண்டு சென்று மோகனச்சிலைமீது கையை வைத்தான்.

''உம்!'' எச்சரிக்கைக் குரல் எழுந்தது கண்ணழகியிடமிருந்து.

''இந்தச் சிலையை நான் பார்க்கலாமா?'' என்று கேட்டு அதை அவளிடமிருந்து பிரிக்க முயன்றான். அதனால் கை அவள் மார்புமீதும் வேகமாகப் படவே வெகு வேகமாகப் புரண்ட உணர்ச்சிகளால் மௌனமே சாதித்தாள் சோழன் மகள்.

கைபட்டதால், அவள் மார்பு சிலையைவிட கடினப்பட்டதால் எது சிலை எது மார்பு என்பதை உணரமுடியாது போனாலும், அப்படி உணரமுடியாத நிலையிலேயே சுயஉணர்வைப் பெரிதும் பறிகொடுத்துவிட்ட இதயகுமாரன் ''இந்தச் சிலை... இது...'' என்று ஏதோ சொல்ல முயன்று தடுமாறினான்.

அந்த வாலிபனின் தடுமாற்றம், கலக்கம், மார்புமீது லேசாகப்பட்ட சமயத்திலும் நடுங்கிய கரம் காட்டிய பயம் இவையெல்லாம் கண்ணிழகிக்குப் பேரின்பமாயிருந்ததால் அவள் இதழ்களில் ஏற்கனவே இருந்த புன்முறுவலைப் பெரிதும் விரித்துக் கொண்டாள் ''சமயத்தில் புருஷர்கள் எத்தனை கோழைகள்'' என்று உள்ளூர சொல்லி நகைத்துக் கொண்டாள்.

''நான் கேட்டேன்...இந்த...'' மேலும் தடுமாறினான் அவள் காதுக்கருகில் இதயகுமாரன்.

''உம்...உம்...'' இத்தனைதான் பதிலாக வந்தது அந்தக் கட்டழகியிடமிருந்து. மீதி பதிலை அவன் மீது பட்ட கட்டழகு அம்சங்கள் சொல்லின.

அவள் முதுகு அவன்மீது லேசாகச் சாய்ந்ததால் குழலிலிருந்த செண்பகம் அவன் கன்னத்தில் உராய்ந்தது. அவன் கண்ணெதிரே மோகனச்சிலையும் அது பதிந்துகிடந்த எழுச்சிகளுங்கூட அரைகுறையாகத் தெரிந்தன. தெரிந்தது மட்டுமல்லாமல் கையிலும் சிறிது அதிகமாகப் பட்டன. கையில் பட்டது ஒன்று,



கண்களில் பட்டவை பல. அவள் மோகன உருவத்தின் முன் பகுதி முழுவதும் அவன் கண்களுக்குப் புலனாயின. தன் தோள் மீது அவள் தலை அழுந்திவிட்டதாலும், அவள் தலைக்குழல் சிறிது அவிழ்ந்து மார்பில் புரண்டு அதன் ஈரம் நனைத்ததாலும் திக்குமுக்காடிய அவன் சித்தம், கண்களுக்கு முன்பே விரிந்த விந்தையால் உன்மத்தம் பிடிக்கும் நிலையை வெகு துரிதமாக எய்திக்கொண்டிருந்தது.

அவள் நீராடி மார்பில் இழுத்துக் கட்டியிருந்த சீலை மார்பை முழுதும் மறைக்காமல் மேல் விளிம்புகளை எழுப்பிக் காட்டியதாலும், கழுத்தின் பதக்கம் உள்ளே மறைந்து கிடந்தாலும் கழுத்தை வளைத்த சங்கிலி அந்த விளிம்புகளுக்கு இருபுறமும் அணைப்புக்கொடுத்ததாலும், கழுத்துக்கும் மார்புக்குமிருந்த இடைப் பகுதிய்யை ஏதோ தந்தப்பலகை மாதிரி இயற்கை கடைந்திருந்ததாலும், அவன் கண்கள் பிரமையடைந்து உலாவின. கண்ணழகியின் நுதலும் செழித்த கன்னங்களும், அந்தப் பிரமைக் கண்களுக்குப் பல விந்தைகளைக் காட்டின. இவை எல்லாவற்றையும்விட அவன் பார்க்க விரும்பிய புலி மச்சத்தின்மீது மோகனச்சிலை படுத்திருந்ததால் அவன் கண்கள் சிறிது ஏமாற்றத்தையும் அடைந்தன. ஆனால், நன்றாக இழுத்துக் கட்டப்படாததன் காரணமாகவும், இருமுறை கண்ணழகி அசைந்ததாலும் வயிற்றின்மீது தவழ்ந்து இடையைத் தாண்டி அவள் அழகிய பருத்த தொடைகளைத் தழுவி கால்களுக்கிடையே இணைந்துவிட்ட சேலை, வேண்டுமென்றே தன்னை இம்சைப்படுத்துவதை உணர்ந்தான் இதயகுமாரன்.

அப்பொழுது அவள் கால்களிரண்டையும் மடித்து உட்கார்ந்திருந்ததால் முழுந்தாளுக்குக் கீழிருந்த பாதங்கள் தெரியவில்லையென்றாலும் கவலைப்படவில்லை அந்த இளங்காளை, மற்ற மனோகர இடங்கள் இந்திரியங்களை வசீகரித்து விட்டதன் விளைவாக.

மற்ற அழகுகளைப் பார்த்ததாலும், அவையே புலன் களைப் புரட்டியதாலும் 'எதற்கும் மார்பு மச்சத்தைப் பார்க்க லாம்' என்று தன்னை ஏமாற்றிக்கொண்ட இதயகுமாரன், மோகனச்சிலையை நீக்க அதை அணைத்த கைகளைத் தனது வலது கையால் பிடித்தான். பிடித்த கை சிறைப்பட்டது. அரச குமாரியின் விரல்கள் அதன்மீது பதிந்தன. அவன் விரல் களுடன் பின்னிக்கொண்டன. பின்னிய விரல்கள் அளித்த செய்தியால் மோகனச்சிலையைப் பற்றி எண்ணியதை நிறுத்திய சோழ வாலிபன் அவள் விரல்களை நெரித்தான்.

அந்த நெரிப்பினால் அவள் இன்பப் புன்முறுவல் கோட்டினாள். நெரிப்பின் துன்பமும் உணர்ச்சியின் இன்பமும் இணைந்து தெரிந்தது அவள் முகத்தில்.

''இந்தச் சிலை...'' என்று ஏதோ சொல்ல வேண்டு மென்பதற்காகத் துவங்கினான் அவன்.

அவள் கண்கள் அவன் கண்களைக் கவர்ந்து நின்றன ஒரு விநாடி. பிறகு உதடுகள் அசைந்து ''எந்தச் சிலை?'' என்று விஷமத்துடன் மிக மெதுவாகக் கேள்வியை எழுப்பின.

''இதுதான் மோகனச்சிலை...''-மென்று விழுங்கினான் அவன்.

''எந்த மோகனச்சிலை?''– இதைக் கேட்டு அரசகுமாரி நகைத்தாள் மெல்ல.

அந்த நகைப்பில் அவன் சொர்க்கத்தைக் கண்டான். அப் பொழுதுதான் தன் கண் முன்பு இரண்டு மோகனச்சிலைகள் இருப்பதைக் கண்டான். ஒன்று பெரியது, உயிர்த்துடிப்புள்ளது, அசையும் சிலை. இன்னொன்று சிறியது, பெரிய சிலையைத் தன்னுடன் முதல்நாளே இணைத்தது, அசையாச்சிலை. இதை நினைத்த இதயகுமாரன் அவளை நோக்கிக் குனிந்து ''நான் குருடன் கண்ணழகி..'' என்று ரகசியமாகச் சொற்களை உதிர்த்தான்.



''உம்..?''

''இரண்டு சிலைகள் இருப்பதை உணரவில்லை.''

''ஏன்?''

''ஒரு சிலை மயக்கியதால்.''

''எது?''

''பெரியது''

''இன்னொன்று?''

''வியாஜம், ஏதோ காரணம்..'' என்ற வாலிபன் ''கண் ணழகி!'' என்று அழைத்தான் மீண்டும்.

''உம்..'' என்று உம் கொட்டினாள் அரசகுமரி. மேலே அவன் ஏதும் சொல்லாததால், ''நீங்கள் குருடர்தான்'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''கண்ணழகி!'' என்று அவனும் முணுமுணுத்தான்.

''நாம் இருவருமே குருடர்கள். எதற்கோ கண்ணில்லை என்று சொல்லுவார்கள்...'' அவள் குரல் பலஹீனமாயிருந்தது. உதடுகள் உட்புறமாக மடிந்து மலர்ந்து வெளிவந்தன. மலர்ந்த இதழ்களை நோக்கிக் குனிந்தான் இதயகுமாரன்.

# 20. முரடன்! திருடன்!

காமத்துக்குச் கண்ணில்லை என்பதுதான் பழமொழி. அதற்கு அறிவும் இல்லையென்பதற்கு அன்று இதயகுமாரன், அரசகுமாரி இருவருமே அத்தாட்சிகளாக விளங்கினார்கள். சமய சந்தர்ப்ப சூழ்நிலைகளை அறவே மறந்துவிட்ட அந்த இரவில் செண்பக மரத்தடியில் நிலைதடுமாறிக் கிடந்த காட்சியைக் கண்டு ஏதோ இரண்டு சின்னஞ்சிறிய பறவைக் குஞ்சுகள்கூட செண்பகமர உச்சிக் கிளையிலிருந்து தலைநீட்டி கூவென்று இருமுறை கூவின. அப்படிப் பார்ப்பதோ, கீழே இருந்த இருவருக்கும் இடைஞ்சல் விளைவிப்பதோ தவறென்று எண்ணியதால் அவற்றை ஈன்ற பெரும்பேடை கூண்டுக்கு வெளியிலிருந்து குஞ்சுகளைக் கொத்தி உள்ளே மீண்டும் தள்ளி கூண்டு முகப்பைத் தனது உடலால் அடைத்துக்கொண்டது. அப்படி அது அடைத்து உட்கார்ந்துவிட்டதை, கூண்டுக்கும் மேல்கிளையில் உட்கார்ந்திருந்த, ஆண்பறவை கண்டு சட்டென்று கீழ்க்கிளையில் குதித்து பேடையை நோக்கி வந்து, அதன் மூக்குடன் தனது மூக்கையும் இணைத்து உராய்ந்தது.

இயற்கையின் இந்த இந்திரஜாலங்களைப் பார்க்க முடியாவிட்டாலும், அதே சமயத்தில் அதே மாதிரி கண்ணழகியின் செம்பருத்தி இதழ்களை நோக்கிக் குனிந்த இதயகுமாரனின் வலிய உதடுகள் அவற்றை நெருங்கவும் அஞ்சியதால், அவன் கூரிய நாசி செண்பக மொட்டுப் போன்ற அவள் நாசியுடன் சற்றே இணைந்து உராய்ந்தது. அடுத்த விநாடி இயற்கையின் அஸ்திரங்கள் அந்த வீரனின் எச்சரிக்கையையும் அச்சத்தையும் அடியோடு கிழித்துவிடவே அவன் உதடுகள் ஒரு விநாடி அவள் உதடுகளைத் தடவி வேகமாகக் கன்னத்துக்குத் தாவி அதில் புதைந்து விட்டன. அவள் தோள் மீதிருந்த தனது கழுத்தை அவன்



முன்னதாகவே நீக்கி, மார்பில் சாய்ந்த அவள் முகத்தை சரியாகப் பார்க்க அவளைத் தன்னை நோக்கித் திருப்பியிருந்ததாலும், திரும்பியதால் அவள் முதுகைத் தாங்கிய இடது கை அரைச் சுற்று இப்புறம் வந்ததாலும், வலது கை மட்டும் அவள் சரியாமலிருக்க அவள் வலது தோளைமட்டும் தாங்கியிருந்ததாலும், உடல்கள் இரண்டும் பல இடங்களில் பட்டும் படாததுமாக இன்ப இம்சையை விளைவித்துக்கொண்டிருந்தன. அத்தகைய அரைகுறை இணைப்பால் தடுமாறிய உணர்ச்சிகள் இருவரையும் ஏதோ ஒரு கனவுலகத்துக்கு இழுத்துச் சென்றுகொண்டிருந்தன. அதன் விளைவாக அவன் பிடியில் லேசாகச் சுழன்ற சோழ மகள் பெருமூச்சுவிட்டு சற்றே கண்களை மூடினாள்.

அவள் கண்களை மூடியதையும் உணர்ச்சிகளால் அவள் உடல் நெளிந்ததையும், மார்பு எழுந்து தாழ்ந்ததையும் ஸ்பரிசத்திலிருந்தே புரிந்துகொண்ட இதயகுமாரன், தனது முகத்தை சற்று நிமிர்த்தி மூடிய கண்களைத் தனது இதழ்களால் தடவினான். பிறகு சற்றுக்கீழே முகம் தாழ்த்தி முகம் பூராவையுமே அவள் சங்குக் கழுத்தில் புதைத்துக்கொண்டான். அந்தக் கழுத்தின் வழவழப்பு அவனைப் பழைய சம்பவங்களுக்கு இழுத்துச்சென்று, ''இந்தக கழுத்தைக் காட்டித்தானே இளையவேளை சங்க அறுக்கும் குலத்தானென்று குற்றம் சாட்டினேன்?'' என்று தன்னைக் கேட்டுக் கொண்டான் இதயகுமாரன். ''இந்தக் கழுத்துக்குக் குறுக்கே வாளை வைத்தவனை வாளால் வெட்டினால்தானென்ன?'' என்று மற்றொரு கேள்வியும் எழுப்பிக் கொண்டான்.

கண்ணழகியின் மனம் எதையும் நினைக்கும் நிலையில் இல்லை. அந்த ஆண்மகன் தனது அழகுக்கு அடிமைப்பட்டு கழுத்தில் குழந்தைபோல் முகத்தைப் புதைத்துப் படுத்திருப்பதை எண்ணி ''பாவம்! களைத்திருக்கிறார்!' என்று பரிதாபப்பட்டாள் காரணமில்லாமல். களைத்ததற்குத் தான் பிணையில்லையென்பதை உணர்ந்திருந்தும், அப்பொழுது பரிதாபத்திற்குக்

காரணமில்லையென்பதை அறிந்திருந்தும் அவனிடம் அவளுடைய கருணை வரையற்றுக் கிடந்தது. பெண்களுக்கு அடைக்கலம் ஆண் என்பது உலக முறையானாலும் அந்த முறை மாறும் சமயங்களும் உண்டு என்பதை அந்த சில விநாடிகளில் சோழன் மகள் புரிந்துகொண்டாள். அப்படி முறை மாறும் சமயங்கள்தான் எத்தனை இன்பமானவை என்றும் நினைத்துப் பார்த்ததால் உணர்ச்சியால் சிறிது அசைந்தாள். அசைந்தது மட்டுமில்லாமல் தனது கையொன்றையும் அவன் கழுத்தின் மீது வைத்தாள். அந்த வலிய முரட்டுக் கழுத்தையும் அதன்மீது கிடந்த வெட்டப்பட்ட முரட்டுக் குழல்களையும் கையால் தடவினாள்.

இந்த சைத்தியோபகாரத்தால் அவள் கழுத்திலிருந்த அவன் முகம் இப்படியும் இப்படியும் அசைந்தது. பிறகு கழுத்திலிருந்து சிறிது இறங்கவும் துணிந்தது. அந்த சமயத்தில் தான் கண்ணழகியின் உணர்ச்சிகள் மீண்டும் விழித்துக்கொண்டன. ''உம்'' என்ற எச்சரிக்கை ஒலியும் எழுந்தது அவளிடமிருந்து. அவள் உடலும் சற்றுப் பின்னடைந்து அதுவரையிலிருந்த இணைப்பிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டது. அவள் அழகிய கண்களையும் அரைகுறையாக விழித்தாள்.

''என்ன ராஜகுமாரி?'' என்று கேட்டான் இதயகுமாரன் சற்றே சங்கடப்பட்ட குரலில்.

அந்தக் கேள்வி கண்ணழகியின் பலவீனத்தை அடியோடு அறுத்தெறிந்ததால் அவனிடமிருந்து பிரிந்து உட்கார்ந்தாள் அவள். ''நேரமாகிறது...தவிர...'' என்று மென்று விழுங்கினாள்.

''ஆம், ஆம். நேரமாகிறது'' என்று இதயகுகுமாரனும் சங்கடத்துடன் ஆமோதித்தான்.

அரசகுமாரி அவனை நோக்கவில்லை. வேறுபுறம் பார்த்துக்கொண்டு ''என்னைத் தேடுவார்கள்..'' என்றாள் சிறிது அச்சம்தொனித்த குரலில்.



இதயகுமாரன் அவள் தோள்களை மீண்டும் பிடித்து அவள் முகத்தைத் தன்னை நோக்கித் திருப்பி, ''அரசகுமாரி!'' என்று அழைத்தான்.

அவனைப் பார்க்கும் சக்தி அவளுக்கில்லை. நிலத்தை நோக்கி ''உம்'' என்று கேட்டாள்.

''நீ இங்கு வந்தது...'' இதயகுமாரன் வாசகத்தை முடிக்கச் சக்தியற்றவனானான்.

''தெரியாது.''

''யாருக்கு?''

''யாருக்கும்.''

''தோழிகளுக்கு?''

''ஊஹூம்.''

இதைக் கேட்ட இதயகுமாரன் இதயத்திலும் சிறிது அச்சம் துளிர்த்தது. ''அப்படியானால்?'' என்று கேட்டான் அச்சத்துடன்.

''எந்த நிமிஷமும், யாரும் தேடி வரலாம்?'' என்றாள் கண்ணழகி.

இதயகுமாரன் ''இதோ என்னைப் பார்அரசகுமாரி'' என்று அவள் முகவாய்க்கட்டையைத் தூக்கி நிமிர்த்தினான். கண்ணழகி மெல்ல தன் மலர்விழிகளை நன்றாகவே திறந்தாள். ''இது தவறு...'' என்றும் கூறினாள் பவள உதடுகளைத் திறந்து.

''எது அரசகுமாரி?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''எதையென்று சொல்லட்டும்?'' என்று உள்ளுக்குள் கேட்டுக்கொண்ட கண்ணழகி, அந்தக் கேள்வினாலேயே சற்று முன்பு விளைந்த நிகழ்ச்சிகளை எண்ணினாள். எண்ணியதால் நாணத்தால் முகம் சிவந்தாள், அங்கம், குழைந்தாள். இருப்பினும் மேலுக்குச் சொன்னாள், ''இது அரண்மனை நந்தவனம்'' என்று.

''ஆமாம்.'' இதயகுமாரன் ஆமோதித்தான்.

''இங்கு ஆண்கள் யாரும் வரக்கூடாது.''

''ஆம்.''

''வந்தால்...?''

''மரணதண்டனையும் கொடுக்கலாம்,''

''தெரிந்தும் வந்திருக்கிறீர்கள்.''

''நானாக வரவில்லை...'' என்று தடுமாறினான் இதயகுமாரன்.

''ஆம்'' என்ற அரசகுமாரி புன்முறுவல் கொண்டாள்.

''என்ன ஆம்?'' ஏதும் புரியாமல் கேட்டான்.

அரசகுமாரியின் இதழ்களின் புன்முறுவல் அதிகமாக விரிந்தது. ''யாராவது தூக்கிக்கொண்டு வந்து இங்கு விட்டிருப்பார்கள்'' என்று புன்முறுவலின் ஊடே கூறவும் செய்தாள்.

''என்னையா?''

''ஆம்.''

''என்னைத் தூக்கிவருபவரும் உண்டா?''

''உண்டு.''

''யார் தூக்கமுடியும்?''

''விஜயன்'' என்ற அரசகுமாரி லேசாக நகைத்தாள்.

இதயகுமாரனும் அவளுடன் சேர்ந்து நகைத்தான். ''சரி அரசகுமாரி. அதுதான் சரி. உன்னையும் அவனே தூக்கிச் செல்லட்டும்'' என்ற இதயகுமாரனை நோக்கிய அரசகுமாரி ''நல்ல லட்சணம்!'' என்று கடிந்துகொண்டாள்.

''ஏன் அரசகுமாரி! விஜயன் முரடனல்ல...'' என்ற இதயகுமாரனை மறுத்த அரசகுமாரி, ''ஆம், ஆம், அல்ல. அவ்வளவு முரடனல்ல'' என்றாள்.

''அவ்வளவு என்றால்?'' இதயகுமாரன் விவரம் புரியாமல் விழித்தான்.



''எஜமானைப் போல் முரடனல்ல'' என்றாள் அரசகுமாரி.

'நான் முரடனா?'' என்று இதயகுமாரன் கேட்டான்.

பதில் கூறவில்லை சோழன் மகள். தனது கண்களைத் திருப்பி தனது தோள்களிரண்டையும் பார்த்தாள். இரண்டிலும் தனது கைநகம் பதிந்திருந்ததை இதயகுமாரனும் கண்டான்.

''ஆம் அரசகுமாரி...'' என்று மென்று விழுங்கினான்.

அரசகுமாரி பதிலுக்குப் புன்முறுவல் செய்து, ''முரடன் மட்டுமல்ல நீங்கள்'' என்றாள்.

''வேறு என்ன?''

''திருடன்.''

''திருடனா?''

''ஆம். திருட்டுத்தனமாக இங்கு நுழைந்திருக்கிறீர்கள்.''

''இல்லை. நேர்வழியாகத்தான் வந்தேன். காவலர் யாரும் தடுக்கவில்லை.''

''தடுக்கவில்லையா? இல்லையா?''

''யாருமே இல்லை.''

''காவலர் இல்லாவிட்டால் எங்கும் நுழையலாமா?'' என்று கேட்டுக்கொண்டே அரசகுமாரி எழுந்தாள்.

இதயகுமாரனும் கூடவே எழுந்தான். ''அப்படியே நிற்காதீர்கள்'' என்றாள் அரசகுமாரி.

''வேறு என்ன செய்யவேண்டும்?''

''சற்று அப்புறம் திரும்பிக்கொள்ளுங்கள்.''

''ஏன்?''

''ஆடை புனையவேண்டும் சரியாக.''

இதயகுமாரன் வேறு பக்கம் திரும்பிக்கொண்டான். அரசகுமாரி செண்பகமரத்தின் மறுபுறம் சென்று சில விநாடி

களில் திரும்பி வந்தாள். வந்து தலைக்குழலைக் கோதிக் கொண்டாள். பழைய செண்பகமலர் சிறிது சிதைந்திருந்ததால் இன்னொரு மலரையும் பறித்து தலையில் செருகிக்கொண் டாள். ''அந்த மலரை இப்படிக் கொடு அரசகுமாரி'' என்று கையை நீட்டினான் இதயகுமாரன்.

''எதற்கு?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''வேண்டும் எனக்கு'' என்றான் இதயகுமாரன்.

பழைய மலரைக் குழலின் உட்புறத்திலிருந்து எடுத்துக் கொடுத்தாள் அரசகுமாரி. அப்படி எடுத்ததால் இரண்டொரு இதழ்களில்லாமல் அது வெளியே வந்தது. அதைக் கையில் வாங்கிக்கொண்ட சோழநாட்டு வாலிபன் அதைத் தனது கச்சை யில் பத்திரப்படுத்திக்கொண்டான்.

''நான் வருகிறேன்'' என்று கூறித் திரும்பினாள் அரச குமாரி அரண்மனையை நோக்கி.

''அரசகுமாரி!'' என்ற இதயகுமாரன் அழைப்பு அவளைச் சிறிது தேக்கியது. தலையை மட்டும் திருப்பி அவனை நோக்கி னாள் அரசகுமாரி.

''நீ தனியாகப் போகவேண்டாம். நானும் வருகிறேன் துணைக்கு'' என்றான் இதயகுமாரன்.

''துணையின்றித்தான் இங்கு வந்தேன்'' என்று சுட்டிக் காட்டி விட்டு நடந்தாள் அரசகுமாரி.

''விஜயா!'' என்று அழைத்துக்கொண்டு தானும் செல்லத் திரும்பினான் செண்பகமரத்தை நோக்கி. அடுத்த விநாடி அவன் இரு கைகளும் இரண்டு முரடர்கள் கையிலிருந்தன. ''அவனைத் திருப்புங்கள் அரசகுமாரியை நோக்கி'' என்று ஒலித்தது இளையவேளின் குரல்.

முரட்டுத்தனமாகத் திருப்பப்பட்டான் இதயகுமாரன். அரசகுமாரி சற்று எட்ட நடந்துகொண்டிருந்தாள் நிலத்தை



நோக்கிய வண்ணம். அவள் எதிரிலும் இரண்டு முரடர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் காலடி ஓசை கேட்டு சற்றே தலைநிமிர்ந்தாள் அரசகுமாரி. அவள் கைகளும் பற்றப்பட்டன துரிதமாக. வாயும் ஒரு முரட்டுக் கையால் பலமாகப் பொத்தப் பட்டது. கண்களைச் சுழற்றிப் பார்க்க முற்பட்டாள். தன்னை மறித்த முரடர்கள் முகங்களே பார்வைக்குத் தெரிந்தன. அடுத்த விநாடி முரட்டுக் கரங்கள் இரண்டு தன்னை மேலே தூக்குவதை உணர்ந்தாள் அரசகுமாரி. ஏதோ விவரிக்க இயலாத மலர் வாசனை அவள் நாசியில் நுழைந்தது. அத்துடன் அவள் சுரணை இழந்தாள். ''முரடன்! திருடன்!'' என்ற சொற்களை அவள் இதழ்கள் கடைசியாக முணுமுணுத்தன.

# 21. மாரவேளின் ரகசியம்

வேறெந்த மனிதனாயிருந்தாலும் அதிர்ச்சியடைந்து விடக்கூடிய அந்த விபரீத நிலையிலும் இதயகுமாரன், தன்னைப் பற்றி நின்ற முரடர்களிடமிருந்து விடுபட எந்தவித முயற்சியையும் எடுக்காமலும், சற்று திமிரக்கூடத் திமிராமலும், கண்ணெதிரே இருவர் கண்ணழகியைத் தூக்கியபோதும் எந்தவித உணர்ச்சியைக் காட்டாமலும், இடித்தபுளியென நின்றிருந்தான். அடுத்த இரண்டு விநாடிகளில் எதிரே வந்து பூதாகாரமாக நின்று நகைத்த இளையவேளையோ, உதடுகள் அசைந்ததால் பயங்கரமாக அசைந்த அவன் தடித்த மீசையையோ இம்மியளவும் லட்சியம் செய்யாமல் இளையவேளின் கண்களோடு தனது ஈட்டிக் கண்களைக் கலக்கவிட்டான். இதயகுமாரன் மேலுக்கு உணர்ச்சிகளை அறவே காட்டாவிட்டாலும் உள்ளூர அவன் பெரிய கொலைகாரனாக மாறியிருக்கிறான் என்பதை அந்த ஈட்டிக்கண்கள் சொன்ன செய்தியிலிருந்தும், அது தன் கண்களை ஊடுருவியபோது விளைவித்த பயங்கரத்திலிருந்தும் உணர்ந்து கொண்ட இளையவேளின் உள்ளம் ஓரளவு நடுங்கியதென்றாலும், அதை வெளிக்குக் காட்டாமலே சொன்னான் இளையவேள், ''யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்'' என்று.

இதயகுமாரன், சற்றுத் தூரத்தில் அரசகுமாரியை இருவர் தரையில் படுக்க வைப்பதையும், அவள் சுரணையற்றிருப்பதையும் கவனித்தான். இருபுறமும் தனது கைகளைப் பற்றிநின்ற இரு முரடர்களையும் திரும்பிப் பார்த்தான். ஒருமுறை வெகு அலட்சியமாக ''மகிழ்ச்சி' என்ற ஒற்றைச் சொல்லை முடிவாகச் சொன்னான்.



இளையவேளின் பெருவிழிகள் இதயகுமாரன்மீது நிலைத்தன சந்தேகத்துடன். ''எதற்கு மகிழ்ச்சி?'' என்று அவன் தடித்த உதடுகள் ஒரு கேள்வியையும் உதிர்த்தன.

இதயகுமாரன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ''உன்னைப் பூனையென்று நீ ஒப்புக்கொண்டதற்கு ''என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான் அவன் புன்முறுவலின் ஊடே.

தான் செய்த தவறு அப்பொழுதுதான் புரிந்தது இளையவேளுக்கு. ''பழமொழியைச் சொன்னேன்'' என்று சமாளிக்க முயன்ற அவன் குரலில் சினம் துளிர்த்துக் கிடந்தது.

''தமிழ்ப் பழமொழிகளில் பெரும் உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. சில சமயங்களில் நம்மை அறியாமலே நாம் அந்த உண்மைகளைக் கூறிவிடுகிறோம்'' என்று கூறிய இதயகுமாரன் ''இளையவேள்!'' என்று அழைத்தான் இரும்புக் குரலில்.

''என்ன?'' என்ற இளையவேளின் கேள்வியில் சீற்றமும் இருந்தது. சிறிது அச்சமும் இருந்தது.

''பெண்களை அபகரிக்கும் நிலைக்கு நீ தாழ்ந்துவிட்டதை நினைத்து வருந்துகிறேன்''என்ற இதயகுமாரன், ''உன் முரடர்கள் அரசகுமாரியைத் தொட்டதை மன்னிக்கிறேன்.நீ மட்டும் அவளைத் தொட முயலாதே'' என்றும் எச்சரித்தான். இதயகுமாரனின் உணர்ச்சியற்ற குரலில் எல்லை மீறிய எச்சரிக்கை ஒலித்தது.

இளையவேளின் இதயத்தில் அந்த எச்சரிக்கை நெருப்புக் கணைப்போல் புகுந்தது. இருப்பினும், அவன் அச்சத்தை உதறி விட்டுக் கேட்டான். ''தொட்டால் என்ன செய்வாய்?'' என்று.

இதயகுமாரன் விழிகளில் விவரிக்க இயலாத சாயை ஒன்றுபடர்ந்தது. ''தொடவேண்டாம்.துணிவிருந்தால் தொட முயன்று பார்'' என்று சொன்ன அவன் குரலிலும் ஏதோ ஒரு பயங்கர ஒலி படர்ந்துகிடந்தது.

இதைக் கேட்ட இளையவேள், தனது நிதானத்தை அடியோடு கைவிட்டான். ''டேய்! அவளைக் கொண்டு வாருங்கள்

இங்கே'' என்று கூவினான் அவளருகே நின்ற முரடர் களைப் பார்த்து.

கீழே கிடத்தப்பட்ட அரசகுமாரியை மீண்டும் தூக்கிய முரடர்கள் அவளை இளையவேளின் அருகே கொண்டு வந்தார்கள். ''யாரங்கே! சிறு பந்தத்தைக் கொளுத்தி இப்படிக் காட்டுங்கள்'' என்ற இளையவேளின் ஆசையை ஒட்டி ஒரு சிறு பந்தம் எங்கோ கொளுத்தப்பட்டு கொண்டுவரப்பட்டது. அதைத் தனது இடது கையில் வாங்கி அரசகுமாரியின் முகத்துக் கெதிரே காட்டி, ''இந்த முகத்தை நான் தீண்டுவதை யார் தடுக்க முடியும்?'' என்று வினவினான் இளையவேள்.

இதயகுமாரன் சிறிதும் நிதானமிழக்காமல் சொன்னான், ''உன் சொற்கள் இன்று மிக நியாயமாக வருகின்றன'' என்று.

''என்ன சொற்கள்?''

''அரசகுமாரியைத் தீண்டுவதாகச் சொன்னாய்.''

''ஆம்.''

''தீண்டுவது என்ற சொல் பாம்பு முதலிய விஷ ஜந்துக் களுக்குத்தான் உபயோகிக்கப்படுகிறது.''

இதைக் கேட்டதும் இளையவேள் சுயநிலையை அறவே இழந்தான். ''உன் தமிழறிவு இவளைக் காப்பாற்றாது. சொற் செறிவு என்னைச் சுடாது. நான் இத்தனை நேரம் இங்கு பேசிக் கொண்டு நிற்கிறேன். ஏன் தெரியுமா?'' என்று வினவி சற்றுக் கடுமையாக நகைத்தான் இளையவேள்.

''ஏன்?''– இதயகுமாரன் கேள்வி வரண்ட குரலில் வெளி வந்தது.

''உன்னைத் தொடர்ந்து நானும் கிளம்பினேன் திருமுக் கூடலிலிருந்து. இன்றிரவு ஏற்கனவே சோழனால் சிறைசெய்யப் பட்ட சேரர் காவலர்களையும் விடுவித்துக்கொண்டேன். அச்சுதக்கொல்லனின் ஆயுதக் கிடங்கிலிருந்து வாட்களையும்



அவர்களுக்குப் பரிமாறினேன். இந்த நந்தவனம் இப்பொழுது என் வீரர்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. இங்கு சந்தடி செய் யாமல் நுழைந்தோம். சமயத்தில் உன் சரசத்தையும் தடுத்தேன். இவள் கன்னத்தில் என் இதழ்கள் புதையும். தடுக்க முடிந்தால் தடுத்துப்பார்'' என்று கூறி கண்ணழகியின் சுரணையிழந்த மயக்கமுற்ற மதி முகத்தை நோக்கிக் குனிந்தான் இளையவேள்.

அதே விநாடியில் அவன் இடது கை திடீரென அசைந்து அதில் பிடித்திருந்தசிறு பந்தம் அவன் கண்ணில் அழுந்தியது. அதனால் திகைத்து அவன் திரும்ப முயன்ற சமயத்தில் இதயகுமாரனைப் பிடித்திருந்த இரு முரடர்களும் அவனைவிட்டுக் குனிந்து வித்தை காட்டுகிறவர்களைப்போல் எதிரே ஓடினார்கள். அடுத்த விநாடி இதயகுமாரன் வாள் இளையவேளின் ஊட்டியைத் தடவிக்கொண்டிருந்தது. ''இளையவேள்! அசையாதே! அசைந் தால் இந்த வாளின் நுனி உன் ஊட்டி யில் புதைந்து கழுத்தை ஊடுருவிவிடும். உன் நண்பர்களை மெதுவாக அரசகுமாரியைக் கீழே வைக்கச் சொல்'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்தான் இதயகுமாரன். முரடர்கள் இளையவேளின் உத்தரவுக்குக் காத்திராமல் உடனடியாகக் குனிந்து அரசகுமாரியை நந்தவனத் தின் புல் தரையில் கிடத்தினார்கள்.

''இளையவேள்! உன் வீரர்களுக்கு ஏதாவது சைகை செய்ய முடியுமானால் செய்து அவர்களை நந்தவனத்தை விட்டுப் போகச்சொல். இல்லையேல் சோழமன்னன் அவர்கள் அனை வரையும் இரண்டாம் முறை சிறையிலிடமாட்டான். தூக்கிலிடு வான். உம், சீக்கிரம்'' என்று துரிதப்படுத்தினான் இதயகுமாரன்.

எதிரியால் தனது கைப்பந்தம் கண்ணில் அழுந்தியதால் சுட்டுக் கருத்த ஒற்றைக் கண்ணுடன் மிகப் பயங்கரமாகக் காட்சியளித்த இளையவேள், எதிரியின் கத்திமுனை தனது கழுத்தில் அழுந்திக் கிடந்த நிலையிலும் மெள்ள நகைத்தான். ''என் வீரர்கள் யாரும் அணுகமாட்டார்கள். இரவில் யாரும்

நந்தவனத்துக்குள் நுழையும் வழக்கமில்லை. அப்படி நுழைந் தாலும் இந்த நந்தவனம் இங்கிருந்து நெடுந்தூரம் பரவி யிருக்கிறது. மரங்களின் அடர்த்தி மிக அதிகம். என் வீரர்களில் சிலரைத் தவிர, மற்றவர்கள் முன்னமே நகர்ந்து விட்டார்கள். அவர்களில் சிலர் மாரவேள் படுத்திருக்கும் அந்தப்புரத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள் சோழ வீரர் உடை யணிந்து. இப்பொழுது காவல் மாறும் நேரம். காவலை இவர்கள் மாற்றுவார்கள். இன்னும் அரை நாழிகைக்குள மாரவேள் இங்கிருப்பார். இங்கு யாராவது என்னைத் தொட்டால் மார வேள் எமனுலகை எட்டிப் பார்ப்பார்'' என்று கூறிய இளைய வேள், ''பார்த்தாயா இதயகுமாரா! எனது திட்டங்கள் நாழிகைக் கணக்குப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன'' என்றான்.

இதைக் கேட்டதும் இதயகுமாரனும் பொறுமை இழந்தான். ''முதலில் இந்த முரடர்களில் ஒருவனை அனுப்பி மாரவேளைத் தொடவேண்டாமென்று கட்டளையிடு. இல்லையேல் எமனுல கில் மாரவேளை வரவேற்க நீ முதலில் போக வேண்டியிருக்கும்'' என்று கூறினான் இதயகுமாரன் கடுமை மிதமிஞ்சி ஒலித்த குரலில். அதைத் தொடர்ந்து இளையவேளின் காலில் ஏதோ ஒரு மர்ம நரம்பு தட்டப்பட்டது இதயகுமாரன் காலால். இளையவேள் வெட்டப்பட்ட மரம் போல் தரையில் விழுந்தான். அடுத்த விநாடி இதயகுமாரன் கால் இளையவேளின் மார்பு மீது இருந்தது. வாள் ஊட்டியில் அழுந்திக் கிடந்தது. ''டேய்! இவன் அனுப்பிய வீரர்களிடம் சொல், மாரவேளைத் தொடக் கூடாதென்று. நான் அரச காவலர்களை அழைக்குமுன்பு நீங்களும் தப்பி ஓடிவிடுங்கள்'' என்று உத்தரவிட்டான் சோழ நாட்டு வாலிபன், இளையவேளின், முரடர்களுக்கு. அவன் உத்தரவினாலும், தங்கள் தலைவனிருந்த அவலநிலையினாலும் அந்த முரடர்கள் பாய்ந்தார்கள், கண்ணழகியைப் போட்டது போட்டபடி விட்டு விட்டு.



அவர்கள் சென்ற பின்பு கேட்டான் இதயகுமாரன், இளையவேளை நோக்கி, ''நான் இந்த நந்தவனத்துக்குள் வருவேனென்று உனக்கு யார் சொன்னது?'' என்று.

''யாரும் சொல்லவில்லை'' என்றான் இளையவேள் மல்லாந்து கிடந்த நிலையிலிருந்து. அவன் சொற்களில் விஷம் கலந்திருந்தது. ஒற்றைக்கண் உக்கிரமாகப் பார்த்தது இதய குமாரனை.

''என்னைத் தொடர்ந்து வந்தாயா முக்கூடலிலிருந்து?''

''இல்லை.''

''பின் எப்படி அறிந்தாய்?''

''ஒட்டுக்கேட்டேன். முதலில் எதுவும் காதில் விழ வில்லை. நந்தவனத்துக்குப் போக சங்கரநாராயணன் சொன்னது மட்டும் காதில் விழுந்தது. நீ புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல் லாம் நானும் புறப்பட்டேன்.''

இதயகுமாரனுக்கு நடந்ததெல்லாம் வெட்ட வெளிச்ச மாகத் தெரிந்தாலும் ஒரு விஷயம் மட்டும் புரியவில்லை. ''சேர மன்னர் அறியாமல் இவன் எப்படி முக்கூடலை விட்டுக் கிளம்பமுடியும்?'' என்று சிந்தித்துப் பார்த்தான்.

சேரமன்னர் இத்தகைய இழிச்செயலுக்கு ஒருநாளும் உடன்பட மாட்டாரென்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்த தால் அவரும் அறியாமல் இளையவேள் இந்த ரகசிய நட வடிக்கையில் இறங்கியிருக்கவேண்டும் என்று தீர்மானித் தான். இனி காலதாமதம் செய்வதில் பயனில்லையென்பதை உணர்ந்த இதயகுமாரன், சற்றுக்குனிந்து இளையவேளின் கச்சையிலிருந்த வாளை உறையிலிருந்து உருவி இடது கையில் பிடித்துகொண்டான். இரு வாளையும் இரு கைகளில் ஏந்திய நிலையில், ''இளையவேள்! உன்னைக் கொல்வதில்லை யென்று உறுதி கூறியிருக்கிறேன் மாரவேளிடம். ஆனால்,

அரசகுமாரியைத் தூக்க உத்தரவிட்ட உன் கைகளை வெட்டலாம். எழுந்திரு'' என்று கூறி தனது காலை அவன் மார்பிலிருந்து எடுத்தான்.

இளையவேள் மிக எச்சரிக்கையுடன் எழுந்தான். அதே சமயத்தில் இரு வாட்களாலும் அவனது கைகளைத் துண்டிக்க வாட்களைச் சரேலென்று வீச முயன்ற இதயகுமாரனை, ''வேண்டாம்! இதயகுமாரா வேண்டாம்!'' என்ற வேதனைச் சொற்கள் தடுத்தன.

இதயகுமாரன் கண்கள் இளையவேளை விட்டு அந்தக் குரல் ஒலி வந்த திசையை நோக்கின. மார்பில் ஏற்கனவே போடப்பட்டிருந்த கட்டிலிருந்து ரத்தம் ஒழுக மாரவேள் தள்ளாடித் தள்ளாடி வந்தார். இரு வாட்களுடனும் அவரை இதயகுமாரன் தாங்கிப்பிடிக்க முயன்ற சமயத்தில் இளையவேள் சரேலென ஓடி மறைந்துவிட்டான் மரக்கூட்டத்துள்.

மாரவேள் தலை சிறிது சுற்றியிருக்க வேண்டும். அவர் தலை சாய்ந்தது மார்புப்புறமாக. அவரை மெதுவாகப் பிடித்து கண்ணழகியின் பக்கத்தில் படுக்கவைத்தான் இதயகுமாரன். பிறகு இரண்டு வாட்களையும் இடைக்கச்சையில் செருகிக் கொண்டு வாவிக்குச் சென்று இரு கைகளிலும் நீரை எடுத்து வந்து மாரவேள் முகத்திலும் அரசகுமாரி முகத்திலும் தெளித்தான். அரசகுமாரி முதலில் கண்விழித்தாள். மெள்ள எழுந்து உட்காரவும் செய்தாள். அடுத்து படுத்திருந்த மாரவேளையும் கவனித்தாள். அவரை அணுகிக் கட்டைப் பரிசோதித்தாள். காயத்திலிருந்து ரத்தம் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது. அதைப் பிரித்துக் கட்டுப்போடவும், காயத்தின் தன்மையை ஆராயவும் அதைப் பிரிக்க முயன்ற சமயத்தில் மெள்ள கண்களை விழித்த மாரவேள், ''பயனில்லை அரசகுமாரி! இனி நான் பிழைக்கமாட்டேன். நீயும் இதயகுமாரனும் குனியுங்கள் என் மனத்தில் புதைந்து கிடக்கும் கதையைச் சொல்கிறேன்'' என்றார் தீனமான குரலில்.



''இல்லை மாரவேள்! நீங்கள் இறக்கப்போவதில்லை. அரண்மனை மருத்துவர்களை அழைக்கிறேன்'' என்றாள் அரசகுமாரி தழுதழுத்த குரலில்.

மாரவேளின் மூச்சு சிறிது கடுமையாக வந்துகொண்டிருந்தது. ''பயனிருந்தால் பிழைப்பதற்கு வழியிருந்தால் நான் இப்பொழுது வாயைத் திறக்கமாட்டேன் அரசகுமாரி! எனக்கு அதிக நேரமில்லை. குனிந்து நான் சொல்வதைக் கவனமாகக் கேள்'' என்று கூற, இருவரும் அவர் முகத்துக்கு அருகில் குனிந்தனர்.

மாரவேளின் பஞ்சடைந்த கண்கள் ஒரு விநாடி பளிச்சிட்டன. அவர் உதடுகள் விரிந்து மெள்ள சொற்களை உதிர்த்தன. ''நீங்களிருவரும் இங்கிருப்பது எனக்கு மகிழ்ச்சி. என் மனத்தில் புதைந்து கிடக்கும் பயங்கரக் கதையைக் கேளுங்கள். ஒரு மூர்க்கன், இரக்கமற்ற அரக்கன், இரண்டு பத்தினிகளை அழித்தான். ஒரு பருவப் பெண்ணை நேர்முகமாகக் கொல்லவில்லை. மறைமுகமாகக் கொலை செய்தான். இரண்டு பத்தினிகள் உங்கள் இருவரின் தாய்மார்கள். விவாகமாகாமலே கருவுற்ற அந்தக் கன்னிகை இளையவேளின் தாய், என் மகள்...'' என்ற மாரவேளின் தொண்டை சிறிது அடைத்துக் கொண்டது. பிறகு சமாளித்துக் கொண்டு மெதுவாகப் பேசினார் மாரவேள், அவர் வாயிலிருந்து ஒரு பயங்கரக் கதை. மூன்று அரசுகளைப் பற்றியது. அவர் கதையைச் சொல்லச் சொல்ல சினத்தின் எல்லையைத் தாண்டிக்கொண்டிருந்தார்கள் இதயகுமாரனும் கண்ணழகியும். விரிந்ததோ, எண்ணவும் முடியாத விபரீதக் கதை. அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை எண்ணி, அது தங்கள் இருவர் மீதும் சுமத்திய கடனை எண்ணி உணர்ச்சிப் பெருமூச்சுவிட்டான் இதயகுமாரன்.

# 22. அவர் சொன்ன கதை

காயம் கட்டுப் பிரிந்ததால் கசிந்த ரத்தத்தின் விளைவாக கண்கள் சில விநாடிகள் பஞ்சடைந்தபோதிலும், கடைசி கடமையை நிறைவேற்றவேண்டிய காரணத்தால் உணர்ச்சி களை மீட்டுக்கொண்டு மெள்ள மெள்ள தன் மனத்தில் புதைந்து கிடந்த ரகசியத்தை அவிழ்க்கலானார் மாரவேள். அணையுமுன் பளிச்சிடும் விளக்குச் சுடர்போல் பளிச்சிட்ட அவர் கண்களை அடுத்து சொற்கள் நிதானமாகவும் ஓரளவு திட மாகவும்கூட வெளிவந்தன.

''குழந்தைகளே! கேளுங்கள் பாக்கியமிழந்த ஒரு பரதே சியின் கதையை வளம்பெற்ற தமிழகத்தின் வீழ்ச்சியைப் போன்றது என் கதை. தமிழகம் முழுவதும் வீழ்ந்தது களப்பிரர் கொடுமையால். அவர்கள் அடுத்த தலைமுறையான முத்தரை யரால் அழிந்தது சோழநாட்டு வாழ்வு. இத்தனைக்கும் முத்தரையர் வலிகுன்றி சிற்றரசர்களாகிவிட்ட காலம். அந்தக் காலத்தில் சிறப்பெய்தியிருந்தது சந்திரலேகா அல்லது செந்தலை எனும் ஊர். தஞ்சையைப்போல் அது பேரூராகவில்லை. இருப்பினும், தஞ்சையை இன்னும் ஆண்டு வரும் முத்தரையர் செந்தலையையே தங்கள் தலையூராகக் கொண்டனர். அந்த சந்திரலேகாவில் இப்பொழுதும் இருக்கின்றான் * இரண்டாவது பெரும்பிடுகு முத்தரையன். அவனுக்கு ஒரு மகனும் உண்டு. பெயர் மாறன் பரமேசுவரன். தனது தந்தையின் பெயரை இவனுக்குச் சூட்டினான் பெரும்பிடுகு முத்தரையன். இவன் பரம அயோக்கியன், காமுகன், ஈவிரக்கம் சிறிதும் அற்றவன்...''

–இந்த இடத்தில் மாரவேள் சிறிது கதையை நிறுத்திப் பெருமூச்சு விட்டார். அரசகுமாரி வாவிக்கு விரைந்து தனது

* முத்தரையர் பரம்பரையில் இவன் கடைசி அரசன் – மா.இராசமாணிக்க னாரின் ''பல்லவர் வரலாறு'' பக்கம் 42.



முந்தானையை நனைத்து வந்து சிறிது நீரை அவர் வாயில் பிழிந்தாள். அதை இன்பமுடன் உட்கொண்ட மாரவேளின் முகத்தில் பெரும் சாந்தி உலவியது. மூச்சம் சிறிது சீராக வரத் தொடங்கியது.

மேலும் தொடர்ந்தார் கதையை மாரவேள்.

''கொலைகாரர்களும், மூர்க்கர்களுமான களப்பிரர் தமிழகத்தை ஆட்கொண்ட பிறகு தமிழ்மண்ணும் மொழியும் அவர்களைப் பெரிதும் மாற்றின. பண்பாடு அவர்கள் ரத்தத்திலும் நுழைந்தது. சிலர் தமிழ் மொழியின் சுவையால் நாயன்மார் களாகவும், ஆழ்வார்களாகவும் மாறினார்கள். கூற்றுவ நாயனாரும் களப்பிரர். திருமங்கையாழ்வாரும் களப்பிரர். தமிழின் இனிமை அத்தன்மையது. அதன் எளிமை, இனிமை... அது அமுதம்... யாரைத்தான் மாற்றாது?''

–இப்படிப் பரவசப்பட்ட மாரவேள்,

''இப்படி சிலர் ஆகியும் பலர் பரம்பரைக்குணம் போகா மல் மூர்க்கராகவே இருந்தனர். வலி குன்றி, நாடு குன்றி முத்தரையரான பின்பும் சிலரின் மூர்க்கத்தனம் போகவில்லை. செந்தலை முத்தரையரில் சிலர் கொடுமையின் இலக்கணமாக விளங்கினர். பெரும் பிடுகு முத்தரையன் மகனான மாறன் பரமேசுவரனை நினைத்தாலும் என் ரத்தம் கொதிக்கிறது. இவனால் மூன்று குடும்பங்கள் அழிந்தன. இதயகுமாரா! உன் குடும்பம் ஒன்று, அரசகுமாரியின் குடும்பம் ஒன்று, என் குடும்பம் ஒன்று...''

– இங்கு சிறிது நிதானித்தானர் மாரவேள்.

''பல்லவர் பலம் ஓங்கி முத்தரையர் வலி குன்றிய காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளும் தலைதூக்கலாயின. விஜயா லயன் தந்தையான ** ''தர்மவர்ம சோழன் காலத்திலேயே

** தில்லை, திருச்சிராப்பள்ளி, கரூர் சாசனப்படி சோழ வம்சாவளி – ஆ சிங்காரவேலு முதலியார் இயற்றிய 'அபிதான சிந்தாமணி' – 10611-வது பக்கம்

உறையூர் தலையெடுத்தது. விஜயாலயன் காலத்தில் அதிக வலுவடைந்தது. அவன் வீரத்தைக் கண்டு வியந்த பல்லவர் விஜயாலயனை சிற்றரசனாகவும் தங்கள் தெற்குத் திக்கின் படைத்தலைவனாகவும் ஏற்றுக் கொண்டனர். இப்படிப் பகைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஜயாலயனைக் கண்ட பெரும்பிடுகு முத்தரையன் அவனை அழிக்கத் தன் மகனை ஏவினான். மகன் படையெடுத்து வரவில்லை. பழைய களப்பிரர் என்ற கள்வர் குணம் அவனிடம் தலையெடுத்தி ருந்தது. விஜயாலயன் இல்லாத சமயத்தில் ஒரு இரவில் அவன் அரண்மனைக்குள் தனது வீரர்களுடன் திடீரென நுழைந்தான் மாறன் பரமேசுவரன். இராசமாதேவியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். அவன் வீரர்கள் பெண்களை அலங்கோலப்படுத் தினர். அழகே உருவமான அரசியைத் தூக்கிச் செல்ல முயன் றான். அவள் அவனை எச்சரித்தாள், அருகே வராதே என்று. பிறகு கத்தியைத் தனது இடையிலிருந்து எடுத்து மார்பில் புதைத்துக் கொண்டாள். அந்தக் கோரத்தைக் கண்டு வெளியே ஓடினான் முத்தரையன். அப்பொழுது நீ இளங்குழந்தை. வீறிட்டுத் தாயின் மார்புமீது ஏறிப் படுத்துக்கொண்டாய். இந்த நிலையில் உங்களைக் கண்டான் விஜயாலயன்'' என்ற மாரவேள் அரசகுமாரியயைப் பார்த்தார் பரிதாபத்துடன்.

''பரமேசுவர முத்தரையன் வெளியே வீரர்களுடன் சென்றபோது சோழர் படைத்தலைவர் தமது இல்லத்திலிருந்து அவனை எதிர்க்க வந்தார் வாளுடன். அவர் வெட்டப்பட்டார். அவர் வீரர்கள் முத்தரையர் வாள்களுக்கு இரையாயினர். அவர் விடுதியுள் புகுந்து பெண்களையும் கொன்றான் மாறன். அப்படி மடிந்தவர்களில் உன் தாயும் ஒருத்தி. அனாதையான உன்னை விஜயாலயன் எடுத்து வளர்த்தான், வீரனாக்கினான்'' என்று கூறிய மாரவேள் இதயகுமாரனைப் பார்த்தார்.

பிறகு அவர் கண்களில் நீர் திரண்டது. ''படைத்தலைவன் இறந்ததைக் கேட்ட உபதலைவன் முத்தரையனை எதிர்க்க



வாளும் கையுமாக இல்லத்தின் வாயிலில் நின்றான். முத்தரை யனை எதிர்த்தான். அவன் வாள் கரத்தில் கத்தியையும் பாய்ச்சி னான். ஆனால், முத்தரையன் வீரர்கள் அவனை வளைத்துக் கொண்டனர். உள்ளிருந்த அவமகள் ஓடி வந்தாள். அவள் அழகு, மாறனைக் கவர்ந்தது.அவளைப் பார்த்துப் பெருநகை நகைத்த முத்தரையன், அவளைத் தூக்கினான். அவள் அலறினாள், திமிறினாள். திமிறிய சமயத்தில் அவள் கழுத்திலிருந்த இரட் டைப் பதக்க ஆபரணம் அறுந்து வீழ்ந்தது. அதை அந்த உப தளபதி எடுத்துக் கொண்டான். மாறனோ உபதளபதியின் பெண்ணைத் தூக்கிக்கொண்டு புரவியில் ஓடிவிட்டான். ஆறு மாதங்கள் கழித்து அந்தப் பெண் திரும்பினாள் உறையூருக்கு. மானமிழந்து திரும்பினாள். அவள் வயிற்றில் மாறன் மகன் உருவெடுத்திருந்தான் கருவாக. மகனை ஈன்றதும் தற்கொலை செய்துகொண்டாள் உபதளபதியின் மகள். மகளை இழந்து மானமும் இழந்த உபதளபதி, சேர நாடு சென்றான். அங்கு ஓவியம் பயின்றான். பித்தனானான். பேரப் பிள்ளையை சேரனிடம் சமர்ப் பித்தான். அந்தப் பிள்ளையை சேரன் வீரனாக வளர்த்தான். கருவூர் படைத்தலைமையையும் கொடுத்தான் அவன் தான்...'' என்ற அவர் சொற்கள் தடுமாறின.

''இளையவேள்'' என்று முடித்தான் இதயகுமாரன்.

''ஆம். அவன் வீரனாகவும் வளர்ந்தான்,களப்பிரர் ரத்தம், முத்தரையர் ரத்தம் அவன் உடலில் ஓடுகிறது'' என்ற மார வேள்.''இதயகுமாரா! என் பெண்ணின் கழுத்திலிருந்து விழுந்த மாலையிலிருந்த இரு பதக்கங்களில் ஒன்றை நான் வைத்துக் கொண்டேன். இன்னொன்றை சேர மன்னனிடம் கொடுத் தேன். எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம் உனக்குத் தெரியும்'' என்று கூறினார்.

இப்படிப் பேசியதால் அவர் தலை துவண்டது சில விநாடிகளில். மீண்டும் முந்தானை நீரைப் பிழிந்தாள் அரச குமாரி, மாரவேளின் வாயில்.மெள்ளக் கண்விழித்த மாரவேள்

புன்முறுவல் கொண்டார். ''இதயகுமாரா! அரசகுமாரி! நான் சீக்கிரம் என் மனைவியும் மகளும் இருக்குமிடம் போகப் போகிறேன்'' என்றார் மெதுவாக. அவர் கண்களில் மீண்டும் அந்தப் பழைய புத்தொளி பிறந்தது.

இதயகுமாரன் இதயத்தில் கோபாக்கினி கொழுந்து விட்டு எரிந்தாலும் அதை அவன் அடக்கிக்கொண்டு கேட்டான். ''மாரவேள்! சோழர் தலைநகரில் ஒருவன் வீரர்களுடன் தோன்றி இத்தனை அக்கிரமங்களைச் செய்ய எப்படி முடிந்தது? சோழர் படை என்ன செய்துகொண்டிருந்தது?'' என்று வினவினான்.

''படையா!'' என்ற மாரவேள் புன்னகை கொண்டார் மரணத் தறுவாயிலும். ''பதினைந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட கதையைச் சொன்னேன் உனக்கு. அப்பொழுதுதான் விஜயாலயன் சொந்தப் படையை உருவாக்கிக் கொண்டிருந்தான். அது தவிர களப்பிரர் போர் முறையில் வருவதில்லை. திடீரெனத் தோன்றுவார்கள், தாக்குவார்கள், பறந்து விடுவார்கள். ஊருக்குள் எப்பொழுது வருவார்கள், எப்பொழுது தாக்குவார்கள் என்று சொல்ல முடியாது. தவிர, அவர்களைச் சமாளிக்கும் படை பலமிருந்தால் முத்தரையரை என்றோ அழித்திருப்பான் விஜயாலயன். ஆனால் அப்பொழுதுதான் படை திரட்டிக் கொண்டிருந்தான். மாறன் வந்த சமயம் உறையூர் மிகப் பலவீனமாயிருந்த காலம். களப்பிரர்,முத்தரையர் பெயர்களைக் கேட்ட மாத்திரத்தில் மக்களும் காவலரும் நடுங்கிய காலம். அந்தக் காலத்தை அழிக்க, வீரத்தை ஊட்ட, மக்களை வீரர் களாக்கத்தான் விஜயாலயன் தோன்றியிருக்கிறான். இன்று நிலை வேறு. சேரனும் விஜயாலயனைத் தொட அஞ்சுகிறான். வெகுசீக்கிரம் முத்தரையர் ஆட்சி செந்தலையில் மறைந்து விடும்'' என்றார் மாரவேள்.

அதிகமாகப் பேசியதால் அவர் மூச்சு சிறிது பலமாக வரத் துவங்கியது. அந்த மூச்சைச் சமாளித்துக்கொண்டு சொன்னார், 'செந்தலை முத்தரையர் தலைத்தலம், உன் தந்தைக்கு



உரியது. சோழமன்னர்களால் முன்பு உங்கள் வம்சம் செய்த சேவைக்காக மான்யமாக விடப்பட்டது. அங்கு இன்று உறைவது உன் பெற்றோரை அழித்தவன்'' என்று.

மாரவேளின் மூச்சு மிகவும் பெரிதாக வந்தது. அதையும் சமாளித்துக்கொண்டு, ''இதயகுமாரா! விஜயாலயனைப் பார்க்க நேரமில்லை. அவனிடம் சொல், கடைசிவரை மார வேள் அவனுக்கு சேவை செய்தே மாண்டான் என்று'' எனக் கூறினார். அப்படிச் சொல்லி கண்களை ஆகாயத்தை நோக்கி உயர்த்தினார்.

அவர் கண்களில் ஆகாயம் தெரியவில்லை. விஜயா லயன் முகமே தெரிந்தது.அந்த முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை.''விஜயாலயா! நீயா!'' என்று முணுமுணுத்தார் மாரவேள்.

விஜயாலயன் பதிலுக்குத் தலையை அசைத்தான். ''விஜயாலயா!'' இன்னொரு முறை முணுமுணுத்தார் மாரவேள்.

விஜயாலயன் அவர் தலைமாட்டில் மண்டியிட்டு உட் கார்ந்தான். முகத்தை அவர் முகத்தை நோக்கித் தாழ்த்தவும் செய்தான். மாரவேளின் கண்கள் பஞ்சடைந்தன. அந்த நிலையிலும் கேட்டார் ''இளையவேள்...'' என்று.

''தப்பவிட்டுவிட்டேன்'' என்றான் விஜயாலயன்.

''சோழதேவா...'' சுவாசம் வாங்கியது மாரவேளுக்கு. அவர் குரலில் பெருமதிப்பு இருந்தது.

''மாரவேள்''– பெரும் கருணை ஒலித்தது விஜயாலயன் குரலில்.

''உன் கருணை எல்லையற்றது. அதற்கு வணங்குகி றேன்'' என்றார் மாரவேள்.

''கருணை ஏதுமில்லை இதில்.கடமையிருக்கிறது. என் பக்கம் நின்ற மகானுக்கு,ஓவியருக்கு என் கடமை'' என்றான் விஜயாலயன்.

''என் பேரனை...'' என்ற மாரவேள் பரிதாபத்துடன் பார்த்தார்.

''அஞ்சவேண்டாம். ஏதும் செய்யமாட்டேன்'' என்றான் விஜயாலயன்.

இதைக் கேட்டதும் சாந்தி நிலவியது மாரவேளின் முகத்தில். அவர் கண்கள் தாமாகவே மூடின. தலை மெள்ள சாய்ந்தது ஒருபுறம். கண்ணழகியின் கண்ணீர் அவர் முகத்தில் விழுந்தன பொலபொலவென்று.

விஜயாலயன் ஜாடைகாட்ட கண்ணழகியின் கைகளைப் பிடித்து அப்புறம் அழைத்துச் சென்றான் இதயகுமாரன். நான்கு அடிகள் சென்றதும் திரும்பி நோக்கினான். அப்பொழுது விஜயாலயன் எழுந்து நின்றுகொண்டிருந்தான். கையில் வாளுடன் வாளைத் தாழ்த்தி, தலையையும் தாழ்த்தி வணங் கினான் மாரவேளை. பிறகு திரும்பி மெள்ள அரண்மனையை நோக்கி நடந்தான். அவன் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியிலும் வேதனையிருந்ததை இதயகுமாரனும் கண்டான், சோழன் செல்வியும் கண்டாள். அவன் சென்ற மறுவிநாடி மரக்கூட்டத் தின் மறைவிலிருந்து தாணு ரவிவும் சங்கரநாராயணனும் வெளியே வந்தார்கள். இருவரும் மாரவேளின் சடலத்தை உற்று நோக்கினார்கள்.

''கிரகங்கள் பொய் சொல்வதில்லை'' என்றார் சங்கர நாராயணன்.

சேரமன்னன் பேசவில்லை. தலையை மட்டும் வணங் கினான் மாரவேள் சடலத்தை நோக்கி, ''உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்'' என்று தன் வாளில் கைவைத்துச் சத்தியம் செய்தான். பிறகு கச்சையிலிருந்து இரு பதக்கங்களை எடுத்து அவர் மார்புமீது வைத்தான்.

# 23. ''எங்குதான் போயிருப்பான்?''

**மா**ரவேளின் உடலிலிருந்து உயிர் பிரிந்ததும் அவர் சடலத்துக்கு சோழ தேவனும் சேர மன்னனும் செலுத்திய மரி யாதையைச் சற்று எட்ட இருந்ததே கவனித்துக்கொண்டிருந்த அரசகுமாரியும் இதயகுமாரனும் மிதமிஞ்சிய துக்கத்துடன் வியப்பையும் அடைந்தார்கள். ஒரு சோழநாட்டு உபதள பதியாயிருந்து ஓவியராகவும் ராஜதந்திரியாகவும் மாறிவிட்ட மாரவேளை அவருக்கு எதிரியாயிருக்கவேண்டிய சேரன்கூட மதித்ததை எண்ணியதால் தமிழகத்தின் ஒரு பெரிய தியாகி, மகான் இறந்துவிட்டாரென்ற பெரிய உண்மையையை இருவருமே புரிந்துகொண்டார்கள். அவர் செய்த தியாகத்தின் பயன் இளையவேளையும் காப்பதை நினைத்துப் பார்த்த இதயகுமாரன், எந்த நல்ல காரியத்திலும் ஒரு கரும்புள்ளியும் கலப்பதை எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

அரசகுமாரி தனது கண்களில் பிரவாகித்துக்கொண்டி ருந்த நீரை நன்றாகத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள். ''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்றுவினவவும் செய்தாள் இதய குமாரனை நோக்கி.

''இளையவேளின் யோகத்தைப் பற்றி. இரண்டு பெரு மன்னர்களின் பாதுகாப்பு அவனுக்கிருக்கிறது'' என்றான் இதய குமாரன் சலிப்புடன்.

''ஏன், ஒரு மகாவீரரின் பாதுகாப்பும் இருக்கிறது'' என் றாள் அரசகுமாரியும் குரலில் சலிப்பைக் காட்டி.

இதயகுமாரன் சிந்தனை பல திசைகளில் இழுபட்டி ருந்ததால் அரசகுமாரியின் சொற்களை முழுதும் மனத்தில் வாங்காமல் ''யாரது?'' என்று கேட்டான்.

''என் பக்கத்தில் நிற்பவர்தான். இளையவேளைக் கொல்வதில்லையென்று நீங்களுந்தான் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறீர்கள்'' என்ற அரசகுமாரியின் குரலில் சினம் பெரிதும் ஒலித்தது.

அவள் சொன்னதில் பொருளிருப்பதையும், இளைய வேளின் உயிர் பல பக்கங்களிலும் பாதுகாக்கப்பட்டிருப்பதையும் எண்ணி இதயகுமாரன் சிறிது வருந்தவும் செய்தானென்றாலும் ''அரசகுமாரி...'' என்று மெள்ள அழைத்தான்.

''ஏன்?''

''ஒரு நல்ல மனிதரால், அவர் செய்யும் புண்ணியத்தால், அவரது பிற்கால சந்ததிகள் பலனடைகின்றன என்று சொல்கிறார்கள். அது உண்மை என்பதற்கு இளையவேள் உதாரணம்.''

இதைக் கேட்ட அரசகுமாரியும் ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள். அந்த சமயத்தில் சேர மன்னனிடம் நின்றிருந்த வான சாஸ்திரியான சங்கரநாராயணன், ''இதயகுமாரா! கண்ணழகி! இப்படி வாருங்கள்'' என்று அழைக்க, இருவரும் அவர் இருந்த இடத்தை அணுகினார்கள்.

சேரமன்னன், மாரவேளின் மார்பில் வைத்திருந்த இரு பதக்கங்களையும் அவ்விருவருக்கும் காட்டினார் சங்கர நாராயணன். ''அந்தப் பதக்கங்களின் வரலாறு உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இதயகுமாரா! இந்த இரண்டு பதங்களையும் மாரவேளின் சடலத்துடன் புதைக்க வேண்டும்'' என்றும் கூறினார். பிறகு கண்ணழகியை நோக்கி, ''எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்தமோகனச்சிலையை கைகளிலிருந்தும நழுவ விடாதே. திரும்பவும் அதன் முதுகைப் பிளந்து உள்ளிருக்கும் ரகசியத்தை அறிய முயலாதே'' என்றும் சொல்லி சற்று எட்டக் கிடந்த தந்தச் சிலையைக் காட்டினார்.

மாரவேளின் வருகையால், பிறகு ஏற்பட்ட அதிர்ச்சி தரும் விளைவுகளால் மோகனச்சிலையை நழுவ விட்டுவிட்ட அரச



குமாரி மீண்டும் அதை எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டாள். அந்தச் சிலையையும் பார்த்து அரசகுமாரியையும் பார்த்து சேரமன்னனான தாணுரவி ''சிலைக்கும் அரசகுமாரிக்கும் வித்தியாசமே இல்லையே?'' என்று வியப்புடன் கேட்டான்.

''அரசகுமாரியின் பிரதிபிம்பம்'' என்றார் வான சாஸ்திரி.

''இது..?''-தாணு ரவி வினவினான் மீண்டும்.

''சில நூற்றாண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டது''-வான சாஸ்திரியின் குரல் சர்வ சாதாரணமாயிருந்தது.

''அப்பொழுதே அரசகுமாரி பிறக்கப்போவது தெரியுமா இந்த சிலையைச் செய்தவர்களுக்கு?''

''தெரிந்திருக்க வேண்டும்.''

''அது எப்படி முடியும்?''

''பின்னோக்கி எல்லோராலும் பார்க்க முடியும். முன்னோக்கிப் பார்ப்பவர்களும் சிலர் அபூர்வமாக இருந்திருக்கிறார்கள். இதைச் செய்த இளஞ்சேட் சென்னி அத்தகைய பேரறிவாளர்களில் ஒருவன்.''

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?''

பதிலுக்குப் புன்முறுவல் கோட்டினார் சங்கரநாராயணன். ''இன்று மாரவேள் இறக்கப்போவது எப்படித் தெரிந்தது? இறக்கும் இடம் எப்படித் திட்டமாகத் தெரிந்தது? தெரிந்துதானே உன்னை அழைத்து வந்தேன்'' என்று கூறிய சங்கரநாராயணன் கண்களை ஆகாயத்தை நோக்கி, உயர்த்தி நட்சத்திரங்களைப் பார்த்தார்.

எதற்கெடுத்தாலும் நட்சத்திரங்களைப் பார்க்கும் வான சாஸ்திரியிடம் எதைக் கேட்டும் பயனில்லை என்பதை உணர்ந்த சேரமான் ''அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினான்.

''சோழனைச் சந்திக்க வேண்டும்'' என்ற சங்கர நாராயணன், இதயகுமாரனை நோக்கி, ''வீரனே! நீயும் அரசகுமாரியும் மாரவேளின் சடலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். நாங்கள் அரண்மனை சென்று வருகிறோம்'' என்று கூறினான்.

''நீங்கள் எதிரி நாட்டில் இருக்கிறீர்கள்'' என்று எச்சரித்தான் இதயகுமாரன்.

இதற்கு சங்கரநாராயணன் பதில் சொல்லாமல் லேசாக இளநகை கொண்டார் ஒருமுறை. பிறகு கூறினார், ''விஜயாலயனை நீ சரியாக அறிந்துகொள்ளவில்லை. தனித்து வரும் எதிரியைத் தொடவும் மாட்டான் சோழமன்னன். இதுவரை தென்னாடு காணாத பெரிய சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்க இருப்பவனுக்கு அற்ப குணங்கள் இருக்க முடியாது'' என்று. அத்துடன், ''வா மன்னா! நாம் சோழன் அரசண்மனைக்குப் போவோம்'' என்று அவர் கூறிக்கொண்டிருக்கையிலேயே அரண்மனை நந்தவனத்துக்குள் பெரும் பந்தங்களையும் விளக்குகளையும் ஏந்திய காவலர் வந்தனர். அவர்களுடன் வந்த அச்சுதப் பேரறையர் வீரர்களை நோக்கி, ''இந்த மகானின் சடலத்தைக் காத்திருங்கள். நாளைக் காலையில் அரசமரியாதைகளுடன் அவரது சடலம் அவரது ஓவிய அறையிலேயே புதைக்கப்படும். வீரக்கல்லும் அங்கு நாட்டப்படும்'' என்று கட்டளையிட்டார். ''அரசகுமாரி! இனி நீங்களும் செல்லலாம்'' என்றும் கூறினார். பிறகு சேரமன்னனுக்குத் தலைவணங்கி, ''தங்களையும் சாஸ்திரியாரையும் சந்திக்க அரண்மனையில் சோழதேவர் காத்திருக்கிறார்'' என்று அழைப்பு விடுத்து அவர்களிருவருக்கும் தலைவணங்கினார்.

அரசகுமாரி இதயகுமாரனை ஒரு வினாடி நோக்கினாள். அவள் பார்வை வெறித்துக்கிடந்தது. அவள் போகலாமென்று அறிகுறியாகத் தலையும் ஆட்டினான் சோழவாலிபன். அந்தக் குறிப்பறிந்து அரசகுமாரியும், அச்சுசுதரைத் தொடர்ந்து



சேரமானும் சங்கரநாராயணனும் அரண்மனை செல்ல, இதயகுமாரன் வேறுபக்கம் நோக்கி நடந்தான்.

''அரண்மனை நாடிவந்த சேரமன்னனையும் சங்கர நாராயணனையும் அரண்மனை வாயிலிலேயே சந்தித்த சோழ மன்னன், ''வரவேண்டும் சேர மன்னரே! தங்கள் அரண்மனைக்கு வரவேண்டும்! வான சாஸ்திர விற்பன்னரே! தங்களது வரவால் இந்த வஞ்சிமாநகரும் இந்த அரண்மனையும் புனிதமாகின்றன'' என்று முகமன் கூறி அவர்களை அழைத்துச் சென்றான் அரண்மனைக்குள். ''மாரவேளின் மரணத்தின் காரணமாக உங்கள் வருகையை அறிவிக்கும் தூரியவாத்தியங்கள் முழங்கவில்லை'' என்று தனது சாதாரண வரவேற்புக்குக் காரணமும் கூறினான்.

சோழமன்னன் வரவேற்புரையை சிரத்தை ஒருக்களித்து ஏற்றுக்கொண்ட சேரமன்னன் தாணு ரவியும், சிரம் தாழ்த்தாமல் பார்வையாலேயே ஏற்றுக்கொண்ட சங்கரநாராயணன், விஜயாலயனைத் தொடர்ந்து உள்ளே சென்று அவன் அந்தரங்க அறையை அடைந்ததும் சோழ மன்னன் அவர்களுக்கு ஆசனங்களை அளித்துத் தானும் ஒரு மஞ்சத்தில் உட்கார்ந்தான். அச்சுதப் பேரறையர் மட்டும் நின்று கொண்டிருந்தார் ஒரு பக்கச் சுவரில் சாய்ந்த வண்ணம். சில விநாடிகள் மௌனம் சாதித்தபிறகு விஜயாலயன் சொன்னான் சேரனைப் பார்த்து, ''இன்று பெரும் துக்க நிலையில் சந்திக்கிறோம்'' என்று.

சேரமான் தனது ஆராய்ச்சி விழிகளை சோழ மன்னன் விழிகளுடன் கலந்தான். ''துக்கத்தில் பங்கு கொள்ளத்தான் நாங்கள் வந்தோம்'' என்று அறிவித்தான் சேரன்.

விஜயாலயன் கண்கள் தாணு ரவியை நோக்கின மிகுந்த ஆச்சரியத்துடன். யாருடைய தலைநகரை தான் கைப்பற்றினானோ அந்த நாட்டு மன்னன் அந்தத் தலைநகரில் ஏதுமே நடக்காததுபோல் உட்கார்ந்திருப்பதையும், அவன் முகத்தில் எந்தவித சலனமோ அதிருப்தியோ நிலவாததையும் கண்ட

விஜயாலயன், "மன்னா! இது உங்கள் இரண்டாவது தலைநகர்..." என்று துவங்கினான்.

"தலைநகராயிருந்தது" என்று இடைபுகுந்து திருத்தினான் தாணு ரவி புன்முறுவலுடன்.

விஜயாலயன் முகத்தில் சேரமன்னனைப் பற்றிய நினைப்பில் ஈடில்லாத பெருமைக்குறி நிலவியது. "இரண்டாவது தலைநகர் சரித்திரப் பிரசித்தி பெற்றது. அது..." என்று துவங்கினான் விஜயாலயன்.

"தங்கள் கைக்கு மாறிவிடுமென்று குருநாதர் சொன்னார் ஆறு மாதங்களுக்கு முன்பு" என்று கூறிய சேரமன்னன், சங்கர நாராயணனை நோக்கினான்.

"ஆம். அது முன்னமே தெரியும்" என்று சங்கர நாராயணனும், அப்படி நடந்தது சாதாரண விஷயம்போல் ஒத்துப் பாடினார். "அதுமட்டுமல்ல, முக்கூடலும் உன்னிடம் ஒப்படைக்கப்படும்" என்றும் சொன்னார் சங்கரநாராயணன்.

"தானமா!" விஜயாலயன் வியப்பின் அதிர்ச்சியால் ஆசனத்தைவிட்டு எழுந்தான்.

சேர மன்னன் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. "இல்லை, தானமில்லை. அரசியல் உடன்பாடு" என்றான்.

"என்ன உடன்பாடு?" என்று வினவினான் விஜயாலயன்.

"பல்லவர் பலம் உச்சியிலிருக்கிறது. அது இன்னும் விரிந்தால் என் பாட்டனார் குலசேகரவர்மனால் அமைக்கப்பட்ட சேர சாம்ராஜ்யம் அழிந்துவிடும். பல்லவர்களிடமிருந்து சேர சாம்ராஜ்யத்தைக் காக்க வேண்டுமென்றால் தொலை தூரத்திலுள்ள இரண்டு நகரங்களை விட்டுக்கொடுப்பது தவறாகாது. நீங்கள் ஓராண்டு காலமாக வஞ்சிக்குள் சோழ வீரர்களை வணிகர்களாக அனுப்பியதும் எங்களுக்குத் தெரியும். காரணமும் தெரியும். அப்பொழுது அதை நிறுத்த நான்



தீர்மானிக்கவும் செய்தேன். ஆனால் குருநாதர் ஒப்புக்கொள்ளவில்லை. பக்கத்திலுள்ள சோழநாடு வலுப்படுவது சேர நாட்டுக்குப் பாதுகாப்பு என்று கூறினார். அவர் கட்டளைக்குப் பணிந்தேன். இப்பொழுது முக்கூடலையும் விட்டுக் கொடு என்றார். நான் மறுக்கவில்லை. குருநாதர் முக்காலமும் அறிந்தவர். இந்த இரு நகரங்களையும் வைத்துக்கொண்டு நீங்கள் வலுப்படுத்தி சேர நாட்டு எல்லையை வலுப்படுத்த வேண்டுமென்பது குருநாதர் விருப்பம். ஆகையால் என் விருப்பமுங்கூட" என்று விளக்கினான் சேரன்.

விஜயாலயன் சேரனையும் பார்த்து சங்கரநாராயணனையும் பார்த்தான். "நான் பல்லவர் படைத்தலைவன்" என்று கூறினான் முடிவில்.

அதுவரை வாளாவிருந்த சங்கரநாராயணன் சிரித்தான் லேசாக. "விஜயாலயா! நீ பெரும் சாம்ராஜ்யத்துக்கு வித்திடப் போகிறவன். பல்லவர் படைத்தலைவனாக இருப்பது ஒரு வியாஜம்" என்று கூறிவிட்டு எழுந்திருந்தான். அவனுடன் சேரமானும் எழுந்தான், "சோழமன்னனே! நாங்கள் வருகிறோம். என்றும் எங்கள் உதவி உனக்கிருக்கும். மாரவேளின் இறுதிச் சடங்குகள் நன்றாக நடக்கட்டும்" என்று கூறினான் சங்கர நாராயணன். அதற்குப் பின்பு அவ்விருவரும் அங்கு நிற்கவில்லை. பேசாமல் வெளியேறினார்கள். விஜயாலயன் அவர்களைத் தடை செய்யவில்லை அந்த அறையின் வாயிற்படியை அடைந்ததும் சற்றுத் திரும்பி சோழனை நோக்கிய சங்கரநாராயணன், "இதயகுமாரனை இஷ்டப்படி விட்டுவிடு. எந்தவிதத்திலும் அவனைக் கட்டுப்படுத்தாதே" என்று கூறிவிட்டு நடந்தார் வெளியே.

விஜயாலயன் தீர்க்க சிந்தனையில் இருந்தான். நடந்ததெல்லாம் பரம விசித்திரமாயிருந்தது அவனுக்கு. தன்னையும் மீறி சேரநாட்டு எல்லைவரை சோழராஜ்யம் விரிவடைந்துவிட்டதை எண்ணிப்பார்த்தான். தெய்வ பலம் சோழ நாட்டுப்

பக்கம் திரும்பிவிட்டது நன்றாகத் துலங்கியது அவன் சிந்தைக்கு. இத்தனையிலும் சேரமன்னன் வானசாஸ்திரியின் கைப்பொம்மையாக இயங்குவது அவனுக்கு விவரிக்க இயலாத வியப்பை அளித்தது. எப்பொழுதும் நட்சத்திரங்களையும் கிரகங்களையும் பார்த்துக் கொண்டு காரியக்கிரமங்களை நிர்ணயிக்க முடியுமா என்றும் எண்ணிப்பார்த்தான் சோழமன்னன். ''சங்கரநாராயணன் சோதிடத்தால் கிடைத்த இந்தத் தலைநகரும் முக்கூடலும் என் சிறப்புக்கோ வீரத்துக்கோ சான்று கூறமுடியாது, இது வெற்றியே அல்ல'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இப்படி தனது நிலைமையை நினைத்துப் பார்த்தும், அடுத்த நடவடிக்கைகளுக்கு அடிகோலத் திட்டங்கள் இட்டும் இரண்டு நாட்கள் காலத்தைக் கழித்தான் விஜயாலயன். இதற்கிடையே மாரவேளின் அடக்கமும் சம்பிரமமாக முடிந்துவிடவே அச்சுதப் பேரறையரை அழைத்து, ''இந்தத் தலைநகரை இதயகுமாரனிடம் ஒப்படைத்துவிட்டு நாம் உறையூர் செல்வோம். அடுத்து செய்ய வேண்டியதை அங்கு யோசிப்போம்'' என்றான்.

அச்சுதப் பேரறையரும் அதற்கு சம்மதித்தார். அந்தத் திட்டத்துக்கு ஒரே ஒரு இடையூறுதான் இருந்தது. இதயகுமாரனை மாரவேளின் அடக்க சமயத்திலும் காணோம். அதற்குப் பிறகும் காணோம். அச்சுதர் கரூரை சல்லடை போட்டுச் சலித்தார். அடியாடு சுவடு தெரியாமல் மறைந்து விட்டான் இதயகுமாரன். ''அவன் எங்குதான் போயிருப்பான்?'' என்று பலமுறை தன்னைத்தானே கேட்டுக்கொண்டார் அச்சுதர். விடைமட்டும் கிடைக்கவில்லை அவருக்கு, நாட்கள் நான்கு ஆகியும்.

# 24. சந்திரலேகா

தஞ்சையை அடுத்திருந்த சந்திரலேகா என்ற முத்தரையர் தலைநகரை பெரிய நகரம் கூறமுடியாவிட்டாலும் அது ஒரு இரும்புப் பாசறை என்று சொல்லும்படியாக முத்தரையர் அமைத்திருந்ததால், அந்த ஊருக்குள் புகுவதோ, வெளியே உயிருடன் வருவதோ நடக்கத் தகாத காரியமாயிருந்தது. அந்த ஊரைச் சுற்றிலும் பெரிய கோட்டை கொத்தளங்கள் இல்லாவிட்டாலும், களப்பிர வீரர்கள் ஆயுதபாணிகளாக இரவும் பகலும் உலாவி வந்ததாலும், அந்த நகருக்குள் வரும் யார் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் விசாரணையின்றி அவரைக் கொன்றுவிட வீரர்களுக்கே அதிகாரமிருந்ததாலும், நகரைப் பாதுகாத்த காவலரும் நல்ல உயரம் பருமனாக ராட்சஸர்கள் போலிருந்ததாலும் அந்நகரின் பக்கம் மற்ற ஊர் மக்கள் எட்டிப் பார்க்கும் வழக்கமில்லாதிருந்தது.

அதற்காக அந்த நகரத்துக்குள் யாருமே வரக்கூடாதென்ற கட்டாயம் எதையும் வைக்கவில்லை முத்தரையர்கள். சூரியோதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை யார் வேண்டுமானாலும், அந்த ஊரின் வெளிவாயிலாக அமைந்திருந்த இரண்டு பெரிய ஸ்தூபிகளின் பக்கத்திலிருந்த படை வீட்டில் வசித்து வந்த காவலர் தலைவன் உத்தரவு பெற்று உள்ளே வரலாமென்ற விதி ஏற்படுத்தியிருந்தார்கள். சந்திரலேகா நகரத்தில் பொது மக்களென்று யாரும் கிடையாதாகையால் அங்கிருந்து படைத் தளத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அனைத்தும் பக்கத்திலிருந்த தஞ்சைப் பெருநகரிலிருந்தே வந்து கொண்டிருந்தன.

ஆகையால் விடியற்காலையில் சந்திரலேகாவில் புகும் தயிர்க்காரிகளும் அங்கிருந்த பலசரக்குக் கிடங்குகளைத்

திறக்கவரும் வணிகர்களும், அங்கிருந்த பலசரக்குக் கிடங்கு களைத் திறக்க வரும் வணிகர்களும், அங்கிருந்த ஒரே கோவி லுக்குப் பூஜை செய்யவரும் பூசாரிகளும், முத்தரையர் அரண் மனைப் பெண்களுக்கு மலர் கொண்டுவரும் பூக்காரிகளும் விநோதக் கும்பலாகக் காட்சியளித்தனர்.

சூரியன் கிழக்கே உதித்ததும் உட்புக அனுமதியிருந்தாலும், சீக்கிரத்தில் வேலையை முடித்துக்கொண்டு திரும்பும் எண்ணம் வருபவர்கள் மனத்தில் தீவிரமாகக் குடிகொண்டிருந்ததால், தஞ்சையிலிருந்து வருபவர்கள் விடியற்காலையிலேயே வந்து சந்திரலேகாவின் இரு ஸ்தூபிகளுக்கு முன்பாகத் தங்கியிருந்து காவலர் தலைவன் வந்து அனுமதி கொடுத்ததும் ஊருக்குள்ளே விரையலாயினர். இப்படி சர்வ கெடுபிடியுடனிருந்த சந்திரலே காவில் நிமிடப்படி சகல அலுவல்களும் நடந்து வந்தன.

சூரியோதயமான அடுத்த பத்து வினாடிகளுக்குள் கோவில் மணி பெரிதாக அடிக்கும். அதைத் தொடர்ந்து அந்த நகர மத்தியிலிருந்த அரண்மனைக் கதவுகள் பெரும் சத்தத் துடன் திறக்கப்படும். திறக்கப்பட்ட அரை நாழிகையில் பெரும்பிடுகு முத்தரையர் அரண்மனை வாயிலின் மேல்படி யில் நின்று கிழக்கு நோக்குவார். சூரிய பகவானும் அவருக்குப் பயந்திருக்கவேண்டும். தனது இளங்கதிர்களை அவர்மீது மிக மெதுவாக வீசுவான். அந்த வந்தனத்தை ஏற்றுக்கொண்டவர் போல் முத்தரையர் கோன் தனது தலையைச் சற்றே அரண் மனை வெளியிலிருந்த பெரும் சதுக்கத்தை நோக்கிச் சிறிது அசைப்பார். அடுத்த விநாடி பூர்ணகவசமணிந்த ஆயிரம் களப்பிர வீரர்கள் அணிவகுத்து அந்த சதுக்கத்தில் நுழைவார்கள். முதலில் புரவிப் படையின் ஒரு பிரிவு நுழையும், அடுத்து காலாட்படை நுழையும். இரண்டும் ஒன்றின்பின் ஒன்றாக அணி வகுத்து சதுக்கத்தில் சுற்றும்.

இப்படி இரண்டு நாழிகை அணிவகுப்புக்குப் பிறகு பட்டத்து யானையொன்று அவர் நிற்கும் படிகளில் ஏறிவந்து



மண்டியிட்டு அவர் காலைத் துதிக்கையால் தொட்டு வணங்கும். அப்பொழுதுதான் சுவரன் மாறன் என்று சொந்தப் பெயரையும் பெரும்பிடுகு முத்தரையர் என்ற குடிப்பெயரையும் தாங்கிய முத்தரையர் அதிபதியின் கடுமை முகத்தில் சிறிது சிரிப்பின் சாயையும் தோன்றும். அந்தப் புன்சிரிப்புடன் இரண்டு படிகள் இறங்கிவந்து யானையின் தலையைத் தட்டுவார் முத்தரைய பூபதி. பிறகு அதன் மத்தகத்தில் உட்கார, பட்டத்து வேழம் மெள்ள பின்புறமாகவே படிகளில் மிக ஜாக்கிரதையாக இறங்கி சதுக்கத்திற்கு வரும். அந்த யானையை நாற்புறமும் செலுத்தி படை அணிவகுப்பைப் பார்த்த பின்பு மன்னர் மீண்டும் படிகளை நோக்கி வேழத்தை நடத்துவார். அடிப் படியிலேயே யானையைப் படுக்கச் சொல்லி படிகளில் ஏறிச் சென்றுவிடுவார்.

இப்படிக் காலை அணிவகுப்பை மன்னர் முடித்து விட்டதைக் குறிக்க இரண்டு சங்குகள் பலமாக ஊதப்பட்டு முரசுகளுகம் முழங்கியதும் சந்திரலேகா ஜீவனுள்ள நகரமாக மாறும். உணவுப் பொருள் கிடங்குகளிலிருந்து படைவீரர் விடுதிகளுக்கு உணவை எடுத்துப் போவோரும், பூவை விற்க தெருக்களில் நடக்கும் பெண்மணிகளும், ஆங்காங்கு நடமாடும் காவல் வீரர்களுமாகச் சேர்ந்து எழுப்பும் பலவித ஒலிகளால் சாதாரண ஊராக அந்தத் தலைநகர் மாறும்.

இப்படிப் பகல் முடிந்ததும் சூரியாஸ்தமன சமயத்தில் மீண்டும் சங்குகளும் முரசுகளும் ஆர்ப்பரிக்க செந்தலை (சந்திரலேகா) வந்த தஞ்சைவாசிகள் வேகமாகத் தங்கள் இல்லம் திரும்புவார்கள். இருள் மூண்டதும் காவல் வீரர் ஒலிகளும், படைப்புரவிகளின் நடமாட்டம் அளிக்கும் ஓசை களும் தவிர வேறு எந்த சத்தமும் சந்திரலேகாவில் இருக்காது.

என்றாவது ஒரு நாள் முத்தரையர் வெளியூர்களை வேட்டையாடக் கிளம்பும்போது திடீரென ஆயிரம் புரவிகள் பாய்ந்து வெளியே செல்லும் இரவு நேரத்தில். அப்பொழுது

தான் பெருத்த ஓசை சந்திரலேகாவில் கேட்கும். மற்றபடி சந்திரலேகா மயான அமைதியைக் கொண்ட மௌன நகரமாகவே விளங்கி வந்தது. அப்படியே மீறி சத்தம் ஏதாவது கேட்டால் அவை வெளியிலிருந்து கொணரப்படும் பெண்கள் அலறலாயிருக்கும் அல்லது குடிவெறியில் வீரர் போடும் கூச்சலாயிருக்கும்.

இந்தக் கூச்சல் பெரும்பிடுகு முத்தரையர் காலத்தில் பெரிதும் அடங்கியிருந்தாலும் அவன் மகன் மாறன் பரமேசுவரன் பெரியவனானதும் மீண்டும் அடிக்கடி தலைகாட்டலாயிற்று. மூர்க்கனாயிருந்தாலும் மகா வீரரும் அச்சமற்றவனுமான பெரும்பிடுகு முத்தரையருக்கு மகன் மாறனின் போக்கு பெரும் தலைவலியாயிருந்தது. அதன் விளைவாக மகனை எத்தனையோ முறை அடக்கமுயன்ற பெரும்பிடுகர் தோல்வியே அடைந்தார். மகனுக்கு சுற்று முற்றும் எழும் எதிரிகளை அறியும் சிந்தனா சக்தி இல்லாததைக் கண்டு பெரும் மனோவியாதிக்குள்ளானார். களப்பிரர் சந்ததிகளான முத்தரையர் ஆட்சி நாலாபக்கத்திலும் ஒடுக்கப்படுவதையும், பல்லவ, பாண்டவ, சோழ, சேரர் பலம் ஓங்குவதையும் பெரும்பிடுகர் கவனிக்கவே செய்தார்.

அடுத்துவரும் பேராபத்தைப் பற்றிப் பல முறை மகனிடம் சுட்டிக்காட்டியும் மகன் எதையும் காதில் வாங்காததால் பெரும் மனோவேதனைக்கு உட்பட்ட முத்தரைய பூபதியின் உடல் நிலையும் பாதிக்கப்பட்டது. அவர் வயது எழுபதைத் தாண்டியிருந்தது. மகனும் நடுவயதைத் தாண்டியிருந்தான். இருப்பினும், பெண்ணும் குடியும் கொள்ளையுமே பெரிதென அவன் கருதிவந்ததையும் நாட்டை வலுப்படுத்துவதில் சிறிதும் சிந்தனையில்லாததையும் அவர் எண்ணி மனம் உடைந்திருந்தார். கருவூரில் மாரவேள் காலமான நாளுக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு பெரும்பிடுகரும் நோய் வாய்ப்பட்டுப் பஞ்சணையில் படுத்திருந்தார். பஞ்சணையும் சோழ நாட்டிலிருந்து கொள்ளையடித்துவந்த உயர்ந்த பஞ்சணை என்றாலும் சிந்தையில் இருந்த வியாகூலத்தால் அவருக்கு அந்தப் பஞ்சணைகூட சுகத்தை அளிக்கவில்லை. இரவு முற்றி நீண்ட நேரமாகியும் மகன் வராது போகவே சினத்துடன் சிறிது உறுமிய முத்தரைய பூபதியை அணுகிய பணிப்பெண் ''அருந்த மருந்து தேவையா?'' என்று வினவினாள்.



பெரும்பிடுகு முத்தரையர் ராட்சஸக்கண்கள் பணிப் பெண்ணை நோக்கி உருண்டன ஒரு முறை. ''மது கொண்டு வா'' என்று உதடுகள் சொற்களை உதிர்த்தன.

''மருத்துவர் கூடாதென்று சொல்லியிருக்கிறார்'' என்றாள் பணிப்பெண்.

முத்தரையர் நகைத்தார் மெள்ள. ''நாளைக்கு அவரைக் கொன்று விடுகிறேன்'' என்றான்.

பணிப்பெண் அவர் அசுரச் சிரிப்பை அலட்சியம் செய்தாள். ''உங்கள் நல்லதுக்குத்தான் சொல்லியிருக்கிறார்'' என்றாள் கண்டிப்பாக.

பெரும்பிடுகு முத்தரையர் பெரிதாக நகைத்தான் அத்தனை நோயிலும். ''இதுவரை என்னை யாரும் அடக்கியதில்லை. நீதான் அடக்குகிறாய்'' என்று கூறிவிட்டு மெள்ள எழுந்திருந்து பஞ்சணையை விட்டு இறங்கினார். அதற்கு மேல் அவனைத் தடுப்பதில் பயனில்லை என்று நினைத்த பணிப்பெண் விடு விடு என்று அடுத்த அறைக்குச் சென்று மதுவைக் கொண்டு வந்தாள். அவள் கொடுத்த தங்கப் பாத்திரத்திலிருந்த மதுவைக் கடகடவெனக் குடித்த முத்தரையன் பஞ்சணைமீது உட்கார்ந்து அவளை நோக்கினான் சிவந்த பெருவிழிகளால், ''மாறன் எங்கே?'' என்று வினவினார்.

''தெரியாது.''

''தெரியாதா?''

''தெரியாது. மூன்று நாட்களாக ஊரில் இல்லை.''

அதற்குமேல் கேள்வி ஏதும் கேட்கவில்லை பெரும்பிடுகு முத்தரையர். பணிப்பெண் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்துவிட்டுப் பஞ்சணையில் தொப்பென்று விழுந்தார். போதை தனது ஆட்சியை செலுத்தத் தொடங்கியது நள்ளிரவில். அதன் விளைவாக பெரும்பிடுகு முத்தரையன் பஞ்சணையிலிருந்து இறங்கி மெள்ள நடந்தான் அறையின் சாளரத்தை நோக்கி. அங்கிருந்து வெளியே எட்டிப்பார்த்தார். எங்கும் கோரமான அமைதி குடிகொண்டிருந்தது. பிறகு அறைக் கதவைத் திறந்து கொண்டு அடுத்த தாழ்வரையில் நுழைந்து நெடுக நடந்தார்.

தாழ்வரையின் இருபக்கங்களிலும் இரும்பு வளையங்களில் செருகப்பட்டிருந்த பந்தங்கள் அவர் முகத்தின் பளபளப்பையும், பெரிய மீசையின் பயங்கரத்தையும், ஏன், நோயின் உக்கிரத்தையுங்கூட அநேக மடங்கு அதிகப் படுத்திக் காட்டின. ஆனால், வயதானதாலும், குடியாலும் வலுவிழந்த கால்கள் சிறிது தள்ளாடவே செய்தன. அந்தத் தள்ளாட்டத்தையும் சகித்துக்கொண்ட பெரும்பிடுகு முத்தரையர் தாழ்வரைக் கோடியிலிருந்த தனது மகனின் அறையை நாடிச் சென்றான். அறைக்கதவு திறந்திருந்ததைக் கண்டு சிறிது மகிழ்ச்சியும் அடைந்தார், மகன் திரும்பி விட்டான் என்ற காரணத்தால். அந்த மகிழ்ச்சியுடன் வாயிற்படியைத் தாண்டி உள்ளே நுழைந்தவர், உள்ளே விரிந்த காட்சியைக் கண்டு பிரமித்தார்.

அங்கு அவர் மகன் நின்றிருந்தான். வழக்கத்துக்கு மாறாக சற்று எட்ட சுவரில் தீட்டப்பட்டிருந்த ஒரு அழகியின் உருவத்தில் அவன் கண்கள் நிலைத்திருந்தன. தந்தை வந்த காலடி ஒலி கேட்டும் அவன் திரும்பவில்லை.

பெரும்பிடுகு முத்தரையர் அறை வாயிற்படியில் சாய்ந்து கொண்டு ''மாறா!'' என்றழைத்தார்.

அழகு ஓவியத்தில் லயித்திருந்தவன் முகம் சற்றுத் திரும்பியது. திரும்பிய முகம் அவர் மகன் முகமல்ல.

# 25. தந்தையும் மகனும்...

சந்திரலேகாவின் அரண்மனையில் தனது மகனைத் தேடி அவன் அறையை நாடி அதன் கதவைத் திறந்துநின்ற பெரும்பிடுகு முத்தரையர், அங்கு நின்றவனைக் கண்டு தனது மகனெனக் கருதி மாறாவென்றழைத்ததும் திரும்பியவன் முகத்தைக் கண்டதும் சிறிது அதிர்ச்சியையும் சினத்தையும் ஒருங்கே அடைந்தார். இருப்பினும், சினத்தை உதறி, தான் கண்டது மதுவின் இயல்பாயிருக்குமோ என்ற எண்ணத்தில் தனது கண்களை இருமுறை கசக்கிவிட்டு நன்றாக விழித்துப் பார்க்கவும் செய்தார்.

திரும்பிய முகம் தனது மகனின் முகமில்லாவிட்டாலும் அதைப் போன்ற இன்னொரு அச்சு என்பதை உணர்ந்து கொண்டதால், சிறிது குழப்பமும் அடைந்து ஒரு விநாடி சிந்தனை வசப்பட்டாலும் அந்த சிந்தனையும் பளிச்சென்று மறைந்தது. ராட்சஸக் கண்களில் வியப்பின் சாயையும் படரலாயிற்று. ''இருக்காது! ஒரு நாளும் இருக்காது!'' என்று வலிய அவர் உதடுகள் இருமுறை சொற்களையும் உதிர்த்தன வியப்பு பெரிதும் நிரம்பிய குரலில். ''இல்லை இல்லை. அவன்தான். அதே அச்சு. இயற்கை பொய் சொல்லாது. என் காவலர்தான் பொய் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் நல்லதுக்குத்தான்'' என்று மீண்டும் சொற்களைக் குடிவெறியுடன் முணு முணுத்தான் பெரும்பிடுகு முத்தரையர்.

இப்படித் தனது காதுக்கு ஏதும் கேட்காமல் அந்த முதியவர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்ததைக் கண்ட அந்தப் புதுமுகம் உதடுகளைத் திறந்து, ''நீங்கள்தான் பெரும் பிடுகு முத்தரையராயிருக்க வேண்டும்'' என்று கூறிற்று சிறிது பலமாகவே.

இதைக் கேட்டதும் முத்தரையர் மதுவின் சேஷ்டையினால் பெரிதாகவே நகைத்தார் கட்டிடம் அதிரும்படியாக. ''நல்ல கேள்வி!''என்று நகைப்பின் ஊடே கூறவும் செய்தார் முத்தரையர்.

''கேள்வியில் நகைப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று சீறினான் வந்தவன்.

''என் அரண்மனைக்குள் வந்தது மட்டுமின்றி என்னைக் கேள்வியும் கேட்டு நீ உயிருடனிருப்பதே நகைப்புககு இடம் கொடுக்கிறது. அது கிடக்கட்டும். உன் பெயரென்ன?'' என்று வினவினார் முத்தரையர் தனது சிரிப்பைச் சிறிது நிறுத்தி.

வந்தவன் ஒருவிநாடி சிந்தித்தான். பிறகு சொன்னான் ''இளையவேள்'' என்று.

இதைக் கேட்டதும் மீண்டுமொருமுறை இடிபோன்ற நகைப்பு அந்த அறையை உலுக்கியது. ''இளையவேள்! என்ன மடத்தனமான பெயர்? உனக்கும் வேளிர் குலத்தாருக்கும் என்ன உறவு இருக்க முடியும்?'' என்று நகைப்புடன் கேட்ட பெரும்பிடுகர் உதடுகளில் சட்டென்று நகைப்பு உறைந்தது. அவன் பெரிய வலதுகை சுவரிலிருந்த பெண்ணின் சித்திரத்தைச் சுட்டிக்காட்டியது. ''அவளை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டது இரும்புக்குரல்.

''தெரியாது''–இளையவேளின் குரலிலும் இரும்புச் சாயை தெரிந்தது.

''தெரியாவிட்டால் ஏன் அதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாய்?''–பெரும்பிடுகர் கேள்வியில் கொடுமை இருந்தது.

''தெரியாது.''

''என்ன தெரியாது?''

''காரணம் தெரியாது.''



''நான் காரணம் சொல்கிறேன். அவள் உன் தாயார்'' என்ற பெரும்பிடுகர், இளையவேளின் முகத்தில் விளைந்த சந்தேகத்தைக் கண்டு, ''சந்தேகம் வேண்டாம். அவள் உன் தாயார்தான். அதையறியாமலே ரத்தபாசம் நீ அந்த சித்திரத்தைப் பார்க்கவும், பார்த்து சிந்திக்கவும் வைத்திருக்கிறது. எனது மகனின் முட்டாள்தனங்களில் இதுவும் ஒன்று'' என்று கூறினார்.

இளையவேள் மீண்டுமொருமுறை திரும்பி அந்த ஓவியத்தைக் கண்டான். பெரும்பிடுகன் சொல்வது உண்மையாகத்தானிருக்க வேண்டும் என்று அவனுக்கே தோன்றியது. மாரவேளின் சித்திரங்களை ரசிக்க முடியாத தனக்கு இந்த களப்பிரர் அரண்மனைக் கலையை எப்படி ரசிக்க முடிந்தது என்று எண்ணிப் பார்த்தான். அந்த அழகிய பெண்ணின் முகம், அதன் கண்கள் தன்னை ஈர்த்ததற்குக் காரணம் பெரும்பிடுகன் சொன்னதாகத்தானிருக்க வேண்டுமென்ற தீர்மானமும் அவன் மனத்தில் உதயமாயிற்று. அதனால் கதவருகே நின்ற முதியவனைப் பார்த்து வினவினான், ''உங்கள் மகனின் முட்டாள் தனம் என்றீர்களே, அதென்ன?''என்று

உடனடியாகப் பதில் சொல்லவில்லை பெரும்பிடுகு முத்தரையர். தள்ளாடித் தள்ளாடி உட்புறம் நடந்து அங்கிருந்த பஞ்சணையில் உட்கார்ந்துகொண்டு தரையை நோக்கினார். ''முட்டாள்தனம்தான் அது. தூக்கி வந்தவர்களைக் களப்பிரர் காதல் கொள்வதில்லை; கற்பழிக்கிறார்கள் அல்லது பலவந்தமாக மணக்கிறார்கள். ஆனால், என் மகன் தூக்கிவந்தவள் மீது காதல் கொண்டான். அவள் இணங்காததால் கற்பையும் அழித்தான். இருப்பினும் அவளை இந்த அறையில் சிறை வைத்தான். இவன் காதலித்தாலும் அவள் காதலிக்கவில்லை. ஒரு நாளிரவு அவள் மறைந்தாள். இந்த அறைச் சாளரத்தின் நடுக்கட்டையில் சீலைகளைப் பிணைத்துக் கீழே தொங்கவிட்டு இறங்கி நடந்து விட்டாள். அப்பொழுது என் மகன் முழுக்குடியில் இருந்ததால்

மயங்கிக் கிடந்தான். இப்படித் தப்பிச் சென்றவளை யாரும் தடுக்கவில்லை என் மகனின் காதலியென்ற காரணத்தால். அவள் உத்தரவுப்படி காவலர் புரவியும் கொடுத்தார்கள், கதவையும் திறந்துவிட்டார்கள் என் மகனுக்குரியவள் ஆணையை மீறமுடியாமல். அவள் வீரப்பெண்; வீரன் மனைவியாயிருக்க சகல தகுதியையும் உடையவள். இன்னும் சில நாள் இருந்தால் மாறன் அவளை மணந்தும் இருப்பான். ஆனால், அவள் கொடுத்து வைக்கவில்லை'' என்று மெதுவாக வருத்தம் தோய்ந்த குரலில் பழைய கதையைச் சொன்னான் பெரும்பிடுகு முத்தரையர்.

இளையவேள் ஏதும் பேசவில்லை. எதிரே தலைகுனிந்து உட்கார்ந்திருந்த பெரும்பிடுகனைத் தனது வாளால் வெட்டிப் போட்டாலென்ன என்ற ஆத்திரம் அவன் மனத்தில் உருவெடுத்து அவன் முகத்தைப் பெரும் பயங்கரமாக அடித்திருந்தது.

அந்த சமயத்தில் சிறிது தலையைத் தூக்கி தனது ராட்சஸக் கண்களால் இளையவேளின் முகத்தைப் பார்த்த முத்தரையரின் பெரிய இதழ்களில் லேசாக புன்னகை மலர்ந்தது. ''என்னை வெட்டிப்போட நினைக்கிறாய். முத்தரையர் ரத்தம் உன் உடலில் ஓடுவதற்கு அதுவே அத்தாட்சி. ஆனால் உன்னைப்போல் நூறு பேர் வந்தாலும் என்னை வெட்ட முடியாது. நீ வாளை உருவும் சத்தம் எனது நரம்புகளை விநாடி நேரத்தில் முடுக்கிவிடும். நீ வாளை உருவியதும் என் கையொன்று உன் கையைப் பிடித்து எலும்பை முறித்துவிடும். இஷ்டப்பட்டால் உன் கழுத்தையும் திருகிவிட என்னால் முடியும்'' என்று சர்வசகஜமாய் புன்முறுவலுடன் கூறிய பெரும்பிடுகு முத்தரையர், ''இல்லை, உன்னைக் கொல்ல நான் இஷ்டப்படவில்லை. நீ இந்த சந்திரலேகாவைவும் தஞ்சையையும் சுற்றுப்புறத்தையும் ஒரு நாள் ஆளவேண்டியவன்'' என்று கூறினார்.

மேலும் கதையைத் தொடர்ந்தார். ''அவள் ஓடிப்போன பின்பு மாறன், உன் தந்தை, பைத்தியம் பிடித்தவன் போல் ஆனான். அவளுக்குப் புரவி கொடுத்த இரு காவலரை வெட்டவும் முயன்றான். நான் தடுத்திருக்காவிட்டால் வெட்டியும் இருப்பான். பிறகு பல தினங்கள் இந்த அறையிலேயே உட்கார்ந்திருந்தான் பித்தனைப்போல். மையும் இறகும் கொண்டு அந்தச் சுவரிலிருக்கும் ஓவியத்தை அவன்தான் தீட்டினான்...''



இந்த இடத்தில் இடைபுகுந்த இளையவேள், ''முத்தரையருக்கு சித்திரம் தீட்டவும் தெரியுமா?'' என்று வினவினான்.

''தெரியும்'' என்ற முத்தரையர் நகைத்தார். ''பெரிய வீரர்களாக தமிழகத்தில் நுழைந்த களப்பிரர் முத்தரையர்களாகி தமிழர் சகவாசத்தால் இந்த சோம்பேறிக் கலைகளைக் கற்றுக் கொண்டார்கள். அதனால் வீரப்பயிற்சிகளை இழந்தார்கள். என் மகனும் இந்தப் பைத்தியக்காரக் கலையைக் கற்றுக் கொண்டான். ஒரு ஓவியனைச் சிறைப்பிடித்து வந்து இந்த அரண்மனையிலேயே கற்றுக்கொண்டான். அதன் பயன் இந்த சித்திரம். நினைப்பிலிருந்தே இதை எழுதினான். ஆனால், எந்த மாறுதலும் இல்லை. உன் தாயின் அழகு முழுவதும் இதில் வடிக்கப்பட்டிருக்கிறது'' என்றும் சொன்னார்.

அடுத்து இளையவேளைக் கேள்வி கேட்கவிடாமல் தொடர்ந்து பேசினார் பெரும்பிடுகர். ''அவள் மீதிருந்த காதல்– என்ன முட்டாள்தனமான பெயர்– என் மகனுக்கு மாறவில்லை. அவளைத் திரும்பவும் தூக்கிவர முயன்றான். முதல் தாக்குதலுக்குப் பிறகு விஜயாலயன் உறையூரின் படையைப் பெரிதும் வலுப்படுத்தி விட்டதால் அது முடியவில்லை. பிறகு அந்தப் பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்ததாகவும், அவள் இறந்து விட்டதாகவும் செய்தி கிடைத்தது. என்ன குழந்தை என்று திட்டமாகத் தெரியாவிட்டாலும் அதையாவது கொண்டுவரத் துடித்தான் மாறன். எதிரி நாட்டுக்குள் மீண்டும் நுழைவது விவேகமில்லையென நான்தான் தடுத்தேன். பிறகு மாறன் ஒரு நிலையில் இல்லை. வெறியனாக மாறினான். பல இடங்களை என் உத்தரவின்றி கொள்ளை அடித்தான். பெண்ணின் பிரிவு

எந்த முத்தரையனையும் இத்தனை பைத்தியமாக அடித்ததில்லை. ஆனால், இனிமேல் அவன் வெறி குறையலாம். நீ வந்துவிட்டாய். மகனைக் கண்டு அவன் மனம் சிறிது சாந்தியடையலாம்'' என்று கதையை முடித்த பெரும்பிடுகு முத்தரையர் கட்டிலிலிருந்து எழுந்திருந்து இளையவேளிடம் சென்று அவனை அணைத்துக்கொண்டார்.

இயைவேளின் கைகளையும், தோள்களையும், புடைத்த கன்னங்களையும் தடவிப்பார்த்தான், சிறிது பின்னடைந்து தனது கையை முஷ்டி பிடித்து இளையவேளின் மார்பில் குத்தினான் பலமாக. இளையவேள் அந்தக் குத்தை லட்சியம் செய்யாததைக் கண்டு பெரும்பிடுகர் முகத்தில் திருப்தி நிலவியது. ''நான் முன்பு சொன்னது தவறு. நீ நூற்றுக்கு நூறு களப்பிர முத்தரையன்தான்'' என்று பாராட்டவும் செய்தான், திருப்தி குரலிலும் ஒலிக்க.

இளையவேள் பெரும் பிரமையில் இருந்தான். தன் வாழ்க்கைச் சரிதத்தை அவன் ஓரளவு உணர்ந்திருந்தாலும் அதன் முழு விவரம், முழு சோக நிலவரங்கள், பெரும்பிடுகு முத்தரையன் சொன்னபிறகுதான் அவனுக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. ஒரு முறை திரும்பி தனது தாயின் உருவத்தைப் பார்த்தான். மீண்டும் பெரும்பிடுகனைப் பார்த்தான். அவன் முகத்தில் விவரிக்க இயலாத சிந்தனையும் குழப்பமும் விரிந்தது.

''ஏன் குழம்புகிறாய்?''– போதை மாறியதால் பெரும்பிடுகர் குரலில் கடுமை கடுகளவு தெரிந்தது.

''ஒரு குழப்பம் இருக்கிறது'' என்றான் இளையவேள்

''என்னகுழப்பம்?''பெரும்பிடுகர் வினவினார் வியப்புடன்.

''உங்கள் மகனை என் தந்தையென்பதால் விட்டுவிடுவதா, எனது தாயை அழித்தவர் என்பதால் கொன்றுவிடுவதா என்று புரியவில்லை எனக்கு. அதனால் குழம்புகிறேன்'' என்றான் இளையவேள்.



எதிரே நின்ற பாட்டன் முகத்தில் பரிதாபம் விரிந்தது. ''இங்குதான் வேளிர் ரத்தம் வெளிப்படுகிறது. சற்று பலவீனம் தெரிகிறது உன் குணத்தில். உன் தந்தையாயிருந்தால் என்னைக் கொன்றுவிட்டுப் பிறகு குழம்புவான்'' என்ற பரிதாபத்துடன் கூறிய பெரும்பிடுகர், ''தவிர குழந்தாய்! உன் தந்தையை அவன் தூங்கும்போதுதான் கொல்ல முடியும். விழித்திருக்கும் போது முயலாதே. ஒரு விநாடியில் உன்னை வெட்டிப் போடுவான்'' என்றார் பெரும்பிடுகு முத்தரையர்.

''அத்தனை பெரிய வீரனா உங்கள் மகன்?'' என்று வினவினான் இளையவேள். அவன் குரலில் பயங்கர ஒலி இருந்தது.

அப்பொழுதுதான் அந்த அறையின் அருகே வந்த மாறன் பரமேசுவரன், ''என் வீரத்தைப்பற்றிச் சந்தேகப்படுபவன் யார்?'' என்று வினவிக்கொண்டே உள்ளே நுழைந்தான். அங்கிருந்த நிலை கண்டு வாயிற்படியிலேயே அசைவற்று நின்றான் பல விநாடிகள்.

தந்தையும் மகனும் ஒருவரையொருவர் நோக்கினார்கள். இருவர் கண்களும் பரஸ்பரம் கவர்ந்து நின்றன பல விநாடிகள். பெரும்பிடுகு முத்தரையன் இருவரையும் நோக்கினான் ஒரு முறை. ''நீங்களிருவரும் பேசவேண்டியது நிரம்ப இருக்கும். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கிளம்ப முயன்றான்.

''நாங்கள் பேசவேண்டியது ஏதுமில்லை. எங்கள் வாட்கள்தான் பேச வேண்டும்'' என்று குடியில்லாததால் நிதானத்துடன் பேசிய மாறன் பரமேசுவரன் தனது உறையிலிருந்த வாளை உருவினான்.

எதிரே நிறபவன் தனது தாயின் மரணத்துக்குக் காரணமானவன் என்ற நினைப்பினால் ஏற்பட்ட சீற்றத்தால் இளையவேளும் உருவினான் தனது வாளை.

இந்தப் புதிய திருப்பத்தில் பெரும்பிடுகு முத்தரையன் தலையிடவில்லை. தந்தையும் மகனும் வாளை உருவியதும்,

சற்றுப் பின்னடைந்து பழையபடி மஞ்சத்தில் அமர்ந்து வேடிக்கை பார்க்கலானார்.

இருவர்வாட்களும் மோதிய முறையே பெரும்பிடுகனுக்குத் திருப்தியை அளித்திருக்க வேண்டும். ''நல்லது! நல்லது!'' என்று மகிழ்ச்சிக் குரல் கொடுத்தார் பெரும்பிடுகர்.

அதே சமயத்தில் மாறன் முகத்தில் பெருவியப்பு தெரிந்தது. அதுவரையில் அத்தனை திடமாக அவனது வாளை அவன் தந்தையைத் தவிர வேறு யாரும் தடுத்து நிறுத்தியதில்லை. எதிரே நின்ற இளைய ராட்சஸன் வாள் மிக உறுதியாகவும், அலட்சியமாகவும் தனது வாளைத் தடுத்து நிறுத்தியதைக் கையின் நிதானத்திலிருந்தே புரிந்துகொண்ட மாறன் பரமேசுவரன், மகன் வாளைத் தடுத்த நிலையிலேயே திரும்பி தந்தையை நோக்கி ''இவன் யார்?'' என்று கேள்வியொன்றை வீசினான்.

அடுத்த கேள்விக்கு இடமில்லை. இளையவேளின் வாள் வேகம் மாறன் வாளை அவன் தலைக்கு மேலே தூக்கி விட்டது. வேறெவனாயிருந்தாலும் இளையவேளின் வாளுக்கு அன்று பலியாயிருப்பான். ஆனால் பல போர்களைக் கண்ட மாறனுக்கு அது வெறும் விளையாட்டாயிருந்தது. அடுத்த விநாடி இளையவேளின் வாளைத் தனது வாளால் ஒரு திருகு திருகினான் மாறன். அதனால் சற்று அகன்ற இரு வாட்களும் மீண்டும் மோதின; தொடர்ந்து மோதலாயின. வாட்களின் மோதல் ஒலி பெரும்பிடுகன் காதில் அமுதமென விழுந்தது. பரம உற்சாகத்துடன் பரமேசுவரனுக்கும் இளையவேளுக்கும் தொடர்ந்த வாட்போரைக் கவனித்துக்கொண்டிருந்தார் பெரும்பிடுகர். அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த பணிப் பெண்ணையும், அவர்களுக்கிடையில் தலையிட வேண்டாமென கையின் சைகையால் தடுத்தார்.

# 26. படியில் பரம விரோதி

**வா**ளொடு வாள் மோத, உராய, நெருங்கி அவற்றின் நுனிகள் இருவர் கழுத்துக்கருகிலும் பயங்கரத் தோற்றமளிக்க, விரோதிகள் போல் போர் புரிந்த மகனையும் பேரனையும் வியப்பும் பெருமையும் கலந்த விழிகளால் பார்த்துக் கொண்டிருந்த மகாவீரரான பெரும்பிடுகு முத்தரையர் திடீரென்று, ''போதும் நிறுத்தலாம்'' என்று சொன்னதும் மாறன் பரமேசுவரன் தனது வாளைத் தாழ்த்தினாலும் இளையவேள் மட்டும் தனது வாளை ஓங்கியதால், கண்ணிமைக்கும் நேரத்தில் பெரும்பிடுகர் பஞ்சணையிலிருந்து அவனது கையைப் பிடித்து அவன் வாள் நிலத்தில் விழ உதறினார். பிறகு அதைத் தனது காலால் உதைத்து அறை மூலைக்குத் தள்ளிவிட்டு இளைய வேளை நோக்கி, ''சிறுவனே! இந்த அரண்மனையில் நான் இடும் உத்தரவை மீறுபவர்கள் கிடையாது. எத்தனையோ போர்களில் வெற்றிபெற்ற உன் தகப்பனே என் உத்தரவை மீறவில்லை, கவனித்தாயா?'' என்று வினவினார்.

இதற்கு இளையவேள் பதில் சொல்லுமுன்பு திகைத்து ஒரு கணம் நின்ற மாறன், ''என்ன சொல்கிறீர்கள் தந்தையே?'' என்று வினவினான் குழப்பம் தெரிந்த குரலில்.

பெரும்பிடுகர் முகத்தில் மகிழ்ச்சியின் சாயை நன்றாகவே படர்ந்தது. ''தந்தையும் மகனும் இந்த அரண்மனையில் வாட்பயிற்சி செய்வது சகஜம்'' என்று சுட்டிக்காட்டினார் பெரும்பிடுகர்.

''ஆம்''— மாறன் முகத்தில் குழப்பம் மேலும் பரவியது.

''நீயும் நானும் எத்தனையோ முறை பயிற்சி செய்திருக்கிறோம்.''

''ஆம்.''

''ஆகையால் இப்பொழுது நீயும் உன் மகனும் பயிற்சி செய்ததில் புதுமை ஏதுமில்லை.''

இதைக் கேட்டதும் மாறன் பரமேசுவரன் முகத்தில் வியப்பின் சாயை பெரிதும் விரியவே, ''இவன் என் மகனா?'' என்று வினவினான் வியப்பொலி குரலிலும் தெரிய.

மகன் சொற்கேட்ட பெரும்பிடுகர், ''இளைய தலை முறையில் அறிவு வரவரக் குறைகிறது'' என்று விசனப்பட்டுக் கொண்டார்.

மாறன் அவரையும் நோக்கி தன் மகனையும் நோக்கினான். ''என் அறிவுக்கு என்ன குறைவு?'' என்று வினவினான் எரிச்சலுடன்.

பெரும்பிடுகு முத்தரையர் தன் சுபாவமான இடிச் சிரிப்பை விட்டு மெல்ல நகைத்தார். ''மகனையே அறியமுடி யாத குறைவு. இவனைப் பார்த்த உடனேயே என் பேரனென்று உணர்ந்துகொண்டேன். உன்னால் பிள்ளையை அறியமுடிய வில்லை. இது அறிவின் குறைவா அல்லது அலட்சியத்தின் விளைவா?'' என்று நகைப்பின் ஊடே கேட்ட பெரும்பிடுகர், ''மாறா! சொந்த மகனை அறியமுடியாத நீ எதிரிகளைச் சரியாக எப்படிப் புரிந்துகொள்ளப் போகிறாய்?'' என்றும் வினவினார்.

தந்தையின் விளக்கத்துக்குப் பிறகு மாறன் தனது மகனை உற்று நோக்கினான். சினத்தினால் அதுவரை மறைந்திருந்த ரத்த பாசம் மெள்ள மெள்ள அவனது உணர்ச்சிகளை ஈர்க்கவே தனயனை அணுகினான் நிதானமாக. ''என்னைத் தொட வேண் டாம், நில் அப்படியே'' என்ற இளையவேளின் சொல் அவன் காலைத் தேக்கியது.

''ஏன் தொடக்கூடாது? நான் உன் தந்தை'' என்றான் மாறன் உக்கிரத்துடன்.

''என் தாயின் வாழ்வை அழித்தவர் நீங்கள்?'' என்ற இளையவேளின் சொற்கள் மாறன் முகத்தில் துக்கச் சாயை



யைப் படரவிட்டது. ''யார் சொன்னது அப்படி?'' என்று வின வினான் மாறன் குரலிலும் துக்கம் தொனிக்க.

''மாரவேள், என் பாட்டனார்'' என்றான் இளையவேள் மாறாத சீற்றத்துடன்.

''இந்தப் பாட்டனார் என்ன சொன்னார்?'' என்று தந்தையைச் சுட்டிக்காட்டிக் கேட்டான் மாறன். இதைக் கேட்டும் இளையவேள் வாளாவிருக்கவே மாறன் முகத்தில் விவரம் புரியாத களை ஒன்று படர்ந்தது. ''இவரையும் கேட்டுப் பார்ப்பதுதானே?'' என்று சொன்னான் மகனை நோக்கி.

இதனால் சிறிது சந்தேகமும் சஞ்சலமும் அடைந்த இளைய வேள், பெரும்பிடுகர் முகத்தை நோக்கினான். பெரும் பிடுகர் என்றுமில்லாத திருநாளாக துன்பப் பெருமூச்சு விட்டார். ''இளையவேள், இல்லை, இளைய முத்தரையா...'' என்று துவங்கிய அவர் குரலில் பேரனை முத்தரையா என்று அழைத்ததில் பெருமை துலங்கிற்று. அந்தப் பெருமையுடன் சொன்னார். ''சமுதாயங்கள் மோதும்போது போர்கள் நிகழும்போது, கதைகள் பல பிறக்கின்றன. வரலாறு சிறிது மறைகிறது. வீர சமுதாயத்தில்செயல்களுக்குப் புதுக்கதைகளும் விபரீத எண்ணங்களும் கற்பிக்கப்படுகின்றன. களப்பிரரையும் அவரது சமுதாயத்தையும் குறைகூறும் மனிதர்கள் சமணத்தைப் போற்றி வளர்த்த அச்சுத விக்கிராந்தன் எனும் களப்பிரனையும் அவன் செய்த நாட்டுப் பணியையும் மறக்கிறார்கள். அவனைத் தமிழ் நாட்டுப் புலவர்கள் போற்றியிருப்பதையும் கவனிப்பதில்லை. களப்பிரரும் அவர்கள் வழிவந்த முத்தரையரும் வீரர்களே தவிர, காட்டுமிராண்டிகளல்ல. அருகில் உள்ள இரு வர்க்கங்கள் மோதும்போது சிறிது நாசமும், சில அட்டூழியங்களும் ஏற்படுவது இயற்கை. அப்படி ஏதாவது எங்கள் படையெடுப்பிலும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், விபரீதம் எதுவும் நாங்கள் வேண்டுமென்று செய்ததில்லை. உன் தாயை என் மகன் தூக்கி வந்தது உண்மை, அவள் அழகில் ஈடுபட்டு. ஆனால், அவள்

இங்கு ராணிபோல் நடத்தப்பட்டாள் அதைப் புரிந்து கொள்ள அவளுக்குச் சக்தியில்லை. உன் தந்தை அவளைத் திருமணம் செய்துகொள்ள அனுமதி கேட்ட இரவிலிருந்து இரண்டாவது நாள் ஓடிவிட்டாள். அவளைத் திரும்பவும் அழைத்து வர மாறன் துடித்தான். அதற்குள் உறையூரில் சோழர் பலம் வலுத்துவிட்டது. நாங்கள் உட்புக முடியவில்லை. அவன் அவளை நினைத்துப் பெரிதும் ஏங்கினான். அதனால் மூளை புரண்டு மூர்க்கனாகக்கூட மாறினான். பெண்ணின் பிரிவு யாரையும் மிருகமாக்கிவிடுகிறது...'' என்ற பெரும்பிடுகர் சிறிது நிதானித்தார்.

''பெண்களைத் தூக்கி வந்து கற்பழிப்பதை நியாயம் போல் பேசினீர்களே சற்றுமுன்பு'' என்று வினவினான் இளையவேள்.

பெரும்பிடுகர் பேரனை நன்றாக ஏறெடுத்து நோக்கினார். ''எந்தப் படையெடுப்பிலும் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படு கின்றன. எப்பேர்ப்பட்ட மனிதன் மனமும் பெண்களைக் கண்டால் சபலப்படுகிறது. பெண்களைக் கண்டு பலவீனப் படுவது எனக்குப் பிடிக்கவில்லை. உன் தந்தை பலவீனப் பட்டான்.....'' என்ற பெரும்பிடுகன் குரலில் வெறுப்பு இருந்தது ''இல்லாவிட்டால் உன் தாயின் சித்திரத்தை எதற்காக அந்தச் சுவரில் தீட்டினான்? ஏன் அவன் வேறு யாரையும் தூக்கிவரவில்லை? ஏன் அவன் இத்தனை ஆண்டுகள் மணங் கூடப் புரிந்தகொள்ளவில்லை?'' என்று கேள்விகளை வீசிய பெரும்பிடுகர் மஞ்சத்தை விட்டு எழுந்த தந்தையையும் மகனையும் தனித்து விட்டு வெளியே சென்றார். அதுவரை வாயைத் திறந்துகொண்டு நின்ற பணிப்பெண்ணையும் உடன் வரச்சொல்லி அழைத்துக் கொண்டு நடந்தார்.

தனித்து விடப்பட்ட தந்தையும் மகனும் நீண்ட நேரம் மௌனமே சாதித்தனர். பிறகு மாறன் பரமேசுவரன் மஞ்சத்திற்குச் சென்று தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு உட்கார்ந் தான். அந்த நிலையில் சொன்னான், ''இளையா! இப்பொழுது



என் தலையை நீ வெட்டிப்போடலாம். நான் தடுக்கமாட் டேன். உன் தாயின்மீது நான் கொண்ட காதல் வேகம் திரு மணத்துக்கு முன்பு அவளுடன் உறவாடவைத்தது. அவள் இன்னும் சில நாட்கள் தாமதித்திருக்கலாம். சந்திரலேகாவை ஆண்டிருப்பாள் அதன் ராணியாக'' என்று.

இளையவேள் தந்தையை நோக்கினான். மனம் உடைந்து உட்கார்ந்திருந்த மாறனைக் கண்டதும், அவனைக் கொன்று தீர்த்துவிடவும் பழிவாங்கவும் வந்த இளையவேளின் கல்மனமும் கரைந்தது. எதற்கும் அஞ்சாத மகாவீரனான தந்தை ஏதோ அனாதைபோல் உட்கார்ந்திருப்பதாகத் தோன்றி யது அவனுக்கு. அந்த நினைப்பின் விளைவாகத் தந்தையின் பக்கத்தில் மஞ்சத்தில் உட்கார்ந்தான். ''எந்த முரடனிடமும் சில உயர்ந்த குணங்கள் இருக்கும்'' என்பதைப் புரிந்துகொண் டான் இளையவேள் அந்தச் சில விநாடிகளில். அந்த நிலையில் கேட்டான், 'நீங்கள் விஜயாலயன் அரண்மனையைத் தாக்கியது உண்மையா?'' என்று.

உண்மை என்பதற்கு அறிகுறியாகத் தலையாட்டினான் மாறன்.

''அவர் ஊரில் இல்லாத சமயத்தில் அவர் மாளிகையைத் தாக்குவது தர்மமா?'' என்று இரண்டாவது கேள்வியை வீசினான் இளையவேள்.

''அவர் இல்லையென்பது எனக்குத் தெரியாது. விஜயாலயனை ஒழித்துவிடத்தான் நான் போனேன். அவனில் லாததால் எதிர்ப்பட்ட மற்றவர்களை அழிக்க வேண்டிய தாயிற்று'' என்று மெதுவாகச் சொன்ன மாறன், ''இப்பொழுது நீ வந்துவிட்டதால் இருவருமாகச் சேர்ந்து விஜயாலயனை எதிர்க்கலாம்'' என்று கூறினான்.

''அது அத்தனை சுலபமல்ல'' இளையவேளின் சொற்கள் திட்டமாயிருந்தன.

''தெரியும் எனக்கு.''

''தெரிந்துமா புலியுடன் விளையாடப் பார்க்கிறீர்கள்?''

''விளையாடப் பார்க்கவில்லை. வேட்டையாடப் பார்க்கிறேன் புலியை. விஜயாலயன் சாதாரணப் புலியல்ல. புலியின் வேகத்துடன் அதன் தந்திரமும் அவனிடமிருக்கிறது. அவனை மேலோங்கவிட்டால் முத்தரையர் சகாப்தம் இந்த சந்திரலேகாவில் முடிந்துவிடும்.''

''அதைத் தடுக்க என்ன செய்ய உத்தேசம்?''

''செய்ய உத்தேசமா? செய்து கொண்டிருக்கிறேன். சந்திரலேகா இப்பொழுது சாதாரண ஊரல்ல. படைத்தளம். இங்கு யாரும் நுழைவதோ நுழைந்து பிழைப்பதோ சுலபமல்ல. நீயே எப்படி நுழைந்தாய் என்பது எனக்குத் தெரியவில்லை'' என்ற மாறன் கண்கள் கேள்வி கேட்பன போல் மகனை நோக்கின பக்கவாட்டில்.

''நேராக வாயில் பக்கம் நுழைந்துதான் வந்தேன். யாரும் தடுக்கவில்லை'' என்ற இளையவேள், ''ஒரு வேளை என்னை நீங்கள் என்று காவலர் நினைத்துவிட்டார்களோ?'' என்று சற்று இரைந்தே சொன்னான்.

''அப்படித்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் யாரும் நுழைய முடியாத இந்த நகரத்தில் நீ மட்டும் எப்படி நுழைய முடியும்?'' என்று கேட்ட மாறன், தனது மகன் தோளின் மீது ஆசையுடன் பலமான தனது கையைப் போட்டான். ''சரி, படுத்துக்கொள். நாளை பேசலாம்'' என்றும் கூறினான். மகன் படுத்துக்கொள்ள ஒரு பஞ்சணையைக் காட்டினான்.

தந்தையின் கட்டளைப்படி படுத்த இளையவேளுக்கு அன்று நித்திரை வரவில்லை. எண்ணங்கள் எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்தன. இப்படி உறங்காமலே இரவைக் கழித்த இளையவேள், விடியற்காலையில் விழித்து சற்று



அப்பாலிருந்த பஞ்சணையில் படுத்திருந்த தந்தையைக் கவனித்தான். மாறன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்ததால் ஓசைப்படாமல் எழுந்திருந்து அரண்மனை வாயிலுக்கு வந்து படிகளில் இறங்கிச் சென்றான். அடுத்திருந்த நந்தவனம் அவன் கண்களைக் கவரவே அங்கு சென்றான். அதைச் சுற்றி வருகையில் அங்கிருந்த சிறுகுளத்தைக் கண்டு அதன் படிகளில் இறங்க முயன்றான். ஆனால், காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான் இளையவேள். படியில் அவன் பரமவிரோதி படுத்து நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தான்.

# 27. சொந்த வீட்டுச் சிக்கல்

முத்தரையர் அரண்மனை நந்தவனச் சிறுகுளப்படியில் இறங்க முயன்று, அதன் முதற்படியிலேயே படுத்திருந்த தனது பரம விரோதியான இதயகுமாரனைக் கண்டதும் இளையவேள் சட்டென்று முன்வைத்த காலைப் பின்வைத்து நின்றான். இதயகுமாரன் மிக நிம்மதியாகத் தனது சொந்த வீட்டில் உறங்குவதுபோல் உறங்கிக் கொண்டிருந்ததையும், பயங்கரமான எதிரிகள் மத்தியில் இருக்கிறோமே என்ற அச்சம் அவன் முகத்தில் சிறிதளவும் இல்லாததையும், ஓரளவு புன்முறுவல் கூட இதயகுமாரன் சுந்தர வதனத்தில் படர்ந்து கிடந்ததையும் கண்ட இளையவேள், எதிரிமீது பொறாமையே கொண்டான்.

''எப்படியும் விடியற்காலையில் காவலர் கண்டால், இவனை வெட்டிப் போடுவார்கள்'' என்று ஒரு விநாடி நினைத்த இளையவேள், ''இவனை எழுப்பி எச்சரித்தாலென்ன?'' என்று நினைத்தான். இதயகுமாரனிடம் வாளிருப்பதையும், கச்சையில் கட்டப்பட்ட அந்த வாளும் அவன் துணைவனைப் போல அவன் பக்கத்தில் படுத்திருந்ததையும், தான் எழுந்து வந்த அவசரத்தில் வாளை இடையில் கட்டிக்கொள்ளாததையும் எண்ணியதால் அது புத்திசாலித்தனமல்ல என்று முதலில் முடிவுக்கு வந்தாலும், அந்த முடிவை மாற்றிக் கொண்டு ''இதயகுமாரா!'' என்று மெதுவாக அழைத்தான்.

அந்த அழைப்பினால் மெள்ளக் கண்விழித்த இதயகுமாரன் மிக நிதானமாக எழுந்திருந்து குளத்தின் படிகளில் உட்கார்ந்திருந்துகொண்டு, ''யார், சேரர் படைத்தலைவரா?'' என்று வினவினான் இகழ்ச்சியுடன்.

அந்த இகழ்ச்சியை இளையவேள் லட்சியம் செய்யவில்லை. ''இல்லை, சேரர் படைத்தலைவனாயிருந்தவன்'' என்று திருத்தினான் இளையவேள்.



''இப்பொழுது முத்தரையர் படைத்தலைவரா?'' என்று இதயகுமாரன் வினவினான்.

''ஆம்''– இளையவேளின் குரலில் வெறுப்பு இருந்தது.

''அடிக்கடி கட்சி மாறுகிறாற்போல் இருக்கிறது.''

''ஆம்.''

இதயகுமாரன் விழிகள் இளையவேளை நோக்கின வியப்புடன்.

''இதை ஒப்புக்கொள்ள வெட்கமாயில்லை?'' என்று வினவினான், முதலில் ஏற்பட்ட வியப்பும் பிறகு உதயமான வெறுப்பும் கலந்த குரலில்.

''எதற்கு வெட்கம்?'' என்று வினவிய இளையவேளின் குரலில் இகழ்ச்சி இருந்தது.

''கட்சி மாறியதற்கு.''

''இல்லை, வெட்கமில்லை.''

''ஏனோ?''

''இது நாட்டின் குணம்.''

''உனது குற்றத்தை நாட்டின்மீது போட்ப் பார்க்கிறாயா?''

''நான் போடவில்லை. நடப்பதைச் சொல்கிறேன். சோழர்களும் பாண்டியர்களும் மாறி மாறிப் பல்லவரிடம் சேருவதும் படைத்தலைவர்களாகப் பணிபுரிவதும் இயல்பாகி விட்டது'' என்று சுட்டிக்காட்டிய இளையவேள் ''விஜயாலய தேவரும் அதற்கு விலக்கில்லை'' என்று கூறி நகைத்தான்.

இதயகுமாரன் இதற்கு ஏதும் பதில் சொல்லவில்லை. ''உயர்வு தாழ்வுகள் அரசுகளில் சகஜம். அவர்கள் மாற்றத்தை கட்சி மாறுவதாகக் கூற முடியாது. ஆனால், உனக்கு அது புரியாது'' என்று சமாளித்த இதயகுமாரன், எதிரியின் இடையை நோக்கினான். ''நீ வாளை எடுத்து வரவில்லையா?'' என்றும் வினவினான்.

''இல்லை. நீ இங்கிருப்பாய் என்பது எனக்குத் தெரியாது. வாளில்லாவிட்டால் என்ன? கைகள் இருக்கின்றன'' என்று கூறினான். கூறியதன்றி, மேலங்கியைக் கழற்றி, ஒரு புறம் எறிந்துவிட்டு ''நான் சித்தமாயிருக்கிறேன்'' என்று தெரியப்படுத்தவும் செய்தான்.

குளப்படியில் உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்தான் இதயகுமாரன் மிக அமைதியாக. எழுந்து தனது பக்கத்தில் இருந்த நீளமான வாளை எடுத்து குளத்தின் படியில் வைத்தான். இளையவேள் செய்தது போலவே தனது அங்கியையும் கழற்றி நன்றாக மடித்து ஒருபுறமாக வைத்தான். படியிலிருந்து வெளிப்பட்டு சமதரைக்கு வந்தான்.

சமதரைக்கு அவன் வந்ததும் இரு எதிரிகளும் ஒருவரை யொருவர் பல விநாடிகள் நோக்கிக்கொண்டு நின்றனர். அந்தச் சமயத்திலும் போரிட இஷ்டமில்லாமல் ''இங்கு எதற்காக வந்தாய்?'' என்று இளையவேள் வினவினான்.

''உன்னைக் கொல்வதற்குத்தான். ஆனால், அது முடியாது. உன்னைக் கொல்வதில்லையென்று மாரவேளுக்கு உறுதி கூறியிருக்கிறேன். ஆனால், கண்ணழகியைத் தொட்ட உன் கைகளை முறிப்பதற்கும், பார்த்த கண்களைப் பிடுங்கி எறிவதற்கும் தடையில்லை'' என்று கூறிய இதயகுமாரன், ''சரி துவங்கு'' என்று சொன்னான்.

அதற்குமேல் இளையவேள் காத்திருக்கவில்லை. தனது பெரிய பயங்கர உடலைக்கொண்டு எதிரியை மோதினான். தடித்து வலுத்த கைகளாலும் இதயகுமாரனை கட்டிப்பிடிக்க முயன்றான்.

சரேலென்று இளையவேள் மோதியவுடன் ஒரு விநாடி நிலைகுலைந்த இதயகுமாரன் வெகு வேகமாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டு எதிரியின் கைவளையத்துக்குள் நுழைந்தான். அவனை அப்படியே இறுக்கி நசுக்கிவிடத் தீர்மானித்த



இளையவேள் தனது கைகளால் இதயகுமாரனின் உடலை வளைத்தான். ஏதோ இரண்டு இரும்புத்தூண்கள் தன்னைச் சுற்றுவது போன்ற அனுபவத்தைப் பெற்ற சோழநாட்டு வாலிபன் அந்தக் கரங்களுக்குள் நன்றாகவே நுழைந்தான். மிகச்சுலபமாக எதிரி தன்னிடம் சிக்கிவிட்டதை உணர்ந்த இளையவேள், ''இவனுக்கு உயிரிடம் ஆசை போய்விட்டது'' என்று சொல்லிக்கொண்டு கைகளை இறுக்கினான்.

அந்தக் கைகளை இதயகுமாரன் தடுக்கவில்லை தனது கைகளால். கைகளுக்கு வேறு அலுவலிருந்ததன் விளைவாக, இதயகுமாரனின் மெல்லிய கரங்கள் முஷ்டியாகப் பிடிக்கப்பட்டு வேகத்துடன் பாய்ந்து இளையவேளின் வயிற்றில் குத்தின. மற்போர்களில் பழகியவனான இதயகுமாரன், எதிரியின் வயிற்றில் இடம் தெரியாமல் குத்தவில்லை. உள்ளேயிருந்த கல்லீரலைக் குறிவைத்து ஒரு குத்தும், சிறுகுடலை நோக்கி ஒரு குத்தும் குத்தவே இளையவேள் திடீரென அகன்றான் எதிரியை விட்டு. அதற்குள் எதிரியின் முஷ்டி மார்புக்கும் வயிற்றுக்கும் இடையே வலது புறத்திலிருந்த இதயபீடத்தில் இருமுறை பாயவே, நல்ல பருமனான இளையவேளின் உடல் வியர்த்தது, மூச்சுத் திணறியது.

இப்படி மூச்சுத் திணறியதாலும், நல்ல மற்போருக்குப் பருமன் ஒன்றே பலமல்லவென்பதைப் புரிந்துகொண்டதாலும் இளையவேள் சற்றுப் பின்னடைந்து நின்றான். அந்தச் சமயத்தில் எதிரி தனது அவலநிலையைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வாளா நிற்பதைக் கண்டதால் சினத்தின் சிகரத்தை எட்டிய அந்த முத்தரைய குமாரன் சரேலென்று சோழ வாலிபன்மீது பாய்ந்தான். அவன் பாய்வதை முன்கூட்டி எதிர்பார்த்த இதயகுமாரன், சிறிது பக்கவாட்டில் ஒதுங்கித் தனது வலது காலால் எதிரி கால்களை மடக்கவே, நிலத்தில் விழுந்தான் இளையவேள் தடாலென்று. விழுந்ததும் உருண்டான் இதயகுமாரனிடமிருந்து தப்ப. அந்தச் சமயத்தில் இதய

குமாரன் வேகமாக இளையவேளின்மீது பாய்ந்து அவன்மீது படுத்துக்கொண்டு, அப்படியே இளையவேளை நிலத்தில் அழுத்தி, தனது இரு கைகளாலும் அவன் கழுத்தை நெரித்தான்.

அந்தச் சமயத்தில் மாரவேளுக்குக் கொடுத்திருந்த சத்தியத்தை மறந்தான் இதயகுமாரன். வஞ்சியின் நந்தவனத்தில் கண்ணழகியின் நிலைஅவன் கண்ணுக்கெதிரே எழுந்ததால் இளையவேளின் பெருங்கழுத்தைப் பிடித்து ஊட்டியையும் திருகினான்.

இளையவேளின் கண்கள் அந்த இரும்புப் பிடியில் பிதுங்கிவிடும் நிலைக்கு வந்தன. அதில் மெள்ள அச்சமும் உதயமாயிற்று. தனது அந்திமகாலம் வந்துவிட்டதை உணர்ந்த இளையவேள், அப்பொழுதும் ஒரு தந்திரத்தில் இறங்கினான். ''மாரவேள்! மாரவேள்!'' என்று இரு முறை தனது பாட்டன் பெயரை உச்சரித்தான்.

அதைக் கேட்டதும் இதயகுமாரன் கைகள் அகன்றன, ஏதோ விசையால் அகற்றப்பட்ட யந்திரம்போல. அடுத்த விநாடி இதயகுமாரன் சரேலென்று தள்ளப்பட்டான் இளையவேளின் பெரும் உடலால். அதே உடல் சிறிய மலைபோல இளையவேளின் மார்பில் உட்கார்ந்தது. அவன் பெரிய கைகள் இதயகுமாரனின் கழுத்தை எமப்பிடியாகப் பிடித்தன. இதயகுமாரன் நினைவை இழந்துவிடும் நிலைக்கு வந்தான். எமலோகத்தின் வாயில் எட்டப் புலப்படுவது போலிருந்தது அவன் அகக் கண்களுக்கு. அந்தச் சமயத்தில்தான் வந்தது பெரும்பிடுகு முத்தரையர் குரல், ''போதும், நிறுத்து'' என்று.

இளையவேளின் கைகளை அந்த அதிகாரக் குரல் நீக்கியது இதயகுமாரன் கழுத்திலிருந்து. இதயகுமாரன் எழுந்து உட்கார்ந்து தனது கழுத்தைத் தடவிக்கொண்டான். பிறகு இளையவேளையும் நோக்கி, சற்று எட்ட நின்றிருந்த பெரும்பிடுகு முத்தரையரையும் நோக்கினான். இளையவேளின் முகத்துக்கும்



பெரும்பிடுகர் முகத்துக்கும் இருந்த ஒற்றுமை பெரும் அதிர்ச்சியைத் தந்தது இதயகுமாரனுக்கு. மாரவேளின் கதையின் மர்மம் மெள்ளப் புரிந்தது சோழநாட்டு வாலிபனுக்கு.

அடுத்து உட்கார்ந்த நிலையிலிருந்த எழுந்து நின்ற இதயகுமாரன், ''மிக்க நன்றி. என் உயிரைக் காப்பாற்றினீர்கள்'' என்றான் பெரும்பிடுகரை நோக்கி.

முத்தரையர் பூபதியின் பெரிய இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. வியப்புடன் அவர் கண்கள் இதயகுமாரனை நோக்கின. பிறகு சற்று எட்டக் கிடந்த வாளை நோக்கின. ''அது உன்னுடைய வாள்தானே?'' என்று வினவின அவர் உதடுகள்.

''ஆம்'' என்றான் இதயகுமாரன், அவர் கேள்வியின் பொருள் புரியாமல்.

''ஆயுதம் இருக்கும்போது இவனை ஏன் கொல்லாமல் விட்டாய்?'' என்று வினவினார் இதயகுமாரனை நோக்கி பெரும்பிடுகர்.

''அதற்குக் காரணம்....'' என்று சொல்ல முற்பட்ட இளையவேளை பெரும்பிடுகர் கையின் ஒரு அசைப்பு நிறுத்தியது. ''அவனே சொல்லட்டும்'' என்று அவர் சொன்னார்.

''இளையவேளிடம் வாளில்லை'' என்று காரணம் சொன்னான் இதயகுமாரன்.

''அதனால் மற்போரில் இறங்கினாய்?'' என்று கேட்டார் பெரும்பிடுகன்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் இதயகுமாரன். பெரும்பிடுகர் நகைத்தார் பயங்கரமாக. ''உன்னைக் கொல்ல ஒரு சிங்கம் வருகிறது, என்ன செய்வாய்?'' என்று கேட்டார் முத்தரையர் பூபதி.

''வேலெறிந்து கொல்வேன்'' இதயகுமாரன் பதில் திட்டமாக வந்தது.

''ஏன்?''

''அது மிருகம்.''

''மிருகத்துக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?''

''மனிதன் பேசுகிறான்...'' என்று இதயகுமாரன் வாசகத்தை முடிக்கவில்லை.

''அதுதான் மனிதனின் ஒரே சொத்து. அதனால்தான் அவன் கெட்டுப் போகிறான்'' என்ற பெரும் பிடுகர், ''இருவரும் என்னுடன் வாருங்கள்'' என்று உத்தரவிட்டு முன்னே நடந்தார். இருவரும் பேச வழியின்றிப் பின்தொடர்ந்தனர்.

அன்று காலையில் ஏற்பட்ட விநோத சம்பவங்களால் இதயகுமாரன் தனது வாளை எடுத்துக்கொள்ளவும் மறந்து பெரும்பிடுகரைப் பின்தொடர்ந்தான். சுற்று முற்றும் நோக்கவும் செய்தான் சந்திரலேகாவை. அழகிய நந்தவனத்திலிருந்த மலர்களின் நறுமணம் எங்கும் பரவிக்கிடந்தது. ஆங்காங்கு மரங்கள் அடர்த்தியாயிருந்ததைக் கண்ட இதயகுமரன், முத்தரையர்களின் பாதுகாப்பு முறைகளை உள்ளூர சிலாகித்துக்கொண்டான். ''எந்த ஆயுத வண்டியும் இந்த மரக் கூட்டங்களைத் தாண்டி இந்த அரண்மனைப் பக்கம் வர முடியாது'' என்று சொல்லிக்கொண்டான் உள்ளூர.

எங்கும் நடமாடிக்கொண்டிருந்த வீரர் கூட்டம் அந்த ஊருக்கு அளித்த பாதுகாப்பு, சாதாரண மனிதனுக்கு அச்சமூட்டியிருக்கு மென்றாலும் வீரனான இதயகுமாரனுக்கு சந்துஷ்டியையே அளித்தது. நோய்வாய்ப்பட்டிருந்ததால் அரண்மனைப் படிகளில் சிரமப்பட்டுப் பெருமூச்சுவிட்டு ஏறிய பெரும்பிடுகு முத்தரையரைக் கண்ட இதயகுமாரன் அவன்மகாவீரன் என்பதைப் புரிந்துகொண்டான். ''கொலை, கொள்ளைகளில் ஈடுபடாதிருந்தால் முத்தரையர் பெரும் அரசைத் தஞ்சையில் நிறுவியிருக்க முடியும்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ''இவர்களை முறியடிக்கக்கூடியது



இவர்களின் அதர்மமே தவிர, வீரத்தால், போரால் இவர்களை முறியடிக்க முடியாது'' என்றும் மனத்துள் முடிவு கட்டினான் இதயகுமாரன்.

இந்த நிலையில் பாட்டனுடனும் பேரனுடனும் முத்தரையர் மாளிகைப்படியின் உச்சிக்கு வந்த இதயகுமாரன், சுற்றும் முற்றும் நோக்கினான். அப்பொழுது சூரியோதய வேளை வந்துவிட்டதால் அரண்மனைப் பெரும் சதுக்கத்தில் அணிவகுப்புக்கு வீரர் திரளாளாயினர். அந்தப் பெரும் சதுக்கம், அரண்மனை, எல்லாம் தமக்குச் சொந்தமென்பதை எண்ணிய இதயகுமாரன் உள்ளே உரிமையின் வேகம் கொந்தளிக்க சட்டென்று திரும்பி மாளிகைக்குள்ளே நுழைந்தான். அங்கு பெரும்பிடுகர் தனது அறைக்கு வந்ததும் பணிப்பெண்ணை அழைத்து, ''இவனுக்குச் சகல சௌகரியங்களையும் செய்து கொடு. பிற்பகல் உணவின்போது சந்திக்கிறேன்'' என்று உத்தரவிட்டான். இளையவேளை மட்டும் தன்னுடன் நிறுத்திக் கொண்டான்.

இதயகுமாரனுக்கு அந்த அரண்மனையில் ராஜோபசாரம் நடந்தது. அவன் வாவிக்கரையில் விட்டுவந்த அவன் வாளையும் உணவு நேரத்துக்கு முன்பு அவனிடம் சேர்ப்பித்தாள் பணிப்பெண். பிற்பகல் உணவு அனைவருக்கும் பெரும்பிடுகர் அறையிலேயே பரிமாறப்பட்டது. உணவு அருந்திய சமயத்தில் உள்ளே நுழைந்த மாறன் பரமேசுவரன் இதயகுமாரனை ஒருமுறை உற்றுப்பார்த்து, ''இவனைத்தானே சொன்னீர்கள்?'' என்று தந்தையைக் கேட்டான்.

''ஆம்'' என்றார் பெரும்பிடுகர். ''மகனே! தமிழகத்தின் சிறந்த வீரனை, நமது எதிரியைப் பார்'' என்று மாறனிடம் கூறினார்.

மாறன் ராட்சஸ விழிகள் வியப்பால் மலர்ந்தன. ''சிறந்த வீரனா! நமது இளையவேளை விடவா?'' என்று வினவினான் மாறன் இதயகுமாரனையும் தனது மகனையும் மாறிமாறி நோக்கி.

பெரும்பிடுகர் உணவுத் தட்டிலிருந்த சாதத்தை ஒரு பிடி கையிலெடுத்துக்கொண்டார். வாயில் போடுமுன்பு, 'இளைய முத்தரையனைக் கொல்ல இருந்தான் சற்று முன்பு'' என்று சர்வ சாதாரணமாக அறிவித்துவிட்டு சாதத்தின் பெரு உருண்டையை வாயில் திணித்துக் கொண்டார்.

மாறன் கண்கள் வியப்புடன் நோக்கின இதயகுமாரனை. பிறகு தந்தையை நோக்கி, ''அப்படியானால் இவன் ஏன் உயிருடனிருக்கிறான்?'' என்று வினவினான்.

''வீரனாகையால்'' என்றார் பிடுகர்.

''இவன் வீரத்தை மெச்சுகிறீர்கள்?'' என்று சினத்துடன் கேட்டான் மாறன்.

''ஆம். அது வீரனின் குணம்'' என்று தம்மைத்தாமே சிலாகித்துக் கொண்டார் பெரும்பிடுகர்.

''இவன் எப்படி இந்த ஊருக்குள் நுழைந்தான்?''– மாறனின் கேள்வி உக்கிரமாயிருந்தது.

''தெரியாது.''

''ஏன் வந்தான்?''

''சொந்த ஊரைப் பார்க்க.''

''சொந்த ஊரா!'' மாறன் முகத்தில் உக்கிரம் மறைந்து விவரிக்க இயலாத வியப்பு படர்ந்தது.

''ஆம். ஒரு காலத்தில் சந்திரலேகா இவன் தந்தைக்குச் சொந்தம். யார் தெரியுமா இவன் தந்தை?'' என்று கேட்டார் பெரும்பிடுகர் மகனை நோக்கி.

மாறன் தந்தையை நோக்கினான் குழப்பத்துடன். ''உங்களுக்குத்தான் சகலமும் தெரியுமே. சொல்வதுதானே'' என்று கூறினான்.

''நீ கொன்றதாகச் சொன்னாயே, விஜயாலயன் படைத் தலைவன்..'' என்ற பெரும்பிடுகர் மெள்ள நகைத்தார்.



''அவனுக்கு இவன்..?'' மாறன் வினவினான் சங்கடத்துடன்.

''மகன்'' என்ற முத்தரையர் பூபதி, ''உன்னைக் கொல்ல வந்திருக்கிறான். பழிவாங்க வந்திருக்கிறான் என்று சொல்வது பொருந்தும்'' என்று கூறிப் பெரிதாக நகைத்தார் கட்டிடம் அதிரும்படியாக.

பெரும்பிடுகர் விவரத்தைக் கேட்ட மற்ற மூவர் நிலையும் மூன்று விதமாயிருந்தது. யாரை அழிக்கவும் அஞ்சாத தனது தந்தைக்கு வியாதியால் மூளை பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று மாறன் நினைத்தான். இளையவேளுக்கு எல்லாமே புதிதாயிருந்ததால் பிரமையடைந்து உட்கார்ந்திருந்தான். இத்தனையையும் அறிந்தும் தன்னை எதற்காகக் கொல்லாமல் விட்டிருக்கிறார் முத்தரையர் தலைவர் என்று எண்ணிப் பெரும்பிடுகரின் புத்தியில் உலாவும் திட்டத்தை அவிழ்க்க முயன்று முடியாததால், எது நடந்தாலும் நடக்கட்டும் என்று உணவைச் சுவைத்துச் சாப்பிட முற்பட்டான் இதயகுமாரன்.

# 28. பெரும்பிடுகர் இதயம்

மற்ற மூவர் மனநிலையும் மூன்று திக்குகளில் சென்றதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் மேற்கொண்டு உணவை அருந்துவதில் முனைந்தார் பெரும்பிடுகு முத்தரையர். நிதான மாகவும் சிறிதும் பதட்டப்படாமலும் ஏதும் நடக்காதது போன்ற தோரணையுடனும் உணவருந்தி பணிமகள் கொண்டுவந்த கிண்ணத்தில் கையலம்பிய முத்தரையர் பூபதி தனது ஆசனத்தி லிருந்து எழுந்து மற்ற மூவரையும் நோக்கினார் ஒரு விநாடி. ''விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டாம், உணவை முடித்துக்கொள்ளுங்கள். வெளியே அணிவகுப்பைப் பார்க்கி றேன். அங்கு வந்து சேருங்கள்'' என்று உத்தரவிட்டுச் சென்றார், தமது அறையை விட்டு.

அரண்மனைப் பெரும் சதுக்கத்தில் வீரர்கள் அணி வகுத்து நின்றனர். சிலர் புரவி வீரர்கள், சிலர் காலாட் படையினர். இவர்களுக்கு முன்பாகப் பட்டத்து யானை சர்வாலங்காரத்துடன் நின்றிருந்தது. பெரும்பிடுகர் படிகளின் முகப்புக்கு வந்து மேற்படியில் உட்கார்ந்து கொண்டதும் வீரர்களின் அணிவகுப்பு மெள்ள நகர்ந்தது. பிறகு துரிதமாக இயங்க முற்பட்டது. அந்தச் சமயத்தில் உணவை முடித்துக் கொண்டு வந்துவிட்ட மாறன் பரமேசுவரனும், இளைய வேளாயிருந்து இளைய முத்தரையனாக மாறிவிட்ட அவன் மகனும், இதயகுமாரனும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் வரவைக் காலடிச் சத்தத்தினாலேயே உணர்ந்த பெரும்பிடுகர் இதயகுமாரனை அழைத்துத் தமது பக்கத்தில் உட்காரும்படி சைகை காட்டினார்.

பெரும்பிடுகரின் பெருந்தன்மை இதயகுமாரனின் மனத்தைத் தொட்டுவிட்டதால், ''மகாராஜா! தங்களுக்குச் சமதை யாக நான் உட்காருவது சரியல்ல, பின்னால் நிற்கிறேன்' என்றான்.



பதிலுக்குப் பெரும்பிடுகரின் இரும்பு உலக்கை போன்ற கை பின்னால் வந்து இதயகுமாரனின் கையைப் பற்றி இழுத்து பலவந்தமாக அவனை உட்கார வைத்தது.

''இது...'' என்று இழுத்தான் இதயகுமாரன்.

''வீரனுக்கு எந்த இடமும் தகுந்த இடம். தவிர நான் உத்தரவிட்டு அதை மறுத்துப் பிழைத்தவர் சந்திரலேகாவில் கிடையாது'' என்றார் பெரும்பிடுகர். அத்துடன் சொன்னார், ''சோழ வாலிபனே! இந்த அணிவகுப்பைப் பார். இதுமாதிரி இன்றுவரை நீ பார்த்திருக்கமாட்டாய்'' என்று.

அதற்குப் பிறகு அவர் பேசவில்லை. இரும்பால் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்ட பயங்கரப் பதுமைபோல் உட்கார்ந் திருந்தார். அணிவகுப்பு ஏதோ பெரிய யந்திரம் போல் நகர்ந் தது. படையின் முன்னணியிலிருந்த காவல் படையினர், வேல் களை எறியும் பாணியில் கைகளை உயர்த்திக் கொண்டும் கண்களை எதிர்ப்புறம் நோக்கிக் கொண்டும் ஒரே சீராக நகர்ந் தனர். அப்படி நகர்ந்தபோது ஒரு வீரனை இன்னொருவன் இடிக்கவில்லை. ஒரு வீரன் பின்தங்கவோ ஒருவன் அதிகமாக முன்னேறிவிடவோ இல்லை. ஏதோ நூல் பிடித்ததுபோல் ஒரே மாதிரியாக இடம்விட்டு நகர்ந்தனர். சுமார் நானூறு வேல்கள் அந்தரத்தில் அசைவது போன்ற பிரமை பார்ப்பவர் களுக்கு ஏற்பட்டது. சூரியகிரணங்களால் அவற்றின் கூர்மை யான நுனிகள் பளபளத்தபோது சூரியனையும் தோற்கடிக்கும் நானூறு நக்ஷத்திரங்கள் கீழே இறங்கிவிட்டன போல் தோன்றியது இதயகுமாரனுக்கு.

காலாட்படை சென்றதும் புரவிப்படை இயங்கியது. முதலில் சிறிது அசைவு, அடுத்து காற்றின் வேகத்தில் நானூறு புரவிகள் சுழன்று சுழன்று சென்றன அந்த சதுக்கத்தில். புழுதி எழும்பக்கூடாதென்பதற்காக சதுக்கத்தில் புல் அளவோடு வளர்க்கப்பட்டிருந்தபடியால் புரவிகள் சறுக்கவோ மண்ணை

எழுப்பி மன்னன் கண்ணை மறைக்கவோ இல்லை. திடீரென்று புயல் சுழல்வதுபோல் அணிவகுப்பு சுழன்றது. வீரர்கள் வாட்களை உயர்த்தியது ஒரே சீராகவும் ஒரே சமயத்திலும் இருந்ததாலும், புரவிகளின் வேகம் அசாத்தியமாயிருந்த தாலும், நானூறு வாட்களும் திடீரென அந்தரத்தில் சுழல்வது போலிருந்தது. அந்த நானூறு வாட்களும் மூன்று முறை சுழன்றபிறகு புரவிகள் படிகளின் அடியில் ஒன்றுக்குப்பின் ஒன்றாகச் செல்ல, வீரர்கள் வாட்களைத் தாழ்த்தி வணக்கம் தெரிவித்து எதிரிலிருந்த காட்டில் மறைந்துவிட்டார்கள்.

இத்தனைக்கும் அசையாமல் நின்ற பட்டத்து யானை பெரிதாகப் பிளிறியது. நேராகப் படிகளின் அடிக்கு வந்து மண்டியிட்டு பெரும்பிடுகரை வணங்கி அப்படியே பின்னால் நடந்து சென்றது.

அணிவகுப்பு முடிந்து படைப் பிரிவுகள் இரண்டும், பட்டத்து யானையும் சதுக்கத்திலிருந்த மறைந்த பின்பும் பெரும்பிடுகர் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க வில்லை. அவர் மனத்தில் சந்துஷ்டி நிறைந்து கிடந்தது. அவர் தனது கையால் இதயகுமாரன் முதுகைத் தடவினார். ''வீரனே, உன் பெயர் என்னவென்று சொன்னாய்?'' என்று வினவினார்.

''தங்களுக்குத் தெரிந்ததுதான். இருப்பினும் சொல்கிறேன், இதயகுமாரன்'' என்றான் இதயகுமாரன்.

''சரியான பெயர்'' என்றார் பெரும் பிடுகர்.

''பெயரில் என்ன இருக்கிறது?'' என்று இதயகுமாரன் இடக்கத்தைக் காட்டினான்.

''ஏனில்லை? இதுவரையில் யாரும் ஈர்க்காத என் இதயத்தை நீ ஈர்த்துவிட்டாய்'' என்றார் பெரும்பிடுகர்.

அப்பொழுது பின்னாலிருந்து உறுமினான் மாறன் பரமேசுவரன், ''ஏன், இவனைத் தத்து எடுத்துக்கொள்வது தானே'' என்று.



''செய்யலாம். மகனும் பேரனும் இல்லாதிருந்தால் செய்யலாம். எவ்வளவு வீரர்கள் இருந்தாலும் இந்த நகரத்துக்கு இப்பொழுது தேவை. விஜயாலயன் இதன்மீது பாய சமயம் பார்த்திருக்கிறான்'' என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்த பெரும்பிடுகர், திரும்பி பின்னால் நின்ற மகனையும் பேரனையும் நோக்கினார்.

இருவர் முகத்திலும் கோபத்தின் குறி அளவற்று இருந்தது. அந்த சினத்துடன் கேட்டான் மாறன் பரமேசுவரன், ''இந்த ஊருக்குள் அனுமதியின்றி நுழைவோரை நாம் என்ன செய்வது வழக்கம்?'' என்று.

''வெட்டிப் போடுவது வழக்கம்'' என்றார் பெரும் பிடுகர் சர்வ சாதாரணமான குரலில்.

''அப்படியானால் அவன் ஏன் இன்னும் உயிருடன் இருக்கிறான்''– மாறனின் அடுத்த கேள்வியும் உக்கிரத்துடன் வெளிவந்தது.

''இதை நீ ஏற்கனவே கேட்டாய். பதிலும் சொல்லி விட்டேன்.''

''இந்த ஊருக்குள் வரும் எதிரி வீரர்களுக்கெல்லாம் இதேமாதிரி உபசாரந்தானா?''

''இவன் சாதாரண எதிரியல்ல.''

''எத்தகைய எதிரி?''

''உன் மகன் உயிரை வாங்காத எதிரி. வாளிருந்தும் அதை இவன் பயன்படுத்தவில்லை. மற்போரில் கொன்றிருப் பான். நான் தடுத்ததால் நிறுத்தினான்.''

இந்த உரையாடல் வரை மௌனமாயிருந்த இளைய வேள், ''அப்படியானால் அவனை சகல மரியாதைகளுடன் பரிசு கொடுத்து சோழ நாட்டுக்கு அனுப்புங்களேன். உங்கள் ஜன்ம வைரியை அழைத்து வரட்டும்'' என்று சீறினான்.

பெரும்பிடுகர் பேரனுக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது சிந்தித்தார். ''அப்படி இவனை அனுப்பி விடுவதற்கில்லை. இவன் வீரத்தைப் பற்றித் திட்டமாக எனக்கு எதுவும் தெரியாது. உன் கழுத்தை நெரித்ததைப் பார்த்தேன். ஆனால், நீ இருந்த நிலை சந்தர்ப்பத்தால் அசட்டையால், யாருக்கும் வரும். இன்று மாலை இவன் கதியை முடிவு செய்வோம் நமது வழக்கமான முறையில்'' என்று கூறினார்.

''அது வேண்டாம்'' என்று தடுக்க முயன்றான் மாறன்.

''ஏன், உன் மகனிடம் உனக்கு நம்பிக்கையில்லையா?'' என்று வினவினார் பெரும்பிடுகர்.

''இருக்கிறது. இருந்தாலும்.....'' என்று மாறன் தயங்கினான்.

போதும் என்பதற்கு அடையாளமாகக் கையால் சைகை செய்தார் பெரும்பிடுகர். பிறகு இதயகுமாரனை நோக்கித் திரும்பினார். ''இதயகுமாரா! இந்த ஊருக்குள் உத்தரவின்றி நுழைபவன் ஒற்றனாயிருந்தால் வெட்டிப் போடுவோம். வீரனாயிருந்தால் என்னிடமுள்ள சிறந்த வீரனுடன் சண்டை செய்து வெற்றிபெற்றால் தப்பவிடுவோம். பின்னால் சொன்ன சந்தர்ப்பம் உனக்கு அளிக்கப்படுகிறது. இன்று மாலை நீயும் இளைய முத்தரையனும் இதே சதுக்கத்தில் என் வீரர் முன்பு சந்திக்கிறீர்கள்'' என்று கூறிவிட்டு மகனையும் இளைய வேளையும் வழிவிடச் சொல்லி உள்ளே சென்று விட்டார்.

மற்ற மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றனர். ''இன்று மாலை உன் வாளின் திறமையைப் பார்க்கிறேன்'' என்று சீறிவிட்டுத் திரும்பிச் சென்றான் இளைய வேள். அவன் தந்தை அவனைத் தொடர்ந்தான்.

தனித்து விடப்பட்ட இதயகுமாரன் நீண்டநேரம் படியிலேயே உட்கார்ந்துவிட்டான். சுற்றிலுமிருந்த சந்திரலேகாவின் அமைப்பையும் அதுவரை நடந்த அணிவகுப்பையும்



எண்ணினான். ''இந்த எதிரியிடம் போரிடுவது விஜயாலயருக்குப் பெருமைதான்'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான். பிறகு அவனும் எழுந்து அரண்மனைக்குள் சென்றான். அன்று அவனுக்குப் பணிப்பெண் பணிவிடைகளைச் செய்தாள்.

மாலையும் வந்தது. விளக்குகள் ஆங்காங்கு எரியத் தொடங்கின. அந்தச் சமயத்தில் இதயகுமாரன் அறையை அடைந்த பணிப்பெண், ''உங்களுக்காகப் பெரும்பிடுகர் காத்திருக்கிறார் அரண்மனை சதுக்கத்தில்'' என்றாள்.

இதயகுமாரன் உடையணிந்து வாளை கச்சையில் கட்டிக் கொண்டு புறப்பட்டு வெளிப்படிகளுக்கு வந்தான். அங்கு காலை போல் பெரும்பிடுகர் மேற்படியில் உட்கார்ந்திருந்தார். சதுக்கத்தில் வீரர்கள் அரைச் சக்கர வட்டமாக நின்றுகொண்டிருந்தனர். அவர்களுக்கு நடுவில் இளையவேள் நின்றிருந்தான், நீண்ட வாளை இடைக்கச்சையில் கட்டியவண்ணம். அவனிருந்த வட்டத்திற்குப் படிகளில் இறங்கிச் சென்றான் இதயகுமாரன். தரையை அணுகியதும் வாளை உருவி பெரும்பிடுகரை நோக்கித் தாழ்த்தித் தலையையும் வணங்கினான். இளையவேள் எந்த மரியாதையையும் செய்யவில்லை. ஆத்திரத்துடன் சதுக்கத்தில் போரிடும் இடத்துக்குச் சென்று வாளை உருவிக்கொண்டு நின்றான்.

இதயகுமரன் தங்கள் போருக்காகச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளைக் கண்டு பிரமித்தான். சுற்றிலும் பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. வீரர்களின் அரைச்சக்கர வளைவும் போர் நிலத்தை அறுதியிட்டுக் காட்டியிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே இளையவேள் இருக்குமிடத்திற்கு வந்தான். அவன் சித்தமாகுமுன்பே உருவிய வாளுடன் அவன்மீது இளையவேள் பாய்ந்து விட்டான். இதயகுமாரன் தொலைந்து விட்டானென்று அனைவரும் எண்ணினர்.

ஆனால், இளையவேளின் வாளை மின்னல் வேகத்தில் தடுத்தது இதயகுமாரன் வாள். அடுத்து வாளுடன் வாள்

மோதத் தொடங்கியது. இளையவேள் வெகு உக்கிரமாகப்
போரிட்டான். தனது வீரர்களுக்கு முன்னால் அவர்கள்
பிற்காலத் தலைவன் எப்பேர்ப்பட்டவன் என்பதைக் காட்ட
தனது சக்தியையும் யுக்தியையும் இணைத்துப் போரிட்டான்.

ஆனால், இதயகுமாரன் வாள் எந்த வேகத்தையும்
பதட்டத்தையும் காட்டவில்லை. நிதானமாகவும் திட்டத்
துடனும் இயங்கியது. எந்த இடத்தில் இளையவேளின் வாள்
தோன்றினாலும் அங்கு அதைத் திருப்பிவிட்டது. இளைய
வேளின் மார்புக்கு நேராக இருமுறை கிடைத்த இடை
வெளியைக்கூட இதயகுமாரன் உபயோகப்படுத்திக் கொள்ள
வில்லை. நீண்ட நேரம் எதிரியின் வாளை விளையாடவிட்டுச்
சரேலென அந்த வாளைத் தனது வாளால் சுழற்றினான்
இதயகுமாரன். அதனால் இளையவேளின் கையைவிட்டு
விண்ணில் கிளம்பிய வாள் திரும்பி நிலத்தில் விழ
இருந்தபோது அந்த வாளின் பிடியைத் தனது இடதுகையில்
பிடித்தான். இரு வாட்களுடன் இளையவேள் முன்பு நின்றான்.

பெரும்பிடுகர் உற்சாகமாகக் கையைத் தட்டினார்.
அதுதான் தவறாயிற்று. திடீரென மாறனிடமிருந்து பறந்த
குறுவாள் இதயகுமாரன்மீது பாய்ந்துவிட்டது. அச்சம்
துவங்கிய அதிர்ச்சிக் கூச்சல் அந்த சதுக்கத்தை ஆட்கொண்டது.
அத்தனைக்கும் பதட்டப்படாமல் பெரும் பிடுகர் எழுந்து
நின்றார். ''அந்த வீரனை அசைக்காமல் எடுத்து வாருங்கள்.
மருத்துவனுக்கு உடனடியாகச் சொல்லியனுப்புங்கள்'' என்று
உத்தரவிட்டார்.

இதயகுமாரனை இரு வீரர்கள் தாங்கி வந்ததும் மேற்
படியிலிருந்த பெரும்பிடுகன் அவனைத் தனது இரு கைகளிலும்
வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தார்.

# 29. இதயகுமாரன் உளறல்

**வீ**ரர்கள் தூக்கிவந்த இதயகுமாரனை இரு கைகளிலும்
குழந்தையைத் தாங்குவதுபோல் தாங்கி உள்ளே எடுத்துச்
சென்ற பெரும்பிடுகு முத்தரையன், வழியில் நின்றிருந்த
மகனை ஏறெடுத்தும் பாராமல் தனது அறைக்கு நேராகச்
சென்று, தான் படுக்கும் பஞ்சணையில் படுக்கவைத்தார்.
உடனடியாகச் சுடுநீர் கொண்டுவரும்படி அங்கு வந்த பணிப்
பெண்ணுக்குக் கட்டளையிட்டு இதயகுமாரன் இதயத்தருகே
பாய்ந்திருந்த குறுவாளைப் பிடுங்கிவிட்டு அதே குறுவாளால்
அந்த வாலிபன் அங்கியையும் கிழித்தார். குபுகுபுவென்று
வந்திருந்த ரத்தத்தையும் அதே அங்கியால் துடைத்து,
குறுவாள் இதயத்தில் பாயவில்லையென்பதைப் புரிந்து
கொண்டதால் சிறிது ஆசுவாசப் பெருமூச்சும் விட்டார்.
பணிப்பெண் நீர் கொண்டுவந்ததும் காயத்தைக் கழுவி,
மேற்கொண்டு ரத்தம் சேதமடையாதிருக்க தனது அங்கியொன்றை
எடுத்துக் கிழித்து அதில் வைத்துக் கட்டவும் செய்தார்.
இவற்றையெல்லாம் அவர் செய்து முடித்த சிறிது நேரத்துக்குள்
மருத்துவரும் வந்து சேர்ந்தார்.

அவரை ஏறெடுத்து நோக்கிய பெரும்பிடுகு முத்தரையர்
''இவனைப் பிழைக்க வைக்கவேண்டும்'' என்று அவருக்கு
உத்தரவிட்டார், இதயகுமாரன் உயிருக்கு அவரே பொறுப்பாளி
போல.

இதைக் கேட்ட மருத்துவர் சிறிது நடுங்கினாலும் அதை
வெளிக்காட்டாமல், கட்டிலில் உட்கார்ந்து இதயகுமாரன்
காயத்தைப் பரிசோதித்தார் கட்டுக்களை அவிழ்த்து. ''கத்தி
ஆழமாகப் பாய்ந்திருக்கிறது, ஆனால், இதயத்தைத் தொட
வில்லை'' என்று அறிவித்துவிட்டு, பணிப்பெண் கொண்டு

வந்த நீரைவிட்டு காயத்தை மீண்டும் கழுவி தமது பெரும் பையிலிருந்து ஏதோ ஒரு மருந்தை ஒரு வெள்ளைத்துணியில் தடவி, அதை நான்காக மடித்து காயத்துக்குள் செருகிக் கட்டுப் போட்டார். பிறகு பணிப்பெண்ணை நோக்கி, ''தேன் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

பெரும்பிடுகர் முகத்தில் சினம் துளிர்த்தது. ''இம்மாதிரி காயத்துக்குச் சிகிச்சை செய்ய தேன் வேண்டுமென்பது உமக்கு முன்னதாகத் தெரியுமல்லவா?'' என்று கேட்டார் மருத்துவரை.

''தெரியும்'' என்று பதில் சொன்னார் மருத்துவர்.

''அப்படியானால் அதையும் நீர் ஏன் கொண்டுவரவில்லை?''– பெரும்பிடுகர் கேள்வியில் மூர்க்கத்தனம் பலமாக ஒலித்தது.

''இங்கு இருக்குமென்று நினைத்தேன்''–மருத்துவர் குரலில் கிலி இருந்தது.

''மருந்தும் இங்கு இருப்பதாக ஏன் நினைத்துக்கொள்ளவில்லை?'' என்று வினவினார் பெரும்பிடுகு முத்தரையர்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் விழித்தார் மருத்துவர். ''சரி சரி, வேலையைப் பாரும்'' என்று உத்தரவிட்ட பெரும்பிடுகர், பணிப்பெண்ணைத் திரும்பி நோக்கினார். அந்த ஒரு நோக்கைக் கண்டதும் பறந்துசென்ற அவள் விநாடி நேரத்தில் தேன் கொண்டு வந்தாள். மருத்துவர் ஒரு மாத்திரையைத் தேய்த்து இதயகுமாரன் வாயில் புகட்டினார். பிறகு முத்தரையர் தலைவரை நோக்கி, ''இன்னும் சில விநாடிகளில் இவன் கண்ணைத் திறப்பான்'' என்று சொன்னார்.

''நல்லது'' என்றார் பெரும்பிடுகர்.

''எது மகாப் பிரபு?'' மருத்துவர் குரலில் சந்தேகம் இருந்தது.



''இவன் கண்ணைத் திறப்பது. இல்லாவிட்டால் நீர் கண்ணை மூடவேண்டியிருக்கும்'' என்ற பெரும்பிடுகர் இதயகுமாரனை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றார்.

சுமார் பத்து விநாடிகளுக்குள் இதயகுமாரன் கண்ணைத் திறந்தான். பெரும்பிடுகரைப பார்த்தபோது அவன் விழிகளில் வியப்பு தெரிந்தது. அவர் குனிந்து ''அசங்க வேண்டாம்'' என்று எச்சரித்தபோது அவன் வியப்பு பத்து மடங்கு அதிகமாயிற்று. அதைக் கவனித்தும் கவனிக்காதது போல மருத்துவர் மீது தமது பெரும் விழிகளைத் திருப்பிய பெரும் பிடுகர், ''மருத்துவரே! இந்த வாலிபன் எழுந்து நடக்க எத்தனை நாளாகும்?'' என்று விசாரித்தார்.

''குறைந்தபட்சம் பத்து நாட்கள்'' என்றார் மருத்துவர்.

''சரி. அந்தப் பத்து நாளும் இங்கு வந்த சிகிச்சை செய்யும்'' என்று கூறிய முத்தரையர், மருத்துவர் போக அனுமதி கொடுத்தார்.

மருத்துவர் வாயிற்படியைத் தாண்ட முயன்ற சமயத்தில் மாறன் பரமேசுவரன் அங்கு தோன்றி வழியை அடைத்துக் கொண்டு நின்றான். ''அவருக்கு வழி விடு'' என்று இரும்புக் குரலில் பெரும்பிடுகர் கூறினார். அதனால் சிறிது அகன்று வழி விட்டு உள்ளே வந்த மாறன் பரமேசுவரன், தந்தையை உக்கிரம் மிகுந்த கண்களுடன் நோக்கினான்.

''முத்தரையர் மன்னர் படுக்கையில் சோழநாட்டவன் படுத்திருக்கிறான்'' என்றான் மாறன் கொதித்த உணர்ச்சிகளைச் சொற்களில் கொட்டி.

தமது மகனை மிகுந்த அலட்சியத்துடனும் வெறுப்புடனும் நோக்கினார் பெரும்பிடுகர், ''வீரன் படுத்திருக்கிறான்'' என்று மகன் வாசகத்தை லேசாகத் திருத்தினார்.

அந்தத் திருத்தத்திலேயே ஏதோ பயங்கரம் இருந்திருக்க வேண்டும். பேயறைந்தது போல் மாறன் முகம் சரேலென

மாறியது. ''உங்கள் வியாதி உங்கள் புத்தியையும் பிடித்திருக் கிறது'' என்றான் மூர்க்கத்தனமாக.

''ஆம்''– பெரும்பிடுகர் குரலில் இகழ்ச்சி மிதமிஞ்சிக் கிடந்தது.

''என்ன ஆம்?''

''புத்தி குழம்பிவிட்டது.''

'நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள்!''

''ஆம், புத்தி சரியாயிருந்தால் நீ இன்று செய்த கேவலச் செய்கைக்கு இத்தனை நேரம் உயிருடனிருந்திருக்க மாட்டாய்...'' வாசகத்தை முடிக்கவில்லை பெரும்பிடுகர், முடிக்காத வாசகத்தில் தொனித்த இகழ்ச்சி அளவற்றதாயிருந்தது.

''நான் உங்கள் ஒரே மகன்'' என்றான் மாறன்.

''அந்தப் பாதுகாப்பு இருப்பதால்தான் உன் உயிர் இன்னும் உடலில் இருக்கிறது'' என்றார் பெரும்பிடுகர்.

''உங்கள் பேரனை இவன் கொன்றிருப்பான்.''

''கொன்றிருக்கலாம், கருணை என்ற பலவீனம் இவன் கைகளைத் தேக்கிவிட்டது. சர்வ முட்டாள் இவன்.''

''உங்களுக்கு மகன் வேண்டாம், பேரன் வேண்டாம். இவன் வேண்டுமாக்கும்?''

இதற்குப் பெரும்பிடுகர் பதில் சொல்லவில்லை.

''இவனுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று மாறன் மீண்டுமொரு கேள்வியை வீசினான்.

''வீரர்களுக்குள்ள சம்பந்தம்'' என்ற பெரும்பிடுகர், மகன் போகலாம் என்பதற்குக் கையால் சைகை செய்தார்.

பிறகு இதயகுமாரன் பக்கத்தில் உட்கார்ந்தார். நன்றாகக் குனிந்து, ''இதயகுமாரா!'' என்று அழைத்தார்.



இதயகுமாரன் மெள்ளக் கண்களை விழித்தான். ''உம்'' என்று பலஹீனமாகப் பதில் சொன்னான்.

''பேசசக்தியிருக்கிறதா?'' என்று கேட்டார் பெரும் பிடுகர்.

''உம்'' மெதுவாக வந்தது பதில்.

அவன் நிலை பெரும்பிடுகருக்கு நன்றாகப் புரிந்தது. அவன் பேசுவது அபாயம் என்பதைப் புரிந்து கொண்டதால் அசைந்த அவன் உதடுகளை தமது பெரும் கையால் மூடிவிட்டு, ''பேசாதே! நான் சொல்வதை மட்டும் கேட்டுக்கொள். இந்த அரண்மனையிலிருக்கும் வரை உனக்கு ஆபத்தில்லை. அதற்கு மேல் உனக்கு நான் பாதுகாப்பு அளிக்க முடியாது. உன்னை இந்த செந்தலைக்குள் யார் புக விட்டது என்று பிறகு சொல். அவனுடன் உன்னை அனுப்பி வைக்கிறேன்'' என்று அவன் காதுக்கருகில் ரகசியமாகச் சொல்லிவிட்டு பணிப்பெண்ணை அழைத்தார்.

பணிப்பெண் வந்ததும், ''நான் வரும்வரை இவனைக் கவனித்துக்கொள். மாறனையும் அவன் மகனையும் அருகில் நெருங்கிவிடாதே'' என்று உத்தரவிட்டு வெளியே சென்றார்.

அவர் உத்தரவு அவளுக்கு வியப்பை அளிக்கவில்லை. அத்தனை முரட்டுத்தனத்திலும் பெரும்பிடுகர் மகாவீரர் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். ஆகவே தலையை மட்டும் அசைத்தாள். கட்டிலில் இதயகுமாரன் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

அவளை நோக்கி முறுவல் செய்த பெரும்பிடுகர் ''அவன் மயக்கத்திலிருக்கிறான்'' என்றார்.

''அதனாலென்ன?'' என்று வினவினாள் பணிப்பெண்.

''அழகாகவும் இருக்கிறான். ஆகையால் நீயும் மயங்கி விடாதே'' என்று லேசாக நகைத்த பெரும்பிடுகர் வெளியே சென்றார். அங்கிருந்து மீண்டும் அரண்மனையின் படிகளுக்கு

வந்து மேற்படியில் உட்கார்ந்து கொண்டார். அப்படி அவர் இரண்டாம் முறை உட்காரும் பழக்கமில்லாததால் வீரர்கள் நால்வர் படிகளில் ஏறிவந்து, ''என்ன கட்டளை மகாராஜா?'' என்று கேட்டார்கள்.

''இன்று வாட்போர் செய்தானே ஒரு வாலிபன்.'' என்று துவங்கினார் பெரும் பிடுகர்.

''ஆம் மகாராஜா!'

''அவனை யார் சந்திரலேகாவுக்குள் அனுமதித்தது?'' என்று பெரும்பிடுகர் வினவினார்.

''தெரியவில்லை மகாராஜா'' என்றான் ஒரு வீரன்.

''இதுவரை நமது காவலை மீறி இருவர் உள்ளே நுழைந்திருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார் பெரும்பிடுகர்.

''ஒருவரை இளவரசனென்று நினைத்தோம்'' என்றான் இன்னொரு வீரன்.

''அப்படி ஏமாறக் காரணமிருக்கிறது. ஆனால், மற்றொருவன் எப்படி வந்தான்?''

''தெரியவில்லை மகாராஜா.''

''நாளைக் காலைக்குள் தெரிய வேண்டும்.''

''சரி மகாராஜா.''

''தெரிந்தால், உள்ளே விட்டவனை என்னிடம் அழைத்து வாருங்கள். இல்லாவிட்டால் பிரதான வாசல் காவலரைச் சிறையிலடைத்துவிட்டு என்னிடம் சொல்லுங்கள்'' என்ற பெரும்பிடுகர் அத்துடன் அவர்களை அனுப்பிவிட்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

இரவு ஏறிப் பல நாழிகைகள் வரை அங்கேயே உட்கார்ந்திருந்த பெரும்பிடுகர் மீண்டும் அறைக்குள் வந்தார். பணிப் பெண்ணை நோக்கி ''எப்படி இருக்கிறான்?'' என்று விசாரித்தார்.



''நல்ல ஜுரம் வந்திருக்கிறது'' என்றாள் பணிப்பெண்.

''சரி.''

''தவிர, உளறுகிறான் ஜுரவேகத்தில்.''

''என்ன உளறினான்?''

''சொற்கள் புரியவில்லை'' என்றாள் பணிப்பெண். அந்தச் சமயத்தில் மீண்டும் உளற ஆரம்பித்தான் இதயகுமாரன். அவன் உச்சரித்த ஆரம்பச் சொல் அப்படியே அசர வைத்தது பெரும்பிடுகரை. உளறலில் பொருளிருப்பதைப் புரிந்து கொண்டார் முத்தரைய பூபதி. கதவைத் தாளிடும்படி பணிப் பெண்ணுக்கு உத்தரவும் இட்டார்.

# 30. போலிக் கிழவன்

இரண்டாவது முறையாக ஜுர வேகத்தில் இதயகுமாரன் உளற ஆரம்பித்ததும் முத்தரையர் பூபதியான பெரும்பிடுகர் திடீரென அசைவற்று நின்றுவிட்டு பணிப்பெண்ணையும் அறைக் கதவை மூடும்படி உத்தரவிட்டாரென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. ''ஆதித்தன்'' என்று ஏதோ சொல்ல முயன்ற இதயகுமாரன் மேற்கொண்டு சொற்கள் வராமல் திண்டாடியதும், அவன் மஞ்சத்தின் பக்கத்தில் ஒரு ஆசனத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார் பெரும்பிடுகர். பணிப்பெண்ணையும் அருகில் வரும்படி கையைக் காட்டினார். வந்த பணிப்பெண்ணை மஞ்சத்தில் உட்கார்ந்து இதயகுமாரன் தலையை லேசாக அழுத்தும்படியும் கட்டளையிட்டார். பணிப்பெண் வாயைத் திறக்காமல் இதயகுமாரன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவன் தலையை அழுத்திக் கொண்டே சொன்னாள், ''ஜுரம் பொறி பறக்கிறது'' என்று.

அதற்குப் பதிலேதும் சொல்லாத பெரும்பிடுகர் இதயகுமாரனை உற்றுப்பார்த்துக்கொண்டே இருந்தார். மீண்டும் இதயகுமாரன் இதழ்கள் மெல்ல அசைந்தன. ''ஆதித்தா.... அபாயம்.... உன்.... கிழவேஷம் யாரையும்.... உம்.... ஏமாற்றாது.... ஓடிவிடு'' என்ற சொற்கள் ரகசியமாக வெளிவந்தன. சட்டென்று பேச்சு நின்றது சில விநாடிகள். மறுபடியும் துவங்கியது வறண்ட சிரிப்புடன். ''முத்தரையர்....அந்த கொலைகாரன் அல்ல.... பெரியவர்.... மூர்க்கர்தான்....இருந்தாலும் நல்லவர்....அவரை அழித்து எனது சொந்த வீட்டைப் பெறவந்தேன்...'' மறுபடியும் அந்த வெறிச் சிரிப்பு வந்தது. ''இளையவேள்...வேளாவது மண்ணாங்கட்டியாவது....நமது குடும்பங்களை அழித்தவன் மகன்.....அவனைக் கொல்ல



ஆசைதான்....அப்பா....மண்டை பிளக்கிறது'' என்று உளறி திரும்பித் திரும்பித் தலையைப் புரட்டினான் இதயகுமாரன். ''மாரவேள்...என் கையை ஏன் கட்டினீர்...'' என்று கூறியதும் அவன் கண்கள் திறந்தன. பிறகு மீண்டும் மூடிக்கொண்டன. இதயகுமாரன் சுவாசம் ஒரே சீராக வந்தது.

பணிப்பெண்ணைப் பார்த்து பெரும்பிடுகர் கேட்டார், ''இதில் உனக்கு ஏதாவது விளங்குகிறதா?'' என்று.

''ஓரளவு புரிகிறது'' என்றாள் பணிப்பெண்.

''புரிந்தவரையில் சொல்'' என்றார் பெரும் பிடுகர்.

''இவனை யாரோ ஆதித்தன் என்பவன் உள்ளே விட்டிருக்கிறான்...'' என்ற பணிப்பெண் வாசகத்தை முடிக்கவில்லை.

''ஆதித்தன் என்பவன் யாரோ இல்லை. சோழ இளைவரசன். விஜயாலயன் மகன்'' என்று பணிப்பெண்ணின் சொற்களை இடைபுகுந்து வெட்டினார் பெரும்பிடுகர்.

பணிப்பெண் முகத்தில் வியப்பின் சாயை பெரிதும் படர்ந்தது. ''சோழ இளவரசனா?'' என்று வினவினாள் குரலில் வியப்பு ஒலிக்க.

''ஆம். கிழவேஷம் பூண்டு இங்கு நமது பிரதான வாசல் காவலரோடு கலந்து உறைந்திருக்கிறான். இதயகுமாரனை உள்ளே அனுப்பியது அவன்தான்'' என்றார் பெரும்பிடுகர்.

''அப்படியானால் அவனைச் சிறை செய்தால் என்ன?'' என்று கேட்டாள் பணிப்பெண்.

''சாதாரண மனிதர்கள் செய்யக்கூடிய காரியம் அது. அதாவது போரில் வெல்ல முடியாதவர்களின் வழி அது. ஆதித்தன் மகாவீரன். தன்னந்தனியாக இங்கு வந்திருப்பதே அதற்கு அத்தாட்சி'' என்றார் பெரும்பிடுகர். பிறகு அவர் பேசவில்லை. தீவிர சிந்தனையில் ஆழ்ந்தார். நீண்ட நேரத்திற்குப் பிறகு பணிப்பெண்ணை அழைத்து, ''நீ பிரதான வாசலுக்குப்

போ. அங்கு அந்தக் கிழவனிருந்தால் அவனை உடனடியாகத் தப்பிச் செல்லும்படி கூறு. இதயகுமாரனுக்கு எந்த ஆபத்தில்லையென்றும் சொல்'' என்று உத்தரவிட்டார்.

அந்த உத்தரவைக் கேட்ட பணிப்பெண் அச்சத்துக்கும் அதிர்ச்சிக்கும் உட்பட்டாள். ''முத்தரைய பூபதி! இது...'' என்று ஏதோ ஆட்சேபணை துவக்கினாள்.

பெரும்பிடுகர் அவளை நோக்கிச் சொன்னார். ''பெண்ணே! ஆயிரம் பேரைத் தனியாகச் சந்திக்கச் சொல் போரில். பெரும்பிடுகன் தயங்கமாட்டான். சிறு படையைக் கொண்டு சோழத் தலைநகர் மீது பாயச் சொல். தயாராயிருப்பான் பெரும்பிடுகன். ஆனால், துணிந்து வந்து சிக்கிய எதிரி மகனைப் பெரும்பிடுகன் கொன்றான் என்பது சரித்திரத்தில் வரக்கூடாது. கொலை,களவுகளுக்கு அஞ்சுவதல்ல என் சுபாவம். ஆனால், அதிலும் ஒரு நேர்மையுண்டு. கூட்டமான சூரர்களை எதிர்த்து அடியோடு கொன்று போடலாம். பிறர் பணத்தை சாம்ராஜ்யம் என்ற பெயரால் கொள்ளையடிப்பவனை நாமும் கொள்ளையடிக்கலாம். ஆனால், எதிரி மகனைத் தப்ப விடுவதுதான் நாம் இப்பொழுது செய்யவேண்டிய வேலை. திரும்ப அவன் வரட்டும் படையுடன், தஞ்சையையும் செந்தலையையும் பெற. அவன் தலையை என் வாளின் ஒரே வீச்சினால் நிலத்தில் உருட்டுவேன்.'' இதைச் சொல்லி மௌனமானார் பெரும்பிடுகர்.

பணிப்பெண் ஒரு முறை அவரைக் கூர்ந்து நோக்கினாள். பிறகு அறையைத் திறந்துகொண்டு மறுபடியும் கதவை மூடிவிட்டுச் சென்றாள். தனது அறையிலிருந்து ஒரு பெரிய சீலையை எடுத்து முக்காடாகப் போட்டுக்கொண்டு வெளியே சென்றாள் பின்புறக் கதவின் வழியாக. அங்கிருந்த படிகளில் இறங்கி நந்தவனத்தில் மறைந்தும் மற்ற மரக் கூட்டங்களில் நுழைந்தும் வெகு லாகவமாக யார் கண்ணிலும் படாமல் பிரதான வாசலை அணுகினாள். அங்கிருந்த இருகாவலர்



அவளை மடக்க, முக்காடிட்ட சீலையை நீக்கி முகத்தைக் காட்டினாள். காவலர் இருவரும் அவளுக்குத் தலைவணங்கி ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள்'' என்று பணிவுடன் கேட்க, ''உங்களிடம் எனக்கு வேலை எதுவுமில்லை. இங்கு யாரோ ஒரு கிழக்காவலன் புதிதாக வேலைக்கு வந்தானாமே, அவன் எங்கே?'' என்று வினவினாள்.

''ஐயோ அவனா!'' என்றான் ஒரு காவலன் பீதியுடன்.

''ஏன் அவனுக்கென்ன?'' என்று வினவினாள் பணிப்பெண்.

''சுத்த பைத்தியம். சில நாட்களுக்கு முன்புதான் வந்தான். சரியென்று வேலைக்கு வைத்தோம். அவன் பைத்தியமென்பது பிறகுதான் தெரிந்தது. தன்னை மகாராஜா என்கிறான், இளவரசன் என்கிறான். சில வேளைகளில் முரண்டு பிடித்து அவனே பிரதான வாசலைக் காக்க வேண்டுமென்கிறான்...'' என்று காவலன் விளக்கினான்.

''அவன் எங்கே இப்பொழுது?'' என்று வினவினாள் பணிப்பெண்.

''அதோ காவலர் அறையொன்றில் அடைத்திருக்கிறோம்'' என்றான் காவலன்.

''அவனைக் காட்டு'' என்றாள் பணிப்பெண்.

''எதற்கு அம்மணி?''

''மகாராஜா அவனுக்கு ஒரு வேலை கொடுத்திருக்கிறார்.''

''அவனால் எதுவும் செய்ய முடியாது.''

''அது மகாராஜாவின் தொல்லை. நமக்கென்ன? தவிர, அவர் உத்தரவை எதிர்த்துச் சொல்ல நம்மால் முடியுமா?'' என்று வினவினாள் பணிப்பெண்.

காவலன் ஏதோ முணுமுணுத்தான். பிறகு ''இப்படி வாருங்கள்'' என்று பணிப்பெண்ணை அழைத்துக்கொண்டு

சற்று எட்ட இருந்த காவலர் விடுதிகளை நோக்கிச் சென்றான். அங்கிருந்த ஒரு இருண்ட அறையைக்காட்டி, ''அறை சாவி இதோ'' என்று ஒரு சாவியையும் பணிப்பெண்ணிடம் கொடுத்தான். ''அவன் அறைக்குள் செல்லுங்கள். ஏதாவது அபாயம் நேர்ந்தால் குரல் கொடுங்கள். நான் வந்து அவனை வெட்டிப் போடுகிறேன்'' என்றும் கூறிவிட்டுத் திரும்பி காவலுக்குச் சென்றான்.

பணிப்பெண் தனது முக்காட்டை நன்றாக இழுத்து மூடிக் கொண்டாள். பிறகு மிகுந்த எச்சரிக்கையுடன் கதவைத் திறந்து உள்ளே சென்றாள். அறை மிகச் சிறியதாயிருந்தது. அதன் மூலையில் வெளுத்த மயிருடன் ஒரு கிழவன் முடங்கிக் கிடந்தான். மேலேயிருந்த சிறு சாளரத்தின் மூலம் பாய்ந்துவந்த விடியற்கால நிலவுக்கிரணங்கள் அந்தக் கிழவன் மீது விழுந்திருந்ததால் அந்தக் கிழவன் கூனிக்குறுகிப் படுத்திருந்தது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது.'' ''சோழ இளவரசனுக்கு வேஷம் நன்றாகப் பொருந்தியிருக்கிறது'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். பிறகு மெள்ள அழைத்தாள், ''ஐயா கிழவனாரே!'' என்று.

கிழவனார் பதில் சொல்லவில்லை. இரு முறை இருமினார் லொக்கு லொக்கென்று. உம், உபுக், உபுக்கென்று சில கிழ ஒலிகளையும் கிளப்பினார் உதடுகளின் மூலம். பணிப்பெண் முறுவல் செய்தாள். அடுத்து கிழவன் அருகில் சென்று குனிந்து, ''போலிக் கிழவனாரே! உமது சாயம் வெளுத்து விட்டது'' என்று கூறினாள்.

அடுத்த விநாடி அவள் கிழவனின் இரும்புப்பிடியில் இருந்தாள். கிழவனின் இரும்புக் கைகள் அவளைத் தாவிப் பிடித்துக் கட்டி தன் உடலுடன் இணைத்துக்கொண்டன. அப்படியே அவளைத் தரையில் புரட்டி தான் மேலே புரண்டு அழுத்திய வண்ணம், ''ஏய்! வாயைத் திறக்காதே. திறந்தால் கழுத்தை நெரித்துவிடுவேன்'' என்றது போலிக்கிழம்.



பணிப்பெண்ணின் நிலைமை பெரும் சங்கடத்திலிருந்தது. தன்மீது சோழ இளவரசனின் உடல் அழுந்திக்கிடந்தது பெரும் வேதனையை அளித்தது அவளுக்கு. ஆதித்தன் முரட்டுப் பிடியால், அணைப்பால் கன்னிவிட்ட மார்பகத்தின் மூலம் ஊடுருவிய உணர்ச்சிகள் சொல்லத்தர மல்லாததாயிருந்தன.

அதே சமயத்தில் ஆதித்தன் சட்டென்று நிமிர முயன்றான். தன்னை எழுப்பியது ஆணல்லவென்பதும் ஒரு பருவப் பெண் என்பதும் ஸ்பரிசத்தால் புலனானதால் அவளைச் சுற்றிய கைகளைச் சட்டென்று விட்டான். அவள் மீதிருந்து எழுந்திருக்கவும் முற்பட்டான். இம்முறை பணிப்பெண்ணின் கைகள் அவனை முரட்டுத்தனமாகப் பிடித்துக்கொண்டன. ''என்னை முத்தமிடுங்கள், சரசமாடுவதுபோல் நடியுங்கள்'' என்றாள்.

''ஏன்? நீ யார்?'' என்ற கேள்விகள் ஆதித்தனிடமிருந்து ரகசியமாக வெளிவந்தன.

''நான் பெரும்பிடுகர் பணிப்பெண். நன்றாகக் குனி'' என்ற பணிப்பெண் அவன் காதில் ஏதோ ஓதினாள் ரகசியமாக.

ஆதித்த கிழவன் எழுந்தான் மெதுவாக. உடலை நடுக்கியவண்ணம், ''இத்தகைய அபாய வேலைக்கு நான் எதற்கு? நான் வயதானவன். வேறு யாரையாவது அனுப்பு'' என்றான்.

''பிரபுவின் ஆணை. போகாவிட்டால் உன் உயிர் அரைச் காசு பெறாது'' என்றாள் பணிப்பெண் கடுமையான குரலில்.

கிழவன் நகைத்தான் பெரிதாக. ''சரி, சரி! எங்கு செத்தாலென்ன? போய்வருகிறேன். மாலைக்குள் வராவிட்டால் நான் செத்துவிட்டேனென்று பூபதியிடம் சொல்லிவிடு'' என்று கூறிவிட்டு எதையோ தேடினான்.

''என்ன தேடுகிறாய்?'' அதிகாரத்துடன் கேட்டாள் பணிப்பெண்.

''எனது வாள்'' என்று மீண்டும் அங்குமிங்கும் தள்ளாடி நடந்தான் போலிக்கிழவன்.

''அதோ அந்த மூலையில் இருக்கிறது. எடுத்துக் கொண்டு சீக்கிரம் புறப்படு. இல்லாவிட்டால் பெரும் பிடுகரிடம் சொல்லி உன்னை இப்பொழுதே வெட்டிப்போடுவேன்'' என்று சீற்றத்துடன் கூறினாள் பணிப்பெண்.

கிழவன் வாளை எடுத்து இடையில் கட்டிக்கொண்டு தள்ளாடி அறை வாசலைக் கடந்தான். அவனுடன் வெளியேறிய பணிப்பெண், அங்கு தோன்றிய காவலனை நோக்கி, ''இவனுக்கு ஒரு புரவியைக் கொடுத்து சீக்கிரம் அனுப்பு'' என்று உத்தரவிட்டாள். காவலன் கொடுத்த முரட்டுப் புரவியில் தத்தி ஏறிய கிழவன், கடிவாளத்தை இழுக்க முயன்ற சமயத்தில் பணிப்பெண்ணின் கரத்தை மாறன் பரமேசுவரன் கரம் வலியப் பிடித்தது. ''அந்தக் கிழவனை இறங்கச் சொல்லுங்கள்'' என்ற உத்தரவும் கடுமையுடன் வந்தது. மாறன் பரமேசுவரனின் ராட்சத உருவம் ஆதித்த கிழவனை நோக்கி நடந்தது. பணிப் பெண்ணை இழுத்த வண்ணம்.

# 31. காலம் மாறுகிறது.

மனிதன் நிதானத்தைப் பறக்கவிடும் நிலையை கோபம் என்று சொல்கிறோம். அந்த நிலையில் எப்பேர்ப்பட்ட அறிவாளியின் புத்தியும் ஒழுங்காக இயங்குவதில்லை. அன்றிரவு செந்தலை பிரதான வாசலுக்கருகில் பணிப்பெண்ணை இழுத்த வண்ணம் போலிக் கிழவனை அணுகிய மாறன் பரமேசுவரன் இந்த நியதிக்கு எடுத்துக்காட்டாக விளங்கினான், மூர்க்கனான அவன் போலிக் கிழவன் யாரென்பதை உணர்ந்ததால் அவனையும், அவனைத் தப்புவிக்க முயன்ற பணிப்பெண்ணையும் தீர்த்துக்கட்டி விடுவதென்ற எண்ணத்துடன்தான் ஒரு கையில் வாளை ஏந்தியும், இன்னொரு கையில் பணிப்பெண்ணின் கையை இறுகப் பிடித்துக் கொண்டும் கிழவன் வீற்றிருந்த புரவியை அணுகினான். கிழவனை இறங்கச் சொல்ல காவலருக்கு உத்தரவிட்ட போதும் அவன் குரலில் நிதானமின்மையும் உக்கிரமும் பிணைந்து ஒலித்தன.

இப்படி நிதானத்தை இழந்ததால் கிழவன் சரேலென்று தனது போலித் தளர்ச்சியை உதறித் தன்னைக் கிட்டி வந்த காவலர் இருவரின் தோள்பட்டைகளில் தனது வாளைப் பாய்ச்சி விட்டதன்றி சரேலென்று புரவியையும் சுழற்றித் திருப்பி மாறன்மீது பாய்ந்துவிட்டதால், மாறன் புரவியின் மோதலால் கீழே விழ இருந்தான். அந்த சமயத்தில் மாறன் கை பெண்ணின் கையை விட்டு விட்டதால் ஆதித்த சோழன் பரம லாகவத்தைக் காட்டினான். அவன் வலது கையிலிருந்த வாள் மாறன் விழ இருந்து நிதானித்துக் கொண்ட சமயத்தில் மாறன் வாளைக் சுழற்றி கையிலிருந்து சுழற்றிப் பறக்கவிட்டு விடவே மாறன் திடீரென நிராயுத பாணியானான்.

அவனால் விடப்பட்ட பணிப்பெண் கண்ணிமைக்கும்

நேரத்தில் சோழன் மகனால் அவனது வாள் கரத்தாலேயே அணைத்துத் தூக்கப்பட்டு புரவிமீது குறுக்கே கிடத்தப்பட்டாள். அதே நிலையில் ஆதித்தன் ஏறிய முரட்டுப் புரவி திடீரென ஒருசக்கரம் அடித்துத் திரும்பிப் பறந்தது பிரதான வாசல் மூலம். அதன் குறுக்கே வந்த இரு காவலர் புரவியால் தாக்குண்டு அதன் காலில் விழுந்து மிதிபட்டனர், புரவி வாயு வேகத்தில் பறந்தது செந்தலையின் வெளிவீதியில்.

ஆதித்தனின் எதிர்பாராத துணிகரச் செயலால் வாளிழந்தாலும், குதிரையின் தாக்குதலால் கீழே விழ இருந்தாலும் விழாமல் நிதானித்துக் கொண்ட மாறன் பரமேசுவரன் கண்களில் பயங்கரமான பழிவாங்கும் சாயை விரிந்தது. ''ஆதித்தா! உன் அரண்மனையைக் கொள்ளை கொண்ட மாறன் இன்னும் உயிருடனிருக்கிறானென்பதைப் புரிந்துகொள். வெகு சீக்கிரம் வருகிறேன் உன் இருப்பிடம் நோக்கி'' என உள்ளூரச் சொல்லிக் கொண்டான். பிறகு எட்ட விழுந்திருந்த தனது வாளை எடுத்துக் கொண்டு, ''யாரங்கே! ஒரு புரவியைக் கொண்டு வா'' என்று வீரர்களுக்கு உத்தரவிட்டான். புரவி வந்ததும் அதன்மீது தாவினான். புரவியின் கடிவாளத்தை இழுக்க அவன் முற்பட்ட சமயத்தில் இரு காவலர் குறுக்கே வந்து, ''இளவரசே! நாங்கள் எவ்வளவு பேர் உடன் வரட்டும்'' என்றுவினவினார்கள்.

''ஜோஸ்யரைக் கேளுங்கள்'' என்றுசீறி விழுந்தான் மாறன் பரமேசுவரன் புரவியை நடத்து முன்பு. ''இல்லாவிட்டால் தர்மப்பிரபுவைக் கேளுங்கள்'' என்று கூறினான்.

''யாரது விளங்கவில்லையே'' என்று கேட்டான் ஒரு காவலன்.

''அரண்மனையில் இருக்கிறார்'' என்று இகழ்ச்சியுடன் கூறிய மாறன், புரவியை மெல்ல நடத்த முற்பட்டான்.



''மாறா! நில்'' என்று கட்டளையிட்டுக்கொண்டே பெரும்பிடுகர் மெள்ள அந்த இடத்தை நாடினார்.

அவரைப் பார்த்த மாறன் கண்கள் கொலைக்கண்களாக இருந்தன. ''ஏன், உங்கள் நண்பருக்கு உதவ வந்தீர்களா?'' என்ற மாறன் கேள்வியில் சீற்றம் பலமாக இருந்தது.

''இல்லை.'' பெரும்பிடுகர் குரல் திட்டமாயிருந்தது. மாறன் அசையக்கூடாது என்ற ஒலியும் அதில் இருந்தது.

''வேறெதற்கு வந்தீர்கள்'' என்று வினவினார் மாறன் அதிக சீற்றத்துடன்.

''ஒரு முட்டாளைக் காக்க'' என்றார் பெரும்பிடுகர்.

''யாரது?''

''அரண்மனைக்குச் சென்று தகளியில் பார் தெரியும்.''

''என்னைச் சொல்கிறீர்களா?''

''இதைப் புரிந்துகொள்ள இத்தனை நேரம் பிடிக்கிறது உனக்கு. இதுவே உன் முட்டாள்தனத்துக்கு அறிகுறி. சரி, கீழே இறங்கு''– பெரும்பிடுகர் உத்தரவில் தீர்மானமும் ஆணையுமிருந்தன.

அப்பொழுதும் மாறன் புரவியிலிருந்து இறங்கினானில்லை. '' ஆதித்தனைப் பிடித்து வருவதில் உங்களுக்கு என்ன ஆட்சேபணை?'' என்று வினவினான் மாறன் புரவியில் அமர்ந்தபடியே.

''எந்தவித ஆட்சேபணையுமில்லை'' என்ற பெரும்பிடுகர் சிறிது ஆலோசித்துவிட்டு ''இல்லை. ஒரு ஆட்சேபணையிருக்கிறது'' என்றார் சாதாரணமாக.

''அது என்னவோ?''

''என் ஒரேமகனை இழப்பதில் ஆட்சேபணை இருக்கிறது.''

''என் வீரத்தில் நம்பிக்கையில்லையா உங்களுக்கு?''

''இருக்கிறது. அதனால்தான் உன்னைப் போகவேண்டா மென்று சொல்கிறேன். எனக்கு வயதாகிவிட்டது. தவிர, நோயும் வர வர என் பலத்தை உறிஞ்சிவிடுகிறது. ஆகவே தஞ்சைமீது சோழர் படையெடுப்பு நேரிடும்போது முத்தரை யர் படையை நடத்திச்செல்ல ஒரு வீரன் வேண்டியிருக்கிறது. அது என் மகனாகத்தான் இருக்கமுடியும்'' என்ற முத்தரைய பூபதி, ''அரண்மனைக்கு வா. பேசிக்கொள்வோம்'' என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தார் எட்ட இருந்த அரண்மனையை நோக்கி.

மாறன் பரமேசுவரன் தந்தை சென்றபிறகும் நீண்ட நேரம் புரவியிலேயே அமர்ந்திருந்தான். பிறகு புரவியிலிருந்து கீழே குதித்து நடந்தான் அரண்மனை நோக்கி. பெரும் பிடுகர் எதை மன்னித்தாலும் தம் கட்டளைக்குக் கீழ்ப்படியாதவரை மன்னிக்கமாட்டார் என்பது நிச்சயமாகத் தெரிந்திருந்த தாலும், அவரை மீறி தான் செந்தலையைக் கடந்துவிட்டால் அதில் மீண்டும் நுழைய முடியாதென்பதை உணர்ந்திருந்த தாலும், மாறன் தலைகுனிந்தவண்ணம் நடந்து அரண்மனையை அடைந்தான்.

அரண்மனையிலன் உச்சிப்படியில் வழக்கம்போல் அமர்ந்திருந்தார் பெரும்பிடுகர். படிகளில் நிதானத்துடன் ஏறி அவருக்கு எதிரில் நின்ற மாறன், ''இப்பொழுது உங்களுக்குத் திருப்திதானே!'' என்று வினவினான். அவன் உள்ளம் எரிமலை யாயிருந்ததைக் கண்களின் உக்கிரம் நிரூபித்தது.

பெரும்பிடுகர் தமது தலையை நிமிர்த்தி ராட்சதக் கண் களால் மகனை நோக்கினார் பல விநாடிகள். ''இப்படி உட்கார்'' என்று தமது பக்கத்தில் சிறிது இடமும் விட்டு நகர்ந்தார். சொற்படி அமர்ந்த தமது மகனை நோக்காமல் எதிரே அணிவகுப்பு சதுக்கத்தையும், அதற்கு அப்பாலிருந்த



காட்டையும் நோக்கினார். அந்தக் காடு முழுவதிலும் தமது படைகள் நிரம்பியிருப்பதை உணர்ந்திருந்த அவர் முகத்தில் பெருமைக்குப் பதில் துயரமே உருவாகியிருந்தது. இருப் பினும் அவர் மகனிடம் பேச ஆரம்பித்தபோது அதில் துன்பத் தின் சாயை அணுவளவும் இல்லை. நிதானமாகப் பேசினார் பெரும்பிடுகர்.'' மகனே! மனிதன் அவசரப்பட வேண்டிய நேரம் உண்டு. நிதானிக்க வேண்டிய நேரமும் உண்டு'' என்றார் மெள்ள.

மாறன் பரமேசுவரன் தலையைத் திருப்பித் தந்தையை நோக்கினான். ''தந்தையே! உமக்கு வயதாகிறது'' என்றும் சுட்டிக்காட்டினான்.

''அதனால்தான் உன்னை மீட்டுவந்தேன் ஆதித்தன் வாளிடமிருந்து. நான் இறந்தபின் பலமாக செந்தலைக் குறுநிலத்தை ஆள தலைவன் வேண்டும். வெகு சீக்கிரம் விஜயாலயன் படையெடுப்பு செந்தலை மீதும் தஞ்சை மீதும் ஏற்படலாம். அதை எதிர்க்க சித்தம் செய்துகொள்'' என்றார் பெரும்பிடுகர்.

மாறனின் பருத்த உதடுகள் சற்று விரிந்து இளநகையைக் காட்டின. ''போர் பயம் பிடித்துக்கொண்டதா? முத்தரைய பூபதியும் போரை எதிர்பார்த்து அஞ்சுகிறாரா?'' என்ற மாறன் மேலும் சொன்னான், ''தந்தையே!எந்தப் போரைக்கண்டு நாம் அஞ்சினோம்? மூவேந்தர்களையும் நாம் முறியடித்து மூன்று அரசுகளையும் அதாவது தரைகளையும் நாம் ஆளவில்லையா? அதனால்தானே முத்தரையர் என்ற சொல் ஏற்பட்டு நாம் முத்தரையர் என்று வரலாற்றில் சிறந்தோம்? அந்தப் படை இப்பொழுது அழிந்துவிட்டதா? இல்லை, நம் வீரம் ஒடுங்கிவிட்டதா?'' என்று.

பெரும் பிடுகர் சிந்தனையில் இறங்கினார். நீண்ட நேரம் கழித்து அவரிடமிருந்து பெருமூச்சு ஒன்று வெளிவந்தது.

''மாறா! அறிவாளிகள் பழைய சிறப்பை எண்ணிக் காலம் கழிப்பதில்லை. அன்றைய நிலையை யோசிக்கிறார்கள். நமது முன்னோர்களான களப்பிரர் புயல் வேகத்தில் தமிழகத்தில் நுழைந்தார்கள். மூன்று ஆட்சிகளையும் பிடித்தார்கள். அதை நினைத்து நாம் பெருமைப்படலாம். எதற்கு? அவர்கள் வீரத்தைக் கடைப்பிடிக்க, அவர்களைப் பின்பற்ற, பெரும் காரியங்களைச் சாதிக்க. பழம்பெருமை பேச அல்ல. தவிர, இன்று நமது பெயர் முத்தரையராயிருக்கலாம். ஆனால், மூன்று நமது தரைகளும் உன்னிடமில்லை. பழையபடி தமிழகத்தில் மூவேந்தர்கள் ஏற்பட்டுவிட்டார்கள். நம்மை அழிக்க ஒன்று சேரவும் முற்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது ஆத்திரத்துக்கு இடமில்லை. நிதானத்துக்கும் எதிரி செந்தலைப் பக்கம் தலை காட்டினால் அவனை எதிர்க்க நமது படையை பலப்படுத்தவும், கட்டுபாட்டுடன் போர்புரிய சித்தப்படுத்து வதற்கும் இது சமயம். ஆகையால் பணிப்பெண்ணுடன் சென்ற ஆதித்தனை மறந்துவிடு. எதிரிடும் போருக்கு நாளை முதல் சித்தம் செய்துகொள்'' என்று பேசினார் மெதுவாக.

அவர் சொற்களின் உண்மை மாறனின் மூர்க்கம் நிரம்பிய மூளைக்கும் புலப்படவே அவனும் சிந்தனை வசப்பட்டான். ''போரை எப்பொழுது எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று வினவி னான் பல விநாடிகள் கழித்து.

'' அதிகப்படியாகப் போனால் இரண்டு மாதங்களில்'' என்றார் பெரும்பிடுகர்.

''இப்பொழுதே சித்தமாயிருக்கிறேன்'' என்றான் மாறன்.

''நீ சித்தமாயிருக்கலாம். படை சித்தமாயில்லை. நாளை முதல் உன் மகனை வைத்துக் கொண்டு அதைச் சித்தம் செய்'' என்றார் பெரும்பிடுகர்.

''ஏன்! நான் சித்தம் செய்தாலென்ன?'' என்று வினவி னான் மாறன்.



முத்தரையர் முகத்தில் சிறிது கவலை விரிந்தது. அவர் பேசியபோது கவலை குரலிலும் தெரிந்தது. ''இப்பொழுது வரப்போவது திடீர் தாக்குதலோ கொள்ளையோ அல்ல. திட்டமிட்ட சாஸ்திரீயப் போர். வெறும் முரட்டுத்தனம் அதில் பயன்படாது. எதிரிகளின் போர்முறைகளை உன் மகன் அறிந்திருக்கிறான்'' என்றார் பெரும்பிடுகர்.

''இளையவேள் அத்தனை பெரிய தளபதியா?''

''இளைய முத்தரையன்'' என்று மகனைத் திருத்திய பெரும்பிடுகர் ''படைகளைச் சீர்திருத்தி அமைக்கும்போது நீயே புரிந்து கொள்வாய்'' என்று கூறினார். அத்துடன் பேச்சு முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தார்.

மாறன் எழுந்து உள்ளே சென்றான். அதற்குப் பிறகும் பெரும்பிடுகர் தலையை நிமிர்த்தவில்லை. எதிரிலிருந்த காட்டையே நோக்கிக் கொண்டிருந்தார். அதிலிருந்து வெளிப்பட்டு தம்மை நோக்கி நடக்க முற்பட்ட உருவத்தைக் கண்டதும் அவர் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. ''நினைத்தபடிதான் எல்லாம் நடக்கிறது'' என்று திருப்தியுடன் முணுமுணுத்துக்கொண்ட பெரும்பிடுகர் தம்மை நோக்கி வந்த உருவத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். ''காலம் மாறுகிறது, அதுவும் வேகமாக'' என்றும் நினைத்தார்.

# 32. பெருந்தேவி

அன்றாடம் படைகள் அணிவகுத்துச் செல்லும் திடலுக்கு எதிர்ப்புறமுள்ள காட்டிலிருந்து புறப்பட்டுத் தம்மை நோக்கி வந்துகொண்டிருந்த உருவத்தைக் கண்டதும் காலம் வேகமாக மாறிவருகிறது என்று எண்ணமிட்ட பெரும்பிடுகர் முகத்தில் மகிழ்ச்சியும் சாந்தியும் கலந்து உறவாடின. இந்த நிலை இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டிருந்தால் முத்தரையர் சிற்றரசர்களாக மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காது என்ற நினைப்பால் சற்றுப் பெருமூச்சும் விட்டார், செந்தலைச் சிற்றரசின் அதிபதி.

மேலும் அவர் கண்கள் காட்டைக் கடந்து அணி வகுப்புத் திடலையும் கடந்து தானிருந்த அரண்மனைப் படிகளின் மீதும் ஏறத் துவங்கிவிட்டதைப் பார்த்ததும் அவர் இதழ்களில் புன்முறுவல் நன்றாக விரிந்தது. ''பெருந்தேவி! வா'' என்று சற்று இரைந்து அவர் அழைத்ததும், அழைத்த பின்பு சிரித்ததும் வந்த பெண்ணுக்கு வியப்பைத் தரவே ''பணிப்பெண் எப்பொழுது பெருந்தேவியானாள்?'' என்று வினவினாள் அவள்.

பெரும்பிடுகர் தமது ராட்சஸக் கண்களை எதிரே கீழ்ப் படியில் நின்ற பணிப்பெண்மீது ஓட்டினார் இரண்டே விநாடிகள். அதற்குப் பிறகு கேட்டார், ''உன் பெயர் என்ன?'' என்று.

''தேவி'' என்ற பணிப்பெண், ''இத்தனை நாள் அந்தப் பெயரைச் சொல்லியே அழைத்ததில்லையே. பெண்ணே என்றுதானே அழைப்பீர்கள். இப்பொழுது பெயர் திடீரென உங்கள் நினைப்புக்கு வந்துவிட்டது. அதற்கு முன்பாக ஒரு ஒட்டும் போடுகிறீர்கள்'' என்றும் சொன்னாள்.



அவள் பேச்சுக்குப் பதிலேதும் கூறாத பெரும்பிடுகர், ''இப்படி உட்கார்'' என்று தமது பக்கத்தில் இடத்தைக் காட்டினார்.

''நான் உட்காரவேண்டிய இடம் அதுவல்ல'' என்று கூறிய பணிப்பெண் அவர் உட்கார்ந்திருந்த படிக்குக் கீழ்ப்படியில் அவர் பாதத்துக்கருகில் உட்கார்ந்து கொண்டாள்.

அப்படி உட்கார்ந்த அவள் தலையை மிகுந்த அன்புடன் தடவிக் கொடுத்த பெரும்பிடுகர், ''பெருந்தேவி!'' என்று ஏதோ சொல்லத் துவங்கியதும் அவரைக் குறுக்கே மறித்த பணிப்பெண், ''நான் பெருந்தேவியல்ல, வெறும் தேவி'' என்று சற்றுக் கோபத்தைக் காட்டினாள்.

''வெறும் தேவிதானா?''– பெரும்பிடுகர் கேள்வியில் விஷமம் இருந்தது.

''ஆம்''– பணிப்பெண்ணின் குரலில் கண்டிப்பு இருந்தது.

''அப்படியானால் வெல்லம் போட்ட தேவியல்ல?'' என்ற பெரும்பிடுகர் பெரிதாக நகைத்தார்.

பணிப்பெண்ணின் முகம் சிவந்தது. தமது மனைவி காலமான பிறகு எந்தவித உற்சாகத்தையும் காட்டாத பெரும் பிடுகர் அன்றைக்கு வேடிக்கையாகவும் உற்சாகமாகவும் பேச முற்பட்டதைக் கண்டதும் பணிப்பெண் வியப்புக்கும் வெட்கத்துக்கும் உள்ளானாள். ''வெல்லம் போட்ட தேவியா! அப்படியானால் நான் இனிக்கிறேனா உங்களுக்கு?'' என்றும் கேட்டாள் குனிந்த தலையுடன்.

''எனக்கும் என்றும் இனித்தாய். அது பெண் தகப்பனுக்கு இனிக்கும் இனிப்பு. அதிலென்ன சுகமிருக்கிறது? இன்று இன்னொருவனுக்கும் இனித்திருக்கிறாயே, அதில்தான் விஷயமிருக்கிறது'' என்றார் பெரும்பிடுகர்.

''யாருக்கு?'' என்று பணிப்பெண் வினவினாள் சீற்றத்துடன்

''ஆதித்தனுக்கு'' இதைச் சொல்லி பெரும்பிடுகர் இடியென நகைத்தார்.

அதுவரை ஏதோ பேசிக்கொண்டு போன பணிப்பெண்ணின் முகம் குங்குமச் சிவப்பாகச் சிவந்தது. ''என்ன உளறுகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள் தலை குனிந்த நிலையில்.

''நான் உளறும் வழக்கம் கிடையாது'' என்றார் பெரும் பிடுகர்.

'' வேறு யார், நானா?''

''இல்லை ஆதித்தன்.''

''சோழ தேவர் மகனா?''

''வேறு யார் உன்னிடம் கொஞ்ச முடியும்?''

''அவர் எதற்காக என்னைக் கொஞ்ச வேண்டும்?''

''இதென்ன கேள்வி. உன்னைக் கொஞ்சாமல் என்னையா கொஞ்சுவான்? அவன் விடுவித்தது என்னையா?''

''என்னை அவர் விடுவித்ததாக யார் சொன்னது?''

''யார் சொல்ல வேண்டும்? அவனிடமிருந்து நீ திரும்பிய திலிருந்தே தெரியவில்லையா?''

இதற்குப் பதிலேதும் சொல்லவில்லை பணிப்பெண். முத்தரைய பூபதியே கேட்டார், ''ஆதித்தன் உன்னைத் தன்னுடன் வரும்படி அழைத்திருப்பானே?'' என்று.

''ஆம், அழைத்தார்'' என்றாள் பணிப்பெண், கீழ்ப் படிகளில் கண்களை ஓடவிட்டு.

''மணம் புரிவதாகவும் சொல்லியிருப்பான்'' என்றார் பெரும்பிடுகர்.



பதிலேதும் சொல்லவில்லை பணிப்பெண் நடந்ததையெல்லாம் நேரில் பார்த்ததுபோல் பெரும்பிடுகர் கூறியதை நினைத்துப் பார்த்ததால் வியப்பின் உச்சகட்டத்தை எய்தினாள் அவள். ''சோதிடம் உங்களுக்குக் கைவந்த கலை என்பது தெரிகிறது'' என்று முணுமுணுத்தாள் அவள்.

''சோதிடமல்ல, மனோதத்துவம்'' என்று திருத்திச் சொன்னார் பெரும்பிடுகர்.

''உண்மையில் மனோதத்துவத்தைப் பெரும்பிடுகர் நன்றாக அறிந்திருக்கிறார்'' என்று உள்ளூர எண்ணினாள் பணிப்பெண் தேவி. அதன் விளைவாக அன்று சிறையில் தான் சோழ இளவரசனைச் சந்தித்ததிலிருந்து நிகழ்ந்ததெல்லாம் அவள் சிந்தையில் உலாவலாயிற்று. ஆதித்தன் சிறையில் தன்னைத் திடீரென்று கட்டிப்பிடித்து மூச்சுத் திணறும்படி அணைத்து, பிறகு மாறனிடமிருந்து தன்னைப் புரவியைப் பாய்ச்சிப் பிடுங்கி புரவி மீது கடத்திப் பறந்தது, ஊரின் எல்லையைத் தாண்டு முன்பே தன்னை இறக்கியது ஆகிய அனைத்தும் அவள் மனத்தில் வலம் வந்தன.

''இறங்கியதும் அவர் எத்தனை பரிவு காட்டினார். மாறனிடமிருந்து பலவந்தமாகத் தூக்கிய சமயத்தில் கிழிந்த எனது மேலாடையை எத்தனை நாகரீகமாகச் சரிப்படுத்தினார். வேறு யாராயிருந்தாலும் அந்த நிலையைப் பயன்படுத்தி கொண்டிருப்பார்களே. அப்பா! என்ன லாவகமாகத் தாவணியை இழுத்துப் போர்த்தினார்! கிழிந்த மேலாடைப் பகுதியை உள்ளுக்குள் நன்றாகத் திணித்து மறைத்தபோது அவர் கை... உம்... பட்டதே! அதுகூடத் தெரியவில்லை அவருக்கு. பாவம்! களங்கமற்றவர் இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதருண்டா! அவர் கைபட்டது அவருக்குத் தெரிந்ததோ இல்லையோ, எனக்குத் தான் பிராணனே போய்விட்ட மாதிரி இருந்தது. அதுதான் போகட்டும்; என்னை எதற்காக மறுபடியும் தூக்கி வைத்து நீரை எடுத்து முகத்தில் தெளித்தார்?

'இப்பொழுது எப்படியிருக்கிறது என்று எதற்காகக் கேட்டார்?'– என்று நடந்த காட்சிகளை மீண்டும் நினைத்துப் பார்த்தாள் பணிப்பெண் தேவி. அடுத்து நடந்ததை அணு அணு வாக எண்ணியதால் அவள் வதனத்தில் ஆனந்தம் மிதமிஞ்சிப் படர்ந்தது. குளக்கரைக் காட்சிகள் மேலும் தொடர்ந்தன.

முகத்தில் நீர் தெளித்த ஆதித்தன் வினவினான். ''உன் மூச்சு பெருமூச்சாக ஏன் வருகிறது?'' என்று. அத்துடன் அவள் முந்தானையை எடுத்து முகத்தையும் துடைத்தான். ''ஆதித்தன் இருக்கும்போது அச்சப்பட ஏதுமில்லை'' என்றும் சொன்னான்.

''நேரமாகிறது. வீரர்கள் உங்களைத் தொடருவது நிச்சயம்'' என்றாள் பணிப்பெண்.

''வீரர்களைக் கண்டு அஞ்சவில்லை. உன்னைக் கண்டு தான் அஞ்சுகிறேன்'' - ஆதித்தன் மெள்ள முறுவல் கொண்டான்.

''என்னைக் கண்டா?''

''ஆம்'' ஏன்? அத்தனை பயங்கரமாயிருக்கிறேனா?''

''நான் சம்பந்தப்பட்டவரை அப்படித்தான்.''

இதைக் கேட்டதும் முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள் அவள்.

'' தவறாக நினைக்க வேண்டாம். உன் அழகு பயங்கர மானது. நான் அடியோடு நினையாதது. முத்தரையர் பெண் களுக்கு வீரமுண்டு என்று கேட்டிருக்கிறேன். அப்படியே பார்ப்பவரை விழுங்கிவிடும் பயங்கர அழகு இருக்குமென்று இன்றுவரை எனக்குத் தெரியாது'' என்று சொன்ன ஆதித்தன், அவளுக்கு முன்பு நீரில் இறங்கி கீழ்ப் படியில் நின்று கொண்டான்.

ஆதித்தன் கண்கள் அவள் கண்களுடன் கலந்தன. ''உன் பெயரென்ன பெண்ணே?'' என்று அவன் உதடுகள் ரகசிய மாகக் கேட்டன.



''தேவி!'' - அவள் இதழ்கள் விரிந்து பெயரை மெதுவாக உச்சரித்தன.

''தேவி! என்ன அழகான பெயர்! உன் பிற்கால அந்தஸ்தையும் விளக்குகிறது'' என்றான் ஆதித்தன்.

அவள் கருவண்டு விழிகளில் ஆச்சரிய ரேகை படர்ந் தது. ''பிற்கால அந்தஸ்தா!'' என்று வியப்புடன் அவள் வினவினாள்.

''ஆம் தேவி'' என்றான் ஆதித்தன். அந்த தேவியை மிக அன்பமாக உச்சரித்தான்.

''என்ன அந்தஸ்தோ?''

''ராணியாகும் அந்தஸ்து.''

''யாருக்கு ராணி?''

''எதற்கு என்று கேட்கவேண்டும்.''

''எதற்கு என்றா?''

''ஆம்.''

''சரி; எதற்கு?''

''சோழ நாட்டுக்கு.''

இதைக் கேட்டதும் சட்டென்று எழுந்த தேவி குளப்படி யின் முனையில் நின்றிருந்ததால் சற்று ஆடி விழப்போனாள் உணர்ச்சி மிகுதியால். கீழ்ப்படியில் நின்ற ஆதித்தன் அவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான். அடுத்த விநாடி அவளை இறுக்கிய வண்ணம் அவள் காதுக்கருகில் குனிந்து ''தேவி! சோழ நாட்டு தேவியாக உனக்கு இஷ்டமா?'' என்று வினவி னான்.

''இஷ்டமில்லை'' என்று அவள் உதடுகள் முணு முணுத்தன.

''ஏன் தேவி?''

''நாடு புருஷனல்ல, பெண். தாய் நாடு என்றுதான் அழைக்கிறோம்.''

ஆதித்தன் அவளைச் சற்றுப் பின்னுக்குச் சாயவிட்டு இடையை மாத்திரம் இரு கைகளால் சுற்றிய நிலையில் ''என்னைப் பார்'' என்றான் கடுமையான குரலில்.

பார்த்தாள் தேவி. ''எனக்கு தேவியாக உனக்கு இஷ்டமா?'' என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லவில்லை. கண்கள் பதில் சொல்லி யிருக்க வேண்டும். சரேலென்று ஆதித்தன் பொய்த்தாடி மீசைகளைக் களைத்து எறிந்தான். அவள் கண்கள் சொன்ன பதில் உதடுகளுக்கு அவஸ்தையை அளித்தது. ஆதித்தனின் இதழ்கள் அவள் மென்மையான உதடுகளில் முரட்டுத்தனமாக அழுந்தின. பிறகு கன்னங்களிலும், கழுத்திலும் மாறி மாறிப் பதிந்தன. அந்த சிகிச்சைக்குப் பிறகு சொன்னான், ''புறப் படுவோம்'' என்று.

''எங்கு?'' உதடுகள் இன்பலாகிரியுடன் அந்த ஒற்றைச் சொல்லை உதிர்த்தன.

''உறையூருக்கு.''

''நான் வரமுடியாது.''

''ஏன்?''

''காரணங்கள் இரண்டு. ஒன்று, முத்தரையர் பெண் ணான தேவி சோழ இளவரசனைக் காப்பாற்றினாள். அதனால் அவன் அவளை மணந்தான் என்ற இரண்டாம்பட்ச மனைவி உரிமையை நான் விரும்பவில்லை. நீங்கள் முத்தரையரை வெற்றிகொண்டு என்னை அழைத்துப் போக வேண்டும். அப்பொழுதுதான் நம் இருவருக்குமே மதிப்பு.''



''சரி; இன்னொரு காரணம்?''

''பெரிய முத்தரையர் என் தந்தையைப் போன்றவர். அவர் உடல் நிலை சரியில்லை. அவரை விட்டு நான் வர முடியாது.''

ஆதித்தன் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. அவள் இடையைப் பிடித்து அணைத்துக்கொண்டு குளப்படிகளில் ஏறிப் புரவி மீது அவளை ஏற விட்டான். பிறகு தானும் ஏறி கடிவாளத்தைப் பிடித்து புரவியை செந்தலையை நோக்கித் திருப்பினான். அவள் எத்தனை தடுத்தும் கேட்கவில்லை அவன். அவளை முகப்புக் காட்டில் விட்டபின்பே சென்றான். போகும்போது அவன் தலை கவிழ்ந்திருந்தது. பெரும் கவலையைக் காட்டியது. கவலை தன்னைப் பற்றி என்பதை உணர்ந்ததால் தேவியும் பெருமூச்சு விட்டாள்.

–பெரும்பிடுகர் காலடியில் உட்கார்ந்திருந்தபோது இத்தனையும் அவள் சிந்தையில் வலம் வரவே பெருமூச்சும் வெளிவந்தது அவள் நாசியிலிருந்து. ''பெருந்தேவி!'' என்று பெரிய முத்தரையர் மீண்டும் அழைத்து அவள் தலையைக் கோதிவிட்டபோதுதான் அவளுக்குச் சுரணை வந்தது. அவர் பெருந்தேவி என்று அழைத்ததை இம்முறை அவள் ஆட்சே பிக்கவில்லை. தலையைச் சற்றுத் திருப்பினாள். அதைப் பெரும் பிடுகர் தமது முழங்காலில் சார்த்திக்கொண்டார். முதுகையும் செல்லமாகத் தடவினார்.

பெரும்பிடுகரின் முரட்டு சுபாவத்தில் இத்தகைய ஒரு மென்மையும் உண்டு என்பதை அன்றுதான் அவள் உணர்ந் தாள். ஆனால் பெரும்பிடுகர் போக்கினால் பெரும் அனர்த் தங்கள் அவர் குடும்பத்தில் விளையக்கூடும் என்பதை உணர்ந் திருந்ததால் அவள் அழகிய தேகத்தில் சிறிது நடுக்கமும் உண்டாயிற்று.

## 33. புது முடிச்சு

உறையூர் அரண்மனையின் மூன்றாவது உப்பரிகையிலிருந்த தனது பள்ளியறைச் சாளரத்தின் அடித்தளக்கட்டையில் இரு கைகளையும் ஊன்றிய வண்ணம் காவியின் வெள்ளத்தில் கண்களை ஓட்டி நின்ற விஜயாலயன் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அதே சாளரத்தின் மூலம் அதே காவிரியின் வெள்ளக் காட்சியை அவன் பல முறை பார்த்திருந்தாலும், ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் அவனுக்குப் புதுப் புது எண்ணங்கள் எழுவதுண்டு. ஆனால், அன்று நிலைமை முற்றும் மாறாகி புது எண்ணங்களுக்குப் பதில் பழைய எண்ணங்கள் எழுந்து மனத்தை அறுத்துக்கொண்டிருந்ததால் சோழ மன்னன் முகத்தில் சோகத்தின் சாயை மிதமிஞ்சிப் படர்ந்தது.

தனது திருமண நாள் முதல் அந்த இடத்தில் தான் நின்ற போதெல்லாம் தன்னுடன் தனது அழகு மனைவியும் நிற்பாளே யென்பதை எண்ணியதால், எதையும் துச்சமாக மதிக்கும் மன்னன் மனமும் அன்று காலையில் சுக்குநூறாக வெடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பள்ளியறைக்கு மூன்று சாளரங்கள் மூன்றிடங்களில் வைக்கப்பட்டிருந்ததை மனை சாஸ்திரக்காரர்கள் ஆட்சேபித்தும் மனைவிக்கு அது திருப்தியாயிருந்ததால் சாளரங்களை எந்த விதத்திலும் மாற்ற இணங்கவில்லை சோழதேவன்.

காலையில் எழுந்ததும் காலைக் கிரமங்களை முடித்துக் கொண்டதும் அவனும் சோழமாதேவியும் கிழக்குச் சாளரத்தண்டை நின்று கதிரவன் கிரணங்களில் பளிச்சிடும் காவிரி நீரைக் காண்பார்கள். நடுப் பகலில் உணவருந்தும் வேளையில் வடக்கு சாளரத்தண்டை உட்கார்ந்து உச்சி வேளையில் தீட்சண்யத்



துடன் பளபளக்கும் காவிரியைக் கண்டு உக்கிரத்திலும் அதற்குள்ள தனியழகைப் பார்த்துக்கொண்டே உணவருந்துவார்கள்.

மாலை வேளையில் சோழமாதேவியின் அழகு சூரியனின் மஞ்சள் வெயிலில் பொன்மயமாவதையும், அவளுக்கும் காவிரிக்கும் உள்ள ஒற்றுமையையும் அந்தப் பலகணிக்கருகில் நிற்கும்போது உணரும் விஜயாலயன் உலகை மறந்து அவள் தோள்களை வருடுவான். ஒவ்வொரு நாளும் இயற்கையின் விளையாட்டுக்கும் கவர்ச்சிக்கும் தக்கபடி அவன் பஞ்சணை மூன்று சாளரங்களிலும் இடம் மாறுவதுண்டு.

சில இரவுகளில் சந்திரனின் குளிர்ச்சிக் கிரணங்கள் பஞ்சணையில் படுத்துக்கிடக்கும் சோழமாதேவியின் மீது விழுந்து அவளை வெள்ளி மயமாக அடித்துவிடும். அப்பொழுது அவள் பக்கத்தில் உட்கார்ந்து விஜயாலயன் அவள் கவர்ச்சி உடலின் ஒவ்வொரு அம்சத்தையும் விழிகளால் பருகுவான், சித்தத்தால் சிந்திப்பான். சிந்தித்து அவன் வரும் ஒரே முடிவு தனது தேவிக்கு இணை உலகத்தில் யாருமில்லை என்பதுதான்.

அத்தகைய சோழமாதேவியை, நிலவில் படுத்துக் கிடந்த பதுமையை அவன் திரும்பவும் ஒரு நாள் பார்த்தான் உயிரற்ற சிலையாக. மார்பில் புதைந்த கத்தியுடன் அவன் கண்ட காட்சி அன்றும் அவன் நினைவிலிருந்ததால் ஒரு முறை திரும்பி பஞ்சணையைப் பார்த்து மீண்டும் காவிரியை நோக்கினான். அதனால் வெளிப்பட்ட அவன் பெருமூச்சில் சோக உணர்ச்சி சிறிதும் இல்லை. பழிவாங்கும் உணர்ச்சி நிரம்பிக் கிடந்தது.

‘‘அன்னை காவிரி! அந்த அயோக்கியனை எப்படி உன்னைக் கடக்க வழி கொடுத்தாய்?’’ என்றுகாவிரியைக்

கேள்வி கேட்டான். ''குறுகிவிட்ட சோழ ராஜ்யம் உன்னைத் தானே நம்பியிருக்கிறது பாதுகாப்பு எல்லையாக? என்ன பாதுகாப்பை நீ அளித்துவிட்டாய்?'' என்றும் வினவினான். ''அந்த எல்லையை மாற்றியமைக்க வேண்டியது அவசியம். கரிகாலன் காலத்து சோழ சாம்ராஜ்யம் அதைவிடப் பன்மடங்கு அதிகமாக விரியவேண்டும். காவிரியையும் தாண்ட வேண்டும். கடலையும் தாண்ட வேண்டும்'' என்று சற்று இரைந்தே கூறிய விஜயாலயன், திரும்ப பஞ்சணையைப் பார்த்தான். அதில் கிடந்த அந்த மோகனச்சிலையையும் பார்த்தான்.

அந்த மஞ்சள் நிற தந்தச் சிலையை நீண்ட நேரம் உற்று நோக்கி, ''இது இன்னும் எத்தனை ரகசியங்களை உள்ளே வைத்துக் கொண்டிருக்கிறது? பிரித்துப் பார்த்தால்தானென்ன?'' என்று தன்னையே விசாரித்துக்கொண்டான்.

அந்த விசாரணையோடு நில்லாமல் பஞ்சணைக்குச் சென்று அதைக் கையில் எடுத்து அதன் முதுகைத் தடவிப் பார்த்தான். முதுகில் தைக்கப்பட்டிருந்த இடங்கூட மிகுந்த வழவழப்புடன் இருந்ததால் அதைச் செய்த இளஞ்சேட் சென்னியை எண்ணி, அவன் கைவண்ணத்தை எண்ணி, ''மூதாதையே! இந்த சொத்தை விட்டுத்தான் போனாய். அதை ஏன் பிரித்துப் பார்க்க நீ அனுமதிக்கவில்லை?'' என்று மூதாதையைக் கேள்வியும் கேட்டான்.

பிறகு சிலையைத் திருப்பி அதன் முகத்தையும் கவனித்தான். கண்ணை மூடிய சிலையைக் கண்டதும் கண்ணழகியின் தாயின் நினைவுதான் வந்தது விஜயாலயனுக்கு. ''அவளும் இப்படித்தான் இதே மாதிரி மோகனப் புன்னகைதான் எப்பொழுதும் தவழ்ந்து கொண்டிருக்கும்'' என்று எண்ணிய சோழ தேவன், ''அவள் என்னிடமிருந்து எந்த ரகசியத்தையும் வைத்துக் கொள்ளவில்லையே. நீ ஏன் வைத்துக்கொள்ள வேண்டும்?'' என்று சொல்லிக்கொண்டே அதன் முதுகைப் பிரித்துப் பார்த்துவிட எண்ணி இடைக்கச்சையிலிருந்த குறு



வாளை எடுத்து அதன் முதுகின் மெழுகை அகற்றி தையலையும் பிரிக்கத் தொடங்கினான்.

யானையின் நரம்புகளையே ஏதோ ஒரு விதமாகப் பதனப்படுத்திப் போடப்பட்டிருந்த தையல், சிலை முதுகின் மேற்புறத்தில் முடி போடப்பட்டிருந்தது. முடிப்பும் இறுக இருக்கவே விஜயாலயன் குறுவாளின் நுனி கொண்டு அதை மெள்ள நீக்கினான். பிறகு அந்த நுனியாலேயே மெள்ள மெள்ள தையலை அவிழ்த்துக்கொண்டு வந்தான். கடைசி முடிப்பு மிகவும் இறுகி கால வெள்ளத்தில் மெழுகுடன் உருகிச் சிக்கிவிட்டதால் அதைப் பிரிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கவே யாரையாவது ஊசி கொண்டுவரச் சொல்லலாமென்று ''யாரங்கே?'' என்று குரல் கொடுத்தான் சிலையை உற்று நோக்கிய வண்ணம்.

அப்பொழுது கண்ணழகி தோன்றினாள் அறை வாயிலில். ''யாரைக் கூப்பிடுகிறீர்கள்?'' என்றும் கேட்டாள் சிரித்த வண்ணம்.

விஜயாலயன் சட்டென்று கண்களை உயர்த்தினான் சிலையிலிருந்து. உயர்த்தியவன் மிதமிஞ்சிய வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தான். ''கண்ணழகி!'' என்று அதிர்ச்சி குரலிலும் ஒலிக்க அழைத்தான் மகளை.

''ஏன் அப்பா?'' என்று கொஞ்சினாள் கண்ணழகி.

''சற்றுத் திரும்பு'' சோழமன்னன் கட்டளையில் குழப்பம் ஒலித்தது.

கண்ணழகி பேசாமல் திரும்பினாள். விஜயாலயன் மகளை ஊன்றிப் பார்த்தான் நீண்டநேரம். அந்தக் காலை நேரத்தில் நீராடிவிட்டு தலையில் குறுக்குப்பின்னலைப் போட்டுக்கொண்டிருந்த கண்ணழகிக்கும் அவன் கையிலிருந்த மோகனச்சிலைக்கும் இம்மியளவு வித்தியாசமும் இல்லை. தலையை துவட்டிவிட்டு குறுக்குப் பின்னல்

போட்ட குழலின் அடர்த்தியைச் சற்று எடுத்து முன்புறம் போட்டுக்கொண்டாள் கண்ணழகி. விஜயாலயன் பிரமிப்பு உச்சநிலையை அடைந்தது. கண்ணழகியின் மார்புக் கச்சையின் பின்புற முடிச்சின் பட்டுக் கயிறுகள் இரண்டும் பிரிந்து கிடந்தன. எந்த நிலையில் மோகனச்சிலையின் முதுகுத் தையல்கள் பிரிந்திருந்தனவோ அதே நிலையில் அவள் கஞ்சுக முடிச்சுகளும் பிரிந்து கிடப்பதைக் கண்ட விஜயாலயன், ''கண்ணழகி!'' என்று பதட்டத்துடன் அழைத்தான்.

கண்ணழகி பழையபடி திரும்பி அவனுக்கு எதிரில் வந்து நின்று, ''ஏன்?'' என்று கேட்டாள், ஒரு காலைச் சிறிது மடித்தும் நடன பாணியில் நின்றாள்.

''அதே முகம்!அதே பாணி! என்ன ஒற்றுமை!'' என்று வியந்தான் விஜயாலயன். அத்துடன் கேட்டான், ''மகளே! அவசரப்பட்டு வந்துவிட்டாயா?'' என்று.

''ஆம்'' என்று கூறி நகைத்தாள் கண்ணழகி.

அந்த நகைப்பு மிக மதுரமாயிருந்தது. அவன் உள்ளத்தைச் சாதாரண நிலையில் அள்ளியிருக்கும் அந்தச் சிரிப்பு. ஆனால், விஜயாலயன் மனம் வேறு திசையில் ஓடிக்கொண்டிருந்ததால் ரசிக்கும் நிலையை அவன் அறவே துறந்திருந்தான். ஆகவே தொடுக்க முற்பட்டான் அடுத்த கேள்விகளை. ''ஏன் அவசரப் பட்டு வந்தாய்?'' என்று விசாரித்தான்.

கண்ணழகி தந்தையை அன்புடன் நோக்கினாள். ''என்னை நீங்கள் பார்க்க மறுத்தீர்கள், அதனால்'' என்று சொன்னாள்.

''பார்க்க மறுத்தேனா? யார் சொன்னது?'' என்று கேட்டான் விஜயாலயன் வியப்புடன்.

''நீராடிவிட்டு தலைபின்னிக் கொள்ள பணிப்பெண்ணுடன் நந்தவனம் வந்தேன். குறுக்குப்பின்னலைப் பின்னினாள். அப்பொழுது 'மேலே பாருங்கள் அரசகுமாரி'என்றாள் அவள். மேலே பார்த்தேன். சாளரத்திலிருந்து நீங்கள் காவிரியைப்



பார்த்துக்கொண்டிருந்தீர்கள். இருமுறை அப்பா, அப்பா என்று அழைத்தேன். நீங்கள் செவிசாய்க்கவில்லை. என் முதுகில் பட்டுக் கயிறுகளை முடிய முற்பட்டாள் பணிப்பெண். ''வேண்டாம், அப்படியே விடு, 'அப்பா ஏதோ கோட்டையைப் பிடிக்கப் பார்க்கிறார். என்னவென்று நானும் அறிந்து வருகிறேன்' என்றுஅவளிடம் சொல்லிவிட்டு வந்தேன்'' என்று விவரித்தாள் அரசகுமாரி.

விஜயாலயன், கையிலிருந்த மோகனச்சிலையைப் பார்த்தான் ஒரு விநாடி, குறுவாள் நீக்கியிருந்த முடிச்சுகளைத் திரும்பவும் முடிய ஆரம்பித்தான். அது முடியாது போகவே, ''கண்ணழகி இப்படி வா'' என்று மகளை அழைத்து அவளைத் தன் கைகளாலேயே திருப்பி முதுகில் பிரிந்து கிடந்த பட்டுக் கயிறுகளை முடிய முற்பட்டான். கயிறுகளும் முடிய வராமல் நழுவி விடவே கண்ணழகி நகைத்தாள். ''அப்பா! உங்கள் வேலையெல்லாம் தலைகீழாக இருக்கிறதே'' என்றும் நகைப்பின் ஊடே சொன்னாள்.

''தலைகீழாக எதைச் செய்துவிட்டேன்?'' என்று விஜயாலயன் கேட்டான், கண்ணழகியின் அழகிய முகத்தைப் பார்த்த வண்ணம்.

''மோகனச்சிலையின் முதுகு முடிச்சுகளை அவிழ்த்தீர்கள் சிரமப்பட்டு. என் கயிறுகளை முடியப் பார்க்கிறீர்கள். இரண்டும் மாறுபட்ட விஷயங்கள். இரண்டிலும் தோல்வியடைந்தீர்கள்'' என்று கூறினாள் கண்ணழகி.

விஜயாலயன் பதில் சொல்லியிருப்பான், வேறொருவர் குறுக்கிடாதிருந்தால். ''முடிச்சுப் போடுவதும் அவிழ்ப்பதும் நம் கைகளில் இல்லை. இரண்டையும் விதி செம்மையாகச் செய்கிறது'' என்ற குரல் அறை வாயிற்படியில் கேட்டது. தந்தையும் மகளும் திரும்பி நோக்கியபோது அச்சுதப் பேரறையர் உள்ளே நுழைந்தார். ''மன்னர் மன்னிக்க வேண்டும். தந்தையும்

மகளும் இருக்கும்போது தலையிட விருப்பமில்லைதான். இருப்பினும், அரசாங்க அலுவல், முறையை மீற வைக்கிறது'' என்றார் மன்னனுக்கும் இளவர சிக்கும் தலைவணங்கி.

விஜயாலயன் தனது முதலமைச்சரை நோக்கினான். ''முடிச்சைப் பற்றி ஏதோ சொன்னீர்களே?''என்று கேட்டான்.

''ஆம். ஆதித்த சோழர் விஷயம் அது. இருந்தாலும் மன்னரும் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்றார் முதலமைச்சர்.

விஜயாலயன் எழுந்திருந்தான் பஞ்சணையிலிருந்து கையில் சிலையுடன். ''ஆதித்தன் விஷயமா!'' என்று வியப்புடன் வினவினான் சோழதேவன்.

''ஆம்''– மிகுந்த மரியாதையுடன் சொன்னார் அச்சுதர்.

''எங்கே அவன்?''

''வந்துகொண்டிருக்கிறார்.''

இதை அமைச்சர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே படிகளில் தடதடவென்று ஆதித்தன் ஏறிவரும் சத்தம் பலமாகக் கேட்டது.

''மகன் உற்சாகத்தில் வருகிறான்'' என்றான் விஜயாலயன்.

''காரணம் இருக்கிறது?'' என்றார் அச்சுதர்.

''என்ன காரணம்?''– மன்னன் கேள்வியில் சந்தேகம் இருந்தது.

''புது முடிச்சு, புது சிக்கல்'' என்ற அச்சுதர் பதிலில் சந்தேகம் இல்லை.



# 34. மன்னனும் இரு செல்வங்களும்

அச்சுதப் பொற்கொல்லராயிருந்து அச்சுதப் பேரறையராக மாறிவிட்ட சோழநாட்டு முதலமைச்சர் புது முடிச்சு, புதுச் சிக்கல் என்று எதைச் சொல்கிறார் என்பது விஜயாலயனுக்குப் புரியாவிட்டாலும், அதைப் பற்றி அவன் லவலேசமும் விசாரிக்காமல் புதல்வனான ஆதித்தன் வரவுக்காகக் காத்திருந்தான். உப்பரிகைப் படிகளை அனாயாசமாகக் கடந்து வந்து ஆதித்தன் பெரும் உவகையுடன் அறைக்குள் நுழைந்து ''அப்பா!'' என்று அன்புடன் அழைத்துக் கொண்டே விஜயாலயனை அணுகவே அவன் ஆதித்தனை இறுக அணைத்துக் கொண்டார்.

சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்ட ஆதித்தன் வாலிப வயதை எட்டியுங்கூட அவனை விஜயாலயன் சிறு குழந்தையாகவே பாவித்து வந்ததால் அவன் சில நாட்கள் வெளியூர் போய் வந்தாலும் அவனைக் குழந்தைபோல் அணைப்பது சோழ தேவனுக்கு வழக்கமாயிருந்தாலும், கண்ணழகிக்குப் புதுமையாயிருந்ததால், ''அப்பா! அண்ணன் இன்னும் சிறு குழந்தையல்ல'' என்று சுட்டிக் காட்டினாள்.

அதை அப்பனோ மகனோ கவனித்ததாகத் தெரியவில்லை. சில நிமிடங்களுக்குப் பிறகே இருவரும் பரஸ்பர அணைப்பிலிருந்து பிரிந்தார்கள். பிரிந்ததும் கண்ணழகியை நோக்கிய ஆதித்தன், ''அப்பா! இவள்தானே...'' என்று கேட்க முற்பட்டதும் ''உன் தங்கை'' என்று கண்ணழகி வார்த்தையை முடித்தாள், சிறிது நகைக்கவும் செய்தாள்.

''எதற்காக நகைக்கிறாய்?'' என்று வினவினான் ஆதித்தன்.

''குழந்தையும் தந்தையும் பிரிந்துவிட்டதைக் கண்டு நகைத்தேன்'' என்றாள் கண்ணழகி.

''இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று வினவினான் ஆதித்தன்.

''எனக்கும் அவர் தந்தைதான். இதுவரை அவர் என்னை இப்படி அணைத்ததில்லை'' என்றாள் கண்ணழகி.

''நீ பெண்.'

''அதனாலென்ன?''

''உன்னை அவர் அணைக்க முடியாது.''

''வயது வந்தபின் உங்களை அணைக்கலாமா?''

''நான் ஆண்.''

''அதனால் தனி உரிமைகள் உண்டு போலிருக்கிறது?''

''ஆம். ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தனையோ வித்தியாசமுண்டு.''

இதைக் கேட்ட கண்ணழகி மீண்டும் நகைத்தாள். ''அண்ணா! இதை இத்தனை நாள் கழித்துத்தான் புரிந்து கொண்டீர்களா?'' என்றும் வினவினாள்.

தனது குழந்தைகள் தர்க்கத்தை அதுவரையில் கேட்டுக் கொண்டிருந்த விஜயாலயன், ''ஆதித்தா! கண்ணழகியிடம் வம்பு வைத்துக்கொள்ளாதே. அவளைப் பேச்சில் வெல்ல யாராலும் முடியாது'' என்றார், புன்முறுவலும் கொண்டார்.

ஆதித்தன் தனது தந்தையை நோக்கினான் உற்று. ''அப்பா! தங்கை இத்தனை அழகாயிருப்பாளென்று நீங்கள் சொல்லவில்லையே?'' என்று வினவினான்.

''வஞ்சி நகரில் இவளைச் சந்திக்குமுன்பு எனக்கே தெரியாது'' என்றான் விஜயாலயன்.

''வஞ்சி நகர்ப் பெண்களெல்லோருமே வாயாடிகளோ?'' என்று வினவினான் ஆதித்தன்.



அதுவரையில் வாளாவிருந்த அச்சுதர் உரையாடலில் கலந்துகொண்டு ''செயலிலும் சிறந்தவர்கள் இருக்கிறார்கள்'' என்று கூறினார்.

ஆதித்தன் சரேலென்று சக்கர வட்டமாகச் சுழன்று அச்சுதரை நோக்கினான். ''எங்கேயிருக்கிறார்கள்?''என்று வினவினான்.

அச்சுதர் இளவரசன் திகைக்கும்படியாக பதில் கூறினார், ''எங்கும் இருக்கிறார்கள். ஆனால், முத்தரைய பெண்கள் செயலில் மிக வல்லவர்கள் என்று கேள்வி'' என்று.

ஆதித்தன் சில விநாடிகள் பேசாமல் திகைத்து நின்றான். ''நீங்கள் சொல்வதை விளக்கமாகச் சொல்லலாம்'' என்றான் திகைப்பை உதறிக்கொண்டு.

''இப்பொழுது எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று அச்சுதர் வினவினார்.

''செந்தலையிலிருந்து.''

''நேராகவா?''

''இல்லை, ஒரு நாள் தாமதித்து வருகிறேன்.''

''ஏன்?''

இளவரசன் சிறிது சிந்தித்தான். ''ஒருவர் ஆபத்தில் சிக்காதிருக்கிறாரா என்று அறியவேண்டியிருந்தது'' என்று சொன்னான் சிந்தனையின் ஊடே. அவன் சிந்தையில் எழுந்து மோகன நடை நடந்தாள் முத்தரையர் பணிப்பெண். அதனால் அவன் பார்வை எங்கோ போய்விட்டதாகத் தெரிந்ததால் அடுத்த கேள்வியை வீசினார் அச்சுதர். ''யாரவர்?'' என்று.

இதற்குப் பதிலில்லை இளவரசனிடமிருந்து. அச்சுதரே சொன்னார், ''இளவரசரே! உங்களைத் தப்புவித்தது செயலிலும் வீரத்தைக் காட்டும் ஒரு பெண். அவளை முத்தரையர்

தண்டிக்காதிருக்கிறார்களா என்பதை அறிய தங்கினீர்கள்'' என்று கூறினார்.

திடுக்கிட்டு சுயநிலைக்குத் திரும்பினான் ஆதித்தன். ''அச்சுதரே! என் மீதும் வேவு பார்க்கிறீரா?''என்று கேட்டான்.

''அது என் கடமை'' என்றார் அச்சுதர்.

''கடமையா!''

''ஆம். இளவரசர் சொல்லாமல் நாட்டைத் துறந்து எதிரி எல்லைக்குச் சென்றுவிடும்போது அவரையும் அவர் நலத்தையும் கண்காணிப்பது எனது கடமை. காணாமற்போன இதயகுமாரனைக் கண்டுபிடிக்க ஒற்றர்களை அனுப்பினேன். அப்பொழுது உங்கள் கதையும் தெரிந்தது'' என்ற அச்சுதர் ''இனி இந்தக் குடும்பப் பேச்சில் கலந்துகொள்வது தவறு. எதற்கும் சகலத்தையும் ஒளிக்காது தந்தையிடம் சொல்லுங்கள்'' என்றுஅறையிலிருந்து போகத் திரும்பினார்.

''சகலத்தையும் என்றால் எதைப்பற்றிக் கூறுகிறீர்கள்?'' என்று ஆதித்தன் சிறிது கோபத்துடன் கேட்டான்.

அறையிலிருந்து போக முயன்ற அச்சுதர் திரும்பி இளவரசரை நோக்கினார். ''புது முடிச்சைப் பற்றி'' என்றும் சொன்னார்.

''புது முடிச்சா?'' என்று ஆதித்தன் ஏதும் புரியாமல் விழித்தான்.

''உங்களுக்கும் முத்தரையர் மகளுக்கும் ஏற்பட்டிருக்கும் புதுப் பிணைப்பு. அவளை நீங்கள் மறந்துவிடுவது நல்லது. இல்லையேல் சிக்கல்கள் பல ஏற்படும்'' என்று சொல்லம்புகளை வீசிய அச்சுதர், மன்னனுக்குத் தலைவணங்கிவிட்டு அறையை விட்டு அகன்றார்.

அவர் சென்ற பின்பு அந்த அரண்மனையில் மௌனம் நிலவியது. நீண்ட நேர மௌனத்துக்குப் பிறகு அந்த நிலை



யைக் கண்ணழகியே உடைத்தாள். ''அண்ணா! அவள் பேரழகியா?'' என்று விசாரித்தாள் மெதுவாக.

ஆதித்தன் பதில் சொல்லவில்லை. கண்ணழகி அண்ணனுக்கு அருகில் வந்து அவன் தோள்மீதுகையை வைத்தாள். ''ஏன் பதில் சொல்ல மறுக்கிறாய் அண்ணா? வீரர்கள் வெளியிடங்களில் காதல் கொள்வது வரலாற்றில் நிரம்பிக் கிடக்கிறதே. இதில் மறைவுக்கு ஏதுமில்லையே!'' என்று ஆறுதலாகச் சொன்னாள்.

''எதிரி மகள்'' என்றான் ஆதித்தன்.

''உன்னிடம் காதல் கொண்ட பின்பு அவள் எப்படி எதிரி மகளாவள்? இந்த வீட்டு எஜமானி அல்லவா?'' என்றாள் கண்ணழகி.

''இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த விஜயாலயன், ''ஆதித்தா!'' என்று மகனை மெதுவாக அழைத்துவிட்டுப் பக்கத்தில் இருந்த பஞ்சணையில் அமர்ந்து கொண்டான்.

அவனை இரு குழந்தைகளும் அணுகி அவன் முன்பாக நின்றுகொண்டார்கள். ''அப்பா!'' என்றான் ஆதித்தன்.

''நீ எதற்காகச் செந்தலை சென்றாய்?'' என்று வினவினான் விஜயாலயன்.

''நீங்கள் வஞ்சியைக் கைப்பற்றச் செல்வதாகச் சொல்லிச் சென்றீர்கள். அடுத்து நாம் கைப்பற்ற வேண்டியது தஞ்சை என்பதால் அங்குள்ள நிலைமையைக் கவனிக்கச் சென்றேன். தஞ்சையை அடைய செந்தலையை அடக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். ஆகவே அதன் நிலையை அறிய அங்கு சென்றேன். செந்லை ஒரு பெரிய இரும்புக் கோட்டை. சுவரால் செய்யப்பட்ட கோட்டை எதுவும் அங்கு இல்லை. ஆனால், பெரும் வீர சமுதாயத்தால் காக்கப்படுகிறது. கொலை, கொள்ளை எதற்கும் துணிந்து ஒரு பலமான படை அங்கிருக்

கிறது. அதை உடைத்தாலொழிய தஞ்சையை நாம் கைவசப் படுத்தினாலும் நிலைக்காது''என்றான் ஆதித்தன்.

ஆதித்தன் புத்தி சூட்சமத்தை உள்ளூர வியந்துகொண்டான் விஜயாலயன். தான் தஞ்சையைக் கைப்பற்றத் தீர்மானித்திருப்பதை மைந்தன் முன்கூட்டியே புரிந்துகொண்டு நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டதை நினைத்துப் பெருமகிழ்ச்சியும் கொண்டான். முடிவில் கேட்டான், ''ஆதித்தா! அத்தகைய இரும்புக் கோட்டையில் எத்தனை நாள் தங்கினாய்?'' என்று.

எதற்காகத் தந்தை அதைக் கேட்கிறார் என்பதை உணராமலே சொன்னான் ஆதித்தன், ''பதினைந்து நாட்களுக்கு மேல்'' என்று.

விஜயாலயன் புரிந்தகொண்டதற்கு அடையாளமாகச் சிரத்தை ஆட்டினான். ''அதாவது'' என்று ஏதோ சொல்ல முற்பட்டதும், ''தாங்கள் வஞ்சியைக் கைப்பற்றியதாகச் செய்தி கிடைத்ததும் செந்தலை சென்றேன்''– இடைமறித்துக் கூறினான் ஆதித்தன்.

விஜயாலயன் அடுத்த கேள்வியை வீசினான், ''எப்படித் தங்கினாய்?'' என்று.

''மாறு வேடத்தில். முத்தரைய காவல் வீரர்களில் ஒருவனாக'' என்றான் மகன்.

''எப்படித் தப்பினாய்?''

''உதவி கிடைத்தது.''

''அப்படியானால்?''

''சிறையில் அடைக்கப்பட்டேன்.''

விஜயாலயன் முகத்தில் கவலைக் குறி படர்ந்தது. ''சாகசச் செயல்'' என்றான் கவலை குரலிலும் ஒலிக்க.



இந்தச் சமயத்தில் இடைபுகுந்தாள் கண்ணழகி. ''அண்ணா! நீ அங்கிருக்கும்போது யாராவது வந்தார்களா?'' என்று வினவினாள், நிலத்தை நோக்கினாள்.

ஆதித்தன் கண்கள் குழப்பத்துடன் நோக்கின சகோதரியை. ''வந்தான் நமது படைத்தலைவன்'' என்றான்.

''இதயகுமாரனா?'' என்று வியப்புடன் வினவினான் விஜயாலயன்.

''ஆம்.''

''இதை அச்சுதர் சொல்லவில்லையே!''

''தெரிந்திருக்காது. அது அரண்மனைக்குள்ளே நடந்த கதை.''

கண்ணழகி கேட்டாள்,''இப்பொழுது அவர் எங்கிருக்கிறார்?'' என்று.

''முத்தரையர் அரண்மனையில்.''

''அவர்கள் அவரைக் கொன்றுவிடுவார்களே.''

''மாட்டார்கள். பெரும்பிடுகர் அவனைத் தனது மகன் போல் பாதுகாத்து வருகிறார்'' என்ற ஆதித்தன் ''அப்பா! முத்தரையர்களில் நல்லவர்களும் இருக்கிறார்களே'' என்றான்.

விஜயாலயன் எழுந்திருந்தான் பஞ்சணையை விட்டு. ''எந்த சமுதாயத்திலும் நல்லவர், தீயவர் உண்டு''என்று கூறி விட்டு, ''இருப்பினும் அவர்களுக்கும் நமக்கும் ரத்தப் பகை இருக்கிறது. தஞ்சை மீது படையெடுக்க ஏற்பாடுகளைச் சீக்கிரம் செய்ய வேண்டும். பிற்பகலில் அச்சுதரைக் கலந்து பேசுவோம்'' என்றான் சோழதேவன்.

''அவரை விடுவிக்கவேண்டுமே அப்பா. படையெடுத்தால் அவரைக் கொன்றுவிடுவார்களே'' என்றாள் கண்ணழகி.

''அவளுக்கும் தீங்கு ஏற்படலாம். கொஞ்சம் நிதானிப் போமா?'' என்றான் ஆதித்தன்.

தனது இரு செல்வங்களைவும் நோக்கிப் புன்முறுவல் கொண்டான் விஜயாலயன்.

# 35. பிரதிஷ்டை

மகனும் மகளும் காதலில் சிக்குண்ட காரணத்தால் தஞ்சைப் படையெடுப்பைச் சிறிது தள்ளிப்போடும்படி தன்னைக் கேட்டுக்கொண்டதும் விஜயாலய சோழதேவன் சிறிது புன்சிரிப்பைக் காட்டினாலும், படையெடுப்பை ஒத்திப்போட சிறிதளவும் இஷ்டமில்லாத இதயத்துடன் இரு செல்வங்களுக்கும் அந்த அறையிலிருந்து போக உத்தரவு கொடுத்தான். அவர்கள் சென்றதும் பஞ்சணையில் உட்கார்ந்த விஜயாலயன் மீண்டும் மோகனச்சிலையைக் கையிலெடுத்து அதன் முதுகையும், முதுகில் தன்னால் பிரிக்கப்பட்ட நரம்புத் தையலையும் உற்று நோக்கினான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவனாய் மீதியிருந்த இரண்டு மூன்று தையல்களையும் ஊசிகொண்டு பிரித்து முதுகின் தந்தப் பட்டைகளைத் தனது குறுவாள் நுனியால் லேசாக விலக்கினான்.

மோகனச்சிலையின் முதுகின் தோல் போன்ற மெல்லிய யானையின் தந்தப் பட்டைகளைக் குறுக்கே அடைத்து நின்றது மேலும் ஒரு பட்டை.அதையும் லேசாகக் குறுவாள் கொண்டு நீக்கி மெள்ள பட்டை நொறுங்காமலும் விரியாமலும் அதை மேலே எடுத்தான். அந்தப் பட்டையின் கீழே நான்கு சிறு மாணிக்கங்கள் செக்கச்செவேலென்று கதிர்களை வீசியதால் மன்னன் கண்கள் ஒரு விநாடி பார்வை இழந்தன. மறு விநாடி அவன் கண்கள் அந்த மாணிக்கங்களின் ஒளிவீச்சுக்குத் தங்களைச் சரிசெய்து கொண்டதும் மன்னன் அவற்றைச் சிறிதும் அலுக்காமல் மோகனச்சிலையைப் படுக்கையில் குப்புறக் கிடத்திவிட்டு அறைக் கதவைத் தாளிட்டுத் திரும்பி னான்.திரும்பியபின்பு முதுகிலிருந்து எடுத்த தந்தப் பட்டை களை ஆராய்ந்தான். பட்டைகள் மிக மெல்லியதாகத்

துணிபோல் வளையக்கூடிய வண்ணம் பதனப்படுத்தப்பட்டிருந்தன. சிலையில் அவை திணிக்கப்படடு ஆறு நூற்றாண்டுகள் ஓடிவிட்டபோதிலும் அவற்றின் வழவழப்போ மஞ்சள் நிற அழகோ சிறிதும் மாறுபடவில்லையென்பதை சோழ மன்னன் கவனித்தான்.

ஆறு பட்டைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே பட்டை போல் காட்சியளிக்கும்படி செய்யப்பட்டிருந்தாலும் மொத்தத்தில் ஏதோ ஓலைச்சுவடி போன்ற ஒரு அமைப்பை அவை பெற்றிருந்தன. இந்தத் தந்தச் சுவடிகளை ஒவ்வொன்றாகப் புரட்டினான் விஜயாலயன். ஆனால், அந்தப் பட்டைகள் எதிலும் எந்தவித ரகசியமும் குறிக்கப்படாமையால் அவை முதுகுக்குப் புஷ்டியளிக்கவே புகுத்தப்பட்டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். ஆகையால் இதை நான் ஏன் பிரித்தேன் என்ற எண்ணத்துடன் அவற்றை மீண்டும் இணைத்துப் பழையபடி முதுகில் புதைத்துவிடலாமென்று எண்ணிய சமயத்தில் சட்டென்று ஒரு யோசனை தோன்றவே மோகனச் சிலையிலிருந்த மாணிக்கங்களைக் கையில் கொட்டிக்கொண்டு எழுந்திருந்தான். அவற்றைப் பஞ்சணையில் வைத்துவிட்டுப் பக்கத்தில் தந்தப் பட்டைகளையும் வைத்தான். ஒரு விநாடி பெரிதும் பிரமித்து நின்றான்.

மாணிக்கங்களின் செவ்விய ஒளிவீச்சில் பக்கத்திலிருந்த தந்தப் பட்டைகளில் பச்சை நிற எழுத்துக்கள் தோன்றலாயின. மாணிக்கங்களுக்கும் பட்டைகளுக்கும் ஏதோ சம்பந்தமிருக்க வேண்டுமென்று உணர்ந்துகொண்ட சோழ மன்னன் பஞ்சணைக் கருகில் தரையில் மண்டியிட்டு உட்கார்ந்து மாணிக்கங்களின் ஒளியில் முதல் பட்டையை எடுத்து நீட்டினான். சிறிதும் அழியாது அன்றுபோல் தீட்டப்பட்ட பச்சை நிற எழுத்துக்கள் அவன் கண்களுக்கு மிகத்தெளிவாகத் தென்பட்டன. முதல் பட்டையில் தீட்டப்பட்டிருந்தன, ''புகார் மன்னன் இளஞ்சேட் சென்னி தனது பரம்பரைக்கு எழுதும் மடல்'' என்ற சொற்கள்.



அந்தச் சொற்களுக்குக் கீழே பதினேழு சின்னஞ்சிறு சூரிய பிம்பச் சித்திரங்கள் தெரிந்தன. அவற்றின் அழகை நீண்ட நேரம் பருகிய விஜயாலயன், அந்தத் தந்த ஓலையைப் புரட்டினான். பின்பக்கத்திலிருந்து தொடர்ச்சியாக வாசகங்கள் சின்னஞ்சிறு எழுத்துக்களில் தெரிந்தன. ஒவ்வொன்றிலும் ஆறு வரிகள் இருந்தன. பக்கங்களுக்குத் தமிழ் இலக்கங்களும் கொடுக்கப்பட்டிருந்தன.

அந்தப் பக்கங்களை மிக மெதுவாக ஊன்றிப் படித்தான் விஜயாலயன். அவற்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

''இளஞ்சேட் சென்னி சொல்கிறேன், கேள். இதை ஒருவன் தான் பிரிக்க முடியும். அவன் பெயருக்கும் வெற்றிக்கும், பொருத்தமிருக்கும் அந்த வெற்றி பொருள்படும் படியாக வேறு மொழியில் இருக்கும். அவன் இதைக் கேட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்தில் பேரரசனாவான். அவன் இடும் வித்து சோழப் பேரரசை நிறுவும், பெருக்கும். அடுத்த பதினொரு தலைமுறைகளில் சோழர் அரசு பெரிதும் விரிந்து கடலுக்கு அப்பாலும் செல்லும். அப்படி வித்திடும் எனது பரம்பரைச் செல்வன் வேறு ஆசாபாசங்களுக்கு இடமளிக்க மாட்டான். கர்ம வீரனாகச் செயல்புரிவான். அந்த சாம்ராஜ்யத் தலைநகரம் இப்போதுள்ள இரு தலைநகரங்களான புகாரிலும் இருக்காது, உறையூரிலும் இருக்காது. இந்தப் பட்டையை அவன் தொடும் காலத்தில் புகார் சீரழிந்து கிடக்கும். உறையூர் பலவீனப்பட்டுக் கிடக்கும். ஆகவே இரண்டையும் அவன் துறந்து வேறு நிலையான இடத்தில் தலைநகர் அமைப்பான். அந்தத் தலைநகரில் பல அரசரும் சோழர்களிடம் தஞ்சமடையவார்களாதலால் அது தஞ்சை எனப்படும். இந்த ஓலையை என் குலத்தான் கையிலெடுக்கும் வரை தமிழகம் இருளில் மறைந்து கிடக்கும். இதை அவன் எடுத்தபின்பு இந்த மாணிக்கங்களின் ரத்த ஒளி போல் எதிரிகள் ரத்தம் தமிழகத்தில் பெருகியோடும். இருந்த இருள் அந்த ஒளியில்

அழியும். இந்த சிலையும் நாகத்தின் ரத்த பலியால் கண்டெக்கப்படும். அதைக் கண்டெப்பவன் பெயர் வரலாற்றில் வராது. நாகசர்ப்ப சாபம் அது. ஆனால் அவன் வாள் சோழப் பேரரசை நிறுவ உதவும்.''

அந்த ஆறு பட்டைகளில் இவ்வளவுதானிருந்தது. கடைசிப் படையின் பின்புறத்தில் ஒரு குறிப்பு மட்டும் இருந்தது. ''இந்தச் சுவடிகளைப் பழையபடி சிலையில் மறைத்துத் தைத்துவிடு. கிழக்கே கடலருகில் ஒரிடத்தில் புதைத்துவிடு. அந்த இடத்துக்கு நாகப்பட்டினம் என்று பெயர் வரும். மீண்டும் இது நாகதேவதையால் பாதுகாக்கப்படும். இந்த வரிகள் தமிழ் தந்த முனிவர் அகத்தியர் நாடியிலிருந்து எடுக்கப்பட்டவை'' என்று காணப்பட்டது குறிப்பில். கீழே பதினொரு சூரிய பிம்பங்களும் காணப்பட்டன. அதில் பதினொரு தலைமுறைகளின் அரசர் பெயர்களும் மிக நுணுக்கமாகக் குறிக்கப்பட்டிருந்தன. அவற்றின் தலையில் இருந்தது ஆதித்தன் என்ற பெயர். ''இந்த சிலை என் தாயின் உருவம் பெற்றது'' என்றும் இருந்தது.

இந்த அற்புதத்தைப் படித்த விஜயாலயன் நெடுநேரம் மண்டியிட்ட நிலையிலிருந்து எழுந்திருக்கவில்லை. மீண்டும் மீண்டும் இளஞ்சேட் சென்னியின் தீர்க்கதரிசனம் அவன் புத்தியில் நடமாடி பெரும் பிரமிப்பை அளித்தது. ''ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்பாக வரப்போவதைச் சொல்ல ஒரு நாடி இருக்குமானால் அது தமிழ்நாட்டுக்குச் சொத்து. அதை கண்டுபிடிக்க வேண்டும்'' என்று தன்னுள் சொல்லிக் கொண்டான். பிறகு சிலைக்குள் அந்தத் தந்த பட்டைகளைச் சரியாக அடுக்கி மிக மெதுவாகத் திணித்தான். பிறகு பயபக்தியுடன் அதன் முதுகையும் தைத்தான் பழையபடி. பிறகு கீழே விழுந்திருந்த மெழுகுத் தூள்களைக் கையால் திரட்டிக் கொண்டு அறைச் சாளரத்தின் மூலம் வெயிலில் காட்டினான். அந்த சாதாரண வெயிலுக்கும் மெழுகு உருகும் அற்புதத்தைக் கண்ட சோழ தேவன் அதை மீண்டும் சிலையின் முதுகில் தடவி அழுத்தினான்.



அதற்குப் பிறகுதான் கதவைத் திறந்து அமைச்சரை அழைத்தான். அவன் அழைப்பைக் கேட்ட இரு காவலர் அமைச்சரை அழைக்க ஓடினார்கள். சற்று நேரத்தில் அமைச்சரும் வந்தார், அரச மக்களும் வந்தார்கள். அவர்கள் மூவரையும் நோக்கிய விஜயாலயன், ''நீங்கள் அனைவரும் நீராடியாகிவிட்டீர்களா?'' என்று விசாரித்தான் சற்று சலனப் பட்ட குரலில்.

''நீராடி விட்டோம் '' என்று மற்றவர்களுக்குப் பதிலாக ஆதித்தனே பேசினான்.

''சரி, எல்லோரும் பூஜாக் கிரகத்துக்கு வாருங்கள்'' என்று அழைத்துக் கொண்டு உப்பரிகைப்படிகளில் இறங்கிச் சென்றான் விஜயாலயன்.

மூவரும் அறையில் வந்தபோதே மன்னன் கண்களில் ஏதோ ஒரு அற்புத ஒளி இருப்பதைக் கண்டார்கள். அவன் பார்வையில் மட்டுமின்றி நடையிலும் பிரமிப்பும் ஏதோ ஒருவித நடையிலும் கனவும் இருப்பதை மூவரும் பார்த்தார்கள். ஆனால், யாரும் அதைப்பற்றி மன்னனைக் கேட்கவில்லை. கனவில் நடப்பவன்போல் மோகனச்சிலையைக் கைகளில் ஏந்தி முன்னே மன்னவன் நடக்க, பின்னால் மற்ற மூவரும் நடந்து சென்றார்கள். நேராக பூஜை அறையை நாடிய மன்னன் சட்டென்று அதன் வாயிலிலேயே நின்று எதையோ உற்றுக் கேட்டான். அமைச்சர் காதில் கூட அந்த ஒலி கேட்டதால் அவரும் பிரமித்து நின்றார். வெளியே பல சங்குகள் முழங்கும் ஒலி கேட்டது. அந்த ஒலி வரவர வலுத்து அரண்மனையை அடைந்தது. பெரிதாக யாரோ வேதம் சொல்லும் கீதம் அரண் மனை வாயிலை ஆக்கிரமித்தது.

அரசன் அமைச்சரை நோக்கினான். அமைச்சர் அதன் குறிப்பறிந்து வேகமாக வெளியே நடந்தார். அரண்மனைப் பெருவாயிலில் நினைக்கவும் முடியாத விசித்திரத்தைக்

கண்டார். அங்கு சங்கரநாரயணன் நின்று கொண்டிருந்தார் பத்து வேதியர்களுடன். அமைச்சரைக் கண்டதும், ''அச்சுதரே! எங்களைப் பூஜை அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

அச்சுதர் அவர் திருவடிகளில் வணங்கினார். பிறகு ஏதும் பேசாமல் வழிகாட்டி முன்சென்றார். சங்கரநாராயணன் வேதத்தைப் பலமாகச் சொல்லிக்கொண்டு பின்தொடர்ந்தார். பூஜை அறைக்கு முன்பு வந்ததும், ''சோழ சாம்ராஜ்யாதிபதியே நீ நீடுழிவாழி என்று வாழ்த்தி விட்டுக் கைகளை நீட்டி ''அந்தச் சிலையை இப்படிக் கொடு'' என்று கேட்டார்.

''சேரமன்னர் குருநாதரே! இங்கு எப்பொழுது வந்தீர்கள்? எதற்காக?'' என்று கேட்டான் சோழன்.

''இந்த மாதாவைப் பிரதிஷ்டை செய்ய. உன் சாம்ராஜ்யத் துக்கு அஸ்திவாரக் கல் நட'' என்றார் சங்கர நாராயணன்.

சோழ தேவன் மிதமிஞ்சிய பிரமிப்பால் பேசவில்லை. சிலையை அவர் கையில் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்ட சங்கரநாராயணன். தலையைத் திருப்பித் தன் பின்னால் வந்திருந்த வேதியருக்கு ஏதோ சைகை செய்ய, வேதியர்கள் பெரும் கோஷத்துடன் மந்திரங்களை ஓதிக் கொண்டு கைகளி லிருந்த கமண்டலங்களிலிருந்த காவிரிநீரைப் பூஜை அறையில் தெளித்தார்கள். பிறகு சங்கரநாராயணன் சிலையுடன் பூஜை அறையில் நுழைந்து சிலையை அங்கிருந்த சுடலையாடும் சிவமூர்த்தியின் திருவடிகளில் வைத்தார். பிறகு பிரதிஷ்டா மந்திரங்களை ஓத முற்பட்டார்.

அப்பொழுது ஒரு சந்தேகம் கேட்டான் விஜயாலயன். ''குருநாதரே! கங்கா ஜலம் கொண்டல்லவா பிரதிஷ்டைக்குச் சுத்தி செய்வது வழக்கம்'' என்று. வேதமந்திரங்களை ஓதமுற் பட்ட சங்கரநாரயணன், சங்கரவர்த்தி! கங்கையினும் புனித மானது காவிரி. அவள் மகா பதிவிரதை. எந்த அகத்திய நாடியி லிருந்து உன் குலத்தின் பிற்காலம் எழுதப்பட்டதோ அந்த



அகத்தியரின் தேவிதான் காவிரி. அவள் அளிக்கும் உயிர் நீரைவிட சுத்தமானது உலகத்தில் கிடையாது'' என்று கூறி விட்டு மற்ற வேதியருடன் மந்திரங்களை ஓதினார். சிலைப் பிரதிஷ்டை முடிந்ததும் மன்னனுக்கும் மற்றோர்களுக்கும் தனது கமண்டல தீர்த்தையும் பூஜா புஷ்பங்களையும் பிரசாத மாக வழங்கினார். பிறகு மன்னனை நோக்கி, ''மன்னவா! இது நாகப்பட்டினம் செல்ல காலம் வரும்போது நானே வந்து எடுத்துப்போகிறேன். அதுவரை இதை யாரும் தொட வேண்டாம்'' என்று உத்தரவிட்டார். மேலும் சொன்னார், ''மன்னவா! விஜயாலயா! உன் திக் விஜய காலம் வந்து விட்டது, நாளைக்கே தஞ்சைமீது படையெடுத்துச் செல். தாமதிக்காதே'' என்று.

மன்னனும் மந்திரியும் மக்களும் பிரமித்து வாயடைத்து நின்றனர். அடுத்துப் புன்முறுவல் செய்தார் சங்கரநாராயணன் ''அஞ்சாதே! உன் படைத்தலைவன் நாளைக்கு வந்து சேரு வான்'' என்றார்.

மன்னன் பிரமை அளவு மீறிவிட்டதால் அவன் ஏதும் பேச வில்லை. ''ஆக்ஞை குருநாதரே!'' என்று தலைவணங்கினான்.

அடுத்த நாளே உறையூர் போர்க்கோலம் பூண்டது. சங்கர நாராயணன் சொன்னபடி இதயகுமாரனும் வந்து சேர்ந்தான். வந்த நிலைதான் சரியில்லை.

# 36. காதலும் வெட்கமும்

மறுநாள் அரண்மனையின் மேல் உப்பரிகையிலிருந்த வடக்குப்புறத் தாழ்வரையிலிருந்து சோழர்பெருமான் கோட்டை வாசலை நோக்கிக் கொண்டிருந்தபோதுதான் அந்த விசித்திரம் நிகழ்ந்தது. முதலில் விஜயாலயன் கோட்டை வாசல் மூலம் வந்த மூன்று பேர் கொண்ட பவனியைக் கவனிக்கவில்லையென்றாலும் திடீரென்று குழுமிய மக்கள் கூட்டத்தாலும் இரைச்சலாலும் சற்றே தனது சிந்தனையிலிருந்து மீண்டு கோட்டை வாயிற்புறத்தில் கண்களை ஓடவிட்டான்.

அங்கு ஒற்றைப் புரவி பூட்டிய சிறு ரதத்தில் ஒரு மனிதனை யாரோ ஒருவன் தாங்கிப் பிடித்து வர, புரவியின் கயிறுகளைப் பிடித்து ஒரு பெண் ரதத்தை நிதானமாக நடத்தி வந்ததையும், ரதத்தைச் சூழ்ந்த மக்கள் கூட்டத்தை அந்தப் பெண் அதிகார ஒலிகளால் கலைத்து ரதத்தை அரண்மனையை நோக்கிச் செலுத்தி வந்ததையும் கவனித்த விஜயாலயனுக்கு வருவது யாரென்று புரியாவிட்டாலும் ரதத்தில் படுத்திருப்பவன் நோய்வாய்ப்பட்டவன் என்பதை மட்டும் புரிந்து கொண்டான்.

தவிர, அந்த ரதம் நேராக அரண்மனைக்கு வந்து நின்றதையும், அப்படி நின்ற மறுவிநாடி அரண்மனையிலிருந்து தனது மகனான ஆதித்தன் வேகமாக ஓடி, வீரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தேரை ஓட்டி வந்த பெண்ணைத் தனது இரு கைகளாலும் தூக்கி இறக்கிவிட்டதையும், பிறகு இளவரசனால் ஏவப்பட்ட வீரர்கள் நால்வர் தேரில் படுத்திருந்தவனை அசையாமல் தூக்கி அரண்மனைக்குள் எடுத்துச் சென்றதையும் கவனித்த விஜயாலயன், வந்தது யாரென்பதை ஓரளவு ஊகித்துக் கொண்டதால் முகத்தில் சிறிது கவலையைக்



காட்டினாலும், தனது மகன் வீரர்கள் அனைவரும் பார்க்கும்படியாக தேரோட்டி வந்த பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு வாயிலிலேயே நின்று சம்பாஷிப்பதைக் கண்டு சிறிது புன்முறுவலும் கொண்டான்.

இத்தனையும் அரண்மனை வாயிலிலேயே நடந்தும் மன்னன் விஜயாலயன் இருந்த இடத்தைவிட்டு நகர்ந்தானில்லை. சற்று. நேரம் கழித்து அச்சுதப் பேரரையர் மேலே வந்து ''தங்கள் படைத்தலைவர் திரும்பி விட்டார்'' என்று சொன்னபோது சாதாரணமாகவே தலையசைத்தான்.

மன்னன் தனது சொற்களைச் சாதாரணமாக வரவேற்றதைக் கண்ட முதலமைச்சர் உண்மையை அவிழ்க்கத் தொடங்கி, படைத்தலைவர் படைகளை நடத்தும் முறையில் இல்லை'' என்று கூறினார்.

அதற்கும் சாதாரணமாகவே தலையசைத்தான் மன்னன். அதனால் சிறிது பொறுமை இழந்த அச்சுதர் ''வேறு விசேஷமும் இருக்கிறது'' என்று தெரிவித்தார்.

இதற்கு மன்னன் தலையைக்கூட அசைக்கவில்லை. அச்சுதரே தொடர்ந்தார். ''தஞ்சைப் படையெடுப்பு பல சிக்கல்களில் கொண்டுவிடும் போலிருக்கிறது. இதயகுமாரன் தனியாக வரவில்லை...'' என்று இழுத்தார் மந்திரி.

''ஒரு பெண்ணுடன் வந்திருக்கிறான்'' என்று மந்திரியின் வாசகத்தை முடித்த மன்னன் மந்திரியை அருகில் அழைத்து ''அச்சுதரே! காதல் விவகாரங்களில் உமக்குப் பரிச்சயமுண்டா?'' என்று வினவினான்.

சமயாசமயம் தெரியாமல் மன்னன் காதலைப் பற்றிப் பேசத் துவங்கியதும், அதுவும் தன்னை வைத்தே அதைப் பற்றிக் குறிப்பிட முற்பட்டதையும் சிறிது குழப்பத்தின் சாயை படர்ந்தது. ''மன்னவா! விளையாட்டுக்கு இது சமயமில்லை'' என்றார்.

''உமக்கும் எனக்கும் சமயமல்ல'' என்றான் மன்னன்.

''சொல்வது விளங்கவில்லை'' என்றார் அச்சுதர்

''இப்படி வாரும்'' என்ற விஜயாலயன் தாழ்வரை கைப் பிடிச் சுவருக்கருகில் அமைச்சரை அழைத்து ''அதோ பாரும்'' என்று கீழே சுட்டிக்காட்டினான்.

கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கீழே நோக்கிய அச்சுதர் பிரமித்துப் போனார். அங்கு அப்பொழுதும் இளவரசன் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு ஏதோ மிக சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தான். முதலமைச்சர் மிகுந்த பிரமையுடன் திரும்பினார் மன்னனை நோக்கி, ''சோழ தேவா! சோழ நாட்டு இளவரசர் நடத்தை...'' என்று துவங்கி அதற்கு மேல் பேச முடியாமல் தவித்தார்.

மன்னனே அவர் உதவிக்கு வந்து, ''முறைகேடானது என்று நினைக்கிறீர்?'' என்று வாசகத்தை முடித்தான்.

''ஆம்''– முதலமைச்சர் பதில் திட்டமாயிருந்தது.

''அதற்காகத்தான் கேட்டேன், உமக்குக் காதல் விவகாரங் களில் பரிச்சயமுண்டா என்று.'' மன்னவன் பேச்சில் சற்று விஷமம் இருந்தது.

''காதலென்றால் தெருவில் யாரும் பார்க்கும்படியாக...'' என்றார் மந்திரி.

''காதலுக்கு இடம், பொருள் ஏவல் தெரியாது. சந்தர் பாசந்தர்ப்பங்கள் தெரியாது. உயர்வு தாழ்வு தெரியாது'' என்று மன்னன் விளக்கினான்.

''மன்னவா!...''

''மந்திரி''

''என்ன மகாராஜா?

''ராமாயணம் படித்திருக்கிறீரா?''



''எனக்கு ஓரளவு மூன்று நான்கு மொழிகள் தெரியும் என்பது எனது நம்பிக்கை.''

''வீணாக அடக்கத்தைக் காட்ட வேண்டாம். உமக்கு வடமொழி நன்றாகத் தெரியும். எனக்கும் ஓரளவு தெரியும். ராமாயணத்தில் ரிஷ்யசிருங்கர் என்ற முனிவரைப் பற்றிப் படித்திருப்பீர்..'' என்ற விஜயாலயன் புன்முறுவல் கொண்டான்.

அச்சுதர் முகத்தில் சிறிது எரிச்சலைக் காட்டினார். ''இப்பொழுது அதைப் பற்றி என்ன?'' என்று வினவினார் எரிச்சலின் ஊடே.

''அவர் பிராமணர்'' என்று சுட்டிக்காட்டினான் மன்னன்.

''எந்த குலமாயிருந்தால் நமக்கென்ன?'' என்று கேட்டார் மந்திரி.

''அவர் மணந்தது பிராமணப் பெண்ணை அல்ல க்ஷத்திரியப் பெண்ணை. ரோமபாத மகாராஜாவின் பெண்ணை. அது கலப்பு விவாகம்'' என்று விஜயாலயன் சுட்டிக் காட்டினான்.

''அதனால் என்ன?'' – மந்திரி வினவினார் ஏதும் புரியாமல்.

''ராமாயணத்திலேயே அப்படி நடந்திருக்கும்போது நாம் அதைப் பின்பற்றுவதில் தவறில்லை'' என்றான் விஜயாலயன்.

''என்ன சொல்கிறீர்கள் மகாராஜா?'' என்று வியப்புடன் கேட்டார் மந்திரி.

''உயர்ந்த பிராமணரானவரும் கர்ம நிஷ்டருமான ரிஷ்ய சிருங்கர் அப்படி மணக்கும்போது நாம் முத்தரையருடன் சம்பந்தம் செய்வது தவறாகுமா?''– மன்னன் இப்படியொரு கேள்வியை, அதிர்வெடியை எடுத்து வீசினான் மந்திரி மீது.

மந்திரி திகைத்து நின்றார். ''மன்னவா! முத்தரையரை அழிக்க நாம் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறோம்'' என்று உணர்ச்சி பொங்கிய குரலில் கூறினார் அச்சுதர்.

சோழர்களின் பெரும் சாம்ராஜ்யத்துக்கு வித்திட இருந்த விஜயாலயன் அப்பொழுதே தான் சாம்ராஜ்யாதிபதி யென்பதைக் காட்டினான். ''அச்சுதரே! மனிதர்கள் வாழ்க்கையில் அழிவு முக்கியமல்ல'' என்றான் நிதானமாக.

''தங்கள் அருமை மனைவியார் சோழர், குலராணி யாரின் அழிவுக்குக் காரணமாவர் முத்தரையர்'' என்றார் அமைச்சர்.

''முத்தரையர்களில் ஒரு சிலர். முக்கியமாக முத்தரைய பூபதியின் மகன்''

''ஆம்.''

''அவனுக்கும் அவனுடன் வந்தவருக்கும் தண்டனை அளிப்போம்.''

''தண்டனையா!''

''ஆம்; மரண தண்டனை. எந்தக் கத்தியால் என் மனைவி உயிரிழந்தாளோ அதே கத்தியால், என் கையால் அவனை மாய்ப்பேன்'' என்று சதா தன் இடையை விட்டு அகலாதிருந்த குறுவாளைத் தட்டிக் காட்டினான் மன்னன். ''நமது நிலங்களைப் பறித்துக் கொண்ட முத்தரையரை முறியடிப்பதும் நமது நோக்கம். அது நடந்தே தீரும். ஆனால், ஒரு சமுதாயத்தின் மீது நமக்கு விரோதமில்லை. சிலர் செய்த பிழைக்காக சமுதாயத்தை நாசம் செய்வது ராஜதர்மமில்லை'' என்று ராஜ நீதியையும் தனது பரந்த மனப்பான்மையும் சுட்டிக்காட்டிய மன்னனைப் பெருவியப்புடனும் அவநம்பிக்கை தாண்டவமாடிய முகத்துடனும் பார்த்தார் அச்சுதப்பேரறையர். காலம் மன்னன் மன உறுதியை மாற்றிவிட்டதா அல்லது மகனின் காதல் அதைத் திருப்பி விட்டதா?'' என்று உள்ளூர வினவிக் கொண்டார்.

அவர் உள்ளத்திலோடிய எண்ணங்களை மன்னனும் கவனித்துப் புன்முறுவல் கொண்டான். ''அச்சுதரே! என் உறுதி



எதிலும் தளரவில்லை. சோழ நாட்டைத் துவம்சம் செய்த முத்தரையர் ஒழிக்கப்படுவார்கள் என் மனைவியை அழித்தவனை நான் அழிக்காமல் விடமாட்டேன். ஆனால், அழிவின் மீது மட்டும் சாம்ராஜ்யங்கள் நிர்மாணிக்கப்படுவதில்லை. நாம் வெற்றிகொள்ளும் மக்களின் அன்பும் ஆதரவும் சாம்ராஜ்யம் நிலைக்கத் தேவை'' என்ற மன்னன், ''வாரும் அமைச்சரே! கீழே போய் படைத் தலைவனைப் பார்ப்போம்'' என்று கூறி உப்பரிகைப் படிகளில் மந்திரி பின்தொடர இறங்கினான்.

கீழே வந்ததும் அங்கிருந்த காவலன் மன்னனுக்குக் கட்டியம் கூறி, ''படைத்தலைவர் அந்தப்புரத்திலிருக்கிறார்'' என்றான்.

''ஆம் ஆம், அதுதான் படைத் தலைவன் இருக்க வேண்டிய இடம்'' என்று சிரிக்காமல் கூறிய சோழவேந்தன், ''அமைச்சரே! அந்தப்புரத்துக்குப் போவோமா?'' என்று வினவினான்.

மன்னன் தன்னைப் பார்த்து நகைக்கிறானென்பதைப் புரிந்துகொண்ட மந்திரி, சற்று எட்ட நின்றிருந்த மனிதனைப் பார்த்து, ''யார் நீர்? இங்கு எதற்காக நிற்கிறீர்?'' என்று வினவினார்.

அந்த மனிதன் தலைதாழ்த்தி வணங்கினான் அமைச்சருக்கும் அரசனுக்கும். ''அடியவன் முத்தரையர் குல மருத்துவன்'' என்றான்.

''இங்கு எதற்காக வந்தீர்?'' என்று மந்திரி கேட்டார்.

''சோழர் படைத்தலைவரை ஜாக்கிரதையாகக் கொண்டு வந்து ஒப்படைக்க'' என்றான் முத்தரையர் மருத்துவன்.

''அவரைப் பாதுகாக்கத்தான் அவள் வந்தாளே?'' என்றார் மந்திரி.

''பெரும்பிடுகர் மகளை அவள் இவள் என்று பேசினால் பெரும்பிடுகர் உங்கள் கண்ணைப் பிடுங்கிவிடுவார். நாவைக் கூட...''

''அறுத்துவிடுவார்!''

''ஆம், சந்தேகமில்லை.''

அச்சுதப்பேரரறையர் அதைக் கேட்டுப் பேயறைந்தது போல் நின்றார். பிறகு கேட்டார், முத்தரைய பூபதிக்குப் பெண் ஏது? ஒரே மகன்தானே?'' என்று.

''வளர்ப்புப் பெண். சொந்தப் பெண்ணைவிட அதிகமாக நேசிக்கிறார். ஆகவே தாங்கள் தேவியாரை மரியாதையுடன் பேசுவது நல்லது'' என்றான் மருத்துவன்.

''தேவியாரா?'' அச்சுதர் பிரமித்தார்.

''ஆம். பெருந்தேவியார்'' என்றான் மருத்துவன்.

பெருமாள் பெரிய பெருமாளான கதையாவதைக் கண்ட அச்சுதர், வேறெதுவும் பேசாமல் வீரர்களை விளித்து மருத்துவரை அழைத்துச் செல்லுமாறு பணித்தார்.

அணுகிய வீரர்களை எட்ட நிற்கும்படி சைகை செய்தான் மருத்துவன். ''எனக்கு எந்த உபசாரமும் வேண்டாம். இப்பொழுதே செந்தலைக்குப் புறப்பட இருக்கிறேன். ஆனால், முதலில் உங்கள் படைத்தலைவர் காயத்தைப் பரிசோதித்து புதுக்கட்டுப் போடவேண்டும். ரதத்தில் நீண்ட தூரம் பயணம் செய்திருக்கிறார்'' என்றான் மருத்துவன்.

''சோழ நாட்டில் மருத்துவர்களுக்குப் பஞ்சமில்லை'' என்றார் மந்திரி.

''இருக்கலாம். ஆனால், எனக்குக் கடமை இருக்கிறது. படைத்தலைவரைப் பார்க்காமல் நான் நகர முடியாது'' என்றான் மருத்துவன்.



''சரி, அவரும் வரட்டும்'' என்று மன்னன் அந்த சம்பாஷணைக்கு முடிவு காட்டினான்.

மூவரும் அந்தப்புரத்துக்குள் சென்றதும் பணிப்பெண்கள் இளவரசியின் அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி மன்னனுக்கு விசித்திரமாயில்லை. மந்திரிக்கும் மருத்துவனுக்கும் விசித்திரமாயிந்தது. இதயகுமாரன் தலையை மடியில் வைத்தவண்ணம் பஞ்சணையில் உட்கார்ந்து அவன் மார்புக் காயக்கட்டைப் பிரித்துக் கொண்டிருந்தாள் கண்ணழகி. கட்டிலுக்குப் பக்கத்தில் தேவியின் இடையை அணைத்தவண்ணம் நின்றிருந்தான் ஆதித்தன்.

''வெட்கம் வெட்கம்'' என்று முணுமுணுத்தார் முதலமைச்சர்.

''காதல் வரும்போது அது குலைந்துவிடுகிறது. வெட்கத்தை அழிப்பது காதல்'' என்று அச்சுதர் காதுக்கருகில் முணுமுணுத்தான் விஜயாலயன்.

# 37. இடை புகுந்த நிலை

கண்ணழகியின் பஞ்சணையில், பஞ்சணையை விட மென்மையான அவள் மடியில் தலையை வைத்துப் படுத்துக் கிடந்த இதயகுமாரன் கண்கள் இந்த நேரியாளின் நிலவு முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தன. ஆனால், அவளது கண்களோ அவனை நோக்காமல் இதயக்கட்டைப் பிரித்த பின் காயத்தைக் கவனிப்பதிலேயே இருந்தபடியால் தந்தையும் மற்றோரும் உள்ளே நுழைந்ததை அவளும் கவனிக்கவில்லை, அவனும் கவனிக்கவில்லை.

''காயம் எப்படியிருக்கிறது?'' என்று விஜயாலயன் விசாரித்த பின்பே காதலில் கட்டுண்ட நால்வரும் சுரணை வரப்பெற்றதால் சோழ மன்னனைச் சரேலெனத் திரும்பி நோக்கினார். மன்னன் நுழைவும் கேள்வியும் தேவியின் இடைக்கு விடையளித்ததே தவிர, கண்ணழகியின் மடிக்கு விடுதலையளிக்காததால் கண்ணழகி வெட்கத்தால் குழம்பிய பார்வையைத் தந்தை மீது திருப்பி, ''ஓரளவு ஆறியிருக்கிறது. உயிருக்கு பயமில்லை. இருப்பினும் இவர் எழுந்து நடமாட பத்து நாட்களுக்குக் குறைவில்லை'' என்றான்.

அவள் சொற்களைக் கேட்ட முத்தரையர் மருத்துவன் முதலமைச்சரையோ மன்னனையோ லட்சியம் செய்யாமல் கண்ணழகி பஞ்சணையை அடைந்து, கட்டு பிரிக்கப்பட்டுக் கிடந்த இதயகுமாரன் மார்பை நோக்கினான். இரு முறை காயத்தின் ஓரங்களில் தன் இரு கைப் பெருவிரல்களையும் அழுத்திப் பார்த்தான். பிறகு திரும்பி மன்னனை நோக்கி ''மன்னவா! இளவரசியார் மதிப்பீடு மிகவும் சரி. நான் பத்து நாள் இங்கு இருந்துதானாகவேண்டும்'' என்றான்.



இம்முறை மன்னனோ அமைச்சரோ பதில் சொல்லவில்லை. கண்ணழகியே பதில் சொன்னாள். ''மருத்துவரே! நீங்கள் இங்கு காத்திருக்க அவசியமில்லை; செந்தலைக்குச் செல்லுங்கள். இந்தக் காயத்துக்குச் சிகிச்சை செய்ய எனக்குத் தெரியும்'' என்று.

மருத்துவன் பிரமித்தான். ''இந்தக் காயம்....'' என்று இழுத்தான்.

''தூர இருந்து எதிர்பாராத சமயத்தில் எறியப்பட்ட குறுவாளால் ஏற்பட்டது. ஆகையால் இதயத்தில் பாயாமல் சற்றுத் தள்ளி மேலிருந்து இரண்டாவது எலும்பில் பாய்ந்திருக்கிறது. எலும்பு மீதுள்ள சதையும் கெட்டியாயிருப்பதால் எலும்பைத் தடவியிருக்கிறதே தவிர முறிக்கவில்லை. சரியான சிகிச்சை செய்தால் இன்றிலிருந்து மூன்றாவது நாள் இவர் எழுந்து நடக்கமுடியும். பத்தாவது நாள் போரிடவும் முடியும்'' என்று விளக்கினாள் கண்ணழகி.

கண்ணழகியின் விளக்கத்தால் பிரமிப்பின் உச்சநிலைமை அடைந்துவிட்ட முத்தரையர் மருத்துவன், ''அம்மணீ! நீங்கள் செந்தலையில் இல்லாததால் என் பிழைப்பு நடக்கிறது. உங்கள் மருத்துவத் திறனை அறிந்தால் என் பதவி உங்களுக்குக் கிடைக்கும்'' என்று பாராட்டினான். அத்துடன் மன்னனை நோக்கித் திரும்பி, ''மன்னவா! இனி எனக்கு வேலையில்லை. என்னைவிட இவரை நன்றாகக் கவனிக்கக்கூடியவரிடம் ஒப்படைத்துவிட்டேன். செந்தலை செல்ல எனக்கு விடை கொடுங்கள்'' என்றும் சொன்னான்.

''இத்தனை அபாய நிலையில் இவனை ஏன் கொண்டு வந்தீர்கள் இங்கு?'' என்று வினவினான் விஜயாலயன்.

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை மருத்துவன். சிறிது சிந்தித்தான். நிமிர்ந்து நின்றான் கம்பீரமாக. ''முத்தரைய பூபதி உண்மையைச் சொல்ல உத்தரவிட்டதால்

சொல்லுகிறேன். அவர் மகனால் இக்காயம் ஏற்பட்டது. அதுவும் அவர் மகனின் தவறான, வீரமற்ற செய்கையால். அதனால் பெரும்பாலும் தனது அறையிலேயே வைத்து என்னை வைத்தியம் செய்யச் சொன்னார். சிறிது சுரணை வந்ததும் உங்கள் படைத்தலைவர் இங்கு வரத் துடித்தார். அது மட்டு மல்ல; தனது மகனாலும், அவர் மகன் இளைய முத்தரைய ராலும் இவருக்கு என்றும் அபாயம் ஏற்படும் என்று பெரும் பிடுகர் நம்பினார். இந்த இரண்டு காரணங்களாலும் இவரைக் காயத்துடன் அனுப்பச் சம்மதித்தார். அதற்காகத் தனது மகளையும் இவருடன் அனுப்பினார். மகள் உடனடியாகப் புறப்பட்டார். காரணம், இப்பொழுது தெரிகிறது எனக்கு'' என்ற முத்தரைய மருத்துவன், கட்டிலுக்கு எதிர்ப்புறத்தில் ஜோடியாக நின்ற தேவியையும் ஆதித்தனையும் நோக்கினான்.

மன்னனும் அத்திசை நோக்கிப் புன்முறுவல் செய்தான். அப்பொழுது மருத்துவன் முத்தரையர் மகளை நோக்கி, ''தேவி! நாம் உடனே புறப்படவேண்டும்''என்றும் அறிவித்தான்.

அதுவரை ஏதும் பேசாமலிருந்த ஆதித்தன், ''தேவியா! எதற்காகப் புறப்படவேண்டும்? எங்கு?'' என்று வினவினான்.

''மகளைத் திருப்பி அழைத்துவர பெரும்பிடுகர் உத்தரவு'' என்றான் மருத்துவன். அவன் குரலில் திடமிருந்தது.

''இவள் திரும்பாவிட்டால்?'' என்ற ஆதித்தன் தேவி யிடம் நெருங்கி நின்றான்.

அப்பொழுது தேவிசொன்னாள் மெதுவாக, ''திரும் பாதிருக்க முடியாது'' என்று.

''ஏன் தேவி?'' என்று ஆதித்தன் கேட்டான்.

''தந்தைக்கு உடல்நிலை சரியில்லை. மனத்திலும் சந்துஷ்டி யில்லை. நானில்லாவிட்டால் அவர் தனிக்கட்டை'' என்று தேவி சொன்னாள் தழுதழுத்த குரலில். அவள் கண்களில் நீர் திரண்டது.



''அப்படியானால் என் கதி?'' என்றான் ஆதித்தன்.

அதுவரை எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்த அச்சுதப் பேரறையர் வெடித்தார் திடீரென்று ''சோழநாட்டு இளவரசர் பேசக்கூடிய பேச்சல்ல இது. அதுவும் பலர் முன் னிலையில் இப்படிப் பேசுவது பண்பாடும் ஆகாது'' என்றார் உஷ்ணத்துடன்.

பேச்சு மேலும் பலவகைகளில் சுவடு மாறியிருக்கும். அவற்றுக்கு தேவியே முற்றுப்புள்ளி வைத்தாள். நன்றாக நிமிர்ந்து அரச தோரணையில் நின்ற முத்தரையர் மகள் சுடும் விழிகளுடன் அமைச்சரை நோக்கி! ''அச்சுதரே! உம்மைப் பற்றி நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். பொற்கொல்ல ராகக் கரூர் வஞ்சியில் வேஷம் போட்டு சோழநாட்டு வீரர்களை வணிகர்களாக நிரப்பி வஞ்சகத்தால் வஞ்சியைக் கைப்பற்றினீரே, அந்தப் பண்பைப் பற்றிக் கேள்விப்பட்டேன். முத்தரையரிடம் அந்த முறை பலிக்காது. வீரத்தால் அவர்களை வெல்லலாம். மாறு வேடத்தால் வெல்ல முடியாது. மகாவீர ரான உங்கள் இளவரசரின் மாறுவேடமே அங்கு அம்பலமாகி விட்டது. ஆகையால் பண்பாட்டைப் பற்றி நீர் பேசவேண்டாம். ஆனால், ஒன்று கூறுகிறேன். இன்று நான் திரும்பத்தான் போகிறேன். இங்கு மீண்டும் திரும்பும்போது உம்மால் தலைவணங்கப்படும் ராணியாக வருவேன். செந்தலை மீது எப்படியும் படையெடுப்பு ஏற்படப்போகிறது. முத்தரை யர்களும் அதற்குத் தயாராயிருக்கிறார்கள். அந்தப் போரில் வெற்றிவாகை சூடி இளவரசர் என்னை அழைத்து வரட்டும். வந்த இடத்தில் பெண்ணைப் பிடித்துக்கொண்டார் என்ற அவமதிப்பு இவருக்கு வேண்டாம்'' என்று சொன்னாள். அத்துடன் அனைவருக்கும் தலைதாழ்த்தி, ''மருத்துவரே! வாரும் போவோம்'' என்று கூறிவிட்ட மருத்துவர் பின்தொடர அந்த அறையை விட்டு அகன்றாள்.

ஆதித்தன் அவளை நோக்கி ஒரு அடி எடுத்துவைத்தான். தனது கையசைப்பினால் சோழமன்னன் மகனைத் தடுத்தான். ''ஆதித்தா! ஒரு வீராங்கனை செல்கின்றாள்.அவளைத் தடை செய்யாதே. அவள் கூறியபடி போரில் வென்று வீரனாக அவளை அடையப் பார்'' என்று சொன்னான் உறுதியான குரலில். மீண்டும் அமைச்சரை நோக்கித் திரும்பி, ''படைத் தலைவனைத் தனிஅறைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள். என் மகளே அவனுக்கு மருத்துவம் செய்வாள்'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு வெளியேறினான் மகளின் அறையை விட்டு.

சோழமன்னன் உத்தரவுப்படி சகலமும் நடந்தது. அடுத்த மூன்றாவது நாள் இதயகுமாரன் நடக்க ஆரம்பித்தான். சில சமயங்களில் அரண்மனைக்குப் பின்புறமிருந்த தாழ்வரையில் கண்ணழகியின் தோளைப் பிடித்துக் கொண்டு நடந்தான். ஐந்தாவது நாள் யார் துணையுமில்லாமலே உலாவ முற்பட்டான். கண்ணழகியின் இணையற்ற மருத்துவத்தினாலும் அவள் அருகாமை அளித்த சாந்தியாலும் வெகு சீக்கிரம் உடல் தேறிய இதயகுமாரன் தன்னந்தனியே நந்தவனத்தில் உலாவினான் அடிக்கடி. அங்கு 'தற்செயலாக' நாள் தவறாமல் வந்த கண்ணழகியும் அவனுடன் அங்கிருந்த பவழமரத் தடியில் உட்கார்ந்து நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

அப்படி உட்கார்ந்த வேளைகளில் பவழமல்லி மலர்கள் இருவர் தலைமீதும் விழும். அவற்றில் சிலவற்றைக் கண்ணழகி பொறுக்கிக் கையிலும் வைத்துக்கொள்வாள். அப்பொழுது அவற்றின் காம்பையும். சிவந்த அவள் கையையும் பார்த்து, ''கண்ணழகி! உன் கையின் நிறம் பவழமல்லியின் காம்புக்கு இல்லையே'' என்று கூறுவான். பதிலுக்கு அவள் நகைப்பாள். அப்பொழுது அவன் கண்கள் தூரத்தில் படர்ந்திருந்த முல்லைக் கொடியின் மலர்களைப் பார்க்கும்.



இத்தகைய மகிழ்ச்சி வெள்ளத்தில் இருவரும் மூழ்கியிருந்த சமயங்களில் சோழதேவன் படையெடுப்புக்குச் சித்தம் செய்துகொண்டிருந்தான். தேவி சென்றுவிட்ட கோபத்தில் ஆதித்தன் படைகளைச் சீரமைப்பதிலும், அணிவகுத்துப் பார்வையிடுவதிலும் காலங் கழித்தான். உறையூரெங்கும் படைகள் நடமாட்டம் பலமாயிருந்தது. படைகளை இயக்கும் முரசுகள் அடிக்கடி சப்தித்தன.

இந்த சப்தங்கள் அடிக்கடி நந்தவனத்திலும் கேட்டதால் இதயகுமாரன் மனம் காதலிலிருந்து பிரிந்தது. பேரிகைகளின் சத்தம் வீரனான அவன் உணர்ச்சிகளைக் கிளப்பவே, கண்ணழகியின் அருகாமையைக்கூட அவன் மறந்தான். அவன் சித்தமெல்லாம் எங்கோ இருந்ததால் கண்ணழகியின் கேள்விகளுக்குச் சம்பந்தமில்லாமல் பதில் சொன்னான்.

''என் சகோதரன் காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று ஒரு நாள் கண்ணழகி கேட்டபோது திடீரென பேரிகை சத்தம் கேட்டதால்,''அவனை என் வாளால் வெட்டாமல் விடுவதில்லை'' என்று சீறினான்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் கண்ணழகி அவனிடமிருந்து பிரிந்து நின்று.

அவள் விலகியதாலும், அதுவரை தன் கையின் பிடியிலிருந்த அவளுடைய அழகிய தோள் சட்டென்று விடுபட்டதாலும் திடீரென சுய நிலையடைந்த இதயகுமாரன், ''ஏன் கண்ணழகி என்ன?'' என்று வினவினான்.

''நான் என்ன கேட்டேன் ,நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினாள்.

''இளையவேளை வெட்டப்போவதாகச் சொன்னேன்.''

''இளையவேளைப் பற்றி நான் எதற்காகக் கேட்க வேண்டும்?''

''உன்னைத்தானே அவன் இம்சை செய்தான், அடைய முயன்றான்'' என்ற இதயகுமாரன், ''அவனை வெட்டப் போவ தில்லை. என் இரு கைகளாலும் அவன் கழுத்தை இப்படிப் பிடித்து அணுஅணுவாக அவன் உயிரை உடலிலிருந்து பிரிப் பேன்'' என்று சீறிக்கொண்டு கண்ணழகியின் அழகிய கழுத்தை நோக்கினான்.

கண்ணழகியின் இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் புரண்டது. தன்னை அடைய இஷ்டப்பட்ட இளையவேளின் மீது அவனுக்கு ஏற்பட்ட சீற்றத்தைக் கண்டு, ''இவர் எனக்குத்தான் சொந்தம்'' என்று உள்ளூர சொல்லிக் கொண்டு அவனை அன்புடன் நெருங்கினாள்.

அப்படி அவள் நெருங்க முற்பட்ட சமயத்தில் அவளுக்கும் இதயகுமாரனுக்கும் இடையே ஒரு தலை புகுந்து தடுத்தது. சற்று எட்ட இருந்து ஒருவர் நகைப்பும் கேட்டது. புகுந்த தலை பிரமிப்பை அளித்தது இருவருக்கும். உதிர்த்த சிரிப்பு நாணத்தை அளித்தது கண்ணழகிக்கு.

# 38. குடும்ப விவகாரம்

இதயகுமாரனுக்கும் கண்ணழகிக்கும் இடையே புகுந்த தலை வாளாவிருக்காமல் கண்ணழகியைச் சிறிது முட்டி அகற்றிவிட்டு இதயகுமாரன் தோள்மீது தனது நீண்ட கழுத்தை வைத்து கன்னத்தால் அவன் கன்னத்தை இழைக்கவே, மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்த இதயகுமாரன் ''விஜயா! நீ எப்பொழுது வந்தாய்? எப்படி வந்தாய்?'' என்று கேள்வி களைத் தொடுத்ததன்றி அதன் கழுத்தையும் இறுக அணைத்துக் கொண்டான்.

அந்தப் புரவி வந்ததும் தன்னை அடியோடு இதயகுமாரன் மறந்துவிட்டதைக் கண்ட கண்ணழகி கோபமெய்தினாள். தவிர, அதன் கழுத்தை அவன் கட்டிக்கொண்டதும் கொஞ்சி யதும் அவள் சினத்தை உச்சக்கட்டத்துக்குக் கொண்டுபோகவே திரும்பி அரண்மனையை நோக்கி நடக்கலானாள் கண்ணழகி. இதைக் கண்டதும் எட்ட இருந்தவன் சிரிப்பு முன்னைவிட அதிகமாகவே சட்டென்று நின்று எதிரே கண்களை ஓட்டினாள் சோழன் மகள். அங்கு ஆதித்தன் நின்று நகைத்துக் கொண் டிருப்பதைக் கண்ட அவள் அவனை நோக்கி ''அண்ணா! உனக்கு உற்சாகம் அதிகமாயிருக்கிறது போலிருக்கிறது'' என்று சீறினாள்.

ஆதித்தன் மேலும் நகைத்தான். ''அது மனித இயல்பு'' என்றும் சொன்னான்.

''எது?'' என்று கோபம் சிறிதும் தணியாமலே வினவி னாள் கண்ணழகி.

''ஒருவர் உற்சாகம் குறையும்போது இன்னொருவர் உற்சாகம் அதிகப்படுவது'' என்றான் சோழ இளவரசன்.

''யார் உற்சாகம் குறைந்துவிட்டது இப்பொழுது? எதற்காகக் குறையவேண்டும்?'' என்று கண்ணழகி கேட்டாள்.

''அவரவர் மனத்துக்கே தெரியும்.''

''மறைபொருளாகப் பேசாதே அண்ணா. திட்டமாகத் தான் சொல்லேன்.''

கண்ணழகியின் இந்த வார்த்தையைக் கேட்ட ஆதித்தன் தங்கையை அணுகி அவள் தோள்மீது ஆதரவாகக் கையை வைத்தான். ''கண்ணழகி! புரவியைக் கண்டு நீ பொறாமைப் படக்கூடாது'' என்று சமாதானமும் செய்ய முயன்றான்.

அவன் சமாதானம் அவள் கோபத்தை மட்டுமின்றி நாணத்தையும் அதிகப்படுத்தவே ''புரவியைக் கண்டு நான் ஏன் பொறாமைப்படவேண்டும்?'' என்றாள் குரலில் கோபம் ஊடுருவி நிற்க.

''சொன்னால் கோபிக்கமாட்டாயே?'' என்று கெஞ்சினான் ஆதித்தன்.

''எனக்கு எந்தக் கோபமுமில்லை, சொல்'' என்ற கண்ணழகியின் பதிலில் கோபம் அள்ளித் தெளித்தது.

அதைக் கேட்டதும், குரலின் ஒலியைக் காதில் பூர்ணமாக வாங்கியதும், மிதமிஞ்சிய சிரிப்பு வந்தாலும் அதை அடக்கிக்கொண்டு முகத்தில் போலித் துயரத்தைப் படரவிட்டுக் கொண்ட ஆதித்தன், ''படைத்தலைவனுக்குப் புத்தி போதாது'' என்றான்.

''புத்தி போதாதா?''— கண்ணழகியின் கேள்வியில் வியப்பு இருந்தது.

''புத்தி இருந்தால் அப்படிச் செய்வானா?'' ஆதித்தன் குரலில் வெறுப்பு தெரிந்தது.



அது போலி வெறுப்பு என்பது அரசகுமாரிக்குத் தெரிந்தேயிருந்தாலும், தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளாமல் வினவினாள் அண்ணனை நோக்கி, ''எதைச் சொல்கிறாய்?'' என்று.

ஆதித்தன் சிறிது நிதானித்தான் பதில் சொல்லுமுன்பு. பிறகு சொன்னான். ''என் அழகிய தங்கையிருக்கும்போது போயும் போயும் ஒரு புரவியின் கழுத்தைக் கட்டிக்கொள்வானா, புத்திசாலியாயிருந்தால். இல்லை, குதிரையிடம் கொஞ்சத்தான் கொஞ்சுவானா? அடே கொஞ்சத்தான் கொஞ்சினான், கோபத்துடன் செல்லும் அரசகுமாரியைக் கவனிக்கக்கூடவா மாட்டான்?'' என்று.

இதைக் கேட்ட கண்ணழகியின் கோபம் அதிகமாகவே, ''அண்ணா! என்னிடமா விளையாடுகிறாய்?'' என்று கேட்டு பக்கத்திலிருந்த ஒரு செடியின் கிளையை உடைத்துக் கொண்டு ஆதித்தனை அடிக்க ஓடினாள். அவளிடமிருந்து தப்ப ஆதித்தன் ஓடினான். ஓடியவன் புரவியும் இதயகுமாரனும் இருக்கும் பக்கமாக ஓடவே கண்ணழகி வீசிய கிளை இதயகுமாரன் மீது சுளீரென விழுந்தது. அந்த அடியால் சுரணை வரப்பெற்ற இதயகுமாரன் சரேலெனத் திரும்பி, ''யாரது?'' என்று சீற முற்பட்டவன் சட்டென்று பேச்சை அடக்கிக் கொண்டான். தன்மீது விழுந்த கிளையைக் கையில் எடுத்துக்கொண்டு தன் பின்னால் பதுங்கிக்கொண்டிருந்த ஆதித்தனையும், எதிரே நின்றிருந்த கண்ணழகியையும் மாறி மாறி நோக்கினான். ''என்ன கண்ணழகி! இதற்கு என்ன அர்த்தம்? இளவரசரை எதற்காகத் துரத்துகிறாய்?'' என்று கேள்விகளையும் தொடுத்தான்.

''ஓடுகிறவரைக் கண்டால் துரத்துபவருக்கு எளிது'' என்ற பழமொழியைச் சொன்னான் ஆதித்தன்.

ஆதித்தனை உஷ்ணத்துடன் நோக்கினான் இதயகுமாரன். ''இளவரசரே! இப்படி ஓடுவது உங்களுக்கு அழகல்ல'' என்றான்.

''என் நிலையில் நீ இருந்து பார்த்தால் தெரியும்'' என் றான் ஆதித்தன். ''தவிர எனக்குப் புரவியுமில்லை'' என்றும் சொன்னான்.

''புரவிக்கும் நீங்கள் ஓடியதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று இதயகுமாரன் குழப்பத்துடன் கேட்டான்.

''இதயகுமாரா! நீ செய்த குற்றந்தான் இத்தனைக்கும் காரணம்'' என்று ஆதித்தன் சொன்னான்.

இதயகுமாரனுக்கு ஏதும் புரியவில்லை. ''என்ன குற்றம் செய்தேன்?'' என்று வினவினான்.

''புரவியின் கழுத்தை ஏன் கட்டிக் கொண்டாய்?''என்று ஆதித்தன் கேட்டான்.

''அண்ணா!''–கண்ணழகி எச்சரிக்கைக் குரல் கொடுத்தாள்.

''என் புரவியின் கழுத்தை நான் கட்டிக்கொண்டது குற்றமா? அதன்மீது எனக்குள்ள ஆசை எவ்வளவு என்று தெரியுமா உனக்கு?'' என்ற இதயகுமாரன், பக்கத்திலிருந்த விஜயன் கழுத்தின்மீது கையைப் போட்டுக் கொண்டு அதன் மீது சாய்ந்து நின்றான்.

''குற்றம் இரண்டாகிறது'' என்றான் ஆதித்தன்.

''விளக்கிச் சொல் ஆதித்தா.''

''என் தங்கையிருக்கும்போது புரவியின் கழுத்தைக் கட்டிக்கொண்டது முதல் குற்றம். அதன்மீது ஆசை அதிக மிருப்பதாகச் சொல்வது இரண்டாவது குற்றம். உனக்கு இனி மன்னிப்பில்லை.''

அதுவரை பொறுத்திருந்த கண்ணழகி அடுத்து இருந்த பவழமல்லிக் கிளையொன்றை உடைத்து எடுத்துக் கொண் டாள். ''உங்கள் இருவரையும் என்ன செய்கிறேன் பாருங்கள்'' என்று இருவரையும் நோக்கி வந்தாள்.



இம்முறை இளவரசன், படைத்தலைவன் இருவருமே ஓட ஆரம்பித்தார்கள். அவர்கள் ஓடுவதைப் பார்த்த விஜயன் மட்டும் நின்ற இடத்தை விட்டு அகலாமல் தனது பற்களை நன்றாகத் திறந்துகாட்டிக் கனைத்து நகைத்தது.ஓட்டப் பந்தயத் தில் சேர்ந்துவிட்டது போல் ஓடிய இளவரசனும் இதயகுமாரனும் கண்மண் தெரியாமல் ஓடியதால் ஒரு பெரிய தடையில் முட்டிக் கொண்டார்கள். அவர்கள் தோள்களைப் பிடித்து நிறுத்திய விஜயாலயன், அவர்களைப் பவழமல்லிக் கிளை கொண்டு துரத்திய கண்ணழகியைப் பார்த்துப் புன்முறுவல் கொண் டான். பிறகு தனது மகனையும் படைத்தலைவனையும் தனது இரும்புப் பிடியிலிருந்து விடுதலை செய்துவிட்டு, ''உங்கள் மூவருக்கும் இன்னும் விளையாட்டுப் புத்தி போகவில்லை'' என்று கூறினான் புன்முறுவலின் ஊடே.

மூவரும் பேசவில்லை. அரசன் பக்கத்திலிருந்த இரு ஆண் சிங்கங்களும் தலை குனிந்து நின்றன மௌனமாக. எதிரேயிருந்த கண்ணழகி பூமியில் கட்டை விரலால் கோடு போட்டாள் தலைகுனிந்தவண்ணம். ''சிறு குழந்தைகளாக இப்படித்தான் இதயகுமாரனும் ஆதித்தனும் ஓடுவார்கள். வயது வந்தும் இவர்களுக்குப் பழைய புத்தி போகவில்லை. போதாக்குறைக்கு நீயும் சேர்ந்துவிட்டாய் கண்ணழகி'' என்று அரசன் கண்ணழகியின் கையிலிருந்த பவழமல்லிக் கிளையை நோக்கினான். ''அதை இப்படிக் கொடு. இவர்களை வீறி விடுகிறேன்'' என்று சொல்லி கையையும் நீட்டினான்.

கண்ணழகி கிளையைக் கீழே போட்டாள். ''இவர்களை அடிக்க இதை உடைக்கவில்லை'' என்று பொய் சொன்னாள்.

''எதற்காக உடைத்தாய்?''என்று கேட்டான் சோழ தேவன் புன்சிரிப்புடன். பிறகு நந்தவனத்தின் புல்தரையில் உட்கார்ந்து மூவரையும் உட்காரச் சொல்லி, ''சரி, இந்த வழக்கை விசாரித்து ஒரு முடிவு செய்கிறேன்'' என்று கூறினான்.

மன்னன் தங்களைப் பார்த்து நகைக்கிறான் என்பதை மற்ற மூவரும் புரிந்துகொண்டதால் ஏதும் பேசமாலிருக்கவே மன்னன் கேட்டான் கோபம் மிகுந்த குரலில் ''இந்தக் குற்றத்தைத் துவங்கியது யார்? யார் வாதி?'' என்று.

''அதைக் கேட்டுப் பயனில்லை'' என்றான் ஆதித்தன் மெதுவாகத் தலை நிமிர்ந்து.

''ஏன்?'' என்று மன்னன் கேட்டான்.

''வாதி ஒரு...'' ஆதித்தன் இழுத்தான்.

''ஒரு...?''

''புரவி.''

''புரவியா!''– மன்னன் குரலில் வியப்பு இருந்தது.

''ஆம். வேண்டுமானால் இளவரசியாரைக் கேளுங்கள்'' என்றான் ஆதித்தன்.

''அண்ணா!''-சீறினாள் கண்ணழகி.

''மன்னர் முன்பு நாம் உண்மையைச் சொல்ல வேண்டும். வழக்கு விஷயத்தில் மன்னர் – மகள், மகன் என்று உறவு முறையைக் கவனிக்க மாட்டார்'' என்று ஆதித்தன் கண்டிப்பான குரலில் சொன்னான்.

கண்ணழகி எழுந்திருக்க முயன்றாள். ''உட்கார்.வழக்கு முடிந்து நான் தீர்ப்புச் சொல்லும் வரை யாரும் எழுந்திருக்கக் கூடாது'' என்று அரசன் உத்தரவிட கண்ணழகி உட்கார்ந்து தரையை நோக்கினாள். தன் ஆள்காட்டி விரலால் புல்லைப் பெயர்க்கலானாள்.

''கண்ணழகி! நடந்தது என்ன?'' என்று வினவினான் மன்னன்.

இதற்கு இதயகுமாரன் பதில் சொன்னான். ''விஜயனை நான் சில நாட்களாகக் காணவில்லை. செந்தலையில் விட்டிருந்தேன். எப்படி வந்தானோ தெரியவில்லை. வந்ததும் அன்பு காட்டி நான்...'' என்று வார்த்தையை முடிக்காமல் விட்டான் படைத்தலைவன்.



''அதில் என்ன தவறு?'' என்று விஜயாலயன் கேட்டான்.

''விஜயன் மட்டும் அன்பு காட்டவில்லை'' என்று இடை புகுந்தான் இளவரசன்.

''வேறு யார் காட்டியது?''

''படைத்தலைவர்.''

''யாரிடம்?''

''அப்படிக் கேளுங்கள். காட்ட வேண்டியவரிடம் காட்ட வில்லை. விஜயன் கழுத்தைக் கட்டிக்கொண்டார். அதனால் ராஜத் துரோகத்துக்கு ஆளானார்.''

ஆதித்தன் சொன்னதைக் கேட்ட விஜயாலயன் ''ராஜத் துரோகமென்று சொல்'' என்றான்.

''இல்லை. ராஜத்துரோகந்தான். ராஜாவுக்குத் துரோகம் செய்வது ராஜத்துரோகம். அதுவே பெண்பாலானால் ராஜித்துரோகம்'' என்ற ஆதித்தன் நகைத்தான். மன்னனும் உடன் நகைத்தான்.

அந்தச் சமயத்தில் அங்கு தோன்றிய அச்சுதப் பேரறைய ''இங்கு என்ன நடக்கிறது?'' என்று கேட்டார்.

''நீதி விசாரணை''என்றான் விஜயாலயன்.

''நீதி விசாரணையை முதலில் அமைச்சரல்லவா நடத்த வேண்டும்?'' என்றார் அச்சுதர் குழப்பத்துடன்.

''இந்த விசாரணையை நீர் நடத்த முடியாது'' என்றான் மன்னன்.

''ஏன்?''

''இது குடும்ப விவகாரம். தவிர...''

''தவிர...''

''அமைச்சரே...'' என்று அரசன் தயங்கினான்.

''என்ன மன்னவா?'' என்று அச்சுதர் கேட்டார்.

''குதிரையை விசாரிக்கத் தெரியுமா உமக்கு?'' என்று வினவினான் மன்னன்.

# 39. பூஞ்சோலை

விஜயாலயன்! சோழதேவன், மகா வீரனான கரிகாலன் பரம்பரையைச் சேர்ந்தவன். பெரும் சாம்ராஜ்யத்தை நிறுவ கனவுகொண்டிருப்பவன். முத்தரையரிடம் போரிட சன்னத்தம் செய்துகொண்டிருப்பவன். அப்பேர்பட்டவன் தன்னைப் பார்த்துக் கேட்ட கேள்வியைக் காதில் வாங்கியதும் அச்சுதப் பேரறையர் பேயறைந்தது போல் நின்றார் சில விநாடிகள். மன்னனுக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை என்பதை உறுதி செய்துகொள்ள கண்களை ஒருமுறை கசக்கிக்கொண்டு விஜயாலயனை உற்றுப்பார்க்கவும் செய்தார். ''குதிரையை விசாரிக்கத் தெரியுமா உமக்கு?'' என்று கேட்ட கேள்வி அவரைத் திக்குமுக்காடச் செய்திருந்த சமயத்தில் ஆதித்தனும் தந்தையுடன் சேர்ந்துகொண்டு, ''தந்தையின் கேள்வியில் தவறொன்றுமில்லை. முடிந்தால் குதிரையை விசாரிக்கலாம்'' என்றான்.

வீரக் குடும்பம் என்று தான் நினைத்திருந்தது சுத்தப் பைத்தியக்காரக் குடும்பமாகிவிட்டதை எண்ணிப் பார்த்த அச்சுதர் ஒருவேளை அவர்கள் தன்னைக் கேலி செய்கிறார்களோ என்ற எண்ணத்தில், ''குதிரையை எதற்காக விசாரிக்க வேண்டும்?'' என்ற வினவினார் வியப்பை எரிச்சலாக மாற்றிக்கொண்டு.

விஜயாலயன் முகத்தில் ஆச்சரியக் குறி பெரிதும் படர்ந்தது. ''அச்சுதரே! வழக்கில் முதலில் யாரை விசாரிக்க வேண்டும்?'' என்று வினவினான்.

''வாதியை'' என்றார் அச்சுதர் சிறிதளவும் தயங்காமல்.

''இங்கு குதிரைதான் வாதி'' என்றான் மன்னன்.

‘‘அதன் தலையீடுதான் இங்கு நடந்த விபரீதங்களுக்கும் காரணம்’’ என்றான் ஆதித்தன்.

அமைச்சரின் பெருவிழிகள் ஆதித்தனை ஆராய்ந்தன. ‘‘இங்கு என்ன அப்படி விசித்திரம் நடந்துவிட்டது?’’ என்று வினவினார் வெறுப்பு கலந்த குரலில்.

ஆதித்தன் புன்முறுவல் கொண்டு நோக்கினான் அமைச்சரை. ‘‘நானும் படைத்தலைவனும் இந்தத் தோட்டத்தில் ஓடியதைப் பார்த்தீரா?’’ என்று கேட்டான்.

‘‘பார்க்கவில்லை. வீரர்களான நீங்கள் ஏன் ஓட வேண்டும்?’’– அமைச்சர் கேள்வி திட்டமாயிருந்தது.

‘‘அப்படிக் கேளுங்கள். இன்னொரு விஷயமும் இருக்கிறது. ஒரு பெண் எங்களைத் துரத்தினாள்’’ என்று இன்னொரு வெடியை வீசினான் ஆதித்தன்.

அச்சுதப்பேரறையர் தமது கண்களை அரசகுமாரிமீது ஓடவிட்டார். அவள் தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந்தாள். ‘‘அரசகுமாரி! விளையாட்டுக்கு இது சமயமல்ல. உறையூரில் படை திரள்கிறது போருக்கு’’ என்றார் விஷயத்தைப் புரிந்து கொண்டு.

‘‘அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?’’ என்று கேட்ட அரசகுமாரி சட்டென்று எழுந்தாள்.

அச்சுதப்பேரறையர் கண்ணழகியை நன்றாக நோக்கினார். ‘‘போர்களுக்கு முக்கால் காரணம் பெண்கள்தான். வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி, நீ சேர நாட்டில் இருந்ததால் கருவூரைப் பிடித்தோம். இப்பொழுது போரைத் தூண்ட, துரிதப்படுத்த, செந்தலையிலும் ஒருத்தி முளைத்திருக்கிறாள்’’ என்று விளக்கவும் செய்தார் புன்முறுவலின் ஊடே.

இந்த சமயத்தில் ஆதித்தனும் துள்ளி எழுந்தான். ‘‘தேவி இந்தப் போரைத் தூண்டவில்லை’’என்றான்.



அமைச்சர் மெள்ள நகைத்தார். ‘‘தூண்டவில்லை, துரிதப் படுத்துகிறாள்’’ என்றார்.

இளவரசன் முகத்தில் சினம் அதிகமாயிற்று. ‘‘துரிதப் படுத்துவது உமக்கு எப்படித் தெரியும்?’’ என்று வினவினான் சினத்தைக் குரலிலும் காட்டி.

அச்சுதர் அரசனை நோக்கிவிட்டு இளவரசனை நோக்கினார். ‘‘படைகளைச் சீரமைப்பதிலும் சித்தம் செய்வதிலும் இப்பொழுதுள்ள துரிதத்தை நீங்கள் வேறு எப்பொழுதும் காட்டியது கிடையாதென்பது தங்கள் தந்தையாருக்கே தெரியும்’’ என்று குத்தலாகப் பேசினார் அச்சுதப்பேரறையர். ‘‘காரணம் எதுவானாலும், யாரானாலும், சோழ ராஜ்ய விஸ்தரிப்புக்குத் தங்கள் வேகம் பெரிதும் உதவுகிறது’’ என்று கூறிவிட்டு மன்னனுக்குத் தலை வணங்கித் திரும்பினார் அரண்மனை நோக்கி.

விஜயாலயன் தனது மக்கள் இருவரையும் இதயகுமாரனையும் நோக்கினான். ‘‘இன்று விசாரணை நடக்காது போலிருக்கிறது. வாதி மேயத் துவங்கிவிட்டார். உங்களுக்கும் வேலையிருக்கும்’’ என்று கூறிவிட்டு எழுந்து அச்சுதப்பேரறையர் சென்ற திக்கை நோக்கி நடந்தான்.

ஆதித்தன் தனது பக்கத்தில் நின்ற சகோதரியையும், தரையில் குனிந்த வண்ணம் உட்கார்ந்திருந்த படைத் தலைவனையும் மாறி மாறிப் பார்த்தான். ‘‘கண்ணழகி! நானும் வருகிறேன். படைத்தலைவன் தலைநிமிர வழிசெய். தலை குனியும்படியாக உன் அஸ்திரங்களைத் தொடுக்காதே’’ என்று சிரித்துக் கூறிவிட்டு மாளிகையை நோக்கி நடந்தான்.

அவன் அகன்றதும் இதயகுமாரனும் எழுந்தான். ‘‘அரசகுமாரி! எல்லோரும் போனபின்பு நாம் இங்கிருப்பது சரியல்ல’’ என்றான்.

அரசகுமாரி திரும்பி பக்கவாட்டில் கடைக்கண்ணால் இதயகுமாரனை நோக்கினாள். ''அது நியாயந்தான். நான் போகிறேன்'' என்று ஒரு அடி எடுத்து வைத்தாள்.

அவள் கையை இறுகப்பற்றிய இதயகுமாரன் ''கண்ணழகி!'' என்று அழைத்தான்.

கண்ணழகி அவன் கரஸ்பரிசத்தில் உணர்ச்சி அலைகளுக்கு இலக்காகி முகம் சிவந்தாள். ''கையை விடுங்கள். தோழிகள் பார்ப்பார்கள் உப்பரிகையிலிருந்து'' என்றாள் தலை குனிந்த வண்ணம்.

இதயகுமாரன் சிறிது சிந்திப்பதுபோல் நடித்தான். ''அது நியாந்தான்'' என்று அரசகுமாரி முன்பு சொன்ன வார்த்தையைத் திருப்பிச் சொன்னான். ''அப்படியானால் அந்த பவழமல்லி மரத்துக்குப் பின்னால் போய்விடுவோம்'' என்று செடிகளாலும் கொடிகளாலும் மறைக்கப்பட்ட ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினான்.

கண்ணழகியின் உடல் லேசாகத் துடித்தது. ''நீங்கள் காட்டுவது அரசர் கொடி வீடு'' என்று குறிப்பிட்டாள்.

''அதனாலென்ன?'' என்று கேட்டான் இதயகுமாரன்.

''அது மறைவிடம்.''

''ஆமாம்.''

''அங்கு உங்களுடன் நான் வந்தால்...?''

''என்ன கெட்டுப் போய்விடும்? தோழிகள் நம்மைப் பார்க்க முடியாது.''

''பார்ப்பதைவிட பார்க்காதிருப்பது மிகக்கேவலம்.''

''என்ன கேவலம்?''

''தவறான எண்ணத்துக்கு இடங்கொடுக்கும்.'' அரசகுமாரியின் உள்ளத்தில் பூரிப்பிருந்தது, உதட்டில் நடுக்கமிருந்தது. சித்தத்தில் வேட்கையிருந்தது. இருப்பினும் நாணம் என்னும் நாகபாசம் அனைத்தையும் கட்டியிருந்தது.



தடுமாறி, நிலைகுலைந்து, கண்களை அரண்மனை உப்பரிகைக்கு ஓடவிட்டு, தத்தளித்து, இடையொடிய நின்ற கண்ணழகியின் கோலம் இதயகுமாரன் உணர்ச்சிகளைப் பெரிதும் தூண்டியதென்றாலும் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. ஏதோ நினைத்துக்கொண்டு கண்ணழகியை விட்டுத் தனது புரவி புல் மேய்ந்த இடத்தை நோக்கிச் சென்று அதன்மீது மெதுவாக ஏறினான். மெதுவாக அதை நடத்திக் கொடிவீடிருந்த மறைவிடத்துக்குள் அதைச் செலுத்தினான்.

புரவியும் படைத்தலைவனும் கண்ணுக்கு மறைந்ததும் கண்ணழகி எங்கு போவதென்று தெரியாமல் திண்டாடித் திகைத்து நின்றாள். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல் நிலத்தில் எதையோ தேடினாள். அப்படித் தேடிக் கொண்டே பவழமல்லி மரத்தடிக்கு வந்து சிறிது நேரம் அதன்மீது சாய்ந்து நின்றாள். பின்னாலிருப்பது பூஞ்செடிகள் கொண்ட மறைவிடம். அடுத்திருப்பது அரசன் ஒரு காலத்தில் தன் அன்னையுடன் சரசமாடிய லதாக்கிருகம். ''அங்கு அவர் காத்திருக்கிறார். கள்ளனைப்போல் மறைந்திருக்கிறார்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் கண்ணழகி. ''காலை நேர வெயில் நன்றாக ஏறிய பட்டப்பகலில் இது என்ன கேவலம்?'' என்றும் ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டாள்.

ஆனால், இதயம் விவாதத்துக்கோ ஆராய்ச்சிக்கோ இடம் கொடுக்கவில்லை. வேட்கை மற்ற உணர்ச்சிகளை அர்த்தமற்றதாக அடித்தது. இளமை அந்த சமயத்தில் குளுமையைக் கொடுப்பதற்குப் பதில் வெயிலுடன் போட்டி போட்டுக் கொண்டு அவளைத் தகிக்க ஆரம்பித்தது. எதையோ தேடுவது போல பூஞ்செடிக்கூட்டத்தில் நுழைந்தாள் அவள் மெதுவாக.

கொடிவீட்டின் மறைவுவரைகூட அவள் வரவில்லை. திடீரென இரு கைகளால் தூக்கப்பட்டாள் அனாயாசமாக இதயகுமாரன் இரும்புக் கைகள், அந்தப் பூங்கொடியைப் பந்தலின் குறுக்கு மரக்கிளைகள் போல் உறுதியாகத் தூக்கிப் பிடித்தன.

''விடுங்கள்'' என்று சீறினாள் அரச மகள்.

''எங்கே?'' என்ற இதயகுமாரன் நகைத்தான்.

''தரையில்'' என்றாள் அரசகுமாரி கோபத்துடன்.

''அதுவும் சரிதான்'' என்ற இதயகுமாரன் அவளைத் தனது கைகளிலிருந்து கீழேயிருந்த புல்தரையில் கிடத்தினான். ''விஜயா? நீ சென்று சிறிது நேரம் காவல் இரு'' என்று கூற, அவன் பின்னாலிருந்த புரவி மறைவிடத்தை விட்டு வெளியே சென்றது.

அரசகுமாரி கீழே இயற்கை விரித்திருந்த பச்சைப் பாயில் படுத்துக்கிடந்தாள். அந்த இடம் சிறிது திறந்த வெளியாயினும் சுற்றிலும் வட்டமாக. இருந்த செடி கொடிகளும், அடுத்திருந்த கொடிவீடும் அவசியமான மறைவைச் சிருஷ்டிக்கவே செய்தன. காவிரிக் காற்றால் லேசாக அசைந்த எட்ட இருந்த மரமல்லி மரம் தனது மலர்களில் சிலவற்றை மல்லாந்து கிடந்த அவள்மீது பல இடங்களில் உதிர்த்தது. அவள் படுத்திருந்த நிலை கண்ட இதயகுமாரன் அவள் பக்கத்தில் உட்கார்ந்தானானாலும் அவளைத் தொடவும் முயலவில்லை, ஏதோ சிந்தனையிலிருந்தான்.

''எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனை?'' என்று மெதுவாகக் கேட்டாள் கண்ணழகி.

இதயகுமாரன் அவள் உடலை உற்று நோக்கினான். ''கோட்டையை அல்ல, பூஞ்சோலையை''என்று மெதுவாகச் சொன்னான். ''பூஞ்சோலைக்குப் பூ எதற்கு?'' என்றும் கேட்டான்.



''பூஞ்சோலையா?'' என்று வியப்புடன் கேட்டாள் அரசகுமாரி.

''ஆம், கண்ணழகி. அதோ முகபத்மம், அரவிந்த விழிகள், செம்பருத்தி அதரம், எழுந்து நிற்கும் தாமரை மொட்டுகள் இரண்டு, இணைந்துவிட்ட தண்டுகளில் மறைந்த வாழைப்பூ, பாத பங்கஜங்கள், இன்னும் எனக்குப் புலனாகாத எத்தனையோ மலர்கள். நீ ஒரு பூஞ்சோலை. உன்மீது எதற்கு மரமல்லிதன் மலர்களைத் தூவுகிறது? அர்த்தமற்ற செய்கை'' என்று கூறிச் சற்று அவளை நெருங்கி அவள் உடலிலிருந்து மரமல்லி மலர்களைப் பொறுக்கினான். பொறுக்கலில் நிதானமிருந்தது. மலர்களை எடுத்த கை ஆங்காங்கு அழுந்தவும் செய்ததால் ''உம்'' என்று எச்சரிக்கைக் குரல் கொடுத்தாள் கண்ணழகி. அடுத்து அவன் கைகள் பொறுக்கிய பூக்களை அவள் பூவுடல் மீது தூவவில்லை. ஆங்காங்கு வைத்து அழகு செய்தன.

''என்ன செய்கிறீர்கள்?'' என்று முணுமுணுத்தாள் கண்ணழகி.

''நீயே பாரேன்'' என்று கூறிய இதயகுமாரன் அவள் உடலுக்குக் கீழே கையைக் கொடுத்து தலையை மட்டும் சிறிதளவு தூக்கினான்.

குனிந்து நோக்கினாள் கண்ணழகி. அவள் மார்பில் சூரியனைப் போல் மலர்களை அடுக்கியிருந்தான் இதயகுமாரன்.

கண்ணழகியின் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. ''இதென்ன சித்திரம்? சூரியன் போலிருக்கிறதே?'' என்று ரகசியமாகக் கேட்டாள்.

''போல் என்ன? சூரியன்தான். நீ சூரியகுலமல்லவா?'' என்று இதயகுமாரன் அந்தச் சூரியனை நோக்கிக் குனிந்தான்.

கண்ணழகியின் பூவுடலில் உணர்ச்சிகள் பலமாகச் சுழன்றன. அதுவரை இருந்த நாணமெனும் கரை உடைந்தது.

அந்த முரடன். தலையை மார்பில் இறுக அணைத்துக் கொண்டான் அரச மகள்.

இதயகுமாரன் சுயநிலையை அடியோடு மறந்ததால் தலையைப் புரட்டினான் தான் சிருஷ்டித்த மலர்ச் சித்திரத்தின் மீது. சித்திரமும் கைப்பழக்கம் என்ற பழமொழி அவன் நினைவுக்கு வந்தது. ஆதலால் கைகள் அவள் உடலைச் சற்றே தூக்கி நெரித்தன.

# 40. அமைச்சர் ஒரு சனியன்

செடிகளும் கொடிகளும் அளித்த மறைவில், கீழே இயற்கை விரித்து விட்ட சக்கர வட்ட பசும்புல் மரகதப்பாயில் படுத்துக்கிடந்த சோழன் பைங்கிளியைச் சற்றே தூக்கிச் சுற்றி வளைத்து நொறுக்கிவிட்ட இதயகுமாரன், அந்தப் பைந்தளிர் மேனிக்கு வலித்துவிடுமோ என்ற அச்சத்தால் தனது இடது கையால் அவள் உடலை மட்டும் தாங்கி வலது கைக்கு விடுதலையளித்தான். விடுதலை சாதாரணமாக நல்லதுதான். நல்லவர்கள் கையில் அது அமுதம், அது அல்லவர் கையில் துன்பம் விளைவிக்கும் கடுமையான கருவி. பிந்திய வர்க்கத்தைச் சேர்ந்ததாயிருக்க வேண்டும் அந்த வாலிபனின் வலது கை. அது செய்யத் துவங்கிய துஷ்டத்தனத்தால் பெரும் இம்சைக்கு உள்ளானாள் கண்ணழகி.

இடது கையால் தூக்கப்பட்டிருந்த அவள் சந்திர பிம்ப முகத்தின் வழவழத்த கன்னத்தை அவன் கை மிக மெதுவாகத் தடவியது. இத்தனைக்கும் அவன் முகம் கன்னத்தைக் காண வில்லை, கண்கள் திண்ணிய மார்பில் புதைந்திருந்த காரணத் தால். உணர்ச்சிகள் புரளும்போது கண்கள் தேவையில்லை யென்பதை அடுத்த நிகழ்ச்சிகள் நிரூபித்தன. கன்னத்தில் பதிந்து தடவிய கை பிறகு கழுத்திலும் இறங்கி அதில் தேங்கி நின்றது சில விநாடிகள். பிறகு அந்த வெண்சங்கை விட்டு அகன்று அவள் அழகிய இடது தோளின் மீத பதிந்து அதை நொறுக்கிப் பிடித்தது.

அந்த முரட்டுக்கையின் பிடிப்பு பெரும் வேதனையைத் தந்தாலும் அந்த வேதனை அவளுக்கு வேண்டியே இருந்தது. ஆனால், அளவுக்கு மீறி துன்பப்படுத்திவிட்டோமோ என்ற நினைப்பில் அந்தக் கை அதே தோளை வருடி சாந்தப்படுத்தி

விட்டு முதுகில் தவழ்ந்தது பலவிடங்களில். முதுகில் தவழ்ந்த கை கீழிறங்கி தோளுக்கு அளித்த தண்டனையை இடைக்கும் அளித்ததாலும், பிறகு அத்துமீறி அங்கிருந்தும் இறங்க முயன்ற தாலும் கண்ணழகி இன்பப் பெருமூச்சு விட்டாள். ''உம்'' என்ற உஷ்ண ஒலியை உதிர்த்தாள். அவள் தேகம் லேசாக நெளிந்துபுரண்டது. இதயகுமாரன் மெள்ளத் தலையைத் தூக்கி, ''என்ன கண்ணழகி?'' என்று விசாரித்தான்.

''ஒன்றுமில்லை'' என்றது அவள் உதடுகள். அவள் ஒரு கை பின்னழகில் பதிந்து கிடந்து அவன் கையை நெருங்கிப் பிடித்துஅகற்ற முயன்றது.ஆனால் அந்த முயற்சியே அந்தக் கையின் துஷ்டத்தனத்தை மிகப்படுத்தியது. பிடித்த அவன் கையை அவன் கையும் திரும்பப் பற்றியது. அகற்ற முயன்றது அவள் கை. இருப்பிடத்தை விட்டு நகர மறுத்தது அவன் கை. இந்தக் கைகளின் போராட்டத்தில் அவள் கை பலவிடங்களில் பட்டுவிடவே அவள் உணர்ச்சி அலைகளில் கொந்தளித்தாள். பிறகு சட்டென்று அவனிட மிருந்து விலகி தரையில் படுத்து விடவே தரைக்கும் திண்ணிய எழிலுக்கும் இடையே சிறைப் பட்ட அவன் கைக்குக் கிட்டியது சொர்க்கம். சிறிது நேரத் திற்குப் பிறகு கையை விடுவித்துக்கொண்ட இதயகுமாரன், ''கண்ணழகி!'' என்று மெதுவாக அழைத்தான்.

''என்ன கண்ணழகிக்கு?'' போலி எரிச்சலுடன் எழுந்தது அவள் கேள்வி.

''உன் உடல் ஒரு பூஞ்சோலை'' என்ற இதயகுமாரன் தனது கைகளில் ஒன்றால் அவள் பாதத்தைப் பிடித்தான்.

கண்ணழகியின் தாபம் மிகுந்த விழிகள் இதய குமாரனை நோக்கின. ''நீங்கள் அசடாகிவிட்டீர்கள்'' என்றாள் அவள் நகைத்து.

''எப்படி அரசகுமாரி?'' இதயகுமாரன் அவள் கண் களுடன் தனது கூரிய விழிகளைக் கலந்தான்.



''பூஞ்சோலையென்று சற்று முன்புதான் சொன்னீர்கள்.''

''ஆமாம்.''

''திரும்பவும் சொல்கிறீர்கள்.''

''ஆயிரம் தடவை சொல்வேன்.''

''சொன்னதைத் திரும்பச் சொல்வது அசட்டுத்தனம்''

இதயகுமாரன் அவள் காந்தக் கண்களை நோக்கினான், அழைப்பை விடுத்த கன்னங்களை நோக்கினான், கழுத்தை யும் நோக்கினான். அவளை நோக்கி நன்றாகக் குனிந்தான். ''அரசகுமாரி'' என்று ரகசியமாக அழைத்தான்.

''உம்.''

''தெய்வத்துக்கு அர்ச்சனை செய்கிறார்கள்.''

''ஆம்.''

''அதில் நூற்று எட்டு தடவை உண்டு.''

''ஆமாம்.''

''ஆயிரத்து எட்டும் ஒன்று.''

''உண்டு.''

''திரும்பத் திரும்ப அதே அர்ச்சனையைச் செய்கிறார்கள்.''

''ஆமாம்.''

''அதை அசட்டுத்தனம் என்று சொல்லமுடியுமா?''

இதைக் கேட்ட கண்ணழகி அவன் கண்களுடன் தன் கண்களை நன்றாகவே உறவாட விட்டாள். ''படைத்தலைவரே!'' என்று மெதுவாக அழைத்தாள்.

''சொல் கண்ணழகி'' என்று அவனது உதடுகள் முணு முணுத்தன.

''நன்றாக அர்ச்சனை செய்கிறீர்கள்'' என்ற கண்ணழகி மதுரமாக நகைத்தாள்.

''இல்லை'' என்றான் படைத்தலைவன்.

''என்ன இல்லை?''

''ஆயிரந்தடவை அர்ச்சனை செய்யவில்லையே.''

அரசகுமாரி இளநகை காட்டினாள், இரண்டு முத்துக்கள் மட்டும் தெரியும் அளவுக்கு. செம்புப்பட்டைகளின் இடையே முத்துக்கள் பதிக்கப்பட்டால் இதைவிட அழகாயிருக்க முடியாது என்று எண்ணினான் இதயகுமாரன். ''செவ்விய நீரோட்டமுள்ள இதழ்கள் எத்தனை அரிய முத்துக்களை மறைத்து வைத்திருக்கின்றன?'' என்று உதடுகளிடம் கோபமும் கொண்டான். ''அவற்றுக்குத் தண்டனை கொடுத்தால் என்ன?'' என்றும் தனக்குள் கேட்டுக்கொண்டான். அவன் சித்தத்தில் கனவு சுழல்வதைக் கண்களில் கண்டாள் கண்ணழகி. ''உம்... யோசனை இங்கில்லை'' என்றும் சொன்னாள் மெதுவாக.

இதனால் திடீரென எழுப்பப்பட்ட படைத்தலைவன் ''அரசகுமாரி! அர்ச்சனை போதவில்லையா?'' என்று அவள் கழுத்தை நெருக்கினான்.

''எந்த அர்ச்சனையைச் சொல்கிறீர்கள்?'' என்று அவள் கண்களை மூடியவண்ணம் கேட்டாள்.

''எதை ஆயிரந்தடவை செய்யவில்லை என்று சொன்னாய்?'' என்ற படைத்தலைவன் உதடுகள் கழுத்திடம் அடைக்கலம் புகுந்தன.

அவள் பதில் சொல்லவில்லை. கண்களும் இதழ்களும் மூடிக்கிடந்தன. ஒருமுறை இதழ் மட்டும் விரிந்து அடிஇதழ் மடிந்து முத்துப் பற்களில் படிந்து ஏதோ வேதனையைப் புலப்படுத்தியது. ''உம் உம் '' என்று இருமுறை முனகினாள் அரசகுமாரி.

இதயகுமாரன் அந்த ஒலிகளைக் கேட்டான். அவள் கண்களும் மூடிக் கிடந்தன. உதடுகள் கழுத்தில் அழுந்திக் கிடந்தன. ''கண்ணழகி! கண்ணழகி!'' என்ற சொற்கள் தழுதழுத்து வந்தன.



''உம்உம் – அவள் – பதில்கள் உங்கார ஒலிகள்

இருவர் புறக்கண்களும் மூடிக்கிடந்ததால் அகக்கண்கள் விழித்துக் கொண்டன. விழித்ததால் விளைந்தது வெட்கம்.

வெட்கத்தால் நிலை சிறிது குலைந்தது. மெள்ள அவன் மட்டும் கண்களைத் திறந்தான். அவள் மார்பு மீது தான் சிருஷ்டித்த மரமல்லி மலர்ச் சூரியன் கலைந்து கிடந்தான். அவள் மனமும் அப்படித்தான் கலைந்துவிட்டது, அவள் உறுதி குலைந்துவிட்டது என்பதைப் புரிந்து கொண்டான் அந்த வாலிபன்.

அந்த மலர்களில் ஒன்றை எடுத்து காம்பொன்றைக் கிள்ளினான் பாதிவரை. பிறகு வாயில் வைத்து ஊதினான். அது வெளியிட்ட மெல்லிய சப்தம் கண்ணழகியின் செவிக்கு அமுதமாயிருந்தது. மெள்ள அவள் மூடியிருந்த கண்களை விழித்து அவனை நோக்கினாள். ''என்ன சிறுபிள்ளைத்தனம் இது?'' என்று கேட்டாள், அவன் வாயில் இருந்த மரமல்லி மலரைப் பார்த்து.

''சிறுபிள்ளை முதல் இந்தப் பழக்கம் உண்டு.''

''அப்படியா!''

''இதே அரண்மனை நந்தவனத்தில் இதே மரவல்லி மலர்களின் காம்பை வைத்துக் குழல் மாதிரி ஊதியிருக்கிறேன். இத்தகைய ஒரு ஒலியைக் கிளப்ப இந்த மலரால்தான் முடியும்'' என்று விளக்கினான் அவன்.

''குழல் ஊதுகிறீர்களா?'' என்று அவள் நகைத்தாள்.

''ஆம்'' என்று அவனும் நகைத்தான்.

''கண்ணன் என்று நினைப்போ?''

''எதற்குக் கேட்கிறாய்?''

''கண்ணன் குழல் ஊதினால் சகல ஜீவராசிகளும் மயங்கும் என்று ஆழ்வார் பாடியிருக்கிறார்.''

''எல்லா ஜீவராசிகளையும் மயக்க நான் இஷ்டப்பட வில்லை.''

''ஏன்?''

''ஒரு ஜீவராசி போதும் எனக்கு.''

''ஏனோ?''

''கிருஷ்ணனைப் போல் ராஸக்கிரீடை நடத்த என்னால் முடியாது.''

கண்ணழகி அவனை நோக்கினாள். புன்முறுவல் கொண்டாள். ''முடிந்தால் நடத்துவீர்கள் போலிருக்கிறது?'' என்று கேட்டாள் புன்முறுவலின் ஊடே.

இதயகுமாரன் அவளைக் கூர்ந்து நோக்கினான் கண்களிலிருந்து கால்வரை. ''கண்ணழகி'' என்று அழைத்தான் முடிவில். அவனே தொடர்ந்து பேசினான். ''உன் கேள்விக்கு இடமில்லை'' என்று.

''என்ன என் கேள்விக்கு?'' என்று கேட்டாள் கண்ணழகி.

''கண்ணன் ராஸக்கிரீடை செய்தால் அவன் சுதந்திரன்'' என்றான் இதயகுமாரன்.

''நீங்கள்?''

''அடிமை.''

''அடிமையா!''

''ஆமாம்; பல விலங்குகள் பூட்டப் பட்டிருக்கின்றன எனக்கு.''

''விலங்குகளா!''



''ஆமாம். இதோ, இதோ, இதோ'' என்று அவள் உடலின் அழகிடங்களை லேசாகத் தொட்டுக் காட்டினான்.

''அரசகுமாரி சங்கடத்தால் அசைந்தாள். ''நீங்கள் பெரிய போக்கிரி'' என்றாள்.

''போக்கிரியாக அடித்தது நீ'' என்றான் படைத்தலைவன்.

''இன்னும் போக்கிரியாக அடித்தால்?''

''விளைவுக்கு நான் பொறுப்பாளியல்ல.''

''என்ன விளைந்துவிடுமாம்?''

''அரசகுமாரி! என்னைத் தூண்டாதே!'' என்ற அவன் சொற்களில் வேட்கை மூட்டிய துன்பமும் இன்பமும் கலந்து ஒலித்தன.

''பாவம்!'' என்று பரிதாபச் சொற்களை உதிர்த்தாள் அரசகுமாரி. மேலும் பேசியிருப்பாள், அழகிய அவள் உதடுகள் அவள் வசத்திலிருந்திருந்தால்.

அந்த சமயத்தில் வெளியிலிருந்து வந்தது அமைச்சரின் குரல், ''படைத்தலைவரே, படைத்தலைவரே!'' என்று. ''எங்கிருக்கிறீர்கள்?'' என்று கேள்வியும் பிறந்தது சற்று இரைந்து.

''இந்த அமைச்சர் பெரிய சனியனாகிவிட்டார்'' என்று சபித்துக்கொண்டே எழுந்து நின்றான் இதயகுமாரன்.

அவன் சினத்தைக் கண்டு கண்ணழகி மிக இன்பமாக நகைத்தாள்.

# 41. பெரும்பிடுகர் பிடிவாதம்

சோழர் நந்தவனத்தில் கொடி வீட்டுக்கருகேயிருந்த புல்தரையில் கண்ணழகி இன்பமாக நகைத்த அதே நேரத்தில் செந்தலை அரண்மனை மாடிப்படி உச்சியில் உட்கார்ந்திருந்த பெரும்பிடுகர் சற்றுக் கடுமையாகவே நகைத்தார் எதிரே நின்ற அடுத்த இரு தலைமுறைகளையும் நோக்கி. அந்த நகைப்பு கிளப்பிவிட்ட தொடர்ச்சியான இருமல்கூட மேற்கொண்டு அவர் நகைப்பதை நிறுத்த சக்தியற்றதாயிற்று.

தந்தை உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து கீழே நின்று கொண்டிருந்த மாறன் பரமேசுவரன் தனது ராட்சஸ விழிகளைப் பயங்கரமாக உருட்டினான் ஒருமுறை. உள்ளே எழுந்த கோபத்தின் விளைவாக, ''தந்தையே! நீங்கள் நகைக்கக்கூடாது'' என்றான் கோபம் துளிர்த்த குரலில்.

அவனுடன் சேர்ந்து நின்றுகொண்டிருந்த இளையவேள், ''உடல் நிலையை எண்ணிப் பாருங்கள். நகைக்க இடமிருக்காது'' என்று தகப்பனுடன் சேர்ந்துகொண்டு பேசினான்.

பெரும்பிடுகரின் அசுர விழிகளில் ஏளனச் சிரிப்பு தாண்டவமாடியது. அதே சிரிப்பு பருத்த இதழ்களிலும் படர்ந்தாலும் பெரிய மீசை உதடுகளை மூடியிருந்ததால் அந்த இகழ்ச்சி உதடுகளின் மூலம் தெரியவில்லை. ஆனால், சொற்களில் மிதமிஞ்சிய இகழ்ச்சியை ஒலிக்கவிட்ட பெரும்பிடுகர், ''மாறா! நமக்குப் பின்னால் நம்மைப் பற்றிப் பிறர் நகைப்பதைவிட நம்மை எடைபோட்டு நாமே நகைத்துக் கொள்வது நல்லது'' என்று மகனை நோக்கிச் சொல்லிவிட்டு பேரனைப் பார்த்து, ''இளையவேள்! உடல் நிலையை எண்ணிப் பார்க்கச் சொல்கிறாய்; நினைத்தால் நகைப்பதற்கு இடமிருக்காது என்று கூறுகிறாய். நான் உடல்நிலையைப் பார்க்கவில்லை. ஊர்



நிலையைப் பார்த்தேன், உங்கள் இருவரையும் பார்த்தேன். நகைப்பை நிறுத்த முடியவில்லை'' என்று கூறினார்.

இதற்கு மாறன் ஏதோ பதில் சொல்லுமுன்பு இளையவேளே பேசத்தொடங்கி, ''தாங்கள் இன்னும் என்னை உங்கள் பேரனாக, மகனுக்கு அடுத்தபடி செந்தலை அதிபதியாக ஏற்றுக் கொள்ளவில்லை'' என்றான் சினம் துளிர்த்த குரலில்.

பெரும்பிடுகர் இதழ்களில் ஏற்கனவேயிருந்த இகழ்ச்சி பெரிதாயிற்று. ''யார் சொன்னது அப்படி? அப்பனும் பிள்ளையும் அக்கம்பக்கத்தில் நிற்பதே உன்னை நாங்கள் ஏற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாயிற்றே'' என்றார் பெரும் பிடுகர் இகழ்ச்சியைக் குரலிலும் ஓட்டி.

இளையவேளின் சினம் அதிகமாகவே, ''என்னை இளையவேள் என்று அழைத்தீர்கள்'' என்று சுட்டிக் காட்டினான்.

பெரும்பிடுகரின் பெரிய விழிகளில் சிரிப்பு உதிர்ந்தது. ''ஆம், அதனாலென்ன?'' என்று வினவினார்.

''இப்பொழுது நான் வேளிர் குலத்தவனல்ல. முத்தரையர் வம்சத்தவன். ஆகவே இளைய முத்தரையன் என்று அழைப்பதே பொருந்தும்'' என்றான் இளையவேள்.

''பெயரில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டார் பெரும் பிடுகர்.

''பதவி இருக்கிறது, அந்தஸ்து இருக்கிறது, குலப் பெருமை இருக்கிறது'' என்றான் இளையவேள்.

சற்றே நகைத்தார் பெரும்பிடுகர். ''பதவி, அந்தஸ்து இவை மனிதனை உயர்த்துவதில்லை. குலப்பெருமைகூடக் கவைக்கு உதவாது. உன்னை நான் தமிழகத்தின் சக்கரவர்த்தி என்று அழைக்க ஆட்சேபணையில்லை. ஆனால், நீ சக்கரவர்த்தியாக மாட்டாய். உன்னை மகாவீரன் என்று அழைப்பதில் எனக்கு நஷ்டமில்லை. அதனால் நீ மகாவீரனாகி விட

மாட்டாய். செயல்கள் மனிதனுக்குப் பதவியையும் அந்தஸ்தையும் அளிக்கின்றன. அதனால் குலத்துக்குப் பெருமை கூடுகிறது. இதுதான் விஷயம்'' என்றார் பெரும்பிடுகர் நகைப்பின் ஊடே.

இருந்த இடத்திலேயே சங்கடத்துடன் அசைந்தான் இளையவேள். ''என் செயல்களுக்கு என்ன? எனக்கு வீரமில்லையென்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டான் பாட்டனை சங்கடம் விளைவித்த கோபத்துடன்.

''உன் பிரசித்தி என் காதுகளில் முன்னமே விழுந்திருக்கிறது. பிறகு கண்கள் அவற்றை ஊர்ஜிதம் செய்தன'' என்ற பெரும்பிடுகர், ''இளையவேள்...இல்லை இல்லை...இளைய முத்தரையா! கருவூரில் உனக்கும் இதயகுமாரனுக்கும் நிகழ்ந்த பூசல்களைப் பற்றியும் அவற்றின் முடிவைப் பற்றியும் கேள்விப்பட்டேன். இங்கு வந்த பிறகு நமது அரண்மனை வாவிக்கரையில் கண்கூடாகவே கவனித்தேன்'' என்றார்.

இளையவேளின் உள்ளம் பெரும் எரிமலையாகியிருந்தது. பாட்டனின் ஏளனம் அவன் சித்தத்தைப் பெரிதும் உலுக்கிவிட்டது. அதனால் தனது வாளின்மீது கையை வைக்கவும் செய்தான். அவன் கையைத் தனது கையால் பிடித்து அடக்கிய மாறன் பரமேசுவரன், ''எங்கள் இருவரையும் குறை சொல்வதும் பார்த்து நகைப்பதுமே சில நாட்களாக முத்தரைய பூபதிக்கு வேலையாகப் போய்விட்டது'' என்று உறுமினான் தந்தையை நோக்கி.

பெரும்பிடுகர் முகத்தில் இகழ்ச்சி மிக அதிகமாகத் தெரிந்தது. ''வேறு நல்ல வேலையிருந்தால் இதை விட்டுவிடலாம்'' என்றார்.

'ஏனில்லை? உங்கள் உடல்நிலை சரியாயில்லாதபோது இங்கு வந்து அணிவகுப்பைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. ஒய்வு எடுத்துக் கொள்ளலாம். படுத்து உறங்கலாம்'' என்றான் மாறன் பரமேசுவரன்.



''அந்தப் பணிகளை நீங்கள் இருவரும் மேற்கொண்டுவிட்டதால் நான் மற்ற வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது'' என்றார் பெரும்பிடுகர்.

''நாங்கள் உறங்குவதாக யார் சொன்னது?'' என்று கேட்டான் இளையவேள்.

''உறக்கம் என்று சொல்லவில்லை.'' பெரும்பிடுகர் இந்த பதிலைச் சர்வ சாதாரணமாகச் சொன்னார்.

''வேறு என்ன சொன்னார்கள்? யார் சொன்னார்கள்?'' என்று கேட்டான் இளையவேள்.

''மயக்கம் என்று சொன்னார்கள்'' என்றார் முத்தரையர்.

''யார் சொன்னார்கள்?''– மாறன் குரல் இடியென ஒலித்தது.

''பெருந்தேவியார்'' என்றார் பெரும்பிடுகர் மிகுந்த மரியாதையுடன்.

''யார்? தேவியா?''– மாறன் குரல் கடுமையாயிருந்தது.

''என் மகளை, இந்த நாட்டு இளவரசியை, மரியாதையுடன் அழைப்பது நல்லது'' என்றார் பெரும்பிடுகர் சர்வ சாதாரணமாக.

''பணிப்பெண்ணையா மரியாதையுடன் அழைக்க வேண்டும்? அவள் எப்பொழுது இந்த நாட்டு இளவரசியானாள்?'' என்று மாறன் சீறினான்.

''என்று என் வளர்ப்புமகளானாளோ அன்று முதல்'' என்ற பெரும்பிடுகர், ''அவள் கண்ணும் கருத்துமாயிராவிட்டால் நான் என்றோ இறந்திருப்பேன்'' என்றும் சொற்களைக் கூட்டினார்.

''பணிவிடையைச் சொல்கிறீர்களா?''

''அதையுந்தான்.''

''நான் உறங்கும்போது என்னைக் காப்பாற்ற அவள் விழித்திருக்கிறாள்.''

''யார் உங்களை அப்படிக் கொன்றுவிடுவார்கள்.''

''அரசுக்காகத் தந்தையைக் கொலை செய்வது சரித்திரத் துக்குப் புதிதல்ல.''

இதுவரை பொறுமையுடனிருந்த இளையவேள், மாறனை நோக்கி, ''அப்பா! இதைக் கேட்டுக்கொண்டு நாம் நிற்க வேண்டுமா?'' என்று வினவினான் கோபம் உச்சநிலைக்குச் செல்ல, உணர்ச்சிகள் வெறியூட்ட.

''சும்மா இருக்கவேண்டியதில்லை. கொல்லலாம். ஆனால், நான் விழித்திருக்கிறேன்'' என்ற பெரும் பிடுகர் பெரிதாக நகைத்தார்.

''நாங்கள் இருவர். நீங்கள் ஒருவர்'' என்றான் இளைய வேள்.

''எந்த விஷயத்திலும் உனக்குத் துணை தேவையென்று புரிகிறது'' என்று மீண்டும் நகைத்தார் பெரும்பிடுகர்.

இளையவேளுக்கு அதற்குமேல் அங்கு நிற்க முடியாத தால் கடகடவெனப் படிகளில் இறங்கிக் கீழே சென்று விட்டான். ஆனால், மாறன் பரமேசுவரன் நகரவில்லை. நீண்ட நேரம் மௌனமாக நின்றான். பிறகு தகப்பனைத் தாண்டி அரண் மனைக்குள் சென்றுவிட்டான்.

அவன் சென்றதும் தேவி அங்கு தோன்றினாள் கையில் ஒரு குவளையுடன். ''இதைக் குடியுங்கள்'' என்று கட்டளையும் இட்டாள் பெரும்பிடுகர் கையில் குவளையைத் திணித்து.

பெரும்பிடுகர் பதிலேதும் சொல்லாமல் குவளையி லிருந்த பானத்தைக் கடகடவெனக் குடித்தார். ''தேவி! மீண்டும் கஷாயத்தைக் கொடுக்கிறாய்!'' என்றார் அன்புமிகுந்த குரலில்.



தேவி அவர் காலடியில் உட்கார்ந்தாள். அவள் தலையைத் தனது காலில் சாய்த்துக்கொண்ட பெரும்பிடுகர் அவள் குழல் களை அன்புடன் கோதிவிட்டார். அந்த நிலையில் கேட்டாள் தேவி, ''கஷாயத்தைக் கொடுக்காமல் வேறு எதைக் கொடுப் பது?'' என்று.

''எது என்பது உனக்குத் தெரியும். மது'' என்றார் பெரும் பிடுகர்.

''அதைக் கொடுக்க மருத்துவர் உத்தரவில்லை.''

''மருத்துவர் உத்தரவு போடுகிறாரா? இப்பொழுது செந் தலையில் எல்லோருமே உத்தரவு போடுகிறார்கள் போலிருக் கிறது.''

''எல்லாம் தங்கள் உடல்நிலையை முன்னிட்டுத்தான்.''

இதைக் கேட்ட பெரும்பிடுகர் நகைத்தார். ''எல்லோருக் கும் என் உடல் நிலையில் அக்கறை ஏற்பட்டிருக்கிறது. மருத்துவர் மதுவுக்குத்தடைபோடுகிறார். மகனும் பேரனும் நகைப்புக்குத் தடை போடுகிறார்கள்'' என்று சொல்லி மீண்டும் ராட்சஸத்தனமாக நகைத்தார்.

''அப்பா!'' மெள்ளக் குரல் கொடுத்தாள் தேவி.

''என்னம்மா!'' அன்பு சொட்டியது பெரும்பிடுகர் குரலில்.

''நீங்கள் உங்கள் மகனையும் பேரனையும் இகழ்ந்தது சரியல்ல.''

''ஏன்?''

''என்ன இருந்தாலும் அவர்கள் உங்கள் குழந்தைகள்.''

''அதனால்தான் இன்னும் உயிரோடிருக்கிறார்கள்'' என்ற பெரும்பிடுகர், ''குழந்தாய்! நீ ஏன் என் வயிற்றில் பிறக்க வில்லை. பிறந்திருந்தால் நாளைக்கே செந்தலையின் ராணி யாக்கிவிடுவேன். இங்கு அல்லி ராஜ்யத்தை நிலைநாட்டி யிருப்பேன். அப்படிச் செய்ய முடிந்திருந்தால் முத்தரையர்

ஆட்சி இன்னும் சில ஆண்டுகள் இங்கு நிலைத்திருக்கும்'' என்று உணர்ச்சியுடன் பேசினார்.

''இப்பொழுது ஏன் நிலைக்காது?'' என்று கேட்டாள் தேவி.

''உன் கண்களைச் சுற்றிலும் ஒட்டு பெண்ணே. செந்தலையை விழுங்க விஜயாலயன் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறான். அவன் மகனும் மருமகனும் சூரர்கள். படைகளை அன்றாடம் கவனித்து போருக்குச் சன்னத்தமாக்குகிறார்கள்...'' என்ற பெரும்பிடுகரை இடைமறித்த தேவி, ''மருமகனா! சோழ தேவருக்கா? அது யார்?'' என்று ஏதும் புரியாதது போல் கேட்டாள்.

பெரும்பிடுகர் புன்முறுவல் கொண்டார். ''இன்னொரு கேள்வி கேட்கவில்லையே தேவி'' என்றார் முறுவலின் ஊடே.

''என்ன கேள்வி தந்தையே?'' என்றாள் தேவி.

''சோழதேவன் மருமகள் யாரென்று கேட்கவில்லையே நீ'' என்றார் பெரும்பிடுகர்.

தேவி தன் முகத்தை பெரும்பிடுகர் முழங்காலில் நன்றாகப் புதைத்துக் கொண்டாள். அவள் பேசவில்லை. பெரும்பிடுகரே பேசினார், ''பெண்ணே! ஆதித்தன் மகாவீரன், இந்த செந்தலைக்கு உன்னையே ராணியாக்குவான்'' என்று.

''முடியாது'' என்றாள் தேவி.

''ஏன்?''

''நான் பணிப்பெண். அவர் அரச மகன்.''

''நீயும் அரச மகள்தான்.''

''இல்லை, உங்களால் தூக்கிவரப்பட்டவள். அனாதை. குலம் கோத்திரம் தெரியாதவள். என்னை எப்படி கைப்பிடிப்பார் சோழ இளவரசர். இது வீண் கனவு தந்தையே'' என்றாள்.



பெரும்பிடுகர் தீவிர சிந்தனையில் இறங்கினார். நீண்ட நேரம் அவர் பேசவில்லை. கடைசியில் பேசியபோது அவர் குரலில் கடுமை ஒலித்தது. ''தேவி! நீ அனாதையல்ல. குலம் கோத்திரம் இல்லாதவளுமல்ல'' என்ற பெரும்பிடுகர் அவள் தலையைப் பலமாகத் தமது முழந்தாள் மீது அமிழ்த்தினார்.

தேவியின் மார்பு படபடவென அடித்துக்கொண்டது. ''அப்படியானால் நான் யார்?'' என்று கேட்டாள் தேவி தழுதழுத்த குரலில்.

''அது பெரும் கதை.''

''சொல்லுங்கள்.''

''இப்பொழுது முடியாது. ஒரு நாள் சொல்லுவேன்.''

''அது எந்த நாள்?''

''என் மரண நாள். உயிர்போகும் சமயத்தில் சொல்கிறேன்'' என்ற பெரும்பிடுகர் குரலில் மரணத்தைப் பற்றிய அலட்சியம் இருந்தது.

தேவி சொன்னாள், ''அப்பா! நீங்கள் இறக்கவும் வேண்டாம். எனக்கு குலமும் வேண்டாம். திருமணங்கூட வேண்டாம்'' என்று. அத்துடன் உள்ளிருந்த சோகம் உணர்ச்சிப் பெருமூச்சாக வெளி வந்தது.

''நாளை நிலைமை மாறும்'' என்று மட்டும் சொன்னார் பெரும்பிடுகர்.

நிலைமை மாறத்தான் செய்தது. அந்த மாற்றம் மாறனுக்கும் இளையவேளுக்கும் இதய வெறியை ஏற்றியது. தேவி சஞ்சலப்பட்டாள். அந்த மாற்றத்துக்குப் பிறகு பெரும் பிடுகர் உயிர் தங்குவது மிகவும் கஷ்டம் என்பதை உணர்ந்தாள். அதைப் பற்றி பெரும்பிடுகர் சிறிதும் கவலைப்படவில்லை. அசாத்திய அலட்சியத்தோடு இருந்தார். அவர் பிடிவாதம் எல்லையை மீறி இருந்தது.

# 42. பட்டமும் திட்டமும்

பெரும்பிடுகு முத்தரையரின் பிடிவாதமும் மூர்க்க குணமும் உலகமறிந்ததென்றாலும், அது அத்தனை தூரத்துக்குப் போகமுடியும் என்பதை மாறன் பரமேசுவரனோ, இளைய வேளோ, மற்ற தளபதிகளோ சொப்பனத்தில்கூட நினைக்க வில்லை. யாராவது மந்திரி இருந்தால் அவரையாவது தனது முரட்டு யோசனையில் பெரும்பிடுகர் கலந்துகொண்டிருக்கலாம்.

மந்திரிகளால் எந்தவிதப் பயனும் இல்லையென்றும், தனது புத்திக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதைவிட மந்திரி பிரமாதமான யுக்தி எதையும் சொல்லிவிட முடியா தென்றும் திட்டமாக வாழ்க்கையில் நம்பிய பெரும் பிடுகர், தாம் செந்தலை அரசுப் பதவியை ஏற்றதுமே ஏற்கனவே இருந்த ஓரிரு மந்திரிகளையும் வேலையிலிருந்து நீக்கி விட்டார். அதை ஒரு மந்திரி ஆட்சேபித்தபோது ''உமக்கு வாளெடுத்துப் போராடத் தெரியுமா?'' என்று கேட்டார் பெரும்பிடுகர்.

மந்திரியிடம் அதுவரை அந்த மாதிரி கேள்வியை யாரும் கேட்காததால் ஒரு விநாடி மந்திரி பிரமை பிடித்து நின்றார். ''தெரியாது. அது அமைச்சன் வேலையல்ல'' என்று கூறினார்.

''வேறு என்ன வேலை அமைச்சருக்கு?'' என்று இடக் காகக் கேட்டார் பெரும்பிடுகர்.

''யோசனை சொல்லுதல்'' என்றார் மந்திரி.

''சுய யோசனை இல்லாதவனுக்குப் பிறர் யோசனை தேவைதான்''– பெரும்பிடுகர் மிக விஷமமாகப் பார்த்தார் மந்திரியை.



''பழமொழி தவறல்ல'' என்று மந்திரி சுட்டிக்காட்டினார்.

''அது என்னவோ?''

''மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்.''

அதைக் கேட்ட பெரும்பிடுகர் பெரிதாக நகைத்தார். ''நல்ல பழமொழி'' என்றும் இகழ்ச்சியாகப் பேசினார் நகைப் பின் ஊடே.

''பூபதி! பழமொழிக்கென்ன?'' என்று அமைச்சர் வினவினார்.

''மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்று சொன்னீர்..''

''ஆம்.''

''இப்பொழுது என்ன பொருள் செந்தலைக்கு வரக்கூடும்? யார் கொண்டுவரப்போகிறார்கள்?''

இதைக் கேட்ட மந்திரி விழித்தார். பெரும்பிடுகர் மந்திரி யைப் பரிதாபத்துடன் நோக்கினார். ''மந்திரி! முத்தரையர் இந்த நாட்டில் கும்பலாகப் புகுந்தபோது வாளுடன் வந்தனர். வீரமுள்ள படை வீரர்களுடன் வந்தனர். மந்திரிகளுடன் வர வில்லை. இங்கு வந்த பிறகு பிற்காலச் சந்ததிகள் வலு இழந் தனர். வாளின் உபயோகத்தை உணராமல் மந்திரிகளை வைத்துக்கொண்டனர். அதனால் நீர் சொன்ன பயன் கிடைத்தது. மந்திரிகள் வரும் பொருள் சொன்னார்கள். அதாவது வீரத்தி னால் பிறரை வெற்றிகொண்டு பொருள் வரும் மார்க்கத்தைச் சொல்லவில்லை. மக்களுக்குப் புதுப்புது வரிகளை விதித்துப் பொருள் திரட்டும் மார்க்கத்தைச் சொன்னார்கள். இதனால் மக்களுக்கு அவதி. ஆள்பவனுக்குச் சுகம். வாளைச் சுழற்றாமலே வரும்படி வந்தது. சுகம் கிடைத்தது. சுகம் வாளைப் பலவீனப் படுத்திவிட்டது. என் வீரர்கள் வீரமிழந்ததற்கு மந்திரிகள்தான் பொறுப்பாளி'' என்று நீண்ட பிரசங்கத்தைச் செய்தார். ''போகும்

போது நமது பொக்கிஷத்திலிருந்து வேண்டிய பணத்தை எடுத்துக் கொள்ளும்'' என்று அவர் வேலைக்கு முடிவும் கட்டினார்.

அதற்குப் பிறகு அவர் யார் யோசனையையும் கேட்க வில்லை. ஆனால் படைபலத்தைப் பெருக்கினார். யாரும் மீறமுடியாத கட்டுப்பாடுகளை விதித்தார். செந்தலையை யாரும் அணுகமுடியாத இரும்பு அரணாக்கிவிட்டார். அதற்குப் பிறகு அவர் நடத்திய இரண்டொரு போர்களில் ஒரு நிகழ்ச்சி யின்போதுதான் தேவியைத் தூக்கி வந்தார். தேவிக்கு வயது வந்து அவள் மங்கைப் பருவமடைந்ததும் பெரும்பிடுகர் மனைவி காலமானாள். இரும்பு மனம் படைத்த பெரும்பிடுகர் அந்தத் துக்கத்தை வெளிக்குக் காட்டவில்லையென்றாலும் ஆறாத பெரும் காயமொன்று அவர் இதயத்தில் இருந்ததை மாறன் பரமேசுவரன் கவனிக்கவில்லையே தவிர, தேவி உணர்ந்தாள்.

மனைவி காலமான பிறகு சில நேரங்களில் வெறித்த பார்வையைச் சாளரத்தின் மூலம் வெளியே வீசியபடி பெரும் பிடுகர் உட்கார்ந்திருந்ததை தேவி கவனித்தாள். சாப்பாட்டில் கூட அவர் அதிக அக்கறை காட்டாததையும் கவனித்தாள். முக்கால்வாசி நேரத்தைப் படைகளுடன் கழித்து வந்ததையும் பார்த்தாள். அவற்றுக்கெல்லாம் மெள்ளப் பரிகாரமும் செய் தாள். தானே வலிய படைத்தளத்துக்கு உணவுடன் சென்றாள் சில வேளைகளில். ''உன்னை யார் வரச் சொன்னது இங்கே? பருவமடைந்த பெண் வரக்கூடிய இடமா இது?'' என்று ஒரு முறை சீறினார் பெரும்பிடுகர்.

''நான் பணிப்பெண்தானே'' என்றாள் தேவி.

''அதனால்?'' என்று கேட்டார் பெரும்பிடுகர்.

''கடமையைச் செய்கிறேன்'' என்றாள் தேவி.

அன்று வேண்டா வெறுப்பாக உணவருந்தினார் பெரும் பிடுகர். ''நாளை முதல் இங்கு வரக்கூடாது'' என்று கட்டளை யும் இட்டார் தேவிக்கு.





''நீங்கள் உணவருந்த அரசமாளிகைக்கு வந்துவிட்டால் நான் ஏன் வருகிறேன்?'' என்றாள் தேவி.

பெரிய முரடரான பெரும்பிடுகர் தேவியைத் தமது ராட்சஸக் கண்களால் சுட்டுவிடுவதுபோல் பார்த்தார். ''உம் உம்'' என்று இரு முறை உறுமினார். ஆனால் மறுநாள் உணவு வேளைக்கு மாளிகைக்கு வந்து சேர்ந்தார். இப்படிப் படிப்படியாகப் பெரும்பிடுகர் மாறினார். அவர் உள்ளத்தை தேவி நிரந்தரமாகப் பிடித்துக்கொண்டாள். அதை நீண்ட நாள் வெளிக்குக் காட்டாவிட்டாலும் சிற்சில சிறு நிகழ்ச்சிகள் அதை வெளிப்படுத்தவே செய்தன.

அவள் பணிப்பெண்தானே என்ற நினைப்பில் உப தளபதியொருவன் அரண்மனைத் தோட்டத்தில் அவளை வழிமறித்தான். இச்சக வார்த்தைகள் பேசினான். காமத்தைக் கண்களால் கொட்டினான். அப்படி அவன் பேசிக்கொண்டிருந்த போது அவனுக்குப் பின்னால் தூர வந்துகொண்டிருந்த பெரும் பிடுகர் அதைக் கவனித்தார். உபதளபதி தனது இருகைகளை யும் இருபுறமும் தூக்கி நீட்டி தேவி மாளிகை செல்ல முடியாமல் தடுத்தான். அவனுக்குப் பின்னால் புலிபோல் ஓசைப்படாமல் வந்த பெரும்பிடுகர் ''உபதளபதி'' என்று அன்புடன் அழைத்தார்.

உபதளபதி திடுக்கிட்டுத் திரும்பினான், பூபதிக்குத் தலைவணங்கினான். ''தாங்கள் வருவதை நான் கவனிக்க வில்லை'' என்று உளறினான்.

அவன் சொன்ன சமாதானத்தைப் பெரும்பிடுகர் காதில் வாங்கிகொள்ளவில்லை. ''எதற்காக இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு நிற்கிறாய்?'' என்று கேட்டார் சாதாரணமாக.

''காரணம் ஏதுமில்லை...''– மென்று விழுங்கினான் உபதளபதி.

''காரணம் ஏதுமில்லை?''

''இல்லை.''

''மறுபடியும் கைகளைப் பழையபடி நீட்டு'' என்றார் பெரும்பிடுகர்.

வேறுவழியின்றி கைகளை முன்பு தேவியைத் தடுத்த தோரணையில் நீட்டினான். பெரும்பிடுகர் அவனை நெருங்கி ''கைகள் நீண்டு அழகாக இருக்கின்றன. ஆனால், வலு வில்லை'' என்றார்.

உபதளபதி மலைத்தான். ''இருக்கிறது பூபதி'' என்றான் திகிலுடன்.

''பார்ப்போம்'' என்ற முத்தரைய பூபதி தமது இரும்புக் கையால் நீட்டியிருந்த உபதளபதியின் வலது கையைச் சட் டென்று திருப்பினார். இரண்டு மூன்று எலும்புகள் சரேலென்று முறியும் சத்தம் கேட்டது. அந்தக் கையை விட்டார் பெரும் பிடுகர். உபதளபதியின் கை தொங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அங்கு வந்தான் மாறன் பரமேசுவரன். உபதளபதி யின் கையைப் பார்த்துத் திகைத்தான்.

''அப்பா! அவர் உபதளபதி'' என்றான்.

''ஆமாம், ஆனால் உபயோகத் தளபதியல்ல'' என்ற பெரும்பிடுகர், ''மாறா! அவன் கை எலும்பு முறிந்துவிடடது. அதற்கு ஏதாவது செய்'' என்று கட்டளையிட்டார்.

''மருத்துவரிடம் அனுப்புகிறேன்'' என்றான் மாறன்.

மாளிகைக்குச் செல்லத் திரும்பிய பெரும்பிடுகர், ''மருத்துவர் ஏதும் செய்ய முடியாது. அந்தக் கையை எடுத்து விடு'' என்று சொல்லிப் போய்விட்டார் மாளிகைக்கு, தேவி பின்தொடர.

மாளிகை சென்றதும் தேவி கேட்டாள், ''அவன் கையை எதற்காக வெட்டச் சொன்னீர்கள்?'' என்று.



''தலையை வெட்டச் சொல்லியிருப்பேன். அதில் ஏது மில்லை. அதனால் கையை வெட்டச் சொன்னேன்!'' என்று பெரும்பிடுகர் சமாதானம் சொன்னார்.

அதற்குப் பிறகு உபதளபதி ஒற்றைக் கையுடன் படைத் தளத்தில் இருந்தான். ''தளத்தைவிட்டு நகரக் கூடாது'' என்று பெரும்பிடுகர் உத்தவிட்டிருந்தார்.

அதைப்பற்றியும் தேவி கேட்டாள், ''தண்டனைதான் கொடுத்தாகிவிட்டதே. இன்னும் எதற்காக அவனை இருக்கச் சொல்கிறீர்கள்?'' என்று.

''அவன் இருப்பது மற்றவர்களுக்குப் படிப்பினை'' என்று காரணம் சொன்னார் முத்தரைய பூபதி.

அந்த ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு செந்தலை வீரர்கள் யாரும் தேவியைக் கண்ணாலும் காண அஞ்சினார்கள். பெரும் பிடுகருக்கும் மாறனுக்கும் அளித்த அதே மரியாதையை அவளுக்கும் அளித்தார்கள். நாட்கள் ஆக ஆ தேவிதான் பெரும் பிடுகரின் அந்தரங்க ஆலோசகர் என்பதும் புரிந்தது படைத் தலைவர்களுக்கு. அவளை அவர் சொந்த மகள் போல் நடத்தி வந்ததை அனைவருமே கண்டார்கள். சில வேளைகளில் அவளுக்கு வாட்போரும் அவரே பயிற்றுவித்ததை வீரர்கள் கண்டு வியந்தனர், ''நான் பெண்...'' என்று வாட் பயிற்சியை முதலில் எதிர்த்தாள் தேவி.

''பெண்ணாயிருந்தாலும் ஆணாயிருந்தாலும் தற்காப்புத் தேவை. வாள் பயிற்சி இருந்தால் அன்று அந்த உபதளபதியின் கையை நீயே வெட்டியிருக்கலாம்'' என்று பதில் சொன்ன பெரும்பிடுகர் தனக்குத் தெரிந்த வாள் வீச்சுத் தந்திரங்களை யெல்லாம் அவளுக்கும் சொல்லிக் கொடுத்தார்.

இப்படி வீராங்கனையாக வளர்ந்த தேவி முதல்நாள் பெரும்பிடுகர் தமது மகனிடமும் பேரனிடமும் காட்டிய

வெறுப்பையும் பிடிவாதத்தையும் கண்டு பெரிதும் துன்பத்துக்கு ஆளானாள். மறுநாள் அவரிடம் அதைப்பற்றிப் பேசவும் சந்தர்ப்பம் பார்த்திருந்தாள். அவர் மறுநாள் மாலையில் இளைப்பாறும் சமயத்தில் அவர் அந்தரங்க அறைக்குச் சென்றாள். அங்கு பெரும்பிடுகர் தனியாயில்லை. மூன்று படைத்தலைவர்கள், மாறன் பரமேசுவரன், இளையவேள் இவர்கள் எதிரே வணங்கி நிற்க தமது பஞ்சணையில் உட்கார்ந்திருந்தார். அவர் அவர்களிடம் என்ன சொன்னாரோ என்னவோ, தேவி அறைக்குள் நுழைந்ததும் மூன்று படைத்தலைவர்களும் அவளை வணங்கினர். தங்கள் வாட்களை உறைகளிலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தனர்.

வாட்களைப் பெற்றுக்கொண்ட தேவி, ''அப்பா! இதற்கென்ன அர்த்தம்?'' என்று வினவினாள் குழப்பத்துடன்.

''இன்று முதல் உனக்குப் பணிப்பெண் வேலை போய்விட்டது'' என்று கூறிய பெரும்பிடுகர் பயங்கரமாகப் புன்முறுவல் செய்தார்.

''அப்படியானால் அரண்மனையை விட்டு நான் வெளியேற வேண்டியதுதான்'' என்றாள் தேவி.

''தனியாக வெளியேற முடியாது'' என்றார் பெரும்பிடுகர்.

''ஏன்?'' என்று கேட்டாள் தேவி.

''செந்தலையின் இளவரசி தனியாகச் செல்ல முடியாது. எங்கும் மெய்காவலர் இருவர் தொடர்ந்து வருவார்கள்'' என்று சொன்ன பெரும்பிடுகர், ''இளவரசி! படைத்தலைவர்களின் வாட்களை அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிடு. இது முத்தரையர் சம்பிரதாயம்'' என்று கூறினார். தேவியை அருகே வரச்சொல்லி, ''தேவி! மாறனுக்கு அடுத்தபடியாக உன் சொல்தான் கட்டளையாகும் செந்தலையில்'' என்றும் கூறி அவள் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

தேவி திகைத்தாள். பெரும்பிடுகர் பேச்சில் இளையவேளைப் பற்றி எந்த பிரஸ்தாபமும் இல்லாததைக் கவனித்தாள். அன்று அவர் செய்த செயல் முத்தரையர் வரலாற்றில் ஒரு புது நிகழ்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமல்ல, தீராத விரோதியையும் பெரும்பிடுகருக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. இளையவேள் உள்ளூரப் பொருமினான். பணிப்பெண்ணுக்கு இளவரசிப் பட்டம் கொடுத்ததைச் சகிக்காத இளையவேள், வேறு ஒரு பயங்கரமான திட்டத்தையும் மனத்தில் உருவாக்கிக்கொண்டிருந்தான். இருப்பினும், அதை வெளிக்குக் காட்டாமல் பாட்டனின் முடிவுக்குத் தலைவணங்குபவனைப் போல் நடந்துகொண்டான். அடுத்த சில நாட்களில் சதா பெரும்பிடுகரைச் சுற்றிக்கொண்டிருந்தான். அவன் திட்டத்தை நிறைவேற்றும் சந்தர்ப்பமும் ஒரு நாள் கிடைத்தது.

# 43. இளையவேளின் நாகரீகம்

பணிப்பெண்ணாக இருந்த பெருந்தேவி இளவரசியாகி கோப்பெருந்தேவியாகிவிட்டதைக் கண்டு பொருமிய இளைய வேள் தன் மனத்தில் பயங்கரமான திட்டமொன்றை உருவாக்கிக் கொண்டிருந்தானென்றால், அதற்கு வித்திட்டது பெரும்பிடுகர் தான். மாளிகை உச்சிப்படியில் உட்கார்ந்து தகப்பனான மாறன் பரமேசுவரன் முன்னிலையில் இளையவேளைப் பற்றி அவர் இகழ்ச்சியுடன் பேசியதே இளையவேளுக்கு அளவற்ற சினத்தை மூட்டியிருந்தது. தனது வீரத்தைப் பற்றி அவர் ஏற்கனவே கேள்விப்பட்டிருப்பதாகக் கூறியதும், கூறி நகைத்ததும் அவன் உள்ளத்தைச் சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருந்தது. இதெல்லாம் போதாதென்று தனக்கும் தன் தந்தைக்கும் தெரியாமல் பணிப்பெண்ணை இளவரசியாக்கியதில் மனமுடைந்த இளையவேள், இந்த அவமானத்தைச் சும்மாவிடக் கூடாதென்ற முடிவுக்கு வந்து வெளிப்பகையை உள்ளடக்கி பெரும்பிடுகரைச் சுற்றலானான். அப்படிச் சுற்றிய காரணத்தால் திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பும் கிடைத்தது. அந்த வாய்ப்பை அளித்தவரும் பெரும்பிடுகர்தான்.

தேவி இளவரசியான மறுநாளே அதற்காக வீரர்களின் கொண்டாடத்தை வைத்தார் அணிவகுப்பு சமவெளியில். அதில் செந்தலை மக்கள் அனைவரையும வரவழைத்துப் பரிசுகள் கொடுத்தார். ''செந்தலை முத்தரையர் வம்சத்தில் ஒரு பெண் ணில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு ஒரு பெண் கிடைத்தாள். உங்களுக்கு ஒரு இளவரசி கிடைத்தாள்'' என்று கூறி குழலைச் சுற்றியிருந்த மெல்லிய தங்கக் கிரீடத்துடன் நின்றிருந்த தேவியை ஆசையுடன் சுட்டிக்காட்டினார். இதைக் கேட்ட மக்கள் ஆரவாரித்தனர். மகிழ்ச்சிக் கூச்சலிட்டனர்.



முத்தரைய பூபதிக்கும் இளவரசிக்கும் 'வாழிப் பாராட்டுதலை விரைந்து வழங்கினார். பிறகு கூத்தாடினார்கள். அந்த சத்தத் திலும் வீரமிருந்தது, வெறியும் இருந்தது. வெளி ஊர்களி லிருந்து நாடோடிக் கூட்டமாய் தமிழகத்தில் புகுந்து மூவரசர் களையும் அமுத்திவிட்ட களப்பிரர் வம்சத்தின் வாரிசுகள்தான் முத்தரையர் என்பதற்கு அத்தாட்சி கூட்டவே இந்தக் களி நடனம் நடந்தது. எங்கும் கூத்து, இரைச்சல், பாட்டு, இடையே கிரீச் கிரீச்சென்ற மகிழ்ச்சி ஒலிகள். ஆண்களும் பெண்களுமாக ஆடிய அந்தப் பெரும் கூத்து அணிவகுப்புப் பெருவெளியை ஏதோ போர் பூமிபோல் அடித்தது.

அந்த வெறியைக் கண்ட முத்தரைய பூபதியின் முகத்தில் இணையிலாப் பெருமை விரிந்து கிடந்தது. பக்கத்தில் நின்ற இளவரசியை உட்காரச்சொல்லி தானும் மேல் படியில் உட்கார்ந் தார். சிறிது நேரத்துக்கெல்லாம் மெய்மறந்தார். மக்கள் கூத்துக்காகக் கைகளை உயரத்தூக்கிப் போட்ட தாளத்துக்குத் தாமும் தாளம் போடத் துவங்கினார். அவர் பெரும் கைகள் ஒன்றுடன் ஒன்று மோதி 'பளேர் பளேர்' என்று தாள ஒலி எழுப்பியது. ''தேவி! நீயும் தாளம் போடு. இந்த வீரகீதத்தைப் பார். முத்தரையர் வீரம் இன்னும் நசிக்கவில்லை'' என்று கூறினார் பெரும்பிடுகர் பெருமை துலங்கிய குரலில்.

இளவரசி மிக இன்பமாகத் தாளம் போட்டாள். அவள் கை வளையல்கள் அணிவகுப்பு அரங்கில் கூத்தாடிய பெண் களின் கைதட்டலுக்குச் சுருதி தட்டுவது போலிருந்தது.

''பெண்ணே! உன் தாளத்தில் கீதமிருக்கிறது, வலு இல்லை'' என்றார் பெரும்பிடுகர். ''எப்படியிருக்கும்? நீதான் முத்தரையர் வம்சத்தில் பிறக்கவில்லையே'' என்றும் கூறினார். இதைச் சொன்னபோதும் அவர் கைத்தாளம் நிற்கவில்லை.

அப்பொழுது கேட்டாள் தேவி, ''சரி, முத்தரையர் வம்சத் தில் உதித்த உங்கள் பேரன் என்ன செய்கிறார் பாருங்கள்! கையைக் கட்டிக்கொண்டு நிற்கிறாரே'' என்று.

பெரும்பிடுகர் தமது கண்களைக் கீழேயிருந்த அடிப்படியில் செலுத்தினார். அந்தப் படியின் ஒரு ஓரத்தில் பக்கச் சுவரில் கைளை மார்பில் கட்டிய வண்ணம் சாய்ந்து நின்றிருந்தான் இளையவேள். அவன் முகத்தில் எதிரே நடந்த கூத்தைக் கண்டதால் வெறுப்பு தாண்டவமாடிக்கொண்டிருந்தது. ''அவன் முத்தரையர் குலமா என்பது சந்தேகமாயிருக்கிறது எனக்கு. ஆனால், அவன் என் பேரன்தான் என்பதற்கு அத்தாட்சிகள் நிரம்ப இருக்கின்றன. புலியின் கூட்டத்தில்கூட ஏதாவது ஒரு பூனை நுழைந்து விடுகிறது'' என்று அலுத்துக்கொண்டார் பெரும்பிடுகர்.

அன்றிரவு கொண்டாட்டம் முடிந்த பிறகு அந்தக் கேள்வியை நேரடியாகவே கேட்டார் இளையவேளை, ''நீ ஏன் இன்று முத்தரையர் வீரக்கூத்தில் கலந்துகொள்ளவில்லை?'' என்று.

அப்பொழுது அவருடன் இளையவேளும் மாறன் பரமேசுவரனும் உணவருந்திக்கொண்டிருந்தார்கள். அவரது கேள்விக்கு பதிலைச் சொல்ல அவரை ஏறெடுத்துப் பார்க்கவில்லை இளையவேள். உணவருந்தியபடி தலைகுனிந்த நிலையில் சொன்னான், ''அந்தக் காட்டுமிராண்டிக் கூத்து எனக்குப் பிடிக்கவில்லை'' என்று.

பெரும்பிடுகர் மெள்ள நகைத்தார் ஆட்டு இறைச்சியை கடித்துக்கொண்டே. ''உன் அப்பன் ஆடினானே?'' என்று கேட்டார் கையிலிருந்த எலும்பைச் சிறிது வாயிலிருந்து விலக்கி. அவர் கேள்வியில் இகழ்ச்சி கலந்த நகைப்பின் ஒலி இருந்தது.

இளையவேள் உணவை நாகரீகமாக அருந்திக்கொண்டிருந்தான். ''அவருக்குப் பழக்கமாயிருக்கலாம்'' என்று கூறினான் வெறுப்புடன்.

''உன் அப்பனைக் காட்டுமிராண்டி என்று சொல்கிறாயா?'' என்ற பெரும்பிடுகர், இளையவேளையும் நோக்கி மாறன் பரமேசுவரனையும் நோக்கினார்.



மாறன் பரமேசுவரன் தனது உணவுத் தட்டிலிருந்து தலையை உயர்த்தி ''அப்பா! அவன் குழந்தை'' என்று பரிந்தான் மகனுக்கு.

''உண்மை, மூளை முற்றவில்லை'' என்றார் பெரும்பிடுகர். அத்துடன் விட்டிருக்கலாம் அவர். ''உடலைப் பற்றியும் சந்தேகமாயிருக்கிறது'' என்றும் சொன்னார்.

பாதி உண்ட உணவை அப்படியே நிறுத்திவிட்டு வெளியேற முயன்றான் இளையவேள். ''சற்று நில்'' என்று முத்தரையர் பூபதி கூறவே வாயிற்படிக்குச் சென்று விட்டவன் திரும்பி நோக்கினான். இந்தக் காட்டுமிராண்டிக்குப் பிறகு நீ செந்தலையை ஆளவேண்டும். இந்தக் காட்டுமிராண்டிக் கூட்டத்திற்குத் தலைவனாக நீ விரும்புகிறாயா என்பதையும் யோசித்துக்கொள்'' என்று கூறி பக்கத்தில் அமர்ந்திருந்த மாறன் பரமேசுவரனைச் சுட்டிக்காட்டினார்.

இளையவேள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''நான் தகுதியில்லையென்றால் இளவரசிக்குப் பதவியைக் கொடுப்பதுதானே'' என்றான் கொதிக்கும் சொற்களில்.

பெரும்பிடுகர் குரல் மிக இன்பமாகத் திரும்பியது. ''இளையவேள்!'' என்று செல்லமாக அழைத்தார்.

''ஏன்?'' இளையவேளின் குரல் அப்பொழுதும் கடுமையாயிருந்தது.

''உனக்கு மனோதத்துவம் தெரிந்திருக்கிறது'' என்றார் செந்தலை அதிபதி.

''எப்படிப் புரிந்துகொண்டீர்கள் இதை?''

''தேவிக்கு முடிசூட்டவேண்டுமென்றாயே, அதனால்.''

அதற்குப்பிறகு இளையவேள் வாயிற்படியில் நன்றாகத் திரும்பி நின்றான். ''பாட்டனே! உன் ஆட்டமெல்லாம் அதிக நாளில்லை'' என்றான்.

''அது எனக்கு ஏற்கனவே தெரியும்.''

''எப்படி?''

''என் முதுகில் குத்த பல பேர் காத்திருக்கிறார்கள், மார்பில் குத்த முடியாத காரணத்தால். அவர்களுக்கு என் முதுகு கிடைக்கவில்லை. ஆனால்...''

''என்ன ஆனால்?''

''உனக்குக் கிடைக்கலாம்.''

''நான் நாகரீகம் படைத்தவன்.''

''கோழைத்தனத்துக்கு அப்படி ஒரு வேஷமும் உண்டு'' என்று சொன்ன பெரும்பிடுகர் பெரிதாக நகைத்தார்.

இளையவேள் அடுத்த விநாடி அங்கு நிற்கவில்லை. கதவை வேகமாகச் சரேலென்று சாத்திவிட்டுச் சென்றான். அதைக் கண்ட பெரும்பிடுகர் மகனை நோக்கி, ''மாறா!'' என்றார்.

''என்ன அப்பா?''

''பையன்...''

''உம்.''

''கதவை உடைக்கிறான்.''

பதில் சொல்லவில்லை மாறன் பரமேசுவரன். பெரும்பிடுகரே பேசினார், ''அவன் விறகு வெட்டுவதற்குத் தகுந்தவன். நமது அரண்மனைக்கும் விறகு தேவையாயிருக்கிறது'' என்றார்.

மாறன் பதில் பேசவில்லை. உணவை முடித்துக்கொண்டு எழுந்து சென்றான். அதுவரை உள்ளே நுழையாமல் வெளியிலிருந்தே நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தேவி, கையில் தண்ணீர் செம்புடன் உள்ளே நுழைந்து பெரும்பிடுகர் கையிலிருந்த ஆட்டு எலும்பைப் பிடுங்கிக்கொண்டாள். ''கை



அலம்புங்கள்'' என்று கூறி அவர் கை கழுவ ஜலமும் விட்டாள். அவர் கையைக் கழுவி எழுந்திருந்து ஆசனத்தில சாய்ந்த பிறகு சிறிது மதுவும் கொடுத்தாள் தேவி. ''இதென்ன மதுவா, மருந்தா?'' என்று பெரும்பிடுகர் கேட்டார்.

''சிறிதளவு சாப்பிட்டால் மருந்து. அதிகமாகக் குடித்தால் விஷம்'' என்றாள் தேவி.

அந்தச் சிறு குவளையிலிருந்த மதுவை அருந்திய பெரும்பிடுகர், ''தேவி! இன்னும் கொஞ்சம் கொடு'' என்றார்.

''முடியாது'' என்றாள் தேவி திட்டமாக.

ஆயாசப் பெருமூச்செறிந்தார் பெரும் பிடுகர். ''யாருக்காக என்னைக் காப்பாற்றுகிறாய் இப்படி?'' என்று கேட்டார்

''எனக்காக'' என்றாள் தேவி.

''அது தவறு தேவி. நாளை முதல் உனக்கு வாட்பயிற்சியளிக்கிறேன்'' என்றார் பெரும்பிடுகர்.

தேவிக்கு வாட்பயிற்சியளிக்கப்படுவதையும், குதிரை ஏற்றம், யானையேற்றம் முதலியவற்றில் அவளைப்பெரும்பிடுகர் பழக்குவதையும் பார்த்துக்கொண்டிருந்த இளையவேள் சீற்றம் கொண்டான். அவன் சீற்றத்தைக் கவனித்த மாறன் பரமேசுவரன் மகனுக்குப் புத்தி சொன்னான். ''இளையா! வீணாக பாட்டன் சினத்தைக் கிளறாதே. எனக்குப் பின் நீ அரசனாக விரும்பினால் அவரைத் திருப்தி செய்யப் பார். செந்தலையில் உன் நாகரீகம் செல்லாது. வீரந்தான் செல்லும்'' என்று.

தந்தையை உற்று நோக்கினான் இளையவேள். ''அதற்காக மிருகத்தனமாக நான் ஆடவேண்டுமா?'' என்றுகேட்கவும் செய்தான்.

''அடிப்படையில் எந்த மனிதனும் மிருகந்தான். அதிலிருந்து அவன் மீளமுடியாது. மிருகத்தனத்தை ஆடைமறைக்க

லாம். நாகரீகம் என்ற போர்வை மறைக்கலாம். ஆனால், எதுவும் மிருகத்தனத்தை நீக்கமுடியாது. போரில் நிகழ்வது நாகரீகமா, மிருகத்தனமா? மிருகத்தனத்தைவிட கேவலமான போர் என்னும் கூட்டுக் கொலையில் நாம் சம்பந்தப்பட வில்லையா? அறிவிருந்தால் ஆழ்ந்து சிந்தித்துப் பார். அரசு ஆசையிருந்தால் பாட்டனைச் சரிக்கட்டிக்கொள்'' என்று மகனுக்கு உபதேசித்தான் மாறன் பரமேசுவரன்.

அன்று உண்மையில் சிந்தித்த இளையவேள் ஒரு முடிவுக்கு வந்தான். அன்றிலிருந்து பெரும்பிடுகரின் அடிமை யானான். அவர் தேவிக்கு வாட்போர் கற்றுக் கொடுக்கும் போதெல்லாம் கூட இருந்தான். அடிக்கடி செந்தலையைச் சுற்றிப் பலரைச் சந்தித்தான். அவன் செயலெல்லாம் பெரும் பிடுகர் காதுக்கு வந்தது. ஆகவே ஏதோ ஒரு முடிவுக்கு வந்து தினந்தோறும் பேரனுடன் உணவருந்தினார். உணவுக்குப் பிறகும் பேரனைத் தன்னுடன் நிறுத்திக்கொண்டு அளவளாவி வந்தார். அவனைத் தூண்டி தேவிக்குத் தெரியாமல் ரகசியமாக மதுவையும் சற்று அதிகமாக அருந்தினார். அத்தகைய ஒரு நாளிரவில் மதுவை நிரம்பக் குடித்துவிட்டு அது போதா தென்று, ''இளைய முத்தரையா! அதோ அந்த அறையில் ஒரு மஞ்சத்தில் பெரிய மதுக்குப்பி இருக்கிறது. அதை ஒரு குவளை யில் ஊற்றிக்கொண்டு வா'' என்று கெஞ்சினார்.

அந்த அறைக்குள் சென்ற இளையவேள் நீண்ட நேரம் வெளியே வரவில்லை. பிறகு அவன் வந்தபோது கையில் மதுக்குவளை இருந்தது. அதைக் கொண்டுவந்து பெரும் பிடுகரிடம் கொடுத்து ''பூபதி! அருந்துங்கள்'' என்றான்.

பூபதி குவளையை வாங்கி சிறிது ஆலோசித்தார். பிறகு குவளையை இளையவேளிடம் கொடுத்து ''அப்பா! நீ முதலில் குடி'' என்றார்.

''எனக்கு வேண்டாம்'' என்றான் இளையவேள். அவன் குரலில் ஆட்டமிருந்தது.



''உம் குடி''– இடியென ஒலித்தது பெரும்பிடுகர் குரல். அவர் குரலில் சிறிதும் ஆட்டமில்லை.

அவர் குரலைக் கேட்ட தேவி ஓடி வந்தாள் உள்ளே. ''இது என்ன?'' என்று வினவினாள் இளையவேளையும் தந்தையும் நோக்கி.

''பேரன் நாகரீகத்தைக் காட்டுகிறான்'' என்று பெரும் பிடுகர் பேய்ச் சிரிப்பாகச் சிரித்தார்.

# 44. சோதனை

பெரும்பிடுகர் சிரித்த பேய்ச்சிரிப்பு அவர் அறையை மட்டுமின்றி உள்ளறையையும் அதிரச் செய்தது. அத்துடன் அவருக்குச் சற்றுத் தூரத்திலிருந்த அலங்கார விளக்கையும் திகிலடையச் செய்ததால் அந்தப் பதுமை விளக்கின் சுடர் படபடவென அசைந்தது பல முறை. பெரும்பிடுகர் சிரிப்பில் பயங்கரம் மட்டுமன்றி ஏதோ ஒரு நுட்பமும் கலந்திருந்ததை ஊகித்துக்கொண்ட தேவி, இளையவேளுக்காகப் பரிந்து பேச முற்பட்டு, ''அண்ணனை அனாவசியமாக நடுங்க வைக்கிறீர்கள்'' என்று குற்றமும் சாட்டினாள்.

தேவியின் சொற்களைக் கேட்ட பெரும்பிடுகர் சிரிப்பைச் சட்டென்று அடக்கிக்கொண்டார். ஆனால், அடுத்து அவர் முகத்தில் விரிந்த விஷமக் களை பேய்ச்சிரிப்பைவிட பயங்கரமாக இருந்தது. ''அண்ணனா!'' என்ற அவர் கேள்வியிலும் அந்த விஷமம் நன்றாக ஊடுருவி நின்றது.

''ஆமாம். அதிலென்ன சந்தேகம்?'' என்று தேவி கேட்டாள், பெரும்பிடுகர் உள்ளத்தில் என்ன எண்ணம் ஓடுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல்.

''உனக்கு அதில் சந்தேகமில்லையே?'' என்று மறுபடியும் கேட்டார் பெரும்பிடுகர்.

''இல்லை'' என்றாள் தேவி.

''உன்னைப் போல்தானே அவனும் நடந்துகொள்ள வேண்டும்?''

''ஆமாம்.''

''நான் சொல்வதை இவன் மீறுகிறான். அது தவறுதானே?''

''ஆம்.''

''அப்படியானால் அந்தக் குவளையிலுள்ள மதுவைக் குடிக்கச் சொல்''– இதைத் திட்டமாகசச் சொன்னார் பெரும்பிடுகர்.

தேவி, இளையவேளை நோக்கித் திரும்பி அவன் முகத்திலிருந்த கிலியைக் கவனித்தாள். அதற்குக் காரணம் அவளுக்குப் புரியவில்லையாகையால், ''அண்ணா! அப்பா சொல்கிறபடி கேட்பதில் உனக்கு என்ன ஆட்சேபணை?'' என்று விசாரித்தாள்.

இளையவேள் தேவியைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தான். ''இதை நீதான் குடியேன்'' என்று குவளையை ஆத்திரத்துடன் அவளை நோக்கி நீட்டினான்.

''அவளைக் குடிக்கச் சொல்லவில்லை நான்'' என்று குறுக்கே புகுந்தார் பெரும்பிடுகர்.

தேவி தனது கண்களால் அன்புடன் நோக்கினாள் இளையவேளை. ''அண்ணா! இதென்ன பிடிவாதம். அப்பா சொல்கிறபடி சிறிது மதுவைத்தான் குடிப்பதுதானே'' என்று கெஞ்சினாள்.

இளையவேள் முகத்தில் அச்சத்துடன் வெறியின் சாயையும் விரிந்தது. ''புரிகிறதடி. நீயும் பாட்டனும் சேர்ந்து செய்த சதிதான் இது'' என்று கூறினான் இளையவேள்.

பெரும்பிடுகர் முகத்தில் சாந்தம் நிலவியது. ''செந்தலை இளவரசியை மரியாதைக் குறைவாகப் பேசுவது குற்றம். அப்படிப் பேசுபவர்களின் நாக்கைத் துண்டிப்பது முத்தரையர் சம்பிரதாயம்'' என்றார் பெரும்பிடுகர் சாந்தம் குரலிலும் ஒலிக்க.

இளையவேள் விழித்தான். ''உங்கள் தந்திரம் புரிகிறது. இந்த அனாதைக்காக, உங்கள் அபிமானப் புத்திரிக்காக, என்னை ஒழித்துக்கட்டப் பார்க்கிறீர்கள்'' என்று கூவினான் இளையவேள்.

தேவிக்கு ஏதும் புரியாததால், ''அப்பா! இது என்ன? எனக்கு ஏதும் புரியவில்லையே!'' என்றாள்.

பெரும்பிடுகர் அன்புடன் நோக்கினார் தேவியை. ''தேவி! அந்தக் குவளை மதுவை வாங்கி நீ ஒரு வாய் குடி'' என்றார் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''நான் மது அருந்தும் பழக்கமில்லையே'' என்றாள் தேவி.

''எனக்காக ஒரு வாய் குடிக்கக் கூடாதா?'' என்று கெஞ்சினார் பெரும்பிடுகர்.

தேவி சிறிதும் யோசிக்கவில்லை. ''அண்ணா! அந்தக் குவளையை இப்படிக் கொடுங்கள்'' என்று இளையவேளிடமிருந்து மதுக்குப்பியை வாங்கி மடமடவென்று இரண்டு வாய் குடித்தாள். அந்தக் குப்பியைப் பெரும்பிடுகர் தமது கையில் வாங்கிக்கொண்டு, ''தேவி! இப்பொழுது அவன் முகத்தைப் பார்'' என்று தமது கையால் இளையவேளைச் சுட்டிக் காட்டினார்.

தேவி தனது அழகிய கண்களை இளையவேளின்மீது திருப்பினாள். அவன் முகத்தில் பெரும் பிரமை குடிகொண்டிருந்தது. ''சூழ்ச்சி சூழ்ச்சி'' என்று கத்திவிட்டு வெளியே ஓடப் பார்த்தான் இளையவேள். அறை வாசலிலிருந்து வந்த இரு வீரர்கள் ஈட்டிகளால் அவனைத் தடுத்தார்கள்.

கள்ளன் போல் விழித்தான் இளையவேள். ''சூழ்ச்சி என்னவென்று சொல்'' என்று இடிபோல் குரலை உயர்த்தினார் பெரும்பிடுகர்.

அதுவரை கேட்ட பேய்ச்சிரிப்பாலும் இடிபோல் பெரும்பிடுகர் குரலை உயர்த்தியதாலும் தனது அறையிலிருந்து அங்கு வந்த மாறன் பரமேசுவரன் அங்கிருந்த நிலைகண்டு பிரமித்தான் ஒரு விநாடி. இளையவேளின் முகத்திலிருந்த பீதியைக் கண்டு, ''மகனே! என்ன நடந்தது?'' என்று விசாரித்தான்.



இளையவேள் பதிலேதும் பேசவில்லை. ''இவர்கள் சூழ்ச்சி நடந்தது. வேறெதுவுமில்லை'' என்று இளையவேள், பெரும்பிடுகரையும் தேவியையும் சுட்டிக்காட்டினான்.

தந்தையின் சுபாவத்தை நன்றாக அறிந்திருந்த மாறன் பரமேசுவரன், ''அப்பா! இவனுக்கு என்ன சோதனை வைத்தீர்கள்?'' என்று கேட்டான்.

''பேரன் நாகரீகமுடையவன். நம்மைப் போல் காட்டுமிராண்டி வர்க்கமல்ல. நாகரீகத்தைச் சோதித்தேன்'' என்றார் பெரும்பிடுகர்.

''நாகரீகமா!'' என்ன் மாறன் வியப்பு நிரம்பபிய குரலில்.

''ஆம், மாறா! நாம் காட்டுமிராண்டிகள். பிறரைக் கொல்ல கத்தி, கேடயம், வேல் இவற்றை உபயோகப்படுத்துகிறோம். நாகரீகமுள்ளவர்கள் விஷம் வைத்துக் கொல்லப் பார்க்கிறார்கள்'' என்ற பெரும்பிடுகர் மகன், பேரன் இருவரையும் நோக்கி நகைத்தார்.

''என் மகன் தங்களை விஷம் வைத்துக் கொல்லப் பார்த்தானா?'' என்று வினவினான் மாறன் நேரடியாக.

''எண்ணம் அதுதான். நடந்தது வேறு'' என்ற முத்தரையபூபதி மேலும் சொன்னார்: ''மாறா! அந்த உள்ளறையிலிருந்த மதுவை கொண்டுவரச் சொன்னேன் பேரனை. உள்ளே போனவன் லேசில் வரவில்லை. காரணம் எனக்குத் தெரியும். அந்த மதுக்குப்பியின் பக்கத்தில் 'விஷம்' என்று எழுதி ஒரு குப்பி வைத்திருந்தேன். அதை மதுவில் கலந்துகொண்டுவந்தான். அது விஷமல்லவென்பது அவனுக்குத் தெரியாது. அதை அவனையே குடிக்கச் சொன்னேன். குடிக்க மறுத்தான், திகிலடைந்தான், கை நடுக்கம் கொண்டான். கள்ளன் போல் விழித்தான். பிறகு தேவியை மரியாதையின்றிப் பேசினான். ஆக குற்றங்கள் மூன்று. ஒன்று எனக்கு விஷம் வைக்க முயன்றது. இரண்டு இளவரசியை மரியாதைக் குறைவாகப்

பேசியது. மூன்றாவது நான் ஏதோ சூழ்ச்சி செய்துவிட்டதாக என்மேல் அவதூறு கூறியது. இந்த மூன்று குற்றங்களுக்கும் என்ன தண்டனை விதிக்கலாம்?'' இப்படி விஷயத்தை விளக்கிய பெரும்பிடுகர் புன்முறுவல் பூத்தார்.

மாறன் அதிர்ச்சியடைந்து நின்றான். ''இதெல்லாம் உண்மையா? என்று வினவினான் மகனை நோக்கி.

''இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன்'' என்ற பெரும்பிடுகர், ''அதே குப்பியை தேவியிடம் கொடுக்கச் சொன்னேன் இளையவேளை. கொடுத்தான். அவளைக் குடிக்கச் சொன்னேன். குடித்தாள். விஷமிருந்ததாக நினைத்து தான் குடிக்க மறுத்த குப்பியை தேவியிடம் கொடுத்ததால் செந்தலை இளவரசியைக் கொலைசெய்ய முயன்ற குற்றமும் பேரனைச் சாரும்'' என்று விளக்கவும் செய்தார்.

எவ்வளவு குறையிருந்தாலும் வீரத்தில் குறைவில்லாத மாறன் பரமேசுவரன், ''என்ன தண்டனை கொடுக்கப் போகிறீர்கள் இவனுக்கு?'' என்று வினவினான் எந்தவித சலனமுமின்றி.

''நீதான் எனக்கு அடுத்தபடி முடிசூட வேண்டியவன். தண்டனை என்னவென்று நீயே சொல்'' என்றார் பெரும்பிடுகர்.

''தாங்கள் சொன்னதில் எந்த ஒரு குற்றத்துக்கும் மரண தண்டனை உண்டு'' என்ற மாறன், ''தந்தையே! எனக்கு ஒரு வரம் வேண்டும்'' என்றான் பணிவு நிரம்பிய குரலில்.

''எதை வேண்டுமானாலும் கேள்'' என்றார் பெரும்பிடுகர்.

''என் மகன் குற்றத்திற்கு தண்டனையை வேறு யாரும் நிறைவேற்றக்கூடாது. என் கையாலேயே இவனை வெட்டிப் போட அனுமதிக்கவேண்டும்'' என்றான் மாறன். அவன் பேச்சில் உறுதியிருந்தது. குரலில் அரச தோரணை தெளிவாக ஒலித்தது.



பெரும்பிடுகர் மகனை பெருமை நிரம்பிய கண்களால் நோக்கினார். ''மகனே! முத்தரையர் ரத்தம் கலப்பில்லா ரத்தம், உனது உடலில் ஓடுகிறது. அரசநீதி உன் முடிவில் ஒளிவிடுகிறது. இருப்பினும் அவன் உன் மகன். சற்றுக் கருணை காட்டு'' என்றார்.

தகப்பன் சொற்களைக் கேட்டதும் பாதி உயிர் போய் விட்ட நிலையிலிருந்த இளையவேள், பாட்டன் பரிதாபத்தைக் கண்டதும் சிறிது உயிர்வரப் பெற்றான். சரேலென்று யாரும் எதிர்பாராத வண்ணம் பாட்டன் முன் மண்டியிட்டு கட்டிலிலிருந்து தொங்கிய அவர் பாதங்களை முகத்தில் புதைத்துக் கொண்டான். விம்மி விம்மி அழவும் செய்தான். ''நான் துரோகி. என்னைக் கொன்றுவிடுங்கள், கொன்றுவிடுங்கள்'' என்று கூவினான் விம்மலுக்கிடையே.

''தம்பி! எழுந்திரு'' என்று கருணையுடன் கூறினார் பெரும்பிடுகர். மெள்ள எழுந்திருந்தான் இளையவேள். ''எதற்கும் இளவரசியின் மன்னிப்பைக் கேள்'' என்று ஒரு கணையைத் தொடுத்தார்.

இளையவேள் எழுந்து நின்றான். அவன் அச்சமெல்லாம் தொலைந்து விட்டது. ''பாட்டனே! என் தந்தை கையால் சாகிறேன். பெண்ணின் காலைப்பிடித்து நான் உயிர் வாழ விரும்பவில்லை'' என்றான். அவன் குரலில் உறுதியிருந்தது. அந்த உறுதியுடனும் வீரத்துடனும் தந்தையை நோக்கித் திரும்பிய இளையவேள், ''தந்தையே! வாருங்கள். உங்கள் கடமையைச் செய்யுங்கள்'' என்றான்.

மாறன், பெரும்பிடுகரை நோக்கினான். பெரும் பிடுகர் முகத்தில் சிறிது மாற்றமிருந்தது. ''மாறா! இவனுக்கு உன் இரத்தமும் இருக்கிறது. அதனால் சாவுக்கும் துணிகிறான். அவனை இம்முறை மன்னித்துவிடுவோம். இந்த அறையில் நடந்தது வெளியே யாருக்கும் தெரிய வேண்டாம். இது குடும்ப ரகசியமாக இருக்கட்டும்'' என்றார்.

மாறன் பரமேசுவரன் முகத்தில் குழப்பம் தெரிந்தது. இரண்டு விநாடிகள் பேசாமல் நின்றான். பிறகு மகனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அறையைவிட்டு வெளியேறினான். ''நீயும் போகலாம்'' என்று இளையவேளை நோக்கிக் கூறினார் பெரும்பிடுகர். இளையவேள் அறையை விட்டுச் சென்றான் தயக்கத்துடன். அவன் நடையில் அதுவரை காணாத தளர்ச்சியிருந்தது.

தேவி, பெரும்பிடுகர் அருகில் வந்து அவர் தோள்மீது கையை வைத்தாள். ''அப்பா! இது எதற்கு இந்த நாடகம்?'' என்று வினவினாள் அன்புடன்.

''மனிதர்களை எடைபோடுவது அவசியம். அதுவும் அரசனாயிருப்பவன் தன்னைச் சுற்றியுள்ளவர்களை எடை போடுவது மிகமிக அவசியம். இல்லையேல் அரசன் அதிக நாள் ஜீவிக்க முடியாது'' என்றார். வேறொன்றும் சொன்னார். ''இந்த நாடகத்தின் விளைவு நாளைக்குப் புரியும்'' என்று.

விளைவு புரிந்தது மறுநாள். விசித்திரமான விளைவு தான். இருப்பினும் எதிர்பாராத விளைவு அல்ல. இளைய வேளை மறுநாள் செந்தலையில் காணவில்லை.

# 45. புது ஓலை! புரிந்த விவரம்!

**உ**றையூர் அரண்மனையின் மந்திராலோசனை அறையில், இருபுறமும் சிங்கத்தலைகள் கடையப்பெற்ற மஞ்சத்தில் உட்கார்ந்திருந்த விஜயாலய சோழதேவன், எதிரே கைகட்டி நின்றிருந்த அச்சுதப் பேரறையரை நோக்கி 'செந்தலையிலிருந்து புதிதாக ஏதாவது செய்தி உண்டா?'' என்று வினவினான்.

அச்சுதப் பேரறையர் உடனடியாகப் பதில் செல்ல முடியாமல் தயங்கினார். ''உண்டு. ஆனால், நம்பத்தகாத தாயிருக்கிறது'' என்று கூறினார் தயக்கத்தைக் குரலிலும் காட்டி.

விஜயாலயன், அமைச்சரின் தயக்கத்தைக் கவனித்தானென்றாலும் அதைப் பற்றி அக்கறை ஏதும் காட்டாமல் ''அச்சுதரே! உலகத்தில் நம்பத்தகாதது ஏதேதோ தினம் நடக்கிறது. ஆனால், அவையெல்லாம் அசத்தியம் என்று சொல்வதற்கில்லை. உண்மையும் சில சந்தர்ப்பங்களில், நம்பத்தகாத மாதிரி இருக்கிறது. அதற்காக அவற்றை நாம் ஒதுக்கிவிட முடியாது'' என்று கூறி இளநகை கொண்டான்.

சோழவேந்தன் சொற்களை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த அச்சுதர், ''ஆம் மன்னவா! தாங்கள் சொல்வதுபோல் நம்பத்தகாத விஷயங்களில் உண்மையிருப்பதும் உண்டு. ஆனால், செந்தலையிலிருந்து இன்று காலை கிடைத்துள்ள செய்தியை என்னால் அடியோடு நம்ப முடியவில்லை'' என்றார். ''இருப்பினும் தங்களிடம் சொல்வது எனது கடமை. இங்கு வந்தாளே ஒரு பெண், இதயகுமாரனை அழைத்துக்கொண்டு. அவள் செந்தலை இளவரசியாகிவிட்டாளாம்'' என்று கூறினார்.

இந்தச் செய்தியால் விஜயாலயன் எந்தவித அதிர்ச்சியோ வியப்பையோ காட்டுவானென்று அச்சுதர் நினைத்திருந்தால்

ஏமாந்தே போனார். அந்தச் செய்தியை சர்வசகஜமாக வர வேற்ற சோழ மன்னன், ''இது நாம் எதிர்பார்த்ததுதானே?'' என்றான்.

''நாம் எதிர்பார்த்ததா!'' அச்சுதர் பதிலில் வியப்பு மித மிஞ்சி ஒலித்தது.

''ஆம். அந்தப் பெண்ணை இங்கு பார்த்ததுமே அவள் அரசகுலத்தைச் சேர்ந்தவள்தானென்று நினைத்தேன். அவள் தோரணை, பேச்சு எல்லாமே அப்படியிருந்தது. உமக்கு மட்டும் அப்படித் தோன்றவில்லையென்று நினைக்கிறேன்'' என்று சொன்னான் சோழ மன்னன்.

''இல்லை. அவள் முத்தரையர் அரண்மனைப் பணிப் பெண் என்பதை முன்னதாக அறிந்திருந்தேன்.''

''அதனால்?''

''பணிப்பெண் இளவரசியாக முடியாதென்று நினைத் தேன்.''

''நீர் நினைத்தது இருக்கட்டும். அவள் தோரணையைப் பற்றி என்ன நினைத்தீர்?''

''தோரணையா!

''ஆம் அச்சுதரே! திரும்பிச் செல்லும்போது தான் இங்கு வருவதாயிருந்தால் சோழநாட்டு மகாராணியாக வருவதாகச் சீறிவிட்டுப் போனாளல்லவா?'' என்று வினவிய மன்னன், ''அச்சுதரே! அந்தப் பெண்ணிடம் வீரமிருந்தது. பேச்சில் உறுதியிருந்தது. அவள் இளவரசியானதில் வியப்பில்லை. பெரும்பிடுகர் யாரையாவது ஒரு பதவிக்கு உயர்த்தினால் தகுதியில்லாமல் உயர்த்தமாட்டார்'' என்றான்.

''நீங்கள் போகிற போக்கைப் பார்த்தால் இப்பொழுது அவள் இங்கிருந்தால் உங்கள் மகனுக்கு அவளை மணமுடித்து விடுவீர்கள் போலிருக்கிறது!'' என்று கேட்டார் அச்சுதர்.



''அந்த வேலை நமக்கிருக்காது. ஆதித்தனும் அந்தப் பெண்ணுமே திருமணத்தை முடித்துக்கொள்வார்கள். பேருக்கு நமது அனுமதியைக் கேட்பார்கள்'' என்ற சோழமன்னன் புன் முறுவல் கொண்டான். அந்தப் புன்முறுவலில் ஆனந்தம் பொங்கியதை அமைச்சர் கண்டார்.

அரசன் மகிழ்ச்சியைக் கண்டதால் சிறிது சினமும் அடைந்த அச்சுதப் பேரறையர், ''மன்னவா! இது முறையல்ல'' என்றார் குரலில் தமது உணர்ச்சியை லேசாகக் காட்டி.

''எது?'' என்று கேட்டான் மன்னன்.

''குழந்தைகளை அவர்கள் இஷ்டப்படி நடக்கவிடுவது'' என்றார் அச்சுதர்.

''சரி! அவர்களை நமது இஷ்டப்படி நடக்கச்செய்வது எப்படி?'' என்று கேட்டான் மன்னன்.

''மன்னர்களுக்குத் தனி வாழ்க்கை கிடையாது, அரசு நலத்தை முன்னிட்டுத்தான் அவர்கள் வாழ்க்கை என்று திட்ட மாகச் சொல்லிவிடுங்கள்'' என்றார் அமைச்சர்.

இதைக் கேட்டதும் விஜயாலயன் வாய்விட்டே நகைத் தான். ''அச்சுதரே! அதைச் சொல்லும் உரிமையை உமக்கே அளித்துவிட்டேன். நீங்களே செய்யுங்கள் அந்தப் பணியை'' என்றான் நகைப்பின் ஊடே.

''மன்னவா! இது விளையாடும் விஷயமல்ல'' என்றார் அச்சுதர்.

''வினைதான்''– மன்னன் குரலில் விஷமம் இருந்தது.

''வினையா?''

''ஆம்.''

''எப்படி மன்னவா?''

''நீர் படைத்தலைவனை அழைத்துவர நந்தவனத்துக்குப் போனீரல்லவா?''

''ஆம்.''

''அங்கு படைத்தலைவன் உம்மைச் சனியன் என்று அழைத்ததாகச் சொன்னீரே!''

''நேர்முகமாக அழைக்கவில்லை. ஏதோ காமப்பித்தனின் உளறல் அது.''

''காமுகர் இருவராயிருக்க வேண்டுமே.''

''ஆம். இன்னொருவர்...''

''என் மகள் கண்ணழகி.''

''தங்களுக்குத் தெரியாதது எதுவுமில்லை.''

''அப்படியானால் அவளைக் கண்டிக்க என்ன செய்தீர்!''

ராஜதந்திரத்தில் இணையற்றவரென்று பெயர் பெற்றிருந்த அச்சுதர் இதைக் கேட்டுப் பிரமித்தார். ''மன்னவா! இளவரசியின் விஷயம் வேறு. இருவரும் சோழநாட்டவர்'' என்று இழுத்தார்.

''நாட்டுக்கு நாடு, மக்களுக்கு மக்கள் நீதி மாறுமா?'' என்று வினவினான் சோழதேவன்.

''ஆகாது மன்னவா! இருப்பினும் முத்தரையருடன் சம்பந்தம்...'' என்று இழுத்தார், அலுத்துக்கொண்டார், அச்சுதப் பேரறையர்.

அச்சுதப் பேரறையருக்கு முத்தரையரிடம் இருந்த வெறுப்புக்குக் காரணம் சோழ மன்னனுக்குத் தெரிந்தே இருந்தது. தனது குடும்பத்துக்கும் இதயகுமாரன் குடும்பத்துக்கும் முத்தரையர்களால் ஏற்பட்ட கொடுமையால் அவர் மனம் நீதியைக் கவனிக்க மறுக்கிறது என்பதைப் புரிந்துகொண்டான் விஜயாலயன். ஆகவே மெள்ளச் சொன்னான் அச்சுதரை நோக்கி. ''அச்சுதரே! ஒரு தலைமுறையின், மக்களின், மக்களை ஆள்பவர்களின் அநீதிகளுக்காக மனிதனின் அடிப்படைக்



குணங்களையோ உணர்ச்சிகளையோ மாற்ற முடியாது. நீர் எந்த முத்தரையரை வெறுக்கிறீரோ அந்தக் குலத்துப் பெண்தான் இதயகுமாரனைக் காத்து இங்கு அழைத்து வந்தாள் என்பதை நீர் மறுக்க முடியாது. அதுவும் ஈவிரக்கமற்ற இரும்பு மனத்தினரான பெரும்பிடுகர் இந்தப் பெண்ணின் இஷ்டத்துக்கு வளைந்திருக்கிறார் என்பதையும் நீர் கவனிக்க வேண்டும். முத்தரையர் படை போருக்குச் சித்தமாகிவிட்டதாக நீரே சொன்னீர். நமது படைகளும் சித்தமாயிருக்கின்றன. இனி போரை யாரும் தவிர்க்க முடியாது. காதலும் போரைப் போலத்தான். அதையும் யாரும் தடுக்கமுடியாது. விளைவது விளைந்தே தீரும். காதலைத் தவிர்க்கக் கூடியது சாதல் ஒன்றுதான். அந்த சாதலையும் நாம் தவிர்க்க முடியாது. தவிர்க்க முடியாத விஷயங்கள் இம்மாதிரி உலகத்தில் பல இருக்கின்றன. இதற்கெல்லாம் தனி மனிதன் கவலைப்படுவது தவறு'' என்று.

மன்னன் விளக்கத்தைக் கேட்ட அச்சுதர் மலைத்தார். சோழதேவன் விவரணத்தில் தத்துவங்கள் பல அடங்கியிருப்பதைக் கண்டார். அதற்குமேல் தாம் மன்னனிடம் எதைச் சொன்னாலும் செல்லாது என்பதைப் புரிந்து கொண்டதால் 'வருகிறேன் மன்னவா!'' என்று கூறி விட்டுத் திரும்பிச் செல்ல முயன்றார்.

''ஒரே ஒரு விஷயம்'' என்று கூறிய மன்னன் குரல் அவரைத் தடுத்து நிறுத்தி மறுபடியும் மன்னனை நோக்க வைத்தது.

''அந்தப் பெண்...'' என்று துவங்கினான் மன்னன்.

''அவளுக்கு என்ன?'' அமைச்சரின் குரலில் சலிப்பு இருந்தது.

''அவள் எனக்கு மருமகளாக வருவாளானால் அதை விட சோழ நாட்டுக்கு நல்லது எதுவும் இல்லை'' என்றான்

விஜயாலயன். அவன் முகத்தில் பெரிதும் சாந்தி நிலவியது. குரலில் பெருமை துலங்கியது.

''அப்படியா மன்னவா!''– அச்சுதர் வெறுப்பைக் காட்டினார்.

''அவள் வீராங்கனை. என் மகனும் வீரன். இருவர் வயிற்றிலும் பிறக்கும் மகன் மகாவீரனாயிருப்பான். கரிகால் பெருவளத்தானுக்குப் பிறகு சாம்பல் பூத்துவிட்ட சோழர்கள் வீராக்கினி மீண்டும் கொழுந்துவிட்டு எரியும்'' என்ற சோழ தேவன் குரலில் பெரும் திருப்தியிருந்தது, கண்களில் கன விருந்தது.

அந்த சமயத்தில்தான் அமைச்சரையும் அரசனையும் அசரவைத்த அந்தச் செய்தி வந்தது. செய்தி ஓலையை ஏந்தி வந்த வீரன் அமைச்சர் அனுமதியுடன் உள்ளே வந்து ஓலையை நீட்டினான். அதை வாங்கிப் படித்த அமைச்சர்

முகத்தில் விபரீதக் களை சுடர்விட்டது. விஷயத்தை அவரே சொல்லட்டுமென்று மன்னன் காத்திருந்தான். ஓலையை ஒரு முறைக்கு இரு முறை படித்த அச்சுதர் அச்சம் பெரிதாக விரிந்தது. அந்த அச்சத்துடன் ஓலையை மன்னனிடம் நீட்டிய அச்சுதர், ''இதை நீங்களே படிப்பது நல்லது'' என்றார்.

விஜயாலயன் அந்த ஓலையைப் படித்ததால் அச்சுதரைப் போல் குழம்பவில்லை, அச்சப்படவுமில்லை. ''இதை எதிர் பார்த்தேன்'' என்றான்.

''எதிர்பார்த்தீர்களா மன்னவா!'' என்றார் அச்சுதர் பிரமிப் புடன்.

''ஆம்!''

''இப்பொழுது என்ன செய்ய உத்தேசம்?''

''நாளைக்கு மறுநாள் நமது படைகள் செந்தலை நோக்கி நகரும்.''



''இந்த ஓலை...?''

''வெறும் கண்கட்டு வித்தை. பெரும்பிடுகன் சிகண்டி யல்ல. மகாவீரன்'' என்ற விஜயாலயன், ''இந்த ஓலையைக் கொண்டு வந்தவனைக் காவலில் வையுங்கள். இரவு விசாரிக் கிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்தான் ஆசனத்தைவிட்டு.

''தூதனைக் காவலில் வைப்பது சோழர் தர்மமல்ல'' என்று சற்றுக் கடுமையாகவே சுட்டிக்காட்டினார் அச்சுதர்.

''இவன் தூதனல்ல'' என்ற விஜயாலயன் அடுத்த அறையை நோக்கி நடந்தான் ஓலையைத் திரும்பவும் அமைச்சரிடம் கொடுத்துவிட்டு. அமைச்சர் அந்த ஓலையை வாங்கித் திரும்பவும் ஆராய்ந்தார். அவருடைய முகத்தில் விவரிக்க இயலாத பல உணர்ச்சிகள் தாண்டவமாடின.

# 46. விஜயாலயன் சிந்தனை

உறையூர் அரண்மனை மந்திராலோசனை அறைக்கு அடுத்திருந்த தனது அந்தரங்க அறைக்குச் சென்றதும் அங்கிருந்த பஞ்சணையில் நன்றாகச் சாய்ந்துகொண்டு தீவிர சிந்தனையில் இறங்கினான் விஜயாலயன். பணிப்பெண் தேவி இளவரசியாகி விட்டதில் மிகுந்த ஆனந்தம் மனத்துள்ளே பரவியதால் விகசித்த முகத்துடனேயே சிந்தனை வசப்பட்ட விஜயாலயன், ''அமைச்சரே! அமைச்சரே!'' என்று இரு முறை குரல் கொடுத்தான். அடுத்த அறையில் அவசர அரசாங்க அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்த அச்சுதர் உள்ளே வந்து, ''மன்னவா! என்ன கட்டளை?'' என்று வினவினார்.

''செந்தலையிலிருந்து வந்த ஓலையை எடுத்து வாரும்'' என்று கூறிய மன்னன், பஞ்சணையில் நன்றாக சாய்ந்து கொண்டான்.

அமைச்சர் தமது இடுப்பிலேயே அந்த ஓலையை வைத்திருந்ததால் அதை எடுத்துவர எங்கும்போக அவசியமில்லாதிருந்தது. கச்சையில் செருகியிருந்த அந்த ஓலையை எடுத்து மன்னன் கையில் கொடுத்தார்.

''கண்ணழகியை இங்கு வரச்சொல்லும்'' என்று மன்னன் இரண்டாவது கட்டளையை இட்டான்.

அச்சுதர் சிறிது யோசித்தார். ''இளவரசியார் அந்தப்புரத்திலிருக்கிறார்...'' என்று சுட்டிக்காட்டினார்.

''எந்தப்புரத்திலிருந்தாலும் இங்கு வரவழையும் அவளை'' என்றான் மன்னன்.

''அரசமகளிர் ஆலோசனை மண்டபங்களுக்கு வரும் வழக்கமில்லை''– அமைச்சர் இதைச் சற்று அழுத்தமாகவே சொன்னார்.



அரசன் நகைத்தான் அச்சுதரை நோக்கி. ''அந்த வழக்கம் இன்று மாறுகிறது'' என்று சொன்னான்.

அரசன் பிடிவாதம் அமைச்சருக்குத் தெரிந்திருந்ததால் அவர் மேற்கொண்டு ஏதும் பேசாமல் இளவரசியை அழைத்து வரத் தாமே சென்றார். சிறிது நேரத்தில் இளவரசியுடன் திரும்பிய அமைச்சர் ''மன்னவா! இளவரசியார் வந்திருக்கிறார்கள்'' என்றார்.

அதுவரை சிந்தனையில் மூடியிருந்த கண்களைத் திறந்து விஜயாலயன் தனது கையிலிருந்த ஓலையை எடுத்து ''கண்ணழகி! இதைப் பார்'' என்று அவள் கையில் ஓலையைத் திணித்தான்.

ஓலையைப் படித்த கண்ணழகியின் முகத்தில் பெரும் குழப்பம் தெரிந்தது. ''இந்தக் கையெழுத்தை எங்கோ பார்த்திருக்கிறேன்'' என்றாள் குரலிலும் குழப்பம் தெரிய.

அரசன் அவள் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே கேட்டான், ''இது பெண்ணின் கையெழுத்தா?'' என்று.

''இல்லை''– கண்ணழகியின் பதில் திட்டமாயிருந்தது.

''அடியில் தேவியின் கையொப்பமிருக்கிறது'' என்று சுட்டிக்காட்டினான் விஜயாலயன்.

''கையொப்பத்தில் யார் பெயரை வேண்டுமானாலும் போடலாம்'' என்றாள் கண்ணழகி.

''சரி, சற்றுச் சிந்தித்துப் பார். இந்தக் கையெழுத்து உனக்கு ஏற்கனவே மிகப் பழக்கமானது. அடிக்கடி இதைப் பார்க்கும் சந்தர்ப்பம் உனக்கிருந்திருக்கிறது'' என்று அரையும் குறையுமாக விளக்கினான் விஜயாலயன்.

கண்ணழகி ஓலையில் திரும்பவும் கண்களை ஓட்டினாள். திடீரென அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

''தந்தையே! புரிகிறது! எனக்கு வெட்ட வெளிச்சமாகப் புரிகிறது'' என்றாள் சினம் குரலில் பெரிதாக ஒலிக்க.

''இந்தக் கையெழுத்துக்குடையவன் இடும் கட்டளைகளுக்கெல்லாம் அடியில் நீ கையொப்பமிட்டிருக்கிறாய் முன்பு'' என்று சுட்டிக்காட்டிய மன்னன், பஞ்சணையில் சாய்ந்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

இளவரசி தலையை இரு முறை ஆட்டி! ''ஆம் தந்தையே ஆம்'' என்றாள்.

அவர்கள் இருவர் உரையாடலிலிருந்தும் ஏதும் புரிந்து கொள்ள முடியாத அச்சுதப் பேரறையர் ''அமைச்சரும் உங்கள் ரகசியத்தில் கலந்துகொள்வது தவறாகாது'' என்று உணர்த்தினார் மன்னனையும் அவன் மகளையும் நோக்கி.

விஜயாலயன் மந்திரியை ஏறெடுத்து நோக்கினான். ''இதில் ரகசியத்துக்கு இடம் ஏதுமில்லை. இந்த ஓலையை எழுதியவன் இளையவேள்'' என்று ஒரு வெடியை எடுத்து அச்சுதர்மீது வீசினான்.

அச்சுதர் பிரமிப்பில் ஆழ்ந்தார். ''அவன் கையெழுத்து எனக்கு நன்றாகத் தெரியுமே. கரூரில் அவன் சேரர் படைத்தலைவனாயிருந்தபோது பல உத்தரவுகளை எனக்கே அனுப்பியிருக்கிறானே'' என்று கூறிவிட்டு இளவரசியிடமிருந்த ஓலையை வாங்கி மீண்டும் பார்த்தார். ''ஆம், ஆம் சந்தேகமில்லை. அந்த அயோக்கியன் கையெழுத்துதான்'' என்றார் கோபத்துடன். ''என்ன துணிச்சல் அவனுக்கு இத்தகைய ஓலையை நமக்கு அனுப்ப?'' என்று சீறவும் செய்தார். ''மன்னவா! இந்த ஓலை அவன் எழுதியதென்று தங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்றும் கேட்டார்.

மன்னவன் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. ''இதைப் பார்த்ததும் இது பெண் கையெழுத்து அல்லவென்று தீர்மானித்தேன்...'' என்ற அரசனை இடைமறித்த அச்சுதர்



''அப்படியென்ன பெண் கையெழுத்துக்கும் ஆண் கையெழுத்துக்கும் வித்தியாசம்?'' என்று வினவினார்.

''பெண் கையெழுத்து அவர்களைப் போல அழகாக குண்டு குண்டாக தெளிவாயிருக்கும். கைகளின் மென்மை காரணமாக எழுத்தாணி ஓலையில்ஆழமாகப் பதியாது. ஆண் கையெழுத்து அப்படியல்ல. அநேகமாகக் கிறுக்கு எழுத்தாக இருக்கும். முரட்டுத்தனமாக எழுத்துக்கள் ஓலையில் ஆழப் பதிந்திருக்கும். சிருஷ்டி சகலத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபாட்டைத் தந்திருக்கிறது'' என்று விளக்கினான் மன்னன்.

இதைக் கேட்ட அச்சுதர் அசைவற்று நின்றார். எதையும் நொடிப்பொழுதில் கண்டுபிடிக்கும் மன்னன் கூரிய அறிவைக் கண்டு பெரிதும் வியந்தார். ''மன்னவா! உங்களை யாரும் ஏமாற்ற முடியாது'' என்று பாராட்டவும் செய்தார்.

மன்னன் நகைத்தான். அத்துடன் கேட்டான். ''அச்சுதரே! அந்தக் கடிதத்தின் வாசகத்தைப் பார்த்தீரா?'' என்று.

''பார்த்தேன். தேவி தங்களைப் போருக்கு வரும்படி அறைகூவியிருக்கிறாள். செந்தலை இளவரசியென்ற முறையிலும், அதன் படைத்தலைவி என்ற முறையிலும் அந்த அறைகூவலிருக்கிறது'' என்றார் அமைச்சர்.

''அமைச்சரே! பெரும்பிடுகனைப் போன்ற ஒரு வீரன் தனது மகளைப்போல் வளர்த்து வரும் ஒரு பெண்ணை அறைகூவல் விடச் செய்து அவள் மறைவில் போர் தொடுப்பானென்று நினைக்கிறீரா?'' என்று கேட்டான் மன்னன்.–

''மாட்டான்'' என்று அமைச்சரும் ஒப்புக்கொண்டார்.

''பெண் செந்தலை படைத்தலைவியானால் நீர் அவளை எதிர்த்துப் போர் செய்வீரா?'' என்று இன்னொரு கேள்வியை அரசன் வீசினான்.

''மாட்டேன்''– அமைச்சர் பதில் திட்டமாயிருந்தது.

''இளையவேள் எப்படியாவது இந்தப் போரைத் தடுக்க முயல்கிறான். ஒரு பெண்ணுக்கு எதிராக நாம் போரில் இறங்க மாட்டோம் என்பது அவனுக்குத் தெரியும். இதில் இன்னொரு அந்தரங்கமும் இருக்கிறது. பெண்ணை படைக்குத் தலைமை வகிக்கச் செய்து ஏன் மறைகிறாய் என்று முத்தரைய பூபதிக்கு நாம் பதில் ஓலை அனுப்பினால் பெரும் பிடுகர் முன்கோபத் தால் விளைவுகளைப் பாராமல் உறையூர் மீது கண்மூடித்தன மாக வருவார். அப்பொழுது அழிந்துவிடுவார் என்ற எண்ணமும் ஓலையை அனுப்பியவனுக்கு இருக்கிறது. என்ன காரணத்தாலோ இவன் பெரும்பிடுகரை அவமானப்படுத்த வும் அழிக்கவும் பார்க்கிறான்'' என்ற மன்னன், ''இப்பொழுது தூதனை வரவழையுங்கள், விசாரிப்போம்'' என்றான்.

சில விநாடிகளில் அரசன் சன்னிதானத்துக்கு வரவழைக்கப் பட்ட தூதன் நடுங்கிக்கொண்டு நின்றான். அவனை மன்னனே விசாரிக்கத் தொடங்கி, ''நீ எந்த ஊர்?'' என்று வினவினான்.

''நான்...நான்...'' என்று தயங்கினான் தூதன்.

''உண்மையைச் சொல், தப்பலாம்'' என்றார் அச்சுதர்.

''நான் இந்த ஊர்தான்.''

''என்ன வேலை?''-அரசன் கேட்டான் சாதாரணமாக.

''குயவன்.''

''இந்த ஓலையை உன்னிடம் யார், எப்பொழுது கொடுத் தார்கள்?''

''நேற்றிரவு ஒருவர் கொடுத்தார். இதைத் தங்களிடம் கொடுத்துவிடும்படி சொன்னார். மிக முக்கியம் என்றார். கைநிறையப் பொற்கழஞ்சுகள் கொடுத்தார்.''

''அவர் எப்படி இருந்தார்?''



''உயரம் பருமனாக இருந்தார், ராட்சதன் மாதிரி பெரும் கண்கள். மீசையும் பயங்கரமாயிருந்தது.ஓலையை ஒழுங்காகக் கொடுக்காவிட்டால் என்னை வெட்டிப் போடுவதாகச் சொன்னார்''-இதைச் சொன்ன தூதன் நடுங்கினான்.

அத்துடன் அவனை மீண்டும் சிறைக்கனுப்பிவிட்ட அரசன், அச்சுதரை நோக்கிக் கேட்டான், ''இதிலிருந்து உங்களுக்கு என்ன புரிகிறது?'' என்று.

''இளையவேள் நமது நகரிலிருக்கிறான் என்று தெரி கிறது'' என்றார்.

''இல்லை ஓலையைக் கொடுத்ததும் போயிருப்பான்'' என்றான் மன்னன்.

''எங்கே?''என்று கேட்டார் அச்சுதர்.

''ஒரு ஊகம் இருக்கிறது. ஆனால், திட்டமாகச் சொல்ல முடியாது'' என்ற மன்னன், ''அச்சுதரே! ஒன்று திட்டமாகப் புரிகிறது. பெரும்பிடுகர் என்ன காரணத்தாலோ இவனைச் செந்தலையிலிருந்து விரட்டியிருக்கிறார், அல்லது இங்குள்ள நிலையை வேவு பார்க்க அனுப்பியிருக்கிறார்.ஆகையால்....'' என்ற விஜயாலயன் பஞ்சணையிலிருந்து எழுந்து நின்றான்.

''ஆகையால்....'' என்று அமைச்சர் வினவினார்

''நமது படை நாளைக்கு மறுநாள் நகரப்போவதில்லை. இன்று இரவே நகரும். அதற்கான ஏற்பாடுகள் நடக்கட்டும்'' என்று உத்தரவிட்டான்.

''இத்தனை துரிதம் ஏன்?''என்று கேட்டார் அமைச்சர்.

''சுபஸ்ய சீக்ரம்'' என்ற வடமொழி வாக்கியத்தைச் சொன்ன விஜயாலயன், ''சுப காரியங்களில் தாமதம் கூடாது'' என்றான்.

அரசன் ஏதோ ஆழ்ந்த கருத்துடன்தான் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறானென்ற காரணத்தால் பதிலேதும் பேசாத

அமைச்சர் ''உத்தரவு மன்னவா!'' என்று கூறித் திரும்பிச் செல்ல இரண்டடி எடுத்து வைத்தார்.

''இன்னும் ஒரு விஷயம்'' என்றான் மன்னவன்.

சற்றே திரும்பி அரசனை நோக்கிய அச்சுதர், ''என்ன மன்னவா?'' என்று கேட்டார்.

''நீர் உறையூரில் என்ன செய்யப்போகிறீர்?''என்று வினவினான் மன்னன்.

''இதென்ன கேள்வி மன்னவா? அரசாங்க அலுவல்கள் இல்லையா? போருடன் எல்லாம் முடிந்துவிடுகிறதா?'' என்று அச்சுதர் கேட்டார்.

அரசன் புன்முறுவல் கொண்டான். ''அன்றாட அரசியல் விவகாரங்களைக் கவனிக்க மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள்'' என்று சொன்னான் முறுவலின் ஊடே.

''அப்படியானால் என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்ற அமைச்சர் விழித்தார்.

''நீங்கள் கருவூருக்குச் செல்லுங்கள். கண்ணழகியையும் அழைத்துச் செல்லுங்கள்'' என்று கூறினான் மன்னன்.

''ஏன் மன்னவா?'' அதிர்ச்சியுடன் கேட்டார் அமைச்சர்.

''கருவூர் கண்ணழகிக்கு மிகவும் பிடிக்கும். அதுவும் அங்குள்ள செண்பகப்பூவில் அவளுக்குள்ள ஆசை சொல்லி முடியாது. தவிர, தை மாதமும் வருகிறது. நாக பூஜையும் செய்யலாம்'' என்ற மன்னன், ''இல்லையா கண்ணழகி?'' என்று மகளை நோக்கி கேட்டான்.

விஜயாலயன் காட்டிய காரணங்களில் அமைச்சருக்கும் திருப்தியில்லை; மகளுக்கும் திருப்தியில்லை. ''தங்கள் உத்தரவு'' என்றார் அச்சுதர். கண்ணழகி காரணமின்றித் தலையசைத்தாள். அவள் விழிகளில் சிந்தனை நிரம்பிக் கிடந்தது. விஜயாலயன் சிந்தனை ஓட்டம் இருவருக்குமே விளங்கவில்லை.

# 47. ஆதித்தன் பாதுகாப்பு

**வா**ழ்க்கையில் அசாதாரணமான காரியங்களைப் புரிபவர்கள் வீண் ஆலோசனையில் காலம் கழிப்பதில்லை. இது நடக்கவேண்டிய விஷயம் என்று தீர்மானித்ததும் முடிவுகளை உடனடியாக எடுக்கிறார்கள்; உடனடியாக நிறைவேற்றுகிறார்கள். விஜயாலயன் அப்பேர்ப்பட்ட திடமான, எதிலும் சந்தேகக் கலப்பில்லாத, நிர்ணயமான புத்தியை உடையவனாதலால் இருந்த அறையிலேயே அமைச்சருக்கு உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

''அமைச்சரே! இன்றிரவு நமது படை செந்தலை நோக்கி நகருகிறது. அதன் புரவிப் பிரிவுக்கு இதயகுமாரனும், ரதப் பிரிவுக்கு என் மகன் ஆதித்தனும் தலைமை வகித்துச் செல்கிறார்கள். இரண்டு பிரிவுகளும் இயங்க வேண்டியதற்கான பொது உத்தரவுகளை நான் நமது பட்டத்து யானையிலிருந்து அறிவிப்பேன். நீர் கண்ணழகியை அழைத்துக்கொண்டு நாளைக் காலையில் கருவூர் வஞ்சிக்கு நூறு வீரர்களை மட்டும் அழைத்துக்கொண்டு செல்லும். கருவூர் சென்றதும் அதன் கோட்டை வாயிலில் அதிகக் காவல் வேண்டாம், அதிகத் தடைகளும் வேண்டாம். சுமாரான பாதுகாப்புப் போதும்'' என்று கட்டளையிட்டான்.

மிதமிஞ்சிய வியப்புடனும் பயபக்தியுடனும் கட்டளைகளைக் கேட்டுக்கொண்ட அச்சுதப் பேரறையர் இரண்டு சந்தேகங்களைக் கேட்டார். ''யானைப் படையை ஏன் அழைத்துப் போகவில்லை? கருவூர் பாதுகாப்பை ஏன் வலுப்படுத்தக் கூடாது?'' என்று வினவினார் அச்சுதர்.

சோழ தேவன் தனது சிந்தனைக் கண்களை அமைச்சர் முகத்தில் பதியவிட்டான். ''முத்தரையர்களிடம் யானைப்

படையில்லை. புரவிப்படைதான் இருக்கிறது. ஆகவே அவர் களை சமபலத்தால் வெற்றிகொள்வதுதான் நீதி. தவிர, செந்தலையில் பலமான கோட்டை கொத்தளங்கள் கிடையாது. யானைகளைக் கொண்டு கதவுகளைப் பிளக்கும் வேலை இல்லை. இரண்டாவது, நான் செந்தலையைத் தாக்கும்போது முத்தரையர் இரண்டாவது யுத்தரங்கமொன்றை அமைக்க, கருவூரை ஒரு படைப் பிரிவைக்கொண்டு தாக்கலாம். அப்படி ஏதாவது ஏற்பட்டால் அதை சமாளிக்கத்தான் உங்களைக் கருவூர் அனுப்புகிறேன்'' என்றான் விஜயாலயன்.

மன்னன் சொற்களில் சிறிது முரண்பாடு இருப்பதை அச் சுதர் கவனித்தார். ஆகையால் கேட்டார், ''கருவூரை முத்தரையர் தாக்கக் கூடும் என்று சொல்கிறீர்கள். அப்படியிருக்க, அதன் பாதுகாப்பைப் பலவீனமாக வைக்கச் சொல்கிறீர்கள்'' என்று.

மன்னன் இதற்குச் சரியான பதில் சொல்லவில்லை. ''முத்தரையர் கருவூரைத் தாக்கமாட்டார்கள். ஒரு வேளை தாக்கினால் நீர் அங்கிருப்பது நல்லது என்று நினைத்தேன். கருவூர் படைகளைப் போருக்கு சித்தமாக வைத்திருங்கள் வெளிக்கு சன்னத்தம் தெரியவேண்டாம். தேவையானால் கதவுகளை அடைத்துத் தற்காப்பு செய்துகொள்ள அதிக நேர மாகாது'' என்று மன்னன் சப்பைக்கட்டு கட்டினான் முதல் உத்தரவுக்கு.

மன்னன் மனத்தில் அவன் வெளியிடும் சொற்களைத் தவிர, வேறு சிந்தனைகள் உறைந்து கிடப்தைப் புரிந்து கொண்டதால் அச்சுதர் விடவில்லை. ''மன்னவா! வர வர என் புத்தி மந்தமாகிக்கொண்டு வருகிறது'' என்றார் பொய் வருத்தத்தை முகத்தில் காட்டி.

மன்னன் புன்முறுவல் கொண்டு, ''அப்படியா!'' என்று என்று கேட்டான்.

''ஆம் மன்னவா.''



''உதாரணம் சொல்லுங்கள்.''

''எதிரி படையெடுத்தாலும் படையெடுக்காவிட்டாலும் போர்க் காலங்களில் நகரங்கள் நல்ல பாதுகாப்பில் வைக்கப் படுவதுதான் முறை. எதிரி படையெடுத்த பின் அவசர அவசர மாகப் பாதுகாப்பை இறுக்கும் விந்தையை இதுவரை நான் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை'' என்று அமைச்சர் கூறி மன்னனை உற்று நோக்கினார்.

மன்னன் கண்கள் மந்திரியின் கண்களைச் சந்திக்க மறுத்தன. நிலத்தைப் பார்த்துக்கொண்டே பேசினான் சோழ வேந்தன். ''எதற்கும் ஒரு ஆரம்பம் உண்டு. நீர் கூறிய விந்தை நமது போரில்தான் ஆரம்பமாகட்டுமே. ஒரு நாடு எப்பொழுதும் போருக்குச் சன்னத்தமாக இருக்கும் சமயங்களும் உண்டு, சன்னத்தமாக இல்லாத சமயங்களும் உண்டு.அப்படி இல்லாத சமயத்தில் சோழர் படை பலம், நினைத்த மாத்திரத்தில் இயங்கும் திறமை, இவை எப்படி இருக்கிறதென்று பார்ப் போமே.''

மேற்கொண்டு அமைச்சரைக் கேள்வி கேட்க விடாத விஜயாலயன், ''அமைச்சரே! என் மகன், இதயகுமாரன்,மற்ற படைத்தலைவர்கள் எல்லோரையும் இங்கு வரவழையுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அமைச்சர் நின்றவண்ணமே விஜயாலயனைச் சில விநாடிகள் உற்று நோக்கினார். பிறகு சிந்தனை வசப்பட்டவ ராய் வெளியே சென்றார். விஜயாலயன் அந்த அறையை விட்டு நகரவில்லை. அடுத்த சில நாழிகைகளில் அந்த அறைக்கு வந்த படைத் தலைவன் இதயகுமாரனையும், இளவரசன் ஆதித் தனையும், இதர உப தளபதிகளையும் ஒரு முறை அளவெடுத் தான் தனது கண்களால், ''இன்றிரவு நமது படை நகருகிற தென்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்று எந்தவித உணர்ச்சியுமற்ற குரலில் அறிவித்தான் விஜயாலயன்,

எதிரே யுத்த சன்னத்தமாய் நின்ற மகனையும் மற்றவர்களையும் நோக்கி.

''மன்னர் சித்தம்'' என்றான் மகன்.

''புரவிப் படை அணிவகுத்து நிற்கிறது'' என்றான் படைத் தலைவன் இதயகுமாரன்.

''இன்றிரவு நல்ல நிலவு ஆரம்பத்திலேயே இருக்கிறது'' என்றான் அரசன்.

''ஆம்.'' - அமைச்சர் ஆமோதித்தார்.

''இரவு ஏறி எட்டாவது நாழிகையில் படை நகரும். நான் சித்தமாக வந்துவிடுகிறேன்'' என்று கூறிய மன்னன், அமைச்சரை நோக்கி, ''அச்சுதரே! நமது சதுரங்கப் பலகையை எடுத்து வாரும்'' என்றான். அமைச்சர் எடுத்து வந்து கொடுத்ததும் அதைத் தனது மஞ்சத்தில் வைத்து வெள்ளிக் குப்பியிலிருந்த காய்களைப் பலகையில் நிரப்பி, தகுந்த இடங்களில் நிற்க வைத்தான். ''அமைச்சரே! ஆதித்தா! இதயகுமாரா! கவனியுங்கள்''என்று கூறிவிட்டு, காய்களை நிதானத்துடன் நகர்த்தலானான். நாலைந்து காய்களை மட்டும் சில கேந்திர ஸ்தானங்களில் நிறுத்திவிட்டு, ''படைத்தலைவரே! இந்த நிலை எப்படி?'' என்று கேட்டான்.

இதயகுமாரன் பதில் சொல்வதற்குப் பதில் எதிரிலிருந்த காய்களை நகர்த்தி விஜயாலயன் காய்களை நகர முடியாமல் செய்துவிட்டான். அதைக் கண்ட மன்னன் மிகுந்த உற்சாகத்தைக் காட்டினான். ''இதயகுமாரா! இத்தகைய இக்கட்டான நிலையை முத்தரையர் சிருஷ்டித்தால் அதிலிருந்து எப்படித் தப்புவாய்?'' என்று வினவினான்.

''நிலையில் எந்த இக்கட்டுமில்லை'' என்றான் இதயகுமாரன்.



''இதோ செந்தலையிலிருந்து வெளிவருகிறது முத்தரையர் புயல்வேகப் புரவிப்படை. நமது படையைக் கிழித்துக் கொண்டு வேல் போல் உள்ள புகுந்து விடுகிறது. இதோ இந்தக் காலாட்கள்-காய்கள்-நாம். இவை பிளக்கப்பட்டால் நமது படையின் கதி என்ன?'' என்றுமன்னன் வினவி சதுரங்கப் பலகையில் தான் நிறுத்தியிருந்த காய்களைச் சுட்டிக்காட்டினான்.

''இந்தக் காலாட் படை இரண்டாகிறது. அந்த இரண்டும் பக்கவாட்டில் திரும்புகிறது. சுவர்போல் வாட்களால் எதிரிப் படையை இருபுறமும் தாக்கிக்கொண்டு நெருக்குகிறது. அந்தச் சமயத்தில் ரதத்திலுள்ள நமது வில்லவர் அம்புகளை எய்கிறார்கள். அதுவரை எட்ட நிற்கும் நமது புரவிப்படை இயங்குகிறது. எதிரியின் புரவிப்படை நமது காலடாட் படையை ஊடுருவிக் கடைசிப் பகுதிக்கு வந்ததும் சரேலென்று எதிரியின் புரவிப்படையைத் தாக்கும். இதனால் எதிரியின் முகப்பு தாக்கப்படுகிறது.பக்கவாட்டில் காலாட் படையின் நெருக்கம் ஏற்படுகிறது. அதாவது எதிரியின் இரு விலாப் புறங்கள், முகம், மூன்றும் தாக்கப்படுகின்றன. மேற்புறத்தில் ரத வீரர்களின் அம்புகள் விழுகின்றன. விளைவைப்பற்றி ஏதும் சொல்லத் தேவையில்லை'' என்று விளக்கினான் இதயகுமாரன்.

மன்னன் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது. ''ஆதித்தா! நீ என்ன நினைக்கிறாய்?'' என்று அபிப்பிராயம் கேட்டான் இளவரசனை.

இளவரசன் சிந்தனை எதிரேயிருந்த சதுரங்கப்பலகையில் இல்லை. எங்கோ ஓடிக்கொண்டிருந்தது. ஆகவே மன்னன் கேள்வி கேட்டதும் கனவிலிருந்து விழித்தவன் போல் பிரமை தட்டிய பார்வையைத் தந்தை மீது வீசினான். அவன் பார்வையிலிருந்த குழப்பத்தைப் புரிந்துகொண்ட மன்னன், ''ஆதித்தா! நமது போர்த் திட்டத்தை நீ கவனிக்கவில்லையா?'' என்று வினவினான்.

''இல்லை''- ஆதித்தன் பதில் சட்டென்று வந்தது.

''ஏன்?''- அரசன் கேள்வியில் சற்றுக் கடுமை இருந்தது.

''முத்தரையரை நாம் வெற்றிகொள்வது நிச்சயம். செந்தலையும் தஞ்சையும் நமது கையில் விழுவது திண்ணம்'' என்றான் ஆதித்தன் அலட்சியமாக. ''அந்த வெற்றியைப் பற்றி நான் கவலைப்படவில்லை. வெற்றிக்குப் பிறகு என்ன செய்யப் போகிறோம்?'' என்று கேள்வியையும் தொடுத்தான் இளவரசன்.

மைந்தன் மனத்திலோடியது புரியாமலில்லை விஜயாலயனுக்கு. ''ஆதித்தா! நேராகக் கேள். யார் உயிர் உனக்கு வேண்டும்?'' என்று வினவிய விஜயாலயன் ஆசனத்திலிருந்து எழுந்தான்.

''பெரும்பிடுகர் உயிர்'' என்றான் ஆதித்தன்.

விஜயாலயன் நகைத்தான் பெரிதாக. ''ஆதித்தா! நீ ஒரு முட்டாள். பெரும்பிடுகன் வீரன். யார் உயிர்ப் பிச்சை கொடுத்தாலும் வாங்க மாட்டான். போர் செய்து களத்தில் இறப்பான். இதில் சந்தேகம் வேண்டாம்'' என்றான்.

''பெரும்பிடுகர் உடல்நிலை சரியில்லை'' என்றான் ஆதித்தன்.

''ஆதனால்?''

''போருக்கு வராதிருக்கலாம். அப்படிப் போரிடாமல் அவர் நின்றுவிட்டால் என்ன செய்ய உத்தேசம்?'' என்று ஆதித்தன் வினவினான்.

இந்த இடத்தில் அச்சுதர் இடைபுகுந்தார், ''சிறை செய்வது வழக்கம்'' என்று தெரிவித்தார்.

''அந்த வழக்கத்தை அனுமதிப்பதற்கில்லை. யாரும் பெரும்பிடுகர் மீது கையை வைக்க முடியாது'' என்றான் வீரனான ஆதித்தன்.



அவன் குரலில் அதிகாரம் மிதமிஞ்சி ஒலித்தது. விஜயாலயன் மகனை அனுதாபத்துடன் பார்த்தான். மன்னனின் தீர்க்க தரிசனத்தில் பெரும் பிடுகரின் முடிவு என்னவென்று தீர்மானமாயிருந்தது.

ஆதித்தன் முத்தரைய பூபதிக்கு அளிக்க முயலும் பாதுகாப்பு எவ்வளவு அர்த்தமற்றது என்பதை விஜயாலயன் சந்தேகமறப் புரிந்துகொண்டிருந்தான்.

# 48. மனிதனின் முதல் விரோதி

விஜயாலயன் மந்திராலோசனையை முடித்த மறுநாள் காலை பெரும்பிடுகு முத்தரையரின் உடல்நிலை முந்திய தினங்களைவிட சிறிது க்ஷீணதசை அடைந்திருந்தாலும், அவர் சற்றும் முனகாமலும் யாரையும் தம்மைத் தூக்க ஒத்தாசைக்கு அழைக்காமலும் கட்டிலின் பக்கங்களைப் பிடித்துக்கொண்டு தாமே எழுந்து உட்கார்ந்தார். அவருக்குப் பணிவிடை செய்ய எதிரே கையில் ஒரு செம்பில் வெந்நீருடனும் இன்னொரு கையில் ஆலங்குச்சியுடனும் நின்றிருந்த இளவரசி தேவி, முத்தரைய பூபதியின் கஷ்டத்தையும் நோயின் கடுமையையும் புரிந்து கொண்டாலும் அவருக்கு எந்த விதத்திலும் உதவ முன்வராமல் சிலையென நின்றிருந்தாள், முகத்தில் துன்பக் களை விரிய.

அந்தக் கமல முகத்தில் விரிந்த வருத்தச் சாயையைக் கவனித்த பெரும்பிடுகர் லேசாக நகைத்தார் அத்தனை துன்பத்திலும். ''இந்தக் கிழவனைப் பார்த்து அனுதாபப்பட இந்த உலகத்தில் ஒரு ஜீவனும் இருக்கிறது'' என்று கூறினார் நகைப்பின் ஊடே.

தேவி தனது வளர்ப்புத் தந்தையின் கையில் ஆலங்குச்சியைக் கொடுத்துவிட்டு, சற்று எட்ட சாளரத்திலிருந்த பித்தளைத் தட்டை எடுத்து வந்து அவருக்கு எதிராகப் பிடித்துக்கொண்டாள். ஆனால், முத்தரைய பூபதி பல்துலக்க ஆலங்குச்சியை வாயில் வைத்துக் கடிக்கவில்லை. அதைக் கையில் பிடித்த வண்ணம் கேட்டார், ''தேவி! ஏனிப்படி பேசாமடந்தையாகி விட்டாய்?'' என்று.

அதற்கும் அவள் பதில் சொல்லவில்லை. ''பாவம், என் மீது உனக்கு எத்தனை அனுதாபம்!'' என்று கூறி அவள்



கையைப் பிடித்து இழுத்துத் தமது பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார்.

தந்தையின் அருகில் அமர்ந்த தேவி, ''உங்கள் மீது எனக்கு அனுதாபமில்லை'' என்று கூறினாள் திடமான குரலில்.

''வேறு என்ன?'' என்று வினவினார் முதத்தரையர்.

''வருத்தம், கோபம்.''

''அப்பா! இரண்டா?'

''ஆம்.''

''எதற்காக?''

''உங்கள் உடல்நிலை கண்டு வருத்தம். பிடிவாதத்தைக் கண்டு கோபம்.''

முத்தரைய பூபதி கையிலிருந்த ஆலங்குச்சியை வாயில் செருகிப் பற்களால் கடித்துக்கொண்டு தேவியின் முதுகைத் தடவிக் கொடுத்தார் செல்லமாக. அவருடைய கை ஸ்பரிசத்திலிருந்த ஆதரவு அவள் உடம்பைச் சிலிர்க்க வைத்தது. அப்படித் தடவிய வண்ணம் வாயின் இடது பக்கத்தில் ஆலங்குச்சியை நகர்த்திக்கொண்டு சொன்னார் பெரும்பிடுகர்: ''மகளே! வியாதி எப்படி உடன் பிறக்கிறதோ அப்படியே மனிதன் குணமும் உடன் பிறக்கிறது. வியாதியைக் குறைக்கலாம் மருந்தால். குணத்தை மாற்ற உலகத்தில் மருந்து கிடையாது.''

இதைக் கேட்ட தேவி பெருமூச்செறிந்தாள். ''அப்பா! நீங்கள் ஏன் என்னைச் சித்ரவதை செய்கிறீர்கள்?'' என்று வினவவும் செய்தாள்.

''உன்னையா! சித்ரவதை செய்கிறேனா! நானா!'' என்று வியப்புடன் சொற்களைக் கொட்டினார் முத்தரைய பூபதி.

''ஆம். உங்களைத் தூக்கி உட்காரவைக்க அனுமதி தர மறுக்கிறீர்கள். மருந்தை மருத்துவர் கொடுத்தால் அவர் மீது அதை எறிகிறீர்கள்...'' என்றாள் தேவி துன்பம் தோய்ந்த குரலில்.

பெரும்பிடுகர் இடியிடியென நகைத்தார். ''மகளே! அந்த மருத்துவன் ஒரு முட்டாள். எனக்கு ஏதோ பஸ்பம் கொடுக்க வந்தான். அது என்னைத் தூங்கவைக்கும் என்று சொன்னான். மனிதன் ஆயுளில் பாதி காலம் தூங்குகிறான்! தவிர, மருந்து சாப்பிட்டு வேறு தூங்கவேண்டுமா? தூக்கம் மனிதனின் விரோதி. அதுவும் எதிரி படையெடுத்து வரும் போது தூங்குவது முட்டாள்தனம்'' என்று கூறினார் நகைப்பின் ஊடே.

''படையெடுப்பா!'' என்று குரலில் வியப்பு துலங்க வினவினாள் தேவி.

''ஆம்.சோழர் படையெடுப்பு'' என்றார் முத்தரையன்.

''எப்பொழுது? என்று?'' தேவியின் கேள்வியில் கவலை இருந்தது.

''என் ஊகம் சரியானால், நேற்றிரவு சோழர் படை நகர்ந் திருக்கும் தஞ்சை நோக்கி.'' முத்தரையர் குரலில் தெளிவும் நிதானமும் அலட்சியமும்கூட இருந்தன. அடுத்து அவர் ஏதும் பேசாமல் ஆலங்குச்சியால் வேகமாகப் பல்துலக்க முற்பட் டார். அத்தனை வயோதிகத்திலும் அவர் மனம் போலவே உறுதியுடனிருந்த பற்களில் ஆலங்குச்சி கரகரவென்ற ஒலியை எழுப்பிக்கொண்டு வேகமாகச் சென்றது. பிறகு தேவி கொடுத்த நீரால் வாயைக் கொப்புளித்தார், அவள் எதிரே நீட்டிய தட்டில்! அவர் வாய் கொப்புளித்து முகம் கழுவி முடிந்ததும் தேவி தனது முந்தானையாலேயே அவர் முகத்தைத் துடைத்தாள். பிறகு ஒரு குவளையில் பால் கொண்டுவந்து கொடுத்தாள்.

''அது என்ன? பாலா?'' பெரும்பிடுகர் கேள்வியில் வெறுப்பும் கசப்பும் இருந்தன.

''ஆம். உங்கள் உடல் இருக்கும் நிலையில் வேறு என்ன கொடுக்க முடியும்?'' என்று கேட்டாள் தேவி.



''மதுவுக்கு என்ன?'' என்று வினவினார் பெரும் பிடுகர்.

''காலையில் கொடுக்கக் கூடாதென உத்தரவு'' என்றாள் தேவி.

''யார் உத்தரவு?'' கடுமையுடன் எழுந்தது பெரும்பிடுகர் கேள்வி.

சிறிது தயங்கினாள் தேவி. ''மருத்துவர் உத்தரவு'' என்றாள் சிறிது நேரம் கழித்து.

''அவன் வரட்டும். அவனை தலையைத் திருகிவிடுகிறேன். நான் உத்தரவிடுகிறேன். கொடு மதுவை நிரம்ப'' என்று உரக்கக் கூவினார் பெரும்பிடுகர்.

அவர் கூவியதைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை தேவி. ''மது கொடுக்க முடியாது'' என்று திட்டமாக அறிவித் தாள். அத்துடன் ''பாலைக் குடியுங்கள்'' என்று உத்தரவும் இட்டாள்.

''தேவி!மகளே! பால் வேண்டாம். மதுவைக் கொடு'' என்று குழந்தைபோல் கெஞ்சினார் பெரும்பிடுகர்.

தேவியின் அஞ்சன விழிகளில் நீர் மல்கியது. இரண்டு துளிகள் கன்னங்களிலும் வழிந்து ஓடின. அரசுகளை நடுங்க வைத்த அந்த மகாவீரன் குழந்தைபோல் தன்னிடம் கெஞ்சு வதை அவளால் தாங்க முடியவில்லை. அவள் கண்களில் நீர் தேங்கியபோதே கவனித்த முத்தரைய பூபதி, அவள் கன்னங் களில் கண்ணீர் வழிந்தோடியதைப் பார்த்ததும் முரட்டுத்தன மாக பாலைக் கடகடவெனக் குடித்தார். பிறகு தமது கைகளால் அவள் கண்ணையும் கன்னங்களையும் துடைத்தார். ''மகளே! இன்னும் இரண்டு நாளில் செந்தலையை ஆளப்பேகிற பெண் கண்ணீர் விடக்கூடாது'' என்றார்.

அத்தனை துன்பத்திலும் புன்னகை கொட்டினாள் தேவி. ''செந்தலையை நான் ஆளப்போகிறேனா!'' என்றாள் தேவி ஒலித்த குரலில்.

அவள் கேள்வியில் ஒலித்த கேலியைக் கவனிக்கத் தவற வில்லை பெரும்பிடுகர். ''இதில் கேலிக்கு இடமில்லை. பெண்கள் அரசாள்வது வரலாற்றில் புதிதல்ல'' என்று சுட்டிக் காட்டினார்.

''இருக்கட்டும். இந்த அரசுக்கென்ன? பிள்ளை யில்லையா, பேரன் இல்லையா?'' என்று கேட்டாள் தேவி.

பெரும்பிடுகர் சிறிது சிந்தித்தார். ''பேரன் இருக்குமிடம் தெரியவில்லை. எதிரியின் படை நகர்ந்துவிட்டதை அறியாமல் பிள்ளை உறங்குகிறான். விழித்திருப்பவர்தான் இந்த அரசை ஆளமுடியும். ஓடாதிருப்பவன்தான் செந்தலையைக் காக்க முடியும்'' என்றார் பெரும்பிடுகர்.

அவர் சொற்களின் உண்மையை, மனத்தில் துளிர்த்த தாபத்தைப் புரிந்துகொண்டாள் தேவி. ஆகவே கேட்டாள், ''திரும்பத் திரும்ப சோழர் படையெடுப்பைப் பற்றிச் சொல் கிறீர்களே. அதைப் பற்றி அண்ணனுக்குத் தெரியாமலா இருக் கும்?'' என்று.

''தெரிந்தால் மாறன் தூங்க மாட்டான்'' என்றார் பெரும் பிடுகர்.

''சோழர் படை நீண்ட நாளாகத்தான் போருக்குச் சித்தமா யிருக்கிறது.''

''நாம் தூங்கும் சமயத்தில் நகருகிறது. நேற்று விஜயா லயன் புறப்பட்டிருக்க வேண்டும்'' என்று திட்டமாகச் சொன் னார் பெரும்பிடுகர்.

''அப்படியானால் இன்னும் நமக்குச் செய்தி வராதிருக்குமா? தஞ்சைக்கும் உறையூருக்கும் மூன்று காத தூரந்தானே. எதிரி படை புறப்பட்டிருந்தால் இன்று மாலை செந்தலை முன்பு தோன்ற வேண்டுமே!'' என்று கேட்டாள் தேவி.

''உன் அண்ணன் மாறனாயிருந்தால் அப்படித்தான் செய் வான். ஆனால், சோழன் மிக அறிவாளி. நேராக இங்கு வர மாட்டான். படைகளைச் சுற்றிவளைத்து அழைத்து வருவான். ஒரு நாள் கழித்து தஞ்சையில் தளம் அமைப்பான். பிறகு...''



இந்த இடத்தில் பெரும்பிடுகர் பேய்ச்சிரிப்பாகச் சிரித்தார்.

தேவியின் முகத்தில் கவலை தெரிந்தது. ''பிறகு என்ன அப்பா?'' என்று கேட்டாள் கவலை குரலிலும் ஒலிக்க.

''என்னை சரணடையும்படி தூது அனுப்புவான்'' என்று கூறிய பூபதி இன்னும் அதிகமாக நகைத்தார்.

''வீணாகக் கற்பனை செய்கிறீர்கள்...''

''இல்லை தேவி. இது சோழர் முறை. ஆனால், அந்தத் தூது சம்பிரதாயத்தை ஒட்டித்தான் வரும். உண்மையில் என் குணம் விஜயாலயனுக்குத் தெரியும்.''

இப்படிப் பெரும்பிடுகர் பேசிக்கொண்டிருந்தபோது வெளித்தாழ்வரை அதிர நடந்து வந்து அந்த அறையின் வாயிற் படியில் நின்றான் மாறன் பரமேசுவரன். ''காலையில் எதற்காக நகைக்கிறீர்கள் தந்தையே? என்ன விந்தை நிகழ்ந்துவிட்டது?'' என்று வினவினான் மாறன், தனது உறக்கக் கண்களை அகல விரித்து.

''நீ விழித்துக் கொண்டுவிட்டாய்'' என்றார் பெரும் பிடுகர் விஷமமாக.

''விழிப்பதில் விந்தையென்ன இருக்கிறது?'' என்று வினவினான் மாறன் பரமேசுவரன்.

''சிலர் விழித்தால் விந்தைதான்...'' என்று இழுத்தார் பெரும்பிடுகர்.

மாறன் பரமேசுவரன் முகத்தில் சினம் துளிர்த்தது. ''நான் தூங்கவே கூடாதா?'' என்று கேட்டான் சினம் குரலில் சுடர்விட.

''தூங்கலாம். எதிரி வராதிருந்தால்'' - பெரும்பிடுகர் குரலில் அதிக இகழ்ச்சி ஒலித்தது.

''எந்த எதிரி?''

''அதுகூட மறந்துவிட்டதா உனக்கு? இப்பொழுதிருப் பது ஒரே எதிரி, மகா வீரன்.''

''யார்?''

''விஜயாலயன்.''

''சோழனா?''

''சோழதேவன்.''

''எதிரிக்கு மரியாதையா?''

''வீரனாயிருக்கும் யார் மீதும் எனக்கு மதிப்பு உண்டு.''

இதைக் கேட்ட மாறன் பரமேசுவரன், ''சோழனைக் கண்டு நடுங்குகிறீர்கள்'' என்று கூறிக்கொண்டு தந்தையை நெருங்கினான்.

பெரும்பிடுகர் முகத்தில் இகழ்ச்சியின் சாயை பெரிதாக விரிந்தது. ''ஆம்; நடுங்குகிறேன்'' என்றார் இகழ்ச்சியைக் குரலிலும் படரவிட்டு.

''எதற்காக நடுக்கம்?''

''சோழன் இந்தச் செந்தலையை வெற்றிகொண்டால் நமக்கு தயவு காட்ட முன்வருவான். பிறர் காட்டும் தயவு எனக்கு வேப்பங்காய்.''

''நமக்கு என்றால்?''

''உனக்கு, உன் மகனுக்கு.''

''உங்களுக்கு?''

''அதைப் பெற நானிருக்க மாட்டேன்.''

''ஏன்?''

''நாளைக்கு மறுநாள் போர்க்களத்தில் மடிவேன்.''

''ஏது போர்க்களம்?''

மீண்டும் நகைத்தார் பெரும்பிடுகர். அந்தச் சமயத்தில் தூதன் ஒருவன் அவசரமாக வந்து முத்தரைய பூபதிக்குத் தலை வணங்கி. ''நேற்றிரவு சோழர் படை நகர்ந்து விட்டது''என்று அறிவித்தான். ''தங்களைக் காண படைத் தலைவர் மூவர் வந்திருக்கிறார்கள்'' என்றும் விண்ணப்பித்துக் கொண்டான்.



இதைக் கேட்ட மாறன் பரமேசுவரன், ''இதை ஏன் முன்பே என்னிம் சொல்லவில்லை'' என்று வீரனை நோக்கிக் கர்ஜித்தான்.

''இப்பொழுதுதான் சோழ நாட்டிலிருந்து வருகிறேன்'' என்றான் தூதன்.

''என் அறைக்கு வராமல் தந்தையை ஏன் தொந்தரவு செய்கிறாய்?'' என்று சீறினான் மாறன்.

''நீ உறங்குகிறாய் என்று நினைத்திருப்பான், மகனே! உறக்கம் மனிதனின் முதல் விரோதி''என்று மாறனை நோக்கி அறிவித்த பெரும்பிடுகர் நோயை லட்சியம் செய்யாமல் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, செய்தி கொண்டு வந்த வீரனை நோக்கி, ''படைத் தலைவர்களை வரச்சொல்'' என்று உத்தரவிட்டார். அவர் குரலில் கம்பீரமிருந்தது, உறுதியிருந்தது. மகனையும் நோக்கி, ''நீயும் சீக்கிரமாக வந்து சேர்'' என்று கூறினார்.

மாறன் விரைந்தான் தனது அறையை நோக்கி. தேவியும் போக எழுந்தாள். ''நீ இரு'' என்று அவளைப் பக்கத்தில் இருத்திக்கொண்டார் பெரும்பிடுகர்.

''நான் எதற்கப்பா?'' என்றான் தேவி.

''முடிவுகளை எடுக்க'' என்றார் முத்தரையர்.

''நானா?''

''ஆம்.''

''ஏன்?''

''இங்கு எனக்கு அடுத்தபடியாக அறிவு இருப்பது உனக்குத்தான்'' என்றார் பெரும்பிடுகர்.

தேவி மௌனம் சாதித்தாள். அவள் உள்ளத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் எழுந்து உலாவின.

# 49. இரும்புச் சுவர்கள் நகர்ந்தன

வயதேறிய நிலையிலும் கிழச்சிங்கம் போல் நிமிர்ந்து உட்கார்ந்திருந்த பெரும்பிடுகு முத்தரையரின் உத்தரவுப்படி உள்ளே நுழைந்த படைத் தலைவர் மூவரும் அவருக்கு மட்டுமின்றி அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்த இளவரசிக்கும் தலை வணங்கி நின்றனர். மூவரில் சற்று முதியவராயிருந்த படைத் தலைவர் கூறினார், ''நமது முப்பிரிவும் போருக்குச் சித்தமாயிருக்கின்றன'' என்று.

அவருக்கு அடுத்தபடி நின்ற நடுத்தர வயதாயிருந்தவர், ''வழக்கப்படி ஆயுதங்கள் ஆலைகளில் செப்பனிபடப்பட்டு விட்டன. தேவைக்கு மேல் மூன்று பங்கு ஆயுதங்கள் தாங்கள் கூறியபடி சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன'' என்றார்.

இளைஞராயிருந்த மூன்றாவது படைத்தலைவர், ''செந்தலையின் மூன்று பக்கங்களும் படைவீரரால் மூடப்பட்டு விட்டன. யாரும் உள்ளே நுழையவோ, வெளியே செல்லவோ முடியாது'' என்று தாம் செய்துள்ள பணியை விளக்கினார்.

தனது மூன்று படைத்தலைவர்களையும் பார்த்த பெரும்பிடுகர் முகத்தில் பெருமைக்குறி பெரிதும் படர்ந்தது. அந்த சமயத்தில் உள்ளே கையில் ஒரு மதுக்குவளையுடன் நுழைந்த மாறன் பரமேசுவரன், ''இந்த ஏற்பாடுகள் எத்தனை நாட்களாக நடக்கின்றன?'' என்று கடுமை நிரம்பிய குரலில் கேட்டான்.

''பத்து நாட்களாக'' என்று கூறிய முதிய படைத்தலைவர், மாறனுக்குச் சிரம் தாழ்த்தி வணங்கினார்.

மாறன் முகத்தில் கோபம் அதிகமாகத் துளிர்த்தது. ''இதைப் பற்றி ஏன் என்னிடம் சொல்லவில்லை?'' என்று வினவினான் சீற்றம் தணியாத குரலில்.



முதிய படைத்தலைவர் பதில் சொல்லவில்லை. பெரும்பிடுகரை நோக்கினார். அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட மாறன் பரமேசுவரன் ''தந்தையே!'' என்று கர்ஜித்தான்.

''என்ன மாறா?'' சர்வ சாதாரணமாகக் கேட்டார்.

''என்னிடம் இந்த ஏற்பாடுகளைச் சொல்லவேண்டாமென்பது தங்கள் உத்தரவா?'' என்று வினவினான் மாறன். அவன் விழிகள் பெரிதாக உருண்டன.

பெரும்பிடுகர் இதழ்களில் இளநகை அரும்பியது. தமது இரண்டு விரல்களால் அடிஉதட்டைப் பிடித்துக்கொண்டு விஷமமாக ஏதோ சிந்தித்தார். பிறகு, ''உன்னிடமென்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. யாரிடமும் சொல்ல வேண்டாமென்று உத்தரவிட்டேன். தேவியிடம்கூட இதைப் பற்றிச் சொல்லவில்லை'' என்று கூறி தேவியைத் தனக்கு அருகில் இழுத்துக்கொண்டார்.

''தேவியிடம்கூட என்றால் என்ன அர்த்தம்?''

''எப்பொழுதும் என்கூட இருக்கிறாள். பணிவிடை செய்கிறாள். எதையும் ஊகிக்கும் சக்தியுள்ளவள். தவிர நீ இளவரசன். அவள் இளவரசி. இருவருக்கும் வித்தியாசம் காட்டுவது மன்னனுக்கு அழகல்ல''- இப்படிச் சொன்ன பெரும்பிடுகர் மகனை விஷமக் கண்களுடன் நோக்கினார்.

மாறன் தீ விழி விழித்தான். ''அப்படியானால் இவளை வைத்துக்கொண்டு போரை நடத்துங்கள்'' என்றான் இகழ்ச்சி ததும்பிய குரலில்

அந்த இகழ்ச்சியைப் பெரும்பிடுகர் கவனிக்கத் தவறவில்லை. அதைவிட இகழ்ச்சியுடன் அவர் பதில் சொன்னார், ''அது பயனுள்ளதாயிருக்கும். ஆனால், எதிரி ஒப்புக்கொள்ள மாட்டான்'' என்று.

தந்தையின் இகழ்ச்சித் தொனியைக் கவனிக்கவே செய்தான் மாறன் பரமேசுவரன். ஆனால், அவன் நிதானத்தைச்

சிறிதும் இழக்கவில்லை. மெள்ள கட்டுப்படாத தனது உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்திக் கொண்டான். ''தந்தையே! நமக்குள் வீண் தர்க்கம் வேண்டாம்'' என்றான் சிறிது பணிவுடன்.

''அது உனக்குப் புரிந்துவிட்டதைப் பற்றி மகிழ்ச்சி. இப்பொழுது கேள். விஜயாலயன் நாளை மறுநாள் தஞ்சையில் பாசறை அமைப்பான். பிற்பகல் அவன் படை நம்மை நோக்கி வரும். அவனை எதிர்கொள்ள நமது மூவாயிரம் புரவி வீரர்களுடன் நீ சித்தமாயிரு'' என்று கூறிவிட்டுப் படைத் தலைவர்களை நோக்கி ''சரிதானே?'' என்று கேட்டான்.

''முற்றிலும் சரி'' என்றார் முதிய படை தலைவர்.

பெரும்பிடுகர் இன்னொரு கேள்வியை வீசினார், ''எதிரியின் பலம் எப்படி?'' என்று.

இங்கு இடைபுகுந்த மாறன், ''விஜயாலயன் யானைப் படை என்ன ஆயிற்று?'' என்று வினவினான்.

''உறையூரைக் காத்து நிற்கிறது'' என்றார் படைத் தலைவர்.

இங்கு குறுக்கிட்டார் பெரும்பிடுகர். ''அதல்ல காரணம்'' என்றார்.

''வேறு என்ன காரணம்?''-வியப்பிருந்தது மாறன் குரலில்.

''நம்மிடம் யானைப்படையில்லை'' என்று சுட்டிக் காட்டினார் பெரும்பிடுகர்.

''ஆம்''-மாறன் குரல் சந்தேகத்துடன் ஒலித்தது.

''அதனால் விஜயாலயன் யானைப் படையைக் கொண்டு வரவில்லை.''

''நம்மிடம் அனுதாபம் போலிருக்கிறது?''

''இல்லை. அவன் சுயசக்தியில் நம்பிக்கை உள்ளவன். தவிர, விஜயாலயன் பெரும்படை பலத்தால் மட்டும் முத்தரையரை வெற்றி கொண்டான் என்று பெயர் எடுக்க விரும்ப



வில்லை. சோழமன்னன் கூடியவரை சமபலத்தால், யுக்தியால், திறமையால் வென்றான் என்று புகழ் சம்பாதிக்கப் பார்க்கிறான்.''

''புகழால் என்ன பயன்?''

''அது வீரர்களுக்குத்தான் புரியும்'' என்று முடிவு கட்டினார் முத்தரைய பூபதி.

தந்தையின் பேச்சு பழைய தினுசுக்குச் சென்று விட்டதை உணர்ந்த மாறன், வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டு விட்டதை உணர்ந்தான். ஆகையால் பேச்சை வளர்த்தாமல், ''சரி தந்தையே, நாளைக்கு மறுநாள் போர்க்களத்தில் எதிரியைச் சந்திக்கிறேன்'' என்று கூறித் தலைவணங்கித் திரும்பிச் செல்ல முற்பட்டான். கையிலிருந்த குவளையிலிருந்து சிறிது மதுவையும் அருந்தினான்.

முத்தரைய பூபதி அவனைப் போகவிடவில்லை. ''இப்படி வா, உட்கார்'' என்று அழைத்து மைந்தனுக்குத் தமக்கு அருகில் உட்கார இடம் காட்டினார். மாறன் உட்கார்ந்ததும், அவன் முதுகையும் செல்லமாகத் தடவிக் கொடுத்தார். பிறகு சொன்னார்: ''மாறா! உன் வீரத்திலோ, படைகளை நடத்திச்செல்லும் திறமையிலோ எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. பல வெற்றிகளை அடைந்திருக்கிறாய். உறையூரையே ஒரு முறை சூறையாடியிருக்கிறாய். ஆனால், நீ காரணமின்றி புரிந்த சில செயல்கள் உன் வாழ்க்கையைப் பாதித்திருக்கின்றன. உன் வாழ்க்கையை மட்டுமல்ல, வீர சமுதாயமான முத்தரையர்களையும் பாதித்திருக்கிறது. கடந்ததைப் பற்றிப் பேசிப் பயனில்லை. வரும் போரின் முடிவு எனக்கு ஓரளவு தெரியும். ஆனால், வீரனாயிருப்பவன் விளைவுகளைப் பற்றிக் கவனிப்பதில்லை. போர்களத்தில் தனதுகடமையைச் செய்கிறான். நமது படைகளை இம்முறை நீயே இயக்குவாய். இந்த மூன்று படைத்தலைவர்களுக்கு இணையாக எதிரிப்படையில் யாருமில்லை. ஆனால் விஜயாலயனைப் பற்றி எச்சரிக்கை

யாயிரு. நாளைக்கு மறுநாள் நமது படைகள் நகரும்போது அவற்றின் முன்னணியில் நீ நிற்பாய் படைகளை நடத்த. பக்கத் தில் நானிருப்பேன்.''

மிக உணர்ச்சியுடன் இப்படிப் பேசிய முத்தரைய பூபதி சிறிது நிதானித்தார். அதுவரை மௌனமாயிருந்த தேவி கேட் டாள், ''நீங்களா அப்பா?'' என்று.

''ஆம். என் மகன் பக்கத்தில் வேறுயார் நிற்கமுடியும்?'' என்று கேட்டார் பூபதி.

''நானிருக்கிறேனே'' என்றாள் தேவி. ''அண்ணா! நான் வருவதில் உனக்கு ஆட்சேபணை இல்லையே?'' என்று மாறனையும் கேட்டாள்.

மாறன் விழித்தான் பதில் என்ன சொல்வதென்று. முத்தரைய பூபதியே பதில் சொன்னார். ''பெண்களை முன் வைத்து வீரர்கள் போராட முடியாது. அப்படிப் போர் நடந் தால் மாறனுக்கும் இழுக்கு. எனக்கும் இழுக்கு. தவிர போரும் நடக்காது'' என்றார்.

''ஏன்?'' தேவியின் கேள்வியில் சினமிருந்தது.

''அந்தக் கிழவன் சும்மா இருக்கமாட்டான்...'' என்று கூறிநகைத்தார் பெரும்பிடுகர்.

''எந்தக் கிழவன்?''

''இங்கு சிறையிலிருந்து தப்பினானே அந்த ஆதித்த கிழவன்!''

''அப்பா''

''பிறகு குமாரனாகிவிட்டானே, அவன்.''

''அப்பா!''

''அந்த ஆதித்தன் உன்னைப் பார்த்ததும் வாளைக் கீழே எறிந்துவிட்டு உன்னை நோக்கி ஓடிவருவான்.ஓடி வந்து...''



''அப்பா!''

''அப்படியே தூக்கிப் போக முயல்வான்.''

''சும்மா இருக்கிறீர்களா இல்லையா?''-சீறினாள் இளவரசி.

''சும்மா இருக்கிறீர்களா இல்லையா?''

''தூக்கிப் போனால் நாங்கள் ஏதும் செய்ய முடியாது'' என்ற முத்தரையர் பெரிதாக நகைத்தார். மாறனும் அவர் நகைப் பில் கலந்துகொண்டான். ஏதோ மேகங்கள் கலந்து இடிப்பது போலிருந்த நகைப்பைக் கண்டு வெகுண்டாள், வெட்கமடைந் தாள் தேவி.

''தூக்கிப்போனால் உங்கள் கை பூப்பறிக்குமா?'' என்றாள்.

''அவன் கைதான் பூப்பறிக்கும். பறித்து உன் தலையில் சூட்டும்.ஒஹஹோ, ஒஹ்ஹோ...'' என்று மீண்டும் நகைப்பு இடிகளை உதிரவிட்டார் பெரும்பிடுகர். மாறனும் அந்த ராட்சஸச் சிரிப்பில் கலந்துகொள்ளவே கட்டிடமே அதிரும்படியாக இருந்தது. சிரிப்பின் ஊடே முத்தரைய பூபதி சொன்னார், ''அப்படி ஏதாவது ஏற்பட்டால் விஜயாலயன் எனக்குச் சம்பந்தி. போர் செய்ய முடியாது''என்று.

படைத்தலைவர் மூவரும், பெரும்பிடுகரும் மாறனும் சிரித்த சிரிப்பில் கலந்துகொள்ளவில்லையானாலும் இதழ் களில் முறுவலைக் காட்டினார்கள். தேவி மிதமிஞ்சிய வெட்கத் தாலும் வெட்கம் கலந்த கோபத்தாலும், ''வாயை மூடுகிறீர் களா இல்லையா?'' என்று இரைந்து பெரும்பிடுகர் வாயை மூடினாள் தனது ஒரு கையால், இன்னொரு கையில் பால் குவளை இருந்த காரணத்தால்.

மூடுகிறேன் என்பதற்கு அறிகுறியாக முரட்டுக் குழல்கள் கொண்ட தலையைப் பெரிதாக அசைத்தார் பெரும் பிடுகர்.

அத்துடன் அன்று மந்திராலோசனை முடிந்தது. அன்று வரை இருந்த அவரது வியாதி எங்கோ பறந்துவிட்டது. அன்றும்

மறுநாளும் வெகு சுறுசுறுப்புடன் இருந்தார் பெரும்பிடுகர். இருமுறை தேவியை அணைத்து நெற்றியில் முத்தமிட்டார்.

மறுநாளைக்கு மறுநாள் விஜயாலயன் படை செந்தலை முன்பு தோன்றியபோது பெரும்பிடுகர் பூரண போருடை அணிந்து பட்டையான தமது பயங்கர வாளையும். நீண்ட வேலையும் இரு கைகளில் தாங்கி நின்றார். அந்தக் கோலத்தி லேயே விஜயாலயன் தூதனைச் சந்தித்தார்.

சோழ தேவன் தூதனாக வந்த இதயகுமாரன் நிமிர்ந்த தலையுடன் தூதை அறிவித்தான். ''முத்தரைய பூபதி அவர்களே! விஜயாலய சோழதேவர் தாங்கள் பெருவீரர் என்பதை உணரு கிறார். இருப்பினும் தங்கள் உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்படுகிறார். ஆகையால் வீண் ரத்தக் களறியைத் தடுக்க உங்களைச் சரணடையச் சொல்கிறார்'' என்று சுருக்கமாகச் சொன்னான்.

பெரும்பிடுகர் அப்பொழுது தமது புரவியின்மீது அரண் மனைச் சதுக்கத்தில் போருக்குத் தயாராக நின்றிருந்தார். இதயகுமாரனைப் பரிவுடன் நோக்கினார். ''தூதனே! உன் உடல் நிலை தேறிவிட்டதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். விஜயாலயன் மகளுக்காகவாவது உன்னைக் காப்பாற்றிக் கொள். ஆதித்தனையும் பார்த்துக்கொள். இல்லாவிட்டால் தேவி...'' என்றவர் வாசகத்தை முடிக்கவில்லை. திடீரென குரலை மாற்றி, ''சொல் சோழனிடம் என் குணம் அவனுக்குத் தெரியுமென்று. நானிருக்கும் கோலத்தைச் சொல். வீணாகப் போரைத் தாமதிக்கச் சொல்லாதே. இன்னும் ஒரு நாழிகைக் குள் என் படை பாய்ந்து வரும்'' என்று கணீரென்ற குரலில் அதிகாரத் தோரணை சொட்டிய கம்பீர ஒலியில் பதில் கூறினார் பெரும்பிடுகர்.

அவரை வணங்கித் தனது புரவியைத் திருப்பிக் கொண்டு விரைந்தான் இதயகுமாரன். அவன் சென்றதும் தமது பக்கத்தில்



நின்ற மாறனிடம், ''படைகள் இப்பொழுதே மெதுவாக நகரட் டும். ஒரு நாழிகையில் போர்க்களச் சமவெளியை அடையும். உடனே புயல்வேகத்தில் புரவிப்படையின் மூன்று பகுதிகளும் எதிரிமீது பாய்ந்துஊடுருவட்டும்'' என்று உத்தரவிட்டார் பெரும்பிடுகர்.

மாறன் வாளை உயர்த்தினான். மூன்று இரும்புச் சுவர்கள் நகருவது போல் முத்தரையர் படை நகர்ந்தது.

ஒரு நாழிகை கழித்து சமவெளிக்கு வந்ததும் பெரும் பிடுகர் வாளை உயர்த்தி, ''ஹோ!'' என்று கூவினார். அதே கூச்சலைக் கிளப்பிய முத்தரையரின் படை வாயுவேகத்தில் விஜயாலயன் படைகளை மோதி ஊடுருவிச் சென்றுவிட்டது.

# 50. மகாவீரன் மரணம்

செந்தலைக்கு வெளியே இருந்த பெரிய நிலப்பரப்பில் நின்றிருந்த விஜயாலயன் பெரும்படைப் பிரிவை, மூன்று பிரிவுகளாக, அல்ல மூன்று புயல்களாக வந்த பெரும்பிடுகு முத்தரையரின் வாயுவேகக் குதிரைப்படை வெகு சீக்கிரத்தில் ஊடுருவியதைத் தவிர, அக்கம்பக்கமிருந்த சோழ வீரர்களையும் வெட்டிச் சாய்க்கத் தொடங்கிற்று. எதிரியின் படை அம்புபோல் நடுவில் ஊடுருவும், அதை ஊடுருவவிட்டு இரு பக்கம் அதைத் தாக்கலாம் என்று கணக்குப் போட்டிருந்த விஜயாலயனுக்கு இந்த மூன்று அம்புத் தாக்குதல் எதிர் பாராததாயிருந்தாலும், போரின் நுட்பங்களை அணுஅணுவாக உணர்ந்திருந்த சோழ தேவன் திடீரென தனது சங்கை மும்முறை ஊதினான். வாளையும் உயரத் தூக்கி மும்முறை ஆட்டினான். கையிலிருந்த வேலையும் பலமாக ராட்சதன் போல் தனது வீரர்களை வெட்டிச் சாய்த்துக்கொண்டிருந்த மாறன் பரமேசுவரன் மீது எறிந்தான். வேல் குறி தவறாமல் மாறன் வலது தோள் மீது பாய்ந்து விட்டதால் மாறன் வாள் கை தொங்கி விட்டது. வாளும் நிலத்தில் விழ இருந்தது. வாளை இடது கைக்கு மாற்றிக்கொண்ட மாறன் அந்தக் கையாலும் போரிடலானான்.

அதே சமயத்தில் விஜயாலயன் வாள்வீச்சுக் குறிப்பை அறிந்த புரவிப் படை, திடீரென மூன்றாகப் பிரிந்து, நடுவிலிருந்த காலாட்படையை ஊடுருவிட்ட எதிரியின் மூன்று பிரிவுகளையும் நேருக்கு நேர் சந்தித்தது. போர் மும்முரமாகியது. நன்றாக சாஸ்திர ரீதியில் பயிற்சியளிக்கப்பட்டிருந்த விஜயாலயன் புரவிப்படை எதிரியை விட்டு திடீரெனப் பக்கவாட்டில் ஒரே முகமாக நகர்ந்தும் பிறகு திடீரென சுவர் போல் நெருங் [illegible] வண்ணம் போரிட்டது.

இப்படி புரவிப்படை மூன்றாகப் பிரிந்து எதிரியைச் சமாளித்துவிட்டதால், சோழன் காலாட்படையினர் மண்டியிட்டு உட்கார்ந்து எதிரி புரவிகளின் வயிறுகளைக் குறித்து வேல்களை எய்தார்கள். அதே விநாடிகயில் ஏதோ சொல்லிவைத்தாற் போல் தூரத்தில் சக்கர வட்டமாக நின்றிருந்த ரதப்படை நகர்ந்து அவற்றிலிருந்த வில்லவர் விற்களை வளைத்து எதிரி வீரர்களை நோக்கி எய்தார்கள். காலாட்படையினர் வேல்களால் தாக்கப்பட்ட புரவிகள் மரண கர்ஜனையிட்டு நிலத்தில் வீழ்ந்தன. அவற்றில் ஆரோகணித்திருந்த முத்தரைய வீரர்கள் நிலத்தில் குதிக்கு முன்பு சோழ ரத வீரர்களின் அம்புகள் அவர்கள் மீது பாய்ந்ததால் சிலர் செயலிழந்தார்கள், சிலர் மார்பில் பாய்ந்து விட்ட கணைகளால் மாய்ந்து விழுந்தார்கள்.

ரணகளத்தில் எங்கும் வீரர்களின் வீரகோஷமும், புரவிகளின் மரணக்கூச்சலும் ஆயுதங்களோடு ஆயுதங்கள் மோதும் பயங்கர ஒலிகளும் போர்க்களத்தில் விபரீத சங்கீதத்தை விளைவித்துக்கொண்டிருந்தன. எதிரிப் படைகளுக்கு நடுவே புகுந்து போரிட்டுக் கொண்டிருந்த விஜயாலயனும், ஆதித்தனும் தங்கள் படை அணிவகுப்பும், பிரிந்து தாக்கிய தந்திரமும் எதிரியை அசைக்கவில்லையென்பதைப் புரிந்துகொண்டார்கள். இன்னொரு பகுதியில் தனது புரவிப்படையை முன்னேற்றிக் கொண்டிருந்த இதயகுமாரனைத் தூரத்திலிருந்து கண்ட விஜயாலயன், மாறனை தனது படைத்தலைவன் நெருங்கி விட்டதையும், இருவரும் தனித்தனியாகப் போரிடுவதையும் கண்டு அந்த இடத்துக்குத் தானும் விரைய முற்பட்டு வாளை பயங்கரமாகச் சுழற்றி எதிரிலிருந்தவர்களை வெட்டி சாய்த்துக்கொண்டு முன்னேறினான்.

இதைக் கண்ட பெரும்பிடுகு முத்தரையர் பலமாகச் சிங்கநாதம் செய்தார். தமது படைகளைச் சட்டென்று ஒருபுறம் திருப்பி விஜயாலயனை நோக்கி விரைந்தார். பெரிதாக மும்முறை, ''ஹோ!ஹோ!'' என்று முழங்கினார். அந்த ஒவ்வொரு

முழக்கத்துக்கும் அவர் படைப்பிரிவு அசைந்தது, எதையும் நசுக்கும் தேர்ச் சக்கரம் போல. பெரும் பிடுகரே அந்த ரணகளத்தில் ராட்சதன் போலிருந்தார். அவர் வாள் சுழற்றலுக்கு முன்னால் நிற்க முடியாத சோழ வீரர்கள் அவரை விட்டுத் தப்பிக்க முயன்றார்கள். புறமுதுகு காட்டாவிட்டாலும் சிலர் பின்னால் நகர்ந்தார்கள். பலர் மாய்ந்தார்கள்.

ராமாயணப் போரில் கும்பகர்ணன் போரிட்டபோது வானர வீரர்கள் இப்படித்தான் ஓடியிருக்க வேண்டும் என்று நினைத்தான், தூரத்திலிருந்த விஜயாலயன் அவரைப் பார்த்து. களப்பிரர் முதலில் தமிழகத்தில் நுழைந்தபோது எத்தனை வேகத்துடன் நுழைந்திருப்பார்கள் என்பதையும் பெரும் பிடுகர் போரிலிருந்து விஜயாலயன் புரிந்துகொண்டான். போர் முற்றிவிட்ட சமயத்திற்குள் புரிந்துகொண்டான். போர் முற்றிவிட்ட சமயத்திற்குள் அவர் தோளில் இரண்டு அம்புகள் பாய்ந்திருந்தன. உடலில் இரு கத்திகள் பாய்ந்திருந்தன. அந்தக் காயங்களிலிருந்து குருதியும் வந்து கொண்டிருந்தது. அத்தனையையும் பெரும் பிடுகர் லட்சியம் செய்யவில்லை. தைத்த அம்புகளைப் பிடுங்கி எறிந்தார் இடது கையால், அதிலிருந்த வேலை விடாமலும், வலது கை வாள் சுழற்றலை நிறுத்தாமலும்.

அவரைச் சுற்றிலும் சோழ வீரர்கள் மடிந்துகொண்டிருந்தார்கள். இருப்பினும் முத்தரைய ராட்சதர் அதைப் பற்றி லட்சியம் செய்யவில்லை. போரின் அநீதிகளைத் தடுக்க முடியாதென்று தமது பெரும் புரவியை முன்னால் தூண்டினார். அதைக் கவனித்த இதயகுமாரன், மாறனை விட்டு அவரை நோக்கித் திரும்பினான். சோழர் படையின் எண்ணிக்கை பலத்தாலும், விஜயாலயன் சாஸ்திரீய அணிவகுப்பாலும் போராலும் முத்தரையர் படையில் பாதி அழிந்து போயிற்று. இனி தமது படையின் கதி அதோகதிதானென்பதைப் புரிந்துகொண்ட பெரும்பிடுகர் தமது போரைக் கடுமைப்படுத்தினார். வேல் கையிலிருந்த தமது புரவியின் சேணத்தை உதறிவிட்டு வலது



கை வாளினாலும் இடது கை வேலாலும் எதிர்ப்பட்டவரை மாய்க்க துவங்கினார். அவரை நோக்கி வந்த இதயகுமாரன் அவர் போர்த்திறமையைக் கண்டு வியந்து நின்றான் ஒரு விநாடி. பிறகு அவரை நெருங்கலானான்.

பெரும்பிடுகரின் போர் இத்தனை மூர்க்கமாகவும் அசாஸ்திரியமாகவும் இருந்ததென்றால், மாறன் பரமேசுவரனை நோக்கிச் சென்ற விஜயாலயன், போரிலும் கலை உண்டு என்பதைக் காட்டினான். அனாயசமாக அவன் கையில் லாவகமாகச் சுழன்ற வாள் யாரையும் வெட்டவில்லை. பக்கவாட்டிலும் எதிரிலும் ஏதோ சிலம்பம்போல் சுழன்று எதிரி வீரர்களின் ஊட்டிகளில் பாய்ந்துகொண்டிருந்தது. அவன் வாள் எப்பொழுது பாய்கிறது, என்ன செய்கிறது என்பதை அறியுமுன்பு வீரர்கள் மாண்டு விழுந்துகொண்டிருந்தார்கள். மாறனை வெகு சீக்கிரம் நெருங்கிவிட்ட விஜயாலயன் திடீரென ராட்சதனாக மாறினான். அவன் கண்முன்பு அவன் மனைவியின் பிணமிருந்த கோரக் காட்சி எழுந்தது. அவள்மீது தான் செய்த சபதம் எழுந்தது. அந்த வேகத்தில், அந்த உணர்ச்சியில் திடீரென தனது வாளை மாறன் கழுத்தில் பாய்ச்சிப் பாய்ச்சி இருமுறை இழுத்துவிட்டான். மாறன் நிலத்தில் விழுந்தான் பெரும் சத்தமிட்டு.

மகன் விழுந்ததைத் தூரத்திலிருந்து கவனித்த பெரும்பிடுகர் கண்களை அந்தப் பக்கம் ஒரு முறை ஓடவிட்டார். பெரிதாக ஒரு முறை வீரக் கூச்சல் கூவினார். அடுத்த விநாடியில் எதிரிகள் கூட்டத்துள் நுழைந்தார். சோழ வீரர்கள் மாண்டு மாண்டு குவிந்தார்கள். ஆனால், அவர் வெறி தீரவில்லை. ''விஜயாலயா இப்படி வா!'' என்று கூவிக்கொண்டு அந்தப் பக்கம் தமது புரவியைத் திருப்பினார். அவரது பெரிய உடம்பு உணர்ச்சியால் துடித்தது. ஆனால் அவர் கல் மனம் மாண்ட மகனை நினைக்கவில்லை. எதிரியை நினைத்தது. அந்த வேகத்தில் அவர் போர் கடுமையாயிற்று. சீக்கிரம் விஜயா

லயனை நெருங்கினார். அந்த சமயத்தில் ஆதித்தன் வீசிய வேல் அவர் மார்பில் புதைந்தது. அதனால் சிறிது தள்ளாடி னார். நிலத்தில் விழ இருந்தவரை விஜயாலயன் புரவியிலிருந்து குதித்து தனது இரு கைகளாலும் தாங்கிக் கொண்டான். அவன் செய்த சைகையால் யுத்த நிறுத்த சங்கங்கள் எங்கும் முழங்கின.

கதிரவன் மறைய இன்னும் இரண்டு நாழிகைகள் இருந் தன. போர்க்களத்தில் மெள்ள பெரும்பிடுகரைப் படுக்க வைத் தான் விஜயாலயன். அம்புகளும் வேல்களும் நிறைந்த அந்த இடத்தில் பீஷ்மர் சரதஸ்பத்தில் கிடந்ததுபோல் கிடந்தார் பெரும்பிடுகர். விஜயாலயன் அவர் முன்பு மண்டியிட்டுக் குனிந்து அவர் மார்பிலிருந்த வேலைப் பிடுங்க முற்பட்டான். வேண்டாமென்று கையை ஆட்டினார் பெரும் பிடுகர். ''விஜயா லயா! நீ மாகவீரன். போர்க்களத்தில் என்னைச் சாகவிடு. என்னைக் காப்பாற்றாதே. என் மாளிகைக்கும் அனுப்பாதே. இதைவிட மாளிகைப் பஞ்சணை வீரனுக்குச் சுகமா?'' என்று கேட்டார். ''தேவிக்குச் சொல்லியனுப்பு'' என்றும் கூறினார்.

விஜயாலயன் கண்ணசைப்பைக் கண்ட ஆதித்தன் விரைந் தான் முத்தரையர் அரண்மனையை நோக்கி. அடுத்த சில நிமிடங் களில் வந்த தேவி, பெரும்பிடுகரை நோக்கி அலற வாயைத் திறந்தாள். பெரும்பிடுகர் மெள்ளத் தமது இடதுகையால் அவள் வாயைப் பொத்தினார். ''தேவி! நீ வீரன் மகள். முத்தரை யர் இளவரசி.அழுவது முத்தரையர் சரித்திரத்தில் கிடையாது'' என்றார்.

அப்படியும் தேவி முக்கினாள், முனகினாள். அவள் கண்களில் நீர் வழிந்தோடியது. அவளைக் குனியும்படி சைகை செய்தார் பெரும்பிடுகர். அவர் மூச்சு பெரிதாக வந்து கொண் டிருந்தது. அத்தனை சிரமத்திலும் ''தேவி! மரண சமயத்தில் உன் பிறப்பு மர்மத்தை வெளியிடுவதாகச் சொன்னேன். நினைப் பிருக்கிறதா?'' என்று கேட்டார், மெதுவாக. அவர் குரல் பல வீனப்பட்டிருந்தது.



தேவியால் பேசமுடியவில்லை. 'நினைப்பிருக்கிறது' என்பதைக் குறிக்கத் தலையை மட்டும் ஆட்டினாள்.

''இது அந்த சமயம்.கேள். நீ என் மகளல்ல. என் சாதியு மல்ல. சேரன் மகள். உன்னை நான்தான் தூக்கி வந்தேன். அதற்கு அத்தாட்சி கிடையாது. ஆனால் உண்மை. நான் செய்த செய்கைக்காக என்னை வெறுக்காதே'' என்றார்.

அவன் கண்கள் பஞ்சடைவதைக் கண்ட தேவி, ''அப்பா!'' என்று அலறினாள். அவள் பக்கத்தில் நின்ற ஆதித்தன் அவள் தோளை ஆதரவுடன் பற்றினான். முத்தரையர் கண்சற்று அகல விரிந்தது. இருவரையும் கவனித்தது, புன்முறுவல் கொண்டது. பிறகு ''இதயகுமாரன் எங்கே?'' என்று முணுமுணுத்தார் முத்தரையர்.

இதயகுமாரன் நிலத்தில் மண்டியிட்டு அவரை நோக்கிக் குனிந்தான். அவன் காதில் ஏதோ சொன்னார் அவர். அடுத்து அவர் தலை புரண்டது நிலத்தில். தேவி அவர் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

சோழ வீரர் வெற்றிச் சங்குகளை முழங்கத் துவங்கினார் கள். தனது கையசைப்பினால் அதைத் தடுத்தார் விஜயாலய சோழ தேவர். ''மகாவீரன் இறந்திருக்கிறான்'' என்று கூறி தமது வாளை பெரும்பிடுகர் உடலை நோக்கித் தாழ்த்தினான். அதைத் தொடர்ந்து ஆயிரம் வாட்கள் தாழ்ந்தன. வீரனாக வாழ்ந்த பெரும்பிடுகர் வீரனாக உயிர் நீத்தார். மாறனைப் பற்றி யாருமே நினைக்கவில்லை. ஏதோ ஓரிடத்தில் அவன் சடலம் கேட்பாரற்றுக் கிடந்தது. சில பாவங்கள் மனிதர்களை விடுவதில்லை என்ற விதிக்கு அத்தாட்சியானான் மாறன் பரமேசுவரன்.

## 51. சாஸ்திரியின் நிலை

போர்க்களத்தில் வாளும் கையுமாக வீழ்ந்த சமயத்திலும் தலை வணங்காமல் மல்லாந்து வீழ்ந்து வீர சொர்க்கம் எய்திய பெரும்பிடுகு முத்தரையரை ராஜ மரியாதைகளுடன் தகனம் செய்ய ஏற்பாடு செய்தான் விஜயாலயன். கதிரவனும், ஒரு பெரிய வீர சமுதாயத்தின், முந்நூறு ஆண்டுகளாகத் தமிழகத் தில் இருண்ட காலத்தைச் சிருஷ்டித்த களப்பிரரின் கடைசி சந்ததியும் அரசுமான செந்தலை அரசு மறைந்துவிட்டதைப் பார்க்க இஷ்டப்படாதவன் போல் மேலைக் கடலில் மெள்ள மூழ்கினான்.

எதையும் முன்பே எதிர்பார்க்கும் சுபாவமுள்ள விஜயா லயனும் முன்னமே செய்திருந்த ஏற்பாட்டின்படி ஆயிரம் பந்தங்கள் திடீரெனக் கொளுத்தப்பட்டு ரண களத்தின் இருளைக் கிழிந்து ஏற்கனவே இருந்த கோரத்தை அதிகப் படுத்தின. அந்தச் சமயத்திலும் பெரும்பிடுகரின் மார்பு மீது கிடந்து குலுங்கி அழுதுகொண்டிருந்த தேவியை நோக்கி, ''தேவி! இவரை செந்தலை அரண்மனைக்கு எடுத்துச் செல். உங்கள் குல வழக்கப்படி சகல மரியாதைகளுடன் இவருக்கு ஈமக் கிரியைகளைச் செய்து முடி'' என்று கூறினான். அத்துடன் அருகில் நின்ற தன் மகனை நோக்கி, ''ஆதித்தா! தந்தையற்ற வள். இனி இவளுக்கு நீதான் சகலமும். இவளுடன் செல்'' என்று உத்தரவும் இட்டான்.

ஆதித்தன் மெள்ள தேவியைத் தனது இரு கைகளாலும் தூக்கி நிற்க வைத்தான். ''வீரன் மகள் அழக்கூடாது. வா, மேலே நடக்க வேண்டியதைக் கவனிப்போம்'' என்று கூறி விட்டு இரு வீரர்கள் வசம் அவளை ஒப்படைத்தான். பிறகு உட்கார்ந்து, தான் எறிந்த வேலைத் தனது கைகளால் மெள்ளப்



பிடுங்கினான். அதனால் பெருகி வந்த குருதியைத் தனது அங்கியைக் கிழித்துச் செருகி அடக்கினான். அடுத்து, நீண்ட இரு வேல்களாலும் குறுக்கு அம்புகளாலும் சமைக்கப்பட்ட சர ஆசனத்தில் பெரும்பிடுகர் சடலத்தைக் கிடத்தி நான்கு வீரர்களைக் கொண்டு தூக்கச் சொல்லி பந்தங்கள் முன்னும் பின்னும் வர தேவியுடன் செந்தலைக்குள் நுழைந்தான்.

அவர்கள் சென்ற பின்பு போர்க்களத்தில் விஜயாலயன் ஜெயபேரிகை முழங்கிற்று. அதைக்கூடச் சரியாகக் காதில் வாங்காமல் நின்றிருந்த சோழ மாதேவன், பக்கத்தில் நின் றிருந்த படைத்தலைவனை நோக்கி, ''இதயகுமாரா! நீ ஏன் செந்தலைக்குப் போகவில்லை?'' என்று வினவினான்.

இதயகுமாரன் சற்றுச் சிந்தித்து விட்டுச் சொன்னான், ''இது மகத்தான வெற்றிதான். சோழ சாம்ராஜ்யத்துக்கு இந்த வெற்றி வித்திடுகிறது. இருப்பினும் என் இதயத்தில் மகிழ்ச்சி இல்லை'' என்று.

விஜயாலயன் புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலை யசைத்தான். அடுத்து படைத்தலைவன் கேட்டான், ''மன்னர் அனுமதித்தால் நான் கிளம்புகிறேன்'' என்று.

விஜயாலயன் புருவங்கள் கேள்வி கேட்பனபோல் எழுந்தன. அதைப் புரிந்துகொண்ட இதயகுமாரன், ''வஞ்சிக்குப் புறப்படுகிறேன்'' என்றான்.

சோழன் புன்முறுவல் செய்தான். ''நாளைக்குக் கிளம் பினாலென்ன?'' என்று வினவினான்.

''தாமதிப்பதற்கில்லை'' என்றான் படைத்தலைவன் திட்டமாக.

''ஏன்?''

''பெரும்பிடுகர் உத்தரவு.''

''என்ன?''

''ஆம்; மரணத் தறுவாயில் கட்டளையிட்டார்.''

விஜயாலயன் சிந்தித்தான். ஏதோ அவன் முகத்தில் சந்தேகம் பளிச்சிட்டது. ''சரி, போய் வா. வரும்போது உறையூருக்கு வரவேண்டாம். தஞ்சைக்கு வந்துவிடு'' என்றான்.

பக்கத்தில் நின்றிருந்த விஜயன்மீது ஏறத் திரும்பிய இதயகுமாரன் சட்டென்று மீண்டும் திரும்பி, ''தஞ்சைக்கா மகாராஜா!...'' என்று வியப்புடன் வினவினான்.

''ஆம். இன்று முதல் சோழர் சரித்திரம் மாறுகிறது. தலைநகரமும் மாறுகிறது'' என்றான் மன்னன்.

இதயகுமாரன் அசைவற்று நின்றான். ''நீ வஞ்சிக்குப் போய் வா. விவரமாகச் சொல்கிறேன்'' என்ற விஜயாலயன் போர்க்களத்தில் தீவிர சிந்தனையுடன் நடந்து சென்றான். பல்லவரின் குறுநில மன்னனாயிருந்த தனது குறுநிலம், சேரர் வஞ்சி, முக்கூடல், தஞ்சை, இவற்றின் சேர்க்கையில் ஓரளவு பெருநிலமாகிவிட்டதையும், அதை விஸ்தரிப்பதற்கு வேண்டிய பலமும் தன்னிடமிருப்பதையும் உணர்ந்தாலும், பெரும்பிடுகு முத்தரையர் வீர மரணம் அவன் சித்தத்தைப் பெரிதும் பாதித்திருந்ததால் அவன் தனது வெற்றியைப்பற்றி மகிழ்ந்தானில்லை. பெரும்பிடுகரது வளர்ப்பு மகளைத் தனது மகனுக்கு மனையாளாக்குவதாலும், மீதி முத்தரையர் படையைத் தனது படையில் இணைத்துக் கொள்வதாலும் அவரது ஆத்மாவுக்குச் சாந்தியை அளிக்கலாமென்று எண்ணிக் கொண்டே நடந்து சென்றான் விஜயாலயன். இதைத் தவிர, பெரும்பிடுகர் மரணத் தறுவாயில் இதயகுமாரனிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னாரே, அது எதுவாயிருக்கும் என்றும் எண்ணிப் பார்த்தான்.

வஞ்சி மாநகரை நோக்கிச் சென்ற இதயகுமாரனும் பெரும்பிடுகர் முடிவில் உதிர்த்த சொற்களையே எண்ணிக் கொண்டிருந்தான். ''இளையவேள் வஞ்சியிலிருக்கிறான். அங்கு செல். ஆனால் அவனைக் கொல்லாதே. அவன் என் பேரன்'' என்ற அவர் சொற்கள் அப்பொழுதும் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. ''மாரவேளும் இதே கோரிக்



கையைத்தான் வெளியிட்டார் முன்பு. இளையவேள் இவருக்கும் பேரனானால் அவன் தாய் மாறன் பரமேசுவரனால் கெடுத்துத் துரத்தப்பட்டவளா?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். ''அப்படியானால் முன்பு நான் செந்தலையில் இருந்த போது இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?'' என்றும் ஒரு வினாவை எழுப்பிக் கொண்ட சோழர் படைத்தலைவன் ''பாவம்! எப்படிச் சொல்லுவார்? தமது பேரனை எப்படிக் காட்டிக் கொடுப்பார்?'' என்று சமாதானம் செய்து கொண்டான்.

அங்கிருந்து அவன் நினைப்பு வஞ்சிமாநகரையும் கண்ணழகியையும் நோக்கிச் சென்றது. ''கண்ணழகிக்குப் போரின் முடிவைச் சொல்லும் அதிர்ஷ்டம் எனக்குத்தானே கிடைத்திருக்கிறது. வெற்றிச் செய்தியைக் கேட்டதும் கண்ணழகி என்ன செய்வாள்? என்னை...'' என்று எண்ணிய இதயகுமாரன் பிந்திய எண்ணத்தையும் சொற்களையும் தானாகவே நிறுத்திக் கொண்டான். இளையவேள் வஞ்சியிலிருப்பதால் கண்ணழகிக்கு ஏதாவது கெடுதல் ஏற்படுமோ என்ற அச்சமும் அவன் இதயத்தைச் சூழ்ந்துகொண்டது. ''எதுவும் ஏற்படக் காரணமில்லை. அச்சுதப் பேரரையர்தான் அவளுடன் இருக்கிறரே'' என்று மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

இருப்பினும் பெரும்பிடுகர் குரலில் இருந்த கவலையையும், அவர் வேண்டுகோளையும் நினைத்துப் பார்த்து, இளையவேளின் நடத்தையில் ஏதோ அபாயத்தை எதிர்பார்த்திருக்கிறார் பெரும்பிடுகர் என்று நிர்ணயித்துக் கொண்டான். அதன் விளைவாக விஜயனைச் சிறிது முடுக்கினான். எஜமானன் எதிர்பார்ப்பைப் புரிந்துகொண்ட புரவியும் வேகமாகச் சென்றது. இதயகுமாரன் எண்ணத்தின் வேகத்துக்கு இரவு விரைய மறுத்ததால் மறுநாள் காலையிலேயே வஞ்சி மாநகருக்குள் புகுந்தான் சோழர் படைத் தலைவன்.

முதன் முதலில் வந்தபோது அவனுக்கு ஏற்பட்ட தடை எதுவும் அப்பொழுது இல்லை. மரியாதையுடன் தலை வணங்கி

காவலர் வழிவிட்டனர். ஆனால் அவர்கள் முகத்தில் ஏதோ கவலை இருப்பதைப் புரிந்துகொண்ட இதயகுமாரன் அதற்குக் காரணம் புரியாமல் வேகமாக வஞ்சிநகர் அரண்மனையை நோக்கிச் சென்றான். அங்கு வாயிலில் பத்துப் பதினைந்து புரவி வீரர்கள் கிளம்புவதற்குச் சித்தமாக நின்றிருந்தார்கள். அச்சுதரும் உள்ளிருந்து வந்தார் ஆயுதபாணியாக. இதய குமாரனைப் பார்த்ததும் அவசரமாக மாளிகைப்படிகளில் இறங்கி வந்து, ''இரவு முதல் அரசகுமாரியைக் காணவில்லை'' என்று கூறினார். அவர் உதடுகள் கவலையால் துடித்தன.

இதைக் கேட்ட இதயகுமாரன் சிலவிநாடிகள் சிலை யென நின்றான். பிறகு வினவினான், ''எப்பொழுது தெரியும் உங்களுக்கு இது?'' என்று.

''சற்று முன்பு'' அதிர்ச்சி துலங்கப் பேசினார் அச்சுதர்.

''யார் சொன்னது?''

''பணிப்பெண்.''

''என்ன சொன்னாள்?''

''அரசகுமாரி இரவு நந்தவனத்துக்கு உலாவச் சென்றார் களாம். உடன் வர முற்பட்ட பணிப்பெண்ணையும் நிறுத்தி விட்டார்களாம். நள்ளிரவு தாண்டியும் அரசகுமாரி திரும்பா திருக்கவே அவளே சில வேலைக்காரர்களுடன் சென்றாள். நந்தவனத்தில் அரசகுமாரியில்லை. அங்கிருந்து நானிருந்த கொல்லர் வீதி இல்லத்துக்குச் சென்றாளாம். அங்கும் காணோ மாம்'' என்று விடுவிடு என்று பேசினார் அமைச்சர்.

இதயகுமாரன் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. புரவி மீது ஏறி அச்சுதப் பேரறையரின் பழைய விடுதிக்குச் சென்றான். அங்கிருந்த நிலவறைக்கும் ஓடினான். நிலவறையிலும் யாரும் இல்லை. அச்சுதரும் அங்கு வந்தார், நிலவறையில் யாரும் வரவில்லையென்பது புரிந்தது. ''அரசகுமாரிக்கு ஏதோ ஆபத்து'' என்று மட்டும் சொன்னார் அச்சுதர்.



சிறிது சிந்தித்த இதயகுமாரன் அவர் பேச்சைக் கேட் காமல் ''யாரும் என்னைத் தொடர வேண்டாம்'' என்று கூறி விட்டு வெளிவந்து விஜயன்மீது தாவி கோட்டைக்கு வெளியே வந்து உறையூர் பெருஞ்சாலையில் அதைப் பறக்க விட்டான். எங்கும் நிற்காமல் வாயு வேகத்தில் முக்கூடலை அடைந்து சங்கரநாராயணன் விடுதிக்குச் சென்றான். கதவு உள்ளே தாழிட் டிருந்தது. அதைப் பலமாகத் தட்டினான். கதவு திறந்தது தானாக. உள்ளே யாருமில்லை. விடுதி நிசப்தமாயிருந்தது. இரண்டு கட்டுகளைக் கடந்து சென்றான் இதயகுமாரன். மூன்றாவது கட்டில் இருந்த அறையில் பெரும் முனகல் கேட்டது. அந்த முனகல் வான சாஸ்திரியான சங்கர நாராயணருடையது. அதை அடுத்து பயங்கரமான சிரிப்பொலி. அது இளையவேளுடை யது. அந்த நகைப்புடன் கூறினான் இளையவேள், ''டேய்! வானசாஸ்திரி! உன் ஜாதகத்தை நீயே பார்த்துக்கொள். உன் காலம் கிட்டிவிட்டது'' என்று.

''நட்சத்திரங்கள் அப்படி சொல்லவில்லை'' என்றார் சங்கரநாராயணன் முனகலுக்கிடையே.

''உன் ஜாதகமும் பொய். நட்சத்திரங்களும் பொய். உன்னிடம் ஏமாற நான் சேர மன்னனில்லை. உன்னை இனி நீ நம்பும் கடவுளும் காப்பாற்ற முடியாது'' என்று கூறி மீண்டும் நகைத்தான் இளையவேள்.

முதல் சிரிப்பைக் கேட்டவுடனேயே மெள்ளளக் கதவைத் திறந்துகொண்டு பூனைபோல் உள்ளே சென்று உருவிய வாளுடன் நின்ற இதயகுமாரன் ''கடவுளை எடைபோடும் அளவுக்கு நீ உயர்ந்து விட்டாயா?'' என்று லேசாக வினவினான்.

அதுவரை வான சாஸ்திரியின் மார்புமீது காலை வைத்துக் கொண்டு கழுத்தில் தனது வாளின் நுனியை அழுத்திக் கொண் டிருந்த இளையவேள் சரேலென்று திரும்பினான்.

# 52. நகர்ந்த கதவு! துவண்ட மலர்!

இதயகுமாரன் குரலைக் கேட்டதும் பரம வேகத்துடன் திரும்பிய இளையவேளின் முகத்தில் வியப்பு, வெறுப்பு, சினம் ஆகிய மூன்று உணர்ச்சிகளும் மாறி மாறித் தெரிந்தன. அறைக்குள் பூனைபோல் நுழைந்த இதயகுமாரன் திறந்த ஒரு கதவின் மீது சாய்ந்து கொண்டு அலட்சியமாக நிற்பதையும், அவன் கையில் உருவிப் பிடித்திருந்த வாள் அனாயாசமாக ஆடிக் கொண்டிருந்ததையும், முகத்தில் அலட்சியமும் இகழ்ச்சியும் இணைந்த சாயை தவிர, சினத்தின் அறிகுறி சிறிதும் இல்லாதையும் கவனித்த இளையவேள், ''இதயகுமாரா! நீ ஒரு அடி முன்னால் எடுத்து வைத்தாலும் இந்த சாஸ்திரியின் உயிர் வானுலகுக்குப் பறந்து விடும்'' என்று கூறி தனது உறுதிக்கு அடையாளமாக அவர் கழுத்தைத் தடவிக் கொண்டிருந்த தனது வாளின் நுனியை லேசாக அழுத்தவும் செய்தான்.

இத்தனைக்கும் சாஸ்திரியின் முகத்தில் எந்தவித அச்சமும் தெரியவில்லை. தவிர, அவர் படுத்த நிலையிலேயே கைவிரல்களை எண்ணவும் தொடங்கினார். அதைப் பார்த்த இளையவேளின் எரிச்சல் அதிகமாகவே, ''சாஸ்திரி! என்ன எண்ணுகிறாய்?'' என்று கேட்டான் எரிச்சல் குரலிலும் விரிய.

''இப்பொழுது கிரகங்களின் நிலையைப் பார்த்தேன்'' என்றார் சங்கரநாராயணன்.

கத்தி கழுத்தில் ஊன்றிய நிலையிலும் கைவிரல்களை விட்டு எண்ணிய சாஸ்திரியின் பைத்தியக்காரத்தனத்தை நினைத்த இளையவேள், ''என்ன தெரிந்து கொண்டீர்?'' என்று கேட்டான்.

''சனி பிரவேசித்து விட்டான் உன் ஜாதகத்தில் எட்டு விநாடிகளுக்கு முன்பு '' என்று மகிழ்ச்சியுடன் சொன்னார் சங்கரநாராயணன்.



''இதயகுமாரனைச் சொல்கிறீரா?'' என்று தனது நகைச் சுவையைக் காட்டினான் இளையவேளும்.

''அப்படியும் வைத்துக் கொள்ளலாம். சனி பகவான் அவனைக் கருவியாக உபயோகப்படுத்தலாம்'' என்றார் சாஸ்திரி.

''எதற்கு?''- இளையவேள் சீறினான்.

''என்னை அங்க ஹீனப்படுத்த'' சாஸ்திரியின் சோதிடம் திட்டமாயிருந்தது.

''என்னை அங்கஹீனப்படுத்தவா? ஏன், கொன்றாலென்ன?'' என்று கேட்டு நகைத்தான் இளையவேள்.

சாஸ்திரி மீண்டும் விரல்களை விட்டு எண்ணினார் ''ஊஹூம், முடியாது'' என்றார்.

''எது?'' இளையவேள் வினவினான்.

''கொல்ல முடியாது.''

''அப்படியானால் என் வீரத்தைப் புரிந்து கொண்டு வீட்டீர்?''

''இல்லாததை புரிந்து கொள்ள முடியாது.''

''சாஸ்திரி! அத்துமீறப் போகிறீர்கள்.''

''இல்லை. நிலையைச் சொல்கிறேன். நிராயுதபாணியான என்னைக் கீழே தள்ளி வாளைக் கழுத்தில் ஊன்ற வீரம் தேவையில்லை. ஆனால், இதயகுமாரனுடன் போராட வீரம் வேண்டும்.''

''அதையும் காட்டுகிறேன்.''

''சீக்கிரமாகக் காட்டுவது நல்லது.''

''ஏன்?''

''இல்லா விட்டால் மரணம். இப்பொழுதே துவங்கினால் அங்கஹீனம். இன்னும் அரைநாழியில் இரண்டு நீசக்

கிரகங்கள் சனியைப் பார்க்கும். பார்த்தால் உனக்கு மரணம்'' என்றார் சாஸ்திரி. சொல்லி நகைத்தார்.

அவருடைய ஒவ்வொரு பேச்சிலும் சினம் உயர்ந்த இளையவேள், அவர் மீதிருந்த காலை எடுத்தான். கத்தியையும் நீக்கினான். ''சாஸ்திரி! உன் சோதிடம் எத்தனை தூரம் பலிக்கிறது பார்ப்போம்'' என்று கூறிவிட்டு வாளை இதய குமாரனை நோக்கி நீட்டி, ''சோழர் படைத்தலைவனே! எங்கே உனது வீரத்தைப் பார்ப்போம்!'' என்று கூறிக்கொண்டே அவனை நோக்கிப் பாய்ந்து வாளையும் சரேலென்று தலையில் இறக்கிவிட முயன்றான்.

அவன் வாள் அந்தரத்தில் தடுக்கப்பட்டது. கதவில் சாய்ந்த நிலையைவிட்டுச் சிறிதும் நகராமல் வாளைத் தலைக்கு மேல் உயர்த்தி இளையவேளின் வாளைத் தடுத்துவிட்ட இதய குமாரன், அதைத் தடுத்த நிலையிலேயே தனது வாளைச் சுழற்றி எதிரி வாளின் போக்கை வேறு புறம் திருப்பிவிட்டு, மேலும் போராட உள்ளுக்குள்ளே நுழைந்தான். அதற்குள் சங்கரநாராயணனும் எழுந்திருந்து தனது கைகால்களை உதறிக் கொண்டார். முடிந்து கிடந்த தனது முன்குடுமியையும் அவிழ்த்து விட்டுக் கொண்டார்.

உள்ளே நுழைந்துவிட்ட இதயகுமாரன், தனக்குப் போராட நிரம்ப இடங்கொடுத்து விட்டதால் வாளைப் பலமாக வீசிய இளையவேள் சாஸ்திரியின் நடவடிக்கையை ஓரக்கண்ணால் பார்த்து, ''குடுமியை ஏன் அவிழ்க்கிறாய்?'' என்று வினவினான்.

''சாணக்கியன் குடுமியை அவிழ்த்தான், நவநந்தர்களை அழித்தான். திரௌபதி குழல் விரித்தாள், அதர்மம் செய்தவர் கள் அழிக்கப்பட்டார்கள். முடி அவிழ்தலுக்கும் அழிவுக்கும் புராண சம்பந்தமும் உண்டு, வரலாற்றுச் சம்பந்தமும் உண்டு'' என்று விளக்கிய சாஸ்திரி, ''சரி, சரி! போரைக் கவனி, என் சோதிடத்தைப் பொய்யாக்கப் போகிறாய்'' என்றார் இகழ்ச்சி யுடன்.



இரைந்து நகைத்தான் இளையவேள், வாளை எதிரி வாளுடன் மோதிக்கொண்டே. சாஸ்திரியின் மீதிருந்த கோபத் தில் மும்முறை தனது வாள் அளித்த இடைவெளியில் இதய குமாரன் வாள் புகுந்து விட்டதையோ இதை வேண்டுமென்றே சோழர் படைத்தலைவன் திரும்ப இழுத்துக் கொண்டதையோ இளையவேள் கவனிக்கவில்லை. ''உன் சோதிடம்கூடப் பொய் யாகுமா சாஸ்திரி?'' என்று கேட்டான் நகைப்பின் ஊடே.

''உன்னைப் போல முட்டாளுக்குச் சோதிடம் சொன்னால் ஏன் ஆகாது? நீ இதயகுமாரனுக்கு மார்பைத் திறந்து காட்டி பிராணனை விட்டால் சோதிடமா பொறுப்பாளி?'' என்ற சங்கரநாராயணன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

அடுத்து இரு எதிரிகளும் போரைத் தொடர்ந்தனர். இதய குமாரன் வாள்வீச்சின் நிதானத்தால் சினமடைந்த இளைய வேள், ''இதயகுமாரா! தற்காப்புப் போர் செய்வது வீரனுக்கு அழகல்ல. வா முன்னேறி'' என்று கூவினான்.

இதயகுமாரன் அந்தக் கூச்சலுக்குப் பதில் சொல்ல வில்லை. ''கண்ணழகி எங்கே?'' என்ற ஒரு கேள்வியை மட்டும் தொடுத்தான் எதிரி வாளைத் தடுத்துக்கொண்டே. அவன் குரலின் நிதானத்திலேயே பயங்கரம் இருந்தது.

பதிலுக்கு நகைத்தான் இளையவேள். ''ஓ! அதை அறிந்து கொள்ளத்தான் இத்தனை நிதானமா? யாராலும் அவளைக் கண்டுபிடிக்க முடியாது. உன்னைக் கொன்ற பிறகு அவளை மணக்கப் போகிறேன்'' என்று கூறவும் செய்தான்.

இதை அவன் சொன்னதுதான் தாமதம், இதயகுமாரன் வாளை வெகு வேகமாகச் சுழற்றிக் கொண்டு இளையவேளை அணுகினான். இளையவேளும் எதிரியின் வாளைத் தடுத்தும், சுழற்ற முயன்றும், இடைவெளி கிடைத்தபோது எதிரியின் பாதுகாப்பை ஊடுருவ முயன்றும் வேகமாகப் போராடினான். இளையவேள் மீதிருந்த அத்தனை சினத்திலும் அவன் வீரத்தை

யும் வாளைச் சுழற்றும் நேர்த்தியையும் உள்ளூரப் பாராட்டி னான் இதயகுமாரன். இத்தனை வீரத்தில் அதர்மம் கலக்கா திருந்தால் அவன் நாட்டுக்கு எத்தனை பயன்படுவான் என்பதை நினைத்துச் சிறிது துன்பச் சாயையும் முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

அதைத் தவறாகப் புரிந்துகொண்ட இளையவேள், ''இதய குமாரா! இளையவேளை வெற்றி கொள்வது அத்தனை சுலப மல்லவென்று புரிகிறதா?'' என்று கேட்டுக்கொண்டே அவன் வேறு எங்கோ பார்த்த சமயத்தில் தனது வாளை அவன் மார்பை நோக்கிப் பாய்ச்சினான்.

அவன் செய்த தவறுகள் இரண்டு. இதயகுமாரன் கண்கள் அறையின் ஒரு மூலையை நோக்கியதால் தன்னை நோக்க வில்லை என்பது ஒன்று. எதிர்பாராத சமயமென்பது இதய குமாரன் போர் முறையில் கிடையாதென்பதை அறியாதது இரண்டு. இந்த இரண்டு காரணங்களால் ஏற்பட்ட ஏமாற்றத் தால்தான் அந்தத் திடீர் விளைவு ஏற்பட்டது. தனது மார்பை நோக்கி வந்த இளையவேளின் வாளைக் குறுக்கே தனது வாளால் தட்டிவிட்ட இதயகுமாரன் அடுத்த விநாடி மின்னல் வேகத்தில் ஒரு முறை சுழன்றான். எதிரி வாள் மிக வேகமாக வேறுபுறம் திருப்பப்பட்டது. இளையவேளின் வாள் கரத்தில் குறுக்கே இறங்கிய இதயகுமாரன் பட்டையான வாள் அந்தக் கரத்தைத் துண்டித்துவிட்டது. துண்டித்த கரம் சட்டென்று தொங்கிவிட்டதும் பெரிதாக அலறினான் இளையவேள்.

அந்தச் சமயத்தில் அறையின் வேறொரு மூலையி லிருந்து வந்த வான சாஸ்திரி, இளையவேளை அனுதாபத்துடன் நோக்கினார். ''சனி பகவான் அடியெடுத்து வைத்தாலே இப்படித்தான். அவன் கால்தான் நொண்டி என்றால் மற்றவர் களையும் அங்கஹீனப்படுத்துகிறான்'' என்று கூறிக்கொண்டு இளையவேளின் கையைப் பரிசோதித்தார். ''எலும்பு, தசைகள் எல்லாம் முறிந்தும், அறுபட்டும் விட்டன. இதை எதுவும்



செய்ய முடியாது'' என்று கூறி, ''இளையவேள்! வா, மெள்ள, உனக்குத் துளி துன்பம் வைக்காமல் கையை எடுத்து விடு கிறேன்'' என்றும் சொன்னார். அறையின் ஒரு மூலைக்கு அவனை இழுத்துச் சென்றார். சென்றபோது கேட்டார் இதயகுமாரனை, ''இவன் கையை ஏன் துண்டித்தாய்?'' என்று.

''இவன் பாட்டனார் வேண்டுகோள்'' என்றான் இதய குமாரன்.

''யார், மாரவேளா?''

''மாரவேள், பெரும்பிடுகு முத்தரையர் இருவர் வேண்டு கோளும்.''

''கையை வெட்டச் சொல்லியா?''

''இல்லை. கொல்லக்கூடாதென்று வேண்டுகோள்.''

''அப்படியானால் காலை வெட்டுவதுதானே?''

''இடைக்குக் கீழ் வாளை உபயோகப்படுத்துவது அதர் மம். இரண்டாவதாக, பெண்ணைத் தீண்டுபவர்களுக்குப் பெரும்பிடுகர் அளிக்கும் தண்டனை இதுதான்.''

இதைக் கேட்ட சாஸ்திரி முகத்தில் வியப்பைக் காட்டி னாலும் வேறெதுவும் கேட்கவில்லை. ''இதயகுமாரா! இந்த அறையின் கோடிக்குச் செல். அங்கு ஒரு உருளை இருக்கும். அதைத் திருகு'' என்று கூறிவிட்டு நடந்தார் இளையவேளை இழுத்த வண்ணம்.

அவர் சொற்படி அறை மூலைக்குச் சென்ற இதயகுமாரன், உருளையைத் திருகினான். சுவர் நகர்ந்து வழிவிட்டது. நகர்ந்த சுவரின் அருகில் கண்ணழகி நின்றிருந்தாள். அடுத்த விநாடி துவண்ட மலரென இதயகுமாரன் மீது விழுந்தாள். இதய குமாரன் கைகள் அவளை இறுக்கி அணைத்தன.

# 53. முரட்டுத்தனம்

மனிதன் முழுத் துன்பத்துக்கோ முழு மகிழ்ச்சிக்கோ ஆளாக்கக்கூடியது ஒரே ஒரு சிருஷ்டிதான். அது பெண். மனிதன் சித்தத்தைச் சிதைக்கவும், சித்தப் பிரமை உண்டாக்கவும், ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தவும் சக்தி உள்ளவள் பெண்தான். அதனால்தான் உலகத்தை இயக்கும் சக்தியையும் வேதாந்தம் பெண்ணாகச் சித்திரித்திருக்கிறது. இந்த நியதியால்தான் கண்ணழகி துவண்டு தன்மீது விழுந்தபோது முழுத் துன்பத்தை யும் முழு மகிழ்ச்சியையும் மாறிமாறி அடைந்தான் இதயகுமாரன்.

அவள் விரும்பும் செண்பக மலரைப் போலவே துவண்டு தன்மீது சாய்ந்துவிட்ட கண்ணழகியின் நிலை கண்டு ஒரு வினாடி துன்பத்தில் பூர்ணமாக ஆழ்ந்துவிட்ட இதயகுமாரன், மறு வினாடி தான் அணைத்த அவள் உடலிலிருந்து எழுந்த பரிமள கந்தத்தினாலும், அவள் அங்க லாவண்யங்கள் தனது சரீரத் துடன் இணைந்து கிடந்ததாலும் உவகையின் எல்லையை எய்தினான். அந்தப் புஷ்பக் கொடியை அப்படியே வாரித் தனது தோளில் போட்டுக்கொண்டு அறையை விட்டு வெளியே நடக்கத் துவங்கிய இதயகுமாரன், அறை மூலையிலிருந்து கிளம்பிய பெரிய அலறலால் ஒரு விநாடி தாமதித்தான். அந்த அலறலால் மயக்கம் ஓரளவு தீர்ந்த கண்ணழகி அவன் தோளின் பின்புறத்திலிருந்து, ''அது என்ன அலறல் என்று?'' வினவினாள் மெதுவாக.

இதயகுமாரன் முகத்தில் முறுவல் மலர்ந்தது. ''சாஸ்திரி சிகிச்சை செய்கிறார்'' என்று கூறினான்.

கண்ணழகி மெள்ள அவன் தோளிலிருந்து எழுந்திருக்க முயன்றவள் அவன் கை அழுந்திய நிலையிலிருந்து விடுபட முடியாததால் தோளில் தொங்கிய வண்ணமே வினவினாள்,



''ஒருவன் இத்தனை பயங்கரமாக அலறும்படியான சிகிச்சை என்ன சிகிச்சை!'' என்று.

''சஸ்திர சிகிச்சை''-இதயகுமாரன் குரலில் வருத்தமிருந்தது.

''என்ன செய்கிறார் சாஸ்திரி?''

''கையை எடுக்கிறார்.''

''இதுதான் சிகிச்சையா?''

''ஆம். சில சமயங்களில் ஒரு உறுப்பை எடுப்பது உயிரைக் காக்கும். அதுவும் அனாவசியமான அவயவங்களை எடுப்பதில் தவறில்லை. சில வேளைகளில் தர்மமுங்கூட.''

இதை இதயகுமாரன் சொல்லிக் கொண்டிருக்கையில் அறை மூலையிலிருந்த வந்த சங்கர நாராயணன், ''திருப்தியாக முடிந்துவிட்டது'' என்று தனது கையிலிருந்த இளையவேளின் வலது கையைக் காட்டினார்.

அந்தக் கையை ஓரக் கண்ணால் பார்த்த கண்ணழகி மெள்ள இதயகுமாரன் தோளை விட்டு இறங்கி அந்தக் கையை உற்று நோக்கினாள். அது வெட்டப்பட்ட இடத்திலிருந்து ஒரு துளி ரத்தம்கூட வரவில்லை. அதைப் பார்த்த அவள் பிரமிப் புடன் கேட்டாள், ''வலது கை போலிருக்கிறதே?'' என்று.

''ஆம், வலது கையேதான்'' என்று சர்வ சாதாரணமாகச் சொன்ன சங்கர நாராயணன், ''இந்தக் கைதான் வாளை என் கழுத்தில் ஊன்றிக் கொல்ல இருந்தது. இருப்பினும் நான் இதன் மேல்பாதிக்கு நன்மையே செய்தேன். இதைச் சுத்தமாக வெட்டி அக்னி குண்டத்தில் இரும்புச் சலாகையைக் காய்ச்சி உதிர நரம்புகளையும கோசங்களையும் தீய்த்துவிட்டேன். இனிமேல் இளையவேளுக்கு ரத்தமிருக்காது. சுகமாய் உறங்க அவனுக்குச் சில ரசாயனத் துளிகளையும் கொடுத்திருக்கிறேன். நீங்கள் கவலைப்படாமல் செல்லுங்கள்'' என்று விளக்கினார் வான சாஸ்திரி.

''இது இளையவேளின் கையா?'' என்றாள் பிரமிப்புடன் கண்ணழகி.

''ஆம்'' என்றார் சாஸ்திரி.

''நீங்கள் வான சாஸ்திரியா, வைத்தியரா?'' என்று வினவினான் இதயகுமாரன்.

''இரண்டுந்தான்'' என்ற சாஸ்திரி, ''நீ வெட்டிய கையைப் போகும்போது நீயே காவிரியில் எறிந்துவிடு'' என்று கையை அவன் வலது கையில் திணித்துவிட்டு தமது கடமை முடிந்துவிட்டதென்ற திருப்தியுடன் மீண்டும் அறை மூலைக்குச் சென்றுவிட்டார்.

அந்தக் கையைத் தனது வலது கையில் பிடித்த வண்ணம் இடது கையால் கண்ணழகியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியேறினான் இதயகுமாரன். வாயிலில் இருந்த விஜயன்மீது கண்ணழகியை ஏற்றி உட்கார வைத்துத் தானும் அவளுக்குப் பின்னால் ஏறிக்கொண்டு புரவியை நேராகக் காவிரிக்கரையை நோக்கி நடக்க விட்டான். கரையின் உச்சிக்கு வந்ததும் புரவியில் இருந்த வண்ணமே இளையவேளின் கையைக் காவிரியில் விட்டெறிந்தான். நல்லவர், பொல்லாதவர் என்று வேற்றுமை பாராமல் எல்லோருக்கும் அபயம் அளிக்கும் காவிரித்தாய் தனது சுழலில் இளையவேளின் கையை இழுத்துக்கொண்டு சென்றாள்.

அங்கிருந்து கிளம்பி கருவூர் வஞ்சியை நோக்கிப் புரவியை நடக்கவிட்ட இதயகுமாரன் பூர்ண மௌனத்தில் இருந்தான். சதா பேசும் சுபாவமுள்ள பெண் சிருஷ்டி கேள்வியைத் தொடுத்தது சிறிது நேரத்திற்கெல்லாம். ''நீங்கள் எப்படி முக்கூடல் வந்தீர்கள்? அதுவும் நான் அங்குதானிருப்பேனென்று எப்படி ஊகித்தீர்கள்?'' என்று வினவிற்று.

இதயகுமாரன் சில விநாடிகள் மௌனமாயிருந்தான். பிறகு மெதுவாகப் பேசினான். ''கண்ணழகி! இதில் பெரிய



ஊகம் எதுவும் தேவையில்லை. நீ வஞ்சி மாநகரில் காணவில்லையென்று அறிந்ததுமே, இளையவேள் உன்னைக் கொண்டுவரக்கூடிய இடம் இதுதானென்பது எனக்குத் தெரியும். ஆனால் முக்கூடலைத் துறந்து சேர மன்னனுடன் சென்றுவிட்ட வான சாஸ்திரி இங்கு இருப்பார் என்பதை நான் உணரவில்லை. அவர் எப்பொழுது வந்தார், ஏன் வந்தார் என்பது புரியவில்லை'' என்று கூறினான்.

கண்ணழகியே அதை விளக்கினாள். ''இளையவேளுக்கும் அது தெரியாது. நந்தவனத்துக்குச் சென்ற என்னை முரட்டுத்தனமாகத் தூக்கி வந்த வான சாஸ்திரியின் பரிசோதனை அறையில் அடைத்தபோது சாஸ்திரியை அவன் எதிர்பார்க்கவில்லை என்னைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்து ரகசிய அறைக்குள் தள்ளும் வரையில் வான சாஸ்திரி அங்கிருப்பது அவனுக்கும் தெரியாது. அந்த அறைக்குள் என்னைத் தள்ளியதும் அறைக்கதவு தானாக மூடிக்கொண்டதைப் பார்த்த பின்புதான் இளையவேள் திகைத்தான். அடுத்து என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. ''சாஸ்திரி!'' என்று கோபக்கூச்சலை இளையவேள் போட்டது மட்டும் என் காதில் விழுந்தது. பிறகு நான் நினைவு இழந்தேன்'' என்று கூறினாள். ''மீதிக் கதை?'' என்றும் கேட்டாள்.

''அவசியமில்லாத கதை. சாஸ்திரியைக் கொல்ல முயன்றான், கையிழந்தான்'' என்று தனது பணியை விவரிக்க இஷ்டப்படாத இதயகுமாரன் மேற்கொண்டு மௌனமாகவே பயணம் செய்தான் வஞ்சி மாநகர் வரையில். வஞ்சி மாநகர் வந்ததும் நேராக அரண்மனை செல்லவில்லை அவன். முதன் முதலாக அவளைச் சந்தித்த அந்தப் பாம்புப் புற்றுக்கு அழைத்துச் சென்றான். புற்றின் முன்பாகப் புரவியை நிறுத்திய இதயகுமாரன் தானும் இறங்கி, கண்ணழகியையும் இறக்கினான்.

கண்ணழகி ஏதும் பேசவில்லை. ராணியென கம்பீரமாக நின்றாள். அதுவரை இருந்த அவள் சோர்வு, மயக்கம் எல்லாம்

எங்கோ மறைந்துவிட்டன. அவள் உள்ளத்தில் பழைய நிகழ்ச்சிகள் தோன்றி வலம் வந்தன. அவன் அவளுக்கு வெகு சமீபத்தில் நின்றிருந்தான். முதல் நாளும் அப்படித்தான் நின்றிருந்தான். 'அன்றும் அதே சமீபம், இன்றும் அதே துணிவு' என்று மனதுக்குள் நினைத்தாள் அரசகுமாரி. ''இங்கு எதற்காக அழைத்து வந்தீர்கள்?'' என்று மெதுவாக வினவினாள்.

இதயகுமாரன் அவள் தோளில் கையை வைத்தான். ''இங்குதான் உன்னை முதலில் சந்தித்தேன். நீ சூடியிருந்த செண்பக மலரைக் கொண்டு அடையாளம் கண்டுபிடித்தேன். ஆனால், அன்று அறியவில்லை நீயும் ஒரு செண்பகப்பூ என்று'' கூறினான்.

அவனை நோக்கிக் கண்களை உயர்த்தினாள் அரசகுமாரி. கண்களுடன் தனது கண்களைக் கலந்தாள். ''நான் செண்பகப்பூ என்று எப்பொழுது உணர்ந்தீர்கள்?'' என்று குழைந்தாள்.

''வான சாஸ்திரியின் அறையில் உன்னைத் தாங்கிப் பிடித்தபோது...'' இழுத்தான் இதயகுமாரன்.

''பிடித்தபோது?'' கண்ணழகியின் இதழ்கள் முணுமுணுத்தன.

அவன் கைகள் அவளை இறுக்கின. ''உன் உடலில் செண்பக மலரின் பரிமளம் இருந்தது. இப்பொழுதும் இருக்கிறது'' என்று கூறினான். அதை ருசுப்படுத்த விரும்புபவன்போல் அவள் கழுத்தில் முகத்தைப் புதைத்தான். அவன் கைகள் அவளை மேலும் இறுக்கின.

அந்த இறுக்கல் அவளுக்கு மிக இன்பமாக இருந்தது. ''அந்த முரட்டுத்தனம் போகவில்லை உங்களுக்கு'' என்று அவள் முணுமுணுத்தாள்.

அவன் அவள் கழுத்திலேயே தனது இதழ்களை விரித்து ''எந்த முரட்டுத்தனம்?'' என்று கேட்டான்.



''அன்று என் வீரர்கள் முன்பாக என்னைத் தூக்கிப் போனீர்கள். அது பகிரங்க முரட்டுத்தனம்...''

''இது?''

''தனி முரட்டுத்தனம்.''

''தனி முரட்டுத்தனம் எப்படியிருக்கும்?''

''போகக் போகத் தெரியும்.''

இருவரும் அதற்கு மேல் பேசவில்லை. பரஸ்பர முரட்டுத்தனம் அவர்களை ஆட்கொண்டது.

# 54. மோகக் கோட்டை

செந்தலையை வெற்றிகொண்ட பிறகும் விஜயாலயன் அந்த நகருக்குள் நுழையவுமில்லை, வெற்றி விழா கொண்டாடவுமில்லை. தனது பாசறையிலேயே தங்கிவிட்டான். பெரும்பிடுகரின் சடலத்தை எடுத்துச் சென்ற ஆதித்தன் அதை அவரது பெருமாளிகையில் அவரது பஞ்சணையிலேயே கிடத்தினான். மூன்று நாட்கள் முத்தரையரைத் துக்கம் கொண்டாடவிட்டு நான்காவது நாள் தேவியை பெரும்பிடுகரின் அறையில் சந்தித்து, ''தேவி, நான் புறப்பட வேண்டும்'' என்று அனுமதி கோரினான்.

தேவி தலைகுனிந்து நின்றாள் ஆதித்தன் முன்பு. அவள் இதழ்கள் சற்றே அசைந்தன, தென்றலில் அசையும் செந்தாமரை மலரின் இதழ்களைப்போல. ஆனால், அவற்றிலிருந்து சொற்களேதும் வரவில்லை. சென்று வரலாம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தாள். அப்படி அனுமதி கொடுத்த நேரத்திலும் சுரணையற்ற சிலையாக நின்றிருந்தாள் தேவி.

அவள் நிலை ஆதித்தன் மனதைச் சுக்குச் சுக்காக உடைத்தது. அனாதைபோல் நின்றிருந்த தேவிக்கு ஆறுதல் சொல்ல அவளை நெருங்கினான். அவள் சற்றுப் பின்னடைந்தாள். ''பதினைந்து நாள் கழித்து வாருங்கள்'' என்று மட்டும் முணுமுணுத்தாள்.

ஆறுதல் சொல்ல நெருங்க முற்பட்டு முடியாததால் சில விநாடிகள் ஸ்தம்பித்து நின்றான் ஆதித்தன். பிறகு தானும் பின்னடைந்து ''பதினைந்து நாள் கழித்து வருகிறேன். ஆனால் நீ வீரன் மகள் என்பதை மறவாதே. வீரன் மருமகளாகப் போகிறவள் என்பதையும் மறவாதே'' என்று கூறிவிட்டுச் சட்டென்று



திரும்பி நடந்த ஆதித்தன், முத்தரைய பூபதியின் மாளிகைப் படிகளில் வெகு வேகமாக இறங்கித் தனது புரவியில் தாவி தந்தையின் பாசறைக்கு வந்து சேர்ந்தான்.

அவன் வந்த சமயத்தில் விஜயாலயன் புரவி பயணத்துக்குச் சித்தமாக நின்றிருந்தது. படைத் தலைவர்களில் இருவரும் காலாட் படையும் தேர்ப்படையும் புறப்பட அணிவகுத்து நின்றிருந்தன. பயண ஏற்பாடுகளைக் கண்ட ஆதித்தன் கண்களில் வியப்பு தெரிந்தது. ''நீங்கள் இன்று புறப்படுவதாக அறிவிக்கவில்லையே!'' என்று வினவினான் வியப்புடன்.

விஜயாலயன் தனது வீர மைந்தனை உற்று நோக்கினான். ''போர் முடிந்து விட்டது. இனி இங்கு அலுவல் ஏதும் இல்லை'' என்று சொன்னான்.

ஆதித்தன் தனது கண்களைத் தனது தந்தையின் கண்களுடன் கலக்கவிட்டான். ''எனக்குச் சொல்லியனுப்பவில்லையே!'' என்று வினவினான்.

''இல்லை.'' சர்வ சாதாரணமாகச் சொன்னான் விஜயாலயன்.

''ஏன்?'' ஆதித்தன் வியப்பு அதிகமாயிற்று.

''இங்கு என் அலுவல் முடிந்துவிட்டது. உன் அலுவல் பாக்கியிருக்கிறது'' என்றான் விஜயாலயன்.

''என்ன மகாராஜா?'' என்று கேட்டான் ஆதித்தன.

தனது மன நிலையை மகன் புரிந்து விட்டதைக் கண்டு இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டான் விஜயாலயன். தன்னை மகாராஜா என்று அழைத்தது, மகன்- தந்தை உறவை மறைத்து அரசன்- வீரன் உறவை ஆதித்தன் சுட்டிக் காட்டியதால் அவனும் அரச தோரணையில் உத்தரவிட்டான்.

''இளவரசனே! போருக்குப் பின்பு பொறுப்புக்களைக்

கவனிக்க வேண்டிய நமது படைத்தலைவன் வஞ்சி சென்று விட்டதால் நீ அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள். செந் தலை இளவரசி சோழ தேவியாகும்வரை இங்கேயே இரு. இந்தப் போரில் தோல்வியடைந்த முத்தரைய வீரர்களில் நமது படையில் சேர யார் விரும்புகிறார்களோ அவர்களைச் சேர்த்துக் கொள். இனிமேல் பெரிதாக விரியும் சோழ சாம்ராஜ்யப் பணியில் ஏற்படக்கூடிய போர்களில் முத்தரையர் பிரிவு பெரும் பலமுள்ளதாக இருக்கும்'' என்று ஆணையிட்டான்.

ஆதித்தன் பிரமிப்படைந்து நின்றான். ''தாங்கள் உடனிருந்து நடத்த வேண்டிய...'' என்று ஏதோ சொல்ல முயன்றான்.

''திருமணமல்ல இது. வீரர்களுக்குக் காந்தருவம் சாஸ்திர சம்மதம். தவிர, நினைப்பிருக்கிறதா உனக்கு?'' என்று இடை மறித்துப் பேசினான் விஜயாலயன்.

ஆதித்தனுக்கு ஏதும் புரியவில்லை. ''எது?'' என்று மட்டும் சொல்லை உதிர்த்தான், குழப்பத்துடன்.

விஜயாலயன் தனது புரவியில் அனாயாசமாக ஏறி பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தனது மகனை நோக்கினான். ''சென்ற முறை தேவி உறையூருக்கு வந்தபோது என்ன சொன் னாள்?'' என்று வினவினான்.'

''நினைப்பில்லை.''

''உறையூருக்குள் இன்னொரு முறை நுழைவதானால் சோழநாட்டு மகாராணியாகத்தான் நுழைவேனென்று சொல்ல வில்லையா?''

''ஆம், ஆம், சொன்னாள்.''

''அவள் சபதத்தை நிறைவேற்றுவோம். மகாராணியை எதிர்கொள்ள உறையூர் தயாராயிருக்கும்'' என்று கூறிய விஜயா லயன், தனது வலது கையை ஆதரவாக மைந்தன் தோளின்மீது



வைத்தான். பிறகு புரவியை சேணத்தை இழுத்து நகர்த்தினான். அவனுடன் படையின் பெரும் பகுதி நகர்ந்தது.

விஜயாலயன் சென்றதும் அங்கிருந்த பாசறையிலேயே தங்கினான் ஆதித்தன். அடுத்த ஒரு வாரத்தில் முத்தரையர் படைப்பிரிவு சோழர் படையுடன் இணைக்கப்பட்டது. அதன் அணிவகுப்பு முறைகளை ஆதித்தனே மாற்றினான். அந்த ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு சரியாக தேவி சொன்ன இரண்டு வாரக் கெடு முடிந்ததும் முத்தரையர் மாளிகைக்குச் சென்ற ஆதித்தன் நேராக தேவியிருந்த அறைக்குச் சென்றான். முத்தரைய பூபதியின் பஞ்சணையிலேயே அமர்ந்திருந்தாள் தேவி. அவளைக் கண்ட ஆதித்தன் அதிர்ச்சியடைந்தான் ஒரு விநாடி, மகிழ்ச்சியடைத்தான் மறு விநாடி.

தேவி பரிபூர்ண அலங்காரத்துடன் அமர்ந்திருந்தாள் பஞ்சணையில். சற்று எட்ட இருந்த மஞ்சத்தில் தட்டில் பால் இருந்தது. அது முத்தரைய பூபதியின் மதுக்குவளை என்பதை உணர்ந்த ஆதித்தன் தேவியை நோக்கினான்.

அவள் கமலக் கண்கள் அவனை ஏறெடுத்து நோக்கின. செம்பருத்தி இதழ்கள் லேசாக விரிந்தன. சற்று எட்ட இருந்த தூங்காவிளக்கு காற்றில் கண்ணைச் சிமிட்டியது. இந்த சூசகங் களின் பொருளைப் புரிந்துகொண்ட ஆதித்தன் உணர்ச்சிகள் எல்லை கடந்தன. தேவியின் பஞ்சணையை அணுகி அவளை வாரி எடுத்து அணைத்தான். பிறகு மெதுவாக அவளைப் பஞ்சணையில் கிடத்தி பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

''முதலில் அதை அருந்திவிட்டு வாருங்கள்'' என்று தேவி குவளையைக் காட்டினாள்.

''மதுவா?'' என்று வினவினான்.

''இல்லை, பால்.''

''அது மதுக்குவளையாயிருந்ததே!''

''இருந்தது.''

''இப்பொழுது?''

''புது எஜமானருக்குத் தகுந்தபடி மாறுகிறது.''

ஆதித்தன் அவள் பக்கத்திலிருந்து எழுந்திருந்து சென்று பாலை அருந்தினான் சிறிது. பிறகு தனது வாளைக் கழற்றி பஞ்சணையில் தேவியின் பக்கத்தில் எறிந்தான். பிறகு அவளை நோக்கிக் குனிந்தான். அவள் கண்கள் அவனைப் பார்க்க மறுத்தன. ''தேவி! அந்தக் குவளையில் பால் இல்லை. மதுதான் இருக்கிறது. இல்லையேல் எனக்கு ஏன் இத்தனை வெறி ஏற்பட வேண்டும்?'' என்று அவள் காதுக்கருகில் சொன்னான்.

''காரணம் காந்தருவம்'' என்று முணுமுணுத்தாள் தேவி.

''என்ன!'' வியப்புடன் கேட்டான் ஆதித்தன்.

''உங்கள் தந்தையின் உத்தரவு.''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''என்னை அறியாமல் எதுவும் நடக்க முடியாது.''

''நீ வேவுகாரியா?''

''ஆம். உங்களை வேவு பார்ப்பேன். என்னை விட்டு நீங்கள் வேறு எந்தப் பெண்ணையும் தொட முடியாது'' இதைச் சொன்ன தேவி கலகலவென் நகைத்தாள்.

ஆதித்தன் நகைக்கவில்லை. நகைத்த அவள் இதழ்களை அடக்கினான் தனது இதழ்களால். காந்தருவத்துக்குச் சாட்சியாகத் தூங்கா விளக்கு நிலைக்குத்தாக எரிந்தது. வெட்கங்கெட்ட பிறைமதியும் வானவெளியிலிருந்து பஞ்சணையை நோக்கினான். அவன் தேய்ந்த பார்வைக்கு ஆதித்தன் தெரிந்தான்; தேவி தெரியவில்லை.

இரண்டு நாளில் உறையூர், இளவரசனையும் இளைய ராணியையும் குதூகலமாக வரவேற்றது. சங்கரநாராயணனே



நேரில் வந்து அவர்கள் திருமணத்தைச் சாஸ்திரப்படி நடத்தி வைத்தார். அத்துடன் தான் ஏற்கனவே பிரதிஷ்டை செய்திருந்த மோகனச் சிலையைக் கையில் எடுத்துக்கொண்டார். ''விஜயாலயா! சோழர்கள் சாம்ராஜ்யத்துக்கு மோகனச் சிலை வித்திட்டு விட்டது. இது இனிமேல் நாகப்பட்டினத்தில் பிரதிஷ்டை செய்யப்படும். இன்னொரு காலத்தில் இன்னொரு சோழன் கையில் அகப்படும். அப்பொழுது சோழ சாம்ராஜ்யம் கடலுக்கு அப்பாலும் விரியும்'' என்று கூறினார்.

வான சாஸ்திரிக்கு விஜயாலயன் குடும்பம் தலை வணங்கியது. அவர்களை ஆசீர்வதித்த சங்கரநாராயணன், ''விஜயாலயா! தஞ்சைக்குச் செல். சோழர்களின் அந்த மூன்றாவது தலைநகரம் பெரும் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கப் போகிறது வரலாற்றில். உன் படைத்தலைவன் இதயகுமாரன் இத்தனை நேரம் அங்கு வந்திருப்பான்'' என்றார்.

''இதயகுமாரனா?'' என்று வினவினான் சோழ தேவன்.

''ஆம். அவன் காலில் சூர்ய சக்கரம் இருக்கிறது. அவனை முதலில் அங்கு காலெடுத்து வைக்கும்படி நான்தான் கூறினேன். அவனுடன் உன் மகள் கண்ணழகியும் இருக்கிறாள். அவள் தான் அந்த மோகனச் சிலையின் பிரதிபிம்பம். இந்தச் சிலை போகிறதே என்று கவலைப்படாதே. உயிர்ச்சிலை துடிப்புடனிருக்கிறது தஞ்சையில்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

தஞ்சையின் சிறிய மாளிகையில் நின்றிருந்த மோகனச் சிலை உணர்ச்சித் துடிப்புடன் இருந்தது. இதயகுமாரன் கைகள் அவளைச் சுற்றிக் கொண்டிருந்தன. சாளரத்தின் மூலம் வெளியே பார்த்த கண்ணழகி, ''இது அப்படி உறையூரைவிடப் பெரிய நகரமல்லவே? இதை ஏன் தலைநகரமாகத் தேர்நதெடுத்தார் தந்தை?'' என்று வினவினாள்.

''பெரிய சாம்ராஜ்யங்கள் சிறிய நகரங்களிலிருந்துதான் விரிந்திருக்கின்றன. சிறிய அணுவிலிருந்துதான் பிரும்மாண்டம்

உற்பத்தியாகிறது. சிறிய மனிதர்கள் பெரிய மனிதர்களாகி றார்கள். உதாரணமாக என்னைப் பார். நான் சில நாட்கள் முன்பு குறுகிய சோழநாட்டின் படைத்தலைவன். இப்பொழுது உறையூரிலிருந்து வஞ்சிவரையும், இந்தத் தஞ்சை வரையும் விரிந்துள்ள சாம்ராஜ்யத்தின் படைத்தலைவன்...'' என்றான் இதயகுமாரன்.

''ஒன்றை மறந்துவிட்டீர்கள்'' என்று அரசகுமாரி புன்னகை கோட்டினாள்.

''எதை?''

''நீங்கள் சாம்ராஜ்யாதிபதியின் மருமகன் என்பதை.''

சற்று எட்ட விலகி நின்று இதயகுமாரன் கண்ணழகி யைக் கவனித்தான். இரு கைகளையும் நீட்டினான். அந்தக் கைகளை நோக்கி நடந்து வந்தாள் கண்ணழகி மெதுவாக. மோகனச் சிலை உயிர்ப்பெற்று நடந்து வருவது போன்ற பிரமையில் அவன் கைகளை நீட்டியபடியே நின்றான், கண்ணழகி அவன் கைகளில் அடைக்கலம் புகுந்த பின்பும். அவள் அவன் பிரமிப்பைக் கவனித்தாள். ''எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறீர்கள்?'' என்று அவன் தோளில் சாய்ந்து காதில் முணு முணுத்தாள்.

அவன் கைகள் மெதுவாக அவள்மீது தவழ்ந்தன. ''மோகனக் கோட்டையை'' என்று இதயகுமாரன் இதழ்கள் முணுமுணுத்தன. கோட்டையும் அவன் இஷ்டப்படி அவன் கைகளில் வளைந்தது.

(முற்றும்)